



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තේ කහට                                                  தே கஹட்ட

# தேத்தண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்:

- **வசந்தங்களும் வசீகரங்களும்**
  கவிதைத்தொகுப்பு (1998)
  (மத்திய மாகாண சாகித்திய விருது பெற்றது)

- **ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள்**
  சிறுவர் நூல்
  2002 தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடு

- **உழைப்பால் உயர்ந்தவர்கள்**
  சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு
  2008 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

- **கசந்த கோப்பி**
  ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு
  2011 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

- **எங்கள் கிராமம்**
  மார்டின் விக்கிரமசிங்கவின் சிங்கள நூலின் மொழிபெயர்ப்பு
  2012 ஆம் ஆண்டின் சாகித்திய விருது பெற்றது

- **கண்டிச் சீமையிலே**
  கோப்பிக்கால வரலாற்று ஆவணம்
  வீரகேசரி வெளியீடு - 2014

- **சொந்த மண்ணின் அந்நியர்**
  சிறுகதைத் தொகுப்பு

- **இரத்த வரலாறு**
  நாவல்

### வரவிருக்கும் நூல்கள்

- **கண்டிச் சீமையிலே**
  விமர்சனக் கட்டுரைகள்

- **மாறிற மங்கை**
  Just Another Shade of Brown என்ற ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு

- **விசப் பரீட்சை**
  (சுகவாழ்வு சஞ்சிகையில் தொடராக வெளிவந்த விஞ்ஞான புனைக்கதை-நாவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Noolaham Foundation
Gift From
Baduri Serolny
17/07/2023

තේ කහට  தே கஹட்ட

# தேத்தண்ணி

சிங்கள மூலம்

**உபாலி லீலாரத்ண**

தமிழில்

**இரா. சடகோபன்**

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Print - 2021

**Thethanni**

© R. Shadagopan

ISBN 978-624-00-1540-0

Page Setting by
Pathmaroshini Gnanasekaram
S. Godage & Brothers (Pvt) Ltd.

Cover Art by
R. Shadagopan

Cover Design by
S. Godage & Brothers (Pvt) Ltd.

Published by
S. Godage & Brothers (Pvt) Ltd.
661/665/675, P. de S. Kularatne Mawatha, Colombo 10, Sri Lanka.

Printed by
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya, Sri Lanka.

23586/7776/400

முதற் பதிப்பு: 2021

**தேத்தண்ணி**

© இரா.சடகோபன்

ISBN 978-624-00-1540-0

**நூல் வடிவமைப்பு**
பத்மரோஷினி ஞானசேகரம்
(எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்)

**அட்டைப்பட ஓவியம்**
இரா.சடகோபன்

**அட்டை வடிவமைப்பு**
(எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்)

**வெளியீடு**
எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்
675- பி. டீ. எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு - 10.

**அச்சகம்**
சதுர அச்சகம்
69- மொரதாஸ் பிளேஸ், வெல்லம்பிடிய.

23586/7776/400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

“ எனது
கல்வி உயர்வுக்காக
தமது கல்வி கற்றலை
அர்ப்பணித்து
உழைத்த
எனது இரு
மூத்த சகோதரிகள்
அர். ஷண்முகவடிவு
அர். ஜெயலஷ்மி
ஆகியோருக்கு.. ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"தேத்தண்ணி" என்றதும் மலையக இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களும், அவர்தம் பிரதான தொழிலான தேயிலை உற்பத்தி தொடர்பான தொழிலும், அதன் பயனாக அனைவரும் அருந்தும் தேநீரும் (தேத்தண்ணி) ஞாபகத்துக்கு வருதல் கூடும். "தேத்தண்ணி" என்னும் இந்நாவலை, உபாலி லீலாரட்ண என்னும் எழுத்தாளர் சிங்களத்தில் எழுதியிருக்கிறார். இந்நாவலைத் தமிழ் வடிவில் தந்திருக்கிறார் சட்டத்தரணியும், எழுத்தாளரும், கவிஞரும், பத்திரிகையாளருமான இரா.சடகோபன் அவர்கள். திரு. உப்பாலி லீலாரட்ண அண்மையில் காலமாகிவிட்டார் என்பதை உங்களில் பலர் அறிந்திருக்கக்கூடும்.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென, அன்றைய ஆட்சியாளர்களானபிரிட்டிஷாரால், தமிழ்நாட்டிலிருந்து கூட்டிவரப்பட்டவர்கள் தான் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். தேயிலைத்தூர்களின் கீழ், தங்கம் தோண்டி எடுக்கலாம் என்று ஆசை காட்டி அவர்களைக் கூட்டி வந்ததாகவும் கூறுவார்கள். எப்படியோ, அவர்கள் ஆசைகாட்டி மோசம் செய்யப்பட்ட அப்பாவிகள். மலைபோலும், துன்பங்களும், துயரங்களும், அடக்குமுறைகளும், அநீதிகளும் தம் முன்னே பரந்து கிடக்கின்றன என்பதனைச் சிறிதும் அறியாமல் நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கிறது என நம்பிவந்து ஏமாந்தவர்கள். தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டு, தோணிகளில் ஏற்றப்பட்ட மாத்திரத்தில் இருந்தே, போக்குவரத்து ஏதும் சரியாக ஏற்படுத்தப்படாத அந்தப் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பயணத்தின்போதே பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி,தட்டுத் தடுமாறி தோட்டங்களை ஒருவாறாகப் போய்ச் சேர்ந்தார்கள் என்பதும் வரலாறு. வெள்ளையர்களின் சார்பாக, கங்காணிகளால் முற்று முழுதாக ஏமாற்றப்பட்டு, பிறந்த பூமியையும் விட்டு வந்தோமே என்று எண்ணி எண்ணி, மாய்ந்துபோன அவர்கள், ஆண்களும், பெண்களுமாக, தோட்டங்களின் கடுங்குளிரையும், அட்டைக்கடியையும் சகித்து, தினமும் அதிகாலை முதல், அந்திசாயும் வரை, பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில், தேயிலை உற்பத்தி தொழிலுக்கு தம்மை அர்ப்பணித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்கள். வெறும் கூலித் தொழிலாளர்களாக, தோட்டங்களுக்குள் அடைப்பட்டு, வெளி உலகினை அறியாது தோட்டத் தொழிலே தமது உலகமாக வாழ்ந்த அப்பாமர மக்கள், தோட்டத்துறையில், இருந்து, கன்டக்டர், கங்காணி, கணக்கப்பிள்ளை, டீ மேக்கர், எனப் பல்வேறு நிர்வாகமட்ட ஆட்களால் மட்டுமன்றி, தொழிற்சங்கப் பிரமுகர்கள், தோட்டத் தொழிலாளர் தலைவர்கள், அவர்தம் கையாட்கள் போன்ற பலராலும், தத்தம் சுய நலனுக்காக மிகச் சுலபமாக ஏமாற்றப்பட்டுத் தவிப்பதும், சாதாரண வீட்டு வசதிகள் கூட இன்றி, சுகாதார வசதி யும் இல்லாமல், லயன் காம்பராக்களில் முடங்கி அவலமாக நாட்களைக் கழிப்பதும் இற்றைவரை தொடர்கதையே.

இந்தப்பின்னணியில், நாடு1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதும், அதனைத் தொடர்ந்து, பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, கணிசமான தொகையினராக, வாழ்ந்திருந்த இந்திய வம்சாவளி மக்களில் குறிப்பிடத்தக்க தொகையினர், பிரஜாவுரிமை அற்றவர்கள் ஆக்கப்பட்டதும், மேலும் இந்நிலையைத் தொடர்ந்து,தோட்டங்களின் உரிமை, பிரிட்டிஷாரால், இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டதும், 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு, இம்மக்களில் ஒரு பகுதியினர், அவர்தம் இஷ்டம் இல்லாமலேயே, இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டதுமான வரலாறும் தெரிந்ததே. 1920 களில் தேசபக்தர் கோ. நடேசய்யர், அவரது மனைவி மீனாட்சி அம்மாள் அரசியல்வாதியும் எழுத்தாளரும் ஆங்கில மொழிக் கவிஞருமான சி.வி.வேலுப்பிள்ளை, திரு. இராஜலிங்கம், திரு. தொண்டமான் போன்ற அரசியல் தலைவர்கள், தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்வை வெளியுலகிற்குப் புலப்படுத்தி உரிமைக்குரல் எழுப்பி, அம்மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபட்டதும், அவர்தம் பரிதாப வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலித்து சிந்திக்கத் தூண்டும் வகையில், மலையக எழுத்தாளர்கள் நவீன இலக்கியப் படைப்புகளை எழுதி வெளியிட்டு வந்ததும், மிக முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவை. இந்த வகையில், கோகிலம் சுப்பையா, தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம்.இராமையா, மல்லிகை சி. குமார், மாத்தளை சோமு, சாரல்நாடன், கே.கோவிந்தராஜ், மாத்தளை வடிவேலன், மலரன்பன், மு.சிவலிங்கம் உட்பட பல எழுத்தாளர்களின் இலக்கிய எழுத்துப் பணிகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அத்துடன், அரசியல், சமூக, இலக்கிய ரீதியான அமைப்புகள் மூலமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக குரல் எழுப்பப்பட்டு, மலையக தொழிற்சங்கத் தலை வரும் அமைச்சருமான திரு.தொண்டமான் காலத்தில் பிரஜாவுரிமை கிடைத்ததும், அதனைத் தொடர்ந்து இம்மக்களின் அரசியல், பொருளாதார, சமூக முயற்சிகள் இன்றும் தொடர்ந்தவண்ணம் இருப்பதும் தெரிந்ததே. "தேத்தண்ணி" என்னும் இந்நாவல் 1970 களிலான காலப்பகுதியில், மலை யகத் தோட்டத் தொழிலாளர்தம் வாழ்க்கை நிலை, அரசியல், தொழில், சமூகம், பொருளாதாரம், பொழுதுபோக்கு, எனப் பலதரப்பட்ட விடயங்களையும், கதாபாத்திரங்கள் மூலமாக, சுவாரஸ்யமாக விபரித்து, அப்பின்னணியில், கதையை விறுவிறுப்பாகக் கொண்டு செல்வதை அவதானிக்க முடியும். அந்த வகையில் பார்க்கும்போது, சிங்களவரான இந்த எழுத்தாளருக்கு இம்மக்கள் வாழ்ந்திருக்கும் "மலையகமும் அவர்தம் வாழ்வியலும்" அத்துப்படி என்பது நன்கு புலனாகின்றது.

நேர்மையும், கடும் உழைப்பும், வஞ்சகமற்ற மனப் பான்மையும், தனது சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றும் கொண்ட இளைஞன் கோபால் துணிவும், புத்திச்சாதுரியமும், செயல்திறனும், வாய்ச்சாதுரியமும், மனித நேயமும், குறும்புத் தனமும் கொண்டகோபாலின் நெருங்கிய நண்பன் நந்தசிரி மற்றும் அவனது தமிழ்ச் சிங்கள நண்பர்கள், கோபாலின் தந்தை டிரக்டர் டிரைவர் செவனு, தாய் அன்னம்மா மற்றும் சகோதரர்கள், தோட்டத் தொழிலாளர் தலைவர் சேதுபதி, கண்டக்டர், டீ மேக்கர், கோபாலின் உள்ளம் கவர்ந்த பள்ளி மாணவி புஷ்பராணி, அவளது தந்தையான கதிரேசன், என்றவாறான பாத்திரங்களுடன் சுற்றிவரும் இந்நாவல் மேற்குறிப்பிட்டவாறு தோட்டத் தொழிலாளர்களின் தொழில்ரீதியான கஷ்ட நஷ்டங்கள், சம்பள நாட்கள் தவிர மற்றைய நாட்களில் வாழ்க்கையை ஓட்டுவதற்குப் படும் கஷ்டங்கள், மதுபாவனையில் கொண்டிருக்கும் பெரும் நாட்டம், ஏமாற்றுக்கள், பொழுது போக்காக அமையும் சினிமாப் பாட்டுக் கச்சேரி, சிறுசிறு திருட்டு நடவடிக்கைகளையும், தோட்டத் தொழில் துறையின் நேரடித் தலைவர்களான கண்டக்டர், தொழிலாளர் தலைவர், டீ மேக்கர் ஆகியோர் மேற்கொள்ளுகின்ற மோசடிகள், கபட நாடகங்கள் என்பனவற்றை இந்நாவல் சுவாரஸ்யமாக விபரிக்கிறது.

அதுவுமன்றி, தோட்டத் தொழிலாளர்களின் நன்மைக்காக மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தங்கள், ஒற்றுமைக் குறைவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் குழறுபடிகள், கோபதாபங்கள், ஏமாற்று நாடகங்கள் என்பனவும் நாவலின் நகர்வோடு அருமையாக விபரிக்கப்படுகின்றன. இந்நாவலில் நந்தசிரி என்னும் பாத்திர சிருஷ்டி மிகவும் குறிப்பிடத்தக்கது. சண்டித்தனம் கொண்டவன் என்றாலும், இன, மத வேற்றுமைபாராமல் அனைவருடனும் அன்பாகப் பழகும் நந்தசிரியின் துணிச்சலும், புத்தி சாதுரியமாக மோசடிகளைக் கண்டு பிடிக்கும் திறனும், நேரடியாகவே பெரிய ஆட்களின் நடவடிக்கைகளை "புட்டு" வைக்கும் வாக்குச் சாதுரியமும் குறும்புத்தனமும், அவனை ஒரு முக்கியமான பாத்திரமாக எடுத்துக்காட்டுவது மட்டுமின்றி, கோபாலின் உற்ற நண்பனாக அவனது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு, தோள்கொடுப்பவனாக கதையை நகர்த்துபவனும் அவனாகவே இருப்பதைப் பார்க்க முடிகிறது. தோட்டத்து தலைவர்கள் செய்யும் ஊழல் நடவடிக்கைகளை, அதாவது கண்டக்டர் யூரியா உரம் கடத்துவது, சைக்கிளில் பால் கேனில் தேயிலைத்தூள் கடத்தி விற்பது போன்றவற்றை நாசூக்காக நேரடியாகக் கண்டு பிடித்து அந்த நபர்களை வெலவெலத்துப்போக வைக்கும் நந்தசிரி, இந்த களவு நடவடிக்கைகளை கோபாலுக்கும் நண்பர்களுக்கும் விபரிக்கும் கட்டங்கள் சுவாரஸ்யமானவை.

"கோபால்! இனிமேலும் நீ சின்னப்பிள்ளை மாதிரி சிந்திக்காதே! என்று மலையில் தொழில் பார்க்கும்போதும், மற்றைய பொழுது போக்கு நேரங்களிலும், சொல்லிக்கொடுத்த யதார்த்த உண்மைகளே, கோபால் ஒரு நேர்மையும், தைரியமும்கொண்ட தோட்டத் தொழிலாளர் தலைவனாகத் தலையெடுக்க வைத்தது." கோபால்! இந்த தொழிற்சங்கக்காரன்தான் நம்மள பிரிச்சு வேடிக்கைப்பார்க்கிறான். தொழிற்சங்கம் மாத்திரமல்ல, அரசியல்கட்சி அடிப்படையிலும், பிரித்துப் பார்க்கிறானுங்க! இந்தப் பிரிவினையை வைச்சுத்தான் அவங்க மந்திரிப்பதவி வாங்கி, அரசாங்கத்துக்கு முட்டுக்குடுக்கிறானுங்க!" என்றவாறான, நந்தசிரியின் உண்மை நிலைவரக் கூற்றுகளும், தோட்ட மக்கள் வாழ்வில் விடியலைக் காண ஆவல் கொண்ட கோபால், தொழிலாளர்களின் சுகாதாரப் பிரச்சினைக்காக, நந்தசிரி, அவனது தமிழ்ச்சிங்கள நண்பர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோரின் பெரும் ஆதரவுடன் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு, அதில் வெற்றி பெற்று, ஒரு நல்ல தலைவன் என இனங்காணப்பட்டு தொழிலாளர் தலைவனாக தெரிவாகி செயற்பட மிகவும் தூண்டுதலாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தோட்டத்தில் தனக்குள்ள பணவசதி காரணமாக, கர்வமாக நடந்துகொள்ளும் கதிரேசனின் தேயிலைத்தூள் கடத்தல் நடவடிக்கை, கதிரேசனின் மகளும், பள்ளி மாணவியுமான புஷ்பராணியை கோபால் காதலிப்பதும், இருவரும் நெருங்கிப் பழகுவதும், அவர்களது காதலை துண்டித்துவிட கதிரேசன் மேற்கொண்ட நடவடிக்கை, 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில், பஞ்சம், பசி பட்டினியால் வாடிய தோட்டத் தொழிலாளர்கள், அன்றைய ஸ்ரீமா ஆட்சிக்கு எதிராக வாக்களித்து யு.என்.பி. ஆட்சி ஏற்பட உதவியமை, அந்த ஆட்சியில் பிரஜா உரிமை கிடைத்தமை, பணப் புழக்கம் போதாமையால் வறுமையின் பிடியில் சிக்கிய மக்கள் பெரும் கஷ்டத்துக்கு ஆளானமை, நந்தசிரியும் திருமணம் முடித்து மனைவியின் ஊருக்குச் சென்றதால் ஏற்பட்ட பெரும் கவலை, அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டம், தொழிற்சங்க தலைவர்களால் ஏமாற்றப்படுவதனை உணர்ந்த கோபால் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தமை, இறுதியில், அந்த தன்னலமற்ற இளைஞனுக்கு நேர்ந்த கதி என்றவாறாக நாவலில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் ஒரு காலகட்ட வரலாற்றை, விறுவிறுப்பாகவும் சுவையாகவும் தருகிறார் நாவலாசிரியர் உபாலி லீலாரட்ண. அதேவேளை ஒரு மொழிபெயர்ப்பு நாவலை வாசிக்கிறோம் என்ற ஓர் உணர்வில்லாமல் இந்நாவலை தமிழாக்கம் செய்து தந்திருக்கும் எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளருமான இரா.சடகோபன் மிகவும் பாராட்டுக்குரியவர். மலையகத் தோட்டத் தொழிலாளிக்குரிய வழமையான பேச்சுமொழியை அவர் சந்தர்ப்பத்திற்கேற்ப, லாவகமாகக் கையாண்டிருப்பதற்கு அவரது அனுபவம் காரணம் என்பது மிகையான கூற்றல்ல.

சிங்கள மனிதநேய எழுத்தாளர் உப்பாலி லீலாரட்ணவால் எழுதப்பட்டு இன்று அதனை தமிழில் மொழிபெயர்த்து தந்திருக்கும் இரா. சடகோபனை ஒரு பத்திரிக்கையாளராக சுமார் மூன்று தசாப்த காலத்துக்கு மேல் எனக்குத் தெரியும். அதில் ஒரு இரண்டு தசாப்த காலம் "வீரகேசரி" ஆசிரியர் பீடத்தில் எங்களுடன் அவர் ஒன்றாகக் கடமையாற்றி இருக்கிறார். இந்த மூன்று தசாப்த காலத்தில் அவரது எழுத்துத்துறை வளர்ச்சி என்னை பிரமிக்க வைத்திருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு கவிஞராக, ஒரு சிறுகதை எழுத்தாளராக, அதன்பின்னர் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியராக தன்னை இனங்காட்டிக் கொண்டபோதும் அதன் பின்னர் மொழிபெயர்ப்புத்துறையில் அவரது வளர்ச்சி மிக அபாரமானதாகும். அதற்கு அவரது ஆங்கில மொழி மற்றும் சிங்கள மொழியிலான புலமை பின்னர் அவர் தன்னை ஒரு சட்டத்தரணியாக உயர்த்திக் கொண்டமை என்பன வெகுவாக பங்களிப்பு செய்திருக்கின்றன என்று கூறலாம்.

இவர் மொழிபெயர்த்த நூல்கள் (1) உழைப்பால் உயர்ந்தவர்கள் (2007) (பந்து பால குருகே என்ற சிங்கள எழுத்தாளரின் செனஹஸின் உப்பன் தருவோ), (2) கசந்த கோப்பி (2010) (கிரிஸ்டின் வில்சன் என்ற ஆங்கில எழுத்தாளரின் பிட்டர் பெர்ரி-Bitter Berry) (3) எங்கள் கிராமம் (2012) (மார்ட்டின் விக்ரமசிங்கவின் அப்பே கம என்ற சிங்கள நூல்) இந்த மூன்று நூல்களும் சிறந்த மொழிபெயர்ப்புக்கான தேசிய சாகித்திய விருதினை பெற்றுக்கொண்டன. இவை தவிர தற்போதைய இந்த நூலான (4) தேத்தண்ணி (5) மாநிற மங்கை (2017) (லோர்னா ரைட் என்ற ஆங்கில எழுத்தாளரின் ஜஸ்ட் எனத சேட் ஓப் பிரவுண் - Just Another Shade of Brown) இந்த இரண்டு நாவல்களுமே சூரியகாந்தி பத்திரிக்கையில் தொடராக வெளிவந்தன. (6) ஒலிவர் டுவிஸ்ட் (2018) (உலகப் புகழ்பெற்ற ஆங்கில சிறுவர் எழுத்தாளரான சார்ல்ஸ் டிக்கன்ஸ் அவர்களின் ஒலிவர் டுவிஸ்ட்) இந்த மொழிபெயர்ப்பு நாவல் வீரகேசரி பத்திரிகையின் சிறுவர் வெளியீடான சுட்டி கேசரியில் தொடராக வெளியானது. இவற்றுக்கு மேலதிகமாக இவர் விஜய் சிறுவர் பத்திரிக்கையின் பிரதம ஆசிரியராக இருந்தபோது முன்னூறுக்கும் அதிகமான உலகப் பிரசித்தி பெற்ற சிறுவர் சிறுகதைகளை மொழிபெயர்த்து "வண்ணப்பூஞ் சிட்டுக்கள்" என்ற பகுதியில் வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொழிபெயர்ப்புக் கலை என்பது ஒரு தனியான இலக்கிய வடிவமாக உலகெங்கும் வளர்ச்சியடைந்த அளவுக்கு இலங்கையில் அதன் முக்கியத்துவம் உணரப்படவில்லை. நமது அண்டைய நாடான இந்தியாவில் காணப்படுகின்ற பல்வேறு மாநிலங்களிலும் பேசப்படுகின்ற நூற்றுக்கணக்கான மொழிகளின் இலக்கியங்கள் பரஸ்பரம் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அந்நாட்டுப் பண்பாட்டுப் பாரம் பரியங்களுக்கு வளம் சேர்ப்பதாக அமைந்துள்ளன. அதனால் அந்த நாட்டில் பல மொழிகளைப் பேசும் மக்களும் ஒரு இனத்துடன் மற்ற இனத்தினர் புரிந்துணர்வு மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இரண்டு மொழிகளையே பேசுகின்ற நமது நாட்டில் எதற்காக இத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவுகள், இத்தனை முரண்பாடுகள். கண்டிப்பாக சமரசங்களுக்கு மொழிபெயர்ப்புக்களின் பங்களிப்பு கணிசமானதாக இருந்திருக்கிறது. அந்த வகையில் இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்கு உரிய கௌரவங்கள் வழங்கப்படவேண்டும். இரா. சடகோபனின் மொழி பெயர்ப்பு ஆற்றல் தொடர்பில் "எங்கள் கிராமம்" என்ற நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் பேராசிரியர் சபா ஜெயராசா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மொழிபெயர்ப்புச் செயற்பாட்டின் போது மூல மொழியின் பண்பாட்டோடு ஒன்றி இணைந்து தோய்ந்து மேலெழாது இலக்கு மொழிக்கு கலைப்படைப்பை கொண்டு வரும் செயற்பாடு மிகவும் சிரமமான பயிற்சியை வேண்டி நிற்கிறது. ஆனால் இந்தப் பணியை மூலமொழியின் பண்பாட்டோடு தோய்ந்து வாழ்ந்து எழுந்த நண்பர் இரா. சடகோபன் அவர்கள் மேற்கொண்டிருக்கும் பாங்கானது இழப்பும் விரிசலும் இன்றி மனவெழுச்சிகள் சுருதி பேதம் இன்றி மூலத்தின் இயல்பை தமிழ் வளத்தினுள் கொண்டு வந்து சேர்த்துள்ளது"இந்தக் கூற்று இந்த "தேத்தண்ணி" நாவல் மொழிபெயர்ப்பு தொடர்பிலும் மிகப் பொருத்தமானதாக உள்ளதென என்னால் சான்று கூற முடியும். அதேபோல் திரு இரா. சடகோபன் தான் மொழிபெயர்த்த "உழைப்பால் உயர்ந்தவர்கள்" என்ற நாவலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்த நாவலை மொழிபெயர்ப்பு செய்யும்போது நான் என்னை வெறுமனே ஒரு மொழிபெயர்ப்பாளன் என்று மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. மலையக மக்களின் மேம்பாட்டில் பெரிதும் அக்கறை கொண்டவன் என்ற அடிப்படையில் மூல நூலாசிரியரின் பார்வையில் தென்படாத சிறிய சிறிய தகவல்களையும் மொழிபெயர்ப்பு சிதைவடையாமலும் திரிபுபடாமலும் கதையோட்டத்தில் சேர்த்துள்ளேன். அதன் காரணமாக மலையக மக்களின் பண்பாட்டு பாரம்பரியங்கள், கலை கலாசார அம்சங்கள், பழக்கவழக்கங்கள், பேச்சு வழக்குகள், மரபுகள் என்பவை மூலக் கதையிலும் பார்க்க சற்று மெருகூட்டப்பட்டுள்ளன எனலாம்". திரு.சடகோபன் அவர்கள் இதே உத்தியை இந்த நாவலின் மொழிபெயர்ப்பிலும் பின்பற்றி உள்ளதால் இந்நாவலைப் படிக்கும்போது இந்நாவல் மூல நாவலை விட சற்று தூக்கலாக உள்ளது என்றும் கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இவர் "வசந்தங்களும் வசீகரங்களும்" என்ற கவிதைத் தொகுப்பு நூலையும் "சொந்த மண்ணில் அந்நியர்கள்" என்ற சிறுகதைத் தொகுப்பு நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். "இரத்த வரலாறு" என்னும் நாவலையும் "ஆயிரம் ஆண்டுகால மனிதர்கள்" என்னும் சிறுவர் நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவரது அயராத எழுத்துப் பணி மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

**திருமதி அன்னலட்சுமி இராஜதுரை**

25/18, மருதானை வீதி, 3ம் குறுக்குத் தெரு,

ஹெறந்தளை, வத்தளை.

10. 05. 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மலையக மக்களின் வாழ்வியல் தொடர்பாக வெளிவந்த பல்வேறு பழமை வாய்ந்த நூல்களையும் தேடிப்பிடித்து வாசிப்பதில் முன்பெல்லாம் நான் பேரார்வம் கொண்டிருந்தேன். அதன்போது தான் ஒரு கட்டத்தில் அவற்றில் ஒன்றையாவது மொழிபெயர்த்தால் என்ன என்ற எண்ணம் உதித்தது. அதன் பிரகாரம் உழைப்பால் உயர்ந்தவர்கள் என்ற பந்து பாலகுருகே அவர்கள் எழுதிய "செனகசின் உப்பன் தருவா" என்ற சிங்கள நாவலை 2007ஆம் ஆண்டு மொழிபெயர்த்து வெளியிட்டு அந்த மொழிபெயர்ப்புக்கு எனக்கு சாகித்திய விருதும் கிடைத்தது. எனது முதலாவது மொழிபெயர்ப்புக்குக் கிடைத்த இந்த வெற்றியைத் தொடர்ந்து இதேபோல் மலையக மக்கள் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட வேறு நூல்களையும் மொழிபெயர்க்க வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அதன் விளைவாக "கிறிஸ்டின் வில்சன்" எழுதிய "பிட்டர் பெரி" என்ற கோப்பிக் கால வரலாற்று நாவலை "கசந்த கோப்பி" என்ற பெயரில் மொழிபெயர்ப்பு செய்தேன். இந்த மொழிபெயர்ப்புக்கும் சாகித்திய விருது கிடைக்கப்பெற்றது. அதனைத் தொடர்ந்து எனக்கு சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்ற அடை மொழியும் பட்டமும் என் பெயருக்கு முன்னர் வந்து சேர்ந்து கொண்டன.

அடுத்ததாக நான் செய்த மொழிபெயர்ப்பு நூல் சிங்கள இலக்கிய தூ ண்களில் ஒருவரான மார்ட்டின் விக்கிரமசிங்கவின். "அபேகம" என்ற நடை சித்திரமாகும். "எங்கள் கிராமம்" என்ற பெயரில் உருவான இந்த நூலுக்கும் தேசிய சாகித்திய விருது கிடைக்கப்பெற்றது. இப்பொழுது நான் வெளியிடும் "தேத்தண்ணி" என்ற இந்த நாவல் சிங்களத்தில் "தே கஹட்ட" என்ற பெயரில் உப்பாலி லீலாரட்ன அவர்களால் எழுதப்பட்டதாகும்.

இந்த நூல் "கோபால்" என்ற இளம் தொழிற்சங்க போராளி ஒருவனின் வாழ்ந்து, வளர்ந்து, மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து போராட்டங்கள் நடத்தி மாண்டுபோன ஒரு தியாகியின் கதையாகும். வழக்கமான மலையக தோட்டத் தொழிலாளி ஒருவனின் சமூக பிரச்சினைகளுக்கப்பால் அவனது தொழிற்சங்க பிரச்சினைகள் யாவை, அரசியல் உரிமைகள் யாவை, அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு மத்தியில் இருக்கும் தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் இவர்களை எவ்வாறு கசக்கிப், பிழிந்து, சுரண்டி, வஞ்சித்து தாம் சுகபோகமாக வாழ்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்துவதில் இந்த நாவல் மிக முற்போக்கானதாக தனது ஆணித்தரமான கருத்துக்களை முன்வைக்கின்றது என்று நெற்றியில் அடித்து சத்தியம் செய்து கொடுக்கலாம்.

இத்தகைய பிரதான கதையோட்டத்திற்கு உப கதைகளாக துரைமார், கன்டக்ட்டர், டீ மேக்கர், கங்காணிகள், மேட்டுக்குடியினர், உயர்சாதியினர் என்போர் எவ்வாறு இவர்களை வஞ்சனை செய்து சுரண்டுகின்றனர் என்பது சுவைபட சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் தேயிலைத்தூள், யூரியா உரம் என்பன எவ்வாறு களவாடப்பட்டு கடத்தப்படுகின்றன என்பதும் மிக நையாண்டிச் சுவையுடன் கையாளப்பட்டுள்ளது. இவற்றுடன் சேர்ந்து இளைஞர் பிரச்சினைகள், காதல், காதல் தோல்வி, சண்டை சச்சரவு, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், சாதிச் சண்டை, காட்டிக் கொடுப்புக்கள், கருங்காலித்தனம் என்பனவும் சேர்ந்து கொள்கின்றன. இவற்றை எல்லாம் சேர்த்து புனையப்பட்ட இந்த கலவை மிக தடிப்பாக அப்பி பூசப்பட்டு நாவல் எங்கும் மனங்கவர் வர்ண பூச்சாக மனதில் பதிந்து போகிறது.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களை சார்ந்திருக்கும் தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் எவ்வாறெல்லாம் தொழிலாளிகளை பகடைக் காய்களாக பயன்படுத்தி பெருந்தொகை இலாபத்தையும் அரசியல் அதிகாரத்தையும் ஆடம்பரத்தையும் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும், அண்மைக் காலத்து சம்பள போராட்டங்களும், கூட்டு ஒப்பந்த பேரம் பேசுதலும், ஒரு நாளைக்கான கூலி நிர்ணயம், மற்றும் 50 ரூபா வைத்தானும் பெற்றுக்கொள்ள முடியாத கையாலாகாத தனத்தையும் நாம் எல்லோரும் கண்ணைத் திறந்து கொண்டு பார்வையாளர்களாக மட்டுமே பார்த்துக் கொண்டு இருந்தோம் என்பதுதான் யதார்த்தம். இது இன்று நேற்று அல்ல இந்த மக்கள் எப்பொழுது முதல் முதலாக 1830களில் ஐந்து பென்ஸ், ஆறு பென்ஸ், ஒன்பது பென்ஸ் என்று பேரம் பேசி ஒரு சல்லிக்காசினை தம் சம்பள கூலியுடன் உயர்த்திக்கொள்ள தமது வரலாற்றுகாலம் முழுவதிலுமே போராடி அல்லலுற்று வந்துள்ளார்கள் என்பது நாம் அறியாதது அல்ல. இவ்விதம் ஏய்த்து நயவஞ்சகமாக சுரண்டிப் பிழைக்கும் வரலாறு காலம் காலமாக அதே தண்டவாளத்தில் தான் இன்றுவரை ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விதம் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இந்த சமூகம் கணிசமான அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதும் பிரத்தியட்ச உண்மைதான். இந்த மக்களை பொறுத்தவரையில் "மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் இந்தத் தலைவர்கள் எப்போதும் மீண்டும் மீண்டும் மிதிக்காது விட்டிருந்தால்" இன்னும் பல படிகள் இவர்கள் முன்னேறிச் சென்றிருக்கக்கூடும். இப்போதும்கூட இந்த அதிகார வர்க்கத்தினர் தம்மை மாற்றிக் கொள்வார்கள் என்பதற்கான அறிகுறிகள் கொஞ்சம் கூட தென்படவில்லை.

இந்த நாவலில் வரும் ஒரு தொழிற்சங்கத் தலைவர் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும் போது "எந்த ஒரு காரணத்துக்காகவும் நாம் தொழிலாளியின் பக்கம் சேர்ந்து விடக்கூடாது. ஆனால் அவர்களை எப்போதும் எப்படியாவது நம் பக்கமே வைத்திருக்க வேண்டும்" என்றும், மற்றொரு சமயத்தில், "தொழிற்சங்கத்தைவிட நமக்கு நமது அரசியல் கட்சியே மிக முக்கியமானது" என்றும் கருத்து தெரிவிப்பதானது அவர்கள் எப்படிப்பட்ட மனிதர்கள் என அவர்களை அப்பட்டமாக அம்பலப்படுத்தி அவர்கள் பூசியிருக்கும் சாயத்தை வெளுக்கப் பண்ணி தோலுரித்துக் காட்டிவிடுகிறது. அதுதான் உண்மையும் கூட. இந்நாவலில் பின்னிப் பிணையப்பட்டுள்ள பிரதான கதாபாத்திரங்களான கோபால், அவன் தந்தை செவனு, தாய் அன்னம்மாள், கோபாலின் நண்பர்களான நந்தசிரி, ஆரியவங்ச, விஜயபால, கோபாலை காதலிக்கும் புஷ்பராணி, புஷ்பராணியின் தந்தை கதிரேசன் மற்றும் பிற பாத்திரங்களும் கூட செவ்வனே செதுக்கி படைக்கப்பட்டுள்ளதுடன் சதுரங்கப் பலகையில் நகர்த்தப்படும் காய்கள் என கதையை நகர்த்திச் செல்கின்றன. கோவிந்தராஜ் என்ற தொழிற்சங்கப் பிரதிநிதி ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதி எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரண புருஷராக காட்டப்படுகிறார். சாராயத்துக்கும் சோற்றுக்கும் பணத்துக்கும் அடிமையாகி தொழிலாளர்கள் தமதினத்துக்கு துரோகம் செய்யும் கருங்காலித் தனமான செயல்கள் இக்கதையில் மட்டுமல்ல வரலாற்றுக் காலம் முழுவதுமே இருந்து வந்துள்ளது என்பதனை இதற்கு முன் வெளிவந்த பல்வேறு நாவல்களும் சிறுகதைகளும் கவிதைகளும் நடைச்சித்திரங்களும் நாட்டார் பாடல்களும் இன்று நமக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கின்றன. இந்த சமூகத்துக்கு எப்போது விடிவு காலம் வருமோ அப்போதுதான் இலக்கியங்களில் கூட இத்தகைய செல் நெறிமாறக்கூடும். அதுவரை இத்தகைய நாவல்களும் சிறுகதைகளும் கவிதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியதற்கான தேவை இருந்து கொண்டுதான் இருக்கும்.

எங்கோ இருந்து வந்து இந்த நாடு செழிப்படைவதற்காக தன் இன்னுயிரையும் இரத்தத்தையும் வியர்வையும் சிந்தி கால் காசு சம்பளத்துக்கு பாடுபட்டு இந்த நாட்டை பொருளாதார ரீதியில் மிக உயர உயரச் செய்த இந்த மக்களை ஏனோ தெரியவில்லை இந்த நாட்டின் ஏனைய மக்கள் ஒரு துரும்பாகக் கூட மதிக்காது பல வழிகளிலும் அவர்களை அவமானப்படுத்தி அவர்கள் தலை தூக்கிவிடக்கூடாது என்ற ரீதியில் அவர்களை விளிம்பு நிலையிலேயே எப்போதும் வைத்திருந்தனர். சுதந்திரம் பெற்ற உடனேயே இந்த மக்கள் அனைவரையும் இந்தியாவுக்கு அனுப்பிவிடவேண்டும் என்று துடியாய் துடித்தனர். அப்படி அனுப்பிவிட்டால் இந்த தேயிலைத் தோட்டங்கள் எல்லாமே பாலாய்ப்போய்விடுமே, பொருளாதாரம் பின்னடைந்து விடுமே என்றெல்லாம் இந்த நாட்டில் சிந்திப்பார் எவரும் இருக்கவில்லை. அதன் பின்னரும் இவர்களின் பிரஜாவுரிமையை இல்லாமல் செய்து இவர்களில் அரைவாசிப் பேரை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் என்ற ஒன்றினை ஏற்படுத்தி இந்தியாவுக்கு நாடு கடத்தினார்கள். இவர்கள் தேயிலைப் பயிர் செய்த உற்பத்தியும் வளமும் செறிந்த தேயிலை தோட்டங்களைக்கூட துண்டாடி "கொலனி" என்ற பெயரில் சுதேச மக்களுக்கு கொடுத்தார்களேயன்றி இவர்களுக்கு ஒரு துண்டு நிலத்தைத்தானும் இவர்கள் கொடுக்க முன்வரவில்லை. அவ்விதம் "கொலனியாக்கிக்" கொடுப்பதற்காக அபகரிக்கப்பட்ட இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் கூட இன்று பாழடைந்து, காடு மண்டி, எந்தவித பிரயோசனமும் இல்லாமல் கிடக்கின்றன. இந்த மக்கள் கல்வியால் முன்னேறி விடக்கூடாது என்பதற்காக இந்த நாட்டின் கல்வி முறையை இலவசக் கல்விமுறையாக மாற்றியபோதுகூட இவர்களுக்கு அந்த சலுகை வழங்கப்படக்கூடாது என்று அப்பட்டமாக பரிகாசம் செய்தார்கள். அதன் பின்னரும் கூட இந்த மக்களின் பிள்ளைகள் க.பொ.த (சாதாரணதர) பரிட்சையில் வெற்றி பெற்று விடக்கூடாது என்பதற்காக அப்பாடநெறியின் முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அவர்கள் சித்தி எய்தி விடக்கூடாது என்பதற்காக கணித விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்காது விட்டார்கள். ஆனால் அந்தத் தடைகளை எல்லாம் தாண்டி இன்று இவர்கள் தமக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று கோரி பெறுமளவுக்கு முன்னேறிவிட்டார்கள். அந்த வகையில் மலையக மக்களின் போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றைக் கூறும் இந்த நாவலை மொழிபெயர்த்துள்ளேன் என்று கூறிக்கொள்வதிலும் இதற்கு முன்னுரை எழுதுவதிலும் நான் பெருமை அடைகிறேன்.

இவர்கள் மீதான இத்தகைய அட்டூழியங்களுக்கு மேலதிகமாக காலத்துக்கு காலம் இவர்கள் மீது கடுமையான வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு சொத்துக்களும் உயிர்களும் சூறையாடப்பட்டு பெண்களும் மானபங்கப்படுத்தப்பட்டனர். 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதுடன் உண்ணாவிரதமிருந்த இம்மக்கள் தலைவர்கள் அடித்து உதைத்து துவம்சம் செய்யப்பட்டனர். 1956ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் அரசியல் தலைவர்கள் மொழி ரீதியான சமத்துவம் கோரியபோது இம்மக்கள் மீதும் வன்முறைகளும் பலாத்காரங்களும் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து 1971, 1975, 1977, 1978, 1983 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் இம்மக்களை இவர்கள் வாழ்விடங்களிலிருந்து துரத்தி வடக்குக்கும் கிழக்குக்கும் இந்தியாவுக்கும் சென்று குடியேற இவர்களை நிர்ப்பந்தித்தது. அதன் காரணமாகவே வடக்கிற்கும் கிழக்கிற்கும் சென்று குடியேறிய இம்மக்களின் இளைய பரம்பரையினர் 30 ஆண்டுகளாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்திலும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இவை எல்லாமே ஒரு ஆணித்தரமான உண்மையை தேவைப்படுத்தி மிக அழுத்தமாக அதனை வரலாற்றில் மிக ஆழமாக பொறித்துள்ளன. அது ஒரு நாட்டில் வாழ்கின்ற பல இனங்களும் இன்னொரு இனத்தினை புறம்தள்ளி அவர்களுக்கு இன்னல் விளைவித்து, அடக்கி, ஒடுக்கி அவர்கள் மீதான தமது அடக்குமுறை அரசாட்சியை திணித்து ஒருபோதும் இந்த நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதாகும். இன்று தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கிய விதி இதுவாகும்.

இந்த விதியை இன் நாட்டு தலைவர்கள் பலரும் நன்கு தெரிந்து வைத்திருந்தும் சுயநலன் கருதி அதனை தாம் தெரிந்துகொள்ளாதது போலவே நடந்துகொள்வதானது மிகவும் துரதிர்ஷ்டகரமான ஒரு நிலையாகும்.

இந்த காழ்ப்புற்ற தூர நோக்கற்ற மனநிலை காரணமாக கயமை மிக்க தலைவர்கள் இந்த நாட்டுக்கு மிகப் பாரிய அந்நிய செலாவணியையும் பொருளாதார மேன்மையையும் பெற்றுத்தரக்கூடிய தேயிலைக் கைத்தொழில் என்ற பாரிய கைத்தொழிலை கைவிட்டு அழிந்துபோக அனுமதித்து விட்டார்கள். இன்று இங்கு வசிக்கும் தொழிலாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தைப் போலவே இந்தத் தொழில் துறையும் எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என்ற கேள்விக்குறியை எதிர்நோக்கியுள்ளது. இன்று ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றத்திற்கு மத்தியில் மாற்றுக்கருத்து ஒன்று ஏற்பட்டு இந்தத் தொழில்துறை பாதுகாக்கப்படுவதிலேயே இம் மக்களின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது என ஆணித்தரமாகக் கூறமுடியும். அத்தகைய ஒரு சிந்தனை மாற்றத்திற்கு இத்தகைய நாவல்கள் ஒரு துளியாவது பங்களிப்பு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் இது சிங்கள மொழியில் எழுதப்பட்ட நாவல். இந்த நாவலை எழுதிய உப்பாலி லீலாரட்ன என்ற அற்புதமான நாவலாசிரியரை எனக்கு சில தசாப்தங்களாகவே நன்கு தெரியும். அன்னார் சில காலமாகவே ஒரு வித அபாயகரமான நோயால் அல்லல்பட்டு வந்தார். அவரது நோய் முற்றி அவர் இறந்து போகக் கூடும் என்ற அங்கலாய்ப்பில் இந்த நூலை அதற்கு முன்னரே வெளிக்கொண்டு வந்து விட வேண்டும் என்று அவசர அவசரமாக நான் முயன்றபோதும் அந்த காரியம் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக கைகூடவில்லை. திரு உப்பாலி லீலாரட்ன அவரது எழுத்துலக வாழ்க்கைக்கப்பால் ஒரு மிகச்சிறந்த மானிட நேயனாக இருந்தார். இந்த நாட்டின் ஏனைய இனங்களான தமிழ்-முஸ்லிம் இனங்களிடையே அவர் பாராட்டிய நட்பு அபாரமானது. அவர் கொடகே தேசிய விருது வழங்கும் நிகழ்வின் முக்கிய பங்குதாரராக விளங்கினார்.

கொடகே நூல் வெளியீட்டு நிறுவனம் ஒரு சிங்கள நிறுவனமாக இருந்த போதும் அந்த நிறுவனம் தமிழ் நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் சிங்கள மொழிக்கு நிகராக நாட்டில் வெளியிடப்படும் தமிழ் நாவல்களுக்கும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கும் சிறுகதை நூல்களுக்கும் சமமான பரிசு வழங்கி ஊக்குவிப்பதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார். அன்னாரது நாமம் சிங்கள இலக்கிய வரலாற்றில் மாத்திரமல்ல தமிழ் இலக்கிய வரலாற்றிலும் என்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு போற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை.

**இரா. சடகோபன்,**
17 B, ரிச்சர்ட் டி சொய்சா ஊடகவியலாளர் வீடமைப்புத் திட்டம்,
பத்தரமுல்ல.
தொ. பே : 0777679231
மின் அஞ்சல்: shadagopan.ramiah0@gmail.com
23.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01

# லயத்துக்காம்பராவின் ஒரு விடியல்

விடிந்து சில மணி நேரங்கள் கழிந்து போயிருந்தன. சிவந்த வானம் மஞ்சளாகிக் கொண்டிருந்தது. இன்னுங்கொஞ்ச நேரத்தில் வெயில் தாங்க முடியாத அளவுக்கு தகிக்க ஆரம்பித்துவிடும்.

லயத்துக்காம்பராவின் வாசப்படியில் யாரோ கால் பாதங்களை தட்டும் சத்தம் கேட்டு கோபால் தலையை உயர்த்திப் பார்த்தான். வாசற்படியில் விரித்திருந்த கயிற்றுச் சாக்கில் காலின் அடிப்பாதங்களில் படிந்திருந்த மணலைத் தட்டித் துடைத்துக் கொண்டிருப்பது தனது தந்தை என்று அறிந்ததும் கோபால் தான் என்ன செய்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தந்தை பார்த்துவிடாதபடி மடியில் இருந்த "ட்ரம் செட்டை" காம்பராவின் இருட்டான மூலையை நோக்கி தள்ளிவிட்டான். சாணம் பூசிய ஒப்புறவற்ற தரையில் சாரத்தை விரித்து சம்மணமிட்டு அமர்ந்திருந்த அவன் பரப்பரப்பாக எழுந்து விரித்திருந்த சாரத்தை மடித்து கொடியில் போட்டான்.

எனினும் அவன் தந்தை செவனுவுக்கு அவனது ஒவ்வொரு அசைவையும் புரிந்துகொள்ள முடியும். அவன் எதனை ஒளிக்கிறான் என்பதும் அவருக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ, இன்னும் தப்பு சரிக்கட்டுவதும் அந்தியானதும் லயத்துப் பயலுங்களோட சேர்ந்து ட்ரம் அடித்து பாட்டுப்பாடி கூத்தடிக்கிறதையும் விட்டுவிட்டு வேலைக்கு போறதுக்கு பாரு. நான் கண்டக்டர் ஐயாகிட்ட சொல்லி வைச்சிருக்கேன். இந்த ட்ரம் செட் விளையாட்டெல்லாம் வேல முடிஞ்சி வந்த பொறகு பார்த்துக்கலாம்"

கோபாலின் தந்தை செவனு, கோபாலின் காதில் நறுக்கென்றுபடும்படி வாசல்படியில் இருந்தபடியே கூறினார். உள்ளே நுழைந்து வேர்த்த மேனியில் ஒட்டிக்கொண்டிருந்த சட்டையை கழற்றி கொடியில் போட்டார். என்னதான் இருந்தாலும் கோபால் அவர்கள் குடும்பத்தில் இளையவன். சின்ன வயதிலேயே சுட்டித்தனமும், சுறுசுறுப்பும் மிக்கவன். அவன் பாட்டு சங்கீதம், ட்ரம் செட் வாசித்தல் போன்றவற்றில் வல்லவன் என்று தோட்டத்தில் பேரெடுத்திருந்தமை செவனுவுக்கும் உள்ளூர பெருமையாக இருந்தாலும் அவர் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அவர் மனதுக்குள் மாத்திரம் சந்தோசப்பட்டுக்கொள்வார். எனினும் அவனது எதிர்காலம் தொடர்பில் அவரால் கவலைப்படாமல் இருக்கமுடியவில்லை. குறைந்த பட்சம் தோட்டத்திலாவது வேலைக்கு சேர்த்துவிட வேண்டுமென்று நினைத்தார்.

"சரிப்பா, ஆனா, கோவில் திருவிழா வருது, அதுல நான்தான் ட்ரம் செட் வாசிக்கனும். அதோட நாங்கத்தான் ஏற்பாடெல்லாம் கவனிக்கனும்".

கோபால் தந்தையின் முகத்தை பார்க்காமலே பேசினான். அவனது ஒரு கை முதுகையும் மற்றக்கை தலையையும் சொறிந்து கொண்டிருந்தது. செவனுக்கு அவன் மேல் அனுதாபம் ஏற்பட்டது.

"அப்படீன்னா பரவாயில்ல, அவையும் செய்யவேண்டிய கடமைகள் தானே. திருவிழா முடியட்டும் பார்க்கலாம்" என்று அவனை சமாதானப் படுத்திய அவர் "அம்மா காலையில சாப்பிட ஏதும் சமைச்சிட்டுப் போயிருக்காவா? நீ ஏதாவது சாப்பிட்டாயா?" என்று பரிவுடன் விசாரித்தார்.

அவர் லயத்துக்காம்பராவின் முன்பக்கத்து சுவரில் களிமண் சுவரெழுப்பி கட்டி கரிபடிந்து போய்க்காணப்பட்ட சிறிய சமையலறைக்குள் நுழைந்தார்.

"அம்மா ரொட்டி சுட்டு வைச்சிட்டுப் போயிருக்கு. நான் சாப்பிட்டுட்டேன். நீங்க சாப்புடுங்க".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் தந்தை சாப்பிடுவதற்காக ரொட்டியும் ஒரு செம்புல தண்ணி மற்றும் டம்ளர் என்பவற்றை எடுத்துக்கொடுத்தான்.

செவனு காய்ந்து போயிருந்த ரொட்டியை மௌனமாக கடித்து மெல்ல ஆரம்பித்தார். அப்போதுதான் நினைவுக்கு வந்தவனாக "வெங்காயச் சம்பல் இருக்குப்பா.. இருங்க எடுத்துத்தாறேன்" என்று மீண்டும் ஓடினான் கோபால். அவன் அதே கையுடன் தேனீர் கேத்தலையும் அடுப்பில் வைத்தான். அதனைக் கவனித்த செவனு. "தேத்தண்ணி வேணாம்பா. போறபோது ஒத்தக்கடையில் சாயத்தண்ணி கேட்டு குடிச்சிக்கிறேன்."

அப்படிக்கூறிய அவர் ரொட்டியை மென்றபடி மௌனமாக சிந்தித்தார். உண்மையில் அவருக்கு கடையில் தேநீர் வாங்கிக் குடிக்கும் அவசியம் ஏற்படாது. அவரது அடுத்த வேலை கொழுந்து மடுவத்துக்கு சென்று கொழுந்து நிறுத்தவுடன் அதனை டிரக்டரில் ஸ்டோருக்கு கொண்டுசெல்வது. கொழுந்து மடுவத்தில் கொழுந்தெடுக்கும் பெண்கள் அவரை ஆளுக்கு ஆள் முந்திக்கொண்டு நன்கு உபசரிப்பார்கள்.

"செவனு அண்ணனுக்கு தேத்தண்ணி கொடுங்கடி" என்பார் கங்காணி.

"இந்தா செவபாக்கியம்.. இந்த போத்தல செவனு அண்ணன் கிட்ட கொடு".

"இருடி... இருடி... நா கொடுக்கிறேன்."

இப்படி பல பேர் போட்டிபோட்டுக்கொண்டு அவருக்கு தேத்தண்ணி மற்றும் வெத்திலை பாக்கும் கொடுப்பார்கள். செவனுவுடன் உதவிக்காக வேலை பார்க்கும் யோகராசா என்கிற யோகா பொடியனுக்கும் உபசாரம் கிடைக்கும்.

கொழுந்தெடுக்கும் பெண்களின் இந்த உபசாரம் மத்திய வயதைத் தாண்டியிருந்த செவனுக்கு நெஞ்சுக்கு இதமளிப்பதாக இருக்கும். அவருடன் சேர்ந்து அவரது உதவியாளனான யோகா பொடியனுக்கும் கிடைக்கும் உபசரணையை அவர் ரசிப்பார். அந்தப் பெண்கள் கூட்டத்துக்குள் மாட்டிக்கொள்ளும் யோகா பொடியன் மெல்லக் கழன்று சென்று ஒரு ஓரமாக பீடி ஒன்று பத்தவைத்துக்கொண்டு ஒரு ஓரக்கண்ணால் இளம் பெண்பிள்ளைகளின் இடுப்பு தெரிகிறதா என்று களவாகப் பார்த்து ரசித்துக்கொண்டிருப்பதையும் செவனு கவனிக்கத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இன்னமும் ரொட்டித் துண்டை வாயில் அரைத்தவாறோ ஏதோ பலமாக சிந்தித்துக்கொண்டிப்பதை கோபால் கவனித்தான். அவர் இயந்திர கதியாக ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரொட்டித் துண்டுகளை வாய்க்குள் திணித்துக் கொண்டிருந்தார். வாய்மென்று சுவைத்து ரொட்டியை ருசித்து முழுங்கிக் கொண்டிருந்தது. உதடுகளில் இடைக்கிடை மந்தகாசப் புன்னகையொன்றும் இழையோடி மறைந்தது. கன்னத்துச் சுருக்கங்கள் விரிந்து, நெளிந்து நடனமாடிக் கொண்டிருந்தன.

அவரது நிலையை சில கணங்கள் உற்றுக் கவனித்த கோபால் தனது தந்தைக்கு வயது போயிருந்தாலும் இன்னமும் திடகாத்திரமான தேகமும் சக்தியும் உள்ளவராகவே இருப்பதாகப்பட்டது.

அவன் பல தடைகள் அவரது செயல்களை எண்ணி பெருமிதப்பட்டிருக்கிறான். அவர் வாழ்வை நன்கு கரைத்துக் குடித்த அனுபவசாலியாகத் தோன்றினார். மிகுந்த துணிச்சலும் ரோசமும், சுயமரியாதையும் அவரில் அவனுக்குப் பிடித்த குணங்கள். ஒருமுறை அவன் மலைப்பாதையில் நடந்து சென்று கொண்டிக்கும்போது அவனது தந்தையின் டிரக்டர் கிறேட் வெஸ்டர்ன் தோட்டத்துப் பக்கமாக வளைந்து நெளிந்து ஏத்தத்தில் மலையேறிக் கொண்டிருந்தது. அத்தகைய பாதையில் வாகனம் செலுத்துவது இலேசுப்பட்ட காரியமல்ல. வளைவுகளில் நின்று நிதானித்து பின்னுக்கெடுத்து ஓட்ட வேண்டிய பாதை அது. ஆனால் செவனு அவை எதனையும் பொருட்படுத்தாமல் எல்லா வளைவுகளிலும் ஒரேமாதிரியாக வளைத்து ஒடித்துத் திருப்பி விரைந்து செயற்பட்டு டிரக்டரை தனக்கு நன்கு கீழ்ப்படிவான குதிரையை ஓட்டுவது போல் ஓட்டிக்கொண்டிருந்தார்.

கோபால் தன் தந்தையை மிக உயர்வாக எண்ணினான். அவனுக்கு தான் செவனுவின் மகன் என்று சொல்லிக்கொள்ள பெருமையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விதியாய் வந்துவிட்ட வறுமை

இப்போதெல்லாம் தோட்டங்களில் கோயில் திருவிழாவிலும், ஏனைய கிரியைகள் சடங்குகளின்போதும் தப்படிக்கும் பழக்கம் குறைந்து டிரம் செட் வாசிக்கும் பழக்கம் பரவியிருந்தது. சற்றே படித்த இளைஞர்கள் தப்படிக்கவும், டிரம் செட் வாசிக்கவும் வெட்கப்படுவதில்லை. இருந்தாலும் பெரியோர்கள் தம் பிள்ளைகள் இச்செயலில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தவறுவதில்லை.

செவனுவுக்கும் தம்பிள்ளை கோபால் தப்படிப்பதில் ஈடுபடுவதற்குப் பிடித்தம் இல்லையென்றாலும் அவன் டிரம் செட் வாசிப்பதில் வல்லவன் என்ற பெயரை அப்பகுதியில் வாங்கியிருந்தபடியால் அவனைத் தடுக்க விரும்பவில்லை.

கோயில் திருவிழாவில் தான் டிரம் செட் வாசிப்பதில் தனக்கு ஆட்சேபனையில்லை என தன் தந்தை பச்சைக் கொடி காட்டியிருந்தது தொடர்பில் கோபாலுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. திருவிழா தேர் ஊர்வலத்தின் போது நாதஸ்வரத்துடன், கிளாரினெட் மற்றும் டிரம் செட் அடித்துக்கொண்டு போகும் போது கூடியிருக்கும் மக்களுக்கு அவர்கள் கதாநாயகர்களாகத் தெரிவாஉகள். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை சராசரி மனிதர்களாக எண்ணுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பு, டிரம் செட் அடிப்பதும், அவற்றைத் தயாரிப்பதும் எல்லோரும் நினைப்பது போல், சாதாரண வேலையல்ல. இந்த சாத்திரத்தைக் கற்றுக் கொள்வதற்காக அவன் பட்ட சிரமங்களை அவன் மட்டுமே அறிவான்.

இந்தக் கலையைக் கற்றுக்கொள்ள முதலில் பணிய லயத்து சப்பாத்து பெருமாளின் மகன் சுப்பிரமணியத்துடன் களவாக நட்புப்பூண வேண்டி ஏற்பட்டது. அவனுடன் சேர்ந்து அவன் தப்பு தயாரிக்கும் பணியில் உதவி உபகாரம் செய்வதில் ஈடுபட்டான். அவர்கள் மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் என்பவற்றைச் சேகரித்து சாம்பல் பூசி காயவைத்து பதப்படுத்தினார்கள். இழுத்து மடிப்புக்கள் போக்கி மயிர் நீக்கி பட்டிகள் தயாரித்து, ஒட்டிப் பூசுவதற்கான பசை செய்து இப்படி எவ்வளவு வேலைகள் செய்ய வேண்டும். இவையெல்லாம் யாருக்கும் புரிவதில்லை.

அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது வெளியில் லயக் கோடியில் இருந்து இரைச்சல் சத்தம் கேட்டது.

"டேய் எறங்குங்கடா டெக்டரியில் இருந்து உடைந்து போனா செவனு மாமாவிடம் அடியும் உதையும் கெடைக்கும்"

"சொல்றது வெளங்கல அதுல ஏதாவது ஒடைஞ்சிருச்சினா வாழ்க்க பூராவும் சேதங்கட்ட முடியாது"

லயத்துக் கோடியில் இருந்து வயது முதிர்ந்த இரண்டு பெண்களின் குரல்கள் கேட்டன.

"கோபால் என்னன்று போய்ப்பாரு. பயலுக எல்லாம் டெக்டர்ல ஏறி வெலயாடுறாங்க போல இருக்கு. எத்தனை தடவ சொன்னாலும் கேக்குறாங்கல்ல" செவனு பொறுமையிழந்து கோபாலிடம் கூறினார்.

கோபால் வெளியில் இறங்கி டிராக்டர் காணப்பட்ட லயத்துக் கோடி நோக்கிச் சென்றான். குட்டிப் பயல்கள் ஐந்தாறு பேர் டிரக்டரில் ஏறி கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் கோபாலின் அண்ணன் ரெங்கநாதனின் இரண்டு புதல்வர்களும் இருந்தனர். அவன் வருவதைக் கண்ணுற்றதும் எல்லாப் பயல்களும் இறங்கி ஓடத் தொடங்கினார்கள்.

"மொதல்ல அமரன்தான் ஏறினான்"

டிரக்டருக்கு அருகில் இருந்து ஒரு சிறு பெண்பிள்ளை பிறாது சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்க தாத்தாவின் டெக்டர். நான் ஏறினா ஒனக்கென்னா?" என்றான் அமரன்.

"அமரன் தான் ரோதையெல்லாம் சுத்தினான்" இன்னொருபிள்ளை கோள் மூட்டியது.

தாத்தா இப்படித்தான் டெக்டர் ஓட்டுவாறுன்னு சீட்டுல குதிச்சு குதிச்சு காட்டினான் அமரன்.

கோபாலுக்கு இவற்றையெல்லாம் கேட்க சிரிப்பு, சிரிப்பாக வந்தது. பயல்கள் இப்பவே எப்படி கோள் சொல்லக் கற்றுக்கொண்டுள்ளார்கள் என நினைத்தான். உண்மையில் கோபாலின் அப்பா போதுமான உயரம் இல்லாததால் டிரெய்லருடன் டிரக்டரை மலை மேலே ஏற்றத்தில் ஓட்டிச் செல்லும்போது சாரதி ஆசனத்தில் இருந்து எழுந்தும் அமர்ந்தும் பெரும் பிரயத்தனத்துடன் ஓட்டிச்செல்வதைப் பார்க்கும் எவருக்கும் சிரிப்பு வராமல் இருக்காது. இவ்வாறு சிந்தித்தபோது கோபாலுக்கு தன் தந்தை மீது அனுதாப உணர்வே ஏற்பட்டது.

அவன் டிரக்டரின் அருகில் சென்று அதன் சாரதி ஆசனத்தில் விரிக்கப்பட்டிருந்த படங்குச் சாக்கை எடுத்து அதனை. நாலாக மடித்து கிழிந்து ஆழமாக பதிந்து போயிருந்த இருக்கையை சற்றே உயரமாக்கினான். பின் திரும்பிச் செல்ல முற்பட்டபோது டிரக்டரின் டயருக்கடியில் பூனைக் குட்டியொன்று படுத்திருப்பதைக் கண்டு அதனைப் பிடித்து அப்பால் மாட்டுப்பட்டியருகில் கொண்டு சென்றுவிட்டான்.

"பூனைக்குட்டி இன்னுங் கொஞ்சத்தில் சப்பையாகி இருக்கும்" என்று சொல்லிச் சிரித்தது பாதி அம்மணமாக இருந்த ஒரு பெண்பிள்ளை. அந்தப் பிள்ளையின் அருகில் காணப்பட்ட ஒரு சின்னப் பயல் தனக்கு ஒத்துவராத ஒரு காற்சட்டையை அணிந்து கொண்டு அது இடுப்பில் இருந்து நழுவிக் கீழே விழுந்து விடாமல் இருக்க இடது கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கப்பால் மாட்டுப்பட்டியருகில் காணப்பட்ட மல்லிகைப் பந்தலுக்கு அருகில் வெயில் காய்ந்து கொண்டிருந்த வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவளும் கோபாலின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அந்த மூதாட்டி கோபால் பூனைக் குட்டியின் மீது காட்டிய அன்பையும் கருணையையும் நினைத்து அவனை மனதுக்குள்ளேயே மெச்சினாள். பொதுவாக தோட்டப்புறங்களில் உடற்சக்திமிக்க, ஆரோக்கியமான பெண்களும், ஆண்களும் தொழிலுக்குப் போய் விட வயதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழடு கட்டைகளும் சுகமில்லாதவர்களும்தான் லயங்களில் மிஞ்சிக் கிடப்பார்கள். அப்போதுதான் பிறந்த குழந்தை முதல் பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகள் குளித்தும் குளிக்காமலும் அழுக்கான கிழிந்த ஆடைகளை அரைகுறையாக அணிந்துகொண்டு விளையாட்டும் சுட்டித் தனங்களும் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களைப் பாதுகாத்துப் பார்த்துக்கொள்ளும் பணி இந்த கிழடு கட்டைகளையே சாரும்.

கோபாலுக்கு இந்த முதியோர்களையும், வறுமையில் வாடித் தவிக்கும் சிறு பிள்ளைகளையும் கண்ணுறும்போதெல்லாம் மனதை வருத்தம் வாட்டிப் பிழியும். ஏன் இவர்களுக்கு மாத்திரம் இது விதியாய் வந்து வாய்த்திருக்கிறது. இந்த நிலைமையில் இருந்து எப்போதாவது மீட்சி கிடைக்காதா என அவன் மனம் படாதபாடுபடும். அப்போதெல்லாம் ஒரு நீண்ட பெரும் மூச்சைவிட்டு தன் மனதை ஆசுவாசப்படுத்திக் கொள்வான்.

அவன் அத்தகைய சிந்தனையுடன் தன் லயத்துக் காம்பராவுக்குத் திரும்ப முற்பட்டபோது அவன் தந்தை வேலைக்குப் போவதற்காக எதிரே வந்து கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும்,

"தம்பி சாய்ந்தரம் ஒத்தகட பக்கம் வந்துரு. சாமான் வாங்கித் தாறேன். அதோட லாம்பெண்ணை போத்தலையும் எடுத்துக் கிட்டுவா"

என்று கூறி விட்டு டிரக்டரில் ஏறினார்.

"லாம்பெண்ண நேத்து தோட்டத்து கோப்ரெட்டியில் வாங்கிட்டேம்பா"

"அப்படியா. சரி சரி நா வாரேன்"

செவனு டிராக்டரில் ஏறி அதனை உயிர்ப்பித்தார். அதன் கியரை மாற்றி ஸ்டீரியங்கை திருப்பி இடது பக்கமாக லயத்தில் இருந்து ஐந்நூறு அடி தூரத்தில் உள்ள கிரவல் ரோட்டை நோக்கி செலுத்தினார். டிராக்டர் போவதை சில நிமிடங்கள் கவனித்துக் கொண்டிருந்த கோபால் டிரம்களுக்கு வார்கள் பொருத்தும் வேலை இன்னும் முடிந்தபாடில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தவனாக இன்று அந்த வேலையை முடித்து விட வேண்டும் என்ற திடமனத்துடன் லயத்துக்குத் திரும்பினான். அவன் விட்டுச் சென்ற பூனைக்குட்டி இன்னும் அதே இடத்திலேயே சுகமாக உறங்கிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



03

# கோபால் வேலைக்குப் போறான்

கிறேட் வெஸ்டன் தோட்டத்து மலைச் சிகரங்களுக்கு அப்பால் செஞ்சூரியனின் உதயம் பிரசன்னமாகிக் கொண்டிருந்தது. ஸ்டோர் என்று அழைக்கப்படும் தோட்டத்து தொழிற்சாலையின் இயந்திரங்கள் உறுமும் சத்தத்தில் இருந்து அது உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதனை உணரக் கூடியதாக இருந்தது. மலைச்சாரல் எங்கும் வளர்ந்து செழித்துக் கிடந்த பச்சைப்பசேல் என்ற தேயிலைச் செடிகள் மீது அடர்த்தியாகப் படர்ந்திருந்த பஞ்சையொத்த வெண்மேகக் கூட்டம் செஞ்சூரியனுக்கு வழிவிடவோ என்னவோ கொஞ்சம் கொஞ்மாகப் கரைய ஆரம்பித்திருந்தது. அன்று இரவு பூராகவும் அசைந்து ஆடிக் களைத்துப் போயிருந்த தொழிற்சாலை இயந்திரங்களுக்கு ஓய்வு வழங்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அன்றிரவு முழுவதும் அந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய தேயிலைக் கொழுந்தின் நறுமணம் அந்தத் தோட்டம் பூராகவும் பரவிக் காணப்பட்டதுடன் தோட்டத்தின் எல்லைகளையும் தாண்டி அருகில் காணப்பட்ட நகர்ப்புற வீடமைப்புத் திட்டம், நெடுஞ்சாலை, ரெயில்வே வீதி என காற்றில் கலந்து கமழ்ந்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் அசந்து நித்திரை செய்து சோம்பலுடன் விழித்தெழும் மக்களுக்கு இவ்வாசனை நாசிக்குள் நுழைந்ததும் உற்சாகத்தைக் கொண்டு வரும். அதற்கும் மேலாக ஒரு சிலர் இந்த நறுமணத்தை குளிர்க் காற்றுடன் தமது நாசிக்குள் ஆழ இழுத்து சுவாசித்து தம் நாடி நரம்பெங்கும் செலுத்தி இரத்தத்தில் கலக்கச் செய்து அன்றைய முழுப் பொழுதையும் தமக்கு சொந்தமாக்கிக் கொள்வர்.

எனினும் அந்தத் தொழிற்சாலையின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் சங்கு என்ற வஸ்துவை யாருக்கும் பிடிக்காது. அதிகாலையில் தொழிலாளர்களின் தூக்கத்தை கலைத்து "தூங்கியது போதும் எழுந்து வேலைக்குப் போ" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிடும் அந்த சங்கொலியை யாருமே விரும்பியது கிடையாது. அதனால் இச்சங்கொலி அனைவருக்கும் அவலக் குரலாகவே ஒலித்தது. சங்குச் சத்தம் கேட்டு அவதி அவதியாக எழுந்து பிறட்டுக் களத்துக்கு ஓடும் ஆண்களும் பெண்களும் இந்த பாழாய்ப் போன சங்கினை சபிக்காத சந்தர்ப்பங்களே கிடையாது. அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ சங்குச் சத்தத்துக்குக் கட்டுப்பட்டு வரிசையாக பிறட்டுக் களத்துக்குச் சென்று தாம் எங்கே, என்ன வேலையைச் செய்ய வேண்டுமென்று தெரிந்துகொண்டு மீண்டும் லயங்களுக்குச் செல்வார்கள்.

அதன் பின் வேலைக்குச் செல்ல வேண்டிய இடைக்காலத்தில் பகல் சாப்பாட்டை சமைப்பார்கள். அதில் ஒரு சிறு பகுதியை காலைச் சாப்பாட்டுக்கென ஒதுக்கிக் கொள்வார்கள். அநேகமாக அது தேங்காய் சம்பலும் ரொட்டியுமாகத்தான் இருக்கும்.

கோபாலின் வாழ்வில் அன்று ஒரு முக்கியமான நாள். அவன் முதன் முறையாக மலைக்கு வேலைக்குப் போகப் போகிறான். அதற்கென அவன் சில தயாரிப்புக்களை செய்ய வேண்டியிருந்தது.

பணிய லயத்து சுப்பிரமணியத்திடமிருந்து கட்டைக் கலிசான் ஒன்றும் மாரியாயி அத்தையிடமிருந்து சொரண்டி ஒன்றும் இரவல் வாங்கியிருந்தான். தன்னை எரிக்கும் வெயிலில் இருந்து காப்பாற்றிக்கொள்ள ரெங்கநாதன் அண்ணனிடம் இருந்து பழைய கெப் தொப்பி ஒன்றை வாங்கியிருந்தான். இவற்றைத் தவிர தேயிலைச் செடிகளுக்கு நடுவில் நுழைந்து செல்லும்போது இடுப்பிலும், தொடை, கால் பகுதிகளிலும் தேயிலை செடியின் வாதுகள் கீறிக் காயப்படுத்தி விடாமல் இருப்பதற்காக முழங்கால் வரைக்கும் உரப்பையொன்றை இரண்டாகப் பிரித்து மடித்து இடுப்பில் கட்டிக் கொள்ளும்படி அம்மா ஆலோசனை தெரிவித்திருந்தார். இடுப்பில் கட்ட படங்கு நூலை திரித்து தயாரித்த தடித்த கயிறொன்றும் கிடைத்தது.

என்னதான் சிறு வயது முதலில் இருந்தே அந்த தேயிலைச் செடிகளிடையே பிறந்து வளர்ந்து விளையாடித் திரிந்திருந்தாலும் இப்போது இந்த தயாரிப்புக்கள் எல்லாமே அவனுக்கு அந்நியமாகத் தெரிந்தன. இவையெல்லாம் அவசியந்தானா என்று நினைத்தான். தோட்டங்களில் சிறுவர்கள் விடலைப் பருவத்தை அடைந்த உடனேயே வேலைக்குச் சேர்த்து விடுவது வழக்கம். கோபாலைத் தவிர அவன் வயதைச் சேர்ந்த அனைவருமே ஏற்கனவே வேலையில் சேர்ந்து விட்டார்கள். ஒரு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் அருகில் உள்ள நகரில் கராஜிலோ, வேறு கடைகளிலோ வேலை தேடிச் செய்து கொண்டிருந்தனர்.

கோபாலைப் பொறுத்தவரையில் அவனது அப்பாவும் அம்மாவும் தோட்டத்தில் வேலை செய்தபடியாலும் அவன் குடும்பத்தின் கடைசிப் பொடியன் என்றதாலும் அவனை உடனேயே வேலைக்குச் சேர்க்க அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. கொஞ்ச காலம் அவன் அப்படியே இருந்து விட்டுப் போகட்டும் என விட்டு விட்டனர். அவனோ நகரிலுள்ள சினிமாத் தியேட்டர்களில் சினிமா பார்ப்பதிலும் மற்ற நேரத்தில் நண்பர்களுடன் சேர்ந்து டிரம் செட், டோலாக் என்பவற்றுடன் பாட்டுக்கச்சேரி வைத்து ஆடிப் பாடி மகிழ்வதுமாக இருந்தான்.

"ஆயிஸ்.. அப்பா, இன்னிக்கு கோபால் மாமா வேலைக்குப் போவுது" சின்னப் பயல் ஒருவன் சத்தம் போட்டு கூறினான். அவன் தேயிலை மலைக்குப் போகும் பாதையில் இருந்த சிறிய நீர்க்கானின் இரு பக்கமும் கால் வைத்து குந்திக்கொண்டு காலைக்கடன் கழித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அருகருகே மேலும் சில குட்டிப் பயல்கள் அதே விதத்தில் குந்தியிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் கோபாலைப் பார்த்து கெக்கெலி கொட்டி சிரித்தார்கள். அது அவர்கள் செய்து கொண்டிருந்த காரியம் அப்படியொன்றும் தவறானதல்ல என்பதற்கு சமாதானம் கூறுவதுபோல் இருந்தது.

அப்பிரதேசத்துக்கு அடிக்கடி போதுமான அளவு மழை கிடைப்பதால் அந்த நீர்க்கானில் ஓடை போல் நீர் ஓடிக் கொண்டே இருக்கும். அதனால் அவர்கள் கழிக்கும் சிறுநீர், மலம் என்பன கீழே பாயும் ஆற்றை நோக்கி அடித்துச் சென்று விடும். அதனால் அந்தக்கான் அவர்களின் பொது மலசலகூடமாக மாறியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் இரவு நேரங்களில் அவசரமான வேலைகளில் பெரியவர்களும் கூட அந்த இடத்தில் குந்திவிடுவது வழக்கமாக இருந்தது.

"இன்று அன்னம்மா வீட்டிலிருந்து பொங்கல் கெடைக்கும். மகன் மொத மொதலாக வேலைக்குப் போறான்ல" கொழுந்துக் கூடையை தலையில் போட்டுக்கொண்டு லயக்கோடிக் காம்புராவில் இருந்து வெளியில் வந்த கமலம் அக்கா சிரித்துக் கொண்டே சொன்னா. கோபால் வெட்கத்துடன் கீழே பார்த்துக் கொண்டான்.

"அவன புடுங்கித் தின்னாம அவன் பாட்டுக்கு வேலைக்குப் போக விடுவீங்களா?" அன்னம்மா எல்லா லயத்துப் பொம்பளைங்களுக்கும் கேட்கும்படி சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா வா என்னா கொஞ்சிக் கொழைஞ்சிக்கிட்டு? சின்னப் பயல் மாரி" லயக்கோடியில் கோபாலுக்காக காத்துக் கொண்டிருந்த நந்தசிரி மகிழ்ச்சியுடன் கூறினான்.

"நா ஒனக்கு சொரண்டி ஒன்றும் தேடிக்கிட்டு வந்தேன். நீயும் ஒரு சொரண்டி கொண்டாந்திருக்க. யாரு கொடுத்தது"

"மாரியாயி அத்தைக்கிட்டருந்து வாங்கினேன்.. ஏன்டா, வேலை கஸ்டமா இருக்காதுல்ல?" கோபால் தயங்கியவாறே நண்பன் நந்தசிரியிடம் கேட்டான்.

"ஒரு கஸ்டமும் கெடையாதுடா சும்மாவே நாள் போயிரும். நேரம் போறது கூட தெரியாது. தேயிலைச்செடிகளுக்கு இடையில் நுழைந்து இரண்டு புறங்களிலும் அடர்ந்திருக்கும் புல் பட்டைகளை சொரண்டியால் சொரண்டி எடுத்து குவிச்சிக்கிட்டே போக வேண்டியதுதான். நீ வந்து செஞ்சிபாரேன் ரொம்ப லேசு. ஒனக்கு ஆசையா கூட இருக்கும். ஒவ்வொரு நாளும் வேலை செஞ்சிட்டு கடைசில சம்பளம் எடுக்கிறபோது ஜொலிதான்டா. நாம யார் பேச்சயும் கேட்க வேண்டியதில்ல. விருப்பமான முறையில் செலவு செய்யலாம். வா வா நீயும் நானும் ஒரு மலையில்தான் வேலை செய்ய போறோம் நா. ஒங்கிட்டயே இருக்கிறேன்". நந்தசிரி கோபாலுக்கு தைரியமூட்டினான்.

அவர்கள் இருவரும் தாம் வேலை செய்ய வேண்டிய மலையை அடைந்தனர். அங்கே அவர்களுக்கு முன்னமேயே அந்த மலையில் வேலை செய்ய வேண்டிய ஏனையோர் வந்திருந்தனர். அவர்களைப் பார்த்ததும் நந்தசிரி மகிழ்ச்சியுடன் கோபாலிடம் கூறினான்.

"கோபால் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இன்னைக்கு நமக்கு கங்காணி வேலை பார்க்கப் போவது நம்மாளுதான். சேதுபதி கங்காணி. இரண்டு வயசானவர்களையும் நம்முடன் போட்டிருக்கிறார்கள். ஆரியவங்சவும் இருக்கான். வேறென்ன இன்னைக்கு உனக்கும் எனக்கும் நல்ல நாள் தான். நீ பாரு வேல ஒனக்கு புடிச்சிப் போகும்"

கோபால் தோட்டத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் தோட்டத்தில் எப்படி வேலை நடக்கின்றது என்பதை அன்றுதான் தெரிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04



# நந்தசிரியின் நையாண்டி

பதினான்காம் நம்பர் மலைக்கு வேலைக்குச் சென்று புல்லு வெட்டிய முதல் நாள் தொழில் அனுபவம் கோபாலுக்கு வித்தியாசமானதாகவே இருந்தது. ஏற்கனவே அத்தொழிலுக்கு நன்கு பழக்கப்பட்டிருந்த அவனது உயிர் நண்பனாகத் திகழ்ந்த நந்தசிரி மேலும் வினோதமானவனாகவும் மதிப்புக்குரியவனாகவும் அவன் மனதில் இடம்பிடித்தான். சிலவேளை அவன் அளவுக்கதிகமாக குறும்புத்தனம் செய்கிறானோ என்றும் மனதில் சந்தேகம் ஏற்பட்டது. எனினும் அவன் இளமைத் துடிப்பும் நெஞ்சுரம் மிக்கவனாகவும் இருந்தான். அத்தகையவன் தனக்கு நண்பனாக வந்தது தொடர்பில் அவன் பெருமைப்பட்டான்.

அவர்களுக்கேற்றால் போல் அன்று நடுத்தர வயதுடைய சேதுபதியே கங்காணி வேலை பார்ப்பதற்கு வந்திருந்தார். அவரே தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகவும் பதவிவகித்தார். ஆனால் நந்தசிறி இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காமல் அவரைக் கிண்டல் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான். மரியாதை இல்லாமல் பேசினான்.

"சேதுமாமா ஒருவாய் வெத்தலை இருந்தா கொடு. நான் வந்திருப்பது ஒனக்கு நெனவில்லையா. இன்னைக்கு புதுசா எனது நண்பனும் வேலைக்கு வந்திருக்கான். செவனு மாமாவோட மகன். கோபால், புல் சப்போட் கொடுக்கனும். சரியா?"

சேதுபதி கங்காணிக்கு நந்தசிறியின் அடாவடித்தனங்கள் எல்லாம் தெரியும். அவனது விவகாரம் தொடர்பில் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வார். துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பது அவரது கொள்கை. நந்தசிறி தொடர்பில் சேது கங்காணி நடந்து கொள்ளும் விதம் கோபாலுக்கு ஆச்சரியமாக இருந்தது. தோட்டத்தின் தலைவராகவும் கங்காணியாகவும் செயற்பட்டு பலரையும் கட்டுப்படுத்தும் அவர் நந்தசிறியின் முன் பெட்டிப் பாம்பாக இருந்தார்.

உண்மையில் நந்தசிறி அவர்களுக்கு மத்தியில் ஒரேயொரு சிங்கள இளைஞனாக இருந்தபோதும் அவன் சிங்களத்தனத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்களுள் ஒருவனாகவே தெரிந்தான்.

இதையெல்லாம் பார்க்கும்போது கோபாலுக்கு அன்றைய தினம் தான் புதிதாக வேலைக்கு வந்திருப்பது போல் தோன்றவில்லை. அவன் கங்காணி காட்டிய நிரைக்குப் போய் முதல் தேயிலை செடியை நோக்கிக் குனிந்தான். அவனுக்கு அடுத்த நிரையில் வேலையை அப்போதுதான் ஆரம்பித்திருந்த சேவுகப் பெருமாள் அவனைப் பார்த்து வரவேற்று புன்னகை செய்தான்.

"தூரடி கவனம், தூரடி கவனம்" சேதுபதி கங்காணி மலையெல்லாம் அலறும்படி உயர் குரலில் அப்பால் இருந்து கத்திக் கொண்டிருந்தார்.

"கோபால் தம்பி தேயிலை செடியின் தூர்ல வெட்டுப்படாம சொரண்டிய உள்ளே நுழைத்து பட்டும் படாமலும் புல்லை மாத்திரம் சொரண்டி எடுக்கனும். அது ஒன்னும் கஸ்டமில்ல. ஆரம்பிச்சிட்டா அப்பொறம் எல்லாம் சரியாகிடும்" சேது அவனுக்கு வேலை சொல்லிக்கொடுத்தான்.

சிறிது நேரம் அவர்கள் மௌனமாக வேலை செய்தார்கள். நினைத்ததைப் போல் வேலை கடினமாக இல்லை என்று கோபாலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குப்பட்டது. அவன் ஏனையோருக்கு சமமாக புல்வெட்டிக் கொண்டு போனான்.

மலையை ஒரு சுற்று சுத்திக்கொண்டு வந்த சேதுபதி கங்காணி அவன் எவ்வாறு வேலை செய்கிறான் என்று பார்க்க வந்தார்.

"பரவாயில்லை. நல்லாதான் புல் வெட்டுற தூரடியில அதிக மண்ணைக் கிளறாத"

கோபால் அவரை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தான். அது அவன் அவருக்கு நன்றி தெரிவிப்பது போலிருந்தது.

"என்னாதம்பிஎப்படிவேலைபுடிச்சிருக்கா. செவனுவோடமகன்தானே. பாட்டு மியூசிக்கெல்லாம் செய்றியாமே. நல்லது எல்லோரோடையும் சேர்ந்து புல்லு வெட்டிக்கிட்டுப் போகணும். பிந்தக்கூடாது. புல்ல புடுங்கி தேயில மேல வச்சிறு. அத அள்ள வேற ஆளு போட்டிருக்கு."

சேதுபதி அவனுக்கு அறிவுரை சொன்னார். அவர் நிமிர்ந்து பார்த்தபோது நந்தசிரி கண்ணில் படவில்லை.

"இந்த திருட்டுப் பயலால கரச்சல். எங்க போய் தொலைஞ்சான். கன்டாக்கையா வார நேரம். பெறகு எனக்கும் சேத்து ஏச்சு கெடைக்கும்."

அவர் யோசித்த போதே நந்தசிரி அருகில் கானில் இருந்து வெளியே வந்தான். அவன் வலது கை விரல் இடுக்கில் சிகரட் ஒன்று புகைவிட்டுக் கொண்டிருந்தது.

"என்னையா தேடுறீங்க சேது மாமா. நா இங்க தான் இருக்கே. பெரியவங்க முன்னுக்கு சிகரட் குடிக்கக்கூடாதுன்னு தான் அப்படி மறைஞ்சி. ஒரு இழுப்பு இழுத்துட்டு வந்தேன் என்ன இருந்தாலும் கங்காணிக்கு மரியாதை தர வேணாமா..?"

அவனது குலைந்த பேச்சால் சேதுபதி கங்காணியின் கோபம் வந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது.

"வேலை செய்யிற நேரத்தில இதென்னா சிகரெட்டு.. நீ செய்யிற வேலையால மத்தவங்கல மேய்க்க முடியாம போவுது"

பட்டும் படாமலும் அவனைக் கடிந்துகொண்ட சேதுபதி மேலே மலை உச்சியை நோக்கி ஏறத் தொடங்கினார். வேலை ஆரம்பித்து இரண்டு மணி நேரம் சென்ற பின்புதான் அவர்களுக்கு தேநீர் அருந்தவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாறவும் நேரம் கிடைத்தது. எல்லோரும் மலையில் நிழலாகப் பார்த்து அமர்ந்து தாம் தாம் கொண்டு வந்திருந்த பாண், ரொட்டி, அவித்த மரவள்ளி மற்றும் வற்றாளைக்கிழங்கு முதலானவற்றை பிரித்து பகிர்ந்து சாப்பிட்டனர். அவர்களின் அன்றாட வழக்கப்படி மலையிலிருந்து யாராவது ஒரு ஆள் லயங்களுக்கு ஓடிப்போய் வேலை செய்வோரின் தேநீர்ப் போத்தல்களை எடுத்துக்கொண்டு வருவார்கள்.

கொண்டுவரப்படும் தேநீர் மற்றும் உணவுப்பொருட்கள் எல்லோர் மத்தியிலும் கைமாறிச் செல்லும். ஆரியவங்ச ஒரு முழுப்பானையும் கொண்டு வந்திருந்தான். ஆனால் நந்தசிரி ஒன்றுமே கொண்டு வந்திருக்கவில்லை. கோபால் தான் கொண்டு வந்திருந்த இரண்டு ரொட்டிகளில் ஒன்றை அவனுக்குக் கொடுத்தான். இருந்தாலும் அதனை அவன் பெற்றுக்கொள்ளவில்லை.

"அத வைச்சிரு. நான் பொறகு வாங்கிக்கிறேன். இப்ப சேது கங்காணியின் ரொட்டிக்கு வேட்டு வைப்போம்" என்று கூறிய நந்தசிரி கானின் மறு ஓரத்தில் சற்று தூர அமர்ந்து ரொட்டியை மென்று விழுங்கிக் கொண்டிருந்த சேது கங்காணியின் பக்கத்தில் சென்று அமர்ந்தான். சேதுபதி தனது ரொட்டியில் இருந்து அரைவாசியைப் பிய்த்து அவனுக்குக் கொடுத்தார். நந்தசிரி அதனை வாங்கிக் கொண்டு மறுபுறம் அமர்ந்திருந்த தொரசாமி பக்கம் தன் ஓரப்பார்வையை செலுத்தினான். அவனது அந்தப் பார்வை அவன் தொரசாமியை வம்புக்கிழுக்கப் போகிறான் என்பதை ஏனையோருக்கு உணர்த்தியது. எல்லோரும் என்ன நடக்கிறதென ஆவலோடு அப்பக்கம் பார்த்தனர்.

"தொரசாமி மாமா. ஓம் மகள எனக்குக் கட்டித் தருவியா.?" நந்தசிரி தொரசாமியின் காதுப் பக்கம் திரும்பி எல்லோருக்கும் கேட்கும்படி கூறினான்.

"நீ.. ஓ... வேலையப்பாரு.. அவளுக்கு கலியாணம் நிச்சயம் பண்ணியாச்சு.. அடுத்த மாசம் தேதி குறிச்சிருக்கு"

நந்தசிரியின் நையாண்டிக்கு கோபப்படாமல் பதில் சொன்னார் தொரசாமி.

"எதுக்கு தொரசாமி மாமா அடுத்த மாதம் வரை காத்திருக்க வேண்டும். நா என்றால் நாளைக்கே ரெடி. உன் மகளை எனக்கு தருவாயா முடியாதா என்பதை மட்டும் சொல். இங்கே கூட எத்தனை சிங்களப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியன்கள் தமிழ் பிள்ளைகளை கட்டியிருக்கிறார்கள். நா என்னத்துல கொறஞ்சவன்."

நந்தசிரி விடுவதாக இல்லை. அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்த தொரசாமியின் உள் மனதில் இலேசாக கோபம் கொப்பளிக்க ஆரம்பித்தது. அவர் கஷ்டப்பட்டு அதனை கட்டுப்படுத்தினார்.

"மகளுக்கு கலியாணப் பேச்சு முடிஞ்சிரிச்சின்னா முடிஞ்சது தான். அதைப்பற்றி வேறு பேச்சு தேவையில்லை" தொரசாமி அவ்விடத்தில் இருந்து அகல்வதற்காக எழுந்தார்.

"தொரசாமி மாமா நா சொல்றதைக் கேளு கொஞ்சம் பொறு"

இந்த சம்பாஷணையில் ஆரியவங்சவும் சேர்ந்து கொண்டான். அவன் தொரசாமியை எழுந்திருக்க முடியாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

அங்கு என்ன நடக்கின்றதென்பதனை கோபால் உட்பட அனைவரும் சுவாரஸ்யமாக அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

"தொரசாமி மாமா, தொரசாமி மாமா, ஒம் மகளை எனக்குக் கொடுத்தா கொரங்கு கையில மாலைய கொடுத்த மாதிரி பொத்தி வைச்சி பாதுகாப்பேன்"

நந்தசிரி, தொரசாமி அடிக்க வந்தால் ஓடுவதற்கு வாய்ப்பாக கொஞ்சம் தூரத்துக்கப்பால் இருந்தே சொன்னான். அவன் நினைத்தது போலவே, தொரசாமிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

"திருட்டு களுத, எரும்மமாடு பறச் சிங்கள" என்று கத்தியவாறே அருகிலிருந்த சுரண்டியையும் எடுத்துக்கொண்டு அவனை அடிக்கப் பாய்ந்தார். இந்தக் காட்சிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த சகலரும் வயிறு வலிக்கச் சிரித்தார்கள். சிலரது கண்களில் இருந்து கண்ணீரும் கசிந்தது. இத்தகைய கிண்டலும், நக்கலும், நையாண்டியும் தினந்தோறும் மலையில் நடக்கும் காட்சிதான். இதனை யாரும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் கோபாலுக்கு இது நந்தசிரியின் அதிகப்பிரசங்கித் தனமாகத் தெரிந்தது.

அத்துடன் அவர்களை அடக்கிய கங்காணி சேதுபதி தனது வழமையான உரத்த குரலில் மீண்டும் வேலையை ஆரம்பிக்கும்படி கட்டளை போட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாரும் நெரைக்கு போங்க. சுருக்கா சுருக்கா வேலைய பாருங்க. வாப்பா, புதுத்தம்பி கோவாலு... இங்கவா இந்த புல்ல எல்லா ஒன்னா கொண்டுவந்து குவிச்சி போடு"

அதன் பின்னர் அன்றைய தினம் வேலை எவ்வாறு நடந்ததென்பது கோபாலுக்கு ஒரு பொருட்டாகப்படவில்லை. அவன் திருப்தியுடன் வேலை செய்தான். இவ்வளவு நாளும் வேலையில் சேராமல் விட்டது வீண் என்று நினைத்தான். மலையில் அவனையும் ஒரு ஆளாக மற்றவர்கள் அங்கீகரித்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05



# மாற்றம் பெறாத லயத்து வாழ்வு

புல்லுவெட்டும் மலையில் தான் முதல்நாள் வேலைக்குச் சென்ற அனுபவம் அவனுக்கு மறக்க முடியாத சம்பவமாக அமைந்தது. அது வேலை செய்வதாக இல்லாமல் விளையாட்டுப் போலவே இருந்தது. இருந்தாலும் ஒரு பெரிய மனிதர் என்று கூட பார்க்காமல் நந்தசிரி தொரசாமியுடன் கிண்டலடித்து. அவரை கோபப்படுத்தி நையாண்டித்தனம் செய்தமையை அவனால் சகிக்க முடியவில்லை.

அன்று சாயந்தரம் நண்பர்கள் இணைந்து அருகிலிருந்த பீலியில் மேல், கை, கால், முகம் கழுவிக்கொண்டு லயம் நோக்கி திரும்பிச் செல்லும்போது கோபால் நந்தசிரியிடம் தன் மனக் குழப்பத்தைத் தெரிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை விட பெரிய மனிதர்களிடம் நீ அப்படி மரியாதையில்லாமல் கிண்டலடிப்பது நல்லதல்ல நந்தசிரி. திடீர்னு கோவம் வந்து கையிலிருந்ததை எடுத்து அடித்து விட்டால் என்ன செய்வது?

அதைக் கேட்டு நந்தசிரி மந்தகாசமாகப் புன்னகை செய்தான்.

அதெல்லாம் ஒவ்வொருநாளும் நடக்கிறது தான் கோபால். சும்மா கேலிப் பேச்சுதான். அடுத்த நிமிடமே என்ன சொன்னோம் என்பது மறந்து போய்விடும். உன் அப்பாவிடம் கூட மலையில் இளம் பொம்பளைங்க அப்படித்தான் கேலி பேசுவாங்க என்றான் நந்தசிரி புன்னகை மாறாமல்.

"இருந்தாலும் கோபம் உண்டாக்கும் விதமான ஒருவர் மனதை புண்டுத்தும்விதமான கேலி நல்லதல்ல. தனது சொந்த மகளை இழுத்து கேலி பண்ணினால் யாருக்குத்தான் கோபம் வராது?"

"நீ வேணும்னா அந்திக்கு என்னுடன் வா. தொரசாமி மாமாவின் லயத்துக்குப் போய் வருவோம். என்ன நடக்கிறதுனு பார்."

இதைக் கேட்டு கோபால் திடுக்கிட்டான்.

"வேணாம் நந்தசிரி இது ரொம்ப அதிகம். தொரசாமி மாமா திரும்பவும் ஒன்ன பார்த்தா காலை ஒடைக்காம விட மாட்டாரு"

"அப்படியெல்லாம் நடக்காது கோபால் நான் போய் உடுப்பு மாத்திக்கிட்டு கொஞ்ச நேரத்தில் வாரேன். நீயும் வா. காசு இருந்தா எடுத்துக்கிட்டு வா. ஆறு மணி படம் பார்க்க போவோம்"

நந்தசிரி படம் பார்க்கப் போவது பற்றி கூறியதும் கோபாலுக்கு எல்லாம் மறந்து போய் விட்டது. அவன் தான் வேலைக்குப் போன முதல் நாளை கொண்டாட நினைத்தான். அதற்கு காசு தேவை. அம்மாவிடம் ஐந்து ரூபாவாவது கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். இன்றைக்கு வேலைக்குப் போனாலும் அதற்குரிய சம்பளம் மாசக் கடைசியில்தான் கிடைக்கும். ஆரியவங்கசவுக்கும் டிக்கட் எடுக்க வேண்டும். மூணு நாளு சிகரட் வாங்க வேணும்.

இவ்வாறு சிந்தித்தவாறே கோபால் தன் லயத்தை நோக்கி நடந்தான். அவன் தன் லயத்துக் காம்பராவின் வாயிலை அடைந்தபோது அவனது அண்ணன் மகன் அமரன் ஓடி வந்து வீட்டுச் சாவியை அவனிடம் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏண்டா, ஆச்சி இன்னும் வரலியா?" கோபால் அவனிடம் கேட்டான்.

"சங்கு இன்னமும் ஊதல சங்கு ஊதுன பெறகுதான் அவுங்கெல்லாம் வருவாங்கன்னு தெரியாதா?"

சங்கு இன்னமும் ஊதலங்கறது அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. அவன் அமரனின் தலையைக் கோதிவிட்டு அவனை போய் விளையாடும்படி கூறினான்.

பழைய சைக்கிள் சில்லின் ரிம்மொன்றை தடியால் தட்டி ஓட்டிக்கொண்டு "பீம் பீம்" என்று வாயால் ஒலியெழுப்பிக் கொண்டு ஓடி விளையாடும் அந்தச் சிறுவனின் விளையாட்டை சிறிது நேரம் ரசித்த கோபால் அதே விதத்தில் தானும் தனது சிறு பராயத்தில் லயத்தைச் சுற்றி பழைய டயரை ஓட்டி விளையாடி தனது பகல் பொழுதை கழித்ததை நினைத்துப் பார்த்தான். மண்ணில் விழுந்து புரண்டு, சேறு பூசிக்கொண்டு, கை கால்களில் சிராய்ப்பு, காயங்கள் ஏற்பட்டு அந்த காயங்களால் ஏற்பட்ட வலியை விட வீட்டுக்குச் சென்ற போது ஆறுதல் சொல்லாமல் மேலும் கிடைக்கும் அடி, உதைகளால் அவன் எத்தனை முறை அனாதையாக உணர்ந்து ஒரு மூலையில் போய் அழுதிருக்கிறான்.

இத்தனை காலங்கள் ஓடிய பின்பும், தோட்டப் புறத்தில் மக்கள் வாழ்வில் இடம்பெற்றுவரும் இந்த ஒரே மாதிரியான நிகழ்வுகளில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்று அவன் யோசித்தான். உலகம் எவ்வளவுதான் மாறினாலும், முன்னேற்றம் அடைந்தாலும் லயத்து வாழ்வில் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்பதை நினைக்கும் போது அவன் மனதில் மெல்லிய வேதனை ரேகையொன்று அழுத்தமாகப் படர்ந்தது.

அவன் அம்மா வந்ததும், தனக்கு ஐந்து ரூபாய் வேணும் எனக் கேட்டான்.

"நீயும் ஓ அண்ணன் போல செலவாளியாகிக்கிட்டு வார. இன்னைக்கு வேலைக்குப்போன மொதல் நாள். அதுக்காக பைஸ் கோப் பாக்க ஐஞ்சு ரூபா செலவழிக்கிறதா? மத்த பயலுகளுக்கும் டிக்கட் வாங்க போறியா?"

அன்னம்மா கோபாலின் செயலால் கோபப்படுவது போல பாவனை செய்தாலும் அவள் தன் பிள்ளை வேலைக்குப் போக ஆரம்பித்திருக்கிறான் என்ற புளகாங்கிதத்தில் திளைத்திருந்தாள். அவள் இறுதியில் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தானையை அவிழ்த்து அதில் முடிந்து வைத்திருந்த ஐந்து ரூபா நோட்டை எடுத்து கோபாலின் கையில் திணித்தாள்.

"சரி சரி போய்ட்டு வா முந்தி மாதிரி நேரங்கழிச்சு வராம ராத்திரி சீக்கிரமா வந்துரு. நாளைக்கு வேலைக்குப் போவணும்."

அவளது இறுதி வார்த்தைகள் அவன் காதில் விழுவதற்கு முன்பே அவன் அங்கிருந்து சென்று பாதி லயத்தைத் தாண்டியிருந்தான். அவன் அவசரமாக இரண்டு லயத்தைத் தாண்டி மூன்றாவது லயத்துக்கருகில் மாடசாமி கோயில் சந்தியில் நந்தசிரி நின்று கொண்டிருந்தான். அவன் கையில் வைத்திருந்த ஒரு சிறு பார்சல் அரை சாராய போத்தலொன்றின் உருவத்தில் இருந்தது.

"என்னடா கையில அரைப் போத்தல்,

சாராயமா?" கோபால் வினாவினான்.

நந்தசிரி புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு கோபாலின் அருகில் வந்தான்.

"படம் ஆரம்பிக்க இன்னும் நெறைய நேரம் இருக்கு. நாம மொதல்ல தொரசாமி மாமாவின் லயத்துக்குப் போய்ட்டு வருவோம்.

இதைக் கேட்ட கோபால் நடப்பதை நிறுத்தி அதிர்ச்சியைடந்தவனாக நந்தசிரியை நோக்கினான். பின் மெதுவாக நந்தசிரியை நோக்கி கூறினான். "அப்படீன்னா இன்னைக்கு படம் பாக்க போறதில்லை. எங்கேயாவது ஆஸ்பத்திரிக்கோ, பொலிஸிலோ தான் இருக்க வேண்டிவரும். பைத்தியம் மாதிரி நடந்து கொள்ளாமல் என்னுடன் வா. டவுன்ல ஒரு ரவுன் சுத்திட்டு நேரத்துக்கு சினிமா ஹோலுக்கு போகலாம்."

இதைக் கேட்டு நந்தசிரி மேலும் சற்று நகைத்து, நையாண்டி காட்டி கோபாலிடம் கூறினான்.

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாத கோபால். நீ நெனக்கிறமாதிரி ஒன்னும் நடக்கப் போவதில்லை. உனக்குத் தெரியாதா. நான் சண்டை சச்சரவுக்கு போற ஆள் இல்லையே. "கோபாலுக்கும் அதற்கு மேல் அவனைத் தடுக்க முடியுமென்று தோன்றவில்லை. இருவரும் புகையிரத வீதிக்கு எதிர்ப்புறத்தில் இருந்த வரிசையான லயங்களைக் கடந்து இறுதி லயத்துக்கு சென்றனர். தொரசாமி லயத்துக் காம்பராவுக்கு வெளியில் பலாக்கட்டை ஒன்றில் அமர்ந்து பீடி ஒன்றை இழுத்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தா தொரசாமி பீடி இழுத்துகிட்டு ஜொலியா இருக்கான். அவன் இன்னும் நம்மல கவனிக்கல இவ்வாறு கூறிய நந்தசிரி சில கணங்கள் தொரசாமியை அவதானித்துக் கொண்டிருந்து விட்டு மெதுவாக அவர் அருகில் சென்று சாராயப் போத்தலை அவர் கண்ணில் படும்படி தரையில் வைத்தான்.

தொரசாமி தன் கண்முன்னே பார்வையில் படும்படி வைக்கப்பட்ட அந்த பார்சலையும் அதனை வைத்தவன் யாரென்றும் பார்த்தார். அடுத்து அங்கு ஒரு கலவரமே வெடிக்கப்போகிறது என்று சற்று தள்ளி நின்று அவதானித்துக் கொண்டிந்தான் கோபால். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி அப்படியொன்றும் அசம்பாவிதம் நிகழவில்லை. நிமிர்ந்து பார்த்த தொரசாமி நந்தசிரியைப் பார்த்து புன்னகைத்தார். நந்தசிரி கோபால் இருந்த திசையைப் பார்த்து பார்த்தாயா விசயம் வெற்றி என்று கண்ணடித்து சைகை செய்தான்.

தொரசாமி நந்தசிரியை வீட்டுக்கு உள்ளே வந்து அமரும்படி அழைத்தார். அத்துடன் பீடித் துண்டை உயர்த்திப் பிடித்தபடி இருக்கையில் இருந்து எழுந்தார். அவரை வேண்டாமென்று கையமர்த்திய நந்தசிரி தானும் கோபாலும் சினிமாவுக்குப் போகப்போவதாகவும் அந்தப் பீடித் துண்டை வீசிவிட்டு சிகரெட்டொன்றை குடிக்குமாறும் கூறி இரண்டு சிகரட்டுக்களை அவரிடம் நீட்டினான்.

நிலைமை சுமுகமாக இருப்பதை அறிந்து கோபாலும் அவர்களுடன் இணைந்து கொண்டான். தப்பித் தவறியாவது நந்தசிரி தொரசாமியின் மகளைப்பற்றிகேலிபேசிஅங்குதப்புத்தண்டாஏதும்நடந்துவிடக்கூடாதுஎன்று பயந்து கொண்டிருந்த கோபாலுக்கு நந்தசிரியின் ராஜதந்திரம் விசித்திரமாக இருந்தது. நந்தசிரியின் கேளிக்கூத்தெல்லாம் அந்தந்த சந்தர்ப்பத்துடன் முடிந்து போவதன்றி அவை தொடர்வதில்லையென கோபால் உணர்ந்து கொண்டான்.

அவர்கள் இருவரும் தொரசாமியுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுச் சென்றனர். செல்லும் வழியில் தொரசாமியிடம் புல்லுமலையில் நீ நடந்து கொண்ட விதம், தொரசாமி கோபத்தில் உன்னைத் துரத்தியது இதை எல்லாம் வைத்துப் பார்த்த போது அவர் இப்படி அமைதியாக நடந்து கொள்வார் என்று நான் நினைக்கவில்லை என்று கூறினான் கோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி அதைக் கேட்டு பலமாக சிரித்தான். "உனக்கு இன்னும் மனிதர்களை எடைபோடத் தெரியவில்லை கோபால். இனி மேலும் சிறு பிள்ளை போல் சிந்திக்காதே. நீ சமூகத்தில் பெரிய ஆளா உருவாகனும்."

நந்தசிரி என்ன அர்த்தத்தில் அவ்விதம் கூறினான் என்று அப்போது கோபாலுக்கு விளங்கவில்லை. அதன் பின் இருவரும் விரைவாக பட மாளிகை நோக்கி நடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



## முதற் சம்பளம்

இரவு மிக நிசப்தமாக இருந்தது. சுற்றியிருந்த மலைமுகடுகளில் மோதித் தெறித்த குளிர்காற்று லயங்களின் நைந்து போயிருந்த ஜன்னல், சாரளங்களுக்கூடாக இலகுவாகப் புகுந்து அங்கு கோணிச் சாக்குகளில் கம்பளியை இறுகப் போத்திக்கொண்டு படுத்துறங்கியவர்களின் உடல் சூட்டை உறிஞ்சிச் சுவைத்துக் கொண்டிருந்தது.

அன்றிரவு நண்பர்களுடன் சினிமாப் படம் பார்த்துவிட்டு மிக நேரங்கழித்தே வீட்டுக்கு வந்த கோபால் தூக்கம் வராமல் சாக்குப் படுக்கையில் கம்பளிப் போர்வையை இறுக்கிப் போர்த்திக்கொண்டு இரண்டு பக்கமும் உருண்டு கொண்டிருந்தான். அவன் தூங்காமல் அவதிப்படுவதைக் கவனித்த அவன் அம்மா, அன்னம்மா "என்னடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நேரங்கழிச்சு வருந்திருக்க. இன்னும் தூங்கலையா? நாளைக்கு வேலைக்குப் போக வேணாமா?; என்று கேட்டாள்.

அதனைத் தொடர்ந்து கோபால் கண்களை இறுக மூடி உறக்கத்தை பலவந்தமாகக் கொண்டுவரப் பார்த்தான். ஆனால் அவன் மனதில் பற்பல ஞாபகங்கள் வந்து போய்க்கொண்டே இருந்தன.

முதல் நாள் அவன் நண்பன் நந்தசிரி சொன்ன ஒரு கருத்து அவன் மனதை நெருடியது.

“கோபால் நீயும் உன் அப்பாவைப் போல் ஒரு அப்பாவியாக உருவாகக் கூடாது. உன் அப்பாவைப்போல மிக அப்பாவியான ஒரு நல்ல மனிதரை நான் இதுவரை பார்த்ததில்லை. ஆனால் உன் அண்ணன் ரெங்கநாதன் அப்படியல்ல. அவனை டவுனில் இருக்கும் எல்லோருக்கும் நன்கு தெரியும். அவன் யாருக்கும் பயந்தவனும் அல்ல. நீயும் உன் அப்பாவைப் போல் ரொம்ப நல்லவராக இருங்க முயற்சிக்காத” கோபால் தன் தந்தை மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான். இப்போது நந்தசிரி அவன் தந்தை தொடர்பில் தெரிவித்த கருத்து அவனுக்கு அவன் அப்பா மீதான மதிப்பை மேலும் உயர்த்தியதுடன் சிங்களவனான நந்தசிரி தன் அப்பா பற்றி கொண்டிருக்கும் நல்லெண்ணம் காரணமாக அவன் மீதான மரியாதையும் அதிகரித்தது. அவன் அந்த நினைவுகளுடன் உறங்கிப்போனான்.

*****

கோபால் அந்தத் தோட்டத்தில் வேலை செய்யத் தொடங்கியவுடன் அவனும் தோட்டத் தொழிலாளி வர்க்கத்தின் ஒருவன் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்டான். அவன் வேலைக்குச் சேர்ந்து அன்றுடன் ஒரு மாதம் முற்றுப்பெறுகின்றது. அன்று அவன் தொழில் பார்த்து முதலாம் மாத சம்பளத்தைப் பெற்றுக்கொண்டான். அதனை அப்படியே அவன் தனது களிசட்டை பொக்கட்டில் திணித்துக் கொண்டு நண்பர்களிடம் சென்றபோது பெண் பார்க்கப் போன மாப்பிள்ளை போல் வெட்கப்பட்டான். அன்றைய தினம் சம்பள வாசலில் வழக்கத்துக்கு மாறாக பெருங்கூட்டம் கூடியிருந்தது. ஒருபுறம் தம் சம்பளத்தை வாங்குவதற்காக கியூ வரிசையில் நிற்கும் தொழிலாளர்களும் மறுபுறம் தாம் கொடுத்த கடனை வசூலிக்க வந்திருந்த முதலாளிகளும், வட்டிக்காரர்களும், இவர்களைத் தவிர அன்றைய தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து படையெடுத்து வரும் வடை, முறுக்கு, பலகாரம் விற்கும் சிறு வியாபாரிகள் மற்றும் பல பொருட்களை விற்பதற்காக கடை விரித்திருக்கும் அங்காடி வியாபாரிகள் என பலரும் அங்கே சந்தைக் கடை போல் அலை மோதினர். இவர்கள் அனைவருமே தன்னைத்தான் உற்று அவதானிகிறார்களோ என்ற பிரமை அவன் உள்மனதில் தோன்றவே கோபால் நெளிந்து குலைந்துகொண்டிருந்தான்.

அன்று அவன் கையில் கிடைத்த அந்த ஒரு தொகைப்பணத்தை என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியவில்லை. அவன் மனதில் பலவாறு எண்ணங்கள் தோன்றின. அம்மாவிடம் கொடுத்து ஆசீர்வாதம் பெற வேண்டும். கொஞ்சப் பணத்தை தனது செலவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். நண்பர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும். சைவக் கடைக்கு கூட்டிப்போய் வடையும் தோசை யும் சாப்பிடலாம்.

கோபால் தங்கித் தயங்கி வருவதை அவதானித்த நந்தசிரி அவன் அருகில் வந்தான். "என்ன கோபால் கடுமையான யோசனை? சம்பளம் எடுத்திட்டியா? முதல் வேலையாகக் கோவிலுக்குப் போய் தேங்காய் உடைத்து காணிக்கை போட்டுட்டு சம்பளத்தை அம்மா கைல கொடு. அப்புறம் அம்மாகிட்டேருந்து கொஞ்சம் சல்லி வாங்கிக்கிட்டு நம்ப பயலுகளை எல்லாம் கூட்டிக் கிட்டுப் போய் தேத்தண்ணி வாங்கிக் குடு. நான் போய் என் சம்பளத்த சின்னாக்காகிட்ட கொடுத்துட்டு ஓடியாந்திர்ரேன். நீ இந்த எடத்தில ஐஞ்சி சதம் கூட செலவு செய்ய வேணாம். மொதல்ல கோயிலுக்குப் போயிட்டு அப்புறம் நேரா வீட்டுக்குப் போயிறு என்ன?

கோபால் பெருமையுடன் தன் நண்பனைப் பார்த்தான். எல்லாரும் நந்தசிரியை உதவாக்கரை என்று திட்டித் தீர்க்கும்போது கோபாலுக்கு அவன் உயர்ந்தவனாகத் தோன்றினான். தனக்கு அப்படியொரு சிங்கள நண்பன் கிடைத்ததை எண்ணி அவன் மனம் மகிழ்ந்தான். அவன் மனம் அன்று அதிகாலை வேலைக்குப் போகுமுன் அவன் அம்மா சொன்ன வார்த்தைகளை நினைத்துப் பார்த்தது.

"தம்பி இன்னைக்கு உனக்கு முதல் மாச சம்பளம் கெடைக்கும். எல்லாத்தையும் எடுத்துக்கிட்டுப் போயி பயலுகளுடன் சேர்ந்து வீணாக்கிறாத. உனக்கு உடுக்கிறதுக்கு துணி கிணி ஏதாவது வேணும்னா வாங்கிக்க. அடுத்த மாதம் முதல் வருகிற காச தபால் கந்தோர் புத்தகத்தில் போடனும். வீட்டுச் செலவ நாங்க பாத்துக்கிறம். ஓ அண்ணனைப் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸ்தியாதிரிக்கார பயலுகளோட சேந்து சாராயம் குடிக்கிற வேலையெல்லாம் வேணாம்."

அவன் மனதுக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் ஊத்துத் தண்ணி பாலத்துக்கு அருகே இருந்த ஒத்தக் கடையை நோக்கி நகர்ந்தான். அங்கே தேங்காய் ஒன்றும் கற்பூரம், வெற்றிலை, ஊதுபத்தி என்பவற்றுடன் தீப்பெட்டி ஒன்றும் சிகரட்டும் வாங்கிக்கொண்டான். கோயிலுக்குப் போய்விட்டு வரும் வழியில் பாழடைந்த அந்தப் பீலிக்கரைக்கு மேல் குன்றாக நிமிர்ந்திருக்கும் கல்லுப் பாறையில் அமர்ந்து சில நிமிடங்களுக்கு சிகரட் ஒன்றைப் பத்திக்கொண்டு பள்ளத்தே தெரியும் பசுமைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவன் மனதுக்குப்பட்டது.

அவன் வீட்டுக்கு வருவதை அவன் அம்மா எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் நெற்றியில் விபூதி சந்தனம் பட்டவஉத்தனமாகத் துலங்குவதைப் பார்த்த அன்னம்மாவின் இதயம் பூரித்துப்போனது. மூத்தவனைப் போலல்ல இளையவன். கோயில், குளம், திருவிழா, பஜனை, காமன்கூத்து எல்லா வைபவங்களிலும் முன்னின்று கலந்து கொள்கிறான். தோட்டத்து மக்களிடம் அவன் மீது நல்ல அபிப்பிராயம் காணப்படுகின்றது. இளமை துள்ளும் அவன் உடல்வாகும், எப்போதும் சிரித்த முகமும் தோட்டத்து இளசுகளை அவன் பால் திரும்ப வைத்திருப்பது தொடர்பில் அன்னம்மாவுக்குப் பெருமையாக இருந்தது. சில பெண் பிள்ளைகள் அன்னம்மாவை "அத்தை" என்று அழைத்ததையும் நினைத்துப் பார்த்தாள்.

"என்னடா, கோயிலுக்கு போனியா?" அன்னம்மா தெரியாதது போல் கேட்டாள்.

"ஆமம்மா. கோயிலுக்குப் போய் தேங்காய் ஒடச்சிட்டு, சூடம் ஊதுபத்தி கொளுத்திட்டு காணிக்கை போட்டுட்டு வந்தேன்" என்று பதிலளித்துவிட்டு கையிலிருந்த பார்சலை அம்மாவிடம் கொடுத்தான்.

"அது நல்லது தான்.. இது என்னா கொண்டு வந்திருக்கிற"

"அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சின்னப் பரிசு. அப்புறம் வெத்தல பாக்கு."

"ஏன்.. இதுக்கெல்லாம் செலவழிக்கிற உனக்கு வேணும்னா துணி வாங்கியிருக்கலாம்ல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன், அவன் அப்பாவுக்கு சாராயப் போத்தல் ஒன்றும் வாங்கி வந்திருப்பது தொடர்பில் தனது விருப்பமின்மையைத் தெரிவித்தாலும் அவள் மனம் மகிழ்ந்து நெகிழ்ந்திருந்தது. அவளது கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் பனித்திருந்த போதும் அதனைக் கோபால் கண்டுவிடாமல் மறுபுறம் திரும்பி சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

கோபால் தன் சம்பளக் காசு அனைத்தையும் எடுத்து அம்மாவின் கையில் வைத்தான். தேவைப்பட்டால் அம்மாவிடம் கேட்டால் அவள் தருவாள் என்பது அவனுக்குத் தெரியும். அன்னம்மா அதனை மிகச் சந்தோசத்துடன் பெற்றுக்கொண்டு அறையின் ஒரு ஓரமாக வைக்கப்பட்டிருந்த தமது ஒரே ஒரு பொக்கிஷப் பெட்டியான டிரங்குப் பெட்டியைத் திறந்தாள். நான்கு முறை கிறீச், கிறீச் என்ற சத்தத்துடன் திறந்து கொண்ட டிரங்குப் பெட்டியில் இருந்து சந்தனம், குங்குமம், கற்பூரம் போன்ற வாசங்கள் எல்லாம் சேர்ந்து கம கம என்று மணம் அந்த அறையெங்கும் பரவியது. கேபாலின் நாசித் துவாரங்களுக்குள் அந்த வாசம் நுழைந்த போது அவனில் அது குதூ கலத்தையும் பரவசத்தையும் ஏற்படுத்தியது.

டிரங்குப் பெட்டியென்பது தோட்டத் தொழிலாளியின் வாழ்விலும், லயத்து வாழ்விலும் ஒட்டிக் கொண்டிருக்கும் பிரிக்க முடியாத வாழ்க்கைச் சின்னமாகவே அக்காலத்தில் விளங்கியது. அது வெறுமனே ஒரு பிரயாணப் பெட்டியல்ல. வீட்டில் தம்மதிப்பு மிக்க பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பெட்டகமாகவும் அது திகழ்ந்தது. அன்னம்மாளின் டிரங்குப் பெட்டிக்குள் தனது சில தங்க நகைகளையும் சில பட்டுச் சாரிகள், கணவனின் சில பட்டு வேஷ்டிகள், கமிசுகள், சால்வை, பிறப்புச் சான்றிதழ், பிரஜாவுரிமை சான்றிதழ் முதலானவை வைக்கப்பட்டிருக்கும். பழைய பைல், பழைய பிஸ்கட் டின் ஒன்று, சவுக்காரப் பெட்டி ஒன்று, பிளாஸ்டிக் முத்து மாலைகள், கண்ணாடி வளையல்கள், குங்குமம் மற்றும் சந்தனப் பொட்டுப் குப்பி போன்றன அதில் காணப்பட்டன. தங்க நகைகள் என்பன பிஸ்கட் டின்னில் போட்டு அடைக்கப்பட்டிருந்தன.

அன்னம்மாள் டிரங்குப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள பொருட்களை ரசித்து தன் மலரும் நினைவுகளை மீட்டுக் கொண்டிருந்தாள், அவள் கணவன் செவனு அவள் பின்னால் வந்து நிற்பதை அவள் அறியவில்லை.

"என்ன, பெட்டிய தொறந்துக்கிட்டு சொப்பனம் கண்டுக்கிட்டிருக்கியா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் திடீர் குரலால் அவள் மனம் திக்கென்றது. பின் அது தனது கணவன் என்றறிந்ததும் அவள் மனம் ஆறுதல் அடைந்தது. அவள் டிரங்குக் பெட்டியை மூடிவிட்டு கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அவர் பக்கமிருந்து சாராய நெடி பலமாக வந்தது. சம்பள நாளன்று தன் கணவன் சற்று அதிகம் குடித்து விட்டு வருவது வழக்கம்தான் என்பது அவளுக்கும் தெரியும். கோபால் தன் அப்பாவுக்கென வாங்கி வந்திருந்த சாராயப் போத்தலை அன்று அவருக்குக் கொடுக்கக் கூடாதென அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07



# அந்தநாள் ஞாபகம்

செவனு மட்டுமல்ல சம்பள தினத்தன்று தோட்டத்தில் அநேகமாக எல்லா ஆண்களும், சில பெண்களும் கூட குடித்துவிட்டு தம்நிலை மறந்து பரவசத்தில் இருப்பார்கள். வெள்ளைக்காரன் பெருந்தோட்டத்தை ஆரம்பித்தபோதே கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் சேர்த்தே ஆரம்பித்திருந்தான். அவர்கள் வீறு கொண்டு எழுந்து எந்தப் போராட்டத்திலும் இறங்கி விடக்கூடாதென்பதே மது அறிமுகத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதனை ஒருநாளும் அவர்கள் புரிந்துகொண்டதே இல்லை. அன்று தொடங்கி இன்று வரை இந்தப் பொறியில் சிக்குண்டு மது போதைக்கு அடிமையாகி இருப்பதுடன் தமது வருமானத்தின் கணிசமான பகுதியை வீணாக்கியும் வருகின்றனர் என்பது வேதனைக்குரியது. ஆனால் ஒரு வித்தியாசம் அன்று வெள்ளைக்காரன் ஆட்சியில் நிகழ்ந்தது இன்று கபில நிறத்தானின் ஆட்சியில் இடம்பெறுகின்றது.

அன்னம்மா தன் கணவனின் மதுபோதையை மேலும் அதிகரிக்க வேண்டாம் என்று கருதி அன்றைய தனது முதல் சம்பளத்தில் அப்பாவுக்கென கோபால் வாங்கி வந்திருந்த சாராயப் போத்தலை மறைத்துவிட்டாள்.

"அன்னம்மா, மாசி ஒரு துண்டு இருந்தா கொண்டுவா" செவனு குடித்து விட்டு வீட்டுக்கு வந்தா மாசி ஒரு துண்டை வாயில் போட்டு மெல்லுவது வழக்கமாக இருந்தது.

"அந்த பச்சக்கலர் மூடிபோட்ட டின்ல இருக்கு எடுத்துக்கங்க. அதுவும் முடிஞ்சிருச்சி. ஒவ்வொருநாளும் அந்திக்கு ஒன்னொன்னா எடுக்கப்போனா" அன்னம்மா அலுத்துக் கொள்வது போல் நடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் குறைபாடு இருந்தாலும் தன் கணவனுக்கு பிடித்த மாசிக் கருவாட்டை வாங்கி துண்டங்களாக ஒடித்து குசினி ராக்கையின் ஓரமாக அந்த பச்சை மூடிபோட்ட டின்னில் அடைத்து எடுப்பதற்கு இலகுவான விதத்தில் வைப்பது அன்னம்மாவின் வழக்கமாக இருந்தது. சிலவேளை செவனு குடித்துவிட்டு வந்து மாசித்துண்டு இருக்கா என்று கேட்டால் இல்லை என்று சொல்வதற்கு அவளுக்குத் துக்கமாக இருக்கும். அதனால் தட்டுப்பாடான நேரங்களில்கூட எங்காவது தேடி மாசி வாங்கி வைத்து விடுவாள். அவருங்கூட மாசி இல்லை என்று கோவித்துக் கொள்ளமாட்டார். ஒரு வெங்காயம், ஒரு பச்ச கொச்சிக்கா, ஒரு உப்புக் கல்லு இருந்தால் சமாளித்துக் கொள்வார். அவர் குடிகாரராக இருந்தபோதும் தொல்லை தராத வித்தியாசமான குடிகாரராக இருந்தார்.

"சின்னவன் இன்னைக்கி சம்பளம் வாங்கி இருப்பானே. என்ன செஞ்சான்" செவனு மாசித் துண்டை ருசித்து சப்பிக்கொண்டே கேட்டார்.

"வெத்தல பாக்கெல்லாம் வாங்கியாந்தான். கோயிலுக்கு போயி சாமி கும்பிட்டு, காணிக்கையெல்லாம் போட்டுருக்கான். சம்பளத்த கைல கொடுத்துட்டு விழுந்து கும்பிட்டுட்டு தான் போனான்" அவள் குரலில் அளவுக்கதிகமான மகிழ்ச்சியும் உற்சாகமும் இருப்பதை செவனு உணர்ந்தார். "இப்ப எங்க போய்ட்டான். காணேல்ல"

"பணிய லயத்துக்குத்தான் பயலுகளோட போயிருக்கான். இன்னக்கி எல்லோருக்கும் சம்பள நாள்ல. பாட்டுப் படிச்சி கும்மாளம் போடுவானுக" அதைக் கேட்டு செவனுவின் உதடுகளில் ஒரு மந்தகாசப் புன்னகை தவழ்ந்தது. அன்னம்மாவும் அதனைக் கவனித்தாள்.

அதனைத் தொடர்ந்து அன்னம்மாவின் சிந்தனைகள், அவளது இளமைக்காலம் நோக்கி பறந்து சென்றன.

உண்மையில் செவனுவும் அன்னம்மாவும் முதன்முதல் சந்தித்துக் கொண்டது இவ்விதம் ஒருநாள் பாட்டுப்பாடி "பஜாவ்' போட்டு கும்மாளமடித்துக் கொண்டிருந்த போதுதான். அந்த நாளை அன்னம்மாவால் ஒருபோதும் மறக்க முடியாது. செவனுவை உயர்ந்து வளர்ந்த ஆஜானுபாகுவான ஆகர்ஷிக்கும் தோற்றமுள்ள ஒரு இளைஞன் என்று கூற முடியாது. வெள்ளையில் மெல்லிய கறுப்பு கோடிட்ட சாரம் கட்டி, கபில நிற டெரிலின் கட்டக் கை வைத்த சேர்ட்டை மேலும் மடித்து விட்டுக்கொண்டு, கொலரை மேலே தூக்கிவிட்டுக்கொண்டு, மேல் பொத்தானை பூட்டாமல் சண்டியன் போல் காணப்பட்ட அந்த இளைஞனில் ஏதோ ஒரு கவரத்தக்க அம்சம் இருப்பது போல் அன்னம்மா உணர்ந்தாள். அந்தக் கணத்தில் இருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மாவுக்கு அந்த இளைஞனை பிடித்துப்போய்விட்டது. சிலவேளை அவளுக்குப் பிடித்திருந்தது அவன் குபீர் என வளர்த்து வைத்திருந்த அந்த கொடுக்குப்பூச்சி மீசையாகக் கூட இருக்கலாம்.

அன்றைய தினம் அவர்கள் டோலக், தப்லா, எக்கோடியன் எல்லாம் வைத்துக்கொண்டு வடிவேல் வீட்டு இஸ்தோப்பில் பஜாவ் பாட்டுப் பாடுவதற்காகக் கூடியிருந்தார்கள். அன்று செவனு டி.எம்.சௌந்தரராஜனின் குரலுக்கு உயிர் கொடுத்துப் பாடிய பாட்டுக்கள்கூட இன்று அன்னம்மாவின் ஞாபகத்தில் அப்படியே பதிந்திருந்தன.

அவ்விதம் அவள் தனது மலரும் நினைவுகளில் லயித்திருந்த போதுதான் செவனுவின் குரல்கேட்டு திடுக்கிட்டு கனவுலகில் இருந்து மீண்டாள். "என்ன அன்னம் அந்தக் கால நினைவுகள் நெஞ்சில் துள்ளுதோ?"

செவனு நையாண்டித்தனமாக அவளிடம் அவ்வாறு வினவியபோதும் அன்னம்மாவுக்கு அந்த வினா மிக அர்த்தம் பொதிந்ததாகத் தெரிந்தது. "தாம் திருமணம் முடித்து இதுவரையில் எவ்விதம் கருத்து ஒருமித்த தம்பதியராக இருந்து வந்துள்ளோம்" என அவள் நினைத்துப்பார்த்தாள்.

"உண்மைதான், நெனவிருக்கா? நாம மொத மொத சந்திச்சுக்கிட்டது வடிவேல் அண்ணன் வீட்ல எல்லாருங்கூடி பாட்டுப்பாடி கும்மாளமடித்துக் கொண்டிருந்தபோதுதான் நாம மொத மொதலா சந்திச்சோம்."

அவ்வாறு கூறியவாறே அன்னம்மா செவனுவை நோக்கினாள். அன்று அவள் முதல் முதலாக சந்தித்த அந்த செவனுவுக்கும் இன்று பார்க்கும் செவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்தது போல் அவளுக்குத் தோன்றியது. அவள் முகத்தில் அவளுக்கு மிகப்பிடித்த அந்த கொடுக்குப்பூச்சி மீசை மழுங்க சிரைக்கப்பட்டிருந்தது. இன்னும் எஞ்சியிருந்த ஏழெட்டுப் பற்களில் இரண்டு இலேசாக வெளியில் எட்டிப் பார்த்தன. அதனால்தானோ என்னவோ கன்னங்கள் இரண்டும் குழி விழுந்து ஒட்டிப் போயிருந்தன. முன் மண்டையில் மயிர் உதிர்ந்து மொட்டை விழுந்திருந்தது. அவள் அவரையும் பார்த்து முன் கம்புரா கதவுடன் ஒட்டியதாக சுவரில் மாட்டப்பட்டிருந்த, புகை படிந்து நிறம் மங்கிப்போயிருந்த மகாத்மா காந்தியின் உருவப் படத்தையும் பார்த்தாள். இரண்டுக்கும் அவ்வளவு வேற்றுமைகள் தெரியவில்லை. செவனுவும் அதேவிதமாக குழிவிழுந்த கன்னமும் பொக்கை வாயைத்தான் கொண்டிருந்தான். அந்த சமானத்துவம் கூட அன்னம்மாவுக்கு அவரில் மேலும் மரியாதையையும் கௌரவத்தையும்தான் அதிகரித்துக்காட்டியது. செவனு இத்தனைகாலம் தனது பிள்ளைகளுக்கு ஒரு நல்ல அப்பாவாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒரு நல்ல கணவனாகவும் இருந்திருக்கிறார் என்பதில் அவளுக்குப் பெருமையாக இருந்தது.

அன்று பாட்டுப்பாடி கும்மாளமிட்ட இடத்தில்தான் நாம் இரண்டு பேரும் வாழ்க்கையில் சந்தித்துக்கொண்டோம், நம் பிள்ளையும் அதே வழியில் போகிறதைப் பார்த்தால் என்று இழுத்தார் செவனு. செவனு என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறுகின்றார் என்பதை உணர்ந்து கொண்ட அன்னம்மா,

"இந்த தேயிலைச் செடிகளில் கொழுந்து பறித்து, புல்லு வெட்டி, கானு வெட்டி அடிமைகளாக அன்றாடம் சோறு காச்சி தின்கிற நமக்கு ராஜகுமாரிகளைத் தேடிக் கொடுக்க முடியுமா? அவனுக்கும் வந்து வாய்க்கப்போகும் பொன்னு இன்னுமொரு கொழுந்து பறிக்கும் பொன்னாகத்தானே இருக்கப்போவது. அதைப் பற்றியெல்லாம் தேடிப்பார்க்க ஒன்றும் அவசியமில்ல. ஏதாவது சேதி கெடச்சா கொழுந்து மலையில பேசாமலா இருப்பாளுக இதையெல்ல மறைக்க முடியாது" அன்னம்மா கூறினாள்.

"அது உண்மைதான் அன்னம். ஆனா அந்த பணிய லயத்துல இருக்கிற கிறுக்கிக எவகிட்டயாவது மாட்டிக்கிடப் போறான்னுதான் பயம்."

செவனு அவ்விதம் கூறியமைக்கான பிரதான காரணி அவரது கடைசித் தம்பி நகுலராஜா நாவலப்பிட்டி நகரத்தில் ஒரு பெரிய வியாபாரியாக வளர்ச்சிபெற்று உயர்வான இடத்தில் இருக்கின்ற நிலையில் அவர்கள் குடும்பத்தினரின் நற்பெயருக்கு இழுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகும் என்பதை அன்னம்மா புரிந்து கொள்ளாமலில்லை.

"உங்கத் தம்பி நகுலன் என்ன நெனைப்பார். அப்படீங்கிறதுதானே உங்க பிரச்சினை. எனக்குன்னா அவர் நடவடிக்கை பிடிக்கல்ல. உங்க ஒரே ஒரு தம்பியாக இருந்தும் நீங்க லயத்துல இருக்கீங்கங்கறதுக்காக அவர் பாக்க வரமாட்டாரு. அப்படி கௌரவம் பாக்கிறவரு ஏன் உங்களுக்கு ஒரு வீட்ட கட்டிக்கொடுக்கேலாது. அவரு எத்தன லொறி வச்சிருக்காரு. ஒரு லொறியில டிரைவரா வேல போட்டுக் கொடுக்கக் கூடாதா? இவ்வளவு வயசான காலத்தில கொழுந்து டிரக்டறிய கட்டிப் புடிச்சிக்கிட்டிருக்கீங்க. நல்ல தம்பிதான் போங்க"

அவளது கோபத்திலும் உண்மை இருக்கிறது என்பது செவனுக்கு விளங்காமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கோபாலின் தார்மீகக் கோபம்

என்னதான் இருந்தாலும் தனது ஒரேயொரு தம்பியான நகுலன் தன்னை வந்து பார்க்காது விட்டாலும் பணக்காரனாக மலையகத்தின் நகரமொன்றில் செல்வமும் சீரும் சிறப்புடனும் வாழ்கிறான் என்று கூறிக்கொள்ள அவர் பெருமைப்பட்டார். எனினும் நகுலன் அவர்களைப் பற்றி தேடிப்பார்க்காது புறக்கணித்து வந்துள்ளமை தொடர்பில் அவர் மனவருத்தப்படாமலில்லை. நகுலன் மிக இலகுவாக பணக்காரனாகி விடவில்லை. தன்னைப்போல் அவனும் தோட்டத் தொழிலாளியாகவே வேலையை ஆரம்பித்தான். ஆனால் அத்துடன் நின்று விடாமல் மாட்டுப்பட்டி ஒன்றை ஆரம்பித்து முதலில் ஒரு பசுமாட்டை வாங்கினான். படிப்படியாக மேலும் பசுக்களை வாங்கி பால் வியாபாரியாக வளர்ச்சியடைந்தான்.

அவன் ஆள் வாட்டசாட்டமாகவும் நல்ல தோற்றமுடனும் இருந்ததாலும் அவனது முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டும் நாவலப்பிட்டி நகரில் குறிப்பிடத்தக்க வர்த்தகப் பிரமுகராக இருந்த சுப்பிரமணியத்தின் மகளை அவனுக்கு திருமணம் முடித்து வைக்க அவர்கள் வீட்டார் சம்மதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே அவர்களுக்கிடையில் நல்ல பழக்கமும் தொடர்பும் இருந்து வந்தது. அதன் பின் அவன் மணம் முடித்து தோட்டத்து வாழ்க்கையில் இருந்து விடுபட்டு இப்போது பல வாகனங்களுக்கும் சொந்தக்காரனாகி விட்டான். ஆனால் அவன் ஒருபோதும் தோட்டத்துப்பக்கம் திரும்பிப் பார்த்ததே கிடையாது.

அவனது இந்த நடத்தை தொடர்பில் சிலநேரம் ஞாபகம் வரும்போது துக்கப்பட்டு அன்றிரவு செவனு அதிகம் குடித்து விடுவார். குடித்துவிட்டு உளறுவதும் துக்கப்படுவதும் தொடர்பில் அன்னம்மாவுக்கு ஒன்றும் புரியாது. ஆனால் அவரது அண்ணனான ரெங்கநாதன் அப்படியல்ல. அவர் மதுவருந்தி போதை தலைக்கேறிய போதெல்லாம் நகுலனின் பெயரை சந்தமாகச் சொல்லி அவனையும் அவன் குலத்தையும் சபிக்கத் தவறமாட்டான். அன்று நகுலனின் கதை அந்த லயத்தில் நாறிப்போய்விடும்.

*******

கோபால் மெதுவாக பணிய லயம் நோக்கி கருங்கல் பதித்த படிகளில் இறங்கிச் சென்றான். அப்போதே டோலாக், தப்லா, எக்கோடியன் சத்தம் மெல்ல மெல்ல காற்றில் கலந்து மேட்டு லயம் வரைக்கும் பரவத் தொடங்கியிருந்தது.

சூரியன் மலைகளுக்கப்பால் மறைந்துபோயிருந்தான். அந்திக் கருக்கலாக இருந்த மங்கலான இருள் அதிகரிக்கத் தொடங்கியது.

மற்ற தினங்களில் லயங்களில் காணப்படாத ஒரு உயிர்த்துடிப்பு அன்று மேலோங்கிக் காணப்பட்டது. கலகலப்பும் சந்தோஷமும் காற்றில்கூட கலந்திருப்பது போல் கோபாலுக்குத் தோன்றியது. அதற்கெல்லாம் காரணம் அன்று சம்பள நாள் என்பதுதான். எல்லா நாட்களையும் விட சம்பள நாள் மாத்திரம்தான் அவர்களுக்கு மகிழ்ச்சியான நாளாகும்.

ஏனைய தினங்களில் அடுப்பில் சினுங்கிச் சினுக்கி எரியும் நெருப்பு அன்று ஜுவாலை விட்டு எரிந்தது. மிளகாய், சீரகம், கடுகு மற்றும் இஞ்சிப் பூண்டுடன் கறிச்சரக்குத் தூள் சேர்த்து வதக்கும் குழம்பு வாசனை, கருவாடு பொரிக்கும் வாசனை மற்றும் நாட்டுக்கோழிக்கறி வாசனையென லயத்துக்கு லயம் வித்தியாசமான வாசனைகள் நாசியைத் துளைத்துச்சென்றன. வழக்கமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக குறைந்த சுருதியில் ஒலிக்கும் ரேடியோ பெட்டிகள் கூட அன்று மாத்திரம் உச்சஸ்தாயில் ஒலித்துக்கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்தின் முற்றத்தில் ஆங்காங்கே மூன்று கற்கள் வைத்து அதன் மீது பாதியாக வெட்டிய அரை பெரல்களில் சுடுநீர் வைத்து வயது முதிர்ந்த ஆண்களும் பெண்களும் குளித்தும், மேல் கழுவியும் கொண்டிருந்ததுடன் அவர்கள் வழக்கத்துக்கு மாறாக சத்தம்போட்டு பேசிக்கொண்டிருந்தனர். அது அவர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி தாண்டவமாடுவதைப் பிரதிபலித்தது.

அன்றிரவு தமக்கு கிடைக்கப்போகும் ருசியான உணவை எதிர்பார்த்த நாய்கள்கூட மாமிசத்தின் வாசனை அறிந்து அங்கும் இங்கும் உறுமியவாறு அலைமோதிக் கொண்டிருந்தன. இந்த நிகழ்வுகளையெல்லாம் வழமையாக லயன்களில் மூடிக்கவ்வியிருக்கும் பாழடைந்த தன்மையை விரட்டியடித்து ஒரு புதிய உயிர்த்துடிப்பை ஏற்படுத்தியிருந்தன. லயன்களுக்கப்பால் தூரத்தில் விரிந்து பரந்திருந்த மலைப் பிரதேசத்திலிருந்து இதமான குளிர்தென்றல் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது.

சிமெந்தி குழைத்து கொங்கிறீட் கட்டப்படாத படிக்கட்டுகளாக இருந்த போதும் பணிய லயம் நோக்கிப்போகும் அந்த படிக்கட்டுகள் நன்கு இறுக்கமாக கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. கோபால் அந்த படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றபோது இரண்டு படிகள் மூன்று படிகள் என்று தாவிச் சென்றான். பணிய லயத்தில் இருந்து காற்றில் தவழ்ந்து வந்த டோலக் மற்றும் தப்லா வாத்தியங்களின் நாதம் அவன் காதுகளுக்குள் புகுந்து அவன் நரம்பு நாளங்களைச் சுண்டி விட்டன. தப்லா ஓசையை விட டோலக்கின் நாதமே அவனை வெகுவாகக் கவர்ந்தது. காரணம் அதனை தற்போது வாசித்துக்கொண்டிருப்பவன் ஷெல்ட்டன் என்ற அவனது சிங்கள நண்பன் அவனால் மாத்திரம்தான் டோலக்கை அந்தளவுக்கு இனிமையாக வாசிக்கமுடியும். அவனது விரல்கள் டோலக்கின் முதுகில் தாளம்போடும்போது இனி இல்லை என்ற அளவுக்கு ஒரு ரசனை இன்பத்தைப் பெற்றுக்கொடுக்கும்.

ஷெல்ட்டன் கொழும்பு நகரத்தை அண்மித்த பெப்பிலியான என்ற பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்றபோதும் ரயில்வே திணைக்களத்தில் தொழில்புரியும் நிமித்தம் அங்கு வந்து தற்போது ஹொலிரூட் என்ற சிங்கள குடியேற்றத்தில் வசிக்கின்றான். அவனும் அவனது நண்பர்களும் சேர்ந்து போடும் "பஜாவ்' (பாட்டுப்பாடி வாத்தியங்கள் இசைத்து களித்திருத்தல்) நிகழ்ச்சிக்கு கோபாலும் சென்று கலந்துகொண்டிருக்கிறான். அவனுக்கும் டிரம் முதலான வாத்தியம் இசைப்பதில் பரிச்சயம் இருந்ததால் இத்தகைய "பஜாவ்' நிகழ்ச்சிகளில் வரவேற்கப்படும் ஒரு நபராகவும் அவன் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோலக் வாசிப்பதில் கெட்டிக்காரனான ஷெல்டனுடன் பாய், சந்தரே, தர்மசிறி போன்றவர்களும் எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள். இவர்கள் பாட்டுப்படிப்பதுடன் பக்கவாத்தியங்களும் இசைப்பார்கள். தர்மசிறியின் சொந்தக்காரர்கள் தோட்டத்தொழிலாளர்களாக இருந்ததால் அவர்கள் வசிக்கின்ற பணிய லயத்துக் காம்பராக்களுக்கு இவர்கள் வருவதும் பஜாவ் என்ற சிங்களப்பாட்டுக் கச்சேரி நடத்துவதும் வழக்கமாக இருந்தது. அத்தகைய பாட்டுக்கச்சேரிகளில் தோட்டத்து இளைஞர்-யுவதிகளும் பாரபட்சமின்றிக் கலந்துகொள்வார்கள். தோட்டத்து லயக் காம்புராவின் வராந்தாவில் சாணி பூசிய தரையில் பாய் விரித்து வரிசையாக அவர்கள் அமர்ந்து பாட்டுக்கச்சேரி நடத்துவார்கள். இறுதியில் சாராயம் குடித்து உண்டு அங்கேயே உறங்கியும் போவார்கள். உண்மையில் அது அவர்கள் வாழ்வின் ஒரு அற்புதமான பகுதிதான்.

"கருங்கள் குன்றின் உச்சிமீது தாமரை தளிர்க்குமா?" சந்தரேயின் இனியகுரல் மலைமீது தவழ்ந்து வந்து கோபாலின் காதுகளில் புகுந்தபோது அவன் சற்றே நிதானித்து நின்று பாட்டுக்குக் காது கொடுத்தான். அவன் உடனேயே ஓடிச்சென்று பாட்டுக் கச்சேரியில் இணைந்து விட வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் அங்கு சென்றடைய இன்னும் ஐந்து நிமிடமாவது பிடிக்கும் என்பது அவனுக்கு வருத்தமாக இருந்தது. அந்தப்பாட்டில் அவன் ரசித்து ஆழ்ந்துபோனாலும் அந்த சிங்களப் பாட்டின் வரிகளின் அர்த்தம் அவனுக்குப் புரிவதில்லை.

"மேலான நம் இனமே. இனிய சிங்களமே.

என் பெருமை மிகு தேசமே. சிங்களமே.

பாடுவேன் மகிழ்ந்தே தாயே.."

இந்தப் பாடல் சிங்கள இனத்தையும் தேசத்தையும் புகழ்ந்து பாடும் ஒரு பாடல் என்பது கோபாலுக்குத் தெரியும். எனினும் அது கோபாலுக்குப் பிடித்த பாடல்களில் ஒன்று. அந்தப் பாடலைப் பாடிய முதல் பாடகர் சிங்கள இனத்தைச் சேர்ந்வர் அல்ல என்பதும் மொஹிதீன் பேக் என்ற முஸ்லிம் இனத்தவரால் பாடப்பட்ட பாடல் என்பதும் "புத்தம் சரணம் கச்சாமி" என்ற புகழ் பெற்ற பாடலைப் பாடியவரும் மொஹிதீன் பேக் என்பவரே என்றும் முன்பு நந்தசிரி, கோபாலுக்கு விளக்கியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



09

# தியாகுவின் கச்சேரி காம்பரா

விஜயபாலவுக்கு யார் சாராயம் புகட்டியது என்பது தொடர்பிலான பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து பாட்டுக் கச்சேரி சிறிது நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது. கோபாலின் வரவை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

"உனக்கு சாராயம் கொடுத்தது யார் என்று சொல்" என்று விஜேபாலவை சற்றே அதட்டிக் கேட்டான் கோபால்.

"அடிக்காதீங்க கோபால் அண்ணே!... கிளாக்கர் ஐயா வீட்டுல வேல செஞ்சேன். முடிஞ்சதும் கிளாக்கர் ஐயாவின் தம்பி பியதாஸ ஒரு கிளாஸ் சாராயம் தந்தான். அப்புறம் இன்னொரு கிளாஸ் கொடுத்தான். ஒனக்கு சிகரட் ஒன்னு தரட்டா...?"

விஜயபால குழந்தைத் தனமாக பேசினான். அவனால் நேராக நிமிர்ந்து நிற்க முடியவில்லை. அவன் கீழே விழுந்து விடாமல் இருந்த அருகில் ஒரு கோழிக்கொடாப்பு கட்டியிருந்த தூண் ஒன்றை எடுத்து கோபாலிடம் கோணங்கித்தனமாக நீட்டினான்.

அவனைப் பார்க்க கோபாலுக்கு பரிதாபமாக இருந்தது. அதே சமயம் அவனுக்கு சாராயத்தைக் குடிக்கக்கொடுத்த பியதாஸ மீது கோபம் கோபமாக வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி, நான் நாளை கிளாக்கரையாவிடம் இதுபற்றி பேசுகிறேன். அப்பாவி பொடியன்களுக்கு சாராயம் கொடுத்து வேலை வாங்குகிறார்கள். சிங்களவர்களுக்கு இப்படியென்றால் தமிழர்களை என்னவெல்லாம் செய்ய மாட்டார்கள்" முதலாளி என்பவனுக்கு எல்லோரும் ஒன்றுதான். சிங்களவன், தமிழன் என்ற பேதங்கள் கிடையாது."

இந்த சம்பவம் தொடர்பில் ஷெல்ட்டன் சந்தரே மற்றும் அங்கிருந்த நண்பர்கள் மௌமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எனினும் இது தொடர்பில் மௌனம் சாதிப்பது நல்லதல்ல என்று அவர்களுக்குத் தோன்றியது. விஜயபால சிங்கள பொடியனாக இருந்தபோதும், அவனுக்கு நிகழ்ந்த அநீதி தொடர்பில் தமிழனாகிய கோபால் மனவலியுடன் குரல் கொடுப்பதனை எண்ணி ஷெல்ட்டனின் மனமும் நெகிழ்ந்தது. நைந்து பொடியாகி காலில் மிதிக்கப்படும் மனிதர்கள் தொடர்பில் கோபால் காட்டும் மன வலியுடன் கூடியதான உணர்வு தொடர்பில் நினைத்துப்பார்த்தபோது கோபால் அவன் மனதில் மிக உயர்ந்தவனாகத் தோன்றினான்.

அதற்குக் காரணம் தொழில் புரியும் ரயில்வேத் திணைக்களத்தின் தொழிற்சங்கவாதிகள் கூட நசுக்கப்படும் தொழிலாளர் தொடர்பில் இவ்வித உணர்வுகளை வெளிப்படுத்தியதை அவன் கண்டிருக்கவில்லை. ஆதலால் ஷெல்ட்டனுக்கு கோபால் தொடர்பில் நல்லபிப்பிராயம் உருவாகியிருந்தது.

தனது கோபம் சற்றே தணிந்த உடன் "எங்கே நந்தசிரியை இன்னும் காணவில்லை" என்று கேட்டுக்கொண்டே லயக்காம்பராவுக்குள் நுழைந்தான் கோபால். அங்கே மீண்டும் மகிழ்ச்சிக் களை பரவத் தொடங்கியது.

பணிய லயத்தில் தியாகுவின் லயக்காம்பரா என்றால் சுற்று வட்டாரத்தில் எல்லா தோட்டங்களிலும் பிரசித்தமான ஒன்று. தியாகு கோபாலைவிட இரண்டு மூன்று வயதே மூத்தவன். அவனது அம்மா தியாகு சிறு வயதில் இருக்கும் போதே இறந்து போய்விட்டாள். ஆனாலும் அவன் தந்தை வேறு கல்யாணம் செய்துகொள்ளாமல் அவனை வளர்ந்து பெரியவனாக்கினார். தியாகு தோட்டத்தில் வேலைக்கு சேர்ந்த உடனேயே அவனது தந்தை பெரியண்ணன் வேலையில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

தியாகுவின் தந்தை தியாகுவுக்கு பூரண சுதந்திரம் கொடுத்ததால் இரவு பகல் எந்த சமயத்திலும் அவன் வீட்டில் நண்பர்கள் கூட்டம் குறையாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கொண்டே இருக்கும். நண்பர்களும் தமது வழக்கமான பாட்டுக் கச்சேரிக்கும் அவனது வீட்டையே கேந்திர ஸ்தானமாக ஆக்கிக்கொண்டனர். பாட்டுக் கச்சேரி நடக்கும் நாட்களில் சாராயம் போத்தல்கள் தாராளமாகப் புழங்கும் என்பதால் குடிக்கும்போது, கடித்துக்கொள்வதற்கான வறுவல்கள், அவியல்கள், பொறியல்களும் தாராளமாகவே அங்கு கிடைக்கும். போதாக்குறைக்கு வேட்டைக்குப் போறவர்கள் மானையோ, மறையையோ, முயலையோ வேட்டையாடினால் கூட தியாகுவின் காம்பராவுக்கும் ஒரு பங்கு வந்துவிடுவது வழக்கமாகப் போய்விட்டது. அதனால் தியாகுவின் வீட்டில் கறிச்சரக்குப் போத்தல்கள் குறைவில்லாமல் நிறைந்திருக்கும். தியாகு வீட்டுக்கு யார் வந்தாலும் வீட்டுத் தேவைக்கு ஏதாவது ஒரு பொருளை வாங்கிட்டுத்தான் வருவார்கள். நண்பர்களின் சங்கீதக் கருவிகளும் அங்குதான் வைக்கப்பட்டிருந்தன.

அநேகமான சந்தர்ப்பங்களில் தோட்டத்தில் வேலையின்றி பொழுதைக் கழிக்கும் இளைஞர்களும், அன்றைக்கு சோம்பேறித்தனத்தில் வேலைக்குப் போகாமல் விட்டவர்களும் கூட அந்த வீட்டில்தான் பொழுதைக் கழிப்பார்கள். தியாகுவின் தந்தைக்கும் இதெல்லாம் பழகிப் போய்விட்டது.

கோபால் லயக்காம்புறாவுக்குள் நுழைந்து நண்பர்களிடம் நலன் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே வெளியில் சலசலப்பு சத்தம் கேட்டது. காரணம் நந்தசிரி கையிலும், காலிலும் தோலிலுமாக பல பார்சல்களை சுமந்து வந்து கொண்டிருந்தான். அவனை தூரத்தில் கண்டதுமே நண்பர்கள் சந்தோஷக் கோஷம் எழுப்பிக் கொண்டு ஓடோடிச் சென்று அவனிடமிருந்த பாரம்மிக்க பார்சல்களை பெற்றுக்கொண்டனர்.

காம்பராவுக்குள் நுழைந்த நந்தசிரி சகலரையும் பார்த்து புன்னகை புரிந்தவாறே நேரே கோபாலிடம்தான் சென்றான். அவன் வலது கையைப் பிடித்து இழுத்து உள்ளங்கையில் சிகரட் பக்கற் ஒன்றையும் சில ரூபாய் நோட்டுக்களையும் வைத்தான்.

"காசு எதுக்குடா. நீ போத்தல் வாங்கியாரைலையா?" கோபால் கேட்டான்.

"அதெல்லாம் சரி! நீ இந்த காசை வெச்சுக்கோ. நீ இன்று சம்பளம் எடுத்ததுக்காக இவனுங்களுக்கு சாராயம் ஊத்தத் தேவையில்லை. எல்லோருக்கும் சம்பளநாள் தானே. நான் நண்பர்கள் மூணு நாளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்களை சேர்த்து காசு போட்டு தேவையான போத்தல்களையும் மத்த சாமான்களையும் வாங்கிட்டு வரச் சொல்லிவிட்டேன். நீ இந்த சல்லிய வைச்சுக்க. அவிங்க இப்ப வந்துருவானுக"

"யாரையெல்லா புடிச்சி அனுப்பின" கோபால் விசாரித்தான்.

"யாரு, பன்னீர்செல்வம், குமாரசிரி, தினேஸ், மூனு பேரும் டவுனுக்கு போயிருக்காங்க. இப்ப பாதி தூரம் வந்திருப்பானுங்க. கோழி ஒண்ணுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். தோல் உரிபடுது. நேரம் ஆவுனதால வந்துட்டேன். ரொட்டி சுடுறதுக்கு மாவு கொண்டு வந்திருக்கிறேன்."

நந்தசிரி ஏற்பாடுகளையெல்லாம் விவரித்தான்.

"நல்ல வேலடா மச்சான்" அப்ப பெரிய விருந்துதான் இன்னைக்கு. கோழி எங்கிருந்து" கோபால் திருப்தியுடன் கூறினான்.

"அதப்பத்தி பொறகு சொல்றேன். நாம வேலையில இறங்குவோம். ஷெல்ட்டன், சந்தரே எல்லாரும்தானே வந்திருக்கானுங்க. நாளைக்கு வேலைக்குப் போகத் தேவையில்லை. நாம் விடியும் வரைக்கும் பாட்டுக் கச்சேரி வைப்போம். நாளைக்கு நம்ம பேர செக்ரோல்ல போடுறதுக்கு நான் ஏற்பாடு பண்றேன்."

இப்படி கூறிய நந்தசிரி சிகரட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

"எனக்குன்னா வெலங்கல நந்தசிரி அதெப்படி வேலைக்கே போகாம செக்ரோல்ல பேர் போடுறது"

"கோபால், நீ இந்த தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்தவனா இருந்தாலும் ஒனக்கு ஒன்னுமே இங்கு நடக்குறத பத்தி தெரியாது. நான் தோட்டத்துக்கு வெளியில் இருந்து வந்தவனாக இருந்தபோதும், இந்த தோட்டத்தில எப்பேர்ப்பட்டவன் காதுலையும் நுழைந்து வெளியேற முடியும். நாளைக்கு நாம் வேலை செய்ய வேண்டிய மலை பதிநாளாம் நம்பர் கொழுந்து மலை. அது தோட்டத்தின் மறு மூலையில் உள்ளது. அங்கே போய்ச் சேர்வதற்கே அரை மணி நேரம் பிடிக்கும். ஆனால் நாளை காலை பத்து பதினொரு மணியளவில் கன்டாக்கு வீட்டுக்குப் போகிறோம்."

நந்தசிரி சொல்வது மற்றவர்களுக்குப் புரியவில்லை என்றபோதும் அவர்கள் எல்லோரும் தலையாட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10

# திருடனுக்கு திருடன்

வேலைக்குப் போகாமலேயே செக்ரோல்ல பேர் போடர திட்டத்துக்கு மற்றவர்கள் இணங்கினாலும் அது என்ன திட்டம்னு அவர்கள் ஒவ்வொருவரும் நந்தசிரியிடம் கேள்வி கேட்டார்கள்.

“அப்படின்னா, நாம வேலைக்கு போகலங்கிறது பிடிபட்டுடுமே”

“யார் சொன்னது நாம் வேலைக்குப் போகலைன்னு.... உடுப்பிலயும் கையிலயும் கொஞ்சம் சேறு பூசிக்கொண்டு போயி நாங்க வேலை செஞ்சிக்கிட்டிருந்துட்டு தான் வாரோம்னு சொல்லுவோம்”

“ஏன் வந்திங்கன்னு கேட்டா?”

“அப்படி கேட்டா..... கன்டாக்கையா வீட்டுல மரக்கறி தோட்டத்தில் போய் வேலை செய்ங்கன்னு கங்காணி தான் அனுப்பினார்னு சொல்லுவோம். அதுக்கு கன்டாக்கு மறுப்பு தெரிவிக்கமாட்டான். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் சாப்பாடும் கெடைக்கும். செக்ரோல்ல பேரும் வந்துடும். ரெண்டு மூணு மணி நேரம் வேலை செஞ்சா போதும்"

நந்தசிரி இவ்வாறு சொன்னதை நினைக்க கோபாலுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனும் அந்தத் தோட்டத்திலேயே வசித்து வந்தாலும் இப்படியெல்லாம் காரியங்கள் அங்கே நடைபெறுகின்றது என்பதை அன்றுதான் தெரிந்து கொண்டான். இருந்த போதும் தோட்டத்து அதிகாரிகளின் தனிப்பட்ட சொந்த வேலைகள், வீட்டு வேலைகள், வீட்டுத்தோட்டங்களில் வேலை செய்தல் என்பனவற்றை தோட்டத் தொழிலாளர்களே செய்து வந்தனர் என்பது அவனுக்கு தெரிந்ததுதான். என்றாலும் அதற்கான சம்பளம் பொதுக்கணக்குப் புத்தகமான செக்ரோலில் இருந்து தான் வழங்கப்படுகின்றது என்பதனை நந்தசிரியின் திட்டத்தின் வாயிலாகவே தெரிந்து கொண்டான். அதன் பிரகாரம் தோட்டத்தில் பல சலுகைகளை அனுபவித்து வரும் சிலர் இப்படித்தான் வேலைக்குப் போகாமலேயே சம்பளம் வாங்குகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டான். கன்டாக்கு என்ற அதிகாரியே இதற்கு மூல காரணமாகவும் இருந்தான். தனது தந்தை கூட சில நாட்களில் கன்டாக்கின் தேவை கருதி அவரது வாகனத்தை ஓட்டிக்கொண்டு நகரத்துக்கு சென்று வருவதை பார்த்திருக்கின்றான்.

"நீங்கள்லாம் வரப்போவதில்லையா?" தியாகு உள்ளிருந்து கத்தினான்.

அதன் பின்னரே கோபால் நந்தசிரி மற்றும் அங்கிருந்த பலரும் உள்ளே சென்றனர். நந்திசிரி நேராக தியாகுவின் அப்பாவிடம் சென்று அவரது சுகதுக்கம் விசாரித்த பின்னர் அவரிடம் சிகரெட் ஒன்றை கொடுத்தான். அதன் பின் கோழிக்கறி செய்யும் வேலையை அவரிடம் கொடுத்துவிட்டு ஏதும் தேவைப்பட்டால் தன்னிடம் கூறும்படி கூறினான்.

அவருக்கும் இந்த மாதிரி நேரங்களில் தான் சற்று அதிக கவனிப்பு கிடைக்குமென்பதால் அவரது முகம் பிரகாசித்து சந்தோஷமாகக் காணப்பட்டது.

"எல்லாம் இருக்கு தம்பி. மிளகு கொஞ்சமும் இஞ்சியும் வேண்டும். பத்தாட்டி தங்கம்மாவிடம் கேட்டுக்கொள்ளலாம்"

"சரி வேலையை ஆரம்பிங்க... நான் அவற்றை கொண்டு வாரேன்" என்று கூறிய நந்தசிரி லயத்துக்கு வெளியே வந்த போது அங்கே ஒரு இளைஞன் காட்போட் பெட்டியொன்றை சுமந்து கொண்டு வேக வேகமாக வந்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை நிறுத்திய நந்தசிரி "சரி அதனை அப்படியே கொண்டு போய் தியாகுவின் அப்பாக்கிட்ட கொடுத்திட்டு டக்னு வா...... வேற வேலை ஒன்னு இருக்கு" என்று கட்டளையிட்டான்.

"வேறு என்ன செய்யனும் நந்தே? இன்னொரு கேமா...? ஒண்ணு பத்தாதா...?" அந்த இளைஞன் வினவினான்.

"அதெல்லாம் உனக்குத் தேவையில்லை.... சொன்னதை செய்" என்றான் நந்தே.

அதன் பின் நந்தசிரி பணிய லயத்தைத் தாண்டி சற்று அப்பால் இருந்த பெட்டிக்கடையில் நுழைந்தான். அங்கே மிளகும், இஞ்சியும் வாங்கிக்கொண்டான்.

அதன் பின் தியாகுவின் வீட்டில் பாட்டுக்கச்சேரி நள்ளிரவு வரையும் களைகட்டி உச்சஸ்தாயியில் நின்றது. வீசிக்கொண்டிருந்த குளிர்காற்றில் பனியும் சேர்ந்து நடுங்கச் செய்தபோதும் தியாகுவின் வீட்டில் இருந்த எவருக்கும் குளிர் என்பது கொஞ்சங்கூட உறைக்கவில்லை. பற்றாக்குறைக்கு லயத்தின் முற்றத்தில் விறகுக் கட்டைகளைப் போட்டு நெருப்புப் போட்டு பற்றி எரிந்து கொண்டிருந்தது. தேவையான விறகுக் கட்டைகளை தொழிற்சாலை அடுப்பு மூட்டுவதற்காக குவித்து வைத்திருந்த விறகில் இருந்து களவாக கொண்டு வர நந்தசிரி ஏற்பாடு பண்ணியிருந்தான்.

அங்கே லயத்திலேயே பலரும் தத்தமது லயக் காம்பரா ஓரங்களில் விறகுகளை அடுக்கி பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்த போதும் அந்த விறகுகளில் இருந்து ஒரு கட்டை விறகையாவது எடுக்கக் கூடாதென நந்தசிரி பொடியன்களுக்கு கட்டளை போட்டிருந்தான். பொடியன்களும் அதனை அச்சொட்டாக கடைப்பிடித்தனர். பணிய லயத்தில் இருந்து சற்று தூரத்தில் ஓடுகின்ற ஓடையில் போட்டிருக்கும் பாலத்தை கடந்து சென்று தொழிற்சாலைக்கென விறகு குவித்து வைக்கப்பட்டிருக்கும் குவியலில் இருந்து ஆளுக்கு ஐந்தாறு கட்டைகளை உருவிக்கொண்டு வருவது நந்தசிரியின் உதவியாட்களாக விருப்பத்துடன் செயற்படும் பொடியன்களுக்கு ஒரு பொருட்டல்ல.

நள்ளிரவு தாண்டிய வேளையில் பாட்டுக்கச்சேரியின் ஸ்வரம் நன்றாக குறைந்து போய் இருந்தது. சிலர் அங்கே சுருண்டு படுத்து உறங்கிப் போய்விட்டனர். இறுதியில் கோபாலும் நந்தசிரியும் தியாகுவிடமும் அவனது அப்பாவிடம் விடை பெற்றபோது தியாகுவின் தோள் மீது கைபோட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை கொஞ்சி நன்றி தெரிவித்தான். அப்போது தியாகுவின் கண்களில் இருந்து சில நீர்த்துளிகள் உருண்டோடுவதை அந்த இருளிலும் கோபால் கவனிக்கத் தவறவில்லை.

"அப்ப நாங்க வாரோம் மாமா.... தியாகு வாரோம்...."

கோபாலும் நந்தசிரியும் தோளுக்கு மேல் கைபோட்டு ஒருவரை ஒருவர் தாங்கியபடி படிகளில் ஏறிச் சென்றபோது முற்றத்தில் போடப்பட்டிருந்த நெருப்பும் சிறுகச் சிறுக அணையத் தொடங்கியிருந்தது. அந்த கனத்த இருளில் தோட்டத்தின் எல்லாச் சந்தங்களும் அமைதியடைந்து போனது. தொழிற்சாலையில் இயந்திர ஒலி மாத்திரம் ஒரே சீராக சுருதி மாறாமல் மேலோங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. லயங்களில் அனைவரும் உண்டு உறங்கி நித்திரை சுகத்தில் மூழ்கியிருந்தனர்.

ஆங்காங்கே சுருண்டு உறங்கிக் கொண்டிருந்த நாய்கள் கோபாலதும் நந்தசிரியினதும் காலடி அரவம் கேட்டு குரைத்த போதும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தாது தம் லயத்தை நோக்கி நடந்து சென்றனர். அடுத்த நாள் காலைச் சூரியன் விழித்தெழும்புவதற்கு இன்னும் சில மணித்தியாலங்களே எஞ்சியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11

# வேண்டாத வேலை நிறுத்தம்

“நாளையதினம் நாம் யாரும் வேலைக்குப் போகக்கூடாது. நாம் நமது கோரிக்கைகளை முன் வைத்து ஒரு நாள் வேலை நிறுத்தம் அறிவித்திருக்கிறோம்.”

இவ்வாறு தோட்டத்தின் பிரதான தொழிற்சங்கத்தின் தலைவராக கடமையாற்றும் சேதுபதி லயம் லயமாக சென்று தொழிலாளர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

“அது என்னா தலைவரே....: திடீரென்று வேலை நிறுத்தம் பண்ணச் சொல்லி அறிவிக்கிறீங்க?” பெரியவர் ஒருவர் கேள்வி கேட்டார்.

“இப்ப முந்தி மாதிரியில்ல. தோட்டங்கள் எல்லாம் அரசாங்கத்துக்குத் தான் சொந்தம். வெள்ளைக்காரனெல்லாம் போய்ட்டான். நாமும் அரச உத்தியோகத்தர் மாதிரி மதிக்கப்பட வேணும்” தலைவர் விளக்கமளித்தார்.

“முன்பும் வெள்ளைக்காரன் காலத்திலயும் இப்படித்தான் உரிமை கிரிமைனு பேசப் போயிப் பிரச்சினையில் மாட்டிக்கிட்டோம் சேதுபதி. உனக்கெல்லாம் அது ஞாபகமிருக்க நியாயமில்ல. நீயெல்லாம் அப்ப சின்ன பய. தொழிலாளர்களை வாட்டி வதைத்து அடித்து உதைத்து வேலை வாங்கிய கன்டாக்கை மாற்றும்படி கேட்டு நாங்க வேலை நிறுத்தம் செய்தோம். ஆனா அவர்கள் மற்ற தோட்டங்களில் இருந்து ஆளுங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து வேலை செய்ய வைச்சதுடன் காடையர்களை கொண்டு வந்து எம்மை அடித்து துவைத்து விட்டார்கள். இங்க பாரு அப்போ முறிந்த இந்த கைதான் இன்னும் நேராகல. இன்னுங்கூட இந்தக் கையால வேல செய்ய முடியல. அதனால இந்த வேலையெல்லாம் உட்டுட்டு பொழைக்கிற வழிய பாரு".

இவ்வாறு அந்த முதியவர் கூறி முறிந்து போய் சீவனற்றிருக்கும் தன் இடது கையை வலது கையால் தூக்கிக்காட்டினார். அவர் பெயர் ஜெயராம். அவர் சில காலத்துக்கு முன்பு தொழிலாளர் தலைவராக செயற்பட்டு மக்கள் மத்தியில் மதிக்கப்படுபவராக விளங்கியவர். தொழிலாளர் பிரச்சினைகளின்போது முன் சென்று குரல் கொடுக்கும் போராளியாக திகழ்ந்தவர். வெள்ளைக்காரத் துரையின் கட்டளைக்கு கீழ்ப்படியாத காரணமாக பல தடவைகள் பொலிஸ் கூட்டில் அடைக்கப்பட்டு அடி உதை வாங்கி நொந்து நைந்து போனவர். அவர் தலைவர் சேதுபதியின் வேலை நிறுத்தக் கோரிக்கைக்கு பலமாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

"ஜெயராம் அண்ணே! இது உங்க காலத்தை போல இல்லை. இன்னைக்கு நம்ம தலைவர்களால அரசாங்கத்தைக்கூட அசைக்க முடியும். முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் நம்மை கசக்கிப் பிழிந்தது போல இன்னக்கி செய்ய முடியாது. நாம் நமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். நீ ஓ வாய பொத்திக்கிட்டு இரு" தலைவர் சேதுபதி கோபத்துடன் கூறினார்.

"சரி நாளைக்கு வேலை நிறுத்தம் தோல்வியடைந்தால் என்ன செய்வ? தொழிலாளருக்கு நீ சம்பளம் கொடுப்பியா? இல்லாட்டி உங்க தலைவர்கள் தான் அதனை வாங்கிக் கொடுப்பார்களா? இல்லாட்டி அப்படி வாங்கிக் கொடுப்பதாக உறுதி பெற்றுக்கொடுக்க முடியுமா?" விவாதித்தார் ஜெயராம்.

"ஆமா, அது அப்படித்தான். நாம் தான் முன்னுக்குப்போய் நம் சக்தியை அவர்களுக்குக் காட்ட வேண்டும். அப்படி இல்லாமல் நாம கைய கால முடக்கி சுருண்டு படுத்துக்கிட்டிருந்தா நம்ம உரிமைகளை வென்றெடுக்க முடியாது."

சேதுபதி தன் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் குமுறினார். அவருக்கு உதவியாக தோட்டத்தின் இளைஞர்கள் சிலரும் முன்னின்றனர். அவர்களில் ஜெயராமின் புதல்வன் ஸ்ரீனிவாசும் ஒருவன். அவன் சேதுபதியின் உதவிக்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலைவர் சேதுபதி சொல்வதுதான் சரி. நாம் நமது சக்தியைக் காட்டுவோம். வேலைநிறுத்தம் செய்வோம். ஶ்ரீனிவாஸ் சத்தம் போட்டுக்கத்தினான். எல்லோரும் காட்டுக்கூச்சல் போட்டவாறு சென்றனர்.

சேதுபதி தலைவருக்கு ஆதரவாக ஶ்ரீனிவாசின் மேற்படி செய்கை காரணமாக குழம்பிப்போன சேதுபதியின் மனது ஆறுதலடைந்தது. என்னதான் சேதுபதி தோட்டத்தின் தொழிற்சங்கத் தலைவராக தன்னைக்கூறிக்கொண்டாலும் தோட்டத்தொழிலாளர்களின் தேசிய தலைவர்களின் முன்னால் அவர் பயந்து கூனிக்குறுகும் தொடை நடுங்கியாகவே இருந்தார். எனினும் அவர் தான் அத்தகைய தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் போலும் நாட்டின் பிரச்சினைகள் தொடர்பில் தமது சங்கம் தேசிய தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி வருவதாகவும் இதுதொடர்பில் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளதாகவும் சேதுபதி தொழிலாளரை நம்பச் செய்திருந்தார். வாசிக்கவும் எழுதப்படிக்கவும் தெரிந்திருந்தமை மட்டுமே அவருக்கிருந்த தகைமையாகும்.

சேதுபதி அந்தப்பிரதேச தொழிற்சங்க காரியாலயங்களுக்கு செல்லும் போதெல்லாம் தேயிலைத்தூள், தோடம்பழம் போன்றவற்றையெல்லாம் கொண்டு சென்று லஞ்சம் கொடுத்துத்தான் தோட்டத்தலைவர் ஆனார் என்ற கதையும் தோட்டத்தில் உலாவுகின்றது. இதற்கு முன்னால் ராமச்சந்திரன் என்பவர் தோட்டத்தலைவராக இருந்தார். அவர் எப்போதும் மதுபோதையில் மிதந்து கொண்டிருப்பதால் அவரால் தொழிலாளர்களுக்கு உபத்திரவமின்றி உபகாரங்கள் ஏற்பட்டதில்லை. அவருடாக ஏதாவது வேலை செய்ய வேண்டுமாயின் ஒரு போத்தல் சாராயம் பூஜை பண்ண வேண்டும்.

ஆனால் ராமச்சந்திரனிடம் சில நல்ல குணங்களும் இருந்தன. அதில் ஒன்றுதான் அவர் பெரியோர் வார்த்தைகளை உன்னித்துக் காதுகொடுத்து கேட்பதும் சரியெனப்பட்டதை செயற்படுத்துவதுமாகும். தேவையற்ற காரணங்களுக்காக தாய் சங்கத்தினர் தொழிலாளரை வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி தூண்டிய போது அத்தகைய அடாவடித்தனங்களை அவர் சுட்டிக்காட்டிய சந்தர்ப்பங்களும் உள்ளன. அவரது பதவி பறிக்கப்பட்டமைக்கு அதுவும் ஒரு பிரதான காரணியாகும். இப்போது இவர்கள் செய்யப்போகும் வேலை நிறுத்தம் தொடர்பில் அவரும் கேள்விப்பட்டார். அவருக்கு அதில் உடன்பாடு இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பிரச்சினை இலகுவாக பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டிய ஒன்றுதானே. அரசாங்கம் தொடர்பில் மக்கள் பெரிதும் விரக்தியடைந்துள்ளனர். எந்தப் பொருள் வாங்கவும் போலிம்களில் நின்று சாகாமல் சாக வேண்டியுள்ளது. அடுத்த தேர்தலில் தோட்டப்புற மக்களின் வாக்கைப் பெற வேண்டுமானால் அவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். ஆதலினால் நமது கோரிக்கைகளை பேச்சு வார்த்தைகள் மூலம் வென்றெடுக்க வேண்டும். அதற்கு வேலை நிறுத்தம் அவசியமல்ல." அவர் அவ்வாறு உறுதியாகக் கூறினார்.

இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த கோபால் மேற்படி கருத்துக்களை ஒன்றோடு ஒன்றுடன் ஒப்பிட்டுப்பார்த்தான். இந்த இரண்டு தலைவர்களுமே தலைநகரில் இயங்கும் தாய் சங்கத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஆடும் கைப்பாவைகளாகவே இருக்கின்றனரேயன்றி தொழிலாளர்களின் தேவை, கோரிக்கைகள் உரிமைகள் போன்றன தொடர்பில் எந்தவித அறிவோ உணர்வோ அற்றவர்களாக இருந்தனர். நந்தசிறி, ஆரியவங்ச போன்றோரும் இந்த சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்தனர். கோபால் அங்கத்துவம் பெற விண்ணப்பித்திருந்தாலும் இன்னும் கிடைக்கவில்லை. அதனால் அவன் அன்றைய வேலை நிறுத்தக் கோரிக்கைக்கு கட்டுப்படத்தேவையில்லை என்று நினைத்தான்.

"நந்தா நீ நாளைக்கு வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளப் போகிறாயா?" கோபால் கேட்டான்.

"அதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. நாளைக்குக் கட்டாயம் வேலைக்குப் போக வேண்டும். சில நேரம் நாளைக்கு நம்மை ஸ்டோருல வேலைக்கு போட சந்தர்ப்பம் இருக்கு. இந்த சேதுபதி செய்யிற வேலை நிறுத்தம் போலியானது கோபால். அவன் ஒரு பயந்தாங்கொள்ளி பொலிஸ்காரனைக் கண்டால் காணுக்குள் இறங்கி பதுங்கி விடுவான். அவனை தலைவர்னு சொல்லவே வெக்கமாக இருக்கு. அவனெல்லாம் மக்களுக்கு வழிகாட்டி வேலை நிறுத்தம் செய்ய முடியாது. அப்படி அவனால் செய்யக் கூடுமாயின் நான் காதை வெட்டிக்கிறேன்.

நந்தசிறி சேதுபதியை கிண்டலடித்து நையாண்டி செய்தான்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 12

## எத்தனை... எத்தனை... பிரச்சினைகள்

சேதுபதியின் வேலைநிறுத்த ஏற்பாடு தொடர்பில் நந்தசிரி கிண்டலடித்து நையாண்டி செய்ததில் கோபாலுக்கு உடன்பாடு இருக்கவில்லை.

"அப்படி சொல்ல முடியாது" நந்தா.... பார் அவனோட தோட்டத்து இளைஞர்கள் கூட்டமாக ஒவ்வொரு லயமாக போகிறார்கள். பாலசந்திரன், ரண்பண்டா, முனியப்பன் அவன் பின்னால் இருக்கிறார்கள்" என்றான் அவர்களின் கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஆரியவங்ச.

நந்தசிரி மேலும் நையாண்டித் தனத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டு புன்னகைத்தான். "பாலசந்திரன், ரண்பண்டா ஆகியோரை மனுசன் என்று கணக்கெடுக்க முடியுமாடா? அவனுகளை விட மலையில் கொழுந்தெடுக்கும் பொம்பளைங்க மேல். அவங்க தோட்டத்தில் ஏதாவது ஒழுங்கான வேலை செஞ்சிருக்காங்களா? சேதுபதி வாங்கிக் கொடுக்கும் சாராயத்துக்காகத்தான் அவன் பின்னால போறாங்க. சரி.... நான் சொல்றத நம்பாட்டி நாளைக்குப் பாரு. சங்கூதினதும் மொதலாவதா பெரட்டுக்கு ஓடுறவன் ரண்பண்டாவாதான் இருப்பான். அடுத்தது முனியப்பன். எவனாவது ஓட்டு வைக்கிறதுன்னா வை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி சவால் விட்டதுடன் உறுதியாகவும் கூறினான்.

இது இப்படி இருக்க தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் வேலை நிறுத்தத்துக்குத் தயாராகிறார்கள் என்ற செய்தி சுற்றுப்புறமெல்லாம் பரவிச் சென்றது. அந்திக் கருக்கல் அதிகரித்த வேளையில் தோட்டத்துக்கு உள் நுழையும் பாதையில் இரண்டு பொலிஸ்காரர்கள் துப்பாக்கியுடன் வந்து சேர்ந்தார்கள். அடுத்த நாள் காலைவரை அங்கு காவல் இருக்க வேண்டுமென மேலிடத்தில் இருந்து அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. தோட்டத்துக்கு பொலிஸ்காரர்கள் வந்து விட்டார்கள் என்று தெரிந்த மாத்திரத்தில் சேதுபதி யின் தொழிற்சங்க நடவடிக்கைகள் முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்தது. சேதுபதி பீதியும் கலவரமும் அடைந்தான்.

"இப்ப என்ன செய்ரது தலைவரே!" ரண்பண்டாவும் கலவரத்துடன் தான் கேட்டான்.

"பயப்படத் தேவையில்லை. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நமது தோட்டம் மட்டுமில்லையே. மத்த தோட்டங்களும்தான். இன்னுங் கொஞ்ச நேரத்தில் சங்கத்தின் பிரதேச செயலாளர் வந்து விடுவார். அவர் வந்ததும் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை வந்து விடும். நாளைக்கு ஒருத்தரும் வேலைக்குப் போகமாட்டார்கள்"

சேதுபதி தன் மனதில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சமயோசிதமாக பேசினார்.

"தலைவர் சேதுபதி நானும் வீட்டுக்குப் போய்ட்டு வாரேன். காலையில வந்தது" பாலச்சந்திரன் தலையை சொறிந்து கொண்டே கேட்டான்.

"சரி போய்ட்டு வா. நான் ஒத்தக்கட பக்கத்தில நிற்கிறேன்."

"கொஞ்சம் இரு பாலா, நானும் வருகிறேன். அருவி ஓரத்தில கட்டுன மாட்டை அவுத்துக்கிட்டு போய் பட்டியில விடனும். தலைவர் நானும் போய்ட்டு வாரேன்...." முனியப்பனும் மெல்ல கழண்டு போனான்.

"சரி வா.... ரண்பண்டா நாம ஒத்தக்கட பக்கம் போகலாம்"

சேதுபதியால் அடுத்து என்ன செய்வதென்று நிச்சயமாக ஒரு தீர்மானத்துக்கு வர முடியாமல் தன் மனதில் கிடக்கும் குழப்பத்தை மறைத்துக் கொள்வதற்காக கட்டியிருந்த சாரத்தை அவுத்து மீண்டும் கட்டிக் கொண்டு அவ்விடத்தில் இருந்து நகர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் தோட்டத்தின் பிரதான வாயிலுக்கருகில் பொலிஸார் வந்திருக்கின்றனர் என்ற செய்தி தோட்டமெங்கும் பரவிப் போயிருந்தது. அதனை உறுதி செய்து கொள்ளும் முகமாக தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக முகப்பு நுழைவாயிலை நோக்கி படையெடுத்தனர். சிலர் வெளியே போக வேண்டும் என்று கூறிவிட்டு கேட்டைக் கடந்து ஹொலிறூட் தோட்ட ரயில் பாதை வரை சென்று விட்டு வந்தனர்.

தோட்டத்தைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட்ட தொழிலாளர்களைத் தவிர ஏனைய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட விரும்பவில்லை. குறிப்பாக பெண் தொழிலாளர்கள் இது தொடர்பில் பேசக்கூட மறுத்தனர். மற்றும் ஓய்வூதியம் பெற எதிர்பார்த்திருந்தவர்கள் வெளிப்படையாகவே தொழிற்சங்கத் தலைவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய காரியங்கள் தொடர்பில் கடுமையாக விமர்சித்தனர்.

இத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியில் அடுத்த நாள் வேலை நிறுத்தம் நடக்குமா? இல்லையா? என்பது தொடர்பிலும் அவ் வேலை நிறுத்தத்தின் சாதக பாதகங்கள் தொடர்பிலும் பலர் மனதிலும் பலத்த சந்தேகங்கள் எழுந்தன.

தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து கோரிப்பெற வேண்டிய முக்கிய உரிமைகள் எத்தனையோ இருந்தன. ஆனாலும் இத்தகைய கோரிக்கைகள் பிரச்சினைகள் தொடர்பில் இதுவரை காலம் தொழிற்சங்கங்கள் நடந்து கொண்ட முறை திருப்திகரமானதாக வரலாற்றில் பதிவாகவில்லை. இதன் காரணமாகவே இத்தகைய வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்ள தொழிலாளர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

"வேலை நிறுத்தம் செய்யுங்கள். உங்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுத்தாரோம் என்று நீண்ட காலம் இவர்கள் ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் அவர்கள் சொன்னபடியெல்லாம் ஆடினோம். என்ன நடந்தது? ஒரு மசிரையும் புடுங்க முடியல. வெள்ளைக்கார தொர எங்க சம்பளத்தை வெட்டுனதுதான் மிச்சம். அரிசி மாவு கொடுக்கிறதையும் நிப்பாட்டினான். எல்லாத்தையும் புடுங்கி கோச்சியில ஏத்தி அழுக அழுக இந்தியாவுக்கு அனுப்பினானுக. இவனுகளால நிப்பாட்ட முடிஞ்சுதா?"

பித்தளைக் குடங்களுடன் தண்ணி பிடிக்க பீலி படியில் கூடியிருந்தவர்களில் அனுபவப்பட்ட வயதான மூதாட்டி ஒருவர் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தப்பட்டு கூறினார். அந்தத் தோட்டத் தொழிலாளரின் குடிநீர் வசதி கருதி தோட்ட நிர்வாகம் மலையடி வாரத்தில் ஓடிய அருவி ஒன்றை மறைத்துக் கட்டி குழாய் அமைத்து லயங்களுக்கு அருகாமையில் பெரிய கொன்கிறீட் நீர்த்தாங்கி கட்டி அதில் பீலியமைத்துக் கொடுத்திருந்தார்கள். அதில் எப்போதும் சுத்தமான நீர் நிறைந்து வழிந்தோடிக் கொண்டிருக்கும்.

எல்லாத் தோட்டங்களையும் "அரசுடமையாக்கிட்டாங்கள். அரச தோட்டங்களில் வேலை செய்பவர்கள் அரசாங்க பணியாளர்கள் ஆக வேண்டும். ஆனா நாங்க இன்னமும் தோட்டக் கூலிக் காரங்களாத்தான் இருக்கோம். நாள் கூலிதான் வாங்குறோம். லயக்காம்புரா தான் வீடு...."

அங்கே கூடியிருந்த இன்னொரு பெண் ஆதங்கப்பட்டாள். "லயத்து கூரையெல்லாம் இத்துப்போய் வீடெல்லாம் ஒழுகுது...... எவன் கவனிக்குறான்"

"புள்ளைங்களுக்கு படிக்கிறதுக்கு பள்ளிக்கூடம் இருக்கா...."

"ஆஸ்பத்திரி வசதி செய்து குடுன்னா கேக்குறான்னா?"

"டவுனுக்குப் போக ஒழுங்கான ரோட்டுமில்ல, பஸ்களுமில்ல"

"புள்ளத்தாச்சி பொம்பளைங்கள டக்கு வண்டியில் போட்டு கிட்டு ஆஸ்பத்திரிக்கு போனா வண்டியிலேயே புள்ள பொறந்துடுது"

தோட்டத் தொழிலாளர்களின் தீர்க்கப்படாத தேவைகளும் உரிமைகளும் பற்றி அங்கிருந்த பெண்கள் அங்கலாய்த்து ஆதங்கப்பட்டனர்.

"நான் நெனைக்கல. கொழுந்து மலைக்குப் போற பொம்பளைங்க ஒருத்தி கூட வேலை நிறுத்தம் செய்வான்னு....." இறுதியாக ரெங்கம்மாள் குரல் கொடுத்தாள். அந்திக் கருக்கல் அதிகரித்திருந்தது. அவர்கள் ஒவ்வொருவராக குடங்களை இடுப்பில் அடுக்கிக் கொண்டு கிளம்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13



# “அவுங்கல அடுப்புல போடு...”

“ஊங்........ ஊங்......... ஊங்”

தொழிற்சாலை சங்கு மூன்று முறை ஊதி ஓய்ந்தது. அன்றைய சங்குச் சத்தம் வழக்கத்துக்கு மாறாக நாரசமாய் ஒலித்ததுடன் தொழிலாளரை உலுக்கி எழுப்பியது.

கடும் நித்திரையில் இருந்த கோபால் திடுக்கிட்டு எழுந்தான். ஏனைய நாட்களில் குளிராக வீசும் காற்று அன்று வெப்பமாக இருப்பது போல் மனசுக்குப்பட்டது. அந்த அதிகாலையிலேயே நுளம்புகள் காதுக்குள் புகுந்து ரீங்காரமிட்டு எரிச்சலூட்டின. கோபால் கம்பளியை உதறி எட்டாக மடித்து ஓரமாக வைத்து விட்டு எழுந்திருந்தான். கால் கையை மடித்து தலையை குனிந்து உடலை வளைத்து சோம்பல் முறித்துக் கொண்ட அவன் தன் அம்மா எழுந்து விட்டாளா? என்று தேடினான்.

அன்னம்மா வழக்கமாகவே எல்லோருக்கும் முன்பாக எழுந்து விடுவா. அன்றும் கூட அவள் கோபாலுக்கு முன்பே எழுந்திருந்து இஸ்தோப்பில் அவர்கள் சமையலறை என்று குறிப்பிடும் ஒரு மூலையில் சற்றே மேடாக்கி கட்டப்பட்டிருந்த அடுப்பில் கேத்தலை வைத்து தேநீர் போடுவதற்காக பச்சை விறகை ஊதி நெருப்பு மூட்டிக்கொண்டிருந்தாள். கோபால் எழுந்து விட்டான் என்பதைக் கவனித்த அவள்.

“தம்பி இன்னைக்கு வேலைக்குப் போறியா?” என்று வினவினாள்.

“தெரியல்ல அம்மா...... எதுக்கும் பெறட்டுக் களத்துப் பக்கம் போய்ப் பார்க்கனும். நான் யூனியன்ல சேர்ந்திருந்தாலும் எனக்கு இன்னமும் அங்கத்துவம் தரல. அதனால வேலைக்குப் போகலாம்னுதான் நெனைக்குறன்”

கோபால் தனது லயத்தில் இருந்து வெளியேறி பெறட்டுக் களம் நோக்கி நடந்தான். அந்த லயத்து வரிசையில் முடிவடையும் லயக்கோடியில்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு மாமாவின் மாட்டுப் பட்டி இருந்தது. அப்போதுதான் முருகேசு மாமாவும் தனது பால் கேனை தூக்கிக் கொண்டு பால் விநியோகத்துக்குப் புறப்பட்டிருந்தார். கோபாலை எதிரில் கண்டு வாய் நிறைய சிரித்தார்.

"மாமா என்ன இன்னைக்கு பிந்திட்டீங்க?" கோபால் ஏதோ பேச வேண்டுமென்பதற்காகப் பேசினான். "ஆமா தம்பி.... கொஞ்சம் தாமதமாயிருச்சு. வாறேன்...." அவர் நிற்காமல் கடந்து சென்றார்.

கோபால் விரைந்து நடந்து தோட்டத்து தொழிற்சாலைக்கு அப்பாலிருந்த பெறட்டுக் களத்தை அடைந்தான். அங்கே பெறட்டுக்கு வருகை தந்திருந்தோரின் தொகையில் எந்த குறைவும் தெரியவில்லை. ஏனைய நாட்களைப் போலவே அன்றும் தொழிலாளர் அதிக அளவில் வந்திருந்தனர். அப்படியானால் எதிர்பார்த்தபடி வேலை நிறுத்தம் இடம்பெறப் போவதில்லை. அதை நினைக்க கோபாலுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எனினும் துக்கத்திலும் வேதனையிலும் கடுமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளரின் கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமென்பதில் அவனுக்கு இரண்டாவது அபிப்பிராயம் இருந்ததில்லை.

ஆனால் இந்தத் தொழிற்சங்கக்காரன்கள் இத்தகைய நடவடிக்கைகளில் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு தமது அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி அவர்களின் சந்தாத் தொகையை பறித்துக் கொள்வதற்கும் கொள்ளையடிப்பதற்குமே குறுமானம் பிடிக்கிறார்கள் என்று நினைத்த போது அவனுக்கு மண்டையில் ஆணி அடித்தது போல் இருந்தது. இதனை மாற்றியமைக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டே அவன் பெறட்டுக் களத்துக்குச் சென்றான்.

"நந்தசிரி, ஆரியவங்ச, வீரய்யா, கோபால்..." வரிசையாக மேலும் சில பெயர்கள் வாசிக்கப்பட்டன. "நீயெல்லாம் இன்னைக்கு இஸ்டோருக்குப் போ..." கன்டாக்கையா பல்வேறு வேலைகளுக்குமென ஆட்களைப் பிரித்து பெறட்டுக் கலைத்தார்.

நந்தசிரி அவர்கள் அனைவரையும் தொழிற்சாலையில் வேலை செய்ய போட்டிருப்பது தொடர்பில் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். அவன் ஏன் அப்படி குதூகலிக்கின்றான் என்று கோபாலுக்கு புரியவில்லை. அவன் அது தொடர்பில் நந்தசிரியிடம் கேட்டபோது...

"நான்தான் நேத்தே சொன்னனே. நமக்கு ஸ்டோர் வேல கெடைக்கும்னு. இது ரொம்ப லேசான வேலை. விடுமுறை தினத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யலாம். மேலதிக வேலை நேரமும் கெடைக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போது தேயிலைத்தூள் ரெண்டு மூனு ராத்தல் கடத்திரலாம். இன்னும் நிறைய விசயங்கள் இருக்கு. இதெல்லாம் கேட்டு வாங்க முடியாது……." நந்தசிரி விளங்கப்படுத்தினான்.

கோபாலுக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்தது. காடு, மலை, பள்ளம் எல்லாம் ஏறி இறங்கி தேயிலை தூருக்குள் புகுந்து புல் புடுங்கிக் கஸ்டப்பட்டு வேலை செய்யிறதிலும் பார்க்க தொழிற்சாலைக்குள்ளிருந்து வெயில் படாமல் வேலை செய்வது சுலபமானதாகத் தான் இருக்கும். எனினும் புதிய வேலை தொடர்பில் அவனுக்கு கொஞ்சம் குழப்பமாகத்தான் இருந்தது. நந்தசிரி அவன் குழப்பத்தையும் போக்கினான்.

"ஏய் கோபால் நீ பயப்படாமல் வா. எல்லாத்தையும் நான் பார்த்துக்குறேன். நான் முன்பும் தொழிற்சாலையில வேலை செய்திருக்கேன். தேயிலைக் காட்டில் கொதிக்கும் வெயிலில் வேலை செய்யிறதை விட இது ரொம்ப லேசு. நாம ரெண்டு பேரையும் அடுப்புல போட சொல்லிக் கேப்போம்…" கோபால் மேலும் குழப்பமடைந்தான்.

"அடுப்புல போடுறதா ? என்னா ஒளர்ற?"

அதைக்கேட்ட நந்தசிரிசிரித்தான். "அடுப்புல போடுறதுண்ணா அடுப்புல தூக்கிப் போடுறதில்ல. நானும் கன்டாக்கு மொத மொதல்ல "நந்தசிரியை தூக்கி அடுப்புல போடு' அப்படின்னு சொன்னபோது வெலவெண்டுதான் போய்ட்டேன். ஆனா அடுப்புல போடுறதுன்னா அடுப்பு வேலைக்குன்னு அப்புறம்தான் தெரிஞ்சது. ஸ்டோர்ல தேயிலை வாட்டுறதுக்கு அடுப்பு எரித்து வெறகு போட்டுக்கிட்டே இருக்கனும்" அதைக் கேட்டதும் தான் கோபாலுக்கு விசயம் புரிந்தது.

"சரி பீடி இருந்தா கொடு. பீடி ஒன்ன அடித்து விட்டுத்தான் கன்டாக்கு கிட்ட போகனும்" "மெதுவாக போலையை போட்டு அடுப்பு வேலையை அமுக்கிக்கிட்டு வாரேன் பாரு" நந்தசிரி வீரனைப் போல் கூறினான்.

கோபால் கலிசான் பொக்கட்டுக்குள் கையைப் போட்டு மூன்று பீடிகளை எடுத்தான். ஒன்றை தன் உதட்டுக்குள் பொருத்திக் கொண்டு இரண்டை நந்தசிரியிடம் நீட்டினான். இருவரும் அருகில் இருந்த ரேஷன் மடுவத்தின் அருகில் சென்று மறைவாக நின்று கொண்டு பீடியை உறிஞ்சி ஆயாசமாக புகையை ஊதினர்.

"ஆனா மச்சான். அடுப்புக்கருகில் வேலை செய்யும் போது பீடி குடிக்க முடியாது. ஏன்னா பீடி புகை அடுப்புக் குழாய் வழியாக தேயிலைக்கொழுந்து வாட்டும் அறைகளுக்குள் புகுந்து தேயிலையின் வாசத்தைக் கெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். அப்போது அங்கே இருப்பவர்களுக்கு கொழுந்து கருகுவது போல் வாசம் பிடிபடும். யாரோ பீடி குடிக்கிறார்கள் என்பதை வேவு பார்த்து கண்டு பிடித்து வேலையில் இருந்து விரட்டி விடுவார்கள். அதன் பின் ஸ்டோர்ல வேலை கிடைக்காது. இதெல்லாம் கன்டாக்கு, டீ மேக்கர், சுப்பர்வைசர் அறிந்த விடயங்கள் தான்."

நந்தசிரி கோபாலுக்கு தெரியாத விசயங்களை விளங்கப்படுத்தினான்.

"அது என்னா நீ சொன்னியே.. தேயிலைத்தூள் ரெண்டு மூனு ராத்தல் கூட கடத்திடலாம்னு. அதெப்படி? கோபால் சிறு பிள்ளையைப்போல் கேட்டான்.


"அது ஒன்னும் லேசான காரியம் இல்ல. அடுப்பில் இருந்து தேயிலையை வாட்டி இறக்கிக் கொண்டுபோய் கொட்டும் போது கால் சட்டைப் பையில ஒவ்வொரு புடியா போட்டு எடுத்து கிட்டு போய் ஓரிடத்தில் சேர்க்கனும். அப்படி சேத்தத வேல விட்டு போகும் போது துண்டுல முடிஞ்சி இடுப்புல கட்டி கிட்டு வரனும். பெம்பளங்களுக்கு இது லேசு. யாரும் தடவி பார்க்க மாட்டாங்க." நந்தசிரி மேலும் பேசிக்கொண்டே போனான்.

"அப்படி இல்லாட்டி டீ மேக்கருக்கிட்ட குடிக்குறதுக்குன்னு சொல்லி கொஞ்சம் தேத்தூள் வாங்கனும். அதோட சேத்து நம்ம சேத்து வச்சிருக்கிறதையும் கொட்டி எடுத்துக்கிட்டு வந்துர்லாம். இதெல்லாத்தையும் விட இன்னுமொரு வழியும் இருக்கும். அது வந்து தேயிலை தூளை சாக்கு சாக்காக களவெடுக்கும் டீ மேக்கரின் கால் நக்கிகளுடன் சேர்ந்து கொண்டு நாமும் கெடைக்கிறத சுருட்டுறதுதான். ஆனா அதுக்கு கொஞ்சம் காலம் பிடிக்கும். அவிங்க வீட்டுக்கெல்லாம் போயி அடிமை மாதிரி வேலை செய்யனும். அவிங்கல தலமேல தூக்கி வச்சி கும்பிடனும். ஆனா அதமட்டும் செஞ்சிட்டா அப்புறம் எந்நாளும் கையில சல்லிதான். பீடி குடிக்கத் தேவையில்லை. சிகரட்டும் குடிக்கலாம்"

நந்தசிரி மேலும் பல இரகசியங்களை வெளிப்படுத்தினான்.

கோபால் தானும் இதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவனாக இருந்த போதும் இங்கே இத்தகைய கண்ணுக்குப் புலப்படாத பல இரகசியங்கள் இருப்பதனை அப்போதுதான் உணர்ந்தான். அவன் மாத்திரமல்ல. தோட்டத்தில் வசிக்கும் அநேகமானோர் இத்தகைய விடயங்கள் எல்லாம் தெரிந்திராத அப்பாவிகளாகத்தான் இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14

# கண்ணில் கசிந்த ஈரம்

அந்தத் தோட்டத்தில் அன்றைய வேலை நிறுத்தப் போராட்டம் தோற் றுப் போய்விட்டது. ஆனால் ஏனைய பல தோட்டங்களில் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது என பின்னர் தெரிய வந்தது. தலைவர் சேதுபதி உள்ளடங்கலாக சுமார் பத்துப் பேர் மட்டுமே அன்று வேலைக்கு செல்லவில்லை. அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் சும்மா இருந்தார்கள். அவர்கள் தொழிலாளர்களை வேலைக்குப் போக வேண்டாமென தூண்டவும் இல்லை. அதே சமயம் நிர்வாகத்துக்கெதிராக கோஷமெழுப்பவுமில்லை.

சேதுபதியை தலைவராக கொண்டு செயற்பட்ட தொழிற்சங்கத்தை தவிர வேறு பல தொழிற்சங்கங்களும் அத்தோட்டத்தில் செயற்பட்டு வந்தன. அவர்கள் எல்லோருமே சேதுபதி தரப்பினரின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்தனர். அத்தோட்டத்தில் தலைவர் சேதுபதியை பிரதி நிதியாகக் கொண்டு செயற்படும் தொழிற்சங்கத்தின் தலைவர்கள் தமது அரசியல் நன்மை கருதி எவ்வாறு தொழிலாளர்களையும் தொழிற்சங்கத்தையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றனர் என்பவற்றை எல்லாம் தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.

அங்கே சில இடது சாரி தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். அவர்கள் தத்தமது தலைவர்கள் எவ்வாறு தம் சுயநலம் கருதாது தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடுமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் ஈடுபட்டு தடியடி, குண்டடிபட்டு சிறை சென்றார்கள் என்ற வீர வரலாற்றை விபரித்தார்கள். இவற்றால் எல்லாம் சேதுபதியின் தொழிற்சங்கத்தின் உள்நோக்கங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

வேலை நிறுத்தப் போராட்டம் பல பிரதேசங்களிலும் பல்வேறு எதிர்ப்புக்கு மத்தியிலேயே இடம்பெற்றது. பூண்டுலோயா தோட்டமொன்றில் இரு சாராருக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பு ஏற்பட்டதில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

அவர்களது தோட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லா வேலைகளும் எந்தவித பிரச்சினைகளுமின்றி சுமுகமாக நடந்து கொண்டிருந்தது. கொழுந்து மலையில் கொழுந்தெடுத்தல் புல்லுவெட்டு, கவ்வாத்து, கான்வெட்டுதல், முள்ளுக்குத்துதல், உரம் போடுதல் முதலான எல்லா வேலைகளுக்கும் குறைவில்லாமல் தொழிலாளர்கள் சமூகமளித்திருந்தனர். எனினும் ஸ்டோர் வேலைக்குப் போன கோபாலுக்கும் அவன் நண்பர்களுக்கும் அங்கே நிம்மதியாக வேலை செய்யக் கிடைக்கவில்லை. அவர்கள் பல்வேறு இடைஞ்சல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆதலால் அவர்களால் தொடர்ந்தும் பொறுமை காக்க முடியவில்லை.

அரைக்கப்பட்ட தேயிலையை வாட்டத்துக்கு போடுவதற்காக பெரிய "ட்ரொலி" ஒன்றில் வைத்து தள்ளிக்கொண்டு வந்த ஒருவன் வேண்டுமென்றே ஆரியவங்ச மீது மோதினான். இடிபட்ட ஆரியவங்ச சற்று அப்பால் வீசப்பட்டு விழுந்தான். அவனுக்கு காயமேற்பட்டிருக்கவில்லை என்ற போதும் "ட்ரொலியில" இடிபட்டதினாலும் வீசப்பட்டு விழுந்ததினாலும் சிராய்ப்பும் உட்காயமும் ஏற்பட்டதால் வேதனையால் நெளிந்து கொண்டிருந்தான். தன் நண்பனுக்கேற்பட்ட இந்த நிலையைப் பொறுக்க முடியாத நந்தசிரி "ட்ரொலி" ஓட்டிக்கொண்டு வந்தவன் மீது பாய்ந்தான். அவன் சிங்கள இனத்தவன்.

"திருட்டு முண்டம் என்னடா இது கீழ்த்தரமான வேலை செய்கிறாய்.... நீ சிங்களவனாக இருந்து கொண்டு சிங்களவனுக்கு எதிரான வேலையை செய்திருக்கிறாய். அப்படியானால் தமிழனுக்கு நீ என்னவெல்லாம் செய்யமாட்டாய். உனக்கு என்னைப்பற்றித் தெரியாது மத்தவனுக்கிட்ட காட்ற வெளயாட்ட எனக்கிட்ட காட்ட வராத நீ மேலே உள்ளவங்களுக்கு பந்தம் பிடித்தாலும் நான் பயப்பட மாட்டேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரியின் இந்த சண்டித்தனத்தையும் கோபாவேசத்தையும் "ட்ரொலி" ஓட்டி வந்தவன் எதிர்பார்க்கவில்லை. அவன் நடுங்கிப் போய்விட்டான். இந்தக் கலவரத்தால் கவனம் திசை திரும்பிய கன்டாக்கும் டீ மேக்கர்களும் அவ்விடத்துக்கு வந்தனர். நந்தசிரியின் கோபாவேசம் அவர்களையும் பின்வாங்கச்செய்தது. தமக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் சுமுகமாக நந்தசிரியை சமாதானப்படுத்த முயற்சித்தனர். "ட்ரொலி" இடித்ததால் வேதனையுடன் நெளிந்து கொண்டிருந்த ஆரியவங்சவின் அருகில் சென்று அவனுக்கு சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்தனர்.

பெரிய டீ மேக்கர் "ட்ரொலி" ஓட்டி வந்தவனை கடுமையாக எச்சரித்தார்.

"ஓங் கண்ணு என்ன பொட்டையா? முன்னுக்கு இருந்தவன தெரியாம மோதி இருக்க. தோட்டத்துல வேலை நிறுத்தப் போராட்டம் நடக்கிற நேரத்துல வேலைக்கு வந்தவங்களோட தகராறு செய்யலாமா? இது மாதிரி திரும்ப நடந்தா ஒன்னைய மலை வேலைக்கு அனுப்ப சொல்லுவன்" அவர் கோபத்துடன் கூறினார்.

பிறகு அவர் நந்தசிரியை சமாதானப்படுத்தினார். நந்தசிரி இதைப்பற்றி பெரிதாக எடுத்துக்கொள்ளாத சிங்களவனாகிய நாம நமக்குள்ளேயே அடிச்சிக்கிட்டா தமிழன் நம்ம தலையில் ஏறிருவான். உன்னைப்போல நேர்மையாக வேலை செய்றவங்கதான் நமக்குத்தேவை. கொஞ்ச நாள் பொறுத்துக்க நான் ஒன்ன ஸ்டோருக்குள்ள எடுக்கிறேன்"

பெரிய டீ மேக்கர் கருணாரத்ன நந்தசிரியை சற்று அப்பால் அழைத்துப்போய் அவனிடம் கூறினார்.

"எனக்குப் பரவாயில்லை சேர். நான் ஓங்க பேச்சை தட்ட மாட்டேன். ஆனால் அந்த பயலுக்கு ஏதாவது நடந்திருந்தா? நாங்க ஸ்டோருக்கு வேலைக்கு வந்ததில இருந்து அந்த அமரேயும் வெங்கடேசும் எங்கள ஏசிக்கிட்டே இருக்காங்க. தேவையில்லாம வம்புக்கு இழுக்கிறாங்க. நாங்க ஏதும் தவறு செய்திருந்தா பரவால்ல. நாங்க பொறுமையாதான் வேலை செய்து கிட்டிருந்தோம். அவிங்களோட அம்மா அப்பாவோட தோட்டம் போல கதைக்கிறாங்க. இப்ப இதெல்லாம் அரசாங்க தோட்டமில்லையா சேர்....."

நந்தசிரி தாழ்ந்த குரலில் மரியாதையுடனேயே பேசினான். டீ மேக்கர் கருணாரத்னவுக்கு நந்தசிரியின் மரியாதையான பழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் அவனது நேர்மையான பேச்சும் பிடித்திருந்தது. இத்தகைய இளைஞர் களை தமது கைக்குள் வைத்துக்கொள்வது எதிர்காலத்தில் நன்மை பயப்பதாக இருக்கும் என்று நினைத்தார்.

அவருடன் தொழில் பார்க்கும் இரண்டாவது டீ மேக்கரான திருஞானசுந்தரம் தனது இடத்தைப் பிடித்துக் கொள்வதற்கு கொஞ்ச காலமாகவே முயன்று வருவது அவருக்குத் தெரியும். இந்த தேயிலை தொழிற்சாலையின் நிர்வாகம் முற்றிலும் பெரிய டீ மேக்கரான கருணாரத்னவிடமே இப்போது இருந்தது. அவரி டம் இருந்து அதனை கைப்பற்றி தமிழ் டீ மேக்கரான திருஞானசுந்தரத்திடம் கொடுப்பதற்கு அங்கே தொழில் பார்க்கும் ஏனைய தமிழ் அதிகாரிகளும் தமிழ் தொழிலாளர்களில் ஒரு பிரிவினரும் தருணம் பார்த்துக்கொண்டிருந்தனர். இத்தகைய ஆபத்தான காலகட்டம் தன்னை சூழ்ந்திருக்கும் இத்தருணத்தில் அமரதாச என்பவன் செய்த மேற்படி மடத்தனம் தொடர்பில் கருணாரத்ன மிகுந்த ஆத்திரமடைந்தார்.

என்ற போதும் நந்தசிரி போன்ற நேராக காரியங்கள் மேற்கொள்ளுகின்ற இளைஞர்களை தம்பக்கம் வளைத்துக்கொள்வதற்கு அவர் மனம் திட்டம் போட்டது. அதன் பிரகாரம் இன்று கிடைத்துள்ள இச் சந்தர்ப்பத்தினை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவர் கருதினார்.

அவர் நந்தசிரியின் தோளில் தட்டி "நந்தசிரி... ஏதாவது உனக்கு உதவிகள் தேவைப்பட்டால் தயங்காமல் என்னை வந்து பார். உன் போன்றவர்களுக்கு எப்போதும் என் மனதில் ஒரு இடம் உண்டு. நம்மைப் போன்று நேராக நடந்து கொள்கின்றவர்கள் இருப்பதால் தான். இவர்களால் சிங்களவர்களை விரட்ட முடியாதுள்ளது. பகல் சாப்பாட்டுக்கு போகும் போது என்னை வந்து பார். தேவையானால் உனக்கு தேயிலைத்தூள் கொஞ்சமும் எடுத்துக்கொள்ளலாம் என்ன?"

டீ மேக்கர் கருணாரத்ன இவ்விதம் தன்னிடம் கூறுவார் என்று நந்தசிரி கனவிலும் கூட கருதியிருக்கவில்லை. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து விட்டது என்பதில் அவன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15

# வழுக்குற மரத்தில மெதுவாத்தான் ஏறனும்

டீ மேக்கர் கருணாரத்ன முற்றிலுமாக நந்தசிரியின் வலைக்குள் சிக்கியி ருந்தார். மனதுக்குள் புன்னகைத்துக் கொண்ட நந்தசிரி இனிமேல் நமக்கு நல்ல காலம் தான் என்று சந்தோஷப்பட்டான்.

"நல்லது சேர்...., சேர் எப்ப வேனும்னாலும் சொல்லுங்க எந்த நேரத்திலும் எந்த உதவியும் செய்ய இந்த நந்தசிரி தயாரா இருப்பான். சேர் போன்றவர்களுக்கு உதவாட்டி வேறு யாருக்கு சேர் உதவ முடியும்?"

நந்தசிரி மகிழ்ச்சியில் மளமளவென்று கூறினான். அவன் வார்த்தைக்கு வார்த்தை சேர்... சேர் என்று கூறியது கோமாளித்தனமாக இருந்தது.

"சரி... நந்தசிரி, வேலையை நன்றாகப் பார்த்துக்கொள் சிங்களவர்களிடம் சண்டை போடுகிறது நல்லதல்ல. அது போல தமிழன்களிடமும் கரச்சலுக்கு போகாத. பொலிசுக்குப் போனால் பொலிஸ்காரன் தமிழன் பக்கம்தான் சப்போட் பண்ணுவான் சரியா?"

"சரி சேர்.... அதெல்லாம் எனக்குத் தெரியும் சேர். எனக்கு தமிழன் சிங்களவன் என்றெல்லாம் பிரிச்சுப் பார்க்கத்தெரியாது சேர். எனக்கு எல்லாம் ஒன்றுதான். நாங்க எல்லாமே ஒரே மாதிரித்தான் துன்பப்படுகிற மனிதர்களாகத்தான் இருக்கிறோம். நான் யாருக்கும் எதிரி இல்ல சேர்" நந்தசிரி பெருமையுடன் கூறி விட்டு அப்பால் நகர்ந்தான்.

*****

தோட்டத்தில் வேலை நிறுத்தப்போராட்டம் இடம்பெறும்போது ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கலாம் எனக்கருதி பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டிருந்த இரண்டு பொலிஸ்காரர்களும் அங்கே அப்படி ஒன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்பான சம்பவங்கள் நேராததாலும் நிலைமை சுமுகமாக இருந்ததாலும் திருப்பி அழைக்கப்பட்டனர். கொழுந்து மலைகளில் கவ்வாத்து வெட்டுதல், முள்ளு குத்துதல், உரம் போடுதல், கானு வெட்டுதல் போன்ற கடினமான உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் பிற்பகல் ஒரு மணிக்கெல்லாம் வேலை முடிந்து திரும்புவது பல தோட்டங்களில் வழமையாக இருந்தது. ஆனால் இஸ்டோரில் வேலை செய்பவர்கள் மாலை ஐந்து மணிவரை வேலை செய்ய வேண்டும். சில வேளை மேலதிக வேலையும் செய்ய வேண்டியிருக்கும். கொழுந்து அதிகம் அறுவடையுள்ள காலங்களில் தங்குவாட்டம் செய்வதற்காக இரவிரவாக வேலை செய்வார்கள்.

இதனால் இத்தொழிலாளர்கள் உணவு வேளைகளில் வீட்டுக்கு சென்றுவர அனுமதிக்கப்படுவார்கள். நந்தசிரி தனக்கு கிடைத்துள்ள அருஞ்சந்தர்ப்பத்தினை நழுவவிட விரும்பாமல் பன்னிரண்டு மணி சங்கு ஊதுறதுக்கு முன்னாலேயே பெரிய டீ மேக்கரை சந்திக்கச் சென்றான்.

டீ மேக்கரின் அலுவலக வாயிலுக்குச் சென்று தலையை நீட்டி மெதுவாகக் கனைத்தான். கனைப்புச் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த பெரிய டீ மேக்கர் வா நந்தசிரி மத்த நாள்யும் இந்த நேரத்துக்குத்தான் சாப்பிட போவியா? பரவாயில்லை, இனி நீ என்னோட ஆள். விரும்பின நேரத்துக்கு போகலாம் வரலாம். நீ இல்லாட்டியும் செக்ரோல்ல பேர் போட சொல்றேன்" டீ மேக்கர் சிரித்துக்கொண்டே நந்தசிரியைப்பார்த்து கூறினார்.

"அது இல்ல சேர், நான் வந்து.." நந்தசிரி தான் சொல்ல வந்ததை சொல்ல முடியாது குழைந்தான்.

"ஆ.. சரி சரி தேத்தூள் கொஞ்சம் தாரேன்னு சொன்னேன். இரு எடுத்துத்தாரேன்" டீ மேக்கர் சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தார். ஆனால் காரியாலயத்தில் யாரும் இருக்கவில்லை. எல்லோரும் சாப்பாட்டுக்காக வெளியே போயிருந்தார்கள்.

டீ மேக்கர் தனது பெரிய மேசை லாச்சி ஒன்றைத்திறந்து அதில் இருந்து பார்சல் ஒன்றை எடுத்தார். அந்தப் பார்சல் நன்கு ஒட்டிக்கட்டப்பட்டிருந்தது. இரண்டு ராத்தல் தேயிலையாவது இருக்குமென்று நந்தசிரிக்கு தோன்றியது.

டீ மேக்கர் பார்சலை நந்தசிரியிடம் கொடுத்தார். "கேட்டுக்கு வெளியில் போகும்போது கேட்டால் பெரிய டீ மேக்கர் ஐயா சின்னவர் பங்களாவில் கொடுக்கும்படி கொடுத்து விட்டார் என்று சொல்லு" என்று கூறினார்.

பார்சலை பெற்றுக்கொண்ட நந்தசிரி "கையில் காசு இல்லாத நேரம் நீங்கள் செய்வது பெரிய உதவி சேர்" என்றான். கருணாரத்னவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மேல் மேலும் அனுதாபம் ஏற்பட்டது. அவனது நேர்மை அவர் மனதில் ஈரம் சுரக்கச் செய்தது. அவர் தனது காற்சட்டைப் பையில் இருந்து ஐம்பது ரூபா தாள் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டி "இந்தா இதையும் வைத்துக்கொள் செலவுக்கு" என்றார்.

அது ஒரு புதிய தாள். பழைய ஐம்பது ரூபா தாளுக்கு பதிலாக அண்மையில் புழக்கத்துக்கு வந்திருந்தது. அதனை நந்தசிரி ஒரே ஒரு தடவைதான் பார்த்திருந்தான். அதனை நந்தசிரி மிகுந்த பயபக்தியுடன் பெற்று தன் கண்களில் ஒற்றிக்கொண்டான். அவன் கண்களிலும் சந்தோஷ நீர் கசிந்திருந்தது. அவன் அவரிடம் விடை பெற்று தான் வந்த திசையில் நடந்தான்.

*****

என்றபோதும் நந்தசிரி நண்பர்களுக்கு உறுதியளித்தபடி தொடர்ந்து இஸ்டோரில் வேலை போட்டுக்கொடுக்கும் ஏற்பாட்டை பல காரணங்களால் செய்ய முடியாமல் போய்விட்டது. அது தொடர்பில் அவர்கள் அதிருப்தி தெரிவித்தார்கள்.

"டேய் நந்தசிரி நீ என்ன பெரிய ஆள் மாதிரி மார்தட்டின. ஒரு நாள் தான் ஸ்டோரில வேலைக்கு போட்டாங்க அவ்வளவுதானா?"

அவர்கள் மலையில் புல்வெட்டி விட்டு தேத்தண்ணி குடிக்க ஓரமாக சென்று அமர்ந்தபோது ஆரியவங்ச ஆதங்கப்பட்டான். ட்ரொலியில் மோத யதால் தனக்கு இன்னமும் கால் வலிப்பதாகக் கூறி அடிபட்ட இடத்தைத் தொட்டுக்காட்டினான். கோபாலும் ஆரியவங்சவின் பேச்சை ஆமோதித்தான். நந்தசிரி அவர்களின் பேச்சைக்கேட்டவாறே காதில் செருகியிருந்த பீடியை உருவி உதடுகளில் பொருத்தி விட்டு தீப்பெட்டியை எடுத்தான். பின் பீடியை பற்ற வைத்து ஆழமாக இரண்டு தடவை உறிஞ்சி அடர்த்தியான புகையை வானத்தில் ஊதினான்.

"நண்பர்களே! வழுக்குற மரத்தில மெது மெதுவாகத்தான் ஏறனும். கொஞ்சம் பொறுத்திருங்க. அன்னைக்கு ஒரே நாள்ல மூன்று றாத்தல் தேத்தூள், ஒரு ஐம்பது ரூபா புது நோட்டு எல்லாம் கெடச்சதுல்ல. பொறுத்தார் பூமியாள்வார் என்பது பொய்யாகி விடக்கூடாது..."

"அதெல்லாம் நல்லாத்தான் பேசுற... இன்னைக்கு இங்கே மலை யில வெயில்ல காஞ்சி கெடக்க வேண்டியதுதான். டவுன்ல புதுப்படம் போட்டிருக்கான். அந்திக்காவது போற வழியைப் பாக்க வேணாமா?" கோபால் சலித்துக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குன்னா சந்தேகம் ஒன்னு இருக்கு. கண்டாக்கு எதுக்கு நம்ம ஐஞ்சு பேர மாத்திரம் இந்த ஒன்றுக்கும் ஒதவாத பழைய மலைல புல்லு வெட்ட போடணும். இதுல ஏதோ ரகசியம் இருக்கு கொஞ்சம் பொறு நான் கண்டு பிடிக்கிறேன்."

என்று கூறியவாறே நந்தசிரி அங்கிருந்த உயரமான பாறாங்கல் மீது ஏறினான். அதில் இருந்து பார்த்தால் அங்கே சுற்றுவட்டாரத்தில் நடப்பதெல்லாவற்றையும் துல்லியமாக பார்வையிட முடியும். முதலில் அவன் கண்ணில் பட்டது டிரக்டர் ஒன்று. அவர்கள் வேலை செய்த மலையை நோக்கி தூரத்தில் வந்து கொண்டிருந்தது. அத்துடன் கண்டாக்கும் அவர் இருந்த திசை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

இதை எல்லாம் அவதானித்த நந்தசிரி பாறாங்கல்லில் இருந்து மகிழ்ச்சியுடன் குதித்து ஓடி வந்தான்.

"நான் நெனச்சது சரி கண்டாக்கு இந்தப்பக்கந்தான் வாறான். இன்னைக்கு அந்திக்கு நல்ல ஹோட்டலா பாத்து சாப்புட்டுட்டு ஷோ பார்க்க போக லாம். வெள்ளைக்காரன் தோட்டத்திலிருந்து போன பிறகு நம்ம கறுப்பு தொரைங்களுக்கு கொண்டாட்டந்தான்".

நந்தசிரி என்ன சொல்கிறான் என்று கோபாலுக்கோ அல்லது அங்கியிருந்த வேறு யாருக்கோ விளங்கவில்லை. அவன் கோபாலையும் ஆரியவங்சவையும் அருகில் வரும்படி அழைத்தான்.

"நமக்கு வாசி வர்ற மாதிரி வேல ஒன்னு கெடைக்கப்போகுது. அங்க பாரு தூரத்தில வாற அந்த டிரக்டர். அதுல யூரியா உர மூட்டைகள் அடுக்கியிருக்கு. அவற்றை இங்கே கொண்டு வருவார்கள். இங்கே போடுவதற்காக என்று ஏற்பாடு செய்திருந்தாலும் அதனை கீழ் றோட்டில் இறக்குவார்கள். இன்னுங் கொஞ்ச நேரத்தில் டவுனுக்குப் போற பால்வண்டி அந்தப் பக்கம் போகும். பால் வேன் எந்தெந்த நேரத்தில் போகும் வரும் என்றெல்லாம் யாரும் யோசிக்க மாட்டார்கள். ஆனா நாம யோசிக்கனும். இந்த நேரங்கெட்ட நேரத்தில் பால்வண்டி ஏன் வருது, போகுது, இந்தப் பாதையில் ஏன் நிக்குது?"

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அங்கிருந்த வேறு யாருக்கும் பதில் தெரியாதிருந்தாலும் நந்தசிரி அங்கே என்ன நடக்கப்போகின்றதென்பதை மிகத்தெளிவாக தெரிந்து வைத்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16



# யூரியா கடத்தல்

நந்தசிரியும் கோபாலும் நண்பர்களும் அத்தோட்டத்தில் ஆள் நட மாட்டமில்லாத பகுதியில் ஏதோ ஒரு நிழலான காரியம் நடக்க போகிறது என்பது தொடர் பில் பல கோணங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். உர மூட்டை களுக்கும் பால் கொண்டு போற வண்டிக்கும் என்ன சம்பந்தமென நந்தசிரி கேட்டபோது ஆரியவங்சவே முதலில் வாயைத் திறந்தான்.

"பால் வண்டி பால் சேகரிப்பதற்காக காலையில் ஒரு நேரமும் மாலை யில் ஒரு நேரமும் வரும் போகும். நடுவில் வருதுன்னா யார் வீட்டுக்காவது புண்ணாக்கு கொண்டு போகலாம்" ஆரியவங்ச தனக்குத் தெரிந்த தர்க்க சாஸ்திரத்தை விவரித்தான்.

"நீ பாதி அனுமானித்திருக்கிறாய் பரவாயில்லை மிச்சத்தை நானே சொல்றேன். புண்ணாக்கு வேறு யார் வீட்டுக்கும் போவாது. கன்டாக்கு வீட்டுக்குத்தான் போகும். அப்படின்னா திரும்பிப்போற வெத்து வண்டியில் எதை ஏத்துவாங்க...?"

நந்தசிரிக்கு அவனது பேச்சை முற்றிலும் முடிக்க முடியாமல் போய் விட்டது. அதற்குள் கன்டக்டர் அருகில் வந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்தசிரி, டீயெல்லாம் குடிச்சாச்சா?" அவர் அவர்களிடம் விசாரித்தார்.

"ஆமா சேர் இப்பத்தான் குடித்தோம்"

"அப்படீன்னா சரி... ஒரு சின்ன வேலை செய்யனும்."

நந்தசிரி சொன்னது சரி. டிரக்டர் வண்டி மலைக்குக் கீழே டவுனுக்குப் போகும் பாதையில் வந்து நின்றது. அதே சமயம் பால் ஏற்றி வரும் வேன் நேராகச் சென்று கண்டாக்கையாவின் மாட்டுப்பட்டி அருகே நின்றது. அங்கே புண்ணாக்கு மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு டவுனுக்குப் போகும்போது பாதையருகில் கிடக்கும் யூரியா உர மூட்டைகளை ஏற்றிக் கொண்டு டவுனுக்குச் சென்று விடும். இதுதான் ஏற்பாடு.

"நந்தசிரி நீங்க எல்லாம் போய் கீழே நிக்கிற டிரக்டரில் இருந்து உர மூட்டைகளை கீழே இறக்கி வைத்து விட்டு டிரக்டரில்லேயே போய்விடுங்கள். இன்றைக்கு உங்கள் வேலை முடிந்தது. இங்கே இறக்கப்பட்ட உரத்தை மலைக்குப் போட மூணாம் நம்பர் மலையில் இருந்து ஆட்கள் வருவார்கள். நீங்கள் யாரும் பெரிய தொர கண்ணில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். என்ன?"

நந்தசிரிக்கு தன்னையறியாமலேயே சிரிப்பு வந்து விட்டது. அவனது சிரிப்பு கன்டாக்குக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"ஐயோ சேர், உரம் போட ஆசையாக இருக்கு. அந்த வேலையை நாங்களே செஞ்சிர்ரம்" என்றான். அதே சிரிப்பு மாறாமல்.

"உரம் போடுற வேலைய யாராலும் செய்ய முடியாது. அதுக்கு நன்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அதுக்கு அனுபவமும் இருக்கனும். தேயிலை தூர்ல படாம போடனும். தூர்ல பட்டா மரம் செத்துரும். அப்படியானா தண்டப்பணம் செலுத்த வேண்டி வரும். இல்லாட்டி நாலஞ்சு மாசம் சம்பளம் இல்லாம வேலை செய்யனும்." சற்று நிறுத்திய கன்டாக்கு கீழே டிரக்டர் வந்து விட்டதா என்று பார்த்தார். டிரக்டர் அருகில் வந்து விட்டதை அவதானித்த அவர் நந்தசிரியையும் மற்றவர்களையும் அவசரப்படுத்தினார்.

"நந்தசிரி சுருக்கா போயி டிரக்டரில் இருந்து உர மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு நீங்களெல்லாம் போயி ஒங்க வேலைகளை பாருங்க சரியா?" என்று கூறி விட்டு கையிலிருந்து கம்பை சுழற்றிக்கொண்டு மலை உச்சியை நோக்கி ஏறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து செயற்பட்ட நந்தசிரி "எல்லாரும் வாங்கடா மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு போய் விடுவதுதான் இன்றைய வேலை. வாங்க வாங்க" என்று கூறி விட்டு டிரக்டரை நோக்கி விரைந்தான். கோபாலும் ஏனையோரும் பின்னால் சென்றனர்.

அந்த டிரக்டரில் யூரியா உர மூட்டைகள் பன்னிரண்டு இருந்தன.

நந்தசிரி கோபால் மற்றும் ஏனையவர்கள் இணைந்து அவற்றை றோட்டோரம் இறக்கி வைத்தனர். பின் அனைவரும் டிரக்டரில் ஏறிக்கொண்டனர். நந்தசிரி டிரக்டர் போகும் வழியில் தன்னை ஒத்தக் கடையருகில் இறக்கி விட்டுச் செல்லும்படி டிரக்டர் சாரதியை கேட்டுக் கொண்டான். அவர்கள் போய் விட்டார்களா என்பதை கண்டக்டர் மேலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்.

கண்டக்டர் பார்வையில் இருந்து டிரக்டர் மறைந்ததும் ஒத்தக் கடையருகில் வேகம் குறைந்தபோது நந்தசிரியும் கோபாலும் ஆரியவங்சவும் டிரக்டரில் இருந்து குதித்து இறங்கிக் கொண்டனர்.

"அநியாயம் தானடா இங்க இறங்கினது. டிரக்டரிலேயே லயம் வரைக்கும் போயிருக்கலாம்ல...." ஆரியவங்ச நந்தசிரியைக் கண்டித்தான்.

"அடே சும்மா இருந்தா வேலைக்கு ஆகாது. ஓடுங்க உர மூட்டைகளை இறக்கி வைத்த இடத்துக்கு. கண்டக்டரின் கண்ல படக்கூடாது. தலையை குனிஞ்சிக்கிட்டு தேயிலைச் செடிகளுக்குள் பணிந்து நெத்திக்கானு நெடுக போய் மேல ஏறனும்" நந்தசிரி பணிப்புரை வழங்கினான்.

"ஒனக்கு பைத்தியமா என்ன எழவுடா சொல்லுற..." கோபால் கேட்டான்.

"இந்தா பார் அந்த யூரியா மூட்டைகள் பன்னிரண்டும் தேயிலைக்கு போட கொண்டு வரல. இப்போ பால் கொண்டு போற வேன் வரும். அதுல ஏத்தப்பட்டு டவுனுக்குப் போகும். சல்லி கன்டாக்குக்கு வந்து சேரும். நாம அதுல ஒரு மூட்டைய எடுத்துக்குவோம்". நந்தசிரி விளக்கினான்.

ஆனால் கோபாலுக்கு அது சரியாகப்படவில்லை. அவன் நந்தசிரியைப் பார்த்துக் கூறினான் "கன்டக்டர் பொல்லாத ஆளு அவன் விடயத்தில நாம் தலையிடுறது நல்லதில்ல. பிறகு நாம பொலிஸ் கூட்டுல இருக்க வேண்டி வரும்" கோபால் எச்சரித்தான்.

"நாம செய்யிற வேல கன்டாக்குக்குத் தெரிய வரப்போறதில்ல. ஒரு மூட்ட கொறையிறதால ஒன்னும் கெட்டுப்போகாது. வாதம் பண்ணாம வா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிய நந்தசிரி வங்கிப் பக்கம் தேயிலை புதருக்குள் நுழைந்தான். ஏனையோ ரும் அவனைப் பின்தொடர்ந்தனர். அவர்கள் நெத்திக்கானை அடைந்து அதனூடாகச் சென்று யார் கண்ணிலும் படாமல் உர மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்றனர். நந்தசிரி சுற்று முற்றும் யாரும் இருக்கிறார்களா எனப் பார்த்து மிக விரைந்து உர மூட்டையொன்றை காதைப்பிடித்து இழுத்து வந்து கானுக்குள் போட்டான். பின் இழுத்து வந்த தடம் தெரியாம இருக்க காய்ந்த இலை சருகுகளை போட்டு மூடினான்.

பின்னர் மூவருமாக மூட்டையைத்தூக்கி வந்து ஒத்தக்கடைக்கருகில் ஆழமான கான் போக்கு ஒன்றுக்குள் மறைத்து வைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17



## திருடனைக்கொட்டிய தேள்

நந்தசிரியை தவிர கோபாலும் ஆரியவங்சவும் பதற்றமாகத்தான் இருந்தார்கள். அவர்களால் நந்தசிரியின் திட்டத்தை முழுமையாக நம்ப முடியவில்லை. யூரியா மூட்டை ஒன்று குறைவது தொடர்பில் கன்டாக்கு சந்தேகப்பட்டால் அவரது கவனம் முதலில் அவர்கள் மீதே விழும் என்று கோபால் அச்சமடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நந்தசிரி கன்டக்டரின் திட்டத்தை அருகில் இருந்து பார்த்தவன் போல் அச்சொட்டாக அறிந்து வைத்திருந்தான்.

"சரி வேலை முடிந்து விட்டது. இனி மேல்தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். யார் கண்ணிலும் படாமல் நாம் கடைப்பக்கம் போய்விட வேண்டும்." நந்தசிரி சுற்றும் முற்றும் பரிசோதித்து விட்டு கானு போக்குக்குள் இருந்து வெளியே வந்த பூனையைப்போல் அவ்விடத்தில் இருந்து அகன்றான். அவனைத் தொடர்ந்து கோபாலும் ஆரியவங்சவும் வெளியேறினார்கள். அவர்கள் மூவரும் ஒன்றும் நடைபெறாதது போல் ஒத்தக் கடைப்பக்கம் சென்றார்கள்.

செல்லும் வழியில் நந்தசிரியை நம்ப முடியாத ஆரியவங்ச மீண்டும் சந்தேகமொன்றை எழுப்பினான்.

"உண்மையில் அந்த உர மூட்டைகளை மூனாம் நம்பர் மலைக்குப் போடுவதற்குதான் கொண்டு வந்திருந்தால் நாம் மாட்டிக்கொள்ள மாட்டோமா?"

நந்தசிரி மீண்டும் தன் நையாண்டிப் புன்னகையை உதிர்ந்தான்.

"ஆரி உனக்கு இன்னமும் கன்டாக்கின் திட்டத்தை புரிந்து கொள்ள முடியவில்லையா? வா உனக்கு என்ன நடக்கிறது என்று காட்டுகிறேன்..."

மூவரும் ஒத்தக்கடை வங்கியைத் தாண்டி அப்பால் வந்தபோது மூனாம் நம்பர் மலை தெளிவாக அவர்களுக்குத் தெரிந்தது. அங்கே அவர்கள் உர மூட்டைகளை டிரக்டரில் இருந்து இறக்கி வைத்த இடத்தில் இப்போது பால் வேன் நின்றிருந்தது. ஒருவன் வேன் பளுதாகியிருக்கிறது என்று காட்ட முன்பகுதியின் பொனட்டை திறந்து உள்ளே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அதனை சுட்டிக்காட்டிய நந்தசிரி "பார்த்தீங்களா? இப்போது அரைவாசி மூட்டைகள் வேன் பின்பக்கத்தில் ஏற்றப்பட்டிருக்கும். இப்பவும் ஐஞ்சாம் நம்பர் மலையில ஒரம் போடுறவங்க இந்தப் பக்கம் வர்ரதா தெரியல. ஒனக்கு உண்மை தெரியனும்னா வேன் போன பிறகு அங்கே போய் பார். ஒர மூட்டையில் ஒன்னாவது மிஞ்சியிருந்தால் நான் காதவெட்டிக்கிறேன்...."

நந்தசிரி தன் அனுமானம் நூற்றுக்கு நூறு சரியா இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அவன் சொன்ன அத்தனையும் அங்கே உள்ளது உள்ளபடி நடந்து கொண்டிருந்தன. ஏதும் மாற்றம் நிகழ்ந்ததென்றால் அவர்கள் ஒரு யூரியா மூட்டையை எடுத்து ஒளித்து வைத்தது மட்டும்தான். சில நிமிடங்களிலேயே அந்த வேன் எல்லா யூரியா மூட்டைகளையும் ஏற்றிக்கொண்டு தோட்டத்தின் பிரதான நுழைவாயிலை நோக்கி புகை கக்கிக்கொண்டு சென்றது.

அது ஏதோ இழுக்க முடியாத சுமையை இழுத்துக் கொண்டு செல்வதுபோல் ஊர்ந்து சென்றது. வெற்று பால் கொள்கலன்களையும் தட்டு முட்டுக்களையும் கொண்டு செல்லும் பால்வேன் என்ன அப்படி பாரத்தை முனகிக் கொண்டு இழுத்துப் போகிறது என்று தெரிந்து வைத்திருந்தவர்கள் அத்தோட்டத்தில் சிலர் மாத்திரமே இருந்தனர். அவர்களில் நந்தசிரி, கோபால், ஆரியவங்ச ஆகிய அந்த மூன்று இளந்தொழிலாளிகளும் அடங்குவர்.

அடுத்த நாள் ஏனையோருடன் சேர்ந்து பாதை சுத்தப்படுத்தும் பணியில் கோபால், நந்தசிரி, ஆரி ஆகியோர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது வீரய்யா என்ற தொழிலாளி நந்தசிரியிடம் வந்து "கன்டாக்கையா கூப்பிடுவதாக கூறினான். அதனை அவதானித்த ஆரியவங்ச திடுக்கிட்டு நேற்று செய்த வேலை மாட்டிக்கிச்சா" என்று உதறலெடுத்துக் கூறினான்.

"நீங்க ரெண்டு பேரும் வாய் திறக்காதீங்க. அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்" என்று கூறிய நந்தசிரி கன்டாக்கு இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

"என்ன சேர், கூப்பிட்டீங்களா சேர்"

"ஆமா, இங்கே கொஞ்சம் வா" என்று கூறிய கன்டாக்கு அவனை சற்றே ஒதுக்குப் புறமாகக் கூட்டிச் சென்றார். கன்டக்டர் என்ன கேட்கப்போகின்றார் என அனுமானித்து அதற்கான பதிலையும் தயார் செய்து கொண்டு வந்திருந்தான் நந்தசிரி. கன்டக்டர் மெதுவாக அவன் தோள் மேல் கைபோட்டு

"நேத்து டிரக்டரில் இருந்து எத்தனை உர மூட்டைகளை இறக்குனீர்கள்" என்று அவன் காதுக்குள் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிறி மனதுக்குள் சிரித்துக் கொண்டே ஏதோ சிந்திப்பவன் போல் பாவனை பண்ணினான். தன் இரண்டு கரங்களையும் மேலே தூக்கி விரல்களை மடக்கிக் கணக்குப் போட்டு முணு முணுத்தான். பின் ஒரு முடிவுக்கு வந்தவனாக "பன்னண்டு மூட்டைகள் இறக்கினோம் சேர். அதில் அவ்வளவுதான் இருந்தது. டிரைவர் குலரத்ன கிட்டயேயும் சொன்னேன். வேனும்னா என்னோட இருந்த மத்தவங்ககிட்டயும் கேட்டுப் பாக்கலாம். ஏன் சேர் கொழுந்து பறிக்க முடியாத அந்த தேயிலைகளுக்கும் உரம் போட்டா கொழுந்து முளைக்குமா சேர்" என்று அப்பாவித்தனமாக நடித்தான் நந்தசிறி.

"ஆமா நந்தசிறி, உரம் போட்டா கொழுந்து முளைக்கும் அதற்காகத்தானே அங்கே உரம் போடச் சொன்னேன். அது இல்ல பிரச்சினை. கணக்குப்பிள்ள சொல்றார் பதினொரு மூட்டைகள்தான் இருந்ததுன்னு"

"எந்த கணக்குப்பிள்ளை சேர் அப்படி சொன்னது. நான் கேக்குறன். உர மூட்டையை பொக்கட்டுக்க போட்டுக்கிட்டா போகா முடியும். நூறு ராத்தலை விட அதிகமிருக்குமே. இல்லாட்டி நாங்க வீட்டுக்கு கொண்டு போய்ட்டம்னு நெனச்சீங்களா? நாங்க ஒர மூட்டைங்கள எல்லாம் எறக்கிட்டு அதே டிரக்டர்ல ஏறி ஒத்தக் கடைக்கிட்ட எறங்கி போய்ட்டம் சேர்"

நந்தசிறி வேண்டுமென்றே கோபம் வந்தவனைப்போல் காலையும் கையையும் ஆட்டி நடித்துப் பேசினான்.

"சரி.. சரி.. சத்தம் போடாத நந்தசிறி. நான் நீதான் எடுத்தாய் என்று சொல்லவில்லையே. என்ன நடந்துச்சின்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். கணக்குப்பிள்ளை பொய் சொல்றவன் இல்லையே"

கண்டக்டர் சுற்றும் முற்றும் பார்த்து திருட்டு வேலை செய்து பிடிபட்டவர் போல் முழித்தார். அவரது நிலையை மேலும் தர்மசங்கடமாக்குவதற்கு இன்னொன்றையும் எடுத்து விட்டான் நந்தசிறி.

"அப்படின்னா நான் பொய் சொல்றேன்னு நினைக்கிறீங்களா சேர். சேருக்கு சந்தேகம் இருந்தா என்னை பொலிசுல புடிச்சு கொடுங்க. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கு சேர்."

"ஒனக்கு என்ன சந்தேகம் நந்தசிறி, சொல்லு" என்றார் கண்டக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் இவர்கள் பேச்சில் ஆர்வம் காட்டவில்லை என்றாலும் கோபாலும் ஆரியும் மட்டுமே கள்ளத்தனமாக இவர்களை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கு அதனை நிச்சயமாக இப்போது சொல்ல முடியாது சேர். சில நேரம் அது உங்களுக்கும் பிரச்சினையை உண்டு பண்ணலாம். அதனால இந்த கேஸ பெரியதுரை விசாரிக்கும்போது சொல்றேன்"

நந்தசிரி தன்னிடம் ஒரு முக்கிய இரகசிய தகவல் இருப்பது போல் பொடி வைத்துப் பேசினான். அதனைக் கேட்டதும் கண்டக்டரின் மனதில் சற்றே பய உணர்வு ஏற்பட்டது. நந்தசிரி தன்னிடம் இருந்து எதையோ மறைக்கப்பாக்கிறான் என்று நினைத்தார். நந்தசிரி ஒரு கைதேர்ந்த நடிகனுக்கு ஒப்பாக நடித்துக் கொண்டிருக்கிறான் என்று அவர் கொஞ்சமும் சந்தேகிக்கவில்லை.

"பெரியதுரையின் காதுக்கு இந்த விடயம் எட்டக்கூடாது என்பதனால் தான் உன்னிடம் நான் விசாரிக்கின்றேன். உனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நீ தாராளமாக என்னிடம் சொல்லலாம்."

கண்டக்டர் அவ்விதம் வினவிய போது நந்தசிரி மேலும் தயங்கி பயப்படுவது போல் நடித்தான். பின் மெதுவாக தன் சந்தேகத்தைத் தெரிவித்தான்.

"அது வேறு ஒன்னும் இல்ல சேர். நாங்க ஓர மூட்டைகளை இறக்கி வச்சிட்டு ஒத்தக்கடைக் கிட்ட போய்க்கிட்டிருக்கும்போது பால் கொண்டு போற வேன் அந்த இடத்துக்கு வந்ததை பார்த்தோம். அது கொஞ்சநேரம் அந்த இடத்தில் நிற்பாட்டப்பட்டிருந்தது. சில நேரம் அந்த வேனில் இருந்த யாரோ ஏத்திக்கிட்டுப் போயிருந்தாலும் இருக்கலாம். நான் இப்படி சொல்றது ஒங்களுக்கும் சரியில்லைதானே சேர். ஏன்னா பால் வேன் புண்ணாக்கு கொண்டு வந்தது சேரோட மாட்டுப்பட்டிக்கு என்பதால"

நந்தசிரி குரலை இழுத்து இழுத்து வாழைப்பழத்தில் ஊசியை இறக்குவது போல் மிகப் பதமாக விசயத்தை கண்டக்டரின் காதுக்குள் இறக்கினான். இதைக் கேட்டதும் கண்டக்டருக்கு திருடனுக்கு தேள் கொட்டியது போல் இருந்தது. நந்தசிரி என்ற இந்த இளைஞன் ஏனைய தொழிலாளர்களை போல் இட்ட கட்டளையை தலை மேற்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரியும் ஒருவன் அல்ல என்பதனை அவர் புரிந்து கொண்டார். நடந்தது என்னவென்று நந்தசிரிக்கு தெரியாது என்ற போதும் தோட்டத்தில் கள்ளத்தனத்தில் ஈடுபடும்போது இத்தகையவர்களிடம் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்று அவரது உள்மனம் எச்சரித்தது. அதன் பின் அவர் தெரிவித்த விடயம் அவர் கப்சிப்பென்று அடங்கிப்போய்விட்டார் என்பதை நந்தசிரிக்கு பறை சாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருடர்களும் களவாளிகளும்

நந்தசிரியின் நடத்தை அவன் கூறிய வார்த்தைகள் என்பன கண்டக்டரின் மனதைப் பெரிதும் பாதித்தன. அவர் இந்த விடயம் பெரியதுரையின் காதுக்கு எட்டி விடக்கூடாதென்பதில் மிகக்கவனமாக இருந்தார். அவர் நந்தசிரி சொல்லியவற்றையெல்லாம் ஆமோதித்தார்.

"ஆமா நந்தசிரி. நீ சொல்வதுதான் சரியா இருக்க வேணும். எனது மாட்டுப் பட்டிக்கு புண்ணாக்கு கொண்டு வந்தவர்களே இதனை செய்திருப்பதால் என்னால் அவர்களை ஒன்னும் பண்ண முடியாதென்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும். எதற்கும் நான் பால் வேன் சொந்தக்காரரிடம் பேசிப் பார்க்கிறேன். நீ இதனை இத்தோடு மறந்து விடு. யாரிடமும் இது பற்றி பேச வேண்டாம். அது எல்லோருக்கும் நல்லது. பிறகு பொலிஸ் கிலிஸ்சுன்னு அலையனும்."

நந்தசிரி மீண்டும் மனசுக்குள் நினைத்துப் பார்த்தான். கண்டக்டர் முழுப் பூசணிக்காயையும் சோத்துக்குள் மறைக்கிறார் என்பது தெட்டத் தெளிவாக விளங்கியது. அவரது இந்த தர்ம சங்கடமான நிலையை வைத்து உச்ச பலனை அடைந்து விட வேண்டும் என்று அவன் நினைத்தான்.

தோட்டத்தில் உரக் களவு தொடர்பில் நன்கு தெரிந்து வைத்திருந்த போதும் தனக்கு ஒன்றுமே தெரியாது என்பதுபோல் நடித்தும் பாசாங்கு செய்தும் கண்டக்டரை தன் வலைக்குள் வீழ்த்தினான் நந்தசிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டக்டரும் முற்றாக அவன் வலைக்குள் சிக்கி விட்டதுடன் மேலும் அவனிடம் விசாரிக்கப் போய் தன் குட்டு வெளிவரக் கூடுமென்றும் நந்தசிரி என்ற இளைஞனிடம் கவனமாக நடந்து கொண்டு அவனை தன்பக்கம் வளைத்துக் கொள்ள வேண்டுமென்றும் உள்ளூர சிந்தித்தார்.

அவன் கண்டக்டரை மேலும் பயமுறுத்த எண்ணி "ஒன்னுக்கும் பயப்படாதீங்க சேர். நாம் பொலிஸ"க்குப் போவம் சேர். நான் அவனுகளை மாட்டி விடற மாதிரி அச்சுப் பிசகாம வாக்கு மூலம் கொடுக்குறன் சேர்" என்றான். மீண்டும் சண்டித்தனமாக காலைக் கையை வீசிக்கெண்டே.

"சரி சரி நந்தசிரி. பொலிஸ"க்கெல்லாம் போகத் தேவையில்லை. எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். நீ போய் வேலையை செய்" கண்டக்டர் அவனை அதற்கு மேல் அங்கு வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தார்.

"நல்லது சேர். மலையில வேலை செய்ய கஷ்டமாக இருக்கு சேர். ஸ்டோர்ல போட முடியாதா சேர்?" நந்தசிரி மீண்டும் வாழைப்பழத்தில் ஊசியை ஆழ செருகினான்.

"சரி... சரி... பிறகு அத செஞ்சுத் தாறன்" என்று கூறிய கண்டக்டர் சற்றே சிந்தித்தார். இவர்களை பெக்டரியில வேலைக்குப் போட்டா டீ மேக்கர் தன் வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வான். அதனால் அவர்களை பெக்டரியில் போடாம வீட்டுத் தோட்டத்துல போட்டா உள்ளங் கையிலயே வச்சுக்கலாம்" என்று கண்டக்டர் யோசித்தார்.

அதுவரை அங்கேயே தலையை சொறிந்து கொண்டு நின்றிருந்த நந்தசிரியை மீண்டும் அழைத்த கண்டக்டர் "நந்தசிரி இங்கே வா" என்று அழைத்து அவனி டம் "போன வாரம் நீயும் உனது நண்பர்களும் எனது பங்களாவில் மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்தீர்கள் என்பது எனக்கு ஞாபகமிருக்கின்றது. நீங்கள் தொடர்ந்தும் அங்கேயே போய் வேலை செய்யுங்கள். அது கஷ்டமான வேலை இல்லை. பகல் சாப்பாடும் கிடைக்கும். காலையில் பெரட்டுக் களத்துக்கும் வரத்தேவையில்லை. ஆனால் இந்த விடயம் யாருக்கும் தெரியக் கூடாது. என்ன? ஆனா ஒழுங்கா வேலை செய்யனும். இடையில ரெண்டொரு நாள் தோட்டத்து மலையிலயும் வேல செய்யனும். சரிதானே? பெறகு பெறகு ஸ்டோருல போட்டுத் தாறன்?"

அவர்களை தன் பக்கம் வளைத்து விட வேண்டும் என்பதற்கான முதல் வேலையை கண்டக்டர் ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது சேர். எங்களுக்கு விருப்பம் சேர். நாளையில இருந்து வரலாமா சேர்...?"

"நாளைக்கு வேணாம். அடுத்த நாள்ல இருந்து வாங்க. நாளைக்கும் இந்த ரோட்டு போடுற வேலையை இந்த ஆட்களைக் கொண்டே முடிக்கிறதுக்கு எஸ்டிமேட் போட்டிருக்கு. அதனால நாளைக்கு இந்த வேலைய முடிச்சி கொடுத்திருங்க"

"நல்லது சேர். ரொம்ப நன்றி சேர். எந்த நேரத்திலயும் கூப்பிடுங்க சேர். நானும் கோபாலும் ஆரியும் ரெடியா இருக்கோம்." நந்தசிரி மிகப் பணிவான சேவையாளன் போல் வளைந்து நெளிந்து கூறினான்.

அவனுக்கு கோட்டையைக் கைப்பற்றி விட்டது போல் சந்தோசமாக இருந்தது. அவன் தன் கைகள் இரண்டையும் மேலே உயர்த்திக் கொண்டு ஆகாயத்தில் இருந்து பறந்து வருபவன் போல் துள்ளிக் குதித்துக் கொண்டு தன் நண்பர்களைப் பார்க்கச் சென்றான். இரண்டு விரல்களை வாய்க்குள் செலுத்தி நாக்கை மடித்து அந்த மலைப் பிரதேசமே அதிருமாப்போல் பலத்து விசில் அடிக்க வேண்டும் போல் மேலெழுந்த அவன் ஆசையை தம்பிடித்து அடக்கிக் கொண்டான்.

"மச்சான் கோபால். ஆரி எல்லா பிரச்சினையும் தீந்திருச்சி. ஒர மூட்டை கதையைப் பற்றி இனி யாரும் பேசப் போவதில்லை. இன்னைக்கு அந்திக்கு அதனை சொக்கலிங்கம் கடைக்கு கொண்டு போவோம். அவன் கிட்ட இருக்கிற கடனையும் அடைச்சிட்டு கையிலயும் ஏதாவது வாங்கிக்கலாம். இல்லாட்டி இரவுக்கு பீடி குடிக்கக் கூட அரைக் காசு கையில இல்ல"

நந்தசிரி தன் சாதனையைப் பறை சாற்றிக் குறிப்பிட்டான்.

"நந்தசிரி எந்த நாளும் நம்ம இந்த மாதிரி வேலைகளத்தான் செஞ்சிக்கிட்டிருக்கோம். நிரந்தரமா ஏதாவது மேலதிகமா வருமானம் வர்ர மாதிரி ஏதும் செய்யனும். மரக்கறி விவசாயம் செய்ய கொஞ்சம் எடம் கெடச்சா நல்லது. நுவரெலியாவுல மரக்கறி தோட்டத்திலயும் நா வேலை செஞ்சுருக்கேன் மரக்கறித் தோட்டம் கெழங்கு தோட்டம்னு ஏதாவது செய்யலாம்" ஆரியவங்ச தன் பல்லவியைப் பாடினான்.

"அதெல்லாம் தேவையில்லை. கோபாலுக்கு டிரம் நல்லா வாசிக்க முடியும். நமக்கு நல்லா பாட முடியும். நாம் ஒரு இசைக்குழு ஒன்று அமைப்போம். நம்ம தோட்டத்திலயும் மத்த தோட்டங்களிலேயும் கல்யாண வீடுகளில் காசு வாங்கிக் கிட்டு கச்சேரி செய்வோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பல்லாம் எல்லா தோட்டங்களிலேயும் அவுங்கவுங்க டிரம் செட் எக்கோடியன் எல்லாம் வச்சிருக்காங்க. யொக்ஸ் போட் தோட்டத்தில் எக்கோடியன் ஒன்று இருக்கு" கோபால் கூறினான்.

அவர்கள் அன்றைய பொழுதை வெட்டிப் பேச்சு பேசியே கழித்தனர்.

கானு போக்குக்கு அடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த உர மூட்டையை அன்று அந்திக் கருக்கலுக்குப் பிறகு கோபால், நந்தசிரி, ஆரி ஆகிய மூவரும் டவுனில் இருந்த சொக்கலிங்கம் கடைக்கு எடுத்துச் செல்லத் திட்டமிட்டனர். அதன்படி கோ பாலும் ஆரியும் சற்று முன்னால் சென்று யாரும் வருகிறார்களா என்று ஒத்துப் பார்க்க நந்தசிரி மூட்டையை தன் தோளின் மேல் வைத்து தூக்கிச் சென்றான்.

கடைக்கார சொக்கலிங்கத்துக்கு அந்த மூட்டை களவாடிக் கொண்டு வரப்பட்டது என்பது நன்கு தெரியும். அதனால் அவன் அதனை அடிமட்ட விலைக்குக் கேட்டான். ஒருவாறு அவனை கெஞ்சிக் கூத்தாடி அரைவாசிப் பணத்துக்கு சம்மதிக்க வைத்தான் நந்தசிரி. அதற்கு மேலதிகமாக பீடிக் கட்டு ஒன்றையும் சொக்கலிங்கத்தின் ஏச்சுப் பேச்சுக்கு மத்தியில் பெற்றுக் கொண்டான்.

"அண்ணே! இது ஒரு மூட்டை சாம்பிளுக்குத்தான். இன்னும் இருபது மூட்டை இருக்கு. நான் சின்ன ஒரு கணக்கை கொடுத்துட்டுத்தான் இதைக் கொண்டாந்தேன்" என்றான் நந்தசிரி தனக்கு வழங்கப்பட்ட தொகை பத்தாது என்பதைக் காட்ட

"போடா களவாணிப் பயலே. உன்னோட வேல எனக்கு நல்லா தெரியும். இதையெல்லாம் தெரியாமலா இந்த சந்தியில இத்தன வருசமா நான் கட வச்சிருக்கேன். நீ நேரடியா எனக்கிட்ட வந்ததாலதான் அந்த கணக்கு. இல்லாட்டி எனக்கெதுக்கு ஒர மூட்டையெல்லாம். எம்மச்சான் ஒரு மரக்கறி தோட்டம் வச்சிருக்காரு. அவருக்குத் தான் அது அன்பளிப்பா போய்ச் சேரும்"

சொக்கலிங்கம் நந்தசிரியை சமாளிப்பதற்காகக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆம்பலோ, குமுதமோ...
# அப்படி ஒரு மலர்ந்த முகம்

**சொ**க்கலிங்கம் என்ற அந்த கடை முதலாளி கைதேர்ந்த கள்ளக் கடைப் பெருச்சாளி என்பது நந்தசிரிக்கு நன்கு தெரிந்த விடயம்தான். இருந்தாலும் அத்தகையவர்களுக்கும் பலவீனம் இருக்குமென்பதும் நந்தசிரி புரிந்து வைத்திருந்தான். அவன் முதலாளியை மடக்க அடுத்த அஸ்திரத்தைப் பயன்படுத்தினான்.

"அந்தக் கதையெல்லாம் இங்க வேகாது. நீதான் சொன்ன என்ன சாமான் கொண்டு வந்தாலும் நீ வாங்கத் தயார்னு. ஒனக்கு விருப்பமில்லைனா திருப்பிக் கொடுத்துரு. ஜாபிர் பாய் கடையிலோ. சிவத்தம்பி கடையிலோ எனக்குக் கொடுக்க முடியும்"

நந்தசிரியும் விட்டுக்கொடுக்காமல் பேசினான். பின் காற்சட்டைப் பைக்குள் கையை நுழைத்து சொக்கலிங்கம் கொடுத்த காசை வெளியே எடுத்தான். இதைப் பார்த்ததும் சொக்கலிங்கத்துக்கு சுருக்கென்றது. ஒர மூட்டையை திருப்பி எடுத்துக்கிட்டு போயிடுவானோன்னு சந்தேகமும் ஏற்பட்டது. என்றாலும் அதனை வெளிக்காட்டாமல் அவன் முகத்தில் கபடப் புன்னகை ஒன்றை வரவழைத்துக் கொண்டான்.

"ஜாபிரும் சிவத்தம்பியும் எனக்குப் பிறகு கடை வச்ச சில்லறைப் பயல்கள். அவங்க ஒரு ராத்த ரெண்டு ராத்தல்னு வாங்குறவங்க. அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குல அவங்களால வாங்க முடியாது. சரி.. சரி... இப்போ போ.... அடுத்த முறை கொண்டு வந்தா கூட்டித்தாறேன்" என்று கூறிய சொக்கலிங்கம் பெட்டியைத் திறந்து மூன்று சிகரெட்டுக்களையும் பீடிக்கட்டொன்றையும் எடுத்து நீட்டினான்.

நந்தசிரி அவன் கொடுத்த சிகரெட்டுக்களை மறுக்கவில்லை. கிடைத்தது லாபம் என்று அதனையும் வாங்கிக்கொண்டு நண்பர்கள் இருந்த இடத்துக்கு வந்தான்.

"சொக்கலிங்கத்துக்கிட்ட காசு வாங்குவது ரொம்பக்கஸ்டம் அடி மாட்டு விலையை விட கொரச்சித்தான் கொடுப்பான். என்னால் கூடுமானவரை கொஞ்சம் அதிகமாக புடுங்க முடிஞ்சது. பீடிக்கட்டொன்றை பலாத்காரமாகத்தான் அவனிடமிருந்து கழட்ட முடிஞ்சது" என்றான் நந்தசிரி நண்பர்களிடம்.

"அவனைப் பத்தித்தான் தெரியுமே திருடன் கிட்டயே திருடுறவன். நாமலே திருடர்கள் நம்ம கிட்ட அவன் திருடுறான். பீடிக்கட்டை அவன் சும்மா கொடுத்திருக்கமாட்டான். ஒன் கணக்குல எழுதிப்புடுவான் பாரேன்" ஆரி தன் நண்பர்களைப் பார்த்து ஏளனத்துடன் கூறினான். கோபால் ஒன்றும் பேசவில்லை. இவர்கள் செய்யும் காரியங்களை நினைத்து தன்னையே நொந்து கொண்டான்.

அடுத்த சில நாட்களிலேயே மழைப்பருவம் வந்து விட்டது.

மழைப்பருவத்தில் தேயிலைத்தோட்ட வாழ்க்கை மிகவும் சகிக்க முடியாததாக இருக்கும். எல்லாவிடத்திலும் மச மச நச நசத் தன்மையொன்று காணப்படும். லயத்து காம்பராக்களின் புகையும் கரியும் படிந்த தகரக் கூரைத்தகடுகளில் விழும் கனத்த நீர்த்துளிகள் தகரங்களின் ஓட்டைகள் ஊடாக கசிந்து கபில நிற கறை களை சுவர்களில் ஏற்படுத்திக்கொண்டு வடியும்.

லயத்தைச் சுற்றி காணப்படுகின்ற எல்லா அழுக்குகளையும் அடித்துக் கொண்டு செல்லும் மழை நீரால் கான்கள் நிறைந்து பொங்கி தரையில் கால் வைக்க முடியாதபடி அசிங்கமும் அழுக்கும் நிறைந்திருக்கும். ஆனால் என்னதான் மழை வானத்தை கிழித்துக்கொண்டு கொட்டினாலும் தொழிலாளர்கள் வேலைக்கு போய்த்தான் ஆக வேண்டும். காரணம் அவர்கள் வேலைக்கு போனால்தான் அன்றைய நாளுக்கான சம்பளம் செக்ரோலில் விழும். மற்றும் கொழுந்து பறிக்கும் பெண்களைப் பொறுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் மழை நாட்களில் ஈரத்துக்கும் கழித்து அதிக எடை கொழுந்து பறிக்க வேண்டும்.

மழை பெய்த மாத்திரத்தில் தோட்டங்களில் நிலம் சேறும் சகதியுமாக மாறி விடும் என்பதால் நீரானது விரைந்து வழிந்தோடி வற்றி விடும் வகையில் கான் வலையமைப்பு திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

“விடியும் போதே மழ, இன்னிக்கு வேலைக்கு போன மாதிரித்தான்” அன்னம்மா அடுப்பை ஊதி ஊதி அழுத்துப் போய் மூச்சிளைத்தவாறு கூறினாள். மழைக்காலம் வந்து விட்டால் அடுப்பைப் பற்ற வைப்பது பகீரத பிரயத்தனமாகி விடும். விறகு ஈரம் பொசிந்து பதர்த்துப் போய்விடும். அன்னம்மாவின் காம்பராவில் மட்டுமல்லாது முழு லயமுமே புகை வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தது.

கோபாலும் காலையிலேயே எழுந்திருந்து அன்றைக்கு வேலைக்குப் போகத் தயாரானான். அன்னம்மா அவன் எடுத்துப் போவதற்காக ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தாள். காலையில் எதுவும் சாப்பிடாமல் சாயத் தேத்தண்ணியை குடித்து விட்டு வேலைக்கு செல்லும் தோட்டத்தொழிலாளர்கள் பத்து மணி யானதும் சற்று ஓய்வெடுக்கும்போது தான் தேநீருடன் காலைச்சாப்பாடு சாப்பிடுவார்கள். அநேகமாக அவர்கள் ரொட்டித் துண்டொன்றை கடித்துக்கொண்டு தேத்தண்ணி குடிப்பார்கள். அவர்களில் யாராவது ஒருவர் இருவர் லயங்களுக்கு சென்று போத்தல்களிலோ செம்புகளிலோ தேத்தண்ணி எடுத்து வருவார்கள்.

கோபாலும் அம்மா கொடுத்த ரொட்டியில் நடுவில் சம்பல் வைத்து இரண்டாக மடித்து கடதாசியில் சுற்றிக்கொண்டு சொரண்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அவன் புறப்படுவதை அவதானித்த அன்னம்மா..

“தம்பி கொஞ்ச நாளாவே மழை தூறிக்கிட்டே இருக்கு. வரக்கட்டெல்லாம் பாசாம் புடிச்சி வழுக்கும். வங்கி மேல ஏறும் போது கவனமாக பாத்து ஏறு” என்று எச்சரித்து வழியனுப்பினாள்.

ஆனால் கோபாலுக்கு அது ஒன்றும் பொருட்டல்ல. அவன் அந்தத் தோட்டத்தில் இருந்த எல்லா வழுக்குப் பாறைகளிலும் நண்பர்களுடன் சேர்ந்து உச்சி வரை ஏறி இறங்கி இருக்கின்றான். அவற்றில் ஏறுவதை போன்ற மகிழ்ச்சியான பொழுது போக்கு வேறொன்றும் அவர்களுக்கு இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அந்த மகிழ்ச்சிகரமான மலரும் நினைவலைகளை மீட்டு நெஞ்சில் இருத்தி சுவைத்து அசை போட்டுக்கொண்டே லயத்துக்கு அப்பால் செல்ல முற்பட்ட போது அவனது அண்ணன் மகன் வாண்டுப் பயல் அமரன் நனைந்து கொண்டே மழையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஏ...அமரன்...என்னடா மழையில இப்படி நனைஞ்சிக் கிட்டிருக்க" கோபால் அவனை அதட்டியபோது மருண்டு போன சின்னப்பயல் அமரன்,

"இல்ல மாமா.... கக்கா போட வந்தேன்" என்றான்.

"சரி சரி....அதப் போடறத வுட்டுட்டு ஏன் நனைஞ்சிக்கிட்டு திரியுற போ....போ வந்த வேலைய முடிச்சிட்டு டக்குனு போ..."

அமரன் அவனது வெருட்டலுக்குப் பயந்து வீட்டை நோக்கி ஓடினான். கோபால் கூட அப்படித்தான். பெரு மழை பெய்து கொண்டிருக்கும் நேரத்தில் கூட "கக்கா வருகிறது" என்று வீட்டில் கூறி விட்டு வெளியில் சென்று ரோட்டுல காட்ல மழையில நனைந்து கொண்டே கூத்தாடுவதென்றால் அதுவும் அவனது மனதுக்கு பிடித்த ஒரு செயல்தான். ஆனால் அவன் அப்படிச் செய்து விட்டு நனைந்து கொண்டு வீட்டுக்கு சென்ற போதெல்லாம் அவன் அப்பா ஏன்டா இப்படிச் செய்தாய் என்று ஒடித்து வைத்த தடித்த மிளாறு கட்டையால் நாளு சாத்து சாத்துவாரு...

அவன் இதனை நினைத்து தன்னையறியாமலேயே வாய்விட்டு சிரித்து விட்டான். அப்போது......


"கோபால்....அண்ணா...என்ன தனிமையில் சிரிச்சிக்கிட்டே நடந்து போறீங்க, பகல் கனவா?" அவன் காதுகளுக்கு மிக அருகில் ஒரு மெல்லிய இனிமையான பெண் குரல் கேட்டது.

அவன் உதடுகளில் இருந்து சிரிப்பு மறைந்து போய்விட அது யாரென்று அவன் அவசரமாகத் திரும்பி பார்த்தான்.

அவள் தலை முதல் பாதத்துக்கு சற்று மேல்வரை நீலநிற மழைக்கவச அங்கி அணிந்திருந்தாள். கையில் பூப்போட்ட குடை வேறு. பாடசாலை சீருடை அணிந்திருந்தாலும் பதினைந்து வயதில் அவள் முகம் பளிச்சென ஆம்பலோ, குமுதமோ அவனுக்குத் தெரியாது. அப்படி மலர்ந்திருந்தது.

கோபால் அவள் யாரென்பதை உடனேயே புரிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனசுக்குள் ஆயிரம் பூக்கள்

தன் காதருகில் உதடு வைத்து பேசியது போல் மிக அருகில் ஒலித்த அந்த இனிமையான பெண் குரலால் அதிர்ச்சியடைந்த கோபால் சட்டென அது யாராக இருக்கும் என்று திரும்பிப் பார்த்தான்.

அவள் அவனுக்கு பழக்கமானவள்தான். அதே தோட்டத்தில் வசிக்கும் கதிரேசனின் இளைய புத்திரி புஸ்பராணி. ஒரு வகையில் அவன் அம்மாவுக்கு உறவுக்காரி. கதிரேசன் தோட்டத்தொழிலாளியாக இருந்தாலும் மூன்று நான்கு பசு மாடுகளுக்கு சொந்தக்காரன். சொந்தமாக மாட்டுப்பட்டியமைத்து பால் வியாபாரம் செய்து வந்தான். சொந்தமாக மரக்கறி தோட்டமொன்றும் இருந்தது. அவனது மனைவி மலையில் கொழுந்து பறிக்கும் தொழிலாளியாக இருந்ததால் தோட்டத்தில் லயத்தில் வசிக்க அவர்களுக்கு தடையிருக்கவில்லை. அந்தக் குடும்பம் தோட்டத்தில் ஒரு வசதியான பணக்கார குடும்பமாகக் கருதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புஸ்பராணி........ நல்லாருக்கியா? என்னா இன்னைக்கு ஸ்கூலுக்கு லேட்டாகிப் போற..." கோபால் அவளுடன் பேச வேண்டும் என்பதற்காக கேட்டான்.

"இன்னைக்கி ஸ்கூல்ல விழா ஒன்னு வச்சிருக்காங்க அதுக்குத்தான் போய்க்கிட்டிருக்கேன்"

புஸ்பராணியின் தந்தை கதிரேசன் அந்த தோட்டத்திலேயே பண வசதி அதிகமுள்ள ஒருவனாக இருந்ததால் புஸ்பராணியை அவன் ஹட்டனில் உள்ள ஒரு பெரிய பெண்கள் பாடசாலையில் சேர்த்திருந்தான். அத்துடன் அவன் பணத்திமிர் பிடித்தவனாகவும் இருந்தான். அந்த அகங்காரத்தில் பாதி புஸ்பராணியிடமும் இருந்தது. அதனால் அந்தக் குடும்பத்தினர் தொடர்பில் தோட்டத்தில் நல்ல அபிப்பிராயம் காணப்படவில்லை.

இது இப்படி இருந்த போதும் கதிரேசனின் மனைவி அநியாயத்துக்கு நல்லவளாக இருந்தாள். யாருக்கும் மதிப்பளிப்பவளாகவும் எல்லோருடனும் சுமுகமாக சிரித்து பேசுபவளாகவும் இருந்தாள். எனினும் இப்போது புஸ்பராணி தன்னருகில் வந்து மிகக் கனிவுடன் அக்கறையாக விசாரிப்பது கண்டு கோபாலுக்கு சற்று வியப்பாக இருந்தது. காரணம் அவளும் கூட தோட்டத்தின் ஏனைய ஆண் பிள்ளைகளிடமோ ஏன் பெண் பிள்ளைகளிடமோ பேசுவதோ நட்புப் பாராட்டுவதோ கிடையாது. அவளது தந்தையைப் போலவே அவளும் பெருமை பிடித்த அகங்காரி என பெயர் வாங்கியிருந்தாள்.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அந்தத்தோட்டத்தின் ஏனைய இள வயது பெண் பிள்ளைகளைவிட அவளே கண்ணுக்கு குளிர்ச்சியான அழகியாகவும் இருந்தாள். தோட்டத்தின் பல இளைஞர்கள் அவள் பினனால் அலைந்து திரிந்தாலும் அவள் யாரையும் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. அப்படிப்பட்டவள் இன்று தன்னுடன் நட்புடன் பேசிக் கொண்டு உடன் நடந்து வருவது தொடர்பில் கோபால் ஆச்சரியமடைந்தான்.

மழையும் குளிருமாக இருந்த மந்தமான அந்தக் காலைப் பொழுதில் மிகுந்த சோம்பேறித்தனத்துடனேயே கோபால் வேலைக்குப்புறப்பட்டான். இப்போது புஸ்பராணி அவனுடன் தானாகவே முன்வந்து சிரித்துக் கதைத்துப் பேசிக்கொண்டு வந்ததானது அவனில் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது. என்னத்துக்காகவோ அவன் மனது மிக மென்மையாகி காற்றில் பறப்பதுபோல் பரவசமடைந்தது. எனி னும் அதற்கான காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் சரிக்குக் சமமாக நடந்து கொண்டிருக்கும் அந்த சுந்தர யுவதி தானா என்பது அவனுக்கு நிச்சயமாக தெரியவில்லை.

அவர்கள் இருவரும் சிறிது தூரம் ஒன்றுமே பேசாமல் மௌனமாக நடந்து சென்றனர். ஒருவர் அருகில் இன்னொருவர் இருக்கிறார்கள் என்ற உணர்வே அவர்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை என்பது போல் தோன்றியது.

"கோபால் நீங்கள் அன்று கோவில் திருவிழாவில் டிரம் செட் வாசித்ததை நான் பார்த்தேன். மிக நேர்த்தியாக மனதைக் கவரக்கூடிய விதத்தில் இருந்தது. நான் மட்டுமல்ல என்னோடிருந்த எனது நண்பிகளும் அது பற்றி புகழ்ந்தார்கள். எனக்கு பொறாமையாகக் கூட இருந்தது"

புஸ்பராணிஇவ்விதம் அவனிடம் கூறியபோது கோபால் பெருமிதத்தில் வான்நோக்கி மிதந்தான். இத்தகைய வார்த்தைகள் புஸ்பராணியிடம் இருந்து வரும் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவன் மனது உணர்ச்சி வசப்பட்டு மிக இளகிப் போனது. உடம்பெல்லாம் ரோமம் சிலிர்த்தது. மயிர்க் கூச்செரிந்தது. ஏதோ ஒரு உணர்வு தொண்டைக்குள் தோன்றி அவன் நாக்கை கமறச் செய்தது. இருந்தாலும் அவன் மிகுந்த சிரமப்பட்டு வார்த்தைகளை தேர்ந்தெடுத்து புஸ்பராணிக்குப் பதில் சொன்னான்.

"நேர்த்தியாக அழகாகவெல்லாம் நான் டிரம் வாசித்தேனா என்று சொல்லத்தெரியவில்லை. ஆனால் தாளத்துக்குத் தகுந்த மாதிரி வாசிப்பேன்"

அவள் வாய் விட்டு கெக்கலி கொட்டிச் சிரித்தாள். ஒரு சிறு பிள்ளையைப் போல் அவள் சிரிப்பொலி அந்த உயர் மலைமுகடுகளில் கூட எதிரொலித்திருக்க வேண்டும். குடையில் படிந்திருந்த நீர் நாற்புறமும் சிதறி தெறித்து பறந்தோடும் அளவுக்கு குடையை சந்தோசத்துடனே வேகமாக சுழற்றினாள். அடுத்து அவள் கூறிய வார்த்தைகள் மேலும் அவனை வானத்தின் மேலே மேலே செல்ல வைத்தது.

"கோபால் நீங்கள் டிரம் வாசித்த போது உங்கள் தலையையும் உடம்பையும் ஒரு புறமாக தாளத்துக்கமைய ஆட்டி ஆட்டி வாசிப்பது பார்ப்பதற்கு அழ காக இருந்தது. பொம்பள புள்ளைங்க எல்லாம் அதைப்பார்த்து மயங்கிப் போயிட்டாங்க"

அவளது இந்தப் பேச்சைக் கேட்டதும் கோபால் மனதில் அவள் தொடர்பில் காணப்பட்ட பல்வேறு சந்தேகங்கள் தீர்ந்து போயின. அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் ஒரு அக்கறையும் தேடலும் ஏற்பட்டது. அவன் மனதில் ஆயிரம் பூக்கள் மலர்ந்தன.

"புஸ்பராணி எனது டிரம் வாசிப்பை பார்த்து நீ மயங்கிப் போகவில்லையா?" என்று அவளிடம் கேட்டுவிட வேண்டும் போல் ஆவல் எழுந்தாலும் வார்த்தைகள் அவன் தொண்டை வரை வந்து அதற்கு மேல் வர மறுத்து விட்டன.

அவளுடன் பேசிய இச்சில நிமிடங்களில் தனது சுய கௌரவம் உயர்ந்துள்ளமையை உணர்ந்தான். அதனால் அவன் மனதில் கர்வமும் மிடுக்கும் தோன்றியது. இதுவரை தன்னை எல்லாரும் வெட்டிப்பயல் என்று நினைக்கிறார்களே என்ற தாழ்வு மனப்பான்மையும் அவனிடம் இருந்து விலகிச் சென்றது.

இவ்வாறு அவர்கள் தம்மையறியாமலேயே தோட்டத்தின் பிரதான நுழைவாயில் வரை வந்து விட்டனர். அதற்கு மேல் அவர்கள் சேர்ந்து நடக்க சூழ்நிலை இடமளிக்கவில்லை. அவள் வாயிலை கடந்து வெளியே செல்ல வேண்டும். ஆதலால் அவ்விடத்தில் வைத்து அவள் விடை பெற்றுக்கொண்டாள்.

"அப்ப நான் வாரேன் கோபால்...."

அவள் சென்ற பின்னரும் கூட அவள் சென்ற திசையை பார்த்து சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தான் கோபால். அவனுக்கு அவளுடன் பேச இன்னும் நிறைய விடயங்கள் இருப்பது போல் மனதுக்குப்பட்டது. அவன் புஸ்பராணி தொடர்பான இனிமையான நினைவுகளில் இருந்து மீள்வதற்கு முன்னரேயே பின்னால் இருந்து அவனுக்குப் பழக்கமான ஒரு குரல் கேட்டது.

"சரி ...சரி.. கோபால்.... உனக்கு நல்ல நேரம் வந்திருச்சி கெட்டியா இறுக்கிப்பிடிச்சுக்கோ"

கோபால் யாரென்று திரும்பிப்பார்த்தான். நந்தசிரி சிரித்துக்கொண்டே பின்னால் இருந்து வந்தான். அப்படியானால் அவன் அவர்கள் பேசிக் கொண்டே வந்ததை பின்னால் இருந்து அவதானித்திருக்கிறான். கோபாலுக்கு இப்போது வெட்கம் வந்து விட்டது. அவன் முகம் சிவந்து போய்விட்டது. அவன் நிலையைப்பார்த்து நந்தசிரி வாய்விட்டு சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21



## கத்தியும் கவ்வாத்து மலையும்

புஸ்பராணியும் கோபாலும் பேசிக்கொண்டே நடந்து சென்றதை நந்தசிரி பார்த்து கோபாலை கேலி செய்தான். அவனது கேலி கிண்டல் எல்லாம் ஏதோ அவர்கள் மத்தியில் நீண்ட நாட்களாகவே காதல் இருந்து வந்துள்ளதைப் போல் இருந்தது.

"ஏன்டா என்னைக் கண்டவுடனேயே கூப்பிட்டிருந்தால் நானும் உன்னுடன் நின்றிருப்பேன்தானே?" என்றான் கோபால் நந்தசிரியைப் பார்த்து.

"நீங்க ரெண்டு பேரும் சுதந்திர கிளிகள் போல் பேசிக்கொண்டு வாரீங்க. அந்த சுதந்திரத்தில் இந்த நண்பனால் தலையீடு செய்ய முடியாதல்லவா? அதுதான் சந்தோசமா பேசிக்கிட்டு வாங்கனுன்னு விட்டுட்டேன். ஆனா...." நந்தசிரி சற்றே நிறுத்தினான். "கோபால் அவளோடு கையை புடிக்கிறது அவ்வளவு லேசுப்பட்ட காரியமில்ல." அவ அப்பா பால்காரன் உன்னோட மாமாவா இருந்தாலும் ஒரு நாளும் ஒனக்கு அவள கொடுக்கமாட்டான். அவன் இந்த தோட்டத்தின் அதிக சல்லிக்காரன். டவுன்ல இருக்க முதலாளிங்க கூட மாசத்துக்கு ஒருக்கா இந்தியா போவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. பால்காரன் ஒவ்வொரு மாசமும் போறான். நீ இந்த விசயத்தில பின் வாங்காத. நாங்க எங்க முழு சப்போட்டையும் தருவோம். அப்படியே சரிவரலன்னா புள்ளைய தூக்கிரு. எங்க சின்னன்ணன் வெலிமடையில் இருக்காரு. நீ அவளோட அங்கே போயிரு. கொஞ்ச காலத்துல எல்லாம் சரியாய் போயிடும்."

இதுவரை கேலி பேசிய நந்தசிரி இறுதியாக இவ்விதம் கூறியதும் கோபாலுக்கு கோபம் வந்து விட்டது.

"நீ என்ன நந்தசிரி உளர்ற. எங்களுக்கிடையில் அப்படி ஒன்னும் கிடையாது. அந்தப் பிள்ளை ஏதோ ரெண்டு வசனம் பேசிக்கொண்டு வந்துச்சு... அவ்வளவுதான்"

நந்தசிரி பலமாக குரலெடுத்து சிரித்தான் "இவ்வளவு நாளும் திமிர் பிடித்த ராச்சசின்னு சொன்ன உனக்கு இன்னைக்கு அவ நல்ல பிள்ளையாயிட்டால்ல" நந்தசிரி இவ்விதம் சத்தமாக சொன்னான். அவர்கள் இப்போது பெறட்டுக் களத்துக்கு வந்து விட்டார்கள். ஆட்கள் எல்லோரும் அவர்களையே பார்த்தார்கள்.

கோபால் சுற்றும் முற்றும் பார்த்து நந்தசிரியை "சத்தம் போடாதடா" என்று அதட்டினான்.

அப்போது மழைத்தூறலும் நின்று போய் எங்கும் அமைதி நிலவியது.

"நந்தசிரி, கோபாலகிருஷ்ணன், ஆரியவங்ச, செல்லமுத்து நீயெல்லாம் மூனாம் நம்பர் மலை ரோட்டு துப்பரவாக்குறதுக்கு போறது... புல்லு புடுங்குறதுக்கு ஐந்து பேர், கவ்வாத்து மலைக்கு பத்து பேர் யாரெல்லாம் போறது..."

கண்டக்டர் யார் யாரெல்லாம் எந்தெந்த மலைக்கு போறதுன்னு பெயர் குறித்து விபரமாக கூறிக்கொண்டிருந்தார்.

நந்தசிரி மெதுவாக கண்டக்டரிடம் சொன்றான்.

"சேர்... எங்களையும் கவ்வாத்து மலைக்குப் போடுங்க" என்று கூறினான். பின் அவன் கண்டக்டரின் காதுக்கிட்ட போய் "சேர்... வீட்டுக்கும் கொஞ்சம் விறகு கொண்டுபோய் போடுறம்" என்று குசுகுசுத்தான்.

"அப்படீன்னா சரி நீ நாலு பேரும் கவ்வாத்து மலைக்குப் போறது. ஆனா அனுபவமில்லாது அந்த வேலை செய்ய முடியாது. நான் கங்காணிக்கிட்ட சொல்லி பழக்கி விடச் சொல்லுறன். தோட்ட தொழிலாளியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறவன் எல்லா தொழிலுக்கும் ரெடியா இருக்கனும். சரி வேலை பழக்கனும்னு ஆசைபடுற ஓங்களுக்கும் ஒதவத்தானே வேணும்."

என்று சொன்ன கண்டக்டர் கவ்வாத்து மலைக்கு பொறுப்பான கங்காணியான பெருமாளிடம் திரும்பி "இவங்களை கவ்வாத்து மலைக்கு போடுறேன் பழக்கிவிடப்பாருங்க" என்றார்.

நந்தசிரி ஏனைய நால்வரையும் நோக்கி பெருமையுடன் வந்தான். அவர்களுக்கும் இந்த விடயம் சந்தோசமானதாக இருந்தது.

தேயிலைத் தோட்டமொன்றில் செய்யக்கூடிய எல்லா வேலைகளிலும் பார்க்க கவ்வாத்து வெட்டுவதே மிகக் கடினமான காரியம் என்று பரவலாக கருத்து இருந்து வந்தது. ஏனெனில் கத்தியை எடுத்தவுடன் கவ்வாத்து வெட்டிவிட முடியாது. கவ்வாத்து வெட்டுவதற்கு சற்று புத்திக் கூர்மையும் பயிற்சியும் அனுபவமும் தேவை. அந்த வேலை கூரான கத்தியுடன் சம்பந்தப்பட்டதாதலால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்க்க முனியப்பருக்கு பூஜை போட்டதன் பின்பே பலரும் கவ்வாத்துக் கத்தியைப் பிடிப்பார்கள். மறுபுறத்தில் கவ்வாத்து வெட்டும் தொழிலாளர்களுக்கு வீரத்தனம் இருக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

தேயிலை வாதுகளை சம அளவில் மட்டமாக வெட்ட வேண்டும். ஒரு வாதினை ஒரே வீச்சில் வெட்ட வேண்டும். வாதுகளின் நுனிகள் பிளவுபடக்கூடாது. இவ்வித காரியத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு அடிக்கும் சற்றே குறைந்த நீளமுள்ள கூர்நுனி கொண்ட உள்நோக்கி வளைந்த கோப்பிக் கத்தி பயன்படுத்தப்படுகிறது.

தோட்டத்துத் தொழிலாளர் மத்தியில் கவ்வாத்து மலையில் வேலை செய்யக்கிடைப்பதென்பது அதி உயர்ந்த பதவி உயர்வாகவும் கருதப்படுகின்றது. வட்டமாக சுற்றிவர அடர்ந்து படர்ந்திருக்கும் தேயிலை செடியின் ஒரு கிளையை மட்டும் மீதப்படுத்தி மற்றைய எல்லா கிளைகளையும் ஒட்ட வெட்டி விடுவார்கள். அவ்விதம் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு கிளையை நீர் வாது என்று அழைக்கின்றார்கள். தேயிலை வரண்டு காய்ந்து விடாமல் இருக்க இந்தக் கிளை நீரைப் பெற்றுக்கொள்ள பயன்படும். இவ்விதம் தேயிலைத் தோட்டத்தின் ஒரு அபூர்வக் கலையை கற்றுக்கொள்ளும் ஒரு சந்தர்ப்பம் நந்தசிரி, கோபால், ஆரியவங்ச, செல்லமுத்து போன்றோர்களுக்கு கிடைத்தமை தொடர்பில் ஏனையோர் பொறாமைப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நந்தசிரி கவ்வாத்து மலைக்குப் போக ஆசைப்பட்டதற்குக் காரணம் அந்தக் கலையை கற்றுக்கொள்ளும் ஆர்வத்தில் அல்ல. அவன் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எவ்வாறு மேலதிக வருமானம் உழைக்கலாம் என்பதிலேயே குறிக்கோளாக இருந்தான்.

அவன் நண்பர்களிடம் வந்து அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பில் தன் திட்டத்தை விபரித்தான்.

"நண்பர்களே! அப்படியானால் விசயம் இதுதான். நம் மூவருக்கு மேலதிகமாக செல்லமுத்துவையும் எமது வேலையில் சேர்த்துக் கொண்டதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. இதன் மூலம் அவனுக்கு நன்மை கிடைத்தது போல் அவன் நமக்கு உதவவும் வேண்டும். இந்த வேலையை நமக்கு உதவுவதற்காகவே கண்டக்டர் போட்டுக்கொடுத்துள்ளார். ஆதலால் அவருக்கும் நாம் உதவ வேண்டும்.

"நீ சொல்வது எங்களுக்கு விளங்கவில்லை" கோபால் இடைமறித்து கூறினான்.

"கவ்வாத்து வெட்டத் தொடங்கிய உடன் எல்லோரும் மிளாறு சேகரிக்க வருவாங்க. நாம அப்படி வாரவங்கள மிளாறு பெருக்கவிடாம மறித்து அந்த வேலையை நாமே செய்யனும். கோபாலும் செல்லமுத்துவும் கங்காணிக்கிட்ட வேலையை கத்துக்கிட்டு கவ்வாத்து வேலையை பாருங்க. நாங்க நல்ல நீண்ட மிளாருகளாக கழிச்சி சேகரித்து கட்டுகளாக குவித்து வைக்கிறோம். கண்டக்டர் வீட்டுக்கு செல்லமுத்து மூனு கட்டு கொண்டு போய் போட்டுறு. ஏனைய கட்டுக்களையெல்லாம் வாறவங்ககிட்ட வித்து காசாக்கிடலாம்"

நந்தசிரி தன் திட்டத்தை விபரித்தபோது ஏனையோருக்கு வியப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22



# “களகலிங்கம் சுருட்டுக் கட்டு”

தேயிலை தோட்டங்களில் கவ்வாத்து வெட்டும் பணி ஆரம்பமாகி விட்டால் மலை மிக மிக கலகலப்பாக மாறி விடும். மிளாரு பெருக்க வருபவர்கள் வெறுங்கையுடன் வரமாட்டார்கள். அவர்கள் போத்தல்களில் தேத்தண்ணியும் பாண், பணிஸ், சிகரட், பீடி போன்றவற்றை கவ்வாத்து வெட்டுபவர்களுக்கு கொடுத்து தடித்த நீளமான மிளாரு என்று அழைக்கப்படும் தேயிலை வாதுகளை விறகுகளாக பொறுக்கிக்கொள்வார்கள். இவர்களில் பெண்களே அதிகம் இருப்பார்கள்.

கவ்வாத்து மலையில் வேலை செய்பவர்களும் தாம் கவ்வாத்து வெட்டும் போது பெரிய வாதுகள் கிடைக்கும் போது அவற்றை வெட்டி இலைகளை கழித்து தம் வீடுகளுக்கு விறகுக்காக கொண்டு செல்லவென ஒதுக்கிக்கொள்வார்கள். சிலர் கங்காணிகளுக்கும் ஏனைய தோட்டத்து அதிகாரிகளுக்கும் விறகு வெட்டி கட்டாகக் கட்டிக் கொடுப்பார்கள். வேறும் சிலர் இவ்விதம் கட்டி வைக்கப்பட்டிருக்கும் மிளாறுக்கட்டுக்களை அவற்றை விற்பவர்களிடம் விலை கொடுத்து வாங்குவார்கள். இவ்விதம் விலை கொடுத்து வாங்குபவர்களை மனதில் வைத்தே நந்தசிறி தன் திட்டத்தைத் தயாரித்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி தன் திட்டத்தை விபரித்த பின் நண்பர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு கவ்வாத்து மலைக்குச் சென்றான். அன்றைய தினம் அவர்களின் கவ்வாத்து மலைக்கு கங்காணியாக நியமிக்கப்பட்டிருந்தவர் பெருமாள் கங்காணியாகும். சுமார் ஐம்பது வயதைத் தாண்டியிருந்த அவர் கவ்வாத்து வெட்டுவதில் நிபுணத்துவம் பெற்றவராக இருந்தார். எவ்வளவு தடித்த வாதையும் ஒரே வீச்சில் நறுக்கென வெட்டி சீவி எறிவதில் சமத்தானவர் என்று பெயர் வாங்கியிருந்தார். அவர் கவ்வாத்து வெட்டும் வேகத்துக்கு எந்த இளைஞனாலும் ஈடு கொடுக்க முடியாது.

அவர் வெற்றிலை கொதப்புவதிலும் கருஞ்சுருட்டு உறிஞ்சுவதிலும் மிகுந்த விருப்பம் கொண்டவராக இருந்தார். நந்தசிரி அவரை அணுகி தான் இடுப்பில் செருகி மறைத்து வைத்து எடுத்து வந்திருந்த இரண்டு புகழ்பெற்ற யாழ்ப்பாணத்து கனகலிங்கம் சுருட்டுக் கட்டுக்களை அவரிடம் நீட்டினான். அதனைக் கண்டதும் பெருமாள் கங்காணியின் முகம் பூரித்து மலர்ந்தது.

“இந்த நல்ல ரக சுருட்டை எங்கப்பா வாங்கின. இங்கெல்லாம் இது கிடைக்கிறதில்லையே” கங்காணி வியப்புடன் கேட்டார்.

நந்தசிரியின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது. அவன் மேலும் கங்காணியின் பக்கத்தில் சென்றான்.

“இது எங்க அப்பா திருகோணமலைக்கு சென்ற போது வாங்கி வந்தது காங்காணி ஐயா. அப்பா நண்பர்களுக்கு கொடுப்பதற்காக பத்து பன்னிரண்டு கட்டுக்கள் கொண்டு வந்திருந்தார். எனக்கு உங்க ஞாபகம் வந்ததால அப்பாக்கிட்ட கேட்டு ரெண்டு கட்டு வாங்கிட்டு வந்தேன்” என்று கூறினான்.

நந்தசிரியின் தந்தை லொறிச்சாரதி வேலை பார்த்து வந்தார். நகரத்தின் போக்குவரத்து நிறுவனமொன்றில் கடமையாற்றிய அவர் வாரத்துக்கு இரண்டு முறையாவது தேயிலை பெட்டிகளை ஏற்றிக்கொண்டு திருகோணமலைக்கு போய் வருவார். ஆனால் அவர் ஒரு பொழுதும் தன் பயணத்தின் போது சுருட்டுக் கட்டு வாங்கி வந்தது கிடையாது. அவர் நகரத்தில் காணப்பட்ட யாழ்ப்பாணத்து வெற்றிலை பாக்கு கடையான பொன்னம்பலம் முதலாளி கடையில்தான் சுருட்டு வாங்குவார்.

நகரத்தின் யாழ்ப்பாணத்து கடைகளில் உயர் ரக சுருட்டு காணப்பட்ட போதும் அவை தோட்டத் தொழிலாளர்களை எட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி அந்த இரண்டு சுருட்டு கட்டுக்களையும் தன் தந்தைக்கென சம்பளத்தினத்தன்று பொன்னம்பலம் முதலாளி கடையில் தான் வாங்கி வந்திருந்தான். சில நாட்களாகவே அவன் தந்தை வீட்டுக்கு வராததால் அதனை பெருமாள் கங்காணிக்குக் கொடுக்கத் தீர்மானித்தான்.

"நந்தசிரி நான் காசு தாறேன், இன்னும் இரண்டு மூன்று சுருட்டுக் கட்டு கொண்டு வந்து தா"

பெருமாள் கங்காணி சுருட்டுக் கட்டை தன் மூக்கருகில் கொண்டு சென்று அதன் வாசத்தை பிடித்து நுகர்ந்து அனுபவித்தவாறே கூறினார்.

நந்தசிரியும் இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"காசு எதுக்கு கங்காணி ஐயா. நான் பகலைக்கு வீட்டுக்குப்போய் கொண்டாந்து தாறேன். கங்காணி ஐயாவுக்கு இல்லாத சுருட்டு வேறு யாருக்கு குடுக்கப்போறேன். நானுங்கூட அந்தியானா ஒரு சுருட்டு அடிப்பேன். காரங்கொஞ்சம் அதிகமானாலும் அதுக்கு பொறகு தொண்டையும் வாயும் ஐஸ் பெட்டியில் வைச்ச மாதிரி இருக்கும்."

நந்தசிரி கங்காணியின் ஆர்வத்துக்கு மேலும் தீனி போட்டான்.

"சரி நந்தசிரி நான் உங்கள் எல்லோருக்கும் கவ்வாத்து வெட்டுவது எவ்வாறு என்பது பற்றி சொல்லித்தருகிறேன். இந்தத் தொழிலில் முக்கிய பங்கு வகிப்பது கவ்வாத்து கத்திதான். கத்தியின் நுனி மிக மிகக் கூறாக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு கட்டையில் கல்லை கத்தியாலேயே நசித்து தேய்த்து உரசி அல்லது ஈரக்கல்லில் இருபுறமும் பதம் வரும் வரையில் தேய்த்து பதமாக்க வேண்டும். பதம் எப்படி இருக்க வேண்டும் என்றால் முகச்சவரம் செய்யும் சவரக்கத்தியைப்போல் இருக்க வேண்டும்."

பெருமாள் கங்காணி எவ்வாறு கத்தியை பதமாக்குவது என்று ஆரம்பித்து படிப்படியாக கவ்வாத்துக் கலையை கற்பித்தார்.

கோபால் கங்காணி சொல்லிக்கொடுத்த பல விடயங்களையும் உன்னிப்பாக கவனித்து பலதையும் கிரகித்துக் கொண்டான். நந்தசிரிக்கும் அவர் சொல்லும் விசயங்கள் நன்கு விளங்கினாலும் தொடர்ந்து கற்றுக்கொள்ளும் ஆர்வம் அவனிடம் காணப்படவில்லை. அவன் தேயிலை மிளாறுகளை குவித்து கட்டுக்கட்டாக கட்டுவதிலேயே குறியாக இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கங்காணி ஐயா! கன்டக்டர் வீட்டுக்கு பத்து கட்டு வெறகு அனுப்பனும். நான் கொஞ்சம் பெரிய வாதுகளை சேர்க்கிறேன். யாரையாவது போட்டு அனுப்பி விடனும் உங்ககிட்ட சொல்றேன்னு சொன்னாரே சொல்லலையா?"

"அவருக்கும் நமக்குந்தான் கொஞ்ச நாளாவே ஆவுறதில்லையே நந்தசிரி. பரவாயில்லை அவர் வீட்டுக்கு வெறகு அனுப்பிவிடு நான் வேனும்னா இன்னும் ரெண்டு பேர போட்டு மிளாறு பொறுக்க சொல்லுறன். என்ன இருந்தாலும் நம்ம தோட்டத்து கன்டக்கர் இல்லியா?"

பெருமாள் கங்காணி வெத்தல பாக்கு பைக்குள் கையை நுழைத்துக் கொண்டே சொன்னாரு.

இதைக்கேட்டதும் நந்தசிரி தன் மனதுக்குள்ளேயே கணக்குப் போட்டுப் பார்த்தான். அதன் பிரகாரம் கண்டக்டர் வீட்டுக்கு நான்கு விறகுக்கட்டுக்களை அனுப்பி விட்டு ஏனையவற்றை நகர சபைக்குட்பட்ட வீடுகளில் விற்பதென்று திட்டம் போட்டான். அதன் பிரகாரம் செல்லமுத்துவையும் கங்காணி போட்ட ஆளையும் இரண்டு முறை அனுப்பி நான்கு விறகுக் கட்டுக்களை கண்டக்டர் வீட்டுக்கு அனுப்பினான். இப்போது ஆறுகட்டுக்கள் மீதமிருந்தன. இன்னும் பத்துக்கட்டுக்களாவது சேர்த்து விட வேண்டும். அவனது மனது திட்டமிட்டது.

அவன் செல்லமுத்துவையும் கங்காணி கொடுத்த மத்த ஆளையும் அழைத்தான்.

"செல்லமுத்து நீங்க ரெண்டு பேரும் போயி இந்த விறகுக் கட்டுக்களை கன்டக்டர் வீட்டுல போட்டுருங்க கன்டக்டர் ஐயாவோ அம்மாவோ இருந்தா இவற்றை நந்தசிரி அனுப்புனதா சொல்லுங்க. சாப்பாடு குடிக்க ஏதும் கொடுத்தா வேணாம்னு சொல்லாதீங்க. ஆனா காசு கொடுத்தா வாங்காதீங்க. உங்களுக்கு ஏதும் பிரச்சினைன்னா என்னிடம் சொல்லுங்க. நான் கன்டக்டரிடம் சொல்லி செய்து தாறேன். நீங்க இப்போ மெதுவா போங்க கங்காணி ஒன்னும் சொல்லமாட்டார்."

இவ்வாறு கூறிய நந்தசிரி அவர்களிடமிருந்து சிகரட் ஒன்றையும் வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டான். பிறகு விறகுக்கட்டை அவர்கள் தலையில் தூக்கி வைப்பதற்கு உதவினான். அவர்கள் செல்வதை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு கோபால் இருந்த இடத்துக்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களுக்கு சொந்தமான தோட்டங்கள்

தோட்டத்து கண்டக்டரின் வீட்டுக்கு விறகுக் கட்டுக்களை கொண்டு செல்ல செல்லமுத்துவிடமும் மற்றவனிடமும் இரண்டு கட்டுக்களை அனுப்பி விட்டு கோபாலிடம் திரும்பிய நந்தசிரி

"செல்லமுத்துவும், மற்றவனும் நல்ல உள்ளம் கொண்ட இளைஞர்கள். இத்தகையவர்கள் நம்முடன் இருந்தால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். இந்தத் தோட்டத்தில் இவர்கள் போன்றவர்கள் மிகச்சிலர் தான் இருக்கிறார்கள்" என்றான் உரத்து.

அவன் சொன்ன சொற்கள் செல்லமுத்துவினதும் மற்றவனினதும் காதுகளிலும் ஒலித்தது. அவர்களுக்கு அது பெருமையாக இருந்தது. அதன் காரணமாக அவர்கள் தலையில் கனமாக அழுத்திக் கொண்டிருந்த விறக்குக்கட்டுக்களின் பாரம் குறைந்தது போல் உணர்ந்தார்கள்.

இந்நிலையில் கோபால் மாத்திரமே கவ்வாத்து வெட்டும் கலையை தீவிர மாகக் கற்றுக்கொண்டான். கோபாலின் தந்தை செவனு, பெருமாள் கங்காணியின் நண்பராக இருந்தபடியால் கோபாலுக்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்துடன் அக்கலையைக் கற்றுக்கொடுத்தார். அவர் கோபாலிடம் செவனுவின் பெருமை பற்றி கூறினார்.

"உங்க அப்பா செவனு இந்த வட்டாரத்திலேயே இருக்கிற மிகச்சிறந்த டெக்டர் டிரைவர். அவர் எந்த மலை உச்சிக்கும் அதைக்கொண்டு போய் டெய்லரையும் சேர்த்து ரிவர்ஸ் செய்து திருப்புவதில் அவருக்கு நிகர் அவர் மாத்திரம்தான்." இதைக்கேட்ட கோபாலுக்கு பெருமையாக இருந்தது.

அவர்கள் அப்போது வேலை செய்வதை நிறுத்தி விட்டு தேத்தண்ணி குடிப்பதற்காக ரோட்டோரத்தில் மதிலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நந்தசிரி அவர்கள் பேசிக்கொள்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"எங்க அண்ணனுக்குன்னா இங்கே தோட்டத்தில் கிடைப்பதை விட நல்ல சம்பளம் கிடைக்குது கங்காணி மாமா" கோபால் பெருமாள் கங்காணியிடம் கூறினான்.

"உண்மைதான் கோபால். இந்தத் தோட்டத்தில் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் இதுக்கு மேல ஒரு சல்லிக்காசுகூடத் தரமாட்டானுங்க. ஆனால் வெள்ளக்காரன் காலத்தில் இதைவிட ரொம்ப நல்லா இருந்துச்சி"

வெள்ளைக்காரனை புகழ்ந்த கங்காணியின் பேச்சைக்கேட்டு ஆரியவங்ச கோபமடைந்தான். அவன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளன்.

"நீங்க சொல்லுறதில்ல எனக்கு உடன்பாடில்லை கங்காணி. வெள்ளைக்காரன் நம்ம வளங்களையெல்லாம் கொள்ளையடிச்சி அவன் தேசத்துக்கு கொண்டு போனான். தோட்டத்தொழிலாளிக்கு சல்லிக்காசை சம்பளமாகக் கொடுத்து அவர்களின் உழைப்பையும் சுரண்டினான். ஆனா இன்னைக்கி அப்படியில்ல. இவை அரசாங்கத்தின் தோட்டங்கள். இலங்கை அரசின் விவசாயத்துறை அமைச்சுக்கு சொந்தமானவை. இதனை பராமரிப்பவர்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினர். இவை மக்களுக்குச் சொந்தமானவை".

இதைக்கேட்டு பெருமாள் கங்காணி நையாண்டித் தனமான புன்னகை ஒன்றை உதிர்த்தார்.

"ஆரியவங்ச நீ சொல்வது உண்மைதான். இப்போது இவை அரசாங்கத்துக்கு சொந்தமானவைதான். ஆனா ஏன் இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடையாமல் இப்படி காடாய் போய்க்கெடக்குது. இங்கே வேலை செய்யும் அதிகாரிகள் நேர்மையாக செயல்படுகிறார்களா? அநேகமா எல்லாருமே களவாணிகளாகத்தான் இருக்காங்க. எதுக்கெடுத்தாலும் லஞ்சம் கேக்குராங்க. அது நான் சொல்லி தெரிய வேண்டியதில்ல. நாங்கள் கடுமையா உழைப்பதால் மட்டும் தோட்டங்கள் முன்னேறாது. என்னதான் இருந்தாலும் வெள்ளைக்காரன் களவு செய்யவில்லை. அவன் நன்கு தேயிலையை பராமரித்தான். ஆனா இன்னைக்கு என்ன நடக்குது? 25 அந்தர் மலைக்கு ஓரம் போடனும்னா 12 அந்தர் போட்டுட்டு மீதிய கொள்ளையடிக்கிறாங்க. இதப்பத்தியெல்லாம் நாம வாய் தொறக்கேலாது"

பெருமாள் கங்காணி சொன்ன இந்த விடயங்கள் தொடர்பில் ஆரியவங்சவிடம் பதில் இல்லை. அவன் மௌனமாக இருந்தான். அவனுக்கும் இந்த விடயங்கள் தெரிந்ததுதான். அவனுக்கு இதற்கு முதல் வாரம் நடந்த உரத்திருட்டு தொடர்பில் ஞாபகம் வந்தது. 25 யூரியா பைகளில் கண்டக்டர் 12 பைகளை பால் வேனில் கடத்தியதும் அதில் ஒன்றை நந்தசிரி திருடியதும் ஞாபகத்துக்கு வந்தன.

"இன்னும் கொஞ்ச காலத்திலேயே இதெல்லாம் சீரழிஞ்சி போயிடும். யூனியன்காரன்கள் தத்தமது அரசியல் நோக்கங்களுக்காக தொழிலாளியை பகடைக்காயாக பயன்படுத்துறானுங்க. லயத்துக்கு பதிலா வீடு கட்டித்தாரோம், நிலம் வாங்கித்தாரோம்னு சொல்லி சொல்லியே அவங்க வயித்த நிறைச்சிக்கிறாங்க. எல்லா கொடுக்கல் வாங்கல்லையும் கொமிசன் அடிக்கிறாங்க. மொத்தத்தில் தொழிலாளியை வித்துத்தான் அவங்க பொழைக்கிறாங்க."

கங்காணி வேகமாக பல விசயங்களையும் கூறிக்கொண்டுபோனார். கோபால் அவர் பேச்சிலிருந்து பல்வேறு விடயங்களையும் புரிந்து கொண்டான். தெரிஞ்சோ தெரியாமலோ அவனும் கூட நண்பர்களுடன் சேர்ந்து இத்தகைய அநியாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு துணை போகிறோமோ என்று கவலையடைந்தான்.

நந்தசிரி தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்து சற்று தூரத்தில் ஓடி வந்து கொண்டிருக்கும் சிறுவனை நோக்கி நடந்தான்.

மூச்சிரைக்க... இரைக்க ஓடி வந்த சிறுவன் "போதுமான அளவுக்கு கோடா போட்டிருப்பதால் அதுக்கு மேல போட முடியாதுண்ணு சுருட்டுக்கடையில் சொல்லிட்டாங்க அண்னே" என்று கூறி சில சுருட்டுக் கட்டுக்களை நீட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொதப்பிட்டான் வேலைய. கோடா போடாமல் இந்த சுருட்டுக் கட்டுக்களை கங்காணியிடம் கொடுத்தால் களவு அம்பலமாயிடும். நீ ஏன் கந்தையாவிடம் சொல்லலியா. நந்தசிரி கோடா போட்டு கேட்டார்னு" சிறுவனிடம் நந்தசிரி கேட்டான்.

"கந்தையா கடைக்கி போகல பொன்னம்பலம் கடையில்தான் வாங்கினேன். கந்தையாவோட சண்டை" என்றான் சிறுவன். தலையை சொறிந்து கொண்டே.

"ஏன்டா ஒனக்கெல்லாம் சொன்னத செய்யத் தெரியாதா? சரி..சரி.. இப்ப ஒன்னு செய். இந்த சுருட்டுக்களையும் எடுத்துக்கிட்டு போய் நல்ல ஒரு கோப்பையில் தேயிலை சாயத்த கறுப்பா ஊத்து. அது நெறய சீனி போட்டு கலக்கி அதுல சுருட்டு கட்டுக்களை முக்கி கொஞ்சம் வெயில்ல காய வைத்து எடுத்துக்கிட்டு வா. சுருட்டை வாயில் வைத்தா ஒதட்டுல பிசுபிசுக்குன்னு ஒட்டனும். இந்தா இந்தா பத்து சதத்தையும் வச்சுக்கோ சரி போயிட்டு வேலைய முடிச்சுக்கிட்டு வா"

சிறுவன் மீண்டும் குதித்து ஓடிச் சென்றான்.

ஒரு மாதிரி அன்றைய நாள் முடிவடைந்தது. அன்று மாலை ஐந்து மணிய ளவில் நந்தசிரி, கோபால், ஆரியவங்ச ஆகியோரால் நகரத்திற்கு அண்மையில் இருந்த நகர சபை வீடமைப்புத்திட்ட வீடுகளுக்கு விறகுக் கட்டுக்கள் பன்னிரண்டு விற்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு ஒரு விறகுக்கட்டுக்கு மூன்று ரூபா வீதம் வசூலித்தார்கள்.

அன்று முழுவதும் உழைத்து களைப்படைந்திருந்த அவர்கள் ஆற்றுக்கு போய் குளிர்ந்த நீரில் அலுப்புப் போகும் மட்டும் உடம்பு தேய்த்து நன்கு குளித்தார்கள். பின் அவர்கள் நகரத்துக்குச்சென்று அவர்கள் வழக்கமாக செல்லும் முஸ்லிம் ஹோட்டலுக்குச் சென்று வயிறு முட்ட கோதுமை ரொட்டி சாப்பிட்டார்கள். கொஞ்ச நேரம் நகர வீதிகளில் அங்குமிங்கும் அலைந்து திரிந்தார்கள். பின் குறித்த நேரம் வந்ததும் நகரத்தின் அந்த பிரசித்தி பெற்ற சினிமா தியேட்டருக்குள் நுழைந்தார்கள். அங்கே ஓடிக்கொண்டிருந்த அந்த பிரபலமான படத்தை மூன்றாம் முறையாகவும் குதூகலத்துடன் ரசித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



24

# மலர் விழியின் கதை

தொழிலாளர்களை பெரட்டுக்களத்துக்கு அழைக்கும் சங்கு மூன்று முறை ஒலித்து ஓய்ந்தது. அத்துடன் அன்றைய தினம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகளும் தோன்ற ஆரம்பித்தன. தொழிலாளர்கள் லயத்தில் இருந்து பெறட்டுக் களத்துக்கு ஒவ்வொருவராக புறப்பட்டுச் சென்றனர். அச்சந்தர்ப்பத்தில் அம்மன் கோயில் இருக்கும் திசையில் இருந்து ஏதோ கலவரம் நடப்பது போல் கோஷங்கள் எழுந்தன.

"கோயில் பக்கம் என்ன நடக்கிறது" என்பதே எல்லோர் மனதிலும் எழுந்த முதலாவது கேள்வியாகும். பலரும் அத்திசை நோக்கி ஓடத்தொடங்கினர். அங்கே ஸ்டோருக்கு அருகில் கும்பலாக மக்கள் கூடியிருந்தனர்.

"கோயில் பண்டாரத்தின் மகள் யாரோ பொடியனோட ஓடிட்டாளாம்" யாரோ சொன்னது காதில் விழுந்தது.

"யாரோட ஓடிட்டாளாம்"

"அந்த தொரசாமி பயலோடதான்"

இன்னொருவர் பதில் சொன்னார்.

"யார் இந்த தொரசாமி, நம்ம தோட்டத்து பயலா..? அடுத்த தோட்டமா?"

"நம் தோட்டம் தான். ஆனா அவன் தோட்டத்தில் வேலை செய்யிறதில்ல. நீண்ட முடி வளர்த்து தோள்வரை வலித்து சீவியிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவல வெள்ளைச் சேட்டும் சாரமும் கட்டியிருப்பான். பெரிய நடிகன்னு நெனப்பு. ஆனா ரஸ்தியாதுகாரன் மாதிரி சுத்திக்கிட்டே இருப்பான். ஆனா அடிக்கடி இந்தியாவுக்கு போய்ட்டு வருவான்."

"ஆ...சரி..சரி... அந்த பொம்பள கொரல்ல பேசுவானே அவன்தானே."
"ஆமா, அவன்தான்."

"அவன கெட்ட பயல்னு சொல்ல முடியாது. நீ சொல்றது அந்த இந்தியாவுக்குப் போன வையாபுரியின் கடைசி மகன்தானே."

"நீ சொல்றது சரிதான். ஆனா பண்டாரம் என்ன சாதி, வையாபுரி வண்ணான்ல. பயல் அதனாலதானே நல்ல வெள்ளையும் சொல்லையுமா உடுத்திக்கிட்டு திரி யிரான்.

அன்று எல்லார் வாயிலும் இந்தக்கதை தான் அடிபட்டது.

பண்டாரத்தின் மகள் மலர்விழி இப்போதுதான் பதினாறு வயதை எட்டியிருந்தாள். கோயிலோட ஒட்டிய அவ வீட்டிலேயே பிறந்தாலோ என்னவோ தங்கச்சிலை போல் வடிக்கப்பட்டிருந்தாள். அவள் தோட்டத்தில் எந்தப் பக்கம் போனாலும் தோட்டத்து இளசுகளின் கண்கள் மட்டுமல்ல பெருசுகளின் கண்களும் அவள் பின்னாலேயே போகும்படி அவள் ஜொலித்தாள். பலரும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அவள் பின்னழகை ரசித்தார்கள்.

இருபத்து நான்கு வயதை அடைந்திருந்த கட்டிளங் காளையான தொரசாமி ஒரு நாளைக்கு ரெண்டு மூனு தடவையாவது கோவில் ரோட்டில் அலைவான் என கொழுந்து பறிச்சுக் கொண்டிருந்த பெண்ணொருவள் தன் சந்தேகத்தைக் கூறினாள்.

கோபாலுக்கும் கூட அவன் நன்கு பரீட்சியமானவன் தான். அண்மையில் கூட அந்த கோவில் பாதையில் செல்லும்போது அவனை சந்தித்திருந்தான்.

தொரசாமியை "தொர" ன்னுதான் நண்பர்கள் அழைப்பார்கள். கோபாலும் அன்று அவனை அப்படித்தான் அழைத்துப் பேசினான்.

அவர்கள் சந்தித்துக் கொண்ட போது முதலில் பேசியவன் தொரதான்.

"அப்புறம் என்ன மச்சான் சங்கதி"

"வழக்கமானதுதான். நீ எப்படி இருக்கிற? கிட்டத்தில இந்தியா ஏதும் போக லயா?" கோபால் தொரைக்கு பதிலளித்து மேலும் இரண்டு கேள்விகளையும் எழுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா மச்சான் நான் போன வாரம் தான் இந்தியாவுக்கு போய்ட்டு வந்தேன். இன்னும் ரெண்டு வாரத்தில திரும்பவும் போவேன். ஒனக்கு ஏதும் வாங்கி வரனும்னா சொல்லு. வாங்கிட்டு வாறேன். அன்னைக்கி நீ கோயில் திருவிழாவில் டிரம் வாசிக்கிறத பார்த்தேன் நல்லா இருந்துச்சி மச்சான்."

அவன் அவ்வாறு கூறியது கோபாலுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் கோபால் டிரம் வாசிப்பதை அந்த அளவுக்கு நேசித்தான். தொர நட்புடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு சிகரட் ஒன்றையும் கொடுத்தான். அது உயர் ரக இந்திய சிகரட்.

தொர கோபாலிடம் டிரம் வாசிக்கும் பழக்கத்தை தொடரும்படி கூறி விட்டு விடை பெற்றுச்சென்றான்.

இப்போது பண்டாரத்தின் மகளை தொர இழுத்துக்கிட்டு ஓடிட்டான் என்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாக தோட்டத்தின் உயர் சாதியினர் மத்தியில் பேசப்பட்டது. "இன்றைக்கு பண்டாரத்தின் பொண்ணைக் கடத்தினவனுக நாளைக்கு நம்ம பொண்ணுக மீதும் கைவைக்கமாட்டாங்க அப்படிங்கிறதுக்கு என்ன உத்தரவாதம்? இருக்கு" என்று ஒருத்தர் கேட்டார்.

"மலர்விழிவயது குறைந்தவளாதலால் இதனை பொலிசில் புகார் செய்ய வேண்டும்" என ஒருவர் ஆலோசனை தெரிவித்தார். எனினும் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்பிச் செய்து கொண்டதால் இவர்களுக்கு முறைப்படி திருமணம் செய்து கொடுத்திடலாம் என்பதும் அவர்கள் இப்படி ஓடிச்சென்று ஓரிரு இரவுகள் வாழ்ந்து விட்ட பின்னர் அவர்களை பிரித்து பொண்ணை வீட்டுக்கு கொண்டு வந்தால் பெண்ணின் வாழ்க்கை தான் பாதிக்கப்படும் என்பதும் பலரதும் அபிப்பிராயமாக இருந்தது.

அத்துடன் பண்டாரத்தின் வீடு கோவிலுடன் கூடிய புனித பூமியிலேயே இருப்பதால் இவ்விதம் தீட்டுப்பட்ட பெண்ணை அவ்வீட்டிற்கு அழைத்து வந்து வாழ வைப்பது தோட்ட மக்களுக்கு கெடுதியாகும் என்று வேறு சிலர் வாதிட்டனர். மறுபுறத்தில் தமது மகளுக்கு பண்டாரம் தன் இனத்திலேயே ஒரு மாப்பிள்ளையை தேடுவது சிரமமான காரியமாக இருக்கும் என்றும் கோயிலில் பூசகர் வேலை செய்து கிடைக்கும் சொற்ப வருமானத்தில் ஜீவித்து வரும் அவர்களுக்கு மகளுக்கு சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைப்பதும் பிரச்சினைக்குரிய காரியமாகவே இருக்குமென்று பண்டாரத்தின் மனைவி சிந்தாமணி கணவரிடம் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணி ஒரு நரிக்குணம் உள்ளவள். தன் மகளுக்கும் அந்த இளைஞனுடன் தொடர்பிருக்கிறது என்பது ஏற்கனவே அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. எனினும் அவள் அதனை இரகசியமாக வைத்திருந்தாள். தொரசாமி அந்த தோட்டத்தில் சில்லறை அதிகம் புழங்கும் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனை விட்டால் தன் மகளுக்கு நல்ல வரன் கிடைக்காதென்பதும் அவளுக்குத் தெரியும். எனவே அவளே இரகசியமாக தன் மகளை அவனுடன் ஓடி விடும் படி பலவந்தப்படுத்தினாள். இந்த விசயம் தந்தைக்கு தெரிந்தால் பெரிய குழப்பமாகிவிடும். பின்னர் தந்தையை சமாதானப்படுத்திக் கொள்ளலாம் என்றும் திட்டம் தயாரித்தாள். அதன் படிதான் அந்த சம்பவம் நிகழ்ந்தது என்பது யாருக்கும் தெரிய நியாயமில்லை.

பண்டாரத்தின் சம்சாரத்தின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பலருக்கும் அவள் மேல் சந்தேகம் வந்தது. "பண்டாரத்தின் சம்சாரம் கள்ள மனுசி. தந்திரக்காரி. அவள் தான் மகளுக்கு ஓடிப்போக கதவைத்திறந்து கொடுத்திருக்கிறாள் போல் தெரிகிறது. இப்போது பொய்யாக நீலிக் கண்ணீர் வடிக்கிறாள்" என்றார் ஒருவர்.

"அந்த மலர்விழி புள்ளையும் ஆட்டக்காரிதான். பண்டாரம் வீட்டுப் புள்ளமாதிரி இல்லாம அரை கொறை ஆடை உடுத்தித்தான் ஆடிக்கிட்டிருந்தா" இன்னொருத்தி கூறினாள்.

"சரி...சரி... அதுதான் ஆட்டம் முடிஞ்சி போயிருச்சே. அவன் மட்டும் வீட்டுல இருக்கிற வரைக்கும் ஊர் ஊரா அலையிறவனாச்சே. எத்தனை பொம்பளைய வச்சிருக்கானோ? யாருக்குத் தெரியும்."

"அவனும் அவளும் எங்கே போயிருக்காங்கன்னு யாருக்கும் தெரியாதாமே?'

"யாரு சொன்னது? அந்த அம்மாகாரிக்குன்னா அவங்க எங்க போயி ருக்காங்கன்னு நல்லா தெரியும். அவ நாடகமாடுறா.."

அன்று முழுவதும் அந்தத் தோட்டத்தில் இதுவே பேச்சாக இருந்தது. கோபாலின் தாய் அன்னம்மா தன் மகனை காப்பாற்றிக் கொடுத்ததற்காக தெய்வங்களுக்கு நன்றி சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னம்மாவின் அலறல்

அன்னம்மா தன் மகனை ஓடிப்போன மலர்விழியின் பார்வையில் இருந்து காப்பாற்றிக் கொடுத்ததற்கு நன்றி கூறி தெய்வங்களை வேண்டிக் கொண்டது செவனுவின் காதுகளிலும் விழுந்தது.

"அன்னம்மா எதுக்கு அப்படி வேண்டிக்கிற. நம்ம சின்ன பயலுக்கும் அவளுக்கும் இடையில ஏதும் சம்பந்தம் இருந்ததா" என்று அன்னம்மாவிடம் செவனு கேட்டார்

"ஓங்களுக்கு இந்த தோட்டத்தில் நடக்கிறது ஒன்றுமே தெரியாது. இந்த தோட்டத்தில இருக்கிற எல்லா பொம்பள புள்ளங்களும் நம்ம புள்ள மேல ஒரு கண்ணு வச்சிருக்காங்க. அந்தப் புள்ள மலர்விழி கூட நம்மா கோவாளு கோவில்ல டிரம் அடிக்கிற அன்னிக்கு அவங் கூடவே போயி ஒட்டி ஒட்டி நிக்கிறதா கொழுந்து மலையில பொம்பளங்க பேசிக்கிறாங்க. நல்லவேள நம்ம புள்ள தப்பிச்சிட்டான். அவுங்க வேனுன்னா சாதியில பெரியவங்களா இருக்கலாம். ஆனா நம்ம பிள்ளைக்கு ராஜவம்சத்து பிச்சைக்காரன் ஒறவு தேவையில்லை."

அன்னம்மாவின் பேச்சைக் கேட்டு செவனுவுக்கு சிரிப்புத்தான் வந்தது. எல்லா அம்மாக்களுக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நினைத்துக் கொண்டார். அண்மைக்காலமாக அவர் தன் இளைய மகன் தொடர்பில் திருப்தியுடன் காணப்பட்டார்.

"இளசுப் பருவத்தில் எல்லாப் பிள்ளைகளும் அப்படித்தான் அன்னம்மா. நாமலும் அந்த வயச தாண்டிக்கொண்டு வந்தவங்க தானே."

அவ்வாறு கூறிக்கொண்டே செவனு அன்னம்மாவின் முகத்தைப் பார்த்தார். அன்னம்மாவின் தலையில் ஆங்காங்கே நரை விழுந்து முகத்தில் கோடுகள் ஏற்பட்டிருந்தாலும் அவள் அழகு இன்னமும் குறைந்து போய்விடவில்லை என்று அவர் நினைத்தார்.

"அம்மா... அப்பா வீட்டுக்கு வந்து விட்டாரா?" என்று கோபாலின் குரல் வீட்டுக்கு வெளியில் இருந்து கேட்டது.

"வா தம்பி, அப்பா உள்ளேதான் இருக்கிறார். என்னத்துக்கு கேக்கிறாய்." அன்னம்மா கோபாலின் குரலுக்கு பதிலளித்தாள்.

"இன்னைக்கு மத்தியானம் கொழுந்து மடுவத்துக்கிட்ட மயக்கம் வருதுன்னு சொல்லி நெலத்தில உட்காந்துட்டாராமே." இதைக் கேட்டு அன்னம்மா சற்றே துணுக்குற்றாள்.

"அவரு எனக்கிட்ட சொல்லவே இல்லையே, என்னாங்க தம்பி சொல்றது உண்மையா?" அன்னம்மா பதறிப் போய்கேட்டாள்.

கோபாலும் அன்னம்மாவும் அவர் அருகில் சென்றார்கள். அவர் பதறாமல் கொள்ளாமல் சற்றே புன்னகைத்தார்.

"அது ஒன்னும் இல்ல அன்னம்மா. லேசான பசி மயக்கம் தான். காலையில ஏதாவது சாப்பிடலாம்னு ஒத்தக் கடைப்பக்கம் போனேன்னா. அங்க ஒன்னும் இருக்கல்ல. தேத்தண்ணி மட்டும் குடிச்சுட்டு போயி வேல செஞ்சேன்னா, அதுதான்."

அவர் அந்த சம்பவத்தை மிகச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கு அது வேதனை தரும் செய்தியாக இருந்தது.

"இல்லப்பா, சும்மா பாத்துக்கிட்டு இருக்கிறது நல்லதில்ல. டவுன்ல ஜெயரட்ணம் டொக்டர போய் பார்ப்பம். அவருக்கிட்ட நல்லதுன்னு சொல்றாங்க" கோபால் தன் கருத்தை தெரிவித்தான்.

"அதெல்லாம் ஒன்னும் வேணாம் தம்பி. இப்ப எனக்கு ஒன்னும் இல்ல சும்மா அது பசி மயக்கம்தான். இதுக்கெல்லாம் போய் டொக்டருக்கு செலவழிக்கனுமா? நான் தோட்டத்து டொக்டர் கிட்ட போனேன். அவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்னும் இல்லன்னு சொல்லிட்டாரு. அதுக்கப்புறம் என்னா?" செவனு ஏற்கனவே போதை வரும் அளவுக்கு மது அருந்தியிருந்தார்.

அவர் போத்தலில் மிச்சமிருந்த சாராயத்தையும் எடுத்து ஒரே மூச்சில் குடித்து முடித்தார். அன்னம்மாவிடம் ஒரு துண்டு மாசி கொண்டுவரச் சொல்லி அதனையும் வாயில் போட்டு குதப்பினார். பின் இரண்டு பாண் துண்டுகளையும் மாசி போட்ட தேங்காய் சம்பலுடன் சேர்த்து ருசித்து உண்டார். சாப்பிட்ட உடன் மெல்ல எழுந்து சென்று சுவரோரம் விரிக்கப்பட்டிருந்த சாக்குப் படுக்கையில் படுத்துக் கொண்டு போர்வையை இழுத்து மூடிக்கொண்டார்.

அன்றிரவு செவனுவுக்கு ஒரு வினோத கனவு வந்தது. அன்னம்மா மணப் பெண்போல தன்னை அலங்கரித்துக் கொண்டு அவர் கண் முன்னே வந்து அவரது கழுத்தைக் கட்டியணைத்துக் கொள்கின்றாள். மூத்தமகன் ரெங்கநாதன் பாம்பாட்டும் மகுடியொன்றை ஊதிக்கொண்டே பாம்புப் பெட்டியொன்றையும் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு குரவன் போல் பக்கத்தில் நின்றான். கோபால் கோவிலில் பரமசிவனின் தோளில் ஏறி உட்கார்ந்திருக்கின்றான். அமரன் சாய்ந்து கிடக்கும் டிரக்டர் டிரெய்லரில் தொங்கிக்கொண்டு இருக்கின்றான். அவனது காற்சட்டை டிரெய்லருக்கு கீழே ரோதையில் மாட்டிக் கொண்டு இருக்கின்றது. டிரக்டர் முன் டிரைவர் ஆசனத்தில் யாரும் இருக்கவில்லை. ஆனால் அவரின் தம்பி ஒருவன் எஞ்சினுக்கு மேல் அமர்ந்திருந்தான். அவனது வாயில் ஒரு தங்கப் பல் நீட்டிக் கொண்டும் மின்னிக் கொண்டும் இருந்தது. அன்னம்மா கரகக் குடத்தை தலையில் தாங்கி கையில் வேப்பிலை கொத்தை வைத்துக் கொண்டு அம்மன் போல் ஆடிக்கொண்டிருந்தாள். கூடியிருந்த பக்தர்கள் "அரோகரா... அரோகரா..." என கோஷத்தை எழுப்பியமை அவரது காதுகளுக்குக் கேட்டது. அவர் எங்கோ தூரத்தை நோக்கி பறந்து சென்று கொண்டிருந்தார்.

அன்றிரவு நீண்ட நேரத்துக்குப் பின்பே கோபாலுக்கு நித்திரை வந்தது. வரிசை வரிசையாக தீப்பெட்டிகளை ஒன்றோடு ஒன்று ஒட்டி அடுக்கியது போல் அமைக்கப்பட்டிருந்த லயங்களுக்கு அப்பால் பள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்த சிறு காட்டாற்றின் சலசலப்பு ஒலி அன்று வித்தியாசமாகக் கேட்டது போல கோபாலுக்குப் பட்டது. கீழ்வானத்தில் எங்கோ பெரிய இடியும் மின்னலும் பளிச்சிட்டன. அவை பலத்த மழையொன்று பெய்யப்போகின்றதென்பதற்குக் கட்டியம் கூறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்துக் காம்பராக்களின் கூரைத்தகரங்களை பிய்த்துக் கொண்டு போகுமளவுக்கு காற்று பலமாக வீசியது. திடீரென ஏற்பட்ட குளிரைப்போக்க கோபால் தலைவரை கம்பளியை இழுத்துப் போத்திக் கொண்டான். மதிலுடன் சேர்ந்து மரக்கட்டை போல் உறங்கிக்கொண்டிருந்த அவனது தந்தையிடம் இருந்து வழக்கமாக எழுகின்ற குறட்டைச் சத்தம் அன்று கேட்கவில்லை. அதனை அவன் பொருட்டாக கருதவும் இல்லை. லயத்தின் ஸ்தோப்பில் ஒரு பாய்த்துண்டில் படுத்துக் கொண்டிருந்த அன்னம்மா நித்திரையின் உச்சத்தில் இருந்தாள். சுற்றுப் புறத்தில் எழுந்த எந்தவிதமான சலசலப்புக்களும் அவளது சுக நித்திரைக்கு பாதகமாக இருக்கவில்லை.

அதிகாலையிலேயே எழுந்து விட்ட கோபால் முகங்கழுவி காலைக் கடன்களை முடித்துக்கொள்ள பள்ளத்தில் ஓடைப்பக்கம் சென்றான். அன்னம்மா அடுப்பு மூட்டுவதில் ஈடுபட்டிருந்தாள். அவள் தேத்தண்ணியை ஊத்திக் கொண்டுதான் செவனுவை எழுப்புவாள்.

கோபால் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பல் துலக்கி கை, கால் முகங்கழுவிக் கொண்டு டவலை கழுத்தைச் சுற்றிக் போட்டுக் கொண்டு மீண்டும் லயத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்போதுதான் நெஞ்சை உறையச் செய்யும் அந்த ஒப்பாரிச் சத்தம் அவன் லயத்தில் இருந்து கேட்டது.

"ஐயையோ...... ஐயையோ..... ஆண்டவனே". என்னை தவிக்க விட்டுட்டு இப்படி தனியா போயிட்டீங்களே.... ஐயோ..... ஐயையோ......" அன்னம்மா பெருங்குரலெடுத்து ஒப்பாரி வைத்தாள். கோபால் ஒன்னும் புரியாதவனாக லயத்தை நோக்கி ஓடினான். பலர் கோபாலின் லயக் காம்புராவுக்கு முன்னால் கூடியிருந்தனர்.

ஓடோடிச் சென்ற கோபாலை வாரியணைத்த அன்னம்மா "நம்மையெல்லாம் தவிக்க விட்டுட்டு ஒங்கப்பா போயிட்டாரே..." என்று மீண்டும் ஓலமிட்டு அலறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு தந்தையின் அப்பழுக்கற்ற அன்பு

கோபால் தன் அன்புத்தந்தையின் மரணச்செய்தி கேட்டு பெருவேதனை அடைந்தான். செவனு எல்லாரிலும் விட அவன் மீதே அதிக பாசம் கொண்டிருந்தார். அவன் சில கணங்கள் அன்னையை கட்டிப்பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழுதான். பின் தந்தையை ஒரு முறை பார்த்துவிட வேண்டுமென்று லயக் காம்பிராவுக்குள் நுழைந்தான்.

அவன் தந்தையின் உடல் ஒரு வெள்ளைத்துணியால் தலைவரை மூடப்பட் டிருந்தது. கோபாலுக்கு அதைப்பார்க்க மேலும் மேலும் துக்கம் அதிகரித்தது. முதல் நாள் இரவு அவனுக்கு மிக அருகிலேயே உறங்கிக்கொண்டிருந்த அவன் தந்தையின் உயிர் போனதை அவன் அறியாமல் போனமை தொடர்பில் மிக வருத்தப்பட்டான். அவனது சுற்றுச் சூழலில் இருந்தவர்கள் அவர்களின் லயக் காம்பராவை ஒதுங்கவைப்பதில் ஈடுபட்டிருந்தனர். முன் வாசலுக்கருகில் கட்டமிடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்த அவர்கள் எல்லாருமிருந்த குடும்பப்படம் சுவற்றுப் பக்கம் திருப்பி மாட்டப்பட்டிருந்தது. சாமிப்படங்களும், மகாத்மா காந்தி, நேரு படங்களும் தொங்கியபடியே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி... சரி... இனி அழுது பிரயோசனமில்லை. ஆகவேண்டியதை பார்க்கவேண்டும் என கோபாலின் தோளில் கைவைத்து பெருமாள் கங்காணி கூறினார். செவனு இப்படி பொசுக்குனு போயிருவான்னு அவர் கூட நெனைக்கல"

நந்தசிரி, ஆரியவங்ச, விஜேபால, செல்லமுத்து, சேதுராம் முதலான அவனது எல்லா நண்பர்களும் சேதியை கேள்விப்பட்டதும் வந்து சேர்ந்தனர்.

"கோபால் நீ ஒன்றுக்கும் வருத்தப்படாதே. எல்லா காரியங்களையும் நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம். நீ வருகின்றவர்களை மாத்திரம் கவனி." என்றான் நந்தசிரி.

தான் வேதனையடைந்த நேரத்தில் அவர்கள் எல்லோரும் உடனயே வந்து காரியங்களை கவனித்தமை கோபாலுக்கு ஆறுதலளித்தது. அவன் தான் தனிமைப்படவில்லை என்பதை உணர்ந்தான். எனினும் அவன் தான் தந்தை மீது வைத்திருந்த அன்பும் மதிப்பும் மரியாதையும் அவன் மனதில் சோகத்தை ஏற்படுத்தி பாரமாகக் கனக்க செய்தது.

அவனது தந்தை உயிரோடு இருந்தபோது பெரிதும் படாடோபம் ஆரவாரம் இல்லாது மௌனமாகவே அவன்மீது அன்பு செலுத்தினார் என்பது அவன் மனதுக்கு மட்டுமே புரிந்த விடயம். அவன் தான் தோன்றித்தனமாக நண்பர்களுடன் சேர்ந்து கூத்தடித்து பொழுதை வீணடித்தபோது அவன் அம்மா தந்தையிடம் இது தொடர்பில் புகார் சொன்ன போதுகளில் அப்பா எவ்வளவுதான் கடிந்து கொண்டாலும் அப்போதெல்லாம் அவர் அவன் மீது கோபப்படவில்லை என்பது அவனுக்குத் தெரியும். குறிப்பாக தியாகுவின் பாட்டுக்கச்சேரிகளும் டிரம் டோலக் இசைப்பதிலும் அம்மா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அப்பா "இளசுகள் இப்படித்தான் நடந்து கொள்வார்கள்" என அம்மாவை சமாதானப்படுத்துவார்.

ஆனால் அவர் பயந்ததெல்லாம் அவனது அண்ணனான ரெங்கநாதனும் அப்படித்தான் நண்பர்களுடன் கூடிக்கும்மாள மடித்து இறுதியில் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி சூழ இருந்தவர்கள் யாருக்குமே வேண்டாதவனாகிப் போனான். இருந்தாலும் அப்பா அண்ணனை ஒரு போதும் வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. இடையில் அண்ணன் அப்பாவுடன் சண்டை பிடித்துக்கொண்டு யாரோ ஒருத்தியை திருமணம் செய்து கொண்டு வீட்டுக்கு கூட்டிவந்த போது அவரை ஏசி விரட்டவோ தள்ளி வைக்கவோ இல்லை. புதிய மருமகளுக்கு முன்னாள் அவர்கள் இருவருக்கும் உரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை கொடுத்து அவன் இனியாவது திருந்த வேண்டுமென்று புத்திமதிகள் கூறி அனுப்பி வைத்துவிட்டு அவர் தனி மையில் போயிருந்து துக்கப்பட்டது கோபாலின் மனதில் இப்போதும் பசு மையாக ஞாபகத்தில் இருக்கிறது.

அதேபோல் அவர் அண்ணன் தொடர்பில் மிகவும் சந்தோஷப்பட்ட தினம் அண்ணனுக்கு அமரன் என்ற ஆண்குழந்தை பிறந்த தினம். அன்று அவர் அண்ணன் வீட்டுக்கு போய் அமரனை கொஞ்சிவிட்டு வந்து ஏற்பட்ட மகிழ்ச்சியால் அதனைக் கொண்டாட சாராயம் குடித்துவிட்டு வந்து தன் பேரனைப்பற்றி முழு நாளும் வர்ணித்து புலம்பிக்கொண்டிருந்தார். அப்போது அவரின் அந்த அப்பாவித்தனத்தை கண்டு கோபால் பரிதாபப்பட்டிருக்கின்றான். அதன் பின் அவன் அமரனை எப்போது கண்டாலும் கொஞ்சத்தவறுவதில்லை. சில சமயம் அவர் டிரக்டர் ஓட்டும்போது அவனை ரோட்டருகில் கண்டால் அவனை தூ க்கி தன் மடியில் வைத்துக்கொண்டு டிரக்டரில் ஒரு சுற்று சுற்றி விட்டு வருவார். இப்படி அவன் தன் தந்தை தொடர்பில் பழைய நினைவுகளை மீட்டுப்பார்த்து லயத்துக்கு சற்றே எட்ட போடப்பட்டிருந்த ஒரு மரக்குற்றியில் அமர்ந்து தூரத்தே வேகமாக பிரவகித்து ஓடிக்கொண்டிருந்த காட்டாற்றை வெறித்துப் பார்த்தவாறு சோகத்தில் மூழ்கியிருந்தான்.

அவன் அவ்வாறு சோகத்தில் மூழ்கியிருந்த போது ஆரியவங்ச வந்து அவனை ஏதாவது சாப்பிடும்படி அழைத்தான். அதற்கு மறுத்துவிட்ட கோபாலை பலவந்தப்படுத்தி தேத்தண்ணியாவது வந்து குடி என்று அழைத்துக்கொண்டு அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆரியவங்ச வசித்த லயத்து காம்பராவுக்கு சென்றான்.

"எங்கே நந்தசிரியை காணவில்லை" கோபால் ஆரியவங்சவிடம் கேட்டான்.

"சேதுபதி தலைவரும் அவனும் கன்டக்கரை பார்க்கப் போயிருக்கிறார்கள். மையப்பெட்டி பற்றி பேசவும் உபகார காசு வாங்கவுமாக இருக்கும்" என்றான் ஆரியவங்ச.

தோட்டங்களில் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தவர்கள் இறந்து போய்விட்டால் மையப்பெட்டி ஒன்றும் அடிப்படை செலவுக்கென ஒரு சிறு தொகை நிதியையும் உதவியாகக் கொடுப்பார்கள். அது அவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பத்தில் பேருதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்க அண்ணன் வந்திருந்தத கண்டியா ஆரி?" கோபால் மீண்டும் கேள்வி எழுப்பினான்.

"ஆமா ரெங்கநாதன் அண்ணன் வந்து பார்த்துட்டு போனாரு, வேணான்னு சொல்லியும் கேக்காம தேவையான சமானெல்லாம் வாங்கிக்கிட்டு வாறேன்னு சொல்லிட்டு போயிருக்காரு".

"அவர்கள் ஆரி வீட்டுக்கு போனபோது அங்கே பாணும் சம்பலும் தயாராக இருந்தது. ஆரியின் அம்மாவும் அக்காவும் அவற்றை தயாரித்திருந்தனர். ஆரி அம்மாவிடம் தேத்தண்ணி தயாரிக்க சொன்னான். அப்போது செல்லமுத்துவும் அங்கு வந்து சேர்ந்தான். ஆரி இருவருக்கும் பாண், சம்பல் என்பனவற்றை எடுத்துக்கொடுத்தான். செல்லமுத்து ஆர்வமாக மூன்று துண்டு பானை சம்பலுடன் முழுங்கி இருந்தாலும் கோபால் கடுமையாக யோசித்து கொண்டு ஒரு பாண் துண்டை மாத்திரம் எடுத்து அதன் நுனித்துண்டை மெதுவாகக் கடித்துக் கொண்டிருந்தான்."

ஆரியவங்சவின் லயத்துக் காம்புரா பார்ப்பதற்கு மிக சுத்தமாகவும் அலங்காரப்படுத்தப்பட்டும் இருந்தது. அவர்கள் இரண்டு லயத்துக் காம்புராக்களை இணைத்திருந்தார்கள். சுவர்கள் வர்ணம் பூசப்பட்டு நேர்த்தியாக இருந்தன. படுக்க இரண்டு கட்டில்கள் கூட இருந்தன. ஆரியின் அப்பா உயிருடன் இல்லை. அவரது பெரிய உருவப்படம் அழகாக பிரேம் செய்யப்பட்டு சுவரில் தொங்கிக்கொண்டிருந்தது. அதனை பார்த்ததும் தன் தந்தையின் படத்தையும் அவ்வாறு பிரேம் செய்து சுவரில் தொங்கவிடவேண்டுமென்று கோபால் நினைத்துக்கொண்டான். இனிமேல் தன் தந்தையை படத்தில் மாத்திரம் தான் பார்க்கலாம் என்று நினைத்தபோது அவனுக்கு மேலும் துக்கமாக இருந்தது.

கோபால் மேலும் சோகத்தில் ஆழ்ந்துவிட்டதை நினைத்து ஆரியவங்சவுக்கும் துக்கமாக இருந்தது. அவன் கோபாலின் தோளில் கைபோட்டு அவனை அணைத்துக்கொண்டு ஆசுவாசப்படுத்தினான். கோபால் ஒருவாறு ஒரு வெறும் பாண் துண்டொன்றை சாப்பிட்டு பிளேன்டியை குடித்து முடித்தான். அவனுக்கு இந்த நேரத்தில் என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. அவர்களின் உறவுகள் சொந்த பந்தங்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்பது கூட அவனுக்குத் தெரியாமல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செவனுவின் இறுதிப்பயணம்

கோபால் தன் தந்தையின் திடீர் மறைவால் மிகவும் மனங்குழம்பிப் போயிருந்தான். அவனுக்கு இந்தத் தருணத்தில் என்ன செய்வதென்று ஒன்றும் புரியாமல் இருந்தது. அவன் தன் கையறு நிலைமையை ஆரியவங்சவிடம் தெரிவித்தான்.

"என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. ஆரி சொந்தக்காரர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு அவர்களுக்கு சொல்லி யனுப்பனும். இல்லாட்டி தந்தியடிக்கனும். எங்க அப்பாவுக்கு நகுலன் என்று ஒரு தம்பியிருக்கிறார். நாவலப்பிட்டி நகுலன் டிரான்ஸ் போட் அவருடை யதுதான்."

கோபால் இறுதியாக உச்சரித்த வரிகள் ஆரியையும் செல்லமுத்துவையும் ஆச்சரியப்பட வைத்தன. நகுலன் டிரான்ஸ் போர்ட் கம்பனியை அந்தப் பிரதேசத்து மக்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். அது ஒரு பிரசித்தமான கம்பனி. ஆனால் அதன் உரிமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலின் சித்தப்பா என்று அறிந்ததும் அவர்கள் புதுமையடைந்தனர். அந்தத்தோட்டத்தில் அநேகமானவர்களுக்கு இந்த விடயம் தெரியாது.

"நீ சொல்வது உண்மையா கோபால்? நகுலன் டிரான்ஸ் போட் உரிமை யாளர் உன் சித்தப்பாவா? பதினைந்து இருபது லொறிகள் ஓடுது. பெரிய பணக்காரன். நீ என்னான்னா கஞ்சியையும் கூழையும் குடிச்சிக்கிட்டு இங்கே கெடக்குற."

ஆரி சொன்னதைக் கேட்டு கோபால் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். "அதப்பத்தியெல்லாம் பேசி பிரயோசனமில்லடா. நாங்க அவங்க எங்க உறவுக்காரங்கன்னு சொல்லிக்கொள்றது கூட இல்ல. எங்க அப்பாவுக்கும் அவர் ஒரேயொரு தம்பி. அப்பா இந்த தோட்டத்தில் இப்படி வயசு போன காலத்திலேயும் டிரக்டர் ஓட்டி வேலை செஞ்சுக்கிட்டிருக்கிறாரு என்பது அவருக்கு தெரியாததில்ல. எங்கப்பா ஒரு நாளும் அவங்க கிட்ட போய் ஒதவி கேட்டது கிடையாது. நாங்க இங்கே லயத்தில இருந்து தோட்டத்தில் வேலை செய்றது அவங்களுக்கு அந்தஸ்து கொறச்சல். நாங்க மரணச் செய்தி அனுப்பினாலும் அவங்க வருவாங்களான்னு சந்தேகம் தான். இருந்தாலும் ஒரு கடமைக்காக செய்தி அனுப்பத்தான் வேணும் ஆரி. நீ நாவலப்பிட்டிக்கு தந்தி ஒன்று அடிச்சிரு. அட்ரஸ் நகுலன், டிரான்ஸ்போர்ட் மெயின் வீதி, நாவலப்பிட்டி."

அவர்கள் தமக்குள் பேசிக்கொண்டே கோபாலின் லயத்துக்கு மீண்டும் வந்தார்கள். அங்கே இப்போதும் அவன் அம்மா தந்தையின் உடல் அருகே அமர்ந்து கொண்டு விசும்பி அழுது கொண்டிருந்தாள். அவன் அவள் அருகில் சென்று அவளை ஆசுவாசப்படுத்தினான்.

"தம்பி! சொந்தக்காரர்களுக்கெல்லாம் செய்தி சொல்லியனுப்பனும் வீட்டுக்குள்ள பழைய டிரங்க் பெட்டியில் ஒரு எக்சைஸ் கொப்பி இருக்கும். அதுல கொஞ்சம் அட்ரஸ் இருக்கு அவுங்களுக்கெல்லாம் தந்தியடிச்சிடு. நாவலப்பிட்டியில நகுலன் சித்தப்பாவுக்கும் ஒரு தந்தியடி"

அன்னம்மா கோபாலிடம் செய்ய வேண்டியதை சொல்லிவிட்டு மீண்டும் விசும்பி அழத்தொடங்கினாள்.

செவனு அண்ணனுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கு பலரும் வந்து குவியத் தொடங்கினர். அவர்களில் சிங்கள முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் பலரும் இருந்தனர். இந்த மரணச் செய்தி காரணமாக கோவில் பண்டாரத்தின் மகள் தொரசாமியுடன் ஓடிப் போய்விட்ட கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுங்கிப் போய் விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக செவனு அண்ணன் நாவலப்பிட்டி நகுலன் டிரான்ஸ்போட் நிறுவனத்தின் அதிபதி நகுலனின் சகோதரர் என்ற விடயம் அவரது மரணத்துடன் அம்பலத்துக்கு வந்ததால் இது தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டது.

அடுத்த நாள் ஈமக்கிரிகைகளுக்கு முன்னதாக நகுலன் தன் மூத்த சகோதரருக்கு இறுதியஞ்சலி செலுத்துவதற்காக வந்திருந்தார். அவர் மட்டுமே தனியாக வந்திருந்தார். ஒரு புதிய பெரிய பென்ஸ் காரில் அவர் வந்து இறங்கிய போது அங்கிருந்தோர் புதுமையுடன் அதனை அவதானித்தனர். கார் சாரதி கொண்டு வந்திருந்த அரிசி முட்டை பையும் மற்றும் பொருட்களையும் காரின் டிக்கியில் இருந்து எடுத்துக்கொண்டு வந்தான்.

நகுலன் நேராக அன்னம்மாவிடம் சென்று அவளை கைகூப்பி வணக்கம் செலுத்தினார்.

பின் ரெங்கநாதனிடமும் கோபாலிடமும் கனிவாகப்பேசி ஆறுதல் கூறினார். அதன் பின் அங்கு வருகை தந்திருந்த தோட்டத்தின் உயர் அதிகாரிகள் சிலருடனும் பொது விடயங்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தார். அங்கே அமர்ந்து பேசுவதற்காக வாசலில் இரும்புத்தூண்களும் கம்பிகளும் கொண்டு மடுவம் ஒன்று கட்டப்பட்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. நகுலன் இறுதிக் கிரிகைகள் முற்றுப்பெறும்வரை அங்கே அவர்களுடன் இருந்தமை அன்னம்மாவுக்கும் கோபாலுக்கும் ஆறுதல் அளிப்பதாக இருந்தது. அத்துடன் இறுதிக் கிரிகைகளில் ஏதும் குறைபாடு இல்லாத வகையில் ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்பதற்காக நகுலன் தாராளமாக கைவீசி பணத்தை செலவழித்தார்.

ரெங்கனாதன் கட்டப்பட்டிருந்த மடுவத்துக்கு பின்னால் மேசை ஒன்று போட்டு அங்கே மதுப்புட்டிகளை வைத்து நகரத்தில் இருந்து வந்திருந்த தன் நண்பர்களுக்கும் தோட்ட அதிகாரிகளுக்கும் மது உபசாரம் செய்து கொண்டிருந்தார். சிகரட் ஒரு பண்டல் வாங்கி நந்தசிரி, ஆரியவங்ச மற்றும் அவர்களது நண்பர்களுக்கும் கொடுத்தார். அவர்களே அங்கே எல்லா வேலை களையும் பம்பரமாக சுழன்று செய்து கொண்டிருந்தனர். தனது சகோதர னின் மறைவின்போது அவரது மனைவி இரண்டு பிள்ளைகள் ஆகியோ ருடன் அவர்களது சோகத்தில் பங்கு கொள்ள இவ்விதம் சகல சமூகத்தினரும் திரண்டு வந்திருந்தமையைப்பார்க்க நகுலனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையாகவும் அதே சமயம் அவர்கள் இவ்விதம் ஏழ்மையில் விழுந்து கிடப்பது தொடர்பில் துக்கமாகவும் இருந்தது. அவர் இறுதிக் கிரிகைகள் முடிந்து லயம் வரையில் தனது பென்ஸ் காரிலேயே சென்றார்.

அவர் பென்ஸ் காரில் இருந்து இறங்கி லயக் காம்புராவின் வாசலில் இன்னமும் அழுதவாறிருந்த அன்னம்மாவிடம் சென்று தன் சட்டைப் பையில் இருந்து பண நோட்டுக்கள் அடங்கிய தடித்த கவரொன்றை எடுத்து அவள் கையில் திணித்து விட்டு விடைபெற்றுச் சென்றார். அவர் காரில் ஏறி சிறிது தூரம் வரையில் செல்லும்வரை அன்னம்மாவின் சோகம் கப்பியமுகம் அவர் மனத்திரையில் இருந்து அகலவில்லை.

ஏற்கனவே தோட்டத்து வயது முதிர்ந்த சில பெண்கள் வந்து பலவந்தமாக அன்னம்மாவை இழுத்துச்சென்று அவள் அணிந்திருந்த பூ பொட்டுக்களை அழித்து வளையல்களை கழற்றி ஒடித்து ஆபரணங்களை அகற்றி அவள் இனிமேல் இச்சமூகத்தின் பார்வையில் விதவை என்ற பட்டத்தை சூட்டி அவளை மூளியாக்கி இருந்தார்கள். அவள் அந்தத் தோற்றத்தில் மேலும் பரிதாபகரமாகக் காட்சியளித்தாள்.

"சேர் செவனு அண்ணனின் மரண அறிவித்தலை டவுன்லயெல்லாம் கூட ஒட்டியிருக்காங்க"

நகுலனின் டிரைவர் சாந்தனின் வார்த்தைகள் நகுலனின் சிந்தனைகளைக் கலைத்தது.

"உண்மையில் அண்ணன் அதிர்ஷ்டசாலிதான். தன் மரணத் தறுவாயில் எந்தவித துக்கத்தையும் அனுபவிக்காமல் போய்ச் சேர்ந்து விட்டார். அத்துடன் அவரது மரணத்துக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்தாயா? மூவின மக்களும் எவ்வளவு ஒற்றுமையாக அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். எல்லா வேலைகளையும் சிங்கள இளைஞர்கள் தான் முன்னின்று செய்தார்கள். அவர் கொடுத்து வைத்தவர்தான். அவரது இரண்டு பிள்ளைகளையும் சமூகத்தில் நன்றாகவே வளர்த்து விட்டுள்ளார்."

அவர் நெஞ்சில் இருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "கங்காணிமாமா, ஓம் பொண்ணைக்கொடு"

ஒருவாறு செவனுவின் இறுதிக்கிரிகைகள் எல்லாம் முற்றுப் பெற்றன. இந்து சமய பாரம்பரியத்தின் பிரகாரம் இளைய புத்திரனான கோபாலின் தலையில் இருந்து முடியிறக்கம் செய்யப்பட்டது. தன் தந்தையின் பிரிவால் வாடிப்போயிருந்த கோபாலுக்கு இறுதியாக தன் தந்தைக்காக தனது தலை முடியையாவது தியாகம் செய்ய கிடைத்தமை மன ஆறுதலைத்தந்தது.

அவன் தலை முடியிறக்கி குளித்து விட்டு வீடு வந்தபோது வீட்டின் வாசற்படியில் உரலை தலைகீழாகவும் உலக்கையை குறுக்காகவும் வைத்திருந்தார்கள். அதன் பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. மரண கிரிகைகளின் இறுதி அங்கத்தின் பிரகாரம் உரலை காலால் உதைத்து பிரட்டித்தள்ளி விட்டு பாத்திரத்தில் இருந்த தண்ணியில் கைகால் கழுவி விட்டு உலக்கையைத்தாண்டிக்கொண்டு வீட்டுக்குள் பிரவேசிக்க வேண்டும். இப்படிச்செய்வதன் மூலம் இடுகாட்டில் இருந்து தம்மைத்தொடர்ந்து வரும் பூத ஆத்மாக்களை வீட்டுக்குள் பிரவேசிக்காமல் தடுக்கலாம் என்பது சமூக ஐதீகமாக இருந்தது. கோபால் அதற்குக் கட்டுப்பட்டு அங்கிருந்தோரின் எண்ணத்திற்கு தலை வணங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் கிரிகைகளின்போது வருவோரின் வசதி கருதி முன்வாசலில் போடப்பட்டிருந்த மடுவம் இன்னமும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. தோட்டத்தின் குறுங்குட்டான் பயல்கள் எல்லாம் அதில் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் ஊன்றப்பட்டிருந்த இரும்புத்தூ ண்களில் ஏறி வழுக்கி வழுக்கி விளையாடிக்கொண்டிருந்தனர். அந்த வண்டுப்பயல்கள் மத்தியில் அவனது அண்ணன் ரங்கநாதனின் மகன் அமரனும் இருந்தான்.

வழமையான நாளாக இருந்தால் அமரனை அவன் அதட்டியிருப்பான். ஆனால் அன்று அதைப்பார்த்ததும் அவனுக்கு ஏதும் எண்ணத்தோன்றவில்லை. அவன் சிறிது நேரம் அவர்களைப் பார்த் துக்கொண்டிருந்தான். எனினும் கோபால் தன்னை அவதானிக்கிறான் என்று அமரனுக்கு அவன் உள்ளுணர்வு அறிவித்துவிட்டது. அவன் விறுவிறுவென்று கீழே இறங்கி வந்து நல்ல பிள்ளையாகி விட்டான். பின் கோபாலை பார்த்து சிரித்துக்கொண்டு "ஆய் கோபால் சித்தப்பாவுக்கு மொட்டை அடிச்சிட்டாங்க" என்று சத்தம் போட்டு கத்தினான்.

அதைக்கேட்டு திரும்பிப்பார்த்த எல்லாப் பிள்ளைகளும் ஓஹோ என்று சிரித்தனர்.

சில நாட்கள் அமைதியாக நகர்ந்து சென்றன.

ஏனைய நாட்கள் போல் அல்லாமல் தோட்டத்து இளம் யுவதிகள் தன்னைப்பற்றி வித்தியாசமாக பார்ப்பது போல் கோபாலுக்குப்பட்டது. அதற்கான காரணம் தன் தலை மொட்டையடிக்கப்பட்டிருப்பதனால் இருக்கலாம் என்று அவன் நினைத்தான். ஆனால் அவன் நினைத்தது தவறானதாகும். அவர்கள் அவனை அவ்விதம் புதுமையாகப் பார்த்தமைக்கான உண்மைக்காரணம் அவனது சித்தப்பா ஒரு கோடீஸ்வரன் என்பதனாலாகும்.

ஆனால் கோபால் தனது சித்தப்பாவைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

"எனக்கு வேலைக்குப்போறதுக்குக் கூட ஒரு மாதிரியாக இருக்கு நந்தே. இந்த மொட்டையால, பொம்பள புள்ளைங்க கூட எளக்காரமாக பார்க்குறாங்க."

கோபால் விரக்தியடைந்தவன் போல் நந்தசிரியிடம் கூறினான். அவன் சொல்வதை அவதானமாக செவிமடுத்துக்கொண்டிருந்த நந்தசிரி அவனை கணக்கெடுக்காதவன் போல் பாவனை செய்து தான் கடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று கொண்டிருந்த சிறு ரொட்டித்துண்டை முழுவதுமாக சப்பி சுவைத்து முழுங்கினான். அதன் பின்னரே அவன் வாய் திறந்தான்.

"நண்பா, இளம் பெண்பிள்ளைகள் இளம் ஆண் பிள்ளைகளைப் பார்க்காமல் வயோதிபர்களையா பார்ப்பார்கள்? அது அது அந்தந்த காலத்தில் அப்படித்தான் நடக்கும். எனக்கு அப்படி சான்ஸ் கெடச்சா நான் எங்கோ போயிருப்பேன். கெடைக்குதில்லையே"

நந்தசிரியின் கதையைக் கேட்டு எல்லாரும் சிரித்தார்கள். அவர்கள் எல்லோரும் அப்போது வேலை செய்து களைத்துப்போய் தேநீர் குடிப்பதற்தாக மர நிழலில் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் தொரசாமி கங்காணியும் இருந்தார். அவருக்கும் இளசுகளின் இந்த பேச்சைக்கேட்டு சிரிப்புத்தான் வந்தது.

"என்ன தொரசாமி மாமா. ஓம் பொண்ண எனக்குக் கட்டித் தருவதானே" அவரையும் கிண்டினான் நந்தசிரி. ஆனால் இம்முறை அவருக்கு கோபம் வரவில்லை. அவிங்க என்னவாவது சொல்லிவிட்டுப் போகட்டும்னு சும்மா இருந்து விட்டார். அதனைத்தொடர்ந்து அவர் அனைவரையும் வேலைக்குத்திரும்பும்படி அழைத்தார்.

"சரி, சரி, சிரிச்சி பேசினது போதும். நேரஞ்சரி எல்லாரும் வேலையை பாருங்க. நந்தசிரி எந்திரி" கங்காணி கட்டளையிட்டார்.

"என்ன கங்காணி மாமா அவ்வளவுக்கு சுருக்குனு கூப்பிட்டா எப்படி. இன்னும் பீடி குடிச்சு முடியலயே குடிச்சிட்டு வரும் வரைக்கும் பொறுங்க. ஓங்களுக்கு எம்பேரு மட்டுந்தான் தெரியுமா ? வேற யாரு பேரும் தெரியாதா?"

கங்காணி நந்தசிரி இருந்த இடத்துக்குச் சென்று தான் கட்டியிருந்த கடிகாரத்தைக்காட்டி பேசினார்.

"அரை அவருக்கு மேல இரண்டு நிமிசம் அதிகம் கொடுத்திருக்கேன். பத்தாதா?"

"கங்காணி மாமா? அது ஓட்ட உருலோசு. சம்பளங்கிடைச்சதும் நாங்க சல்லி சேர்த்து ஒரு நல்ல உருலோசு வாங்கித்தாறம் என்ன?"

நந்தசிரியின் பேச்சைக் கேட்டு எல்லாரும் சிரித்தார்கள்.

தொரசாமி கங்காணியும் அவர்களோடு சேர்ந்து சிரித்தார். அவர் தனது இளமைக்காலத்தையும் நினைத்துப்பார்த்துக்கொண்டார். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்காணிகளுக்கு பயந்து நடுங்கி அடங்கியிருந்த காலம். ஒரு போதும் அவர்கள் கங்காணியை எதிர்த்து பேசினது கிடையாது. ஆனால் இன்றைய இளைஞர்கள் கங்காணிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பயப்படுவதே கிடையாது என்பது அவர் சிந்தனையில் ஓடியது. அவர் தன் மகளின் திருமணத்துக்கு கோபால் நந்தசிரி மற்றும் அவர்களின் நண்பர்களையும் அழைக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்.

தன் தந்தையின் மரணத்தின் பின்னர் வீட்டின் தலைமைப்பொறுப்பை கோபால் ஏற்க வேண்டியிருந்தது. அன்னம்மாவும் அதற்கேற்றால் போல் அவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடந்து கொண்டாள். அவர்கள் வீட்டில் ஒரு நாளைக்கு ஒரு நேரம் மாத்திரமே இரவு வேளையில் உலை வைக்கப்பட்டது. அதில் இருந்து முதற்சோறு கோபாலுக்கே பகிரப்பட்டது. கணவனைப் போல் இரவில் ஒவ்வொரு நாளும் மதுபானம் அருந்தாத கோபால் சம்பளத்தன்று மாத்திரம் நண்பர்களுடன் சேர்ந்து சிறிது மது அருந்தப்பழகியிருந்தமையை அன்னம்மா அறிந்து கொண்டிருந்தாள்.

எனினும் அவள் அது தொடர்பில் தம் பிள்ளையை கண்டிக்கப் போகவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் தன் கணவனின் வாயில் இருந்து உமிழ்ந்த மது வாடையை சகித்துக்கொண்ட அவளுக்கு எப்போதாவது இருந்திருந்து மகனின் வாயில் இருந்து வரும் மது வாடையை பொறுத்துக்கொள்வது பாரதூரமானதாக இருக்கவில்லை. எனினும் மூத்த புத்திரன் ரங்கநாதனைப்போல் கோபாலும் ஒரு பெரும் குடிகாரனா கப் போய்விடக்கூடாது என்று அவள் பயப்படாமலும் இல்லை. அதனால் விரைவிலேயே மகனுக்கு திருமணம் ஒன்றை செய்து கொடுத்துவிட வேண்டுமென்று விரும்பினாள். இது தொடர்பில் கோபாலை தொடர்ந்து தொடர்ந்து நச்சரித்து வந்தாள். ஆனால் கோபால் அதனை காதில் போட்டுக்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29



# அம்மாவ நல்லா கவனிச்சுக்கனும்

கோபாலின் அம்மா அன்னம்மா அவனை திருமணம் செய்து கொள்ளும் படி தொடர்ந்து தொடர்ந்து நச்சரித்துக் கொண்டிருந்தாலும் கோபால் அது தொடர்பில் கொஞ்சமும் அக்கறை காட்டாமல் இருந்தான். அன்று அவள் கோபாலை அருகே வரும்படி அழைத்தாள். அவள் அவர்களின் ஒரே சொத்தான டிரங்குப் பெட்டியை எடுத்து வந்து அதனைத் திறந்து ஒரு தடித்த உறையை எடுத்தாள். அந்த தடித்த கடித உரை செவனுவின் இறுதிக் கிரிகையின்போது செவனுவின் தம்பி நகுலனால் கொடுக்கப்பட்டது. அதில் இருப்பத்தையாயிரம் ரூபாய் இருந்தது.

அதனை டிரங்குப் பெட்டியில் வைப்பது பாதுகாப்பானது அல்லவென்றும் வேறு எங்காவது பாதுகாப்பாக வைக்க வேண்டுமென்றும் அன்னம்மா கூறினாள். அதன்படி உள் காம்புராவின் ஒரு மூளையில் ஒரு சிறு குழி தோண்டி அந்த பணம் வைக்கப்பட்டிருந்த கவரை பிளாஷ்டிக் உறையால் சுற்றி பாதுகாப்பாக அங்கே புதைத்து வைத்தனர். அந்த இடம் கோபாலுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே அன்னம்மாள் அவ்விதம் செய்தாள். பின் அவ்விடத்தில் மண்போட்டு மூடி கெட்டியாக்கி மேலே சாணத்தால் மெழுகி விட்டாள்.

அடுத்த நாள் கோபால் வீட்டின் முன்பிருந்து தூரத்தே தெரியும் சிற்றாறையும் நீர் வீழ்ச்சியையும் ஏதோ யோசனையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக்கொண்டிருந்தான். பின்னால் வந்து அவன் தோளைத்தட்டிய அன்னம்மா

"தம்பி இனிமே நீ பொறுப்புள்ளவனா நடந்துக்கனும். நண்பர்களோட அங்கே இங்கேன்னு சுத்திக்கிட்டு இருக்கேலாது. என்னால கூட இனிமேல் மலை மேடெல்லாம் ஏறி தட்டு புட்டுன்னு வேலை செய்ய முடியாது. முன்பு மாதிரி மேலதிகமா கொழுந்து பறித்து கைக்காசு வாங்குற வேலையும் செய்ய முடியாது" என்று கூறி அருகில் படுக்க வைத்துப் போடப்பட்டிருந்த மரக்குற்றியில் அமர்ந்து கொண்டாள். கோபால் அம்மாவின் பேச்சை காது கொடுத்துக்கேட்டான். அப்பா இறந்த சோகத்தில் இருந்து அவள் இன்னமும் மீளவில்லை போல் அவனுக்குத் தோன்றியது. அத்துடன் அப்பா இறந்ததை தொடர்ந்து தோட்டத்தின் வயது முதிர்ந்த பெண்கள் அம்மாவைக் கூட்டிச் சென்று தாலியை பறித்து, பொட்டு ஆபரணங்களை கலைத்து வளையல்களை ஒடித்துப்போட்டு அவளை மூளியாக்கி வித வைக் கோலத்திற்கு கொண்டு வந்திருந்தமையும் அன்னம்மாவின் மனதைப் பாதித்திருக்க வேண்டுமென்று கோபாலுக்குத் தோன்றியது.

வேறும் பல பெண்களுக்கு நகுலன் முதலாளி அன்னம்மாவின் கொழுந்தன் என்ற உண்மையை சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அவர்கள் அன்னம்மாவின் காது படவே பலவி தமான பொறணிப் பேச்சுக்களையும் இல்லாததும் பொல்லாததுகளையும் பேசிக்கொண்டு திரிகின்றனர் என்பதும் கோபா லுக்கும் தெரியாததல்ல.

இதையெல்லாம் யோசித்த கோபால் தன் அம்மாவை ஆறுதல் படுத்த நினைத்தான்.

"சரி... சரி... அம்மா நீ ஒன்னுக்கும் கவலைப்படாத. இப்ப நான் எந்த ஒரு தப்பான காரியத்தையும் செய்யலையே. நீ இனிமே வேலைக்கு போக வேணாம். அம்மாவ நல்லா வச்சி பாத்துக்க என்னால முடியும்" என்றான் கோபால் அம்மாவிடம் உறுதியாக.

அன்னம்மாவுக்கும் அவனது அந்த பொறுப்பான பதில் ஆறுதலாக இருந்தது.

"சரி தம்பி நீ உறுதியாக இருந்தா நான் இனிமே வேலைக்குப் போகல. அதனால புரொவிடன் பண்ட் எடுக்கலாம். பதினைஞ்சி இருபதாயிரம் தேறும். அப்பாவோட சல்லிய அவர் முன்பே எடுத்துட்டாரு. அதன் பிறகு அவர் டெம்பரி வேலைதான் செஞ்சிக்கிட்டிருந்தாரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக கூறினாள்.

அடுத்த நாள் கோபால் புல்வெட்டுமலையில் சரியாக வேலை செய்யவில்லை என கங்காணி இரண்டு மூன்று தரம் கண்டித்து விட்டார். அன்றைய தினம் வேலை முடித்து கைகால் மேல் கழுவிக்கொள்ள அவர்கள் ஓடைக்குச் சென்றபோது அது தொடர்பில் நந்தசிரி விசாரித்தான்.

"என்ன கோபால் என்ன நடந்தது? இன்னைக்கு நீ சரியாவே வேலை செய்யல. கங்காணி கிட்ட கூட பேச்சு வாங்கின. என்ன விசயம்"

"அம்மாவுக்கு இன்னமும் மனசு சரியில்ல. நந்தசிரி கொழுந்து மலையில உள்ள பொம்பளைங்க வாயி சரியில்ல. இன்னையில இருந்துதான் வேலைக்கு போகலன்னுட்டாங்க. களைப்பா வருதாம்"

"அதற்காக நீ ஏன் மச்சான் வருத்தப்படுற. அம்மா இனி வேலைக்கு போறேன்னாலும் நாம் அதனை அனுமதிக்கக்கூடாது. அம்மாவ இனி நல்லா கவனிச்சுக்கிறதுதான் இனி நம்ம வேலை. உனக்கு ஏதாவது பிரச்சினைன்னா நாங்க இல்லியா, கவலைப்படாத"

நந்தசிரியின் அந்த வார்த்தைகள் கோபாலுக்கு ஆறுதலளித்தன.

"நீ சொல்றது உண்மைதான் மச்சான். இனி அம்மாவ நல்லா கவனிச்சு பாத்துக்கனும். இப்ப எனக்கு வேல கெடச்சிருச்சிதானே. என்னால அம்மாவ நல்லா பாத்துக்க முடியும். அம்மாவுக்கு அப்பாவின் இழப்ப தாங்கிக்க முடியல. அன்று அப்பா அந்த இறுதி நாளன்றும் வேலைக்கு போயிருக்காரு. பகல்ல நெஞ்சுவலி மயக்கம் வருதுன்னு சொல்லி கீழே உக்காந்திருக்காரு. இதனை குலசேகரன் அண்ணன் என்னிடம் கூறியதை நான் அம்மாவிடம் கூறியபோது அம்மா ரொம்ப பயந்துட்டாங்க. நாங்க கூட அடுத்தநாள் அப்பாவ டவுனுள உள்ள டொக்டருக்கிட்ட கூட்டிக்கிட்டு போகனும்னு..."

அந்தக் கட்டத்தில கோபாலுக்கு பேச முடியாம துக்கத்தால் தொண்டை அடைத்துக் கொண்டது. அவனால் மேலும் பேச முடியவில்லை.

மரணம்கிறது ஒரு கட்டத்தில வந்துதான் ஆகும் கோபால். அத யாராலும் தடுக்க முடியாது. நாம தான் புரிஞ்சிக்கனும். எங்க சமயம், ஒங்க சமயம், மரக்கல சமயம் எல்லாமே அதப்பற்றி அப்படித்தான் சொல்லுது"

அவனது தத்துவார்த்த பேச்சைக் கேட்டு கோபால் சோகத்தை மறந்து சிரித்தான். நந்தசரி மரக்கல சமயம் என்று கூறியமை கோபாலுக்கு நகைச்சுவையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன் சோகத்தை மறந்து சிரித்துக்கொண்டே மரக்கல சமயம் இல்லடா இது இஸ்லாம் சமயம் என்று திருத்தினான். கோபால் தன் சோகத்தை மறந்து சிரித்ததைக்கண்டு நந்தசிரி ஆறுதல் அடைந்தான்.

"சரிசரி ஏதாவது சமயம் தானே, அதத்தான் நானும் சொன்னேன்" என்று சமாளித்தான் நந்தசிரி.

எங்களுக்கு இப்போது பணப்பிரச்சினை இல்ல நந்தசிரி. உனது குடும்பத்துக்கு வருமானம் பாத்தாதுன்னு நீங்களே கஷ்டப்படுறீங்க. அந்த கஸ்டத்துக்கு மத்தியிலும் நீ எனக்கு உதவுறேன்னு சொல்லுறதுதான் நம்ம நட்பின் ஆழம். நந்தசிரி நீ ஒரு சிங்களவனா இருந்து கொண்டு இப்படி சொன்னது எனக்கு மகிழ்ச்சியா இருக்கு நந்தசிரி. என்னைச் சுற்றியிருக்கிற எந்தத் தமிழனும் இப்படி சொன்னத நான் கேட்கல" கோபால் ஒரு பெருமூச்சுடன் கூறினான்.

கோபாலின் அந்தத் தோட்டத்தில் நிறைய சிங்களக் குடும்பங்கள் வசித்தன. லெண்டி மாமா, புஞ்சிரால மாமா, லொக்கு பண்டா குடும்பம், ரன்பண்டா குடும்பம், முதியான்சே, ஜனதாச, விஜேபால அண்ணன், கீர்த்தி அண்ணன், பொடிமாத்தயா குடும்பம் என்பன தமிழ் மக்களுடன் எந்த பிரச்சினைகளும் இன்றி சரிக்குச் சமமாக வாழந்து வந்தார்கள். எல்லா சுகதுக்கங்களையும் பகிர்ந்து கொண்டார்கள். அது தொடர்பில் அவன் யோசித்தபோது மேலும் நந்தசிரி சொன்ன வார்த்தைகள் அவனை சிந்திக்க வைத்தன.

"கோபால் இந்த தொழிற்சங்ககாரன் தான் நம்பள பிரிச்சு வேடிக்கை பார்க்கிறான். தொழில்சங்கம் மாத்திரமல்ல அரசியல் கட்சி அடிப்படையிலும் பிரித்துப்பார்க்கிறானுங்க. இந்த பிரிவினையை வச்சிதான் அவங்க மந்திரிப்பதவி வாங்கி அரசாங்கங்களுக்கு முட்டு கொடுக்கிறாங்க"

நந்தசிரியின் பேச்சு திசை திரும்புவது கண்டு கோபால் கையமர்த்தி அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30



# குமார் அண்ணன்

ஒரு விதத்தில் நந்தசிரி கூறியது உண்மைதான். இந்த யூனியன் காரன்கள் என்று சொல்லப்படும் தொழிற்சங்கத்தினர் எந்தவிதத்திலும் உண்மையான தொழிற் சங்கக் கடமைகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் தொழிற்சங்கத்தையும் அரசியல் கட்சிகளாக மாற்றி அங்கத்தினர்களின் ஓட்டுக்களை கொள்ளையடித்து ஆளும் கட்சிகளுக்குக் கொடுத்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று ஆடம்பரமாக ஜீவிப்பதில் மாத்திரமே கண்ணும் கருத்துமாக உள்ளனர். தொழிலாளர்களின் உரிமைகளை அடகு வைத்தும் காட்டிக்கொடுத்தும் பணம் சம்பாதிப்பதில் அவர்கள் மிக வல்லவர்கள்.

நந்தசிரி தொழிற்சங்கங்களுக்கு எதிராக கதைப்பதை நிறுத்த வேண்டுமென்று கருதிய கோபால் பின்னால் ஆட்கள் வருகிறார்கள் உன் பேச்சை நிறுத்து என்பது போல் ஜாடை காட்டினான்.

நந்தசிரி பின்னால் யார் வருகிறார்கள் என்று திரும்பிப் பார்த்தான். அவர்களை நோக்கி ஒரு தோட்டத்தொழிலாளி என்று மதிக்க முடியாத நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர் வந்தார். அவர் சலவை செய்த வெள்ளை முழுக்கை சட்டையும் வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் கட்டியிருந்த கடிகார மும் மினுங்கியது. அவர் தலையில் சுமந்து கொண்டிருந்த மூட்டையை இறக்கி வைத்து விட்டு தன்னை சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டார். "எப்படி நந்தசிரி சுகமெல்லாம்? இன்னைக்கு வேலைக்கு போகலியா?"

"நல்ல சுகம் குமார் அண்ணன். என்னா கொஞ்ச காலமாகவே ஆளக்காணோம் எங்கேயாவது போயிருந்தீங்களா?"

"ஆமா தம்பி. நேத்துதான் வந்தேன். ராகலையில என் தங்கச்சி வீட்டுக்கு போயிருந்தேன். அவங்கெல்லாம் இந்தியாவுக்கு போகனும்னு தீந்திருச்சில்ல. இந்தியாவுக்கு போற வழியில கப்பல்ல தங்கச்சிக்கு கொழந்தை பிறந்திருச்சி. கொழந்தை இந்தியாவுக்கு சொந்தமா? இலங்கைக்கு சொந்தமான்னு பிரச்சினையாயிருக்கு. இதனை தீத்துக்க திரும்பவும் இலங்கை வரவேண்டியதாப்போச்சி. நுவரெலியா கச்சேரிக்கும் அங்கையும் இங்கேயும் ஓடிக்கிட்டிருந்தேன்"

"அதனால் செவனு அண்ணனோட செத்த வீட்டுக்கும் வரமுடியாம போச்சி." குமார் கோபாலிடம் மன்னிப்பு கேட்பதுபோல் அவனை நோக்கினார்.

"அதுனால என்ன குமார் அண்ணா? நம்ம வேலங்கள நாமதானே பார்க்கனும். நாங்களும் கேள்விப்பட்டோம் லெச்சுமி அக்காவுக்கு கப்பல்ல கொழந்தை பிறந்திருச்சின்னு."

நகரத்தில் டெய்லர் கடையொன்றில் உதவியாளராக தொழில் பார்க்கும் குமார் என்ற அந்த நடுத்தர வயது மனிதரின் நடை உடை பாவனைகள் மிக நேர்த்தியாக இருந்தமை தொடர்பில் கோபால் வியப்படைந்தான்.

தானும் கூட அவ்வாறு வெள்ளையாக உடுத்தி கையில் உருலோசு கட்டி தோலாலான செருப்பு போட்டுக்கொண்டு பயணம் போய் வருவதற்கு கூடுமானதாக இருக்குமாயின் எவ்வளவு நல்லா இருக்கும் என்று நினைத்தான்.

"அப்படீன்னா நான் பொறப்படுவேன் தம்பிகளா" என்று கூறி விட்டு மூட்டையை தூக்கப்போனவரை சற்றே நிறுத்தினான் நந்தசிரி.

"குமார் அண்ணா நாங்களும் அந்தப்பக்கம்தான் போறம். நாங்க ரெண்டு பேரும் ரெண்டு பக்கமா புடிச்சிக்கிட்டு தூக்கிக்கிட்டு வாறம். நீங்க சிரமப்படாதீங்க. என்று கூறிய நந்தசிரி மூட்டையின் ஒரு பக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தான். கோபாலும் நந்தசிரிக்கு கட்டுப்பட்டு மற்றப்பக்கத்தை பிடித்தான். இருவரும் மூட்டையைத் தூக்கிக்கொண்டு நடந்தனர்.

கொஞ்ச தூரமானாலும் நந்தசிரியும் கோபாலும் அந்த பாரத்தைத் சுமந்து செல்வது குமாருக்கு பேருதவியாகத் தோன்றியது.

இவ்வளவு பாரத்தையா குமார் தன் தலையில் தூக்கிச் சுமக்கிறார் என்று ஆச்சரியப்பட்ட நந்தசிரி "என்ன குமாரண்ணா மூட்டை ரொம்ப கனக்குது" என்று கேட்டான். மூட்டைக்குள்ளே பத்துக்கிலோ அரிசி இருக்கும்னு கோபால் நினைத்தான்.

"அது ஒன்னுமில்ல நந்தசிரி கொஞ்சம் மாவு, அஞ்சாறு தேங்கா, பருப்பு, கடல, பலசரக்கு, வெங்காயம், வெள்ளைப்பூடு அம்புட்டுத்தான். எல்லாத்தையும் ஒன்னா வாங்கி வச்சிப்புட்டா அப்பப்ப கடைக்கி ஓடத் தேவையில்லை"

உண்மையில் குமாரின் மனைவி ஒத்தையா வீட்லருக்குறதால அவள அடிக்கடி கடைக்கி போக வைச்சு அலைக்கழிக்க குமார் விரும்பல. அவங்க கூட கொழுந்து மலையில கொழுந்தெடுக்கிற வேலைதான் செய்றாங்க. அதனாலதான் குமாருக்கு லயத்தில வீடிருக்கு. குமார் சனி ஞாயிறில வீட்டுக்கு வர்றப்போல்லாம் மொத்தமா இந்த மாதிரி சாமானெல்லாம் வாங்கிட்டு வந்துருவாரு இல்லாட்டி இருக்குற சொச்சகாசை கடன் காரன்கிட்டத்தான் கொட்டணும்னு அவருக்கு நல்லா தெரியும். இது நால பொருளாதார நன்மை இருக்குங்கிறதும் அவர் கணக்குப் போட்டு வச்சிருந்ததுதான்.

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டே பாதை இரண்டாகப் பிரியும் சந்திக்கு வந்து விட்டார்கள்.

"அப்படின்னா நா அங்கிட்டு போய்கிறேன். நீங்க நேரா போங்க."

"இல்ல குமார் அண்ணா நாங்களும் அந்தப்பக்கமாதா வாரோம். கடை வரைக்கும் போய் ஒரு பீடி பத்திக்கிட்டு வந்தா நல்லாருக்கும். கோபால் சல்லி வைச்சிருக்கிற தானே."

"சல்லி இல்லாட்டி பரவா இல்லடா கடன் சொல்லிக்கலாம். நாம இந்த தோட்டத்தில தானே இருக்கிறோம்."

"இரண்டு மூனு பீடிக்கெல்லாம் கடன் சொன்னா வடிவேலு மொதலாளி கடைய இழுத்து மூட வேண்டியதுதான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் கவனித்த குமார் தன்னிடம் சிகரட் இருப்பதாகவும் அவர்களுக்கு அதில் இரண்டு தருவதாகவும் கூறி தன் சட்டைப்பைக்குள் கையை நுழைத்தார்.

"அதுக்குப் பரவாயில்லை குமார் அண்ணா. நீங்க குடிக்க வைச்சிருக்கிறத எங்களுக்கு ஏன் தர்றீங்க அங்குனகுல நம்ம லயத்து பயலுக எவனா வது இருப்பானுங்க. சமாளிச்சுக்கிறலாம்." நந்தசிரி இதை சும்மா ஒரு சாக்குக்குத்தான் சொன்னான். எப்படியும் குமார் சிகரட் கொடுத்துருவார்னு அவனுக்கு நிச்சயமாகத்தெரியும். குமார் சட்டைப்பையில் இருந்து சிகரட் பெட்டியை எடுப்பதை அவன் ஓரக்கண்ணால் களவாகக் கவனித்தான்.

நந்தசிரியும் கோபாலும் அவ்விடத்தில் தங்கி விட குமார் விடைபெற்றுக்கொண்டார். அவர் சிகரட் பெட்டியில் இருந்து இரண்டு சிகரட்டுக்களை உருவி நந்தசிரியின் கைக்குள் நுழைத்தார்.

"சரி நன்றி தம்பிகளா அப்ப நா வாறன். கோபால் அம்மாகிட்ட சொல்லிடு வரமுடியாம போனதுக்கு கோவிக்க வேணாம்னு. நான் இன்னொரு நாளைக்கு பாக்க வாறேன்"


குமார் தன் மூட்டையை தூக்கி தலையில் வைத்துக்கொண்டார். கோபால் அவர் சொன்ன செய்தியை அம்மாவிடம் கூறி விடுவதாக தெரிவித்தான்.

குமார் படிக்கட்டில் ஏறி மேலே செல்வதை பார்த்துக் கொண்டிருந்த நந்தசிரி அவர் கொடுத்த போரேசஸ் சிகரட்டுக்களில் ஒன்றை பற்ற வைத்தான். அவர்கள் இருவரும் மாறி மாறி சிகரட்டினை உறிஞ்சினர்.

நந்தசிரியின் முகத்தில் சுட்டித்தனம் செய்து ஜெயித்துவிட்ட சிறுவனின் மகிழ்ச்சி இழையோடியது.

எனக்குத்தெரியும் நீ அந்த பீடிக்கதையை எடுத்தபோதே இந்த சிகரட்டுக்களை கழட்டுறதுக்குத்தான்னு என்றான் கோபால் நந்தசிரியை பார்த்து. இருவரும் ஓஹோ என்று வாய்விட்டு சிரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிஷாம் பாயின் பிரசன்னம்

அன்றைய தினம் கோபால் வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய போது அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டிலிருந்த ஒரேயொரு வீட்டுத்தளபாடமான அந்த பிரம்பு நாற்காலியில் புத்தாடைகள் ஏழெட்டு குவிந்து கிடந்தன.

அதனைப்பார்த்ததும் கோபாலுக்கு தன்னையறியாமலே வாயிலிருந்து வார்த்தைகள் வெளியாகின.

"எதுக்கம்மா, இத்தனை உடுப்புக்கள் இதையெல்லாம் வாங்க எங்கயிருந்து காசு கிடைத்தது" என்று கேட்டான் ஆச்சரியத்துடன்.

அவனுக்கு அன்றொருநாள் அவன் அம்மா வீட்டு மூலையில் புதைத்து வைத்த பணத்தைத்தான் எடுத்து விட்டாளோ என்ற சந்தேகம் வந்தது. அவன் மெல்லத்திரும்பி உள்காம்பிராவின் அந்த மூலையைப் பார்த்தான். குப்பிலாம்பு வெளிச்சத்தில் அந்த இடம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் அங்கு ஏதும் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் தம்பி, நான் தான் வேலைக்கு போறத நிப்பாட்டின்டேன்னு அறிவிச்சிட்டேன் தானே. அதுதான் எனக்கு சேர வேண்டிய சேவிசு பணத்தையெல்லாம் கொடுத்திட்டாங்க. அதோட மேலதிக கொழுந்தெடுத்த ரெண்டு மாச காசும் கொடுத்தாங்க. புரோவிடன் பண்டு காசு எடுக்கவும் ஒப்பம் வைச்சு கொடுத்திட்டன்."

அப்பாவோட கருமாதி பண்ணறதுக்கும் காசு வேணுமில்லையா?" என்று விளக்கமளித்தாள் அன்னம்மா. அத்துடன் அவனுக்குப் பிடிக்கும் என்று டவுனில் இருந்து வாங்கி வந்திருந்த தொதல் துண்டுகளையும் எடுத்துக் கொடுத்தாள்.

"எனக்கு ஏம்மா இவ்வளவு உடுப்பு? உங்களுக்கும் வாங்கியிருக்கலாம் தானே. நான் தான் இப்ப சம்பாதிக்கிறேனே. நான் வாங்கிக்க மாட்டேனா" என்றான் கோபால் அதிருப்தியுடன்.

"எனக்கெதுக்குடா இனிமே புது துணிமணி எல்லாம். அதெல்லாந்தான் உங்கப்பாவோட போயிடுச்சே. நான் இனி கலியாண வீடுகளுக்கா போகப் போறேன்? இருக்கிற மூனு நாளு சேலைங்க போதும். நீதாண்டா இனி எனக்கு ராஜகுமாரன். நீ நல்லா ஆடை அணிந்து அங்கும் இங்கும் உலாத்துறதை பாக்கிறதுலதான் இனி எனக்கு சந்தோசம். உனக்கு ஒரு உருலோசு கூட பாத்திருக்கேன். மூணாம் நெம்பர் லயத்துல பாக்கியத்தோட மூத்த மகன் கட்டியிருக்கிற உருலோசு. வெல கொறச்சி தாறேண்ணுருக்கான். நீ அத பாத்துட்டு சொல்லு. பிடிச்சிருந்தா வாங்கிறலாம்" என்றாள் அன்னம்மா மகனைப்பார்த்து பெருமிதமாக.

தன் அம்மாவின் பேச்சைக்கேட்க ஒரு விதத்தில் பெருமையாக இருந்தாலும் மறுபுறத்தில் துக்கமாகவும் இருந்தது. தன் தாய் மீது என்றும் இல்லாதவாறு அன்பும் பாசமும் மேலிட்டு சோகத்தால் அவன் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. அவன் தந்தை உயிருடன் இருக்கும்போது அம்மா அனைத்துத் தேவைகளையும் தலைமேல் போட்டுக்கொண்டு மிக உன்னிப்பாக அவதானித்து அவற்றை இம்மி பிசகாமல் நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பாள். இப்போது அப்பா இல்லாமல் அம்மாவின் மனது எந்த அளவுக்கு துக்கப்படும் என்று நினைத்துப்பார்ப்பதே மிகச்சோகமான அனுபவமாக இருந்தது.

அநேகமான தோட்டப்பகுதி இளைஞர்கள் திருமணம் முடித்த கையுடன் பெண்டாட்டியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அம்மா அப்பாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்காமல் விடுவது இப்போதெல்லாம் வழக்கமானதாக இருந்தது. தன்னைப் பொறுத்தவரையில் இத்தகைய நிலைமை ஏற்படக்கூடாதென்று அவன் மனம் மிகத்தீவிரமாக சங்கற்பம் பூண்டது. அவன் இவ்விதம் சிந்தித்துக் கொண்டே அவன் அம்மா தந்த தொதல் துண்டுகளை மென்று விழுங்கினான்.

அப்போது அன்னம்மா அவன் சிந்தனையைக் கலைத்தவாறே தேத்தண்ணி கோப்பையை அவன் முகத்தெதிரே நீட்டினாள்.

"அம்மா நீ சொன்ன அந்த உருலோசு குணசேகரன் கட்டிக்கிட்டு திரியிர மொண்டியா உருலோசு தானே. நீல நிற டயல் உள்ளது. அது நல்ல உருலோசுதான் அம்மா? அவன் அதுக்கு எவ்வளவு விலை கேக்குரானாம்."

"அது மொண்டியாவா? கிண்டியாவான்னு? எனக்குத் தெரியாது. ஆனா முன்னூத்து அம்பது ரூபாவுக்கு தருவானாம்."

கோபால் அந்த உருலோசை ஏற்கனவே பார்த்திருக்கிறான். அதனை வாங்கிய அன்னைக்கே குணசேகரன் அதனைக்காட்டி அதனை தவணை முறையில் செலுத்தும் விதத்தில் அட்டன் நகரத்தில் உள்ள அசோகா ரேடியோ கடையில் முன்னூறு ரூபாய்க்கு வாங்கியதாக பீய்த்திக்கொண்டான். இப்போது அவன் முன்னூற்று ஐம்பது என்று கூறியிருக்கிறான்.

"அம்மா, அந்த உருலோசுவுக்கு முன்னூத்தம்பது அதிகம். இருநூத்தம்பதுக்கு கேளு. நான் எனக்கு சம்பளம் கெடச்சதும் கொடுத்துர்றேன்" என்றான் கோபால். கோபாலுக்கு மாதச் சம்பளம் இரு நூறு ரூபாவுக்கு மேல போகாது. மிச்சக்காசு நந்தசிரியிடம் அல்லது ஆரியவங்சவிடம் கடன் வாங்குவது என நினைத்தான்.

இருந்தாலும் அன்னம்மாவுக்கு அது பற்றிய கவலை இல்லை. அவளிடம் போதுமான அளவு இப்போது காசு புழங்கியது. எப்படியாவது தன் மகன் விரும்பிய பொருளை வாங்கி அவனிடம் கொடுத்துவிட வேண்டுமென்று கருதி னாள்.

நீ பணத்தைப்பற்றி கவலைப்படாத தம்பி. ஒனக்கு உருலோசு வாங்கித்தாறது எனது பொறுப்பு என்றாள். அன்னம்மா மகன் மீது கொண்ட பாசம் மேலிட அடுத்த நாளே அதனை வாங்கி மகனிடம் கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்துக்கொண்டாள்.

கோபால் தொதல் துண்டுகளை மென்று முழுங்கி விட்டு தேத்தண்ணியையும் குடித்து விட்டு எங்கோ போவதற்கு புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கவனித்த அன்னம்மா "இரவான நேரத்தில் எங்கடா போற" என்று கேட்டாள்.

"தூரம் போகல அம்மா. சுப்பிரமணியத்தின் லயத்துவரை போய்ட்டு வர்ரேன்" என்று அம்மாவுக்குப் பதில் கூறி விட்டு எழுந்து நடந்தான்.

கோபால் அன்று சுப்பிரமணியத்தின் லயத்துக்குப்போகப் புறப்பட்டதில் ஒரு காரணம் இருந்தது. அன்றைய தினம் அந்தத் தோட்டத்தில் முன்பு காவற்காரனாக வேலை பார்த்து ஓய்வு பெற்ற சுல்தான் பாயின் மகன் நிஷாம் பாய் அங்கு வரவிருக்கிறான் என்பதால் கோபால் அவனை சந்திக்க மிகுந்த அவாவுற்றிருந்தான். காரணம் நிசாம் பாய் அந்த வட்டாரத்தில் நகர சபை வீடமைப்புத்திட்ட கொலனி உள்ளடங்களாக மகா இசைக்கலைஞனாக புகழ்பெற்றிருந்தான். எல்லோரும் அவனை வெறுமனே பாய் என்றே செல்லமாக அழைத்தனர்.

அவன் தோற்றத்தில் பார்த்ததும் எவரும் பிரியப்படும் விதத்தில் சுத்தமாக உடையணிந்து பளிச்சென்று இருந்தான். பழம் பெருமை கூறும் பாட்டுக்களை பாடுவதிலும் டோலக் வாத்தியம் இசைப்பதிலும் நிபுணத்துவம் வாய்ந்தவனாகவும் இருந்தான். அந்தப்பிரதேசத்தில் காணப்படும் அவர்களின் உத்தியோகபூர்வமற்ற இசைக்குழுவின் ஒரேயொரு முஸ்லிம் அங்கத்தவனாக அவன் மாத்திரமே இருந்தான்.

அவனுடைய தந்தை சுல்தான்பாய் ஒரு நேர்மையான காவல்காரனாக அந்தத்தோட்டத்தில் கடமையாற்றியதால் தோட்டத்தின் உயர் அதிகாரிகள் உள்ளடங்களாக பலரின் பகைமையை சம்பாதித்துக் கொண்டார். அதன் காரணமாகவே பின்னர் அவர்கள் குடும்பம் அந்தத்தோட்டத்தில் இருந்து மனம் நொந்து வெளியேற வேண்டியும் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32



## மீண்டும் பாட்டுக் கச்சேரி

நிஷாம் பாயின் வரவு பற்றி இளைஞர் மத்தியில் பரவலாக பேச்சு அடிபட்டது. கோபால் தன் அம்மாவிடம் சுப்பிரமணியத்தின் லயத்துக்குப் போவதாகக் கூறி விட்டுச் சென்றாலும் அவன் அங்கு போகவில்லை. ஏனென்றால் நிசாம் பாய் சுப்பிரமணியத்தின் லயத்துக்கு போக மாட்டான். காரணம் முன்பு சுப்பிரமணியத்தின் தந்தை பெருமாள் ஒரு முறை தொழிற்சாலையில் இருந்து ஒரு றாத்தல் தேயிலைத் தூளை இடுப்பில் கட்டி கடத்திக்கொண்டுபோக முற்பட்ட போது காவல் பணி யில் ஈடுபட்டிருந்த நிஸாம் பாயின் தந்தை சுல்தான் பாயிடம் கையும் களவுமாக பிடிபட்டு விட்டார்.

அதன் காரணமாக பின்னர் பெருமாளுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அன்றிலிருந்து பெருமாள், பாயை சபித்து கடுங்கோபத்துடன் இருந்தார். ஆனால் இந்த சம்பவத்தால் நிஷாம் பாய்க்கும் சுப்பிரமணியத்துக்கும் இடையில் நிலவிய நட்பு பாதிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தொடர்ந்தும் நல்ல நண்பர்களாக இருந்தனர். எனினும் பாய் சுப்பிரமணியத்தை அவனது லயத்தில் சென்று ஒருநாளும் சந்திப்பதில்லை. அதனால் அவர்கள் வழக்கமாக பாட்டுக் கச்சேரி நடத்தும் தியாகுவின் லயக்காம்புராவுக்கு சென்றார்கள்.

அங்கே முற்றத்தில் போடப்பட்டிருந்த வாங்கொன்றில் சிகரட் குடித்துக் கொண்டிருந்தான் நிஷாம் பாய். அவனுடன் சுப்பிரமணியம், ஆரியவங்ஷ விஜேபால ஆகியோரும் இருந்தனர். பாய் கோபாலைக் கண்டு நட்புடன் புன்னகைத்தான்.

"அப்புறம் எப்படி கோபால் இருக்கிறாய்? உன் அப்பா இறந்த செய்தி தெரியாமல் போய்விட்டது. அதான் வர முடியவில்லை. இப்பதான் கேள்விப்பட்டேன் நீ இப்ப தோட்டத்துல வேலை செய்றியாமே."

"ஆமா பாய். எந்த நாளும் சும்மா இருக்க முடியாதே. நீங்கல்லாம் இப்ப கொட்டகல இஸ்டேசன் கிட்டவுள்ள கொலனிக்கு போய்ட்டீங்களாமே." கோபால் நிஷாம் பாயின் அருகில் சென்று அவனது கையைப் பிடித்துக் கொண்டான்.

"ஆமா, மச்சான் அப்பா வேலையில இருந்து நின்னுட்டதும் அவரோட புரவிடன் பண்ட்ல இருந்து கொஞ்சம் காசு கெடச்சிச்சு. அத வச்சு ஒரு சின்ன இடம் வாங்கி சின்னதா வீடு ஒன்று கட்டிக்கிட்டம்"

"முந்தீன்னா நீ உலப்பனையில வேலை செய்யிறதா கேள்விப்பட்டேன். இன்னும் அங்கதானா? முந்தி நீ ஸ்டோருக்கு வேலைக்கு போறத பாத்திருக்கேன்"

"இன்னும் அங்கதான் மச்சான் வேல. அது லேசு. கோச்சியில போயிட்டு கோச்சியிலேயே வந்துறலாம். நா இங்க ஸ்டோருல மட்டும் வேலை செய்யல இந்த தோட்டத்தில உள்ள எல்லா மலையிலும் நா வேல செஞ்சிருக்கேன். எல்லாரோடையும் நல்லாதான் பழகி இருக்கேன். ஆனா எங்க அப்பா தனது கடமையை நேர்மையா செஞ்சதால சில பேரோட பகைமையை சம்பாதிக்க வேண்டியதாயிற்று. உனக்கு தெரியுமல்ல சுப்பிரமணியத்தின் அப்பா கூட இப்ப என்னைய கண்டாலும் மொறைக்கிறார். என்னோட அப்பா ஓய்வு பெற்ற பொறகும் கூட என்னைப் பழிவாங்க பாக்குறாங்க. இஸ்டோருல இருந்த அதிகா ரிகளும் என்னை பழிவாங்குவதா நெனச்சி வேலையில இருந்து வெறட்டுனாங்க. இதுநால தான் நாங்க இங்க இருந்து போக வேண்டியதாயிருச்சி. ஆனா லும் உங்களோட பழகிய நட்பை மறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியல. அதுதான் பார்த்துட்டுபோக வந்தேன்" பாய் அவன் குடித்துக் கொண்டிருந்த பாதி சிகரட்டை கோபாலுக்குக் கொடுத்தான்.

"அந்தக் கதையெல்லாம் எங்களுக்கு தெரிஞ்சதுதான் பாய். உன்னோட அப்பாவோட பகைமை கொண்டவர்கள் தோட்டத்தின் சின்ன மனிதர்களை விட பெரிய அதிகாரிகள் தான் மிக ஆபத்தானவர்கள். அவர்களால் ஸ்டோரில் இருந்து திருட முடியாமல் போனமை தான் உங்க அப்பாவை அவர்களுக்கு எதிரியாக்கியது. இந்த நாட்டை விட்டு வெள்ளைக்காரன் போனதில் இருந்து இந்த உள்நாட்டு களவாணிகள் இந்த திருகுதாளங்களை தொடர்ந்து செய்து வந்தார்கள். இப்போது தோட்டங்கள் அரசாங்கத்துக்குப் போன பின்னர் அரசாங்கத்திடம் இருந்து கொள்ளையடிக்கிறார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தொழிலாளிக்கு நன்மை கிடைத்ததில்லை"

கோபாலும் நிஷாம் பாய் மற்றும் நண்பர்கள் இணைந்து சம்பாஷித்துக் கொண்டிருந்த விடயம் தொடர்பில் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த தியாகுவின் தந்தை சின்னத்தம்பியும் அவர்களது கருத்துக்கு தன் தலையை ஆட்டி ஆமோதிப்புத் தெரிவித்தார்.

"அதைப் பத்தியெல்லாம் பேசுறது ஒருத்தருக்கும் பிரயோசனம் இல்லை கோபால். விட்டுத்தள்ளு. நமக்கு ஏதாவது நாலு காசு கிடைக்கிறதப்பத்தி பேசுனா தேவல" என்றான் விஜேபால கோபாலின் கையிலிருந்த சிகரெட்டைப் பார்த்தவறே. இன்னும் இரண்டு இழுப்புப் பாக்கியிருந்த நிலையில் அதனை விஜேபாலவுக்கு கொடுத்தான் கோபால்.

"எங்கடா இன்னும் நந்தசிரியைக் காணவில்லை" என்று கூறி தூ ரத்தே மண் பாதையை பார்த்தான் ஆரியவங்ச.

"எனக்கும் இங்க ரொம்ப நேரம் இருக்க முடியாது கோபால். நாளைக்கு விடிய காலையிலேயே எழுந்திருந்து வேலைக்குப் போகனும்" என்றான் பாய். கையில் கட்டியிருந்த உருலோசைப் பார்த்தவாறே. கோபால் அவன் கையைப் பிடித்து அந்த உருலோசை நன்கு பரீட்சித்துப் பார்த்தான். அவனுக்கு இப்போதெல்லாம் எந்த உருலோசைப் பார்த்தாலும் அதனை கையில் எடுத்து பரிசீலனை செய்யத் தோன்றியது.

"இது காஸ்ட்டில் உருலோசு தானே மச்சான். எவ்வளவுக்கு வாங்கின" என்று அதன் விலையை அனுமானிக்கத் தொடங்கினான் கோபால்.

"முன்னூத்தி எழுபத்தைத்து ரூபா மச்சான்" என்றான் பாய் புன்னகைத்தவாறே. தான் வாங்குவதற்கு பார்த்து வைத்திருந்த மொண்டியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருலோசை விட இது சற்றே விலை கூடியது என நினைத்து அதன் வெள்ளை முகப்பை தடவிப்பார்த்தான் கோபால். அந்த உருலோசு பாய் என்ற அந்த உயரமான இளைஞனுக்கு மேலும் எடுப்பான தோற்றத்தினை கொடுப்பதாக நினைத்தான் கோபால்.

அப்பொழுது பெருமூச்சி விட்டுக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான் நந்தசிரி. அவன் இரண்டு சாராயப் போத்தல்கள் கொண்டு வந்திருந்தான்.

"ஒரு போத்தலுக்குத்தானே சல்லி கொண்டு போனாய். எப்படி இரண்டு போத்தல்கள் கொண்டுவந்திருக்கிறாய்?"

நந்தசிரி சிரித்தான்

"தெரியாதா, பாய் எவ்வளவு நாளைக்குப் பிறகு வந்திருக்கான். பொடியங்க நெறையப் பேர் வருவாங்க. ஒரு போத்தல் பத்தாது. இப்பவே ஷெல்ட்டன், அல்விஸ் ஆகியோர் கோச்சி பாலத்தில் இறங்கிட்டாங்கலாம்".

அதைக்கேட்டு பாய் பலமாக சிரித்தான். அவன் அன்று இரவு திருப்பிப் போவதற்குத் தீர்மானித்திருந்த எண்ணத்தைக் கைவிட்டான். நீண்ட நாட் களுக்குப் பிறகு எல்லா நண்பர்களையும் சந்திக்கப் போவதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். எல்லோரும் அன்றைய பாட்டுக் கச்சேரிக்குத் தயாரானார்கள். தியாகுவின் அப்பாவிடம் கூறி மரவள்ளிக் கிழங்கு இரண்டு இறாத்தல் அவித்துக் கொண்டார்கள். மேலும் இரண்டு சிகரட் பெட்டிகள் வாங்கி வரும் படி நிமல்சிறியை கடைக்கு அனுப்பினான் நந்தசிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33



# விடைபெற்ற நண்பர்கள்

நிஷாம் பாயின் வருகையை காரணமாக வைத்து அன்றைய தினம் ஏனைய நண்பர்களும் வருகை தந்திருந்தார்கள். அது அவர்கள் மத்தியில் இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நகரத்தை ஒட்டிய நகரசபை வீடமைப்புத்திட்டப் பிரதேசத்தில் இருந்து ஷெல்ட்டன், அல்விஸ் ஆகியோரும் மேலும் மூவரும் சேர்ந்து ஐந்து பேர் வருகை தந்திருந்தனர். அவர்களுடைய பாட்டுக்கச்சேரி ஆரம்பித்து ஒரு ரவுண்டு போவதற்குள்ளேயே சாராயப்போத்தல் பாதி தீர்ந்து விட்டிருந்தது.

ஆரம்பத்தில் டோலக் வாத்தியத்தை வாசித்துக் கொண்டிருந்த நிஷ ாம் பாய் அந்த வாத்தியத்தில் நிபுணன் என்று அந்த வட்டாரத்திலேயே பெயர் பெற்றிருந்த ஷெல்ட்டனிடம் அதைக்கொடுத்தான்.

"ஷெல்ட்டா, நாங்க இங்கிருந்து போனதிலிருந்து உன்னைப் பார்க்கவில்லையே. நீ இப்போதெல்லாம் கொட்டகல ஸ்டேசனில வேலை செய்வதில்லையா? நாங்க கொட்டகல ஸ்டேசன் கிட்டத்தான் இருக்கிறோம்" என்று விசாரித்தான் பாய்.

"இல்ல மச்சான், நான் இப்போதெல்லாம் சென்ட் கிளயார்ஸ் ஸ்டேசனில் இருந்து வட்டகொட வரைக்கும்தான் வேலை செய்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டகல ஸ்டேசன் அகப்படுகிறதில்லை" அவர்கள் சம்பாஷணையில் அல்விசும் கலந்துகொண்டான்.

பின்னர் பாயிடமிருந்து டோலக்கைப் பெற்றுக்கொண்ட ஷெல்ட்டன் அதன் இரு புறத்தையும் தட்டி வார்களை இறுக்கமாக்கி ஆவர்த்தனத்துக்கான ஆயத்தங்களைச் செய்தான்.

அதனைத்தொடர்ந்து அவர்களின் பாட்டுக்கச்சேரியின் அடுத்த கட்டம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் சில சிங்கள பைலா பாட்டுக்களை அல்விஸ் உச்சஸ்தாயில் பாட ஷெல்ட்டன் அதற்கேற்றாற்போல் டோலக் வாசித்தான். ஏனையோர் சேர்ந்து பாடியும் கோரஸ் எழுப்பியும் தத்தமது ஒத்துழைப்பைக் காட்டினர். இடையிடையே நிஷாம் பாயுடன் இணைந்து ஏனைய நண்பர்களான சுமணபால, சந்தரே, நிஹால், உப்பாலி, நிமால் ஆகியோர் சந்தோஷமாகக் கதைத்தவாறே அவித்த மரவெள்ளிக்கிழங்கையும் சாராயப் போத்தலையும் காலி செய்து கொண்டிருந்தனர். கோபாலும் நந்தசிரியும் அவர்களுக்கு என்ன தேவையென்று தேடிப்பார்த்து உபசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது சாராயப் போத்தல்கள் தீர்ந்து போய் விட்டதைக் கவனித்த கோபால் இன்னொரு போத்தல் கொண்டுவரச் சொல்வதா என்று கேட்டு பணம் கொடுப்பதற்காக காற்சட்டைப்பைக்குள் கையைத் திணித்தான்.

அவன் பணம் எடுப்பதைத்தடுத்து விட்ட நந்தசிரி இன்று இந்த இடத்தில் பாட்டுக்கச்சேரி வைத்தது போதும் என்று கூறி தோட்டத்து நுழைவாயில் கேட்டுக்கருகே மேலும் சில நண்பர்கள் காத்துக்கொண்டிருப்பதால் அங்கு போக வேண்டுமென்றும் கூறினான்.

அந்நேரத்தில் சிகரட் தேடிக்கொண்டு சந்தரே வந்தான். சிகரட்டும் தீர்ந்து விட்டதால் சிகரட் பெட்டி ஒன்று வாங்கி வர நிமாலை அனுப்பினார்கள்.

அவன் "பிரிஸ்டல் சிகரட் எல்லாம் கிடைக்காது. போரேசஸ் மட்டும்தான் இருக்கு. அத வாங்கியாறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

வெளியே சலனமற்ற அமைதி நிலவியது. சுவர்க்கோழிகள் மட்டும் ஆங்காங்கே கிரீச்சிட்டுக்கொண்டிருந்தன. அந்நேரத்தில் குளிர்காற்றின் வேகம் அதிகரிக்குமாதலால் தொழிலாளர்கள் லயத்துக்காம்புராவுக்குள் முடங்கிக் கிடப்பார்கள். கிடைத்த கிழிந்த கம்பளித்துண்டுகளும் பழைய படங்குச்சாக்குகளும் மாத்திரமே அந்தக் குளிருக்கு அவர்களுக்கு இதமளிப்பதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில் தியாகுவின் லயக் காம்புராவில் இருந்து சிங்களம்-தமிழ் ஆகிய மொழிகளில் கலந்தும் மாறிமாறியும் பாடல்கள் எழுந்த வண்ணம் இருந்தன.

அதற்கேற்றாற்போல் டோலக் வாத்தியத்தின் வாசிப்பு தால லயங்களுடன் சீராக ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் விரைவிலேயே பாட்டுக்குரல்கள் உளற ஆரம்பித்தன. டோலக்கும் தாளம் தப்பி ஒலிக்கத் தொடங்கியது.

அந்த நேரத்தில்தான் தோட்டத்தலைவர் சேதுபதி அந்தப்பக்கம் வந்தார். அவர் அங்கு பிரசன்னமாகியதன் நோக்கம் அங்கிருந்தவர்களுக்கு புரியாததல்ல.

அவரது தலையைக் கண்டதுமே நந்தசிரி அனைவரையும் பார்த்து "நண்பர்களே இன்றைய பாட்டுக்கச்சேரி இத்துடன் நிறைவு பெறுகின்றது. எல்லோரும் புறப்படத் தயாராகுங்கள்" என்றான். "உண்மையில் தோட்டத்துத்தலைவர் வந்து நிறுத்து என்று சொல்லும் அளவுக்கு நாம் நடந்து கொண்டிருக்கக்கூடாது" என்றான் சத்தமாக.

ஷெல்ட்டன் நிஷாம் பாயின் கரங்களை பற்றியவாறே எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டான்.

ஏனையோரும் பாயிடமிருந்து விடைபெற்றுக்கொண்டனர். அவர்கள் அனைவரும் மௌனமாக தியாகுவின் லயத்தில் இருந்து இறங்கி நடந்தனர்.

வெளியில் முதல் ஜாமம் முடிந்து போயிருந்தது. தோட்டத்து லயங்கள் எல்லாம் வெளிச்சமின்றி இருளில் மூழ்கிக்கிடந்தன. அருகே உறங்கிக்கொண்டிருந்த சில சொறி நாய்கள் இவர்களின் காலடிச்சத்தம் கேட்டு ஜீவனற்ற குரலில் குலைத்தன. இப்போதுதான் உறங்கிப்போயிருந்த சிலரது லயக் காம்பிரா முற்றத்தில் மூட்டப்பட்டிருந்த அடுப்புக்களில் இருந்து இன்னமும் அணைந்து போயிராத தணல் கொள்ளிகளின் வெளிச்சம் லேசாக கண் சிமிட்டிக்கொண்டிருந்தது.

மதுபோதை ஆட்கொண்ட நிலையில் அரைவாசி சுயபுத்தியை இழந்திருந்த அவர்கள் சுற்றி நடக்கின்ற எதனையும் பொருட்படுத்தும் நிலையில் காணப்படவில்லை. எனினும் அவர்கள் எந்தவித சந்தடியும் உண்டாக்கி அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்தெழச்செய்ய விரும்பவில்லை. அவர்கள் கூட்டத்தில் சிங்கள வாலிபர்களே அதிகம் இருந்ததாலும் அவர்கள் மது போதை யில் காணப்பட்டபடியாலும் ஏதேனும் ஒரு தவறான காலடி, தவறான இடத்தில் வைக்கப்பட்டு அது தமிழ் சிங்கள கலவரம் வரை இட்டுச்சென்று விடக்கூடும் என்பது தொடர்பில் அவர்களின் அடிமனம் அவர்களை எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தது.

கோபால், நந்தசிரி, ஆரியவங்ச ஆகியோர் ஏனைய நண்பர்களையும் பாய்யையும் வழியனுப்ப தோட்டத்து பிரதான நுழைவாயில் கேட் வரை யில் வந்தனர். அங்கே இவர்களுக்கென காத்திருந்த சில நண்பர்களுடன் இணைந்து கொண்டபோது நந்தசிரியும் கோபாலும் ஆரியவங்சவும் விடை பெற்றுக்கொண்டனர். நந்தசிரி பாய்யை நண்பர்களிடம் ஒப்படைத்து கவனமாகக் கூட்டிச்சென்று அடுத்த நாள் அதிகாலை அனுப்பி வைக்கும்படி கூறினான்.

பாய்யையும் நண்பர்களையும் பத்திரமாக அனுப்பி வைத்த பின்னர் தான் கோபால் நந்தசிரி ஆரியவங்ச ஆகியோர் மனதில் நிம்மதி ஏற்பட்டது. அப் போது தான் தோட்டத்து தொழிற்சாலையில் இரவு வேலை செய்வதற்கு சிலர் போய்க்கொண்டிருந்தனர்.

அவர்களைக் கடந்து சென்றதும் அவர்கள் மூவரும் அன்றைய மகிழ்வான நிகழ்வை நினைவு கூறி சத்தமிட்டு பாடியவாறே தோட்டத்து தொழிற்சாலைக்கு அப்பால் தத்தமது லயங்களுக்கு பிரிந்து செல்லும் பாதைகளில் நடக்கத்தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34



# கறுப்புத் தொரைங்களுக்கு தேயிலை முக்கியமில்லை

மீண்டும் ஒரு புதிய அதிகாலைப்பொழுது உதித்து விட்டது என்பதைப் பறைசாற்றுமாப்போல் தொழிற்சாலைச் சங்கு நீண்டு உரத்து ஒலித்து ஓய்ந்தது. கால் கைகளை சுருட்டிக்கொண்டு கம்பளிக்குள் இதமாக உறங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களை "உறங்கியது போதும் விழித்தெழுந்து வேலைக்கு செல்" என்று உச்சந்தலையில் அடித்துச் சொல்வது போல் இருந்தது. அவர்கள் தோட்ட நிர்வாகத்தினரை மனதுக்குள் சபித்தவாறே பெரட்டுக் களத்துக்குச் செல்வதற்காக ஒவ்வொருவராக லயத்துக்குள்ளிருந்து வெளிக்கிளம்பினார்கள்.

"தம்பி எழுந்திரி. சங்கு ஊதிரிச்சு,

பெரட்டுக்கு போகனும்"

கம்பளிக்குள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை போர்த்திக் கொண்டிருந்த கோபாலை எழுப்பினாள் அன்னம்மா. கோபால் குளிருக்காக அப்படி இதமாக போர்த்திக்கொண்டிருந்தாலும் அவன் விழித்துக் கொண்டுதான் இருந்தான். அவன் அன்னம்மாவின் குரல் கேட்டதும் சோம்பல் முறித்துக்கொண்டு கம்பளிக்குள்ளிருந்து வெளிப் பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்த குளிர் சுள்ளென்று மேனியெங்கும் குண்டூசி போல் துளைத்தது. அவன் அதனைப் பொருட்படுத்தாது பெரட்டுக்குக் கிளம்ப ஆயத்தமானான்.

யார் யாருக்கு எந்தெந்த வேலைகளை ஒப்படைப்பது என்பதற்காக நிகழ்த்தப்படும் பெரட்டுக் கலைப்புக்கு கண்டக்டர், கங்காணிகள், மேற்பார்வை யாளர்களுடன் வந்திருந்தார்கள். மேற்பார்வையாளர்கள் அன்றைக்கு யார் யார் வேலைக்கு வரவில்லை என்பது தொடர்பான விபரங்களை விசாரித்துக் கொண்டிருந்தனர்.

இன்றைக்கு மூனாம் நம்பர் மலைக்கு எட்டுப்பேரை அனுப்ப வேண்டும். கங்காணி சேதுபதி யார் யார்னு பேருகளை குறிச்சிக்கிங்க." "கோபால், நந்தசிரி, ஆரியவங்ச, வடிவேல், விக்னேஸ்வரன், சுப்பிரமணி, காளி......" சேதுபதி கங்காணி பெயர்களைக் கூறிக்கொண்டு ஏதோ யோசித்தவராக தயக்கத்துடன் கண்டக்டரின் அருகில் சென்றார்.

"ஏன் சேர், மற்ற நாளைக்கெல்லாம் இந்த மலைக்கு பத்துப் பேர் வேலைக்குப் போடுவதுதான் வழக்கம். இன்னைக்கு எட்டுப்பேர்" என்று இழுத்தார்.

இதைக்கேட்டதும் கோபமடைந்த கண்டக்டர் சேதுபதியைப் பார்த்து முறைத்தார்.

"இது உன்னோடதும் என்னோடதும் தோட்டம் இல்லை சேதுபதி. இது இப் போது அரசாங்கத்துக்குச் சொந்தமானது. நான் எனது மேலதிகாரிகள் என்ன சொல்கிறார்களோ அதைத்தான் செய்ய முடியும். ஒரு ஏக்கருக்கு வேலை செய்ய எத்தனை பேரை போட வேண்டுமென்று எனக்குத் தெரியும். வெள்ளைக்காரனுக்கு வேனுமென்றால் தேயிலை முக்கியமானதாக இருந்திருக்கலாம். ஆனா நம்ம கறுப்புத் தொரைங்களுக்கு இது ஒன்னும் முக்கியமானதல்ல. ஓங்களால முடிஞ்ச மாதிரி அந்த மலையில வேலை செய்யுங்க....." கண்டக்டரின் வாயிலிருந்து வார்த்தைகள் அதட்டலாக வெளிவந்தன.

கண்டக்டரின் இந்த வார்த்தைகளால் சேதுபதி அதிருப்தி அடைந்தார். இதனை கோபாலும் நந்தசிரியும் கூட கேட்டுக்கொண்டுதான் இருந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டனர்.

"ஏன் சேர் வெள்ளைக்காரன் காலத்தில் பன்னிரண்டு பேர் செய்த வேலையை இப்போது எட்டுப்பேரைக் கொண்டு செய்கிறீர்கள். நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைக் கொடுத்துதான் வேலை செய்யனுமா" நந்தசிரி கண்டக்டரிடம் கேட்டான்.

கண்டக்டர் திரும்பி நந்தசிரியைப் பார்த்தார்.

"நந்தசிரி இந்த விடயத்திற்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உன்னால் முடிந்த அளவுக்கு வேலை செய்தால் போதும். யாரையும் உயிரைக் கொடுத்து வேலை செய்யச் சொல்லவில்லை. நான் எனது கடமையைத்தான் செய்கிறேன். மற்றது நீ வேலை செய்யும் லட்சணம் எனக்குத் தெரியும்."

கண்டக்டர் சற்றே கோபமுடன் கூறினாலும் அவர் நந்தசிரியைப் பார்த்து புன்னகைத்தவாறே கூறினார். இதனால் கண்டக்டர் கோபப்படுவது நந்தசிரி மீதல்ல என்பது மற்றவர்களுக்குப் புரிந்திருக்கும். நந்தசிரி கங்காணிமார் இருக்கும் திசை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். அவன் கண்கள் சேது பதி கங்காணி மீது பதிந்தது.

"சேதுபதி, கங்காணி அண்ணே? கண்டாக்கையா சொன்னது வெளங்கு னுச்சுதானே அப்புறம் மலையில அது வெட்டு இது வெட்டுன்னு எங்க உயிரை வாங்கக்கூடாது. அப்படி நடந்தா இப்ப இருக்கிற தலைவர் பட்டமும் இல்லாம போயிடும் வெளங்குச்சா" என்றான்.

நந்தசிரியின் இந்தப் பேச்சைக்கேட்ட சேதுபதிக்கு அவமானமாக இருந்தது. அவர் உள்ளத்தில் எழுந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு போலி புன்னகை ஒன்றை வரவழைத்துக்கொண்டார். "சரி....சரி...நீ மலைக்கு வா. அங்கு வைத்து உன்னைக்கவனித்துக் கொள்கின்றேன். இந்த சேதுபதி தலைவர் பற்றி உனக்கு ஒன்னும் தெரியாது" என்று மனதுக்குள் கறுவிக்கொண்டார்.

இவர்களுடைய நடத்தைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த கோபால் "என்னதான் கண்டாக்கையா சொன்னாலும் சேதுபதி தலைவர் அதனை காதில் போட்டுக்கொள்ள மாட்டார் நம்ம கிட்டயிருந்து பன்னிரண்டு ஆள் செய்யிற வேலையை எப்படி வாங்கிறதுன்னு அவருக்குத் தெரியும்" என்றான் கோபால் நந்தசிரியைப் பார்த்து.

"அதைப்பத்தி நீ கவலைப்படாத கோபால். சேதுபதியை எப்படி அடக்கி வைக்கிறதென்று எனக்குத்தெரியும். நீ போய்ட்டு நேரத்தோட வேலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துரு. சேதுபதியோட பட்டத்தை பறிக்கும் தந்திரம் எனக்குத் தெரியும். நீ விருப்பமுன்னா சொல்லு உன்னைத் தலைவராக்க என்னால் முடியும்" என்றான் நந்தசிரி பரிகாசமான குரலில்.

அவர்கள் பெரட்டுக் கலைத்து முடிந்து புறப்படத் தயாரானார்கள். நந்தசிரி தனது மடித்து விட்டிருந்த நீளக் கை கமிசின் மடிப்பை பிரித்து அதனுள் இருந்த பீடி ஒன்றை எடுத்து தன் பல்லிடுக்கில் திணித்தான். பின் சற்றே எட்ட நின்றிருந்த தொரைசாமியைப் பார்த்து "தொரை மாமா நெருப்பெட்டிய கொஞ்சம் தாறியா?" என்றான்.

அதிகாலையிலே அவனது இந்த கேள்வியால் எரிச்சல்பட்ட தொரசாமி "நீ கேக்கிறதுக்கெல்லாம் எடுத்துக் கொடுக்க நான் நீ வெச்ச ஆளு இல்ல... போ...போ.." என்றார் கடுகடுப்புடன்.

"இதுக்கெல்லாம் கோவிச்சிக்கிட்டா எப்படி. உன்கிட்ட கேட்காம யாருகிட்ட கேக்கிறதாம். சரி...சரி... கோவிக்காம பெட்டிய கொடு."

அவன் தொல்லை தாங்க முடியாமல் தொரசாமி இடுப்பில் செருகியிருந்த யானைமார்க் தீப்பெட்டியை எடுத்து நீட்டினார். பீடியை பற்ற வைத்துக்கொண்ட நந்தசிரி நண்பர்களுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினான்.

அவர்கள் செல்வதை ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த சேதுபதி இன்றைய தினம் நந்தசிரி வேலைக்கு வந்தவுடன் அவனுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்துக்கொண்டார். கண்டக்டர் மற்றும் அதிகாரிகள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு முன்னிலையில் வைத்து அவன் தன்னை அவமானப்படுத்தி விட்டான் என்பதில் அவரின் மனதில் வலியுடன் கூடிய காயம் ஆழமாக்கப்பட்டு விட்டது. அதற்காக அவனை இன்றே பழிவாங்கிவிட வேண்டுமென அவர் மனதில் வன்மம் கொதித்தெழ ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேதுபதியின் பழிவாங்கல் படலம்

அன்றைய தினம் காலையில் பெறட்டுக்கலைக்கும் போது நந்தசிரிக்கும்சேதுபதித்தலைவருக்கும்இடையில்ஏற்பட்டவாக்குவாதத்தைத் தொடர்ந்து நந்தசிரி "விரும்பினால் சொல்லு கோபால் உன்னைத் தலைவராக்குகிறேன்" என்று கூறிய வார்த்தைகள் கோபாலின் மனதில் நன்கு பதிந்து போய் விட்டன. உண்மையில் தோட்டத்தொழிலாளரின் பல்வேறு பிரச்சினைகளின்போது அது தொடர்பில் தட்டிக்கேட்க யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் வேஷம் போடுபவர்களாகவும் போலியான நியாயம் பேசுபவர்களாகவுமே இருக்கின்றனர் என அவன் மனதுக்குப்பட்டது.

கோபால் இவ்விதம் யோசித்தவாறே அன்று அவன் வேலை செய்ய வேண்டிய மூனாம் நம்பர் மலையை அடைந்தான். அவன் வந்து சேர்ந்த அதே நேரத்திலேயே நந்தசிரியும் ஏனைய நண்பர்களும் வந்து சேர்ந்தனர். சேது பதி கங்காணியும் நந்தசிரியை எவ்வாறு பழிவாங்கலாம் என யோசித்தவாறே அவர்கள் சரியான நேரத்துக்கு வேலைக்கு வருகின்றார்களா? என அவதானித்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது நைந்துபோன காக்கிச்சட்டைப் பையில் கையை நுழைத்து கறைபடிந்து அசுத்தமாக இருந்த சிறு நோட்டுப்புத்தகமொன்றை வெளியில் எடுத்தார். அதன் கசங்கிப் போன தாள்களை ஒன்றொன்றாகப் புரட்டிய சேதுபதி கங்காணி அன்றைய தினத்துக்கான தாளில் எழுதப்பட்டிருந்த தொழிலாளர்களின் பெயர்களை வாசித்து எல்லாரும் வந்திருக்கிறார்களா? என்று பரீட்சித்தார்.

"ஏன் ஆரியவங்ச இன்னும் வரவில்லை" தனக்குத் தெரிந்த உடைந்த சிங்களத்தில் வினவினார்.

"கடைக்குப் போய்ட்டு வருவதாக சொன்னான்" அங்கிருந்தவர்களில் ஒருவன் பதில் சொன்னான்.

"தெரியுந்தானே சரியான நேரத்துக்கு வேலைக்கு வராட்டி பேர வெட்டிருவேன்"

சேதுபதி கங்காணி சிங்களத்தில் பேசுகின்றமையும் அவரது குரலில் கடுகடுப்பு தெரிவதையும் அவதானித்த நந்தசிரி அவர் தன் மீது இன்னமும் கோபமாகத்தான் இருக்கிறார் என்பதை புரிந்து கொண்டான். இந்த விடயத்தை அங்கிருந்த ஏனையோரும் அவதானித்திருந்தனர்.

"சேதுபதி கங்காணி சட்டப்படி வேலை செய்யுற மாதிரி தெரியுது. ஆரியவங்சவின் பேர வெட்டினா ஒங்க தம்பியோட பேரையும் வெட்டனும். அவனும் இன்னும் வேலைக்கு வரலியே" நந்தசிரி அவனது வழமையான நையாண்டித்தனத்துடனும் கேலிப்புன்னகையுடனும் கூறினான்.

இதனால் சேதுபதியின் ஆத்திரம் மேலும் கொழுந்துவிட்டு எரிந்தது. பச்சைத்தூஷண வார்த்தைகள் அவரது தொண்டை வரை வந்த போதும் அவற்றை வெளியில் கொட்டாமல் வாய்க்குள்ளேயே புதைத்துக்கொண்டார்.

"சரி.. சரி... இப்ப கதபேச நேரமில்ல, எல்லாரும் வேலைய ஆரம்பிங்க. நந்தசிரி நீ போடர சுத்தம் செய். மலையை விட போடர் நல்லா சுத்தமா இருக்கனும்."

ஒரு தோட்டத்தை இன்னொரு தோட்டத்தில் இருந்து பிரிக்கிற கோட்டை மாயம் என்று அழைப்பார்கள். இரண்டு தோட்டத்துக்கும் இடையில் மூன்றடி இடைவெளி விடப்பட்டிருக்கும். அந்த இடைவெளியில் அது மாயம் என்பதை புரிந்து கொள்வதற்காக மாயச் செடி நட்டிருப்பார்கள். கடுஞ்சிவப்பும் ஊதாவும் கலந்த அந்தச்செடியின் உண்மையான பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் தெரியாது. மாயத்தில் ஊன்றப்படுவதனால் மாயச்செடி என்றே அதற்கு பெயர் நிலைத்து விட்டது. அதன் கடுமையான நிறம் காரணமாக தூரத்தில் இருந்து பார்த்தாலும் அவ்விடத்தில் தான் போடர் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

சேதுபதி கங்காணி நந்தசிரியை போடரை சுத்தம் பண்ணும் படி கூறியது எதேச்சையான செயல் அல்ல என்பதை அவன் உடனேயே புரிந்து கொண்டான்.

புல்வெட்டுவதிலேயே மிகக் கடினமான காரியம் போடரை சுத்தப்படுத்துவதுதான். ஒரு புல்லும் இல்லாமல் நிலத்தை வழித்தெடுக்க வேண்டும். உரிய விதத்தில் நந்தசிரி செய்யாது விடும்போது அவனை ஏசி மனோ ரீதி யில் துன்புறுத்த வேண்டுமென்பதே சேதுபதியின் திட்டம். எனி னும் நந்தசிரி அந்த சவாலை எதிர்கொள்ளத் தயாராகவே இருந்தான். அவன் சொரண்டியை எடுத்துக்கொண்டு தன் கடமையை செய்யத் தயாரானான்.

"வெள்ளைக்காரன் காலத்தில் மாயத்தை சுத்தம் செய்ய மூணு பேர் போடுவார்கள். அது பின் ரெண்டாகக் குறைந்து இப்போது ஒரே ஆள் அதனை செய்ய வேண்டும். பரவாயில்லை. என்னால் முடியும்" என்று கூறிய நந்தசிரி ரெட்டுத்துணியை இடுப்பைச் சுற்றிக்கட்டிக் கொண்டு வேலையைத்தொடங்கினான்.

"கங்காணிப்பயல் நந்தசிரியை பழி வாங்குகிறான்"

"போடரை சுத்தம் செய்வது லேசுப்பட்ட காரியம் அல்ல"

"நாமும் நந்தசிரிக்கு உதவ வேண்டும்" நந்தசிரியின் நண்பர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

"அங்கே யார் காலையிலேயே கதைத்துக் கொண்டிருப்பது? எல்லோரும் வேலையைப் பாருங்கள்" சேதுபதியின் குரல் உச்சஸ்தாயில் ஒலித்து அவர்கள் பேச்சை நிறுத்தியது. எல்லோரும் தத்தமது வேலையில் இறங்கினார்கள்.

மற்ற நாட்களில் ஏனோதானோ என்று சோம்பேறித்தனமாக வேலை செய்யும் நந்தசிரி அன்று சுறுசுறுப்புடன் இயங்கினான். அவன் சேதுபதியின் சவாலை முறியடிக்க முன்னின்று செயற்பட்டான். ஏனையோர் அவன் வேலை செய்யும் வேகத்தைப்பார்த்து வியப்படைந்தனர். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சக்தியனைத்தையும் திரட்டி அந்த நீண்ட தோட்டத்து எல்லையை வெட்டி சுத்தமாக்கி மலையின் மேட்டுப்பகுதியை நோக்கி விரைந்தான்.

ஆழமாக வேரூன்றி படர்ந்திருந்த புல் பூண்டுகளை அவற்றின் தூரில் சுரண்டியால் கொத்தி பின் கரங்களால் பிடுங்கி மண்ணை மீண்டும் அவ்விடத்திலேயே விசிறி வீசி விட்டு புற்களை ஆங்காங்கே குவித்து வைத்தான்.

சேதுபதி கங்காணி நந்தசிரி என்ன தவறுகள் செய்கிறான். அவனை எவ்வாறு கண்டிப்பது என்பது தொடர்பில் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார்.

"இது என்ன நந்தசிரி புற்களை பிடுங்கி எல்லா இடங்களிலும் போட்டிருக்கிறாய் ஒரு இடத்தில் குவிக்கத்தெரியாதா? இப்படியா? வேலை செய்வது" என்று உரத்த குரலில் கடிந்தார். பயல் அடங்கி வேலை செய்கிறான் என அவர் நினைத்தார்.

ஆனால் அவர் அவனில் குறை கண்டுபிடித்து வேணுமென்றே திட்டுகிறார் என உணர்ந்ததும் நந்தசிரி பொறுமையை இழந்தான். அவன் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்தி விட்டு சொரண்டியை வேக மாக முகத்தில் அடித்தாற் போல் விட்டெறிந்தான்.

"சேதுபதி கங்காணி, இவ்வளவு நேரமும் எனக்குக் கொடுத்த வேலையை ஒழுங்காகவும் பொறுமையாகவும் செய்துகிட்டிருந்தேன். நான் சரியாக வேலை செய்யலாட்டி அதப் போய் கண்டக்டருக்கிட்ட புகார் சொல்லு. இல்லாட்டி நான் இப்பவே போய் கண்டக்டரையும் சின்ன தொரையையும் கூட்டிக்கிட்டு வாறன். நீ யூனியன் தலைவரா இருந்து கொண்டு எதற்காக தொழிலாளர்களை வாட்டி வதைக்கிறாய். அதனால்தான் ஒஞ்சங்கத்தில் இருந்து எல்லாரும் புட்டுக்கிட்டு மத்த சங்கத்துக்கு ஓடுராங்க"

நந்தசிரியின் இந்த ஆவேசமான பேச்சால் சேதுபதி கங்காணி வாயடைத்துப் போனார். அங்கிருந்த அனைவரும் கல்லென சிலையாக சமைந்து போயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36



# சிவராணியின் அவல நிலை

நந்தசிரியின் ஆவேசப்பேச்சால் சேதுபதி கங்காணி வாயடைத்து வெலவெலத்துப்போனார். அங்கிருந்தவர்கள் எல்லோரும் சேதுபதி நந்தசிரியிடம் நல்லா வாங்கிக்கட்டிக்கொண்டார் என்று நினைத்தார்கள். அத்துடன் சேதுபதி யின் கோபமும் புஸ்வானமாகிவிட்டது. தான் செய்த தவறு அம்பலமாகிவிட்டது தொடர்பில் அவர் மனம் படபடத்தது.

அவர் பதிலுக்கு ஏதாவது பேசிவிட வேண்டும் என்று நினைத்த போதும் வாய் திறந்தால் நாக்கு குளறிவிடும் என்று பயந்தார். என்ன பேசலாம் என்று யோசிக்கவும் அவரது மூளை இடமளிக்க மறுத்தது. ஏனையோரும் வேலையை நிறுத்திவிட்டு தம்மையே பார்க்கிறார்கள் என்பது மட்டும் மூளைக்கு உறைத்தது.

"நீங்கெல்லாம் ஏன்டா வேலையை நிறுத்திவிட்டு இங்க வேடிக்கை பார்க்கிறீங்க போங்க... போங்க எல்லோரும் வேலையைப் பாருங்க."

சேதுபதி அனைவரதும் கவனத்தை திசை திருப்பினார். அதன்பின் அவர் யோடரை கவனிப்பதை விட்டு விட்டு தேயிலை மலைப்பக்கம் கவனத்தை செலுத்தினார். நந்தசிரி சுரண்டியை எடுத்து அங்கும் இங்கும் கிளறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். அவன் முன்பு போல கடினமாக வேலை செய்யாமல் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். அதனை சேதுபதி கங்காணி கவனித்தும் காணாததுபோல் இருந்தார். அப்பொழுது அவர்களுக்கான தேநீர் விடுதலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. யாரும் எதிர்பாராத விதத்தில் திடீரென சேதுபதி நந்தசிரியை அழைத்தார்.

"நந்தசிரி நீ போய் தேத்தண்ணி எடுத்துக்கிட்டுவா" என்றார். நந்தசிரியும் இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் ஆச்சரியம் அடைந்தான். அவன் இவ்வளவு நேரமும் சேதுபதியை வேறு எவ்வாறு மடக்குவது என்பது தொடர்பில் தான் சிந்தித்துக் கொண்டிருந்தான். இப்போது அவரே இறங்கி வந்திருப்பதானது அவன் பேசிய பேச்சால் அவர் மட்டுப்பட்டு விட்டார் என்பது போல் அவனுக்குத் தோன்றியது.

இதனை நினைத்ததும் அவன் உதடுகளில் ஒரு மெல்லிய புன்னகை அரும்பியது. அவன் சொரண்டியை எடுத்து அதில் இருந்த மண் உதிரும் வகையில் கல்லொன்றில் தட்டினான். பின் அதனை அருகேயிருந்த வரக்கட்டில் காணப்பட்ட பொந்தொன்றில் செருகி வைத்தான். இடையில் கட்டியிருந்த ரெட்டுத்துணியை உருவி தேயிலைச் செடியொன்றில் விரித்து வைத்துவிட்டு ரோட்டுப் பக்கமாகத் திரும்பினான்.

"சேதுபதி அண்ணே! நீங்க குடிக்கிறது போரேசஸ் சிகரட்டுத்தானே" என்று கேட்டவாறே ரோட்டில் குதித்து இறங்கினான்.

அதற்கு சேதுபதி உடனே பதில் சொல்லவில்லை. அவருக்கும் நந்தசிரியின் செயல் சிரிப்பை வரவழைத்தது. அவர் மறுபுறம் திரும்பி அவர்களுக்குத் தெரி யாமல் சிரித்தார். இருந்தாலும் அதனை நந்தசிரி கவனித்தான். அதனை நந்தசிரி மீதான சமாதான சமிஞ்சையாக கருதிக்கொண்டான். அப்போது சேதுபதி "பீடி குடிக்கிறவனுக்கு எல்லாமே ஒரு மாதிரிதான் நந்தசிரி" என்றார்.

நந்தசிரி கோபால் இருந்த திசையில் திரும்பி அவனைப்பார்த்து எல்லாம் சரி என்பது போல் கண்ணடித்து சைகை காட்டிவிட்டு மண் பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினான்.

"நந்தசிரி பயங்கரமான ஆள்தான். அதுனாலதான் கங்காணியோட பவர் கொறஞ்சு போச்சி."

"ஆனால் செலவு அவன் கணக்குல இல்ல விழுந்துருச்சி.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் என்னா ஒரு பக்கட் சிகரட்டை வாங்கியாந்து கங்காணிக்கு கொடுப்பான்னு நெனச்சியா. அதிகம்னா ரெண்டு சிகரட் கொண்டுவருவான்."

"ஆமா... ஆமா.. அதுல கூட ஒன்ன அவன் எடுத்துக்கிட்டு மத்தத பத்தவைச்சி அதுல அரைவாசியை அவன் ஊதிட்டு மிச்சத்தை கொடுப்பான்."

நண்பர்கள் இவ்விதம் பலபடி பேசிக்கொண்டிருந்தனர்.

சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் நந்தசிரி தேத்தண்ணி போத்தல்களுடன் வந்தான். அவன் ஒரு சிகரட் பெட்டியை எடுத்து கங்காணியிடம் நீட்டினான். கங்காணி அதில் இருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு பெட்டிய நந்தசிரியிடமே நீட்டினான். அதனை அவன் வாங்க மறுத்து விட்டான். ஆனால் அந்த பெட்டியில் இரண்டு சிகரட்டுக்கள் மட்டும்தான் இருந்தன. அதன் பின் அவர்கள் அனைவரும் தேநீர் குடிப்பதற்காக அருகில் இருந்த மரநிழலில் அமர்ந்தனர்.

*****

"ஒரு சுண்டு மாவு இருந்தா கொடு அன்னம்மா அடுத்த கிழமை திருப்பித்தாறேன்." பக்கத்து லயத்து சிவராணி அன்னம்மாவிடம் விநயமாக கேட்டாள்.

"உனக்கு ஒரு சுண்டு மாவு கொடுக்கிறதுல எந்த பிரச்சினையும் இல்ல. ஆனா ஒனக்கு அடுத்த கெழமை எப்ப வருமுன்னுதான் தெரியல."

அடுத்த கெழமை தாறேன்னு சொல்லி சிவராணி இதுவரை பல தடவைகள் இப்படி அரிசி, மாவுன்னு வாங்கிட்டுப் போறா. ஆனா அவ திருப்பிக் கொடுக்க மாட்டாங்கிறது அன்னம்மாவுக்கு தெரியும்.

"இந்த மொற எப்படியும் தந்திடுவேன். அப்படியே தேங்கா இருந்தாலும் அரைத்தேங்காவும் தந்தா நல்லம்."

அப்படி அவள் குனிந்து நெளிந்து கொண்டிருக்கும் போதுதான் நகரத்துக்குப் போக புறப்பட்ட கோபால் உள்காம்புராவிலிருந்து வெளியே வந்தான். அவனைக் கண்ட சிவராணி வெட்கம் பீறிக்கொண்டு வந்தவளாக நாணிக்கோனி நிலத்தைப் பார்த்தாள்.

இப்போது கூட இருபது வயதை அடையாத சிவராணிக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவள் மூன்று ஆண்டுகளுக்கு முதல்வரையில் அந்தத் தோட்டத்தில் கனவுக் கன்னிகளில் ஒருத்தியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாள். அந்தத் தோட்டத்தில் இருந்த இளசுகள் முதல் தோட்டத்துக்கு வெளியில் இருந்து வரும் நகரப்புறத்து இளைஞர்கள் சிலரும் கூட அவளை அடைந்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டனர். ஆனால் அவளை இறுதியில் வட்டகொடைத் தோட்டத்தில் லொறிச்சாரதியாக வேலைசெய்த பரமநாதனுக்கு அவள் பெற்றோர் கல்யாணம் செய்து கொடுத்தனர். அவனோ பரமகுடிகாரன். அவன் குடித்துவிட்டு தாறுமாறாக லொறியோட்டிய புகாரின் பேரில் வேலை இழந்ததுடன் பின்னர் வேறு ஒரு லொறி விபத்தில் பலியானான். இப்போது சிவராணி இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு வாழவக்கற்றவளாகத் தவிக்கின்றாள்.

குழந்தைகளை வைத்துக்கொண்டு அவளால் தோட்டத்தில் வேலைக்குப்போக முடியவில்லை. தனித்திருந்த அவளை தோட்டத்து சண்டாளர்கள் தம் இச்சைக்கு பயன்படுத்திக் கொண்டனர். எனினும் அவளது உடலை சுவை பார்க்கும் அவர்கள் தமது லீலைகள் முற்றுப் பெற்றதும் சொச்சக் காசுகளை அவள் கையில் திணித்து விட்டு சென்றனர். அவள் பெற்ற அந்தக் காசு ஒரு ராத்தல் அரிசி, ஒரு ராத்தல் பாண், ஒரு ராத்தல்மாவு, கொஞ்சம் காய்கறிகள் என்பவற்றை வாங்குவதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது.

கோபால் கூட அவள் திருமணமாவதற்கு முன்பு அவள் மீது காதல் பார்வை வீசியிருக்கிறான். ஆனால் அவள் இப்போது சண்டாளர்களிடம் சிக்குப்பட்டு நசிந்து நைந்து வாடிய மலராக இருந்தாள். முன்பு அவள் முகத்தில் மலரும் அந்த காதல் ரசம் ததும்பும் புன்னகை எங்கோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டது. கோபால் அவளை மிகவும் அனுதாபத்துடன் பார்த்தான். அவளுக்கு எவ்வாறாவது உதவ முடியாதா? என ஆதங்கப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபாக்கியத்தின் சீற்றம்

சிவராணி அனுபவித்து வரும் அவல வாழ்க்கையை எண்ணி கோபால் அவள் மீது பெரிதும் பரிதாபப்பட்டான். அவளுக்கு என்ன விதத்தில் உதவ லாம் என்று பலவிதங்களில் யோசித்தான். அவளுடன் கதைப்பதும் பழகுவதும் அவளுக்கும் ஏன் அவனுக்கும் பிரச்சினையை கொண்டு வரும் என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். காரணம் அவளது நடத்தையால் அந்த தோட்டத்து மக்கள் அவள் மீது துவேசமும் வக்கிர எண்ணமும் கொண்டிருந்தனர். அவனது அம்மாவும் கூட அவளிடம் பேச வேண்டாமென கண்டிப்பாக எச்சரித்திருந்தார். இருந்தாலும் எதிரேயே நிற்பவரிடம் பேசாமல் போவதெப்படி என்ற எண்ணம் எழுந்ததால்..

"எப்படி இருக்கீங்க சிவராணி அக்கா?" என்று விசாரித்து வைத்தான்.

அவள் தன் தர்மசங்கடமான நிலைமையை மறைத்துக்கொண்டு தலையை உயர்த்தி வலுக்கட்டாயமாக சிரிப்பொன்றை உதிர்த்தாள். அது போலியாக வரவழைத்துக் கொண்ட சிரிப்பென்று கோபாலுக்கும் புரியாமல் இல்லை. தான் பெரிய தவறு செய்து விட்டது போன்ற குற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வை மறைத்துக்கொண்டு சிரிக்கும் சிரிப்பாகவே அது காணப்பட்டது. முன்பெல்லாம் பாதையில் வழியில் அவள் எதிர்ப்பட்டால் அவனைக்கண்டும் அவள் உதடுகள் மட்டுமல்ல கண்கள், மூக்கு, நெற்றி, புருவங்கள் எல்லாமே புன்னகைக்கும். அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றும். அவளது இன்றைய பரிதாபகரமான நிலைமைக்கு அவனோ அவளது பெற்றாரோ இந்த சமூகமோ காரணம் இல்லை. அவளது ஏழ்மை, வறுமை தான் அவளை இப்படி ஆக்கி விட்டது. கோபாலின் கேள்விக்கு சற்று தாமதித்தே அவளிடமிருந்து பதில் வந்தது.

"ஏதோ இருக்கிறேன் தம்பி. ஒங்க புண்ணியத்தில. நீங்க எப்படி இருக்கீங்க. ஜோரா உடுத்திக்கிட்டு எங்கோ கௌம்புறாப்புல இருக்கு" என்றாள் அவள். இயல்பாக பேசுவதாக பாவனை பண்ணிக்கொண்டு அவளது குரலில் சற்றே குறும்புத்தனத்தையும் வரவழைத்துக் கொண்டிருந்தாள்.

அன்னம்மாவும் ஒற்றைக்கண்ணால் இவர்களது நெளிவு சுழிவுகளை அவதானித்துக்கொண்டுதான் இருந்தாள். அவளுக்கென்னவோ சிவராணி தன் மகனை அவளது மாயவலைக்குள் சிக்க வைக்கப்பார்க்கிறாள் என்பது போல்தான் தோன்றியது.

சிவராணி கோபால் வெளியேறிச்செல்வதற்காக சற்று ஒதுங்கி இடம்விட்டாள். அவன் அவளுக்கு மிக அருகில் கடந்து சென்ற போது அவன் பூசியிருந்த பவுடர் வாசமும் சிகரெட் மணமும் இணைந்து ஒரு ஆம்பளை நெடி வீசியதை சிவராணி உணர்ந்தாள். அந்த நெடி அவ உச்சி முதல் உள்ளங்கால்வரை நாசியூடாக சென்று சிலிர்க்க வைத்தது. அவள் அதனை அனுபவித்தவளாக மீண்டும் ஒரு முறை மூச்சை இழுத்து ஆழமாக சுவாசித்து தன் நெஞ்சை முழுதாக நிரப்பிக்கொண்டாள். அவளுக்கு ஏனோ அது மிகவும் இதமானதாக இருந்தது.

"ராத்திரியாவதற்கு முன் வந்துரு தம்பி" அன்னம்மா தன் மகனுக்கு அறிவுறுத்தினாள்.

அவன் திரும்பி வந்ததும் அவனுக்கு திருஷ்டி சுத்திப் போட வேண்டுமென்று நினைத்துக்கொண்டாள். பின் சிவராணியின் பக்கம் திரும்பி

"ஒடைச்ச தேங்கா இல்ல. இந்தா ஒரு தேங்காய எடுத்துக்கிட்டுப்போ. இரண்டு நாள்ல திருப்பிக் கொடுத்துறனும். நானும் இப்ப வேலைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறதில்ல தெரியுந்தானே. ஓராளு சம்பளத்திலதான் ஜீவிக்கனும். நீயுங்கூட அங்க இங்க சும்மா சுத்திக்கிட்டிருக்காம, நாலு கொழுந்து புடுங்கி பொழைக்கிற வேலையைப் பாரு. புள்ளைங்களும் பெருசாவுதில்ல" என்றாள் கரிசனையுடன் கூறுவது போல.

சிவராணி அதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை மௌனமாக இருந்தாள்.

அன்னம்மா மாவு மற்றும் தேங்காயை சுற்றி பேக்குப் பையில் போட்டுக்கொடுத்தாள். அதனை பெற்றுக்கொண்ட சிவராணி திரும்பிச் செல்ல மெல்ல அடி எடுத்து வைத்தாள். அவளது பின்பக்கம் ஆடி ஆசைந்து செல்வதை அவதானித்துக் கொண்டிருந்த அன்னம்மா இன்னமும் கூட ஆண்களை வசப்படுத்தி தன் உள்ளங்கைக்குள் வைத்துக் கொள்ளத்தக்க அழகு அவளிடம் கொள்ளையாக கொட்டிக் கிடப்பதாக நினைத்துக்கொண்டாள்.

தன் மகனையும் கூட அவள் தன் பிடியில் சிக்க வைத்துக்கொள்ளக் கூடியவள் தான் என்று நினைத்த அன்னம்மாள் தோட்டத்தில் உலாவும் அவள் தொடர்பான வதந்திகளை நினைத்துப் பார்த்தாள். தோட்டத்தில் உள்ள ஆண்களுடன் மட்டுமல்ல நகரத்தில் இருந்தும் ஆட்கள் அவளைத் தேடி வந்து போகிறார்களாம். இந்த வதந்தியில் உண்மையில்லாமல் இருக்க முடியாது என்று அவள் நம்பினாள்.

அப்போதுதான் எதிர் லயத்து சிவபாக்கியத்தின் கேள்வி அன்னம்மாளின் காதில் விழுந்தது.

"அவ என்னத்துக்கு இங்க லாத்திக்கிட்டு வந்துட்டுப் போறா அக்கா?" அன்னம்மாவுக்கும் சிவராணிக்கும் இடையில் நிகழ்ந்த முழு சம்பாசணையையும் அவள் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டுமென்று அன்னம்மாவுக்குத் தோன்றியது.

"வேறென்னத்துக்கு வருவா. மாவு ஒரு சுண்டும் தேங்காவும் கேக்குற மாதிரி வந்து வீட்டுல இளந்தாரி யாரும் இருக்கிறாங்களான்று பாக்கத்தான். இந்த வேசையாடுற பொழைப்ப உட்டுட்டு கொழுந்தெடுக்கிற வேலய பாக்க முடியாதா இவளுக்கு? நம்ம வீட்லயும் ஆம்பள புள்ளைய வச்சுக்கிட்டு நெருப்ப மடியில கட்டிக்கிட்டிருக்கிற மாதிரியில்ல இருக்கு."

அன்னம்மா கடு கடுப்பாக இப்படிக் கூறியவாறே அடுப்பில் சில மிளாறு கம்புகளை ஒடித்துத் திணித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியுமா? இளந்தாரிகளை மட்டுமல்ல இவ குடும்பஸ்தர்களையும் வலையில போட்டுக்கொள்ள அலையுறா." இனி அவளுக்கு நல்லதா நடக்கப் போவுது? குடும்பங்கள இல்ல நாசமாக்குறா. நேத்து முந்தாநாத்து வட்டகொட டவுன்ல இருந்து அவள கூட்டிக்கிட்டுப் போக நள்ளிரவுல நாளு பேரு வந்தாங்களாம் எலவெடுத்துப் போனவ."

சிவபாக்கியம் இந்த அளவுக்கு ஏன் சிவராணியை வையிரான்னு அன்னம்மாவுக்கு புரியாமலில்லை. அப்பப்ப சிவபாக்கியத்தின் புருஷன் பொன்னுசாமி சிவராணி வீட்டுப் பக்கம் போய் அவளுடன் சல்லாபித்து விட்டு வருகிறான் என்று தோட்டத்துப் பெண்கள் மத்தியில் கட்டுக்கதையொன்று உலவி வருவதனை அன்னம்மாளும் கேள்விப்பட்டுத்தான் இருந்தாள்.

இவள் இவ்வளவு தூரத்துக்கு சிவராணியை கரித்துக் கொட்டுறான்னா கொழுந்து மலைல பேசும் அந்தக்கதை உண்மையாகத்தான் இருக்கும் என்று அன்னம்மா உறுதி செய்து கொண்டாள்.

"சிவராணி தோட்டத்தில வேல செய்யாததாலும் அவள தேடி வெளி ஆட்கள் தோட்டத்துக்குள் வாராங்கன்றதாலும் அவள காம்புராவை ஒப்படைச்சிட்டு தோட்டத்த உட்டுப் போகச் சொல்லி நோட்டீசு கொடுத்திருக்காங்கலாம்."

"அவ எங்கடி போகப் போறா? அவ கொழுந்து மலைல தன்னையும் சேர்த்துக்கச் சொல்லி கேக்க சின்ன தொரய சந்திக்க அவர் வீட்டுக்குப் போய்ட்டு வந்தாளாம். அதோட சின்னதொரையும் கவுந்துட்டார்னு எல்லோரும் பேசிக்கிறாங்க. அவ இனி தோட்டத்த உட்டுப் போகமாட்டாளாம்."

"அது உண்மையாகத்தான் இருக்கும். இல்லாட்டி தோட்டத்தில வேல செய்யாம லயத்துல இருக்கிற மத்தவங்களையெல்லாம் தொரத்தி தொரத்தி விரட்டுறாங்க. ஆனா இவள மட்டும் ஏன் விட்டு வச்சிருக்கானுங்க."

இத்துடன் அவர்கள் சம்பாசனை முற்றுப் பெற்றது. அன்னம்மா அடுப்பில் இருந்த பானையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள். சிவபாக்கியம் ஏதோ கூறிய போதும் அது அன்னம்மாவின் காதுகளை சென்றடையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்கழி மாதத்திலே!

அன்றைய தினம் தத்தமது வேலை வெட்டிகளை முடித்துக் கொண்ட தொழிலாளர்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறச்சூழலில் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தாலும் எங்கும் ஒரு காய்ந்துபோன தன்மை யினை உணர முடிந்தது. வருடத்தின் பதினொன்னரை மாதங்கள் கடந்து போய் மார்கழி முடிய இன்னமும் இரண்டு வாரங்களே மீதமிருந்தன. அந்த தோட்டத்தின் மேற்பிரிவின் இரண்டு மூன்று கிறிஸ்தவ குடும்பங்களே கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட தயாராகிக் கொண்டிருந்தனர்.

எனினும் அத்தோட்டத்தின் கீழ்ப்பிரிவில் கிறிஸ்தவ குடும்பங்கள் இருபது வரை இருந்தன. அதனால் கீழ்க்கணக்கில்தான் அவர்களுக்கான தேவாலயம் அமைந்திருந்தது. வெள்ளைக்காரன் காலத்திலேயே அந்த தேவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில் தான் தோட்டங்களில் ஸ்ரீராம நாமபஜனை ஆரம்பமாகும். தோட்டத்துப் பெரியவர்களைவிட இளைஞர்களும் சின்னஞ் சிறுசுகளும் அதிகாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து குளித்து முழுகி கம்பம் தூக்கி லயம் லயமாக வீடு வீடாக சென்று பஜனை பாடிக்கொண்டு வலம் வருவார்கள்.

இளம் பெண்கள் வீட்டையும் முற்றத்தையும் சுத்தமாக்கி சாணம் கொண்டு மெழுகி முற்றத்தில் சாணநீர் தெளித்து ஒப்புறவாக்கி வெண் சுண்ணக் கல்லை பொடி செய்து அழகிய வரிக்கோலங்கள் போட்டு தீபமேற்றுவார்கள்.

அன்றைய தினம் பகலானதும் கோபால், நந்தசிரி, ஆரியவங்ச முத லான நண்பர்கள் கூட்டம் ஆற்றுக்குச் சென்று குளித்து விட்டு வருவதற்காக போனார்கள். அவர்கள் குளித்து விட்டு திரும்பும்போது ஆற்றோரமிருந்த குன்றின் அடிவாரத்தில் பெண்பிள்ளைகள் சிலர் கோலம் போடுவதற்கு பொடி செய்வதற்காக சுண்ணாம்புக்கல் தோண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில் புஸ்பராணியும் இருப்பதை அவதானித்த கோபால் சற்றே அவ்விடத்தில் நின்றான்.

ஆரவாரம் கேட்டு யாரோ வருகிறார்கள் என்ற இயல்பான உணர்வால் திரும்பிப் பார்த்த புஸ்பராணியும் கோபால் வருவதை அவதானித்த போதும் அவனைக் காணாதது போல பாவனை செய்து தன் வேலை யில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

நந்தசிரியும் ஆரியும் கோபால் ஏன் நின்று விட்டான் என்று திரும்பிப் பார்த்தனர். பின் அவன் பார்வை சென்ற திசையைப் பார்த்தனர். அவர்களுக்கும் விசயம் விளங்கிவிட்டது.

"கோபால், ஒன்னோட ஆள் இருக்காள்ல ஆனா அவ வேணுமின்னே இந்தப் பக்கம் திரும்பாம பாவனை பண்ணுறா..."

நந்தசிரி அவர்களின் கவனத்தைக் கவர தொண்டையை சுருக்கி செருமினான். அந்த சத்தத்தில் திரும்பிப் பார்த்த புஸ்பராணி கோபா லைப் பார்த்து புன்னகை ஒன்றை உதிர்த்து விட்டு மீண்டும் தன் வேலை யில் கவனத்தை செலுத்தத் தொடங்கினாள்.

அந்த ஆற்றங்கரையோரத்து குன்றின் அடிவாரத்தில்தான் தோட்டத்து மக்கள் சுண்ணம்புக்கல்லும் சுண்ணக்களியும் தோண்டுவார்கள். அப்படித் தோண்டித் தோண்டியே அங்கே சில பெருங்குழிகளும் பள்ளங்களும் காணப்பட்டன. தொழிலாளர்கள் தமது லயத்துச் சுவர்களுக்கு வெள்ளையடிக்கவும் கோலம் போடுவதற்கும் அந்த சுண்ணக்கற்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடித்துக் காய வைத்து மாவாக அரைத்து பின் தண்ணீரில் கலந்து கொள்வார்கள்.

"கோபால், தொடர்ந்தும் இந்த இடத்தில இருக்கிறது நல்லதல்ல, வா போகலாம்" என்று கூறிய நந்தசிரி பெரிய கல்லொன்றை எடுத்து நீர் நிரம்பிய பழைய சுண்ணாம்புக் கற்குழியில் தடார் என்று போட்டான். கல்லு விழுந்த அதிர்ச்சியில் தெளிந்த நீர் நாலாபுறமும் விசிறியடித்தது. பூப்போன்று சிதறிய அந்த நீர்த்திவலைகள் புஸ்பராணி உள்ளடங்கலாக அங்கிருந்த எல்லா பெண் பிள்ளைகளின் உடைகளையும் நனைத்தது. அதனைத் தொடர்ந்து கோபாலும் நண்பர்களும் அங்கிருந்த மண் பாதையில் இறங்கி ஓட்டம் பிடித்தனர்.

பின்னே, "சொறி நாய்கள், கொரங்குப் பயல்கள், கழுதைகள், நரிப்பயல்கள் என்று எல்லா மிருகங்களின் பெயர்களையும் சொல்லி அவர்களை திட்டுவது கேட்டுக்கொண்டே இருந்தது. அவர்கள் கையிலிருந்த களிமண்ணை உருட்டி அவர்கள் மீது வீசியெறிந்தார்கள்.

கோபால் ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தான். புஸ்பராணி அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

*****

அடுத்து வந்த சில தினங்களில் மார்கழி மாதம் முற்றுப் பெற்று புதிய வருடப் பிறப்பு நிகழ்ந்தது. எனினும் அந்த வருடப்பிறப்பு அவர்களுக்கு புதிய விடியல்கள் எதனையும் கொண்டு வரவில்லை. மேலும் சிக்கல்களையும் கஸ்டங்களையுமே கொண்டு வந்தது. வெள்ளைக்காரர்களின் கட்டுப்பாட்டிலும் ஆட்சியிலும் இருந்த தேயிலைப் பெருந்தோட்டங்களின் பொருளாதாரம் தேசிய உடமையாக்கப்பட்ட பின்னர் உற்பத்தியும் ஊதியமும் உயர செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் எல்லா விடயங்களும் எதிர்மாறாகவே நடைபெற்றன.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி நிறுவனம், அரசாங்க விவசாயத் திணைக்களம் மற்றும் இத்தகைய அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டங்களை அனுபவமற்ற ஊழல் நிறைந்த அரசாங்க அதிகாரிகளே நிர்வாகம் செய்ய நியமிக்கப்பட்டனர். இதனால் தோட்டங்கள் நாளுக்கு நாள் வீழ்ச்சியையும் நட்டத்தையும் எதிர்நோக்கின.

தோட்டத்தின் உயர் மட்ட அதிகாரிகள் அவர்களுக்கு கீழ் பணி புரிந்த ஏனைய உத்தியோகத்தர்கள் தொழிற்சாலை உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையாளர்கள் எனப்பல மட்டங்களிலும் தொழில் புரிந்தவர்கள் தம்மால் முடிந்தவரை ஏதாவது களவு செய்து கொள்ளையடித்து பணம் சம்பாதிப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டனர்.

பல தொழிற்சாலைகளில் பெரும் பொருட்செலவில் ஏற்றுமதிக்கென தயாரிக்கப்பட்ட தேயிலைத்தூள் ஆயிரக்கணக்கான ராத்தல்களில் திருட்டுத்தனமாக தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்டு கறுப்புச் சந்தையில் விற்கப்பட்டன. தோட்டங்களுக்கென கொண்டு வரப்படும் உரம், கிருமி நாசினிகள், களைக்கொல்லிகள் போன்றன திருடப்பட்டன. தோட்டத் தொழிலாளர்களுக்கு ரேசன் முறையில் வழங்கப்பட்ட, மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட உணவு வகைகளையும் அதிகாரிகள் கொள்ளையடித்து ஏப்பம் விட்டு தொழிலாளரை பட்டினி போட்டனர்.

மறுபுறத்தில் தொழிற்சங்கங்களும் இந்த சூழ்ச்சி சதிச் செயல்களுக்கு துணை போயின. தோட்டத்தொழிற்துறையில் மிகப்பிரதான தொழிற்சங்கம் என்று கூறிக்கொண்ட தொழிற்சங்கமும் அரசாங்கத்தின் சகலவிதமான தில்லு முல்லுகளுக்கும் ஜால்ரா தட்டுவதாகவே செயற்பட்டது. கோபால் நந்தசிரி ஆரியவங்ச போன்ற இளைஞர்கள் எல்லா தோட்டங்களிலும் காணப்பட்டார்கள். அவர்கள் மேற்படி தொழிற்சங்கங்களின் நடத்தை யால் விரக்தியடைந்து அவற்றை பலமாக விமர்சித்தார்கள். கோபாலும் நந்தசிரியும் தமது தோட்டத்தின் கங்காணியாகவும் மேற்படி தொழிற்சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றிய சேது பதியின் கையாலாகாத தனத்தையும் அவர் எவ்வாறு தொழிற்சங்கத்தின் உயர் அதிகாரிகளின் பித்தலாட்டத்துக்கு துணை நின்று நாடகமாடுகின்றார் என்பதற்கும் எதிர்ப்புத்தெரிவித்தார்கள். அந்த தொழிற்சங்கத்துக்கு எதிராக ஒரு எதிர்ப்பு இயக்கம் உருவாகிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39



# பொங்கலன்று இசை விழா

**வா**னம் நிர்மலமாக சிவந்திருந்தது. எங்கும் அமைதி நில வியது. சில குருவி கள் மாத்திரம் அங்கொன்றும் இங்கொன்றுமாக கீச்சிட்டுக்கொண்டிருந்தன. மென் காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. சூரியன் அந்தி வான் நோக்கி சரிந்து கொண்டிருந்தான்.

கோபால், நந்தசிரி, ஆரி, விஜயபால, முத்து, தொரசாமி ஆகியோர் எதைப்பற்றியோ பேசித்தீர்மானத்துக்கு வரவேண்டியவர்கள் போல் தோட்டத்தின் ஒதுக்குப்புறத்தில் அந்த கல்திட்டு மீது கூடியிருந்தார்கள்.

கோபால் அன்று அவர்களை அங்கு வரச்சொன்னதற்கான காரணத்தை விவரித்தான்.

"இம்முறை பொங்கல் பண்டிகையை வித்தியாசமாக ஏதாவது செய்து கொண்டாட தீர்மானித்திருக்கின்றோம். அதற்கு உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியமாக இருக்குமென நம்புகிறோம்."

"கோபால் நீ சொல்ற எதையும் தட்டிக்கழிக்க இங்கே இருக்கிற யாரா லையும் முடியாது. நீ சொல்லு. நாங்க செய்யிறோம். எங்களுக்கு பொங்கல் இல்லை. ஆனா உன்னோட பொங்கல்னா எங்களுக்கும் பொங்கல்தான்."

அவன் பேச்சை எல்லோரும் ஆமோதித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்து மக்களையும் சேர்த்துக்கொண்டு நாடகம் ஒன்று போட்டால் என்ன என நினைக்கிறேன்." கோபால் எல்லார் முகத்தையும் பார்த்தான்.

எல்லோர் கையிலும் இப்போது பீடிகளும் சிகரட்டுக்களும் புகைந்து கொண்டிருந்தன.

"நாடகம் போடறதுக்குனா பிரதி தயாரிக்கனும். நடித்துப் பழகனும். ஒரு மாசம் சரி கால அவகாசம் தேவை. ஆரி பீடியை ஊதியவாறே கூறினான்.

அவன் சொல்வது சரிதான் நமக்கு நாடகம் தயாரித்து அனுபவமும் இல்லையே.

கோபாலும் நாடகம் தயாரிப்பதற்கு போதுமான கால அவகாசம் இல்லை என்பதை ஒத்துக்கொண்டான்.

"நமக்கு கைவந்தகலை பாட்டுக்கச்சேரிதான். இந்த முறை அதனை பெரிய அள வில் மேடை போட்டு ஸ்பீக்கர் மைக் எல்லாம் பூட்டி இசை விழாவாக்கி விடுவோம்" நந்தசிரியின் ஆலோசனையை எல்லோரும் விசிலடித்து ஆமோதித்தார்கள். தோட்டத்தின் சகல இளைஞர் கூட்டத் தையும் சுற்றியிருக்கும் அயலவர்களையும் சேர்த்துக்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது.

தோட்டது மக்களிடம் இருந்தும் அயலில் இருப்பவர்களிடம் இருந்தும் நிதி யுதவி சேகரிப்பதென்றும் கன்டாக்டர், டீ மேக்கர், சின்னதொர போன்றவர்களை அழைப்பதென்றும் தீர்மானித்தனர்.

"டோப்பார்ட்டி ஒன்றையும் ஓரமா ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பத்தான் டோப்காரனுங்க கிட்ட தாராளமா நிதி சேகரிக்கலாம்" என்று விஜேபால கூறியதும் எல்லோரும் சிரித்தார்கள்.

"விஜேபாலவுக்கும் மாட்டு மூளையை விட அதிகமான மூளையிருக்கு. ராத்திரியில வெளியில போகாத மூளையில பனி புடிச்சிடும்" என்றான்.

அதற்கும் எல்லோரும் சிரித்தார்கள். "சங்கீத கருவிகளுக்கு என்ன செய்வது? நமக்கிட்ட டோலாக்கு, தபேலா, டிரம் செட், மோளம், நாதசுரம், நாலு தப்பு இவைதான் இருக்கு. அதிகம் பேசாத முத்தும் கூட ஆலோசனை தெரிவித்தான்.

"அவற்றை வெளியில் இருந்து வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்" என முதன் முறையாக தொரசாமி வாயைத்திறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது இது மத்த நாள்ல நாம செய்யிறது போல தியாகுவின் லயத்துக்காம்புறா பாட்டுக்கச்சேரி மாதிரி இருக்கக்கூடாது. பொங்கல் தினமாதலால் மக்கள் எல்லோரையும் வரப்பண்ணனும். நமது திறமையை முற்றாக வெளிக்கொண்டாரனும்." கோபால் ஆணித்தரமாகக் கூறினான். அதனைத் தொடர்ந்து அங்கே சுறு சுறுப்பு ஏற்பட்டது.

அவர்கள் பெரட்டுக்களத்துக்கருகாமையில் இருந்த சுவரை ஒட்டி மேடை அமைப்பதென்றும், நகரத்தில் இருந்து மைக் ஸ்பீக்கர் பெற்றுக்கொள்வதென்றும் மற்றும் கிட்டாரிஸ்ட், எக்கோடியன் முதலான கருவிகளை பெற்றுக்கொள்வதென்றும் நண்பர்களான நிஷாம்பாய், ஷெல்ட்டன், அல்விஸ், சுமனே, சந்தரே, உபாலி, நிமால், நிகால் எல்லோரையும் அழைப்பதென்றும் தீர்மானித்தார்கள்.

"ஆனால் நந்தே! இங்கே தோட்டத்து மக்கள் எல்லோரையும் நாம் அழைக்க இருப்பதால் தமிழ் பாடல்கள் அதிகமாகவும் ஒரு சில சிங்களப்பாடல்களையும் தான் பாட வேண்டும்" என்று கோபால் நிபந்தனை விதித்தான்.

அதனை நந்தசிரியும் மற்றவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். அந்த கணத்தில் இருந்தே வேலையில் இறங்குவதென்றும் முடிவெடுத்தார்கள். நிதி சேகரிப்பதற்கான தமிழ் பட்டியலை தயாரிப்பதற்கு கோபாலும் சிங்கள பட்டியல் தயாரிப்பதற்கு ஆரியும் பொறுப்பேற்றனர்.

"மேடை கட்டுவதற்கு ரெண்டு மூணு சவுக்கு மரம் தேவைப்படும். யாராவது ரெண்டு பேர் பொறுப்பெடுங்க"

"மரம் வெட்ட முடியாது கோபால் மரம் வெட்டக்கூடாதுன்னு சட்டம் கொண்டாந்திருக்காங்க" கோபாலுக்கு பதிலளித்தான் நந்தசிரி.

"அப்படீன்னா கண்டக்டர்கிட்ட கேட்டு ஸ்டோர்ல இருந்து ஊண்டரத்துக்கு தூண்களும் கொஞ்சம் வாகப் பலகைகளும் கேட்டு வாங்கிக்குவோம். சின்ன தொரக்கிட்ட கேட்டாலும் பரவாயில்லை."

"சின்ன தொரகிட்ட போனா விசயத்தை சொல்லி அவர அழைக்கவும் வேணும்" விஜேபால ஆலோசனை கூறினான்.

நந்தசிரி சற்றே எழுந்து நின்று விஜேபாலவை மேலும் கீழும் பார்த்தான். "தம்பி நல்ல கருத்துத்தான் சொல்லுது. தம்பிதானே சின்ன தொரயோட எல்லா வேலைக்கும் நண்டும் சுண்டுமா இருந்து ஒத்தாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவரு. சின்ன தொரகிட்ட விசயத்தை சொல்லி புல்சப்போட் எடுக்கிற வேலையை விஜேபாலகிட்ட ஒப்படைப்போம்"

"சரி சரி, அந்த வேலையை நான் பொறுப்பெடுக்கிறேன்." விஜேபால முழு ஆர்வத்துடன் கூறினான். அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கல் திட்டிலிருந்து கீழே இறங்கி மண்பாதையை அடைந்தபோது ஒரு நகைக்கத்தக்க சம்பவம் இடம்பெற்றது.

தோட்டத்தின் முதியவர்களில் ஒருவரான முனியாண்டி பதறியவாறே சத்தம் போட்டு எதையோ பிதற்றியவாறு ஓடி வந்து கொண்டிருந்தார். அவரை நிறுத்திய நந்தசிரி என்ன முனியாண்டி மாமா என்ன நடந்தது என்று கேட்டான்.

"அந்த திருட்டு பய ஜெகநாதனைப் பார்த்தீங்களா.. நம்ம கோழிய களவாண்டு வித்துப்புட்டான். திருட்டுப் பய" குளறியவாறே அவர் கூறினார். அவரை மேலும் குழப்ப வேண்டுமென்று நினைத்த ஆரி ஆமா.. ஆமா... மேலதான் போறான். எங்களுக்கு சிகரெட்டெல்லாம் வாங்கிக்கொடுத்தான் என்றான்.

"அப்படின்னா நீங்களும் திருட்டுப் பயல்கள் தான். நீங்கள் எல்லாம் சிக ரட் குடிக்க என் கோழிதானா கிடைத்தது?" என்றார் முனியாண்டி மேலும் பதட்டமடைந்தவாறு.

உண்மையில் ஜெகநாதன் அந்தத் தோட்டத்தில் கோழித்திருடன் என்று பெயர் பெற்றவன்தான். அவன் கோழிகளைத் திருடி முனியாண்டியின் கோழிக் குடாப்பில்தான் அடைப்பான். அவன் முனியாண்டியின் மருமகனும் கூட. இத்தகைய கோழிச்சண்டை மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் அவ்வப்போது நடக்கும் என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஏனென்றால் தனக்கு காசு தேவைப்படும் போதெல்லாம் அந்தக் குடாப்பில் இருந்து ஒரு கோழியைப் பிடித்து ஜெகநாதன் விற்று விடுவான்.

முனியாண்டி கோழித்திருடனைத்தேடி மேலே ஓடினார். அவர்கள் அனைவரும் இதை நினைத்து சிரித்தவாறே தத்தம் லயங்களை நோக்கி விரைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகம் சிவந்த சூரியன்

மலைநாட்டு தோட்டப்புற தமிழ் மக்கள் ஏனைய நகர்ப்புற தமிழ் மக்களை விட சற்று மேலே சென்று பொங்கல் பண்டிகையை அனுஷ்டிப்பார்கள். பொங்கல் திருநாள் என்பது நெல் பயிர் செய்து அதன் முதல் அறுவடையில் இருந்து கிடைத்த அரிசியைக்கொண்டு பொங்கல் வைத்து அதனை சூரிய பகவானுக்கு அர்ப்பணித்து வணங்குவதாகும்.

எனினும் தோட்டப்புறத்து மக்களுக்கு நெல்வயல் இல்லையாதலால் அவர்கள் தமது ஜீவனோபாயமான தேயிலைத் தொழில் சிறக்க வேண்டுமென்று சூரியனுக்கு பொங்கல் படையல் செய்து வேண்டிக் கொள்வார்கள். சூரிய பகவானின் பார்வை படாவிட்டால் தேயிலைத்தொழில் செழிப்புறாது என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

அதேபோல் பொங்கல் பண்டிகையின்போது அவர்களது இரண்டாவது கலாசார முக்கியத்துவமிக்க கொண்டாட்டமாக அமைவது மாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலாகும். தோட்டப்புறங்களில் எல்லாரது வீட்டிலும் பசுமாடுகள் இல்லா விட்டாலும் இருக்கின்ற சிலரது மாட்டுப் பட்டிகளில் கூடி அன்றைய தினம் மாட்டைக் குளிப்பாட்டி மாட்டுப்பட்டிகளை துப்பரவு செய்து சுண்ணாம்படித்து மாவிலைத் தோரணம் கட்டி தென்னங் குருத்தோலை சோடனை செய்து கருப்பட்டி பயறு பருப்புடன் கூடிய பொங்கலை செய்து மாடுகளுக்கு உண்ணக் கொடுப்பார்கள். தோட்டங்களில் மாடுகள் வளர்க்கும் ஒரு சில சிங்களக் குடும்பங்களும் இந்து முறைப்படி இவ்விதம் பொங்கல் பண்டிகையை கொண்டாடத் தவறுவதில்லை.

தோட்டங்களில் இடம்பெறும் வழக்கமான இத்தகைய பொங்கல் கொண்டாட்டத்துக்கு மேலதிகமாக இம்முறை கோபால் நந்தசிரி ஆகிய இளைஞர்களை முதன்மையாகக் கொண்டு நடத்தப்படவிருக்கும் இசை விழாவில் கலந்துகொள்ள தோட்டத்து மக்கள் மிகவும் உற்சாகமாகவும் எதிர்பார்ப்புடனும் இருந்தார்கள்.

ஏற்கனவே தீர்மானித்தபடி பெரட்டுக்களத்தையொட்டி மேடை அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய இசை விழா பற்றி தங்களால் முடிந்த அளவுக்கு கைகளால் சுவரொட்டிகள் தயாரித்து தோட்டத்தில் பல இடங்களிலும் சுற்றுவட்டாரங்களிலும் நகரத்து சுவர்களிலும் கூட ஒட்டப்பட்டிருந்தன. ஆதலினால் அன்றைய தினம் இசைக்கச்சேரிக்கு பெருந்திரளான மக்கள் கூட்டம் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இச் சங்கீத விழாவில் அறிவிற்புப்பணி மேற்கொள்வதற்காக தேசிய தமிழ் வானொலிச் சேவையில் இருந்து அறிவிப்பாளர் ஒருவரை அழைக்க முயற்சித்த போதும் அதனை அவர் அந்தஸ்துக் குறைவாகக் கருதி மறுத்து விட்டார். இதனால் தோட்டத்திலேயே படித்த இளைஞர் யுவதிகளை அவர்கள் தயார் செய்தனர். பக்திக் கீதங்கள் பாடுவதற்காக நடுத்தர வயதுடைய பெண்களையும் நாட்டுப்புறப்பாட்டுக்களை பாட வயது முதிர்ந்த பெண்களையும் கூட தயார் செய்தனர்.

இதனைத் தவிர வெளியில் இருந்து அழைக்கப்பட்டிருந்த கோபால் மற்றும் நந்தசிரியின் நண்பர்களும் சில சிங்கள சங்கீதக் கலைஞர்களும் முன்கூட்டியே வந்திருந்து அவர்களுக்கு ஒத்தாசை வழங்கினர். அவர்களுக்குத் தேவையான மதுபான போத்தல்களை பெற்றுக்கொடுப்பதற்கு சின்னத்துரை ஏற்பாடுகளை செய்திருந்தார்.

கருப்பையா கங்காணி கூட இரண்டு சாராயப் போத்தல்களை வாங்கி வந்து வீட்டில் ஒளித்து வைத்திருந்ததை அவதானித்த அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி செல்லாயி "ஆத்தே இது என்ன எழவு" ன்னு விசாரித்த போது "போடி வெவஸ்த கெட்ட கூவே" என்று அதட்டிய அவர் "நம்ம பயலுக இருந்திருந்து இப்படி ஒரு காரியம் பண்றாங்க அவனுகளுக்கு நம்மலால முடிந்த உபகாரம் பண்ண வேண்டாமா" என்று கூறினார்.

சங்கீத கச்சேரியை எதிர்பார்த்து காத்திருந்த சின்னஞ்சிறுசுகளும் விடலை களும் புத்தாடைகள் புனைந்து காலையில் இருந்தே தோட்டத்து பாதைகளில் சுறுசுறுப்புடன் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள். அவர்கள் தாம் அணிந்திருந்த புத்தாடைகள் அழுக்காகி விடுமோ என்று கொஞ்சம் கூட கவலைப்படாமல் மண்ணிலும் தூசியிலும் துள்ளிக் குதித்து விளையாடினார்கள். இதனைப்பார்த்து பெரியோர்கள் ஏசிப்பேசிய போதும் அவை அவர்களின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை.

அன்றைய பொங்கல் தினத்தன்று தனக்கு படைக்கப்பட்ட எல்லா பொங்கல்களையும் வேண்டுதல்களையும் சிவந்த முகத்துடன் உவந்து ஏற்றுக்கொண்ட சூரிய பகவான் மெல்ல மேற்குத் திசை நோக்கி சாய்ந்து கொண்டிருந்தான். அந்த நேரத்தில் தோட்டத்து பெரியவர்கள் நடுவயதைத் தாண்டியோர்களில் பெரும்பான்மையானவர்கள் சாராயத்தில் மூழ்கி போதையில் மிதந்து கொண்டிருந்தனர்.

சிலர் பொறுமையிழந்து ஒன்று கூடி தாமாகவே பாட்டுப்பாடி உலோகத்திலான சட்டி பானைகளைக் கொண்டு தாளம் போட்டுக் கொண்டிருந்தனர். வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கு இது விநோதமாக இருந்த போதும் தோட்டங்களில் இது சகஜமானதுதான் என்பது தெரிந்தவர்களுக்குத் தெரி யும். கோபாலின் மூத்த சகோதரனான ரெங்கநாதனும் இத்தகையவர்களில் ஒருவனாக இருந்தான். பித் தலைக்குடமொன்றை கட்டியணைத்து அதைத் தட்டி ஓசையெழுப்பி அவன் பெருங்குரலெடுத்து பாடிக்கொண்டிருந்தான். அவர்களைச்சுற்றி அமரனும் மற்றும் சில சிறுவர்கூட்டமும் கூடியிருந்தனர்.

"ஒங்க அண்ணனுக்கும் இன்னைக்கு சந்தோஷமான நாள்தான். அங்கப்பாரு அவன் ரசித்து பாட்டுப்பாடுறத." அன்னம்மா அவர்கள் பாடிக்கொண்டிருந்த திசை நோக்கி காட்டினாள். கோபால் அப்போதுதான் இசை விழா ஏற்பாடுகளை எல்லாம் பூர்த்தி செய்து விட்டு அவன் அம்மா அவனுக்கு வாங்கிக்கொடுத்த முழுக்கை வச்ச பட்டுச்சேட்டையும் வேட்டியையும் மிகச்சிரமப்பட்டு அணிந்து கொண்டிருந்தான். அன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் இசை விழாவின் போது நண்பர்கள் கூட்டம் எல்லாரும் பட்டு வேட்டியும் முழுக்கை பட்டுச்சட்டையும் அணிவதென்று தீர்மானித்திருந்தனர்.

உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்களின் பொங்கல் பிரார்த்தனைகளையும் வேண்டுதல்களையும் தலைமேற் தாங்கிக் கொண்ட சூரிய பகவான் மலை உச்சிகளையெல்லாம் தாண்டிச் சென்று மேகக் கூட்டத்துக்குள் மறைந்து கொண்டான். மெதுவாக இருள் படர ஆரம்பித்தது அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக மெல்லிய குளிர்காற்று தன் இசையை பாடி சுற்றுப்புறச்சூழலில் குளிர்வாடையைத் தோற்றுவித்தது. சூரிய வெப்பத்தால் தளர்ந்து வாடிப்போயிருந்த இலை குழை மரஞ்செடிகள் குளிர் காற்றில் குளிர்ந்து சிலிர்த்து மீண்டும் புத்துயிர் பெற்று அசைந்தாடின.

அவர்களின் பொங்கல் இசைவிழாவின் பொருட்டு சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன. மேடை மின்னும் கலர் கடதாசிகளாலும் கிரேப் பேப்பர் பட்டிகளாலும் வர்ணப்பட்டுத்துணிகளாலும் ஜோடிக்கப்பட்டு பெட்ரோல் மெக்ஸ் லாம்பு வெளிச்சத்தில் தகதகவென்று மின்னிக்கொண்டிருந்தது. மேடையை நோக்கி முதலில் வந்தவன் அருகே யொக்ஸ் போட் தோட்டத்தை சேர்ந்த எக்கோடியன் புகழ் முத்துவாகும்.

கிறிஸ்தவனான அவன் முழுப்பெயர் அந்தோனி முத்து.

அவன் தோட்டத்துக்குள் நுழைந்த உடனேயே எக்கோடியன் வாசிக்க ஆரம்பித்தான். அந்த சத்தம் கேட்டு சிறு பிள்ளைகள் அந்தத்திசை நோக்கி ஓடினர். அவர்கள் ஆரவாரமாக முத்துவை மேடை நோக்கி அழைத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் மிதிக்கப்படுகின்ற சாதி

பொங்கல் இசை விழாவின் நிமித்தம் நிர்மாணிக்கப்பட்டிருந்த மேடை களைகட்ட ஆரம்பித்தது. இசை விழாவுக்கு சுற்று வட்டாரத்தில் இருந்தும் நகர்ப்புறத்தில் இருந்தும் பலர் வருகை தந்தனர். கோபாலும் நந்தசிரியும் மற்றும் நண்பர்களும் எல்லோரையும் வரவேற்றனர்.

ஏனைய நாட்களில் பாட்டுக் கச்சேரி நடத்தும் காம்புராவாகப் பயன்பட்ட தியாகுவின் லயக் காம்பரா அன்று வந்தோரை உபசரிக்கும் விருந்துபசார அறையாக மாறியது. அங்கேதான் அவர்கள் சாப்பாடும் மதுபானமும் வைத்திருந்தார்கள். இசைவிழா ஆரம்பிக்கும் சமயத்திலேயே சங்கீதக்காரர்களும் ஒலிபெருக்கி மைக் மற்றும் பெற்றோல் மெக்ஸ் வழங்குனர்களும் சாராயத்தை தொண்டையில் ஊற்றி சற்றே நனைத்துக் கொண்டனர். கோபாலினதும் நந்தசிரியினதும் சிங்கள நண்பர்களான சந்தரே, ஷெல்ட்டன் மற்றும் குழுவினர் வரும்போதே தங்கள் பங்குக்கு 2 சாராயப் போத்தல்கள் வாங்கி வந்திருந்தனர். இசை விழா ஆரம்பமாக எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன.

விழாவை அங்குரார்ப்பணம் செய்ய சின்னத்துரை அவர்களும் மேலும் சில தோட்ட அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மங்கள விளக்கு ஏற்றுவதற்கு மேடைக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள விளக்கேற்றிய கையுடன் பண நோட்டுக்கள் அடங்கிய கடித உறைகளை கோபாலின் கையில் திணித்தனர். அவன் அவற்றை நந்தசிரியிடம் கொடுத்தான்.

அதனைத் தொடர்ந்து இசை விழா ஆரம்பமாயிற்று. முதலில் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இசை விழா தொடர்பில் சுருக்கமாக அறிமுகம் செய்த அறிவிப்பாளர் வரவேற்புப் பாடலைப் பாட ஜெகநாதன் என்ற இளைஞனை அழைத்தார். அவன் வந்து ஒரு சிங்கள பாடலை அபூர்வமாகப் பாடினான். ஒரு தமிழ் இளைஞன் ஒரு சிங்களப்பாடலை அத்தனை அபூர்வமாகப் பாடுவதைக் கண்டு தமிழ் - சிங்கள இரு தரப்பினருமே ஆச்சரியமும் குதூகலமும் அடைந்தனர். அங்கு வருகை தந்திருந்த தோட்ட அதிகாரிகளும் நகர்ப்புறத்து சிங்கள மக்களும் ஏற்பாட்டாளர்களை பெரிதும் பாராட்டினர். கரகோஷம் நீண்ட நேரம் ஒலித்தது.

இரண்டாவது பாட்டாக ஒரு பழைய தமிழ் குத்துப் பாட்டினை ஜெகநாதனே பாடினான். அதன் பின்னரும் அவனை மேடையில் இருந்து ரசிகர்கள் இறங்க விடவில்லை. அவன் "டிங்கிரி டிங்காலே...", "காதல் சங்கதி சொன்னாளே...", "பாட்டுப்பாடவா.... பாடஞ் சொல்லவா...", "பாவாடை தாவணியில்..." என ஐந்து பாட்டுக்களை பாடினான்.

அதன் பிறகு ஒரு சிங்கள இளைஞன் மொஹிதீன் பேக் அவர்களின் பக்திப் பாடல்கள் சிலவற்றைப் பாடினான். பின்னர் மாறி மாறி தமிழ் சிங்களப் பாடல்கள் அங்கே உச்ச கட்டத்திலும் ஓங்கியும் ஒலித்தன. ஆரம்பத்தில் சிறுபிள்ளைகளும் பின்னர் பெரியோர்களும் பாட்டுக்கும் இசைக்கும் ஏற்றவாறு ஆடத் தொடங்கினர். வேறு ஒரு இடத்தில் இளைஞர் கூட்டம் கும்மாளமிட்டு ஆடிக் கொண்டிருந்தது.

அறிவிப்பாளர் தன் கையில் மைக் கிடைத்த போதெல்லாம் கோபால் மற்றும் அவன் நண்பர்களின் இந்த இசை விழா பற்றியும் மீண்டும் மீண்டும் புகழ்மொழி கூறிக் கொண்டிருந்தார். இடையில் அவர்கள் இசை விழாவை சற்றே இடைநிறுத்தி அங்கே வருகை தந்திருந்த அதிகாரிகளுக்கும் ஏனைய விருந்தினருக்கும் நன்றி கூறவும் வாழ்த்துத் தெரிவிக்கவும் சிறிது அவகாசத்தினை எடுத்துக் கொண்டனர். முதலில் நந்தசிரி, அதிகாரிகள், அவர்களது குணநலன்கள், விசித்திரமான செயற்பாடுகள் என்பவற்றை வர்ணித்து நையாண்டியாகவும் அதே சமயம் புகழ்ந்தும் உரை நிகழ்த்தினான். அவன் பேச்சை நிப்பாட்டச் செய்யப் போதும் போதும் என்றாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக உரை நிகழ்த்த கோபால் மேடையில் ஏறியபோது பாரிய கரகோசம் எழுந்தது. அவன் முதற்கண் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் வணக்கத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டான். அவனது பேச்சு மிக இரத்தினச் சுருக்கமாகவும் பலரது நெஞ்சிலும் ஆழப்பதிவதாகவும் அமைந்தது.

"நாம் இன்று இங்கு நிகழ்த்தும் இந்த இசை விழா ஒரு பாரிய நிகழ்ச்சியல்ல. இது ஒரு சிறிய சந்தர்ப்பம் மட்டும்தான். நம்மால் வெளியில் இருந்து பணம் செலவழித்து பெரிய பாடக பாடகியரை அழைத்துவர முடியாது. நமது இந்த நிகழ்ச்சிக்கு தேசிய தமிழ் வானொ லியில் இருந்து அறிவிப்பாளர் ஒருவரை அழைத்த போதும் கூட அவர்களுக்கு நம்மத்தியில் வந்து பார்த்து பேசி பழகி விட்டுச் செல்லும் பெரிய மனது இல்லை. நாம் தோட்டத்து கூலியாட்கள் என்று குறைத்து மதிக்கப்படுகின்ற சாதி என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இருந்தாலும் நாம் எமது நண்பர்களை இணைத்துக் கொண்டு இந்த விழாவை சிறப்பாக செய்துள்ளோம் என்பதற்கு இங்கு கூடியிருக்கும் பெருந்திரளான மக்களே சாட்சி. நமது தோட்டத்தின் உயர் உத்தி யோகத்தர்களும் எம்மை மதித்து இன்று இங்கு வந்து எம்மை உற்சாகப்படுத்தியமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. அதுக்கு மேலதிக மாக இன்றைய பொங்கல் நாளன்று சிங்கள, முஸ்லிம் மக்களும் நம்முடன் இணைந்து இவ்விழாவை கொண்டாடுவது சிறப்பாகும். இந்த சிறு விழாவுக்கு வரும்படி நமது தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தும் அவர்களுக்கும் வருகை தருவதற்கு பெரிய மனது இல்லை. அது தொடர்பில் இவ்விடத்தில் மேலும் பேசுவது உகந்தல்ல.

நீங்கள் இதுவரை பலரது பாடல்களை கேட்டு மகிழ்ந்தீர்கள். தொடர்ந்தும் நிகழ்ச்சிகள் நடக்கவுள்ளன. இங்கே நிறையப் பேர் பாட ஆர்வமுள்ளவர்கள் இருப்பீர்கள். வாருங்கள் இன்று உங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒரு சந்தப்பம் கிடைத்துள்ளது. பயன்படுத்திக் கொள்ளுங்கள்"

கோபால் தமிழ் மொழியில் இவ்வளவு அழகாக பேசுவான் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனது பேச்சு மிகுந்த கரகோசத்துக்கு மத்தியில் முற்றுப் பெற்றது. அவனது அம்மா அன்னம்மா தன் பிள்ளையின் திறமை கண்டு புளகாங்கிதம் அடைந்தாள். அண்ணன் ரெங்கநாதன் தன் தம்பியை நினைத்துப் பெருமைப்பட்டான். கோபாலின் அண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமா என்ற உமாதேவி மிகப் பெரு மையுடன் தன்னைச் சுற்றியிருந்த பெண்கள் கூட்டத்தில் உலாவித் திரிந்தாள்.

கோபாலின் பேச்சு முடிந்த கையுடன் அங்கு வருகை தந்திருந்த தோட்டத்து உத்தியோகத்தர்களும் சிறப்பு விருந்தினர்களும் தொடர்ந்தும் அவ்விடத்தில் இருப்பது மதிப்புக்குரியதல்ல என்று ஒருவராக விடை பெற்றுச் சென்றனர்.

அவர்கள் விடை பெற்றுச் சென்றதும் அங்கிருந்தோர் கோபாலின் பேச்சுத் திறமை தொடர்பில் பலபடி பேசிக்கொண்டனர்.

கோபால் இவ்வளவு திறமையாக பேசுவான் என்பது யாருக்கும் தெரியாத விடயம். "தான் பேசுவது தனக்கே புரியாதமாரி பேசும் செவனு வின் மகன் பேசுறத பார்த்தியா"

"அவன் டிரம் வாசிப்பதிலும் கெட்டிக்காரன். திருவிழாவில் அவன் டிரம் வாசிச்சா ஆடலாம் போல தோனும்"

"இனிமே தோட்டத்து இளசுகளுக்கிட்டேருந்து தப்ப முடியாது."

"அன்னம்மாவால இனி அவன பொத்தி வச்சு காப்பாத்த முடியாம போகும்."

"என்னதா இருந்தாலும் நம்ம பயதானே. நமக்குத்தா பெரும."

"தலைவர் ஐயாவோட மூஞ்சுதா செத்துப் போச்சு."

இப்படிப் பலரும் பலபடி பேசிக் கொண்டிருந்தபோது இசைவிழா மீண்டும் களை கட்டியது. பாட்டுப் பாடுவதற்கு பலரும் முண்டியடித்துக் கொண்டு மேடையை நோக்கி வந்தனர். எக்கோடியன், கிட்டார், டோலக், தப்லா எனப் பல வாத்தியங்களை இசைத்தோர் களைப்படைந்தனர்.

அவர்களில் ஒவ்வொருவராக மேடைக்குப் பின்னால் சென்று உற்சாகப் பானம் பருகி விட்டு வந்தனர். நந்தசிரியும் ஏனைய நண்பர்களும் சிறிது மதுபானம் அருந்தியிருந்த போதும் கோபால் நிகழ்ச்சியை ஒழுங்காக நடத்தும் ஆர்வத்தில் மதுபானம் அருந்துவதில்லை என்று தீர்மானித்திருந்தான். இசைவிழா நள்ளிரவையும் தாண்டி விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேட்டியை உருவியது யார்?

கோபால் நந்தசிரி குழுவினரின் இசைவிழா அன்றிரவு மூன்றாம் சாமம் முடிந்து அடுத்த சாமத்துக்கான ஆரம்பத்தில் கோழி கூவும் வரை சென்றது. அடுத்த நாள் காலையில் வழக்கம் போல ஸ்டோர் சங்கு ஊதிய போதும் அன்று லீவுநாள் என்பதால் யாரும் அதனை சட்டை செய்யவில்லை. அன்றிரவு நன்கு குடித்துவிட்டு சுய நினைவு இல்லாத சிலர் எல்லோரும் சென்ற பின்னரும் மேடையில் படுத்து உருண்டு கிடந்தனர்.

விடிய வெள்ளனவே எழுந்து ஒன்னுக்கு ரெண்டுக்கு கழிப்பதற்கு வெளிக்காட்டுக்குப் போறதுக்காக புறப்பட்டுச் சென்ற பொன்னுத்தாயியின் மகள் சிவகாமி போன மாத்திரத்திலேயே "அம்மா.. அம்மா..." என்று அலறிக்கொண்டு ஓடி வந்தாள்.

அவளது சத்தத்தைக் கேட்டு பதற்றமடைந்த பொன்னுத்தாயி "என்ன புள்ள கத்துற" என்று வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

"இல்லம்மா, அங்க நேத்து நடந்த இசைக் கச்சேரி மேடைக்கு மேல பழனியாண்டி மாமா மேலுல துணி ஒண்ணு கூட இல்லாம அம்மணமாக படுத்துக்கெடக்கிறாரு."

"அட சனியன் புடிச்ச பாவி மவனே, நேத்து ராத்திரி குடிச்ச சாராயத்தில எவனோ" ஒடம்பில இருந்த வேட்டிய உருவிக்கிட்டு போனது கூட தெரியாம விழுந்து கிடக்கிறானோ என்னவோ, போயி ஒரு சாரத்த எடுத்திக்கிட்டுவா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமி எல்லாத்தையும் விட்டுட்டு சாரத்தை எடுக்க ஓடினாள் பழனியாண்டி வேறயாரும் இல்ல. பொன்னுத்தாயின் தம்பிதான். அவன் கலியாண வயதை தாண்டியிருந்தாலும் அவனது மதுப்பழக்கத்தாலும் வேலைவெட்டியில்லாமல் பொறுப்பற்று திரிந்ததாலும் அவனுக்கு பெண் கொடுக்க யாரும் முன்வரவில்லை. பொன்னுத்தாயியும் அவனுக்கு அம்மா அப்பா இல்லாதால் தம்பிதானே என்று தன்வீட்டில் விழுந்து கிடக்க அனுமதித்தாள்.

பொன்னுத்தாயி ஏற்படுத்திய கலவரத்தால் சுத்துப்பத்து லயங்களும் விழித்துக் கொண்டன. முதல் நாளிரவு இசை விழாவால களைப்படைந்து ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த கோபாலும் வெளியில் எழுந்த கத்தல்கள் கூக்குரல்களால் நித்திரை கலைந்தான். வெளியில் என்ன நடக்கிறது என்று அறிவதற்காக சாரத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டு கிடைத்த கமிசை உருவி மேலில போட்டுக்கொண்டு கிளம்பிச் சென்றான்.

வெளியில அடுத்தவீட்டு சிவபாக்கியம்தான் நின்றிருந்தாள். அவளிடம் "ஏன் என்ன சத்தம்" என்று கேட்டான். அவளும் வெட்கப்பட்டு நாணிக் கோணிக்கொண்டு "நீயே போயி பாருதம்பி அந்த பழனியாண்டி பய அடிக்கிற கூத்த... பெறட்டுக் களத்துப் பக்கம்."

கோபால் விரைந்து பெரட்டுக்களத்துப் பக்கம் போனான் பழனியாண்டியைப்பத்தி அவனுக்கு நல்லாவே தெரியும். குடிச்சிட்டான்னா அவனுக்கு என்ன நடக்கிறதுன்னு அவனுக்கே தெரியாது. கோபால் பெரட்டுக்களத்துப் பக்கம் மேடைபோட்டிருந்த இடத்துக்கு சென்றான்.

அவன் அவ்விடத்தை அடைந்தபோது பழனியாண்டி பொன்னுத்தாய் கொண்டுவந்து கொடுத்த சாரத்தைக் கட்டிக் கொண்டு அவளது தோளில் கையைப் போட்டுக் கொண்டு கைத்தாங்கலாக மேடையில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

கோபால் அங்கிருந்தோரிடம் நடந்தது என்னவென்று விசாரித்தான்.

"முதல் நாள் இரவு இசை விழா முடிந்ததும் நன்கு குடித்துவிட்டு நடக்க முடியாத சிலர் மேடையில் தூங்கியிருக்கிறார்கள். அவர்களில் பழனியாண்டியும் ஒருவன். ஆனால் காலையில் பார்த்தபோது பழனியாண்டியைத்தவிர மற்றவர்களைக் காணோம். யாரோ ஒருவன் பழனியாண்டி கட்டியிருந்த வேட்டியையும் உருவிக் கொண்டு போயிருக்கான்."

"அவனோட இருந்த மத்தவங்க யாருன்னு தெரியாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரின்னா அவிங்களோட வேட்டியையும் சேத்துத்தான் கழட்டி இருக்கனும்."

"அவிங்களும் அம்மணமாகதான் இருந்திருக்காங்க ஆனா கண் முழிச்சதும் வெவரம் தெரிந்து உடுத்திக்கிட்டு போய்ட்டாங்க."

"அப்ப பழனியாண்டியின் வேட்டிமட்டும் எப்படி காணாம போகும்."

"அது புது வேட்டில்ல..."

"கோபாலோட இசை விழாவால பழனியாண்டியின் புது வேட்டி பறிபோன துதான் மிச்சம்."

"பொன்னுத்தாயிதான் பாவம். பொங்கலுக்கு அவளோட மகளுக்கு கூட புதுத்துணி வாங்கிக் கொடுக்காம, தம்பிக்காரனுக்கு வேட்டிவாங்கிக் கொடுத்தாபாரு."

பலரும் பல படி பேசியபோது விநோதன் மாமா தன் கடைவாயில் சுருட்டொன்றை வைத்து ஊதியவாறு கோபாலை நெருங்கிவந்தார்.

"கோபால் தம்பி என்னதான் இருந்தாலும் இசை விழாவால நம்ம தோட்டத்து ஆறு டிவிசன் சனங்களும் சந்தோசப்பட்டாங்க பழனியாண்டி பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவன் எந்த நாளும் குடிக்கிறதும் எங்கேயாவது விழுந்து கெடக்கிறதும் சகசமான விசயம்தானே. காசு கெடச்சதும் கள்ளச் சாரா யம் குடிக்கிறதுதான் வேலையாப்போச்சு."

கோபாலின் மனசை ஆறுதல் படுத்துவதற்காக வினோதன் மாமா அப்படிக் கூறினார்.

கோபால் அங்கிருந்து பொன்னுத்தாயியின் லயத்துக்குப்போனான். அப்போதும் அவள் யார் யாரையெல்லாமோ ஏசிப்பேசி திட்டித் தீர்த்துக் கொண்டுதானிருந்தாள். அவள் அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திராகாந்தியையும் திட்டினாள்.

அப்போது அங்கிருந்த யாரோ ஒருவர் "ஒந் தம்பி சாராயம் குடிக்கிறான்னா இந்திரா காந்தி என்ன செய்வா பொன்னத்தாயி..." என்று கேள்வி எழுப்பினார்.

"ஏன் இந்தளவு குடிக்கிறவங்கள இந்தியாவுக்கு திரும்பி அழைத்துக் கொள்ள அந்த பொம்பளைக்கு முடியாதா?"

இதைக்கேட்டு எல்லோரும் சிரித்தார்கள் பழனியாண்டியும் சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்யிறதையும் செஞ்சுப்புட்டு சிரிக்கிறாயாடா. சாண்டைய குடிச்ச மவ புள்ள..." பழனியாண்டி சிரித்ததைக் கண்ட பொன்னுத்தாயியின் கோபம் மேலும் அதிகரித்தது.

அப்போதுதான் பொன்னுத்தாயியின் லயக்காம்பிராவுக்குள் நுழைந்த கோபால்

"சரி சரி பொன்னுத்தாயி அத்த. இத்தோடு விடுங்க. இதிலிருந்தாவது பழனியாண்டி அண்ணன் பாடம் படிக்கட்டும்." என்று கூறினான். அங்கிருந்தோர். விலகி மரியாதையுடன் அவனுக்கு வழிவிட்டனர்.

"இவன் எங்க பாடம் கத்துக்கிறபோறான். அப்பா இல்லாத பொம்புள பிள்ளையும் வச்சிக்கிட்டு நா எவ்வளவு துன்ப்படுறேன்னு எனக்குத்தான் தெரியும். பொங்கலுக்கு எம் பொண்ணுக்குக்கூட துணி வாங்காம இந்த நாய்ப் பயலுக்கு நல்ல இந்தியா வேட்டியா பாத்து வாங்கிக் கொடுத்தேன்."

பொன்னுத்தாயியின் மனதில் கோபால் மற்றும் அவனின் நண்பர்கள் தொடர்பில் கோபம் இருந்தாலும் அதனை அவள் அப்போது வெளிக்காட்டவில்லை.

கோபால் பொன்னுத்தாயின் லயத்துக் காம்பராவில் நுழைந்து அடுப்புக்கருகில் அமர்ந்திருந்த பழனியாண்டியின் அருகில் சென்றான். கோபால்பழனியாண்டியின்அருகில்சென்றதும்அவனைத்திரும்பிப்பார்த்த பழனியாண்டி ஏதோ செய்யக்கூடாத தவறை செய்துவிட்டவன் போல் கூனிக்குறுகி பரிதாபகரமாகப் பார்த்தான்.


"பழனியாண்டி அண்ணே, உங்க வேட்டிய பார்த்தா அடையாளம் காட்டுவீங்களா?" என்றான் கோபால்.

இந்தக் கேள்வியால் கூனிக்குறுகி அமர்ந்திருந்த பழனியாண்டி நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் கண்களில் புதிய நம்பிக்கை பளிச்சிட்டது. கோபால் வேட்டியைக் கண்டுபிடித்துக் கொடுப்பானா?

"என்னால் அடையாளம் காட்ட முடியும் கோபால் அதன் வாட்டியைப் பார்த்தால் கண்டு பிடித்துவிடுவேன்." அவன் உற்சாகத்துடன் கூறினான்.

பொன்னுத்தாயி மனதிலும் வேட்டி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணைக் கசியவைத்த மனிதநேயம்

காணாமல்போன புது வேட்டியை கோபால் கண்டு பிடித்துக் கொடுப்பான் என்பதில் பழனியாண்டிக்கும், பொன்னுத்தாயிக்கும் இலேசாக நம்பிக்கை தோன்றியது. "ஆமா, கோபால் தம்பி, அங்கிருந்தவனுங்க எவனாவதுதான் விளையாட்டுக்காக வேட்டிய உருவி எங்கையாவது ஒளிச்சு வைச்சிருப்பானுங்க. அத தேடிக் கொடுத்திரு தம்பி" அங்கிருந்த பெரியவர் ஒருவர் கூறினார்.

"சரி வாண்ணே, போகலாம்" என்று கூறியவாறே பழனியாண்டியையும் கூட்டிக்கொண்டு கோபால் வெளியில் இறங்கி நடந்தான்.

வழியில் கோபால் பழனியாண்டியிடம் கேட்டான். "அதென்ன வேட்டிய பார்த்தா அடையாளம் கண்டு பிடிச்சுருவேன்னு சொன்னியே, எப்படி?"

"அது வந்து கோபால் வேட்டிக் கரையில கம்பி குத்தி லேசா கிழிஞ்சிரிச்சி... அதுதான்" பழனியாண்டி ஒரு மாதிரி குரலை இழுத்தான். அவன் ஏதோ தப்பு செஞ்சிருக்கான்னு கோபாலுக்குப் பட்டது. அவன் யாருடையதோ தோட்டத்துக்குள் நுழைஞ்சி ஒன்னு கோழிபுடிச்சிருக்கனும். இல்லாட்டி வாழக்குலை திருடியிருக்கனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லு சொல்லு யாரோட தோட்டத்துக்குள்ள நொழைஞ்ச?"

ஆனால் உண்மையிலேயே சுப்பவைசர் தோட்டத்துக்குள்ள நுழைந்து வாழைத்தார் களவெடுத்த விசயத்தை அவன் சொல்லாமல் நலுவிக்கொண்டான். கோபால் எப்படி அந்த விசயத்தை ஊகித்தானென்று பழனியாண்டிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ம்ம்... சரி..சரி... வா. டோபி வீட்டுக்குப் போவம். வேட்டிய எடுத்தவனுக்கு அத கழுவாம விரிக்க ஏலாது. இன்னைக்கு எவனா வது வேட்டி கொண்டாந்து வெளுக்குறதுக்கு போட்டானான்னு பார்ப்போம்" இருவரும் தோட்டத்து வண்ணான் வீட்டுக்குப் போவதற்காக பணிய லயத்தை நோக்கிச் சென்று மண்பாதையில் இறங்கி நடந்தார்கள்.

ஒரு நாளும் தன் லயத்துக் காம்புராவைத் தேடி வந்து துணி துவைக்கக் கொடுத்திராத செவனுவின் மகன் கோபால் இப்போது தன் வீட்டைத்தேடி வந்திருப்பது தொடர்பில் தோட்டத்தின் டோபியாக செயற்பட்டு வந்த பரமசாமி ஆச்சரியப்பட்டான். கோபால் துணி துவைக்க கொடுக்க வரவில்லை என்பது அவர்கள் தாம் வந்த காரணத்தை தெரிவித்தபோது அவனுக்கு நிச்சயமானது. மறுபுறத்தில் அன்று வெளுப்பதற்காக வந்து சேர்ந்திருந்த துணிகள் மத்தியில் பழனியாண்டியின் வேட்டி காணப்படவில்லை என்பதை அறிந்தபோது அது கோபாலுக்கும் பழனியாண்டிக்கும் ஏமாற்றத்தை தந்தது.

எனினும் அவர்கள் வேறு எங்கு போய் வேட்டியைத் தேடுவது என்ற சிந்தனையில் பணிய லயத்தில் இருந்து கிளம்பினார்கள்.

*****

அநேகமான கங்காணிமார்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வில்லன்களாகவே இருந்தனர். அது கங்காணிகளுக்கான இயல்பான சுபாவம் என்று நினைத்துக் கொண்டார்களோ தெரியாது. அவர்கள் எப்போதும் தொழிலாளர்கள் மீது கடுகடுப்பாகவே நடந்து கொண்டனர். அண்மையில் அவர்கள் தோட்டத்துக்கு மடக்கும்புர தோட்டத்தில் இருந்து வைத்தியலிங்கம் என்ற கங்காணி மாற்றலாகி வந்திருந்தார். அவர் எப்போதும் தொழிலாளர்கள் மீது பகைமை கொண்டிருப்பவர் போல் நடந்து கொண்டார்.

தொழிலாளர்களை கடுமையாக கசக்கிப்பிழிந்து வேலைவாங்கிக் கொண்டிருந்தார். எனினும் இளைஞர்கள் அவரை மதிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாசீனம் செய்தனர். இதனால் அவர் வயதானவர்களையே அதிகம் வருத்தினார். அவர் எந்த மலைக்கு வேலைக்குப்போனாலும் அங்கு தொழிலாளர்களுடன் ஏதாவது ஒரு பிரச்சினையில் சிக்கிக்கொண்டு அவதிப்படுவார். வைத்திலிங்கத்தின் இந்தப்போக்கு கோபால் உள்ளடங்கிய இளைஞர்களுக்கும் வேண்டாத தலையிடியாக இருந்தது. வைத்திலிங்கத்தின் இந்த தொழிலாளர்களுக்கு எதிரான போக்கினை கண்டக்டர் உள்ளடங்களாக தோட்டத்தின் உயர் அதிகாரிகள் விரும்பினார்கள். இதனால் மேலும் உற்சாகமாக இந்தப்போக்கைக் கடைப்பிடித்தார் வைத்திலிங்கம்.

இது தொடர்பில் தோட்டத்தலைவராக இருந்த சேதுபதியிடம் பல தடவைகள் தொழிலாளர்கள் புகார் கூறினார்கள். இருந்தும் அவர் அதனை காதில் போட்டுக்கொள்ளவில்லை. "இந்த மாதிரியான நேரத்தில் அவசரப்படக்கூடாது. பொறுமையாக இருங்கள். அதனை நான் கவனித்துக் கொள்கின்றேன்" என்று பொதுவாகக் கூறினாரே தவிர எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத்தெரியவில்லை.

இது தொடர்பில் நந்தசிரி கோபாலிடம் கருத்துத்தெரிவித்தான். "வைத்திலிங்கம் கங்காணியின் தலை நல்லாவே வீங்கிப்போயிருக்கு. அந்த வீக்கத்த கொரைக்கிறதுக்கு ஏதாவது செய்ய வேண்டும் கோபால். வயசுபோனவங்களை எல்லாம் வதவதன்னு வதைக்கிறான். இதனால் அவன் இருக்கும் மலைக்கு வேலைக்குப் போறதையே சிலர் நிறுத்திட்டார்கள். பாவம் தொரசாமி மாமா கூட போனமாசம் பத்துநாள்தான் வேலை செஞ்சிருக்கார். சீவிக்க ரொம்ப கஸ்டப்படுறாறு." கோபாலுக்கு நந்தசிரியின் பேச்சைக் கேட்க புதுமையாக இருந்தது.

"நீன்னா புதுமையான ஆளு மச்சான். அந்தாளு வேலைக்கு வந்தா நோண்டி நோண்டி நொங்கு எடுத்து ஆத்திரப்படவைத்து இருக்க விடமாட்ட. இப்ப என்னான்னா அவரு வேலைக்கு வரலன்னு அனுதாபப்படுற. ஒன்ன புரிஞ்சிக்க முடியலையே."

"அதெல்லாம் சும்மா நையாண்டிக்குத் தானே ஒழிய கோபமெல்லாம் ஒன்னும் கெடையாது கோபால். அவருக்கு எங்க அப்பா வயசாவுது. அந்த மனுசனுக்கும் நான் அவர கிண்டாட்டி தூக்கம் வராது. உனக்குத் தெரியாது கோபால் அவருக்கு போன மாசம் பத்து பன்னண்டு நாள் சம்பளம் தான் வந்திச்சு. சம்பளத்தன்னைக்கு சம்பளத்த பாத்ததும் கண்ணுல தண்ணீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துருச்சி. கெடச்ச சம்பளத்தையும் கடன் காரங்களுக்கு கொடுத்துட்டு நிக்குறத பாக்க ரொம்ப பரிதாபமா இருந்துச்சி. பிறகு நான்தான் கையில் ஐம்பது ரூபாவைத் திணிச்சி வீட்டுக்கு அனுப்பிவைச்சேன்."

கோபாலுக்கும் இந்த கதையைகேட்க கவலையாத்தான் இருந்தது. இருந்தாலும் தன் நண்பன் நந்தசிரியை நினைக்க பெருமையாகவும் இருந்தது. தமிழ் தோட்டத் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்டிருக்கின்ற அந்தத் தோட்டத்தில் யாருடைய கவனத்தையும் ஈர்க்கும் அளவுக்கு ஒன்றும் செய்திராத ஒரு அப்பாவி தொழிலாளியின் பால் இந்த சிங்கள இளைஞன் இவ்வளவு தூரம் அன்பும் அனுதாபமும் கொண்டுள்ளானே என நினைக்க கோபாலுக்கு ஒரு புறம் பெருமையாக இருந்தாலும் மறு புறம் தன்னைப் போன்றவர்கள் தொடர்பில் வெட்கமாகவும் இருந்தது. யார் மீதும் போட்டி, பொறாமை, காழ்ப்புணர்வு அற்ற யாருக்கும் எதற்கும் பயப்படாத எப்பொழுதும் நேராகவே சிந்திக்கும் அந்த இளைஞனை பெருமிதத்துடன் நிமிர்ந்து நோக்கினான் கோபால்.

"எனக்கு உன்னை நினைத்துப்பார்க்க பெருமையாக இருக்கிறது நந்தசிரி. இந்தத்தோட்டத்தில் இத்தனை தமிழன்கள் இருந்தும் அந்த சின்ன மனிதன் தொரைசாமியின் துக்கம் தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டுமென்று யாருக்கும் தோன்றவில்லையே. ஆனா நீ வேற்று இனத்தவனாக இருந்து கொண்டு ஒரு தமி ழனின் சோகம் தொடர்பில் தேடிப் பார்த்திருக்கிறாய். உதவி செய்திருக்கிறாய். நீ உண்மையில் உயர் மனித நேயம் மிக்கவன்தான் நந்தசிரி."

இவ்வாறு கூறியபோது கோபாலின் கண்களில் இரு சொட்டு நீர்த்துளிகள் உருண்டோடி நாசியை நோக்கி வந்தன. அவன் மறுபுரம் திரும்பி அதனை துடைத்துக்கொண்டான். நந்தசிரி சிரித்தான். கோபாலும் சேர்ந்து சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேயிலைத்தூள் கடத்தல்

நந்தசிரி தொடர்பில் கோபால் உணர்ச்சி வசப்பட்டு பேசியதும், கண்களில் நீர் கசிந்தது என்பதெல்லாம் நந்தசிரிக்கு சங்கடத்தை உண்டு பண்ணியது. நந்தசிரி தனக்கு சரியெனப்பட்டதை செய்தானே தவிர தன்னை யாரும் புகழ வேண்டுமென்று கருதியதில்லை. பிறருக்கு உதவி செய்யும் இந்த உணர்வுகள் எல்லாமே அவனுக்குள் இயல்பாக இருந்ததுதான்.

அவன் கோபாலைப்பார்த்துக்கூறினான். "என்னைப் புகழ்கிற அளவுக்கு நான் ஏதும் பெரிய காரியத்தை செய்து விடவில்லை கோபால். நாம் எல்லோருமே அன்றாடம் கூலி வேலை செய்து வயிறு கழுவும் ஒட்டாண்டிகள். நாம் மாதத்தில் எத்தனை நாள் சந்தோஷமாக வயிறு நிறைய சாப்பிடுகின்றோம். சம்பளம் போடும் போதும், அட்வான்ஸ் எடுக்கும் போதும் மட்டும்தான். மற்ற நாட்களில் நாம் வயிற்றை ஏமாற்ற வேண்டியுள்ளது. அப்பாவுக்கும் வேலை நிப்பாட்டியாச்சி. அக்கா கலியாணம் கட்டாமல் இருக்காள். இதையெல்லாம் யாரிடம் போய் சொல்வது?"

இதைக்கேட்டதும் கோபாலுக்கு நந்தசிரியின் லயக்காம்புரா நினைவுக்கு வந்தது. சிறு வயதிலேயே எலும்புருக்கி நோய் பீடித்து விட்டதால் நந்தசிரியின் அக்கா ஒரு காலும் கையும் சீவனற்றுப்போய் ஒரு பக்கம் கையையும் காலையும் இழுத்தவாறே நடப்பாள். அப்படி மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவள் நல்ல அழகியாக இருந்திருப்பாள். அவள் தன் தம்பி நந்தசிரியைப்போலவே தன் மீதும் அன்பும் பாசமும் கொண்டு நடந்து கொள்வதனை எண்ணிப்பார்த்து கோபால் மன வேதனைப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கை தொடர்பில் கவலைப்பட்டு பிரயோசனமில்லை நந்தசிரி. நாம் அதனை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதனைப்பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும். சரி நாம் இம்முறை சம்பளத்தின்போது ஒன்று சேர்ந்து சிறிது காசு சேர்த்து தொரைசாமி மாமாவுக்குக் கொடுப்போம். நீ தனியாக இத்தகைய பாரங்களை சுமக்க வேண்டாம். இதை முன்பே நீ என்னிடம் தெரிவித்திருக்கலாம்."

நந்தசிரி கோபாலின் அந்தக் கேள்விக்கும் அவனது வழமையான அந்த சுந்தரப் புன்னகையையே பதிலாகத் தந்தான்.

"ஒரு மனிதனின் கஸ்டங்களை பிறர் புரிந்து கொள்ள வேண்டுமேயொழிய அதனை சொல்லி தெரியப்படுத்துவது உகந்ததா" என்ற பொருள் அந்த புன்னகையில் தொக்கு நிற்பது போல் கோபால் உணர்ந்தான்.

"நம்மால் ஒவ்வொரு முறையும் இப்படி உதவி செய்வது சாத்தியமில்லை கோபால். கடுமையாக உழைத்து வேலை பார்க்கும் வயதானவர்கள் தொடர்பில் அனுதாபத்துடன் அணுக வேண்டுமென்று நாம் நிர்வாகத்தை வற்புறுத்த வேண்டும். நமது தலைவர் இது பற்றி சிந்திப்பதாக தெரியவில்லை.

யூனியன்காரனும் நம்மிடமிருந்து சந்தாப்பணத்தைப் பறித்துக்கொள்வ துடன் சரி. அதனை வைத்துக்கொண்டு அவர்கள் சுகம் அனுபவிக்கிறார்கள்."

நந்தசிரி கூறிய விடயம் கோபாலுக்கும் புரியாததல்ல. தங்களின் சந்தாப்பணத்தில்தான் கொழும்பில் இருக்கும் பெரிய தலைவர்கள் குடியும் கூத்தியுடனும் சல்லாபிக்கிறார்கள் என்பதும், மாட மாளிகைகளில் குடியிருக்கிறார்கள் என்பதும், சொகுசு கார்களில் போகிறார்கள் என்பதெல்லாம் பலருக்கும் தெரிந்த விடயங்கள்தான்.

இருந்தாலும் யார் அதுபற்றியெல்லாம் கேள்வி கேட்கிறார்கள். அவன் கூட மேற்படி குறித்த தொழிற்சங்கத்தில்தான் அங்கம் வகிக்கின்றான்.

"சரி நந்தசிரி நீ சொல்வது சரிதான் இருந்தாலும் இன்னும் ஒரு முறை இது தொடர்பில் சேதுபதி தலைவரிடம் பேசிப்பார்ப்போம். அதுவும் சரிவராவிட்டால் நமது நடவடிக்கையைத் தொடங்குவோம். வா இப்போதே சேதுபதியைப் போய்ப் பார்க்கலாம் வா.." என்றான் கோபால் நந்தசிரியிடம்.

நந்தசிரி அதற்குத் தலையாட்டிவாறே "சரி வா போகலாம். ஆனால் சேதுபதித்தலைவரிடம் இந்த நேரத்தில் இது பற்றி பேச முடியுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான் சிக்கல். அவன் இந்த நேரத்தில் பொடி மாத்தயாவின் லயத்துக்காம்பராவில் சாராயம் குடித்துக்கொண்டிருப்பான். பரவாயில்லை என்னிடம் ஐந்து ரூபாய் இருக்கிறது. நாமும் ரெண்டு ரெண்டு கிளாஸ் நாலு ரூவாய்க்கு போட்டுக்கலாம்."

கோபால் மடித்து விட்டிருந்த தனது சட்டைக்கையைத் தடவிப் பார்த்தான்.

"என்னிடமும் இரண்டு மூன்று ரூபா இருக்குது. நாம திரும்பி வரும்போது தொரசாமி மாமாவோட லயத்துப்பக்கமும் போய்விட்டு வருவோம்."

நந்தசிரி அதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. அவர்கள் இருவரும் பாதையோரம் கானுக்கு மேல் கட்டப்பட்டிருந்த போக்குக் கல்லில் இருந்து எழுந்தார்கள். பின் மண் பாதையில் இறங்கி பொடிமாத்தயாவின் லயத்தை நோக்கி நடந்தார்கள்.

அவர்கள் சற்று தூரம் நடந்ததுமே தூரத்தில் ஒடிந்து திரும்பிய வளைந்த முடக்கில் இருந்து ஒரு சைக்கிளில் இரண்டடி உயரமான பெரிய அலுமினிய பால் கேன் ஒன்றை சைக்கிளின் பின் கேரியரில் வைத்துக் கட்டியவாறு ஒரு உருவம் அவர்களை நோக்கி வந்தது. அதைக் கண்டதுமே "கோபால், அதோ உனது மாமனார் வருகிறார்" என்றான் நந்தசிரி.

கோபால் நந்தசிரி காட்டிய திசை நோக்கி பார்வையைச் செலுத்தினான். அங்கே புஸ்பராணியின் தந்தை கதிரேசன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் அருகில் வந்ததும், "மாமா, எப்படி இருக்கீங்க, டவுனுக்கு பால் கொண்டு போறீங்களா?" என்று புன்னகைத்தவாறே வினவினான் கோபால்.

எனினும் அவர் கோபாலின் பேச்சை அலட்சியப்படுத்தி நந்தசிரியன் பக்கம் திரும்பி "ஆமாம் தம்பி, டவுனுக்கு பால் சப்ளை செய்ய வேண்டியிருக்கு" என்றார்.

அவரது அலட்சியப் போக்கை எதிர்பார்க்காத கோபால் சங்கடத்துடன் மறுபக்கம் திரும்பிக்கொண்டான்.

காக்கிச்சட்டை களிசன் அணிந்து கட்டைக்கை கமிசு போட்டிருந்த புஸ்பராணியின் தந்தை கதிரேசன் அந்த தோட்டத்தில் ஒரு முக்கிய பிரமுகராக கருதப்பட்டார். அவர் ஒரு நாளும் தோட்டத்து தொழிலாளராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை இனங்காட்டிக் கொண்டது கிடையாது. தான் உயர்சாதிக்காரன் என்ற திமிருடன் யாரையும் கண்டும் காணாதது போல் பாவனை செய்வது அவரது இயல்பாக இருந்தது.

தந்தையின் இந்த சுபாவம் காரணமாக மகள் புஸ்பராணியும் அவளது தம்பியும் கூட அதே திமிர்த்தனத்துடன் வளர்ந்து வந்தனர். ஆனால் கதிரேசனின் மனைவி செண்பகம் இதற்கு விதிவிலக்காக இருந்தாள். அவள் மலைக்குச் சென்று கொழுந்தெடுத்து கூலி வேலை செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கில்லாதிருந்த போதும் அவள் கொழுந்து மலைக்குச் செல்லத் தவறுவதில்லை.

சிலவேளை அவள் கொழுந்து மலைக்குச் சென்று கூலி வேலை பார்ப்பதை நிறுத்தினால் அவர்கள் குடியிருக்கும் லயத்துக் காம்புராவை திருப்பிக்கொடுக்க வேண்டி வரும் என்பதனால் அவள் வேலைக்குச் செல்கிறாள் என்பதாக இருக்கலாம். அதுதான் உண்மையும் கூட...

அவர்கள் சிறிது தூரம் மௌனமாக நடந்தனர். திடீரென நந்தசிரி வலிப்பு வந்தவன் போல் இரண்டு கைகளாலும் மாறி மாறி அடித்துக்கொண்டான். பின் இப்போது என்ன நேரம் என்று கோபாலிடம் கேட்டான்.

கோபால் மணிக்கூட்டைப் பார்த்து "ஏழு மணி" என்று பதில் சொன்னான். "அப்படியானால் சரி இது திருட்டுத்தான். என்னால் கண்டுபிடிக்க முடியும். இந்த இரவு நேரத்தில் பால் குடிப்பவர்கள் யாரும் இருக்கிறார்களா கோபால்?"

"என்னடா சொல்கிறாய் ஒன்றும் புரியவில்லை" என்றான் கோபால் ஆச்சரியத்துடன்.

"இந்த நேரத்தில் யாரும் பால்குடிக்க மாட்டார்கள் என்றால் கதிரேசன் மாமா அந்த பால் கேனில் நிறைத்துக் கொண்டு போவது என்ன? நிச்சயம் அது பாலாக இருக்க முடியாது. கள்ளத்தனமாக தேயிலைத்தூள் கடத்தப்படுகிறது. இதுதான் அவன் பணக்காரனாக இருப்பதன் ரகசியம்" என்றான் நந்தசிரி.

இதைக்கேட்டு வாயடைத்துப் போனான் கோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



45

## சேதுபதியின் அபத்தக் கனவு

புஸ்பராணியின் தந்தை கதிரேசன் பால்கேனில் திருட்டுத்தனமாக தேயிலைத்தூள் கடத்திச் சென்று நகரத்தில் விற்கிறார் என்று நந்தசிரி கூறியதும் அதனை கோபாலால் நம்ப முடியாமல் இருந்தது. மறுபுறத்தில் கதிரேசன் தன்னைக் கண்டும் காணாதது போல் அலட்சியம் செய்தமையும் மனதை உறுத்தியது.

"என்ன கோபால். உன் மாமனார் இப்படியெல்லாம் செய்வார் என்று நம்ப முடியவில்லையா?" நந்தசிரி நையாண்டியாக கூறினான்.

"நீ அந்தாளை எனது மாமனார் என்று இனிமேல் சொல்லாதே நந்தசிரி. அந்தாள் எமட்டனுக்கு குண்டடிக்குற காரியத்தையும் செய்வாரு. புஸ்பராணி என்னோட சிரிச்சு பேசி பழகினாலும் அவள நான் கூப்பிட்டா அவளோட அப்பனை மீறி வருவான்னு எதிர்பார்க்க முடியாது. அவ அப்பனோ இதற்கு சம்மதிக்கமாட்டான்."

கோபால் ஏமாற்றத்துடனும் மனவருத்தத்துடனும் கூறினான். அவனுடைய கற்பனைகள் கலைந்து போய்க்கொண்டிருந்தன. நந்தசிரிக்கு அவனைப்பார்க்க பரிதாபமாக இருந்தது.

"நீ, நம்பிக்கை இழக்காதே கோபால் எப்படியாவது புஸ்பராணிடம் உறுதிமொழி வாங்கிவிடு. உனது வேலையெல்லாம் அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துக்கொண்டு ஓடி வந்துவிட வேண்டியதுதான். மத்தத நான் பார்த்துக்கிறேன். எனது நெருங்கிய சொந்தக்காரங்க வெலிமடையில இருக்காங்க நீ அங்க போயி கொஞ்ச நாளைக்கு இருக்கலாம். ஒரு கொழந்தை பொறந்துச்சுன்னா எல்லாம் சரியாயிடும். பால்காரன் இப்ப கோவிச்சிட்டுப் போனாலும் அப்புறம் ஒரு போத்தல வச்சுக்கிட்டு ஒன்னா சேர்ந்து தண்ணியடிக்கக் கூப்புடுவான்."

நந்தசிரியின் இந்த ஆறுதல் வார்த்தைகள் கோபாலின் நொந்துபோன மனதுக்கு சற்று ஆறுதலளிப்பதாக இருந்தன. அவன் மனதில் புஸ்பராணி தொடர்பான இடிந்த கோட்டை மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்தது. புஸ்பராணியின் பார்வையில் என்னதான் மமதையும் திமிர்த்தனமும் ஓங்கிக் காணப்பட்டாலும் அதில்தான் அவள் அழகு மிளிர்வதாக அவன் நினைத்தான். அவளது அகங்காரப்பார்வையும் கூட அழகு சொட்டுவதாக அவனுக்குத் தென்பட்டது. அவளது மமதை கூட அவளது அழகுக்கு அணி சேர்ப்பதாக இப்போது அவனுக்குத் தோன்றியது.

அன்றைய தினம் கோபாலும் நந்தசிரியும் சேதுபதித் தலைவரை சந்திப்பதற்காக பொடிமாத்தையாவின் லயத்துக்கு சென்ற போதும் அங்கே அவர் நிதானித்துப் பேசும் நிலையில் இருக்கவில்லை. அவரும் இன்னும் சிலரும் சாராயத்தை முழு அளவில் ஏத்திக்கொண்டு நிறை வெறியில் இருந்தனர். எனவே தம் பங்குக்கு கோபாலும் நந்தசிரியும் இரண்டு, இரண்டு கிளாஸ் ஊத்தி உறிஞ்சி விட்டு வீடு திரும்பிவிட்டனர்.

இருந்தாலும் அடுத்த நாள் டவுன் றோட்டில் வைத்து கோபாலும் சேது பதித் தலைவரும் எதிரும் புதிருமாக சந்தித்துக் கொண்டனர். தலை வர் அரு கில் வரும்வரை காத்திருந்த கோபால் அவருடன் இரண்டு நிமிடம் தனியாக பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரும் தன்னுடன் சேர்ந்து வந்த இருவரையும் "நீங்க முன்னே போங்க, நான் வந்திர்ரேன்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

"என்ன கோபால் திரும்பவும் இசை விழா ஏதும் நடத்தப்போறீங்களா?" ஒரு மாதிரியாக ஏளனம் கலந்த குரலில் கேட்டார் சேதுபதி.

அண்மைக்காலமாக கோபால் அத்தோட்டத்தின் பலரதும் கவனத்தை ஈர்க்கும் ஒரு துடிப்பான இளைஞனாக உருவாகி வருவதை சேதுபதி கவனித்திருந்தார். நந்தசிரி மற்றும் சில இளைஞர்கள் கூட்டத்தினை இணைத்துக் கொண்டு அவன் தன்னுடைய விடயங்களிலும் தலை யிடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. எதிர்காலத்தில் அவன் தனக்குக்கூட ஒரு சவாலாக வரக்கூடும் என்ற பயமும் இலேசாக ஏற்பட்டிருந்தது. அவர் கோபால் மீது பொறாமையால் உள்ளே கனன்று கொண்டிருந்தார். தலைவர் மனதில் என்னவிதமான எண்ணம் ஓடிக்கொண்டிருக்கின்றது என்பது தொடர்பில் கோபாலுக்கும் விளங்காமல் இல்லை. அவன் ஒன்றும் தெரியாதவன்போல் கேட்டான்.

"தலைவர் அண்ணே. பாருங்க அந்த வைத்திலிங்கம் கங்காணி தொழிலாளிங்கல எப்ப பார்த்தாலும் அதைச் செய்யி, இதைச் செய்யின்னு வாட்டி வதைத்த வண்ணமே இருக்கிறார். அது பற்றி அண்ணேகிட்ட எத்தனையோ பேர், எத்தனையோ விதத்தில் சொல்லிவிட்டாங்க. ஆனா ஒன்றும் நடக்கமாட்டேங்குதுன்னு பேசிக்கிறாங்க."

கோபால் இது பற்றி பேசியது தலைவருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவன் சம்பந்தப்படாத விடயத்தில் மூக்கை நுழைக்கிறான் என்று கருதினார். இருந்தாலும் அவனை சும்மா தட்டிக் கழித்துவிட்டு சென்றுவிட முடியாது என்பது அவருக்குத் தெரியும். அவர் மிகத் தந்திரமாக அவனுக்கு பதில் சொல்ல முற்பட்டார்.

"நான் சொல்றத நல்லா காதுல வாங்கிக்க கோபால். அந்த மனுசன் கொறஞ்ச சாதிக்காரன். அவனை முன்பிருந்தே தோட்டத்தில அவனோட சாதிய குத்திக்காட்டி ரொம்ப அசிங்கமா கேவலப்படுத்தி இருக்கானுக. நீ படிச்ச புள்ள ஒனக்குத்தான் தெரியுமே எப்படியெல்லாம் சாதிய இழுத்து இவுங்க பேசுவானுங்கன்னு நம்ம கூட அப்படி தானே நடந்துக்கிறோம். அதனால எல்லா தொழிலாளிங்க மேலயும் அவன் பகம காட்டுறான். அதல்லாம் கொஞ்ச நாள் போனா சரியாயிடும். நாமதான் கொஞ்சம் பொறுமையா அடக்க ஒடுக்கமா வேல செய்யனும். ஒன்ன போன்ற ஆளுங்கதான் இத எடுத்துச் சொல்லனும்."

சேதுபதி சற்று நிறுத்தி தலையை சொறிந்தார். பின் சுற்றும் முற்றும் பார்த்தார். பின் குரலைத் தாழ்த்தி கோபாலின் காதருகில் கூறினார்.

"கோபால்தம்பி நாம் நமது சங்கத்தின் காரியதரிசிகிட்டயும் தம்பிய பத்தி நல்லா எடுத்துச் சொல்லி வைச்சிருக்கேன். ஒனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. தோட்டத்து மக்களின் நலனது கெட்டதுகளை தேடிப்பார்த்து கவனிப்பதாகவும் சொல்லி இருக்கிறேன். அவரு நம்ப தலைவர் காதுலையும் போடுறேன்னாரு" இப்படி சொன்ன சேதுபதி ஒரு கபடப் புன்னகையையும் உதிர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதுபதியின் பேச்சும், அவர் உதிர்த்த அந்த கபடப் புன்னைகையும் எந்த அளவுக்கு கபடத்தனமானதென்பதை கோபால் உடனேயே புரிந்துகொண்டான். அந்த மனிதன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தொழிலாளர்களின் நலன் மீது அக்கறை கொண்டு செயற்படுபவனல்ல என்பதும் தெட்டத்தெளிவாக விளங்கியது. அவன் ஒருபோதும் தன்னைப்பற்றி சங்க காரியதரிசியிடம் பேசக்கூடியவன் அல்ல. அவன் இப்போது அந்த டிவிசனுக்கு மட்டும் தலைவர் பதவி வகித்தாலும் விரைவிலேயே அந்தத் தோட்டத்தின் ஐந்து டிவிசனுக்கும் தலைமைப்பதவியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருப்பதும் கோபாலுக்கும் தெரியும்.

ஒரு கணம் தலையைத் தாழ்த்தி சிந்தித்த கோபால் சேதுபதியைப் பார்த்துக் கூறினான்.

"சேதுபதி அண்ணே..! இந்தப் பிரச்சினையில் சாதிப் பிரச்சினையை நொழைக்காதீங்க. எவன் எந்த சாதிய சேர்ந்தவனா இருந்தா நமக்கென்ன. வைத்திலிங்கம் கங்காணி அவரது பதவிக்கு மதிப்புக் கொடுத்து வேலைசெய்ய வேண்டும். அவர் தோட்ட நிர்வாகியாக நடந்துகொள்ள முடியாது. அவர் தோட்ட நிர்வாகத்தின் கடைநிலை உத்தியோகத்தர் மட்டும்தான். தொழிலாளரை அடிமையாக நடத்தின காலமெல்லாம் மலையேறிப்போச்சு. இது இன்னமும் வெள்ளைக்காரன் நடத்துற தோட்டம் இல்ல. இத அவருக்கு எடுத்துச் சொன்னா சரி. இல்லாட்டி தொழிலாளிங்க இதனை எதிர்த்துப் போராட்டம் நடத்துவாங்க."

இதனைக் கேட்டதும் சேதுபதிக்கு கோபம் ஜிவ்வென்று தலைக்கேறியது. இதுவரை அந்த தோட்டத்தில் அவரைப் பார்த்து யாரும் எதிர்த்துப் பேசினது கிடையாது. கோபாலும் நிதானமிழந்தவனாகவே காணப்பட்டான். தொழிலாளரின் நலனைப் பற்றி கொஞ்சமும் யோசிக்காத அந்த தொழிலாளர் தலைவனுக்கு நன்கு பாடம் புகட்ட வேண்டுமென்று அவன் மனதில் திடசங்கற்பம் பூண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46



# சங்கிலிமாடன் எச்சரிக்கை

கோபால் தன்னை எதிர்த்துப் பேசியது சேதுபதித் தலைவருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அந்தத் தோட்டத்தில் அவர் தலைவரா? கோபால் தலைவரா? என்று ஆவேசப்பட்டார்.

"கோபால் இந்தத் தோட்டத்தில் நான்தான் தலைவர். இங்கு நான் சொல்கிற படிதான் காரியங்கள் நடக்க வேண்டுமே ஒழிய தொழிலாளர்கள் தங்கள் பாட்டுக்கு போராட்டம் நடத்த அனுமதிக்க முடியாது. எனக்குத் தெரியும் கொஞ்ச காலமாகவே நான் பார்த்துக்கிட்டுத்தான் வாறேன். நீயும் அந்த சிங்கள பயலுகளும் சேர்ந்து தோட்டத்து மக்களின் மனசை குழப்புகிறீர்கள். இதனால் பாதிக்கப்படப்போவது தொழிலாளர்கள்தான்."

சேதுபதியின் பேச்சைக் கேட்கக்கேட்க கோபாலுக்கும் ஆத்திரம்தான் வந்தது. தொழிலாளர்களுக்கு ஏற்படும் அநீதியைத் தட்டிக்கேட்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தொழிற்சங்கம் தோட்ட நிர்வாகத்துக்கும் அரசாங்கத்துக்கும் வாலாட்டிக்கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று அவன் நினைத்தான்.

"தலைவர் அண்ணே! இந்த விசயத்தை உங்களுக்கு சொன்னதற்கு காரணம் நீங்கதான். தோட்டத்து தொழிற்சங்க தலைவர் என்று உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக் கொடுத்ததால்தான். ஒரு தொழிற்சங்கம் எப்படி செயற்பட வேண்டும் என்று வாதம் புரிய நான் உங்களிடம் வரவில்லை. உங்களால் இதனை செய்ய முடியாவிட்டால் இதனை உங்களின் மேலிடத்துக்குச் சொல்ல வேண்டிவரும். அல்லது பெரிய தலைவருக்கும் தெரியப்படுத்த வேண்டிவரும். இதனை நாங்கள் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்துவோம்."

கோபால், சேதுபதி இருவருமே கோபமடைந்திருந்ததால் அவர்கள் உச்சஸ்தாயியில் உரத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் வாக்குவாதம் புரிந்துகொள்கின்றனர் என்று அறிந்ததுமே சிலர் அவர்களை சுற்றி வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

இதனால் சேதுபதி தன் குரலை மேலும் உயர்த்திப் பேசினார். தான் கோபாலுக்கு அடிபணிபவன் அல்ல என்பதனை உரத்துப் பேசியே நிரூபிக்க நினைத்தார். அவர் கோபால் இருந்த திசை நோக்கி நையாண்டிச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

"தம்பி கோபால், ஆத்திரப்படுவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. எமது சங்கத்தில் சேர்வதற்கு நீ கொடுத்த விண்ணப்ப பத்திரம் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நீ தகுதி காண் நிலையில்தான் வைக்கப்பட்டிருக்கிறாய். அதுக்கிடையில் நீ தொழிற்சங்க தலைவனாகப் பார்க்கிறாய் உன்னால் எனக்குக் கட்டளையிட முடியாது. நானும் எனது சங்கத் தலைவரும் சொல்றபடிதான் நீ கேக்கனும்."

சேதுபதியின் உயர்த்திய குரல் கோபாலுக்கு மேலும் உசுப்பேத்தியது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் நந்தசிரி நகரத்துப் பக்கமிருந்து வந்து கொண்டிருந்தான். அங்கே பாதையருகில் இருவர் சத்தமிட்டுப் பேசிக் கொண்டிருப்பதையும் சிலர் சுற்றிவர இருந்து வேடிக்கை பார்ப்பதையும் கண்ட அவன் வேகமாக ஓடிவந்து அவ்விடத்தை அடைந்தான்.

"என்ன கோபால், என்ன தலைவர் என்ன நடக்கிறது இங்கே?"

நந்தசிரி கோபாலையும் தலைவரையும் மாறிமாறிப் பார்த்தான்.

"இல்ல மச்சான் நான் தலைவர் கிட்ட சொன்னேன். அந்த வைத்திலிங்கம் கங்காணியின் அட்டூழியங்கள் பற்றி. ஆனால் இவர் அதைப்பற்றி காதில் போட்டுக் கொள்ளாமல் நாம் அவரது தொழிற்சங்க கடமைகளில் தலையிட வேண்டாமென கூக்குரல் போடுகிறார். இவர்கள்தான் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க தம் உயிரைக்கூட கொடுப்போம் என்று சூழுரைப்பவர்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி கோபாலின் தோள் மீது தட்டி அவனை ஆறுதல் படுத்தினான். பின் அங்கே கூடி வேடிக்கை பார்த்தவர்களை அங்கிருந்து போகச் சொன்னான். இதுவரை அவ்விடத்தில் நின்று வேடிக்கை பார்த்தவர்கள் இப்போது சற்றே தள்ளி நின்று அதனையே செய்தார்கள்.

"தலைவர் அண்ணே! இத்தோடு இந்த கதை நின்று போகட்டும். மேலும் மேலும் பேசி ஒன்னும் ஆகப்போவதில்லை. இனிமேல் பேசினால் உங்க கதை கந்தலாகி போய்விடும். உங்களால் முடிந்தால் இந்த பிரச்சினையை தீர்த்து வைங்க. இல்லாட்டி நாங்க எங்களால் முடிந்ததை பாத்துக்கிறோம். முந்தி வெள்ளைக்காரனுக்கு ஜால்ரா போட்ட தொழிற் சங்கங்கள் இப்ப அரசாங்கத்துக்கு கொடி பிடித்து பதவிக்கு அலையிறாங்க. ஓங்களால் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினை தீரப்போவதில்லை என எங்களுக்கு ஆரம்பத்தில இருந்தே தெரியும். தொழிலாளர்களை காட்டிக்கொடுக்கும் கருங்காலிகள்."

நந்தசிரியும் உரத்துப் பேசிவிட்டு அந்த இடத்தில் இருந்து கோபாலையும் கூட்டிக் கொண்டு நகர்ந்தான். நந்தசிரியின் பேச்சை பொறுமையாக இருந்து கேட்கும் நிலையில் சேதுபதி இருக்கவில்லை. அவன் பேசிய சுத்த சிங்களமும் சேதுபதிக்கு புரிந்திருக்க ஞாயமில்லை.

எனினும் கோபால் மற்றும் நந்தசிரி குழுவினரிடமிருந்து எதிர்காலத்தில் தனக்கு பல தொந்தரவுகள் வரப்போகிறது என்பது மட்டும் சேதுபதிக்கு தெளிவாகப் புரிந்தது. அதனால் அவர்களை எதிர்த்துச் சண்டை பிடிப்பதைவிட அவர்களை எதிர்கொள்வதை தவிர்த்துக்கொள்வதே புத்திசாலித்தனம் என்று நினைத்தார். கோபால் தன்னை பலர் முன்னிலையில் கடும் வார்த்தைகளால் தாக்கியதை எண்ணி சேதுபதி மிகுந்த எரிச்சலடைந்தார். அது அவரது செல்வாக்கை அத்தோட்டத்து மக்கள் மத்தியில் குறைப்பதாக இருந்தது. அது அவருக்கு மனோரீதியில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அவர் கோபாலையும் நந்தசிரியையும் சபித்தவாறே அவ்விடத்தில் இருந்து அகன்றார்.

இது நடந்து சில தினங்களுக்குப்பின் வைத்திலிங்கம் காங்காணி வீட்டுக்கு சாமான்கள் வாங்குவதற்காக நகரத்துக்குச் சென்றார். அவர் அங்கு சென்று முதல் வேலையாக கள்ளுத்தவறணைக்குச் சென்று ஒரு போத்தல் அம்பாஸ்டர் கள்ளு வாங்கி தவறணையின் ஓரத்தில் மூலையில் சென்று மளமளவென்று குடித்துக் தீர்த்தார். அதன் பின்னரே பலசரக்குக்கடைக்கும் வெத்தல பாக்கு சுருட்டுக்கடைக்கும் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான பொருட்களையெல்லாம் வாங்கிக்கொண்டார். அப்போது இரவு ஏழு ஏழரை மணியிருக்கும். குறுக்குப் பாதையில் நடந்து வீட்டுக்குச் செல்ல ஒரு மணி நேரமாவது பிடிக்கும் என்று யோசித்தார். அவர் பாரமான சரக்குப்பையை தன் தோளில் சுமந்து கொண்டு சுருட்டு ஒன்றை பத்த வைத்து ஊதியவாறே வழிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அவர் தோட்டத்துக்கு திரும்பும் வழியில் ஆழமாக வளைந்து திரும்பும் மொடக்கு ஒன்று இருந்தது. அந்தப் பாதையில் வருவோர் போவோர் எல்லாம் தமது மூத்திரப்பாரத்தைக் குறைக்க அவ்விடத்தில்தான் தம் தலையில் இருக்கும் பாரத்தை இறக்கி வைத்து விட்டு சிறு நீர் கழிப்பார்கள். அதனால் அவ்விடத்துக்கு மூத்திர மொடக்கு என்று பெயர் வந்திருந்தது. வைத்திலிங்கமும் ஒரு போத்தல்கள் குடித்திருந்ததால் அவ்விடத்தில் சிறுநீர்கழிப்பதற்காக தனது பாரத்தை இறக்கி வைத்தார்.

பின் சுருட்டை ஆழமாக இழுத்து ஊதியவாறே சிறுநீரை இறக்கினார். அப்போது மூக்கை உடைத்துக்கொண்டு மிகப் பலமான குத்து இரண்டு மூன்று அவர் முகத்தில் விழுந்தது. அவர் கதிகலங்கிப்போய் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் அவர் காதருகே தடித்த கரகரத்த விகாரமான குரல் ஒன்று ஒலித்தது.

"அடே, திருட்டுக் கங்காணியே நான்தான் சங்கிலிமாடன் வந்திருக்கிறேன். நீ அப்பாவி தொழிலாளர்களை வதைத்து அட்டூழியம் செய்கிறாய் என்று எனக்கு புகார் வந்துள்ளது. அதனை நிறுத்திக்கொள். இல்லா விட்டால் உன் தலையை திருகி உன் இரத்தத்தை எல்லாம் குடித்து விடுவேன். நாளையில் இருந்து ஏழு நாளைக்கு சாயங்காலத்தில் என் கோவிலுக்கு வந்து நீ கற்பூரம் கொழுத்த வேண்டும். தவறினால்..."

உறுமியவாறே அந்தக்குரல் திடீரென நின்று போய்விட்டது. அதனைத்தொடர்ந்து யாரோ பெரும் பாரமான இரும்புச் சங்கிலி ஒன்றை இழுத்துச் செல்லும் அரவம் கிளிங்... கிளிங்... என்று கேட்டது. அவர் பயந்து நடுங்கியவாறே அவ்விடத்தில் மல்லாந்து மயங்கி விழுந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



47

## பேயடிச்சால் என்ன? நாயடிச்சால் என்ன?

மூத்திரமுடக்கில் வைத்து வைத்திலிங்கம் கங்காணியை பேய் அடித்துவிட்டது என்ற செய்தி அந்த தோட்டத்தில் மட்டுமல்ல நகரத்திலும் பரவியிருந்தது. பலரும் பலபடி பேசிக்கொண்டனர். அவர் அந்த மூத்திர மொடக்குக்கு அருகில் மல்லாந்து விழுந்து கிடந்தபோது அவ்வழியால் வந்தவர்கள் அவரைத் தூக்கிக்கொண்டுபோய் அவரது வீட்டில் சேர்த்துள்ளனர்.

"வைத்திலிங்கம் கங்காணியை முனி அடிச்சிருச்சாம்"

"டவுனுக்கு போய்ட்டு நல்லா கள்ளு குடிச்சிட்டு வரும்போதுதான் பேய் அடிச்சிருக்கு"

"மூத்திர மொடக்கில வைச்சித்தான் இது நடந்திருக்கு"

"ரொம்ப ராத்திரியாகியும் இருக்கல இரவு ஏழு ஏழரை மணி அளவிலதான் நடந்திருக்கு. அந்த நேரத்தில முனி பிசாசுங்க வந்திருக்குமா என்று சந்தேகமா இருக்கு."

"முனி அடிச்சுச்சோ! இல்ல பிசாசு தான் அடிச்சிச்சோ! அந்த பேயி அடிக்க வேண்டிய ஆளத்தான் அடிச்சிருக்கு மனுசனுக்கு என்னா வத கொடுக்கிறான் அந்த ஆளு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி வைத்திலிங்கம் கங்காணியை பேய் அடித்தது பற்றி பல படியான அபிப்பிராயங்கள் நிலவின. ஆனால் வைத்திலிங்கம் சட்டைப்பையில் வைத்திருந்த பணமோ, அவரது பொருள் பண்டங்களோ களவாடப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தை வைத்து இது திருடர்களின் வேலையா இருக்க முடியாது என்று தீர்மானித்த மக்கள் இது பேய் அல்லது பிசாசின் வேலையாகதான் இருக்குமென்று உறுதியாக நம்பினார்கள்.

அதன் பின்னர் இரண்டுவாரத்துக்கு வைத்திலிங்கத்துக்கு காய்ச்சல் பிடித்து ஆட்டியது. அவர் ஏதேதோ சொல்லி பிதற்றிக் கொண்டிருந்தார். அதனால் அவர் வீட்டார்கள் கோயில் பூசாரியை அழைத்து பூஜை செய்து திருநீறு மந்திரித்து போட்டார்கள். பின் பயம் தெளிந்து அவர் வேலைக்குப் போக மூன்று வாரம் பிடித்தது. அவர் மிக மெலிந்துபோய் பலவீனத்துடன் வேலை மலைக்குச் சென்றபோது பலரும் அனுதாபத்துடன் சுகதுக்கம் விசாரித்தனர்.

அத்தகைய விசாரணைகளால் அவர் மீண்டும் புதுத்தெம்பு வரப் பெற்றார். அவரிடம் துக்கம் விசாரிக்கும் பணியில் கோபால், நந்தசிரி உள்ளிட்ட குழுவினரும் உள்ளடங்கி இருந்தனர். வைத்திலிங்கம் கங்காணி முன்புபோல் இல்லாமல் மிக மாறிப்போய் விட்டார் என்றும் அமைதி யுடனும் கருணையுடனும் நடந்து கொள்வதாகவும் மலைப்பெண்கள் பேசிக்கொண்டார்கள்.

“பேய் அடித்ததற்குப்பிறகு வைத்திலிங்கம் கங்காணிக்கு புத்தி தெளிந்து விட்டது.”

“அவன் தனக்குத் தாய் போல் காணப்படும் மூதாட்டிப் பெண்களைக் கூட அவமானப்படுத்தினான். அந்தச் செயலை எந்த தெய்வமும் பொறுக்காது.”

“நான்னா நெனைக்கிறேன் அது பேய் பிசாசின் வேலையாக இருக்காதென்று. அந்த நேரத்தில் எந்தப் பேய்டா வந்திருக்கும்.”

“நாயோ பேயோ நல்ல செயல் நடந்திருக்கு. இனிமே அந்தாலால நமக்கு கரச்சல் வராமல் இருந்தா சரி. நம்மல நம்ம பாட்டுக்கு இருக்கவிட்டால் போதும்.”

இவ்வாறு அங்கேமலையில் வேலை செய்தவர்கள் பேசிக்கொண்டது கங்காணியின் காதில் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே விழுந்தது. அதற்குக் காரணம் அன்று அந்த பேய் அறைந்த அறையில் அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காது கேட்காமல் போய்விட்டது. இந்த விசயத்தை அவர் யாரிடமும் தெரிவிக்கவில்லை. அப்படி தெரிவிப்பது தெய்வக்குற்றமாகிவிடுமோ! என்று அவர் பயந்தார்.

எது எப்படி இருந்தபோதும் அவர் அதன் பின்னர் ஒரு ஈ. காக்கைக்குக்கூட தொந்தரவு செய்யப்போனதில்லை. சங்கிலிமாடன் கட்டளையிட்டிருந்த படி அவர் ஏழு நாட்கள் மாலையில் சென்று அவனது கோயிலில் கற்பூரம் ஏற்றி பூஜை செய்து விட்டுவந்தார். அதன் பின்னரும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அந்த கோயிலுக்குச் சென்று பூஜை செய்வதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வாறு தொழிலாளர்களின் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது.

*****

தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள நாள் என்றால் பெருங் கொண்டாட்டமாக இருக்கும். தூரத்தில் இருந்து பார்ப்பவர்களுக்கு கம்பனி வாசலில் ஏதும் திரு விழா நடக்கிறதோ என்று தோன்றுமளவுக்கு சந்தடியாக இருக்கும். தொழிலாளர்கள் குளித்து, முழுகி பிரகாசமாக உடையணிந்து வந்திருப்பர். சிறுபிள்ளைகள் உண்ணக் குடிக்க அன்று நிறையக்கிடைக்குமே என்று எதிர்பார்த்திருப்பார்கள். நகரத்தில் இருந்து வியாபாரிகள் திரளாக வந்து கடை விரித்திருப்பர். வடை, முறுக்கு, பலகாரங்கள் இறுக்கிப் பொரிக்கும் வாசங்கள் கமகமத்துக் கொண்டிருக்கும்.

சந்தோஷமாகவும் உற்சாகத்துடனும் உதயமாகும் இத்தினத்தன்று சோக முடன் படுக்கையில் இருந்து எழுந்திருப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகையவர்கள் மாதாந்த வருமானம் போதாமையால் கடன்வாங்கி கிடைக்கும் சொற்ப சம்பளத்தை கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு மனைவி பிள்ளைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் முடங்கிப் போய்க்கிடப்பார்கள்.

இத்தினத்தில் சம்பள வாசலுக்கு அருகாமையில் வந்து குவிந்து கிடக்கும் நகரத்தின் சில்லரை வியாபாரிகளும் அவர்களின் கணக்குப்பிள்ளைகளும் தொழிலாளர்களுக்கு பரம எதிரிகளாகவே தோற்றமளிப்பார்கள். அன்றைய தினம் அவர்கள் பண்டப்பொருட்கள் எதனையும் விற்க வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் கைகளில் தொழிலாளர்களுக்கு கொடுத்த கடன் தொகைகள் குறிக்கப்பட்ட கணக்குப்புத்தகங்கள் மாத்திரமே இருக்கும். தொழிலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகையை பிடித்துக்கொண்டு மிச்சத் தொகையையே சம்பளமாக வழங்குவார்கள். அந்த சொற்ப சம்பளத்தில் அரைவாசியை, முக்கால்வாசியை, ஏன் முழுவாசியையுமே மேற்படி சில்லறை வியாபாரிகள் பிடுங்கி, விழுங்கி, ஏப்பமிட்டு விடுவார்கள். இதனால் இவர்களுக்கு பரம்பரை பரம்பரையாக தோட்டத் தொழிலாளர்கள் கடன்காரர்களாகவே இருந்து வந்தார்கள்.

சில வியாபாரிகள் தொழிலாளர்களின் சட்டைப்பைக்குள் கை போட்டு பலாத்தகாரமாகவே தமக்கு சேர வேண்டிய தொகையை பறித்துக் கொள்வார்கள். இந்த வியாபாரிகள் நேர்மையானவர்கள் அல்ல. பல விதங்களில் தொழிலாளர்களை சுரண்டுபவர்கள். இவர்கள் ஒரு போதும் சரியான கணக்கை தொழிலாளர்களிடம் சொல்லுவதில்லை. ஒரே தொகையை இரண்டு மூன்று முறையும் வசூழிப்பார்கள். கங்காணி முதல் கடைக்காரன் வரை இவர்களை ஏமாற்றிப் பிழைக்கும் இந்த கபட நாடகம் ஆதி முதலே இடம் பெற்று வருகின்றது.

இவர்களைத்தவிர துணி விக்கிறவன், மணிப்பொட்டிக்காரன், கள்ளச் சாரா யம் விக்கிறவன், கள்ளுக்கடைக்காரன் என இப்படி இன்னும் பல ரகத்தினர் தம் கழுகுக் கண்களில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு விழி திறந்து எவன் வந்து மாட்டுவான் என்று எகிறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இவற்றுக்கு மேலதிகமாக பொலிஸ் கண்ணில் படாதபடி சற்று எட்ட ஒரு மறைவிடத்தில் சூதாட்டக் களம் ஒன்றும் பாய்விரித்து அமைக்கப்பட்டிருந்தது.

வழக்கமாக கோபால் நந்தசிரி முதலான நண்பர்கள் கூட்டத்தினர் சம்பள நாளன்று சம்பளம் கையில் கிடைத்ததும் அதனை அப்படியே எடுத்துச் சென்று வீட்டில் ஒப்படைத்து விட்டு தமக்குச் செலவுக்குத் தேவையானதை வீட்டில் கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் அன்று வழக்கத்துக்கு மாறாக அவர்கள் சூதாட்டம் நடந்து கொண்டிருந்த இடத்துக்கு போனார்கள். இச்செயலை ஏன் என்ற கேள்விக்குறியுடன் சிலர் வியப்பாக பார்த்தனர். ஆனால் இந்த இளைஞர் குழுவினர் ஒரு காரணத்தோடு தான் அங்கே சென்றார்கள் என்பது அப்போது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஞ்சி குடிக்க வைத்த காலம்

நாட்டில் புதிய கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தலைகீழாக மாற்றமடைந்தது. உள்ளூரில் தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்தது. தேயிலைத் தோட்டங்களின் உரிமை தனியாரிடம் இருந்து பறிக்கப்பட்டு தேசிய உடமையாக்கப்பட்டதால் தமக்கு நன்மை கிடைக்கும் என்று கருதிய தோட்டத்தொழிலாளரின் நம்பிக்கை வீணானதாக மாறியது. அவர்களின் வாழ்க்கைத்தரம் இருந்ததை விட அதல பாதாளத்தை நோக்கி சரிந்தது. அவர்கள் சட்டியில் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

அரசாங்கம் நாட்டின் இறக்குமதிப் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதித்தது. உணவுப்பொருள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது அரிசி, மாவு என்பனவற்றுக்கு தட்டுப்பாடுகள் ஏற்பட்டன. உள்நாட்டு உணவுப்பொருட்கள் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று பொருளாதார கொள்கை கொண்டுவரப்பட்டாலும் அதன் சாத்தி யப்பாட்டுக்கு உறுதியளிக்கப்படவில்லை.

உணவு மானியம் நிறுத்தப்பட்டது. உணவுப் பொருட்கள் கூப்பன் முறைமை மூலம் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக மட்டும் விநியோகிக்கப்பட்டன. கோதுமை, மா, பாண் என்பவற்றுக்கு தட்டுப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியது. அரிசி மற்றும் உணவுப்பொருட்கள் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்ற மாவட்டத்துக்கு கொண்டு செல்வது குற்றமென பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனால் எந்தப் பொருட்கள் வாங்கச் சென்றாலும் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னாலும் கடைகளிலும் நீண்ட நேரம் வரிசைகளில் கால்கடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டது. அப்படிப்பெற்ற உணவுப் பொருட்களும் போதுமானதாக இருக்கவில்லை. ஹோட்டல்களில் வாரத்துக்கு இரண்டு நாட்களுக்கு மாத்திரமே அரிசிச் சோறு சமைக்க அனுமதி வழங்கப்பட்டன.

இந்த நிலைமை பொதுவாக நாட்டு மக்கள் அனைவரையும் அரைப்பட்டினியில் இருக்க வைத்தது. அவர்கள் உடுத்தும் துணிகளுக்குக் கூட கூப்பன் முறை கொண்டு வரப்பட்டது. விவசாயிகள் கிடைத்த இடங்களில் எல்லாம் விவசாயம் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். இதனால் மக்களின் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டது. சோற்றுக்குப்பதிலாக மரவள்ளி, வற்றாளை, சேமங் கிழங்கு, சோளம் என்பவற்றை உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய நிலையால் பெரிதும் துன்பப்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. இவர்கள் உணவில் பெரிதும் இடம் பிடித்திருந்தது பாணும் றொட்டியுமே.

கோதுமை மாவு தட்டுப்பட்டால் இவர்கள் இரண்டு வேளை உணவை இழந்தனர். ஒரு ராத்தல் பாணைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் குடும்ப அங்கத்தவர்கள் பாண் கியூ வரிசைகளில் சென்று பகல் பத்து மணிவரை நிற்க வேண்டி ஏற்பட்டது. அல்லது பட்டினிதான்.

பணம் படைத்தோர் கறுப்புச்சந்தையில் பொருட்களை களவாக வாங்கினர். கூட்டுறவு சங்க கடைகளுக்கு வந்த பொருட்களும் களவாக கறுப்புச் சந்தைக்கு விற்கப்பட்டன. தோட்டத்தொழிலாளரும் கறுப்புச்சந்தையில் பொருட்கள் வாங்குவதற்காக தம்மிடமிருந்த சொற்ப நகை நட்டுக்களை அடகு வைத்து விரைவி லேயே ஓட்டாண்டி ஆனார்கள்.

நகை நட்டுக்கள் தீர்ந்த உடன் தத்தம் வீடுகளில் இருந்து செம்பு, பித்தளைப் பண்டங்களான அண்டா, குண்டா, கும்பா, குடம், குத்துவிளக்கு முதலானவற்றையும் அடகு வைத்தோ, விற்றோ தீர்த்தனர். சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட அடகுக்கடைக்காரன்கள் மிக சொற்ப தொகைக்கு அவற்றை வாங்கி பணம் பெருக்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் வீட்டைப் பொறுத்தவரையில் அவனும் அவனது அம்மாவும் ஏதோ கையில் கிடைத்தவைகளை வைத்து அன்றாடத்தேவைகளை சமாளித்துக்கொண்டனர். அவனும் அவனது நண்பர்கள் கூட்டமும் கூடுமானவரையில் நகரத்துக்குப் போய் மேலதிகமாக ஏதாவது கூலி வேலை செய்து கிடைத்த பணத்தில் ஏதாவது தின் பண்டங்கள் வாங்கிக்கொண்டு வந்தனர். அத்தகைய சந்தர்ப்பத்தில் தான் அவன் தன் அம்மாவிடம் அந்தக் கேள்வியைக்கேட்டான்.

“அம்மா அண்ணாவின் பிள்ளைகளுக்கு நாம் ஒரு வேளை சாப்பாடாவது கொடுக்கக்கூடாதா?” கோபால் அவ்விதம் கேட்டது அன்னம்மாவுக்கு மகிழ்ச்சியையே தந்தது. அவன் தனது சகோதரன் மற்றும் அவன் பிள்ளைகள் மீது அக்கறை கொண்டுள்ளமை தொடர்பில் அவள் மிகத்திருப்பதியடைந்தாள்.

“அதைப்பத்தி நான் கவலைப்பாடமல் இருப்பேனா சின்னத்தம்பி. ரெங்கநாதனும் எம்புள்ளதானே. அவன்தான் குடும்பத்தைப்பத்தி அக்கறை இல்லாம சம்பாதிக்கிறத குடிச்சிக்குடிச்சியே அழிச்சிக்கிட்டிருக்கான். அவ னோட பொம்பள சம்பாதிக்கிற சொச்சத்திலதான் அவுங்க குடும்பம் போகுது. நீ கவலைப்படாத. என்னால முடிந்த அளவுக்கு அவுங்களுக்கு ஒதவிக்கிட்டுத்தான் இருக்கேன்.”

“இப்ப ராத்திரியெல்லாம் வீடுங்கல்ல கஞ்சி காச்சுராய்ங்கலாமில்ல. என்னா கஞ்சி. அந்த தலைவர் தான் சொன்னாரு. ஒனக்கு ஏதும் தெரியுமா?”

“அவன் பேச்ச எடுக்காதம்மா கேடுகெட்ட திருட்டுப்பய. அந்த மாதிரி ஒதவாக்கறை தொழிற்சங்க தலைவர்களாலதான் நம்ம சமூகமே கெட்டு குட்டிச் சுவராகிப் போய்க்கெடக்குது. இவிங்கதான் மக்களுக்கு கஞ்சி காச்சி குடிக்கச் சொல்றாங்க. அவிங்க சொல்ற அந்த கஞ்சி வேறொன்றுமில்லம்மா. காச்சுண்டு அரிசியில கோழிக்குப் போடுற சோளத்துல முக்காச்சுண்டு போட்டு லேசா தேங்காய்ப்பால் உட்டு உப்புப்போட்டு கொதிக்க வைக்கிற கஞ்சிதான் அது.”

கோபால் நையாண்டியாக சிரித்தவாறே தொழிற்சங்க காரனுங்க சொன்ன கஞ்சி குடிக்கிற கதைபற்றி அம்மாவிடம் விவரித்தான்.

அன்னம்மா அதனைக் கேட்டவாறே கேத்தலில் தண்ணியை ஊற்றி அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டினாள். களைத்துப் போய் வந்திருக்கும் கோபாலுக்கு தேநீர் போடுவதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முந்தி ஜெயராமன்னு ஒரு தொழிற்சங்கத் தலைவர் இருந்தாரு. அவருதான் யு.எம்.பி. கட்சியில் இருந்து ஓடைச்சிக்கிட்டுப்போயி ஸ்ரீமா பண்டாராநாயக்க கட்சியில் சேர்ந்தாரு. அவருதான் ஸ்ரீமா பண்டாரநாயக்க அம்மாவை தோட்டத்துக்கெல்லாம் கூட்டியாந்து யு.எம்.பி. கட்சியை தோட்டப்பகுதியில் ஓடச்சாரு. யு.எம்.பி இருந்திருந்தா நமக்கு இந்த நெலமை வந்திருக்காது. சேகு வேராகாரன் கூட காரணமில்லாமலா அரசாங்கத்தோட யுத்தம் செஞ்சான்."

அன்னம்மாள் அவளுக்கே தெரிந்த அரசியல் பற்றி பேசினாள். ஆரம்பத்தில் தோட்டத் தொழிலாளர் அரசியலில் இடது சாரிகள் பக்கம் சேர்ந்திருந்தாலும் பின்னர் அவர்கள் யு.என்.பி. சார்பானவர்களாகவே இருந்தார்கள் என்று ஒரு கருத்து நிலவியது. அதன் காரணமாகவே தோட்டங்களை வெள்ளைக்காரனிடம் இருந்து பறித்து தேசிய உடமையாக்கியபோதும் அதன் மூலம் தோட்டத் தொழிலாளருக்கு எந்த நன்மையையும் அவர்கள் செய்யவில்லை. ஹெக்டர் கொக்பேகடுவ என்ற அப்போதிருந்த காணி விவசாய அமைச்சர் தோட்டக்காணிகளை பிரித்து கொலனியாக்கி சிங்கள மக்களுக்கு மாத்திரமே கொடுத்ததுடன்.... தோட்டத் தொழிலாளர்கள் முற்றிலும் திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டனர்.

மறுபுரத்தில்கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த இடதுசாரிக்கட்சிகளும் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொள்ளவில்லை. இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர் அனைவரையும் இந்தியாவுக்கே திருப்பியனுப்பி விடவேண்டுமென்று ஸ்ரீமாவோ அம்மையார் பிடிவாதமாக இருந்தார். இதன் விளைவாக ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு முக்கால்வாசி பேரை இந்தியாவுக்கே அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. அதனால் தோட்டத்தொழிலாளர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிகளை உள்ளடக்கிய கூட்டரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டிருந்தனர்.

மொத்தத்தில் இக்கால கட்டத்தில் தோட்டத்தொழிலாளர்கள் மிக மோசமான விதத்தில் பாதிப்புற்றிருந்த போதும் நாட்டின் விளிம்பு நிலை மக்களும் பல்வேறு விதங்களில் பஞ்சம் பட்டினியால் துன்பங்களை அனுபவித்துக்கொண்டுதான் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பட்டினியும் பஞ்சமும்

கோபால் குளித்து முழுகி விட்டு புதிய ஆடைகளை அணிந்து கொண்டு எங்கேயோ புறப்பட்டுப் போவதற்காக கண்ணாடி முன் நின்று தன் முகத்துக்கு பவுடர் பூசி அழகு பார்த்துக்கொண்டிருந்தான். அவன் நீண்ட நேரமாக தன்னை அலங்கரித்துக்கொண்டு தலைமுடியை அங்கேயும் இங்கேயும் இழுத்து ஒதுக்கி மெனக்கட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த அன்னம்மா தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். தன் மகனுக்கு திருமணம் ஒன்று செய்து கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று நினைத்தாள்.

"என் மகன் புருஷ இலட்சணத்துடன் கூடிய ஆண்மகனாகிவிட்டான்" அவள் சற்றே பலமாக முணுமுணுத்தாள். அது கோபாலின் காதுகளுக்கும் கேட்டது. அவன் மெதுவாகத் திரும்பிபார்த்தான். இதுவரை அவன் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பதை அம்மா பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்ததும் அவனுக்கு வெட்கம் ஏற்பட்டு முகம் சிவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. அவன் அதனை வெளிக்காட்டாமலே "அம்மா நான் டவுனுக்குப் போய்ட்டு வாறேன். ஏதேனும் வாங்கி வரணுமா?" என்று கேட்டான்.

"தேத்தண்ணி ஊத்தியிருக்கேன். குடிச்சிட்டு போ... வீட்டுல சாமானெல்லாம் ஒன்னும் இல்ல. இருந்தாலும் இப்ப அதெல்லாம் வாங்க முடியாது. கருவாடு கா ராத்தலும், வெள்ளப்பூடும், வெங்காயமும் வாங்கிட்டு வா." "அப்படியே மரவள்ளி கெழங்கும் ஒரு ராத்தல் வாங்கிக்க. பழைய மரவள்ளி வாங்கிராத நஞ்சாப் போயிடும் சரியா?"

என்று கூறிய அன்னம்மா இடுப்பில் செருகியிருந்த சேலை முந்தானை முடிச்சை அவிழ்த்து அதில் இருந்து ஒரு ஐந்து ரூபா நோட்டையும் ஒரு இரண்டு ரூபா நோட்டையும் எடுத்துக் கொடுத்தாள். அதனைப் பெற்றுக்கொண்ட கோபால் வெளி யில் இறங்கி நடந்தான்.

அப்போது அவன் முன் சிவபாக்கியம் எதிர்ப்பட்டாள். அவள் கோபால் உடுத்திக் கொண்டு செல்வது டவுனுக்குத்தான் என்பதைப் புரிந்துகொண்டாள். அவள் கோபாலைப் பார்த்து

"தம்பி டவுனுக்குப் போனால் எங்க ஊட்டுக்காரரு அங்கதான் சுத்திட்டு இருப்பாரு அவரப்பார்த்து வரும்போது கொத்தமல்லி கொஞ்சம் வாங்கிக் கொண்டு வரச் சொல்லு. சின்ன பயளுக்கு ஒடம்பு சரியில்ல."

"சரி அக்கா நா சொல்றேன். ஆனால் அவ்வளவு நேரம் பாத்துக்கிட்டு இருக்காம அம்மா கிட்ட சொல்லி கொஞ்சம் கொத்தமல்லி வாங்கி அவிச்சிக்கொடுங்க கூட முடியாம இருந்தா மருந்துதான் வாங்கனும் இதுக்கெல்லாம் செலவாகும்னு சும்மா இருக்கக்கூடாது."

கோபால் ஒரு நிமிசம் அவ்விடத்தில் தாமதித்து பதில் சொல்லிவிட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தான். அவர்கள் கதைத்துக் கொள்வது அன்னம்மாவின் காதுகளுக்கு தெளிவாகக் கேட்டது. அன்னம்மா வெளி யில் வந்தாள்.

"ஏன் சிவபாக்கியம் சின்னவனுக்கு ஒடம்புக்கு என்ன? என்கிட்ட சொல்லலாமில்ல. சரி நீ வேலை முடிந்து களைத்துப் போய் வந்திருக்க. நான் கொத்தமல்லி அவித்துத் தாறேன்" என்றாள் சிவபாக்கியத்திடம்.

ஆனால் சிவபாக்கியம் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவளது பிரச்சினை வீட்டில் குழந்தைகளுக்கு கலக்கிக் கொடுக்க பால்பவுடர் இருக்கவில்லை. அதனை வாங்குவதற்கான பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிடம் இல்லை. எனவேதான் அவள் சிறிது கொத்தமல்லி அவித்து பிள்ளைகளுக்கு கொடுக்க நினைத்தாள். அவளது இந்தப் பிரச்சினையை எப்படி வேறு ஒருவரிடம் சொல்வது என அவள் மனம் சங்கடப்பட்டது.

எனினும் சிவபாக்கியத்தின் அந்த மௌனத்தை அன்னம்மாவால் புரிந்து கொள்ள முடிந்தது. அவளது அச்சோக நிலையை எண்ணி அன்னம்மாவும் வேதனையடைந்தாள்.

"ஏன் சிவபாக்கியம் குழந்தைகளுக்குக் கொடுக்க பால் இல்லையென்பதை என்னிடம் சொல்லக்கூடாதா?" என்று கூறியவாறே தன் சேலை முந்தானையைப் பிரித்தாள்.

"இந்த பஞ்ச காலத்தில் எல்லாருமே ஒரு விதத்தில் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதில் என் வேதனையை யாரிடம் போய் சொல்வது? அக்காவும் கோபால் தம்பியும் இருக்கிறதை வைத்து ஏதோ சமாளிக்கிறீங்க என்பது எனக்குத் தெரியாததல்லவே. அத்துடன் ரெங்கநாதனின் பிள்ளைகளின் சுக துக்கங்களையும் நீதானே அக்கா பார்த்துக்கொள்கிறாய். அப்படி இருக்கும்போது உங்களிடம் மேலும் மேலும் என் துக்கத்தை சொல்லி எப்படி உதவி கேட்பேன்? இதுவரை உங்களிடம் நான் பெற்ற கடனை எப்படித் திருப்பித்தரப் போறேன். என்ன கைமாறுதான் செய்யப்போகிறேன்." அவளது குரல் தழுதழுத்தது.

சிவபாக்கியம் இடுப்பில் கட்டியிருந்த ரெட்டுத்துணியை அவிழ்த்தவாறே தன் கண்களில் கசிந்திருந்த கண்ணீர்த்துளிகளை துடைத்தெறிந்தாள்.

"சிவபாக்கியம், என்னிடம் பேச்சுக் கேட்டுக்கொள்ளாத. இந்தா போ, போயி பால் பவுடர் எதையாவது வாங்கி பிள்ளைகளுக்குக் கொடு. யாருக்குத்தான் கஷ்டம் இல்லை" என்று கூறியவாறே சேலையில் முடித்து வைத்திருந்த இரண்டு ரூபாவை எடுத்துக் கொடுத்தாள். பின் சிவபாக்கியத்தின் லயக் காம்பிராவுக்குள் நுழைந்து பழைய நூல் சேலையைக் கொண்டு முகட்டு வலை யில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த தொட்டிலில் இருந்து குழந்தையைத் தூக்கி எடுத்தாள். குழந்தை மந்த போஷணையால் மெலிந்து துவைந்து போய் அழக்கூட தெம்பில்லாமல் அசையாமல் கிடந்தது. குழந்தையின் நிலையை எண்ணி துணுக்குற்றாள் அன்னம்மா. அவளுக்கு அதிர்ச்சியும் வேதனையும் மேலெழுந்து தொண்டையை அடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி சிவபாக்கியம். புள்ளையை இவ்வளவு மோசமா வைச்சிருக்கிற. போ, போ, சீக்கிரம் போய் பால்டின்ன வாங்கிட்டு வா" என்று அன்னம்மா சிவபாக்கியத்தை விரட்டியடித்தாள்.

சிவபாக்கியமும் தன் பிள்ளைக்கு என்னவோ ஏதோ என்று பதறியவாறே ஓடிச்சென்றாள். இரண்டு லயம் தள்ளி அப்பால் காணப்பட்ட அந்த பெட்டிக் கடைக்கு ஓடிச்சென்று முதலாளியிடம் இரண்டு ரூபாவை நீட்டி பெரகும்மா பால்டின் ஒன்று கேட்டு வாங்கினாள்.

அவளிடம் பால் டின்னை நீட்டிய முதலாளி மிகுதி எழுபது சதத்தை பழைய கணக்குக்கு கழித்துக் கொள்ளவா என்று கேட்டார்.


"வேண்டாம் முதலாளி கட்னை சம்பளம் கிடைத்ததும் தருகிறேன். இது அன்னம்மாவின் காசு மிகுதி கொடுக்க வேண்டும். பிள்ளைக்கு பால் இல்லை என்பதால் கேட்டு வாங்கி வந்தேன்" என்றாள் பரிதாபமாக.

அதனை அவதானித்தவாறு தினசரி பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த லெண்டினா என்பவன் இப்போதெல்லாம் பிள்ளைகளுக்கு டின்பால்தான் கொடுக்கிறார்களோ என்றான் நக்கலாக.

"வேறு என்ன செய்வது லெண்டினா.. லக்டோஜனை பார்த்தே பல வருடங்களாகிறது. லக்ஸ்பிரே மாசத்துக்கு ஒரு ராத்தல்தான் கொடுக்கிறான். ஸ்ரீமா அம்மையாரும் உங்கள் இடது சாரி தலைவர்களும் அதனை வைத்துத்தான் பெரிய நாற்காலிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். டின்பால் மட்டும்தான் இப்போது பிள்ளைகளுக்கு அமிர்தம்."

"சரி... சரி.... ஒரு நாட்டை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமானால் தியாகம் செய்யத்தான் வேண்டும். பஞ்சம் பட்டினியை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அப்படியில்லாமல் நல்லா தின்னு, குடிச்சி உடம்பு வளர்த்து ஆடம்பரமாக ஜீவித்தால் நாட்டை முன்னேற்ற முடியாது. இன்னமும் ஒருவரும் பட்டினியால் மரணிக்கவில்லை என்பதையிட்டு சந்தோஷப்படு" என்றான் அங்கிருந்த மற்றுமொருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவாடை தாவணியில் பார்த்த போது...

பணிய லயத்தில் ஏதோ யோசனையுடன் இருந்த நந்தசிரி கோபால் வருவதைக்கண்டு விரைந்து வரும்படி சைகை செய்தான். ஏதோ விசயத்துடன்தான் கூப்பிடுறான் என யோசித்த கோபால் நந்தசிரியை நோக்கி விரைந்தான். இப்போது நந்தசிரியும் கோபாலை நோக்கி ஓடிவந்தான்.

"கோபால் உனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. புஸ்பராணி கோவிலுக்கு வந்திருக்கிறாள். விரைந்து போனால் சந்திக்கலாம்" நந்தசிரி சந்தோசத்துடன் முகமலரக் கூறினான்.

"புஸ்பராணி கோயிலுக்கு வந்தா என்ன, போனா என்ன நந்தசிரி. இது சரிப்பட்டு வராது. நான் டவுனுக்குப் போறன் நந்தசிரி" கோபால் நந்தசிரி சொல்வதைப் பொருட்டுத்தாமல் அவனை விலக்கிக்கொண்டு டவுனை நோக்கிய பாதையில் இறங்கினான்.

"கொஞ்சம் இரு கோபால்... என்று பின்னே ஓடிவந்த நந்தசிரி கோபாலின் கையைப் பிடித்து நிறுத்தினான். "ஒனக்கு நான் சொல்றது ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளங்கல. தோட்டத்தில ஒரு பயலையும் தலைநிமிர்ந்து பாக்காத அவ ஒன் மீது மட்டும்தான் எதிர்பார்ப்பு வைச்சிருக்கா... அத நீ உதாசீனப்படுத்துறது மடத்தனம். போ...போ... அவளைப் போய்ப்பார்.எல்லாம் சரியாகிடும்"

நந்தசிரி நட்புடன் கோபாலின் தோள் மீது கைபோட்டவாறே பேசினான்.

கோபால் மனதில் மீண்டும் ஒருமுறை அந்த நப்பாசை தலைதூக்கியது. நந்தசிரி சொல்வது போல் ஒருமுறை கோவிலுக்குப் போய் பார்த்தாலென்னவென்று அவன் மனம் கேள்வி எழுப்பியது.

"கோவில்ல போயி எப்படி சந்திக்கிறது? அங்கே நெறைய பேர் இருப்பாங்க மத்தது அவளோட அம்மாவும் வந்திருப்பா" கோபால் சற்றே தயங்கினான்.

"அங்கே யாருமில்லடா, அவ தனியாதான் அவளோட தம்பியோட வந்திருக்கா. நாளைக்கு பாடசாலையில பரீட்சை ஆரம்பமாக உள்ளதில்ல. பெரிய பூசாரி கிட்ட சொல்லி பூஜை செய்ய ஏற்பாடு பண்ணியிருக்கா. இப்ப அவ அங்கே வந்திருக்கிறது கோயிலை கூட்டி சுத்தம் பண்ணத்தான்."

"ஐயையோ, எல்லாத்தையும் விட மோசமானவன் அவன் தம்பிக்காரன்தான். அவன் அவளை நெருங்கவிடமாட்டான். வீட்டுலயும் போய் பத்த வைச்சிடுவான். இது வேணாம் நந்தசிரி" கோபால் மீண்டும் தயங்கினான்.

"தம்பிக்காரனை அவ்விடத்தில் இல்லாமல் செய்ய என்னால் முடியும். நான் அதைப் பார்த்துக் கொள்கிறேன். பெரிய பூசாரி பூஜை வைக்கிறபோது தான் வருவாரு. இதுதான் ஒனக்கு கெடைக்கிற ஒரே ஒரு சந்தர்ப்பம். நழுவ விட்டுவிடாதே"

கோபாலின் மனதில் இப்போது மீண்டும் ஒரு எதிர்பார்ப்பு துளிர்த்தது. இதுவரை அவன் மனம் ரெண்டும் கெட்டானாகவே இருந்தது. அவனை புறந்தள்ளி அவமானப்படுத்தும் கதிரேசன் மாமாவுக்கும் ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்தான்.

கோபாலும் நந்தசிரியும் கோயில் முற்றத்தை சென்றடைந்தபோது புஸ்பராணி அதனை கூட்டிப் பெருக்கி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள். அவளது இளைய தம்பியும் அவளுக்கு உதவியாக தேங்காய் உடைக்கும் இடம், விளக்குப் பற்ற வைக்கும் இடம் முதலானவற்றை சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலை மறைவாக இருக்கும்படி கூறிய நந்தசிரி அங்கிருந்த கோவில் திருப்பணி செய்யும் ராமுவிடம் சென்று ஏதோ காதுக்குள் பேசி அவனி டம் ஒரு கட்டு பீடியைத் திணித்தான். அதனைத் தொடர்ந்து ராமு நந்தசிரி கேட்டுக்கொண்டதன்படி புஸ்பராணியின் தம்பியை ஏதோ வேலையாக கோவிலுக்குள் அழைத்துச் சென்றான்.

அதனைத் தொடர்ந்து சுற்றிவர யாரும் இல்லாததை உறுதி செய்துகொண்ட கோபால் புஸ்பராணி இருந்த இடத்தை நோக்கி நகர்ந்தான். அவளும் யாரோ தன்னை நோக்கி வருகிறார்கள் என்று தனக்கேற்பட்ட பாதுகாப்பு உள்ளுணர்வு எச்சரிக்கை செய்யவே படக்கென திரும்பிப்பார்த்தாள்.

அவளுக்கு மிக அருகில் கோபால் திடீரெனத் தோன்றியமை அவளுக்கு ஒரு கணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவளது இமைகள் படபடவென அடித்துக்கொண்டன. நிதானித்து மனதை ஒரு நிலைப்படுத்த சில கணங்கள் சென்றன. அவள் சுதாகரித்து தலைநிமிர்ந்தபோது அவள் உதட்டில் ஒரு புன்னகை தோன்றியிருந்தது. அவள் சுற்றும் முற்றும் பார்த்து அருகில் யாரும் இல்லையென்பதை உறுதி செய்து கொண்டாள். அவள் உதடுகளில் இருந்து, மிக மந்தகெதியிலேயே வார்த்தைகள் வெளிவந்தன.

“என்ன கோபால், திடீரென இந்தப் பக்கம் நான் பயந்தே போயிட்டேன்...” அவள் ராகத்துடன் இழுத்தாள்.

கோபால் அவள் கேள்விக்கு உடனேயே பதில் சொல்லவில்லை. அவளை சில நொடிகள் கண்வாங்காமல் பார்த்தான். அவன் உதட்டிலும் ஒரு புன்னகை அரும்பியிருந்தது.

இப்போதுதான் முதன் முறையாக அவளை முழுசாகப் பார்ப்பது போல் உச்சி முதல் உள்ளங்கால் வரை அவன் பார்வை சென்றது. பாடசாலை சீருடையில் அவளை பல தடவைகள் அவன் பார்த்திருந்தாலும் பாவாடை தாவணியில் அவளைப் பார்த்தபோது அவள் அழகு மிகைப்பட்டுத் தெரிந்தது. இத்தனை சுந்தர ரூபவதியான இவள் தன்னைக் காதலிப்பாள் என அவனால் நம்ப முடியாமல் இருந்தது. கூடவே இவ்வளவு அழகியான அவள் தனக்கு வாழ்க்கைத்துணையாக வாய்ப்பாளா என்ற சந்தேகமும் எழுந்தது.

இவளுக்கு நான் பொருத்தமானவன்தானா என்று மற்றுமொரு கேள்வியும் அவன் மனதில் முளைத்தது. அவளின் நெஞ்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மிப்புடைத்திருந்த மார்பகங்கள் மீது அவன் பார்வை திருட்டுத்தனமாக சென்றது. அவை அவள் இன்னமும் பாடசாலை செல்லும் மாணவியாக இருந்தாலும் சிறுமி அல்ல என்பதை அவன் மனதில் உரைக்கப்பண்ணின. அவனது கையறு நிலைகண்டு அவள் புன்னகை மேலும் அகன்று அவள் உதடுகளும் புருவங்களும் காது வரை நீண்டன. அப்போது அவள் இடது கன்னத்தில் விழுந்த குழி அவளை வானத்து தேவதையோ என எண்ண வைத்தது. அவளது இரண்டு கண்களும் அவனையே கூர்ந்து பார்த்து வசீகரித்து கிறக்க மூட்டின.

கோபால் தன்னை விழுங்கி விடுவது போல் இமைக்காமல் பார்ப்பதை நினைத்ததும் அவள் வெட்கத்தால் முகம் சிவந்தாள். உடனேயே அவள் கண்கள் நிலம் நோக்கி பணித்தன. வலது கால் பெருவிரல் நிலத்தில் கோலம் போட்டுக் கொண்டிருந்தது.

"புஸ்பா... நாளைக்கு உனக்கு பரீட்சை ஆரம்பிக்கிறது என்று கேள்விப்பட்டேன். வாழ்த்திட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்"

"ஆமா கோபால், அதுதான் பூஜை செய்து வேண்டிக்கன்னு அம்மா சொன்னாங்க..."

இரண்டு பேருமே மனதுக்குள் ஆயிரம் ஆசைகளையும் கனவுகளையும் வைத்துக்கொண்டு வெளியில் சொல்ல முடியாமல் ஏதோ பேச வேண்டுமென்பதற்காக பேசிக்கொண்டிருந்தார்கள். கோபாலை பொறுத்த வரை உள்ளக்கிடக்கையை அவளிடம் தெரிவிக்க இதனை விட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காதென நினைத்தான். ஆனால் அவளோ எந்த சந்தர்ப்பத்திலும் தான் தன் எண்ணத்தைத் தெரிவிக்க முந்தி விடக்கூடாது என பிடிவாதமாக இருந்தாள். அவளுக்கேயுரிய அவள் அப்பாவிடம் இருந்து வரித்துக்கொண்ட அகங்காரமும் மமதையும் அவள் மனதுக்கும் கண்களுக்கும் திரை போட்டன. அவர்கள் அவ்வாறே பல கணங்கள் ஒன்றும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மனதால் தவித்துக்கொண்டிருந்தனர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச மரம் சாட்சியாக

அந்த மாரியம்மன் கோயில் தோட்டத்து லயக் குடியிருப்புக்களுக்கு சற்று எட்டவே அமைந்திருந்தது. லயத்துச் சந்தடிகள் கோயில்வரை ஒரு போதும் எட்டுவதில்லை. ஆதலால் அந்த கோயில் எப்போதும் அமைதி சூழ்ந்ததாகவே இருக்கும். கோயிலை ஒட்டி விசாலித்து அடர்த்தியாக வளர்ந்திருந்த அரச மரத்தில் குருவிகளும், வௌவால்களும், அணில்களும் குடி கொண்டிருக்கும். அன்றைய தினம் அந்த அரச மரம் கோபால்-புஸ்பராணி காதல் பிரகடனத்துக்கு சாட்சியாக அவர்கள் பேசிக்கொள்வதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தது.

கோபால் புஸ்பராணியை மீண்டும் ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்தான்.

"புஸ்பா.. என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்... இனிமேலும் என்னால் இதைப்பற்றி பேசாமல் இருக்க முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் எதைப்பற்றி குறிப்பிடுகின்றான் என்பது பற்றி புஸ்பராணிக்கு புரியாமல் இல்லை. அவன் அவளை புஸ்பா என்று சுருக்கமாக அழைத்த போதே அவன் எந்த அளவுக்கு தன் மீது உரிமை எடுத்துக்கொண்டுள்ளான் என்பது அவளுக்குப் புரிந்தது. அவளுக்கும் அவன் மீது பூரணமான காதல் தோன்றியிருந்தது என்பதனை அவள் உணர்ந்திருந்தாள். அவன் தன் மனக்கிடக்கையை அவளிடம் வெளிப்படுத்தியபோது அவள் முதல் முறையாக அவனை முழுதாக ஏறெடுத்துப் பார்த்தாள். அவள் கண்களில் முற்றிலும் காதல் தழும்பி இருந்ததனை கோபால் உணர்ந்தான். எனினும் அதனை அவள் நேராக அவனிடம் தெரிவிக்க தயாரில்லை.

“இதனை எனது பெற்றோர்கள் அனுமதிப்பார்களா? என்று எனக்குத் தெரி யாது கோபால். அதை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. என் அப்பாவுக்கு தெரிந்தால் என்னை அவர் கொன்று போட்டு விடுவார்” புஸ்பராணி தன் உள்ளக் கிடக்கையை கோபாலுக்குத் தெரிவித்தாள்.

நீண்ட நாட்களாக தன் மனதுக்குள் குடைந்து கொண்டிருந்த ஒரு புதிரான விடயத்தை இவ்விதம் வெளிப்படுத்தி தன் மன உளைச்சலைத் தீர்த்துக் கொண்டதில் புஸ்பராணி ஆறுதல் அடைந்தாள்.

மறுபுறத்தில் புஸ்பராணி கோபால் மீதிருந்த காதலை நேரடியாக தெரிவிக்காத போதும் அவள் கூறிய வார்த்தைகள் அதனை வேறு விதத்தில் உறுதி செய்தன. அவளுடைய பார்வைகளும் தளுக்கலும் குலுக்கலும் அவள் கோபால் மீது கொண்டுள்ள காதலை உறுதியாக வெளிப்படுத்தின. இதனால் கோபாலின் மனது பேருவகை கொண்டது. தன் காதலுக்கு எந்தத் தடையை யார் போட்டாலும் அவற்றைத் தகர்த்து அவன் புஸ்பராணியை கரம் பற்ற மனதுக்குள் திடசங்கற்பம் செய்து கொண்டான். அவன் அவளை மேலும் அணுகி அவளது இரு கரங்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டான்.

அவள் உடனடியாக அச் செயலுக்கு மறுப்புத் தெரிவிக்காவிட்டாலும் பின்னர் கலவரமடைந்தவளாக சுற்றும் முற்றும் பார்த்தவாறே அவனிட மிருந்து தன் கரங்களை விடுவித்துக்கொண்டாள்.

“என்ன கோபால் இது. கோவிலுங்கிறது மறந்துருச்சா. யாராவது பாத்தாங்கன்னா? தம்பி வேற கோவிலுக்குள்ள இருக்கான்” அவள் வெட்கப்பட்டு சிணுங்கியவாறே கூறினாள்.

கோபால் அவளைப் பார்த்து சிரித்தான். ஏனோ தெரியவில்லை. அந்த சிரிப்பு முன்னெப்போதையும் விட அவளுக்கு மிகக்கவர்ச்சியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. அவள் அவனது அந்த சிரிப்பையும் சேர்த்துத்தான் காதலித்தாள். அவள் கோபாலிடம் கூறினாள்.

"கோபால் நீங்கள் சிரிக்கும் போது மிக அழகாக இருக்கிறீர்கள். போன வருடம் கோயில் திருவிழாவில் நீங்கள் நண்பர்களுடன் சிரித்துக்கொண்டே "ட்ரம் செட்" வாசித்த போதுதான் உங்களை முதல் முதலாக பார்த்தேன். அப்போதுதான் என் மனதுக்குள் உங்கள் நினைவு குடிபுகுந்தது. நீங்கள் எனக்கு தூரத்து உறவு என அறிந்ததும் அந்த எண்ணம் வலுப்பெற்று விட்டது. அதனால்தான் அன்று வழியில் உங்களை பார்த்த போது பேசிவிட வேண்டும் போல் தோன்றியது"

இவள் ஏன் எதையெல்லாமோ பேசி நேரத்தை கடத்துகிறாள். அதை விட தன்னிடம் நெருக்கமாக சில காதல் மொழிகளையாவது பேசமாட்டாளா? அவன் மனம் ஏங்கியது.

"புஸ்பா... நீ தோட்டத்தின் ஏனைய பெண் பிள்ளைகள் மாதிரி இல்லை. ஆண்களை பார்க்கும் போதே கோபப் பார்வையால் அனல் வீசி சுட்டெரிக்கிறாய். அதனால் ஆரம்பத்தில் உன் கண்களை பார்க்கவே சற்று பயமாகத்தான் இருந்தது. இவ்வளவு அழகான கயல் விழிகளை வைத்துக்கொண்டு ஏன் முறைக்கிறாய் என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன்."

புஸ்பராணி அவன் பேசுவதை ரசித்தாள். அவன் கூறிய விடயத்தில் உண்மையில்லாமல் இல்லை. அவள் அழகால் கவரப்பட்ட சில விடலைகள் அவள் பின்னால் அலைய முற்பட்ட போது அவர்களை விரட்டவே அந்தப் பார்வையை அவள் கற்றுக்கொண்டாள். பின் அது அவளுக்கு இயல்பான பார்வையாகிப்போய் விட்டது. அவளது அகங்காரமும் சேர்ந்து அவளது பார்வையில் வெளிப்பட்டபோது அவள் காளியாகத்தான் தோன்றினாள்.

கோபால் அவ்விதம் கூறியதும் புஸ்பராணி அவனுக்கு அந்தப் பார்வையை ஒரு தரம் காட்டினாள். அவன் அதைப்பார்த்து அரண்டே போய் விட்டான். அவள் அவன் அரண்டதைப் பார்த்து கலகலவென்று சிரித்தாள். கோபாலும் அவளது சிரிப்பில் இணைந்து கொண்டான்.

"புஸ்பா, இனிமேல் உன்னைப் பார்க்காமல் ஒரு நாளும் எனக்குத் தூக்கம் வராது. இந்தக் கோயிலை விட்டால் நாம் சந்திப்பதற்கு இடம் எதுவும் கிடையாதா? இங்கு வந்து சந்திப்பதானால் பல நாட்கள் காத்திருக்க வேண்டி இருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. கோபால் நாம் தொடர்ந்தும் இங்கு வந்து சந்திக்க முடியாது. நாம் சுதந்திரமாக சந்திக்க ஏதாகிலும் ஒரு வழி தேடிக் கொள்ள வேண்டும்."

கோபால் சில நிமிடங்கள் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பின் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய்,

"ஒரு வழியிருக்கிறது புஸ்பா, நீ ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் செல்ல ஆறு மணி கோச்சியில் தான் போவாய். நாம் கோச்சியில் சந்திக்கலாம்."

"அது நல்ல யோசனையாய் படவில்லை கோபால். கோச்சியில் நிறைய பாடசாலை பிள்ளைகள் இருப்பார்கள். ஆசிரியர்களும் அதில்தான் பிரயாணம் செய்கிறார்கள். எனது அப்பாவுக்குத் தெரிந்தவர்களும் இருப்பார்கள். அதனால் நான் ஒரு யோசனை சொல்கிறேன். நாம் இங்கிருந்து ஸ்டேசன் செல்ல நீண்ட தூரம் நடந்து தானே செல்ல வேண்டும். நாம் இங்கே சந்தித்து பேசிக்கொண்டே போகலாம். என்னுடன் எனது நண்பி சீதா மட்டும்தான் வருவாள். அவள் யாரிடமும் சொல்லமாட்டாள்."

அது நல்ல யோசனை என கோபாலுக்கும் பட்டது. இல்லாவிட்டால் அவன் கோச்சியில் ஹட்டன் வரையில் சென்று மீண்டும் திரும்பி வந்து வேலைக்கு செல்ல வேண்டியிருக்கும்.

அதன் பின்னரும் அவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பால்கேனில் பாலா? தூளா?

புஸ்பராணி, தன் மனம் கோபாலை விரும்பத் தொடங்கி விட்டது என்ற உடனேயே அவன் தோட்டத்தொழிலாளியாக வேலை செய்வதை வெறுக்கத்தொடங்கி விட்டாள். அவனை அவ்வேலையை விடச் சொல்லி தன் தந்தைக்கு சமனான ஏதும் வருமானம் தரத்தக்க வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடத்தூண்ட வேண்டுமென அவள் கற்பனை செய்யத் தொடங்கினாள். அத்துடன் கோபாலின் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்களையும் மாற்ற வேண்டுமென்றும் யோசித்தாள். அப்படிச் செய்தால் மாத்திரமே எதிர்காலத்தில் தம் திருமணத்துக்கு தமது தாய், தந்தையரை சம்மதிக்கச் செய்ய முடியும் என்று கருதினாள்.

இவ்வாறு யோசித்த புஸ்பராணி, அந்த யோசனையை கோபாலிடம் தெரிவிக்கவும் செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த நாளும் இந்த தோட்டத்தில் கூலி வேலை செய்து கொண்டு கூலிக்காரனாகவே இருக்கப்போறீங்களா... கோபால், இல்லாட்டி...."

அவள் தூரத்தில் யாரோ வருவதைப் பார்த்து தான் சொல்ல வந்ததை சொல்லாமல் பாதியிலேயே நிறுத்தினாள்.

கோபால், அவள் கேட்ட கேள்வியால் சற்றே திகைத்துப் போனான். அவன் அந்தத் தோட்டத்தில் கூலி வேலை செய்வதைப் பற்றியல்லாமல் வேறெந்த வேலையைப் பற்றியும் சிந்தித்திருக்கவில்லை. இந்த வேலையை விட்டு விட்டு எதற்காக வேறு வேலைக்குப் போக வேண்டும் என்பது அவனுக்குப்புதிராக இருந்தது.

அவன் அவளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தூரத்தே அவளின் அம்மாவும் வேறு சிலரும் வருவதை சுட்டிக்காட்டி தொடர்ந்தும் அங்கிருப்பது நல்லதல்ல என்று கூறி கோபாலை போய்விடும்படியும் அடுத்த நாள் அதிகாலை பாடசாலைக்கு செல்லும் போது சந்திக்கலாம் என்றும் கூறி விடைபெற்றாள்.

கோபாலும் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் செண்பகம் அத்தையைக் கண்ணுற்றான். புஸ்பராணி, அவசர அவசரமாக கோயில் முற்றத்தை கூட்டிப்பெருக்க ஆரம்பித்தாள்.

அதனைத்தொடர்ந்து கோபாலும் நந்தசிரியும் பூனைபோல் கோயி லின் பின்புறம் மறைந்தனர். அவர்கள் கோயிலைச் சுற்றிக்கொண்டு தேயிலை மலைகளுக்குள் இறங்கி தோட்டத்தின் பிரதான நுழைவாயிலருகில் வந்து சேர்ந்தனர். அவர்கள் ஸ்டோருக்கருகில் வந்தபோது யாரோ பின்னால் சைக்கிளில் வருவதும் பின்னர் சைக்கிள் மணி கிணு கிணுக்கும் சத்தமும் கேட்டது. இருவரும் பாதையருகில் ஒதுங்கி வழிவிட்டு திரும்பிப்பார்த்தனர்.

சைக்கிளில் வந்தது வேறு யாருமில்லை புஸ்பாவின் தந்தை கதிரேசன்தான்.

அவரைக்கண்டதும் நந்தசிரி பாம்பைக்கண்டது போல் வெகுண்டான். பாய்ந்து நடு ரோட்டில் நின்று சைக்கிளை மறித்தான்.

"என்ன தம்பிகளா....." என்றார் கதிரேசன் மாமா, அவரது மனதுக்குள்ளும் திக்...திக் என்றது. அவர் அவ்விருவரையும் மாறி மாறிப்பார்த்தார். நந்தசிரி அவரருகே சென்று உயரமான அலுமினிய பால் கொள்கலனை தன் சுட்டு விரலை மடித்து மூன்று முறை தட்டினான். அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து "டிங் டிங்" என்று சத்தம் வந்தது. உள்ளே பால் நிறைந்திருந்தால் அப்படி சத்தம் வராது.

"என்ன மாமா, உள்ளே பால் இருக்கிற மாதிரி தெரியலையே? காலை யிலையும் மத்தியானமும் பால் மாலையானதும் தேயிலைத்தூள் பால் கேன்ல போகுது அப்படித்தானே" நந்தசிரி நக்கலாக கேட்டான்.

நந்தசிரியை அப்படியே விட்டால் அங்கே அவர்கள் இருவரும் அடிதடியில் இறங்கி விடுவார்கள் என்று கருதிய கோபால் நந்தசிரியை அப்பால் மெதுவாக நகர்த்திச்சென்றான். பின் கதிரேசன் பக்கம் திரும்பி அங்கிருந்து விரைவாக போய்விடும்படி கூறினான்.

இருந்தாலும் நந்தசிரி விடுவதாக இல்லை. அவன் கதிரேசனைப் பார்த்து உரத்த குரலில் கத்தினான்.

"அடேய், கதிரேசன் இன்று நீ தப்பித்து விட்டாய் என்று நினைக்காதே... நீ இந்த தோட்டத்தில் உயர்சாதிக்காரன் மாதிரி நடிக்கிறாய். இங்குள்ள ஏனைய தோட்டத்தொழிலாளர்கள் உனக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை நெனவுல வை. நீ ஒரு பேர் போன திருடன் என்பது எனக்குத் தெரி யும். இந்த இடத்திலேயே உன்னை உதைத்து திருடன் என்று நிரூபிக்க எனக்கு முடியும். அப்படிச் செய்தால் நீ பொலிஸ் ஜீப்லதான் போக வேண்டிவரும். நான் கோபாலுக்காக பொறுத்துக்கொள்கிறேன். இப்ப நீ போகலாம். ஆனா திரும்பவும் அகப்பட்டுக்கொள்ளாத. தெரியுதா?"

இப்படிக் கொதிப்பாகக் கூறிய நந்தசிரி, மீண்டும் கதிரேசனின் சைக்கிள் இருந்த திசையில் பாய்ந்தான். எனினும் அவனை இறுக்கிக் கட்டிப்பிடித்து நகராமல் பார்த்துக்கொண்டான் கோபால். நந்தசிரியை கொத்த வந்த நாகப்பாம்பைப்போல் பார்த்த கதிரேசன் விரைந்து தப்பினோம் பிழைத்தோம் என சைக்கிளை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டார்.

"இவனுகளை இனிமேலும் சும்மா விட்டு வைக்கக்கூடாது. காலை சுத்திக்கிட்டிருக்கிற பாம்பு எப்போதாவது கடிக்கத்தான் செய்யும். சரியான தருணம் பாத்து கழுத்தறுத்துறனும்" என்று மனதுக்குள் கரு விக் கொண்ட கதிரேசன் இன்னும் கொஞ்சம் தாமதித்திருந்தால் நந்தசிரி தன் களவை கையும் களவுமாக பிடித்திருப்பான் என்று நினைத்ததும் சற்று நடுக்கம் கொண்டார். நந்தசிரியை மிகச்சாதாரண ஆளென்று கருதிவிடக்கூடாது என்றும் கோபாலை வைத்தே அவனை மடக்கிவிட வேண்டும் என்றும் மனதுக்குள் திட்டமிட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சம்பவம் நடந்த அந்தத்தினத்தன்று கோபால் வீடு சென்ற பின் அன்றைய தினம் நடந்த எல்லா நிகழ்வுகளையும் நினைத்துப்பார்த்தான். அவை கோர்வையாக அவன் நினைவுக்கு வந்தன.

அவன் புஸ்பராணியை சந்தித்த இனிமையான ஞாபகங்களை அன்று நந்தசிரிக்கும் புஸ்பராணியின் தந்தையான கதிரேசனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சற்றே கரும்புள்ளியை ஏற்படுத்தியிருந்தாலும் அடுத்த நாள் காலை ரெயில்வே ஸ்டேசனுக்கு செல்லும் பாதையில் அவளை சந்திக்க அவன் பெரும் ஆவலாக இருந்தான்.

இதனால் விரைந்து தூங்கி விடியறதுக்கு முன்னமேயே எழுந்துவிட வேண்டும் என்று அவன் வலிந்து தூக்கத்தை வரவழைக்க முற்பட்ட போதும் அவனுக்கு தூக்கம் வருவதாகத் தெரியவில்லை. அவன் புரண்டு புரண்டு படுத்து முழிப்பு வந்தபோதெல்லாம் தலையைத் தூக்கி முகட்டு வலையில் விடியல் வெளிச்சம் தெரிகிறதா? என்று பார்த்தான். கோழிகூவும் சத்தமும் கேட்டபாடில்லை.

ஒரு தடவை அவன் படும் அவஸ்தையைப் பார்த்து அவனுக்கு உடம்புக்கு முடியலையோ என்று நினைத்து அவன் அம்மா என்னவென்று விசாரித்தாள். அவன் "ஒன்றும் இல்லையம்மா" என்று கூறி விட்டு துப்பட்டியை இழுத்து போர்த்திக் கொண்டு கவுண்டுபடுத்தான் அன்று அவனுக்கு அது நீண்ட இரவாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒரு பெண்ணின் மனதை வெல்ல

கோபால் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்திருக்கும்போது பல்வேறு நினைவுகள் வந்து அவன் உறக்கத்தை சீண்டிக்கொண்டே இருந்தன.

புஸ்பராணி அவன் தோட்டத் தொழிலாளியாக வேலை பார்ப்பதை விரும்பவில்லை என்பதும் அவன் மனதை உறுத்தியது. அப்படியானால் எப்படி அவள் மனதை வெற்றி கொள்வது என நினைத்து அவன் மனம் அவனைக் கசக்கிப்பிழிய ஆரம்பித்தது.

பலமுறை அவன் தந்தை நாவலப்பிட்டியில் உள்ள அவனது தனவந்த சித்தப்பாவிடம் சென்று ஏதும் வேலை பெற்று அதில் ஈடுபடுமாறு அவனை வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் என்னவோ தெரியவில்லை மதியாதார் வீட்டுக்குச் சென்று வலிய அவர்களிடம் கீழ்ப்படிந்து எவ்வாறு வேலை செய்வதென அவன் மனம் தயங்கிக்கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவ்விதம் தன் சித்தப்பாவின் வியாபார நிறுவனத்தில் சென்று சேர்ந்திருந்தால் சிலவேளை இன்று ஒரு பெரிய வியாபாரியாகக் கூட வந்திருக்கலாம் என்று அவன் யோசித்தான். என்ற போதும் அது இப்போது காலங்கடந்த ஞானோ தயமாகவே இருந்தது. ஆனால் தற்போதைய நிலையில் புஸ்பராணியை திருப்திப்படுத்த ஏதும் முயற்சியில் இறங்கித்தான் ஆகவேண்டுமென அவன் மனது தீர்மானித்தது.

அவன் இத்தகைய தனது எண்ணத்தை நந்தசிரியிடம் கூறினால் அவன் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கத்தவறமாட்டான் என்பதையும் உறுதியாக நம்பினான்.

மறுபுறத்தில் இன்னமும் தன் வாழ்வுடன் முறையாக சம்பந்தப்படாத ஒருத்தி தொடர்பில் எதற்கு இப்போது இவ்வாறு சிந்தித்து மனதைக் குழப்பிக்கொள்ள வேண்டும் என்றும் அவன் மனது யோசித்தது. ஒரு பாடசாலை செல்லும் சிறு பெண்பிள்ளை கூறினாள் என்பதற்காக செய்து கொண்டிருக்கும் வேலையை விடுவது என்பது பைத்தியக்காரத்தனம் என்றும் மனம் கூறியது. என்றாலும் அந்த தோட்டத்திலேயே யாரும் அடைய முடியாத ஒரு சுந்தர தேவதை போன்ற அப்பெண்ணை அடைவதென்றால் அதற்காக சில தியாகங்களையும் செய்யத்தான் வேண்டுமென்றும் மனதில் இன்னொரு புறம் கருத்துத்தோன்றியது.

காதலுக்காக உயிரை மாய்த்துக்கொண்டவர்களும் சாம்ராஜ்யத்தையே தூக்கி எறிந்த மாமன்னர்களும் தாஜ்மஹால் கட்டியவர்களைப் பற்றியும் அவன் கேள்விப்பட்டுள்ளான். அநேகமான திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள் தம் காதலியின் மனதை திருடிக்கொள்வதற்காக என்னவெல்லாம் சாகசம் செய்து குத்துக்கரணமடிக்கிறார்கள் என்பதையும் நினைத்துப்பார்த்தான். ஆதலால் தன் காதலில் வெற்றி கொள்வதற்காக அத்தகைய சவாலொன்றை எதிர்கொள்ளும் அவசியம் ஏற்பட்டால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதென்று தீர்மானித்தான்.

அன்றைய தினம் மாலை நந்தசிரியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர் கதிரேசன் மாமா அவன் வீட்டுக்கு வந்திருந்தார். வழக்கமாக செருக்காகவும் மமதையுடனும் நிமிர்ந்திருக்கும் அவரது தலை அன்று குனிந்து தொங்கிப்போய் கிடந்தது. எடுத்தெறிந்து பார்க்கும் அந்தக் கண்களில் அகங்காரம் மறைந்து அசடு வழிந்தது. அவனுடன் பேசும் போதும் போலிமரியாதை கொடுத்து வளைந்து நெளிந்து பேசினார். அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நடிப்பே அவர் குற்றம் செய்துள்ளமையைக் காட்டிக்கொடுத்தது. அவர் எப்படியாவது நந்தசிரியிடம் அந்த தூள் விசயத்தை பெரிதுபடுத்த வேண்டாமென எடுத்துச்சொல்லும்படி மன்றாடாத குறையாகக் கேட்டுக்கொண்டார்.

ஒரு போதும் இல்லாத வகையில் தமது தூரத்து உறவினர், அத்துடன் அந்தத் தோட்டத்திலேயே பணக்காரர் என்ற பாணியில் திமிர்பிடித்து திரிபவன் தம் விட்டுக்கு வந்து தன்மகனிடம் இவ்வாறு விநயமாக பேசுகிறான் என்பதைப்பார்த்து அன்னம்மா பெருமகிழ்ச்சி அடைந்தாள். அவள் உற்சாகமாக அங்கும் இங்கும் ஓடி அவரை உபசரித்தாள். தமது பழைய சொந்தத்தை புதுப்பிக்க முயற்சித்தாள். அவளது செயலைப் பார்க்க கோபாலுக்கு சிரிப்பாகவும் இருந்தது. இருந்தாலும் கோபால் அதனைவெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

கோபால் கதிரேசனிடம் தன்னால் ஆன உதவியைச் செய்வதாகச் சொன்னான். "நந்தசிரி விசயத்தில் கவலைப்பட வேண்டாம் மாமா அவன் நான் சொன்னால் எந்த உதவியையும் செய்வான். அத்தோடு அந்த தேயிலைத்தூள் யாரோ கொண்டுவந்து தருபவைதானே. உங்களுக்கும் ஸ்டோருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையே. அத னால் பயப்படத் தேவையில்லை" என்று கதிரேசனை ஆறுதல் படுத்தினான் கோபால்.

கதிரேசன் போன்ற திமிர் பிடித்த மனிதர்கள் தன் முன்னால் வந்து பவ்வியமாக கைகட்டி நிற்க நேர்ந்தது தொடர்பிலும் தன்னாலும் அவர்களுக்கு உதவ வேண்டிய நிலை ஏற்பட்டது தொடர்பிலும் அவனுக்குப் பெருமையாக இருந்தது.

இரவானது விடியும் நேரத்தை நெருங்கியிருந்தது. சேவல்கள் ஒரு சேர நீண்ட குரலெடுத்து விடியச்சாமத்தை அறிவித்தன. ஒவ்வொரு நாளும் அந்தச் சேவல்கள் கூவிக் கொண்டுதான் இருந்தன என்ற போதும் அன்று அது கோபாலுக்கு புதினமாய்த்தெரிந்தது. தன்னை விரைந்து துயில் எழு என்று அறிவிப்பது போல் அது அவனுக்குத் தோன்றியது. அதனை ஒரு சுபநிமிர்த்தமாகவும் அவன் கருதி சந்தோஷப்பட்டான்.

இவன் விரைந்து எழுந்திருந்து தான் படுத்திருந்த சாக்குப் படுக்கையையும் போர்த்தியிருந்த துப்பட்டியையும் மடித்து ஓரமாக வைத்தான். வீட்டுக்குள் சலசலப்பை அவதானித்த அரைத்தூக்கத்தில் இருந்த அன்னம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா தம்பி, சாமத்திலேயே எழுந்திருச்சிட்ட. இன்னும் விடியலையே பெரட்டு சங்கும் ஊதலையே" என்று கேட்டாள்.

அம்மாவின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பது கோபாலுக்குப் புரியவில்லை.

"தூக்கம் வரல அம்மா, என்னமோ தெரியல எல்லா கோழிகளும் ஒன்னா கூவுதுங்களேன்று பார்த்தேன்" அம்மா எதையோ கேட்க அவன் எதையோ பதிலாக சொன்னான்.

"ஆமா..ஆமா, எனக்கும் அது கேட்டுச்சி. பொதுவா மொத மொதலா ஒரு சாவக்கொழி தான் கூவும். அதன் பொறகுதான் மத்தக்கோழிங்க கூவுங்க. இன்னைக்கு என்னான்னா எல்லா சேந்து கூவுதுக. அப்படி எல்லா கோழிங்களும் மொத தடவையே ஒன்னா சேந்து கூவுனா அது நல்ல நேரந்தான் தம்பி. நேத்து பாத்தியா அந்த கதிரேசன் பிள்ளையாண்டி ஒரு நாளும் இல்லாம நம்ம லயத்த தேடி வந்து எவ்வளவு பணிவா பேசிட்டு போறான். அவனுக்கெல்லாம் நம்ம வம்சத்தப்பத்தி தெரியும். அவனோட அப்பா கொறஞ்ச சாதிக்காரன்தான். அவ னோட பொண்டாட்டி செண்பகம் வழில்லதான் அவன் நமக்கு ஒறவு. இன்னைக்கு பெரிய உயர்சாதி ஆள்னு ஆடிக்கிட்டிருக்கான்.."

இதைக்கேட்டு கோபால் சில விநாடிகள் யோசனையில் ஆழந்தான். பின் ஏதோ நினைவுக்கு வந்தவன் போல் "அம்மா நான் நந்தசிரியை சங்கு ஊதுறதுக்குள்ள கொஞ்சம் பார்க்கனும். நீ எனக்கு ரொட்டியையும் தேத்தண்ணியையும் மலைக்கு அனுப்பி உட்ரு" என்று அவசரமாக முகங்கழுவிக் கொண்டு புறப்பட்டான்.

அவன் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் நல்ல புதிய உடைகளை உடுத்திக்கொண்டு போவதைப்பார்த்து அன்னம்மா ஆச்சர்யமடைந்தாள் என்ற போதும் என்ன ஏது என்று அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவன் அவனது சிங்கள நண்பர்களுடன் சேர்ந்து ஏதோ காரியத்தில் ஈடுபட்டுள்ளான் என்று நினைத்தாள். அவள் தன் புத்திரன் நண்பர்களுடன் சேர்ந்து எந்த கெட்ட வேலைக்கும் போகமாட்டான் என திடமான நம்பிக்கை கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54



# பரவசப்பொழுதுகள்...

சூரியன் உதித்து தன் முதற்காலடியின் பிரம்ம முகூர்த்தத்தைக் கடந்து கொண்டிருந்தான். கிழக்கு வானின் மலை முகடுகளுக்கு மேல் மேகங்கள் அற்ற நிர்மல வானம் சிவப்பும் மஞ்சளுமாக அழகு காட்டி அந்த இனிய காலைப்பொழுதை மேலும் ரம்மியமாக்கிக்கொண்டிருந்தது.

கோபால் புஸ்பராணியை எதிர்பார்த்து ஹொலிருட் பிரதேச ரெயில் கேட்டுக்கருகில் வந்து சில கணங்களே கழிந்திருந்தன. எனினும் ஏன் அவள் இவ்வளவு தாமதிக்கிறாள் என்று மனம் தவித்தது.

அவன் கண்முன் நீண்டு செல்லும் ரயில் பாதை வெற்றாக வெறிச்சோடிக்கிடந்தமை அவன் தவிப்பை மேலும் அதிகரித்தது. மனம் புஸ்பராணியுடன் என்ன பேசுவது என்று நினைத்து படபடத்துக்கொண்டது.

அப்போதுதான் தூரத்தில் இரண்டு வெள்ளைப்புள்ளிகள் தோன்றி ஊர்ந்து அவன் இருக்கும் திசை நோக்கி நகர்ந்து வருவது அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அந்த இரு புள்ளிகளும் வர வரப்பெரிதாகி இரு பெண் பிள்ளைகளாக உருமாறின. புஸ்பராணியுடன் தோட்டத்துத் தொழிற்சாலையில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக பணி புரியும் ஜோர்ஜ்ஜின் புதல்வியான சீத்தாவும் வந்து கொண்டிருந்தாள். அவர்கள் ஒத்தக் கடையருகில் இருந்த சந்திக்கருகில் சந்தித்துக்கொண்டபோது புஸ்பா சீத்தாவை முன்செல்ல விட்டு கோபாலுடன் பேசிக்கொண்டு போவதற்கு தோதாக சற்றே பின்தங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்புறம் ஏதாவது பேசு புஸ்பா.... நேத்து ஓங்க அப்பா வந்தாரு"

அவன் வசனத்தை முடிப்பதற்குள்ளேயே அவள் பதறிப் போய் அவன் முகத்தைப் பார்த்தாள். நேற்று புஸ்பாவின் தந்தை தன்னை வீட்டில் வந்து சந்தித்ததை கோபால் புஸ்பராணியிடம் கூறிவிட நினைத்த போதும் அவளது பதற்றத்தை அறிந்து அவன் பேச்சை மாற்றிக்கொண்டான்.

தன் தந்தை கோபாலை சந்தித்து அவனை பயமுறுத்தியிருக்கக்கூடும் என்று அவள் பயந்து போனாள்.

"என்ன நடந்தது கோபால், அப்பா உங்களிடம் என்ன சொன்னார்?"

"பயப்படுறதுக்கு ஒன்னுமில்ல புஸ்பா. நேத்து உன்ன கோயில்ல சந்திச்சுட்டு நானும் நந்தேயும் ஸ்டோர் பக்கம் போனோம் வழியில்தான் ஓங்கப்பா வந்தாரு.

அவரு என்னைப்பாத்து சிரிச்சிட்டு போய்ட்டாரு... அவ்வளவுதான்" கோபால் என்ன பேசுவது என்று தெரியாமல் எதனையோ பேசிக் கொண்டிருந்தான்.

கோபால் ரயில் பாதையில் போடப்பட்டிருந்த சிலிப்பர் கட்டைகளில் கால் பதித்து மிக மெதுவாக புஸ்பராணியுடன் உரசியவாறே நடந்து சென்றான்.

அவளுங்கூட அவன் அவ்வாறு உரசிக்கொண்டு நடப்பதை ஆட் சேபிக்கவில்லை. நேற்று கோவிலில் வைத்து சந்தித்த புஸ்பராணியிலும் பார்க்க இப்போது வெள்ளையிலான பாடசாலை சீருடையில் இருக்கும் புஸ்பராணி வித்தியாசமானவளாகத் தெரிந்தாள்.

அவளது உண்மையான பேரழகை இந்த வெள்ளைத்துணி மறைத்துக்கொண்டு விட்டது என கோபால் நினைத்தான்.

"இன்னைக்கு எனக்கு பரீட்சை ஆரம்பிக்கிறது கோபால். நேத்து முழு ராத்திரியும் நான் தூங்கவே இல்லை. கண்ணெல்லாம் எரிச்சலா இருக்கு..."

கோபால் சற்றே தாமதித்து அவள் கண்களை உற்று நோக்கினான். அவள் வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

"நீ.....ராத்திரியெல்லாம் கண்விழித்திருந்தது பரீட்சைக்கு படிக்கவா? இல்லை என்னை நினைத்தா...?" கோபால் சட்டென வலது கரத்தால் அவளது இடது கரத்தை பற்றியவாறே கொஞ்சலாகப் பேசினான்.

அவளும் வெட்கத்தால் நாணிக்கோணியவாறே "ராதை மனதுக்குள் கண்ணன் வந்து விட்டபின் படிப்பாவது புத்தகமாவது..... ஏதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்துக்கு வருமா..?" அவள் கவிதை வரியொன்றை அவனது காதுக்குள் கிசுகிசுக்குமாப் போல் கன்னத்தை ஒட்டிக்கொண்டு கூறினாள்.

அந்தக்கிசுகிசுப்பு அவனை நிலத்தில் இருந்து உயரத்தூக்கி வானத்தில் அந்தரத்தில் பறக்க வைத்தது.

அவன் காதுக்குள் எப்போதோ அவன் படித்த அந்த கவிதை வரிகள் கணீரெனக்கேட்டன.

"அந்த ஒரு கணப்பொழுதில்
அத்தனையும் மறந்தான்.
மாலை மதிவந்ததென
அழகு முகங்கண்டான்.
சொற்களிலே சொல்லவொண்ணா
சித்திரம் போல் நின்றான்.
அலை அலையாய் காத்திருக்கும்
எதிர்ப்பினையும் மறந்தான்.
சொல்லிட ஓர் எல்லையில்லா
முத்திரைகள் தந்தான்.
பாவையவள் தந்துவிட்ட
போதையதிலே மூழ்கியதால்
பறப்பது போல் உணர்ந்து அவன்
பகற்கனவு கண்டான்.
இருவேறு உள்ளங்கள்
இணைந்ததனால் இன்ப
பெருக்கினையே கண்ட அவ்
இளமக்கள் இருவர்
இவ்வுலகில் வேறெவரும்
இலரே போல் இருந்தார்".

கோபாலின் மனமெங்கும் புஸ்பராணியின் இன்ப நினைவுகள் பொங்கிப் பிரவகித்தன. அவர்கள் இருவரும் எங்கிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு மறந்து போய்விட்டது. அவர்கள் இந்த நேரத்தில் ரயில் பாதை வழியாக நீண்ட தூரத் தினை கடந்திருந்தார்கள்.

புஸ்பராணிதான் முதலில் சுயநினைவு வரப்பெற்றவளாய் அவன் கரத்தில் இருந்து தன் கரத்தை விடுவித்துக்கொண்டாள். ஒரு பெண்ணுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய பாதுகாப்புணர்வும் அச்சம், மடம், நாணம் என்பன மேலிட்டவளாய் தன்னை சுதாகரித்துக்கொண்டாள்.

"கோபால் ரயில் பாலம் வரை வந்தாயிற்று. நாம் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லையே....." புஸ்பராணி ஆதங்கத்துடன் தன் மனதுக்கினியவனை பார்த்துக் கேட்டாள். அவள் மேலும் தன் நடையைத் தாமதப்படுத்தினாள்.

"காதலர்கள் பேசிக்கொள்வதற்கு மௌன மொழியை விட சிறந்த மொழி என்ன இருக்கு புஸ்பா? நாம ரெண்டு பேரும் இப்படி நெருக்கமாக நடந்து வந்தது இன்னும் பல மணி நேரம் நீடிக்காதா அப்படீன்னு ஏக்கமா இருக்கு"

அவர்கள் இருவரும் பிரிந்து வேறு வேறு பாதையில் செல்ல வேண்டிய நேரம் வந்தது. அவள் என்ன செய்வதென்று தெரியாமல் அவன் கையைப் பிடித்து புறப்பக்கத்தில் இறுக்கிக் கிள்ளினாள். அவனுக்கு அது வலியைத் தரவில்லை. மாறாக அவள் வருடுவது போலவே இருந்தது.

அவன் அவளை அடுத்த நாளும் அதேவிதத்தில் சந்திப்பதாகக் கூறினான். அவள் தஞ்சாவூர் பொம்மைபோல் ஆமோதித்து தலையாட்டினாள்.

அவள் திடீரென எதிர்பாராத விதத்தில் தன் புத்தகத்துடன் சேர்த்து மார்பில் அவனை அணைத்துக்கொண்டிருந்த சாப்பாட்டு பார்சலை எடுத்து அவன் கையில் திணித்தாள். "என் மனதை வென்ற ராசாவுக்கு இப்போது இதைத்தான் என்னால் கொடுக்க முடியும்" என்று கூறி அவனிடம் இருந்து விடை பெற்றாள்.

"அப்படீன்னா நீ என்னத்த சாப்பிடுவ"

"நான் கன்டீனில ஏதாவது வாங்கிக்கிறேன்"

அவன் தான் செல்ல வேண்டிய பாதை வந்ததும் தாமதித்தான். அவள் தொடர்ந்து நடந்தாள்.

அவள் மறையும் வரை திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள். அவளது முகம் மறைந்த பின் ஒரு பெருமூச்சு விட்டவனாக தான் போக வேண்டிய பாதை யில் இறங்கி நடந்தான் கோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னை உரசினால் எனக்குள் நெருப்புப்பத்துது

புல்லுமலையில் தேத்தண்ணி குடிப்பதற்காக கோபாலும் நந்தசிரியும் மரநிழலில் அமர்ந்த போது கோபால் புஸ்பராணி கொடுத்த சாப்பாட்டுப்பார்சலை நந்தசிரியிடம் கொடுத்தான். அதில் காணப்பட்ட தோசை வடை என்பவற்றைப் பார்த்த நந்தசிரி ஆச்சரியமடைந்தான்.

“என்ன மச்சான் கோபால், காலையிலேயே சைவக் கடைக்கு போய்ட்டு வந்தியா? ஆனா சைவக் கடை தோசை மாதிரி தெரியலையே....” என்று கோபாலிடம் சத்தமாகக் கேட்டான்.

“சத்தம் போடாத நந்தே...அவிங்களுக்கு கேட்டுச்சின்னா ஒன்னும் மிச்சம் இருக்காது.... விவரத்தை பொறகு சொல்றேன்” என்றான் கோபால் ஏனைய நண்பர்களைக்காட்டி.

நந்தசிரி சந்தேகத்துடன் கோபாலைப் பார்த்தான். பின் பாதித் தோசையையும் வடையையும் பிய்த்துக்கொண்டு சம்பலுடன் சேர்த்து சாப்பிட ஆரம்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வடன்னா ஆறுமுகம் கடையில் உள்ளது போல இருக்கு. ஆனா தோச அப்படி இல்லையே. லயத்துல யாராவது காலையில தோச சுட்டுக்கொடுக்குறாங்களா? கடைங்களுக்கு கொடுக்கிறதுக்காக சில பேரு அப்படி செய்றாங்க இல்லியா....? எனக்கு ஒரு செய்தி கெடச்சிச்சி.... நேத்து இரவு ஒம் மாமனார் ஓ வீட்டுக்கு வந்தார்னு.....அப்படின்னா இந்த சூப்பர் வடைக்குக் காரணம் அதுதான்....."

கோபால் வாய்விட்டுச்சிரித்தான்.

"நந்தே...எப்புடுறா ஒனக்கு இந்த விசயமெல்லாம் தெரிய வருது. நேத்து ராத்திரி கதிரேசன் மாமா வீட்டுக்கு வந்திருந்தார் தான். ஆனா அவரு ஒரு மண்ணாங்கட்டியும் கொண்டு வரல. அதப்பத்தியெல்லாம் நான் பொறகு சொல்றேன்" என்று கூறிய கோபால் மிச்சமிருந்த வடை, தோசை என்பவற்றை ஆரியவங்ச சுப்பிரமணி ஆகியோருக்கு பகிர்ந்து கொடுத்தான். அப்போது அந்த தோசை வடை என்பன எவ்வாறு கிடைத்தன என்பதைப்பற்றி அவன் ஒன்றும் சொல்லா விட்டாலும் பின்னர் தான் புஸ்பராணியை காலையில் சந்தித்தது பற்றி நந்தசிரியிடம் சொன்னான். அத்துடன் புஸ்பராணியின் அப்பா, வீட்டுக்கு வந்ததன் நோக்கத்தையும் கூறி எந்த காரணத்தைக் கொண்டும் பால்கேனில் தேயிலை தூள் கொண்டு போன விவகாரத்தை வெளிப்படுத்தக்கூடாதென நந்தசிரியிடம் சத்தியமும் வாங்கிக்கொண்டான்.

"அந்த மனுசன புடிச்சிக்கொடுத்து பிரச்சனை உண்டாக்க வேனும்னு எனக்கு எந்தத்தேவையும் இல்ல கோபால். அவன் நல்லவன் மாதிரி காட்டுற பாசாங்கு, சாதித்திமிரு, அகங்காரம், அதுக்கும்மேல அவன் பணக்காரன்னு காட்டுற மெத்தனம் இவைதான் எனக்கு பிடிக்கல. இதத்தான் அடக்கி வைக்கனும்னு தோணுது. நீ ஒன்னுக்கும் பயப்படாத கோபால். அவன் பொண்ண ஒழுங்கா ஒனக்கு கட்டி வைக்கலாட்டி அவள தூக்கிற வேண்டியதுதான்."

"நீ அவள காலையில ஸ்டேசன் பக்கம் போயிசந்திக்கும் போது கவனமா இரு. எவனாவது பாத்துப்புட்டு போய் சொல்லிரப்போறான். அப்புறம் விசயம் பிழைச்சிரும். எனக்குத்தெரியும். அவனுக்கு யார் தேயிலைத்தூள் கொண்டு போய் கொடுக்கிறதுன்னு. அது எங்கிருந்து போவுது, எந்த நேரத்தில் போவுது, எல்லா விவரமும் எனக்குத்தெரியும். என்னபத்தி ஒனக்குத் தெரியுந்தானே. ஆனா நீ என்ன செஞ்சாலும் எனக்கிட்ட சொல்லிப்புட்டு செய். ஒனக்கு என்ன ஒதவினாலும் நான் செய்வேன்." அவ்விதம் கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி தேத்தண்ணி போத்தலின் மூடியைத்திறந்து மடமடன்னு நாலஞ்சு மொடக்கு குடிச்சான். அவன் அவ்வாறு குடிப்பதைப்பார்த்து

"மடையா, வாய் சுட்றப்போவுது. கொஞ்சம் ஆறுன்ன பொறகு குடி..." சுகத்தபால சத்தம் போட்டான்.

கடகடவென சிரித்த நந்தசிரி "போடா, சாராயத்துக்கே எரிஞ்சு போகாத இந்த வாய் தேத்தண்ணி சாயத்துக்கு சுட்ருமா. கொண்டா அந்த பீடிய..." என்று கூறி சுகத்தபாலவின் கையிலிருந்த பீடியை பிடுங்கி தன் உதட்டில் வைத்து பலமாக உறிஞ்சினான்.

அவர்கள் அத்துடன் பேச்சை நிறுத்திவிட்டு அன்றைய வேலையைத்தொடர்ந்தார்கள்.

*****

தொடர்ந்து வந்த இரண்டு வார காலமாக கோபாலும் புஸ்பராணியும் அதிகாலையில்ஸ்டேசன்அருகில்ரயில்பாதையில்சந்தித்துக்கொண்டார்கள். அவர்கள் அந்த அதிகாலையில் யார் கண்ணிலும் படாமல் சுதந்திரமாக காதல் பாஷை பேசிக்கொண்டார்கள்.

அந்த டிசம்பர் மாதத்து காலைக்குளிரில் அந்த நேரத்தில் எழுந்து வெளியில் தலைகாட்டுவதற்கு எவருக்கும் விருப்பமில்லாமல் இருந்தது. குளிர், பனி காற்று என மூன்றும் சேர்ந்து உடலுக்குள் ஊசிகள் பாய்வது போல் கை கால் முகத்தை பதம் பார்த்தன. ஆனால் இதுவொன்றும் அந்தக் காதலர் இருவரையும் பாதித்ததாகத் தெரியவில்லை.

"என்ன கோபால், நான் ஸ்வெட்டர் போட்டும் இவ்வளவு குளிருது. நீங்க எப்படி கமுச மட்டும் போட்டுக்கிட்டு இருக்கீங்க."

புஸ்பராணி கோபாலின் கையை பிடித்து தன் இடுப்பை சுற்றி வைத்து அழுத்திப் பிடித்தவாறே கேட்டாள். அவர்கள் இருவரும் மெது மெதுவாக சிலிப்பர் கட்டையில் காலை மாறி மாறி வைத்து நகர்ந்தார்கள்.

சாதாரண பாதையில் போல் ரயில் பாதையில் இரண்டு பேர் ஒரு சேர நடந்து செல்வது இலேசான காரியமல்ல. எடுத்து வைக்கும் அடி கொஞ்சம் பிழைத்தாலும் தண்டவாளத்தில் விழுந்து மூஞ்சி பெயர்ந்து போகும். கோபாலைப் பொறுத்தவரையில் ரயில் பாதையில் வேகமாக ஓடிச்செல்வது கூட ஒரு பெரிய காரியமல்ல. ஆனால் இப்படி ஒரு பெண் பிள்ளையுடன் மிக மெதுவாக ஒரு சேர சீராக அடியெடுத்து வைத்துச்செல்வது லேசான காரியமாகத்தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் புஸ்பராணியைப் போல் ஒரு அழகிய பெண்ணுடன் உரசிக்கொண்டு அவளது இடுப்பில் விரலை வைத்து அழுத்தியவாறே நடந்து செல்வதானது எந்த ஆண் மகனுக்குத்தான் கசக்கும்.

"என்ன கேட்டாய் புஸ்பா கூதலடிக்குதான்னா? நல்ல கேள்வி உன்னுடன் இப்படி உரசிக்கொண்டிருக்கும் போது எனக்குன்னா நெருப்புப் பத்திக்கொள்ளும் போல இருக்கு."

கோபால் சிரித்துக்கொண்டே அவள் இடுப்பை இன்னும் அழுக்கிப் பிடித்தான். அவள் "ஊய் வலிக்குது" என சிணுங்கினாள்.

"வலிக்குதா இரு தடவிவிடுகிறேன்" என்று அவள் இடுப்பைத் தடவினான்.

"இப்ப வலி போயிருச்சா இன்னுங் கொஞ்சம் தடவட்டுமா?"

"ஐயோ போதும் தடவற லட்சணம்" அவள் மேலும் வெட்கப்பட்டு கிணுகிணுவென்று மேலும் சிணுங்கினாள்.

உண்மையில் அவர்கள் மெதுவாக ஒரு காலை மாற்றி மற்றக்காலை வைத்து அணைத்தவாறே நடந்து சென்றது நடனமாடிக்கொண்டு செல்வது போல் இருந்தது.

என்னதான் அவர்கள் காதல் மயக்கத்தில் கள்ளுண்டவர்கள் போல் இருந்தாலும் அவர்களது கால்கள் உரிய சிலிப்பர் கட்டையில் அடுத்த காலை கவனமுடன் எடுத்து வைக்கத்தவறவில்லை. இப்படியே அவர்கள் பாலத்தின் மறுமுனையை கடந்திருந்தார்கள்.

அவர்கள் பிரிய வேண்டிய இடம் வந்ததும் அவர்கள் சற்றே தாமதித்தார்கள். "இனி எப்போது நாம் சந்திப்பது" என்று திடீரென கோபால் அவளிடம் வினா வினான்.

அங்கே சில கணங்கள் மௌனம் நிலவியது. புஸ்பா அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

அவள் கண்களில் மகிழ்ச்சியைக் காணவில்லை. அவற்றில் குளமாக நீர் நிறைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காதலை நோய் என்று சொன்னது உண்மையா?

புஸ்பராணியின் கண்களில் கண்ணீரைக்கண்ட கோபால் அதிர்ந்து போய் விட்டான். அவனுக்கு என்ன பேசுவதென்று உடனே தோன்றவில்லை. புஸ்பராணிதான் மீண்டும் பேசினாள்.

"கோபால், என்னால் இனிமேல் உங்களை விட்டு பிரிந்து இருக்க முடியாது. நீங்கள் என் வாழ்க்கையின் ஒரு அங்கமாகி விட்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் உங்களுடனே இருக்க வேண்டும் போல் தோன்றுகின்றது. நான் உங்கள் வீட்டுக்கு வந்து விடுகிறேன்" என்றாள் விசும்பியவாறே.

குளிருடன் கூடிய அந்தக்காலைப்பொழுது மிக அமைதியாக இருந்தது. மழைக்குணம் கொண்ட மேகங்கள் வானத்தை மறைத்து இருளை மிகைப்படுத்தின என்ற போதும் கிழக்கு வானின் மூலையில் சூரியன் தோன்றி விட்டான் என்பதற்கு அடையாளமாக சற்றே வெளிறிய தோற்றம் தெரிந்தது.

கோபால் புஸ்பராணியின் முகத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பின் நிதானித்து புஸ்பராணிக்குப் பதில் கூறினான்.

"புஸ்பா, நீ எங்கள் வீட்டுக்கு வந்தால் அது உடனேயே உலகம் பூராவுக்கும் தெரிந்துவிடும். நீ ஏனைய லயங்களுக்குக்கூட ஒரு நாளும் போனதில்லை. இப்போது எப்படி?" அவன் பாதியில் பேச்சை நிறுத்தினான்.

புஸ்பராணி தன் லேஞ்சியை எடுத்து கண்ணில் ஒற்றி கசிந்து கொண்டிருந்த கண்ணீரை துடைத்துவிட்டுக் கொண்டாள்.

"அப்படியானால் நான் வெள்ளிக்கிழமை கோயிலுக்கு வாரேன். பேச முடியாட்டியும் பார்த்துக் கொண்டாலேயே ஆறுதலாக இருக்கும்."

அவர்கள் இப்போது பாலத்தின் மறுமுனையை அடைந்திருந்தார்கள். பாலத்தின் கீழ் சலசலத்து ஓடும் ஆற்றின் நீர் இருவரது அமைதியையும் கலைத்தது.

சீத்தா சற்றே முன்னாள் சென்று புஸ்பராணி வரும்வரையில் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அப்படீன்னா நா வாறேன்... சீத்தா காத்துக்கிட்டு இருக்கா"

புஸ்பராணி கோபாலைப் பிரிய மிகப்பிரயத்தனப்பட்டாள். ஆனால் அவள் பற்றியிருந்த கோபாலின் கரத்தை அவளால் விடுவிக்க முடியாமல் தவித்தாள். அவனுக்கும் அதே உணர்வுதான் ஏற்பட்டது. அவன் திடீரென அவள் கரத்தை தன் உதட்டருகே கொண்டு வந்து தன் உதட்டில் பதித்தான்.

இந்த திடீர் செயலால் துணுக்குற்ற புஸ்பராணி தன் கரத்தை அவனிடம் இருந்து பட்டென விடுவித்துக்கொண்டாள். பின் ஏதோ பாரதூரமான குற்றமிழைத்து விட்டவனைப்போல் அவனை பார்த்தாள். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச்செய்தமை அவளை பிரிய முடியாமல் தவித்த தருணத்தில் பிரியா விடை கொடுப்பதற்காக செய்த செயல் மட்டுமே என்பதையும் அதில் காமம் இருக்கக்காரணமில்லை என்பதையும் அவள் மனது ஏற்க மறுத்தது. அவள் தன் பின்னால் வரும் ஏனைய ஆண் பிள்ளைகளை வெருட்டக்காட்டும் அந்த ருத்திரப் பார்வையை அவன் மீதும் செலுத்தினாள். பின் ஒன்றுமே பேசாமல் விறுட்டென சென்று விட்டாள்.

வழக்கமாக புஸ்பராணி கோபாலை பிரிந்து செல்லும்போது அவள் மறையும் வரை பலமுறை திரும்பித்திரும்பி பார்த்து அவள் புன்னகையை அவனுக்குப் பரிசாக விட்டுச் செல்வாள். அவனுக்கும் அந்த புன்னகை முகம் அவளை அடுத்த முறை சந்திக்கும் வரை அவ்வப்போது ஞாபகத்தில் வந்து அவள் காதலை புதுப்பித்துக்கொண்டே இருக்கும். ஆனால் அன்று அவள் வெடுக்கென்று வெறுப்புடன் தன் முகத்தை திருப்பிக்கொண்டு சென்றது அவன் மனதுக்குள் என்னவோ செய்தது. அவன் சோகத்துடன் திரும்பிச் சென்றான்.

சில கணங்களுக்கு முன் அவனில்லாமல் தன்னால் ஒரு நிமிடமும் வாழ முடியாது என்று கூறியவள் அடுத்த கணம் இப்படி ஒரு வெறுப்பை உமிழ்வாள் என்பதை அவன் மனம் ஏற்க மறுத்தது.

இது தொடர்பில் பின்னர் நந்தசிரியை சந்தித்த போது கோபால் பிரஸ்தாபித்தான்.

"இதுக்கெல்லாம் வருத்தப்படாத கோபால், இந்த பொம்பளைங்களே அப்படித்தான். தன் மீது ஒரு ஆண் அபாரக் காதல் வைத்திருக்கிறான் என்று நன்கு உறுதி செய்து கொண்டதும் அந்த காதல் மனதை கசக்கிப்பிழிந்து வருத்திப்பார்ப்பதில் அவர்களுக்கு அப்படியொரு மகிழ்ச்சி... அது பெண்களுக்கே உரிய சாகஸகுணம். இதனை நாம தான் புரிஞ்சிக்கனும். அதனை பொருட்படுத்தாமல் விடுவதில்தான் நமது வெற்றி தங்கியுள்ளது. கவலப்படாத கோபால் காதலில் விழுந்துவிட்ட ஒரு பெண் அவ்வளவு இலகுவில் அதில் இருந்து விடுபட முடியாது" என்று ஆறுதல்படுத்தினான்.

நந்தசிரி அவ்வாறு தெரிவித்த கருத்துக்கள் கோபாலுக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. நந்தசிரி பெண்களின் உணர்வுகள் தொடர்பில் எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறான் என்று ஆச்சரியமாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பராணியுடன் தனிமையில் ரயில் தண்டவாளத்தில் உரசிக் கொண்டு நடந்து செல்லும்போது அவளுடன் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று பெரும் கனவுகளுடன் அவன் சென்றாலும் ஒன்றுமே தெரியாத பூனைபோல்தான் அவன் இதுவரை நடந்து கொண்டிருக்கிறான். அவளுடன் அவ்வளவு நெருக்கமாக உரசிக்கொண்டு சென்றபோது அவளை அணைத்து இதழுடன் இதழ்பதித்து முத்தமிட்டுவிட வேண்டும் என்ற பேராசை எத்தனையோ முறை அவனை உந்தியிருந்த போதும் அவன் அப்படிச் செய்ய முனைந்ததில்லை. சுற்றுப்புறச் சூழலில் யாரும் இல்லாத நிலையில் மறைவான வங்கிகளும் மூலை முடுக்குகளும் நிறைந்த அந்த ரயில் பாதையில் அத்தகைய செயல்களை செய்வதற்கான வாய்ப்புக்கள் நிறைய இருந்த போதும் அந்த இருவரும் அத்தகைய செயலை மனதால்கூட நினைத்துப் பார்த்தது இல்லை.

கோபாலின் அன்றைய திடீரென்ற செயல் புஸ்பாவுக்கு திடீர் அதிர்ச்சியை உண்டு பண்ணி அவள் மனதைக் குழப்பி விட்டதன்றி அவள் கோபாலிடம் சடுதியாக முகத்தை முறித்துக்கொண்டு வந்து விட்டது தொடர்பில் அவளது மனம் அவளுடன் முரண்பட்டது. அவள் மனம் நடந்து விட்ட செயலுக்காக பச்சாதாபப்பட்டு குமுறி அழத்தொடங்கியது. எனினும் அதனை அவளால் வெளிக்காட்டிக்கொள்ள முடியவில்லை. அவள் உள்ளுக்குள் குமுறியதால் உடலில் நடுக்கமேற்பட்டது.

உண்மையில் அவளது மனம் அவனது செயலை மறுதலிக்கவில்லை. அப்படிச் செய்யமாட்டானா என அவள் உள் மனம் விரும்பியமை அவளுக்குத் தெரியும்.

முன்பும் கூட ஒருமுறை அவனது வலது கரத்தை இழுத்து அவள் தன் இடுப்பைச்சுற்றி வைத்துக்கொண்டதை நினைத்துப் பார்த்தாள்.

தனக்கொரு நியதி கோபாலுக்கு ஒரு நியதி இருக்க முடியாதென அவள் மனம் தத்தளித்தது. அச்செயல் அவள் விரும்பி எதிர்பார்த்ததுதான். எனினும் அதனை அவன் எதிர்பார்க்காத நேரத்தில் செய்து விட்டமைதான் அவள் அதிர்ச்சிக்குக் காரணம் என நினைத்து தன் மனதையே நொந்து கொண்டாள்.

புஸ்பாவின் இந்த தவிப்பும் குழப்பமும் தடுமாற்றமும் அவள் நடவடிக்கைகளில் தெளிவாகவே வெளிப்பட்டது கோபாலுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பாவுக்கும் இடையில் ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருக்கின்றது என்பதை சீத்தாவும் தெரிந்துகொண்டாள். அவள் புஸ்பாவின் கையைப்பிடித்துக்கொண்டு வேகமாக ரயில்வே ஸ்டேசனை நோக்கி விரைந்தாள். அப்போதுதான் வந்து ஸ்டேசனில் நின்ற ரயிலில் கூட்டத்துடன் கூட்டமாக நுழைந்து கிடைத்த இருக்கைகளில் அமர்ந்தார்கள். மற்ற நாட்களில் புஸ்பராணி வலது புற ஜன்னலோர ஆசனமொன்றை தேடிச்சென்று அமர்ந்து தூரத்தில் நானு ஓயா நகர் நோக்கி நீண்டு செல்லும் ரயில் பாதையை எட்டிப் பார்த்து தூரத்தில் ரயில் நகரும் வரை பார்த்துக்கொண்டிருக்கும் கோபா லைப் பார்த்து கையசைக்கும் புஸ்பா அன்று அவ்விதம் செய்யாமல் இடதுபுறம் ஆசனத்தில் போய் அமர்ந்து வெளியே வெற்று வெளியை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன புஸ்பா ஒரு மாதிரியாகிட்ட ரெண்டு பேரும் நல்லாத்தானே சந்தோசமா பேசிக்கிட்டு வந்தீங்க.

கோபாலுடன் சண்டை போட்டியா? இன்னைக்கு சாப்பாட்டு பார்சலையும் கோபால் கிட்ட கொடுக்காம மறந்துட்டு வந்துட்ட. ஒனக்கு இன்னக்கி என்ன புடிச்சிருக்கு?"

சீத்தாவின் கடைசிக் கேள்வி புஸ்பராணியை இவ்வுலகுக்கு மீண்டும் கூட்டிக்கொண்டு வந்தது. அவள் கோபாலுக்குக் கொடுக்கவென ஆசை ஆசை யாக கட்டி எடுத்துக்கொண்டு வந்த சாப்பாட்டுப் பார்சலையும் கோபத்தில் கொடுக்க மறந்திருந்தாள். அந்த கணத்தில் அவள் கோபம், பதற்றம், படபடப்பு எல்லாம் அவளை விட்டுப்போய்விட்டது. அவள் கோபால் மீது அனுதாபப்பட்டாள். அப்படியென்ன அவன் தவறு செய்து விட்டான். யாரோ ஒரு பெண்ணின் உதட்டிலா முத்தமிட்டான். தான் கலியாணம் கட்டிக்கப்போற, தான் உயிருக்கு உயிராக காதலிக்கிற பெண்ணின் கையில் தானே அதுவும் பட்டும் படாதபடி தன் உதட்டை உரசினான். இந்த நினைப்பு அவள் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்தது.

புஸ்பாவுக்குள் என்ன நடக்கின்றதென சீத்தாவுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த சில நிமிடங்களுக்குள் அவள் எத்தனை விதமான உணர்வுகளை வெளிப்படுத்திவிட்டாள். காதல் என்று சொல்வது ஒரு நோய் என்று கூறியது உண்மைதானோ என்று அவளுக்குப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தா பாரு புஸ்பா, இந்த காதலெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது. ஒங்க அப்பா இதுக்கு ஒரு போதும் ஒத்துக்கமாட்டார். பாரேன் ஒரு கெழட்டு மொதலாளியத்தான் ஒனக்கு கட்டி வைப்பார்" என்றாள் சீத்தா ஏளனமாக. புஸ்பாவுக்கு அவள் பேச்சைக் கேட்டு முறைப்பதைத்தவிர வேறு ஒன்றும் செய்யத்தோன்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



57

# பெரிய டீ மேக்கரின் சரக்கு...

தோட்டங்கள் அரச உடமையாக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களின் வாழ்வில் சுபீட்சம் பிறக்கும் என பலரும் நம்பினர். ஆனால் அது அப்படி நடக்கவில்லை. சுகாதாரம், கல்வி மற்றும் சமூகத்தின் பல்வேறு நிலைமைகளும் இருந்ததைவிட மேலும் பின்னோக்கிச்சென்றன. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்படவிருந்த தோட்டத்தொழிலாளர்களில் பணிய லயத்தில் வசித்த கீழ் சாதியினர் என அழைக்கப்பட்ட சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளிகள் அதிகம்பேர் இருந்தனர்.

அவர்கள் அனைவரும் ஒரேயடியாக இந்தியாவுக்குச் சென்று விட்டதால் தோட்டத்து பெண்கள் மாத்திரமே பயன்படுத்திய பொது மலசலகூடத்தை சுத்தப்படுத்த யாரும் இருக்கவில்லை. ஆண்கள் வழக்கம் போல் வெளிக்காட்டுக்குச் சென்று, ஓடைப்பக்கம் போய் தம் காரியங்களை முடித்துக்கொண்டுவந்தனர். குழந்தைகளை வீட்டுக்கு முன்னுள்ள பொது நீர்க்கானில் குந்த வைத்தனர். அக்காலத்தில் தோட்டங்களிலும் வாளிக்கக்கூசுகளே பாவனையில் இருந்தன.

தோட்டத்தில் நிலவுகின்ற இந்த மலசலகூட பிரச்சினை காரணமாக பாரிய அளவில் சுகாதாரக் கேடு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறை எடுத்துச் சொன்னபோது தோட்டத்தலைவர் அதனை ஒரு பொருட்டாகவே கருதாமல் இருந்தார். நந்தசிரி இது தொடர்பில் கோபா லிடம் கலந்தாலோசித்தான்.

"இது தொடர்பில் ஏதாவது செய்யவேண்டும் கோபால். தோட்டத்தின் ஆண்கள் எங்காவது தேயிலை மலைக்குச் சென்று வெளிக்குப்போகிறார்கள் என்பதால் அவர்களுக்கு பொதுக்கக்கூசு எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பது விளங்கவில்லை. இதனால் பெண்கள் தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை நேரடியாக பெரிய தொரைக்கிட்ட சொன்னா என்ன?"

கோபாலும் அதனை ஆமோதித்தான். அவனும் புஸ்பராணியுடன் பழக ஆரம்பித்ததில் இருந்து பொது மலசல கூடத்தையே பயன்படுத்தினான்.

அவனுக்கும் அதன் மோசமான நிலை விளங்கியது. அவன் தானும் நந்தசிரியுடன் வருவதாகக் கூறினான்.

"உண்மைதான் நந்தசிரி. எனக்கும் அங்கே போக கொமட்டிக்கிட்டு வருது. எல்லா எடங்களிலும் இப்போது குழிகக்கூசு வந்துருச்சி சேதுபதி இதப்பத்தி யோசிக்க மாட்டான். இது நம்ம பிரச்சினை நாமதான் தீத்துக்கனும்."

"அப்படின்னா வா போவலாம். இந்த நேரத்தில பெரியதொர பங்களாவுலதான் இருப்பாரு."

அவர்கள் போகிறவழியில் ஆரியவங்ச, சுப்பிரமணி, விஜேபால ஆகியோரையும் கூட்டிக் கொண்டனர். விஜேபால சிகரட் பக்கட்டொன்றை கொண்டுவந்து நந்தசிரியிடம் நீட்டினான். எல்லோரும் ஆளுக்கொரு சிகரட்டை பத்திக்கொண்டனர்.

"ஆச்சரியமா இருக்கு. சிகரட் பெட்டியோட கொண்டாந்திருக்க. நேத்து ராத்திரி டீ மேக்கரோட சேந்து தேயிலதூள் கடத்தினியா?"

நந்தசிரி இவ்வாறு கூறியதும் கோபால் ஆச்சரியமடைந்தான்.

"என்னடா சொல்ற, நம்ம ஆரியவங்ச பெரிய டீ மேக்கருடன் சேர்ந்து தேயிலதூள் கடத்துறானா? டீ மேக்கர் அந்த வேலையெல்லாம் செய்றாரா? அவரே அந்த வேல செஞ்சா மத்தவங்கல கேக்கவா வேணும். இதெல்லாம் எனக்கு தெரியறதில்லையே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டு ஆரியவங்ச வாய்விட்டுச்சிரித்தான். விஜேயபாலவும் கோபாலை கேலியாக பார்த்தான். ஆனால் நந்தசிரி இந்தத்தடவை சிரிக்கவில்லை. அவன் கண்டிப்புடனே கூறினான்.

“கோபால், உனக்கு ஞாபகமில்லையா? நான் அன்று உன்னிடம் சொன்னேன் தானே. எப்படி டீத்தூள் கடத்துகிறார்கள். யார் கடத்துகிறார்கள். எங்கிருந்து எப்படி வருகிறதென்று.”

நந்தசிரி அவ்விதம் சொன்னதும் கோபாலுக்கு சட்டென ஞாபகம் வந்தது. அன்று ஒரு நாள் மாலையில் புஸ்பராணியின் அப்பா கதிரேசன் சைக்கிலில் பால் கேனில் தூள் கடத்துவதாக குற்றம் சாட்டியதும் பின் அவர் தன்வீட்டுக்கு வந்து இந்த விசயத்தை நந்தசிரி பெரிதுபடுத்த வேண்டாம் என்று கூறியதும் எல்லாவற்றையும் கோபால் ஒன்றுடன் ஒன்று பொருத்திப்பார்த்தான். அவனுக்கு இப்போது எல்லாமே தெளிவாகப்புரிந்தது.

“சரி... சரி... அப்படீன்னா அன்று எடுத்துச்சென்றது பெரிய டீ மேக்கரின் சரக்குதானா?” கோபால் நீலமாக ஒரு இழுப்பு இழுத்தான்.

அப்போது அவர்கள் பெரியதுரையின் பங்களா வாசலின் கேட்டுக்கருகில் வந்திருந்தார்கள். துரை பங்களா முற்றத்தில் தான் அமர்ந்திருந்தார். இவர்கள் கூட்டமாக வந்து காவல்காரனிடம் என்னமோ பேசுவதைக்கண்ட அவர் அவர்களை உள்ளே வருமாறு கூறினார்.

பெரியதுரைக்கு அவர் அவ்விதம் ஓய்வாக இருக்கும்போது சொல்லாமல் கொள்ளாமல் அவர்கள் கூட்டமாக வந்தது. கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர் பொறுமை இழந்தவராகவே இவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். பின் கோபம் மேலிட்டவராக...

“நீயெல்லாம் யாரு இதக்கேக்குறதுக்கு. அதுக்கு கங்காணி இருக்கான், கண்டாக்கு இருக்கான், கணக்கபுள்ள இருக்கான், தலவர் இருக்கான் நீ போறது... நான் பாக்குறது போ... போ...” என்று ஆத்திரத்துடன் ஏசி அனுப்பிவிட்டார்.

இவ்விதம் தம்மை துச்சமென நினைத்து துரை எடுத்தெறிந்து இழிவாக பேசுவார் என்று அவர்கள் ஒரு போதும் கருதியிருக்கவில்லை. குறிப்பாக கோபால் இத்தகைய ஒரு அவமானகரமான சந்தர்ப்பத்துக்கு இப்போது தான் முதல்முறையாக முகங்கொடுக்கின்றான். அவர்கள் செய்தவறியாது திகைத்து அங்கிருந்து வெளியேறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்த திருட்டுப்பயல் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வான் என நான் நினைக்கவில்லை. அவன் நெனைக்கிறான் கார், பங்களா, சொத்து இருந்தா என்ன வேணும்னாலும் பேசலாம்னு...” நந்தசிரி கோபத்துடன் கறுவினான்.

“இவிங்க இப்படி நடந்துக்கிறதால தான் சேதுபதி தலவரும் இவிங்ககிட்ட பேசப்போறதில்ல. எதக்கேட்டாலும் இல்லன்னுதான் சொல்றாங்க.

லயத்துக் கூரையெல்லாம் தகரம் இத்துப்போய் ஒழுகுது மழைக்காலத்துல வீட்டுக்குல்ல இருக்க முடியுதா? லயத்த சுத்தி கானெல்லாம் ஒடஞ்சி ஊத்த தண்ணி நெரஞ்சி கிடக்குது. நாத்தம் தாங்கல. ஒரேயடியா இந்தியாவுக்கே போயிடலாம்னு தோனுது.” சுப்பிரமணி விரக்தியுடன் பேசினான்.

“இதுக்கெல்லாம் ஒரேவழி “ஸ்ட்ரைக்” பண்ணுரதுதான். சேதுபதித்தலவர் நாம கூப்பிட்டா வரமாட்டான். நமக்குன்னு கொஞ்சபேர் இருக்காங்கதானே. அவர்களை வைத்து “ஸ்ட்ரைக் பண்ணுவம்.” கோபால் தனது யோசனையைச் சொன்னான்.

இதைக்கேட்டு நந்தசிரியும் ஏனையோரும் அவ்விடத்தில் ஸ்தம்பித்து நின்றார்கள்.

இருந்தாலும் நந்தசிரி கோபாலின் கைகளைப்பற்றிப்பிடித்துக் கொண்டான்.

“கோபால் நீ சொல்வதுதான் சரி. இப்போதுதான் நீ சரியாகப் பேசத் தொங்கியிருக்கிறாய். சேதுபதி போன்றவர்களுக்கு இந்த மாதிரி வேலைகள் செய்யும் துணிச்சல் கிடையாது. அவன்கள் தொழிலாளர்களின் சந்தா பணத்தை பறித்துக் கொண்டு போலியான சங்கம் நடத்துகிறார்கள். நமது பிரச்சினைகளை தட்டிக்கேற்க அவன்கள் வரப்போவதில்லை. இதனை நாம் நன்கு திட்டமிட்டு செய்ய வேண்டும்.”

நந்தசிரியின் தீர்மானத்துக்கு எல்லோரும் இணக்கம் தெரிவித்தனர். அவர்கள் ஒருவர் கைமேல் ஒருவர் கைவைத்து சத்தியம் செய்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58



## செத்தால் என்ன, பிழைத்தால் என்ன?

கோபால், நந்தசிரி மற்றும் நண்பர்கள் தீர்மானித்தபடி வேலை நிறுத்தம் செய்வதற்கான முஸ்தீபுகளில் இறங்கினார்கள். அதன் முதற் கட்டமாக தோட்டத்தின் ஒவ்வொரு லயத்து வீடுகளுக்கும் சென்று மேற்படி பிரச்சினைகள் தொடர்பிலும் அதன் பொருட்டு தாம் மேற்கொள்ளப்போகும் வேலை நிறுத்தம் பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறி தமக்கு ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொண்டனர்.

தோட்டத்தின் தொழிற்சாலைக்கருகில் காணப்பட்ட பிரதான நுழைவாயில் கேட்டுக்கருகில் பிரதான பாதையை ஒட்டி பதாகைகளுடன் அமர்ந்து அமைதியாகவும் ஜனநாயக முறையிலும் தமது எதிர்ப்பை தெரிவிப்பதென்றும் அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

இந்த விடயம் ஏனைய தோட்டங்களிலும் காணப்படுகின்ற பொதுப் பிரச்சினையாதலால் சுற்றுப்புறத்தில் உள்ள ஏனைய தோட்டங்களுக்கும் அறிவித்து அவர்களின் ஒத்துழைப்பை பெறுவதென்றும் செலவுக்குத் தேவைப்படும் பணத்தை நிதியுதவியாக திரட்டவும் தீர்மானித்துக்கொண்டனர்.

இவர்கள் இத்திட்டத்தினை ஆரம்பித்த உடனேயே இது விடயம் தொடர்பில் சேதுபதியின் காதில் அவனின் ஒற்றர்கள் பற்ற வைத்துவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனேயே அவன் வெகுண்டெழுந்து கோபாவேசத்துடன் கோபால் மற்றும் அவன் நண்பர்கள் குழுவினரைத் தேடிக்கொண்டு பரிவாரங்களுடன் கிளம்பி வந்தான்.

"நீயெல்லாம் என்னா நெனச்சிக்கிட்டிருக்கிற? இந்த தோட்டத்தில யூனியன் லீடர் நீயா? நானா? நீ நெனக்கிற மாதிரியெல்லாம் ஆட ஒன்ன அனுமதிக்க முடியாது. இந்த பிரச்சினை எல்லாத்தப்பத்தியும் நான் தோட்ட நிர்வாகத்திடம் பேசிட்டேன். அதெல்லாம் விரைவிலேயே சரியாயிடும். வெள்ளக்காரன் காலத்துல ஆடுன மாதிரி இப்ப ஆட முடியாது.

இப்ப இதெல்லாம் அரசாங்கத்துக்கு சொந்தமான தோட்டம். நாம நெனைக்கிற மாதிரியெல்லாம் ஸ்ட்ரைக் அடித்தால் பொலிஸ்ல வந்து ஒதைச்சி இழுத்துக்கிட்டு போயிருவான். அப்புறம் ஓங்கள வெளியில எடுக்க நாங்கதான் வரணும்."

சேதுபதி ஆத்திரத்துடன் முழங்கித்தீர்த்தான்.

சேதுபதியின் இந்த வார்த்தைகளால் கொதித்தெழுந்த நந்தசிரி சேதுபதி இருந்த பக்கம் பாய்ந்தான். உடனேயே நடுவில் புகுந்து அவனைத் தடுத்துவிட்ட கோபால் சேதுபதியின் அருகில் சென்றான்.

"நாங்கள் சொல்ற மாதிரி யாரும் ஆடவேண்டியதில்ல. தோட்டத் தொழிலாளரின் பொது பிரச்சினைகள் தொடர்பில் பேச தொழிற்சங்கம் முன்வராதபோது அதனால் ஒரு பிரயோசனமும் இல்ல. நீங்க மாத்திரமல்ல நாங்களும் பெரிய தொரைய பார்க்கப்போனோம். நமது பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான தேவை அவர்களுக்கு கிடையாது. ஒருபுறம் தோட்டத்து பொதுமலசலகூடம் போக முடியாத அளவுக்கு நாற்றமெடுத்துக்கிடக்கிறது. மறுபுறம் வீட்டுக்கூரைகள் ஒழுகி வீட்டிலிருக்க முடிவதில்லை. லயத்தைச் சுத்தி கானு ஒடைஞ்சி அழுக்குத்தண்ணி கால் வைக்க முடியறதில்லை" கோபால் தன் பேச்சை சற்றே நிறுத்தினான்.

அவன் பேசுவது சுற்றியிருந்தோருக்கு பிரசங்கம் செய்வதுபோல் காணப் பட்டது. பலரும் தன் பேச்சை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள் என்று தெரிந்ததும் அவனுக்கு உற்சாகம் மேலிட்டது. அவன் தொடர்ந்து பேசினான். அவனது பேச்சு ஒரு தொழிற்சங்க தலைவன் பேசுவது போலவே இருந்தது.

"இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் பங்காளர்கள் நாங்கள் என நமது தொழிற்சங்கத் தலைவர்கள் பீத்திக்கொள்கிறார்கள். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இங்கு அட்டைக்கடிபட்டு வியர்வையும் இரத்தத்தையும் சிந்துவது அவர்களுக்குத் தெரிவதில்லை. நமக்குக் கிடைக்கும் சொச்ச சம்பளத்தில் ஒரு பகுதியை சந்தாப்பணம் என்ற பேரில் பிடுங்கிக்கொண்டு அவர்கள் சுகபோகத்தில் இருக்கிறார்கள். அதுக்கும் மேலாக நம்மைப்பயன்படுத்தி அரசியல் செய்து அமைச்சுப்பதவிகளையும் பெறுகிறார்கள்."

"நாம் எந்த தவறான காரியத்தையும் செய்யவில்லை. நாம் கொலை செய்யவில்லை. கொள்ளையடிக்கவில்லை. எமக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நாங்கள் இந்த ஸ்டிரைக்கை நிறுத்தப்போவதில்லை. நாங்கள் பொலிசுக்குப்பயப்படமாட்டோம். இந்த பஞ்ச காலத்தில் நாம் செத்தால் என்ன? பிழைத்தால் என்ன?" என்று உரத்துக்கூவினான் கோபால்.

கூடியிருந்தோர் "ஓ" என்று பலமாகக்குரல் எழுப்பினர்.

அத்துடன் சேதுபதியின் தைரியம் எங்கேயோ ஓடிப்போய் ஒளிந்து கொண்டது. அவனுடைய தலைவர் பதவி கொஞ்சம் கொஞ்சமாக பறிபோவது போல அவன் உணர்ந்தான். அவனது பெருமையும் கௌரவமும் கூட கீழிறங்கிவிட்டதாகக் கருதினான். அனைத்து தோட்டத்தொழிலாளர்களும் இளைஞர்களும் கோபா லின் பக்கம் சார்ந்து விடுவார்கள் என்பது தெளிவாகத்தெரிந்தது.

இதனை இப்படியே விட்டுவிடக்கூடாது என அவன் நினைத்தான். எப்படியாவது சங்கத்தின் உயர்பீடத்துக்கு தெரிவித்து இந்த நிலைமையை சரி செய்து விட வேண்டுமென்றும் இந்தப் பயல்களை முளையிலேயே பிடுங்கி எறிந்து விட வேண்டுமென்றும் மனதுக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

"சரி... சரி.... நீங்க ஸ்டிரைக் பண்றத நானும் பாக்கத்தானே போறேன்" என்று தாழ்ந்த குரலில் கூறிய சேதுபதி அவர்களை முறைத்து பார்த்து விட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றான். அவன் அங்கே வந்தபோதிருந்த ஆவேசம் இறங்கிப் போயிருந்தது.

அடுத்த நாள் அதிகாலையில் பெரட்டுக்கலைப்பதற்கான சங்கூதிய போது பெரட்டுக்களத்துக்கு மிகச்சிலரே வேலைக்கு வந்திருந்தனர். இதுபற்றி கவலைப்படாத பெரியதுரை இன்னமும் மல்லாக்கப்படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

எனினும் தோட்டத்தில் வேலை நிறுத்தம் தொடர்பில் பொலிஸ் பாதுகாப்பு தேவை என்று முன்கூட்டியே கோரப்பட்டிருந்ததால் பொலிஸ்காரர்கள் ஒரு லொறியில் வந்து இறங்கியிருந்தனர். அவர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு தொழிலாளர் மனது துணுக்குற்ற போதும் யாரும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.


பொலிஸ் என்பவர்கள் எவ்வளவு பயங்கரமானவர்கள் என்பதனை 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்காலத்தில் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக அவர்கள் செய்த கொடூரங்களை தொழிலாளர்கள் மறந்திருக்கவில்லை.

எனினும் தோட்டத்தின் இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் இந்த நியா யமான வேலை நிறுத்த போராட்டத்துக்கு தொழிலாளர்கள் தம் பூரண ஒத்துழைப்பை வழங்க பின்னிற்கவில்லை.

இதேநேரத்தில் சேதுபதித்தலைவர் இது விடயம் தொடர்பில் தமது சங்கத்தின் மேல் மட்ட தலைவர்களை சந்தித்து ஆலோசனை பெறுவதற்காக நுவரெலியா நகரத்துக்கு சென்றிருந்தான். ஆனால் அவன் போன காரியம் கைகூடுவதாகத் தெரியவில்லை. காரணம் சங்கத்தின் மாண்புமிகு தலைவர் இந்தியாவுக்கு சென்றிருந்தமையாகும். அதன் காரணமாக சேதுபதி மாண்புமிகு தலைவரின் புத்திரனை சந்திக்கச் சென்றான். சேதுபதி தனக்கேற்பட்டிருந்த பிரச்சினையால் மன உளைச்சல் பட்டிருந்ததால் தலைவரை எதிர்கொள்ள துணிச்சலை வரவழைத்துக்கொள்வதற்காக கால்போத்தல் சாராயத்தை உள்ளே தள்ளி விட்டே சென்றிருந்தான். அவன் குடித்து விட்டு வந்திருந்ததை தெரிந்து கொண்ட தலைவரின் புத்திரன் அவனை கன்னாபின்னாவென்று திட்டி துரத்தி விட்டான்.

இதையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த சங்கத்தின் மாண்பு மிகு தலைவருக்கு அடுத்தவரான உதவித்தலைவர் எஸ்.எஸ். நல்லுசாமி சேதுபதியை அழைத்து என்ன விசயமென்று அக்குவேறு ஆணிவேராக விசாரித்தார். பின் சேதுபதியை ஆறுதல்படுத்தி தான் தலைவர் ஊர் திரும்பியதும் தலைவரிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிசுக்கு அறிவித்து ஸ்டிரைக்கை நிறுத்துவதாகவும் தெரிவித்து சேதுபதியை அனுப்பி வைத்தார். என்ற போதும் நல்லுசாமி ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோட்டத்தொழிலாளர்கள் - அரச உத்தியோகத்தர்கள்

கோபாலும் நந்தசிரியும் நண்பர்களும் ஏற்பாடு செய்திருந்த வேலை நிறுத்தப்போராட்டத்தில் சுமார் இருநூறு பேர் வரையில் பங்குபற்றினர். இதில் அரைவாசிப்பேர் பெண்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து பதாகைகளை ஏந்தியவாறு தோட்ட தொழிற்சாலையின் பிரதான நுழைவாயிலின் அருகே பிரதான போக்குவரத்துப் பாதைக்கருகாமையில் குழுமியிருந்தனர். அவர்களில் சிலர் வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டும் சிலர் பீடி குடித்தவாறும் காணப்பட்டனர்.

இதேசமயம்தோட்டத்தொழிலாளர்வேலைக்குப்போகாததால்அன்றைய தினம் செய்ய வேண்டியிருந்த அவசிய வேலைகளை செய்வதற்காக வேறு தோட்டங்களில் இருந்து தொழிலாளரை அழைத்து வருவதற்காக இரண்டு லொறிகளும் டிரக்டரும் தோட்ட நிர்வாகத்தால் அனுப்பப்பட்டிருந்தது. இந்த விடயம் கோபாலுக்கும் நண்பர்களுக்கும் எப்படியோ தெரியவந்திருந்தது. அத்துடன் இந்த வேலை நிறுத்தப்போராட்டத்துக்கு கோபால் என்ற இளைஞனே பிரதான காரணகர்த்தா என்பதையும் தோட்ட நிர்வாகமும் பொலிசும் தெரிந்து வைத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற போதும் தோட்டத்தில் காணப்படுகின்ற யூனியன் அல்லாத வேறு ஒரு தனி மனிதனால் இவ்விதம் எல்லாத் தொழிலாளரையும் இணைத்துக்கொண்டு வேலை நிறுத்தமொன்றை எவ்வாறு செய்யக் கூடியதாக இருந்தது என்பது தொடர்பில் பலருக்கும் நம்ப முடியாததாக இருந்தது.

சிலர் 1971 ஏப்ரல் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களே இந்த வேலை நிறுத்தத்தின் பின்னணியில் உள்ளனர் என அபாண்டமாகக் குற்றம் சுமத்தினர். ஆனால் ஏப்ரல் கிளர்ச்சியில் தமிழ் இளைஞர்கள் பங்குபற்றவில்லையென வேறு சிலர் வாதம் செய்தனர்.

இத்தகைய தருணத்தில்தான் அங்கு காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் குழுவினருக்குத்தலைமை தாங்கிய பொலிஸ் சார்ஜன்ட் கோபாலையும் குழுவி னரையும் அணுகினார்.

"நீங்கள் எல்லோரும் அமைதியாக கலைந்து சென்று அவரவர்கள் வேலை யைப்பாருங்கள். தேவையில்லாமல் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள வேண்டாம். இப்போது இந்த தோட்டம் அரசாங்கத்துக்கு சொந்தமானது. நாம் எல்லாம் அரசாங்க பணியாளர்கள். அரசாங்கத்துக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்வது குற்றமாகும்" என்று உரத்த குரலில் கூறினார்.

அதைக்கேட்ட நந்தசிரி அவரருகில் சென்றான். "சேர், நீங்க சொல்றத கேட்க நல்லாத்தான் இருக்கு. தோட்டத்து பெரிய தொர கூட அப்படித்தான் சொல்றாரு. நாங்க எல்லோருமே அரசாங்க உத்தியோகத்தர்கள்தான். அப்புறம் என்னாத்துக்கு நாங்க மாத்திரம் ஒடைஞ்சு ஓட்டையாப் போன லயத்துல குடியிருக்கனும். கக்கூசு, கானு எல்லா ஒடைஞ்சி நாறுது. பெரிய தொரைக்கிட்ட போய்க் கேட்டா ஏசித்துரத்துறாரு. நாங்க ஆன தாங்க பூன தாங்க என்று கேக்கல. அதெல்லாம் செஞ்சி தரச்சொல்லுங்க. நாங்களும் ஸ்டிரைக் செய்யிறத உட்டுர்றம்"

வேலை நிறுத்தக்குழுவினர் பயப்படாமல் அமைதியாக பொலிஸ் அதிகா ரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தூரத்தே உயரே இருந்து தோட்டத்தின் உயர்அதிகாரிகள் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

"இதனை இவ்வளவு தூரம் கொண்டு செல்ல விடாமல் தடுத்திருக்கலாம். நாமும் தவறு செய்து விட்டோம்" ஒருவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூனியன் தலைவர் ஒரு சோம்பேறிப்பயல். அவன் சரியான ஆளா இருந்தால் இதில் தலையிட்டு நம்முடன் கதைத்து ஏதாவது செய்திருக்கலாம்"

மற்றொருவர் பதிலளித்தார்.

"செவனு டிரைவரின் சின்ன மகன் இதில் முக்கியமான ஒரு ஆள். அவன் பேச்சைத்தான் தொழிலாளர்கள் கேக்கிறார்கள்"

"அவனுடைய அண்ணனும் ஒரு காடயன் போலத்தான் நடந்துக்கிறான். ஆனா செவனு டிரைவர் ரொம்ப அப்பாவியாத்தான் இருந்தார்".

"சரி... சரி... இந்த விடயத்தை சுப்பிரிண்டன் ஐயாக்கிட்ட சொல்லி ஏதாவது செய்யப்பார்ப்போம் அந்தா அவரும் வருகிறார்".

தோட்ட உத்தியோகத்தர்கள் இது பற்றி பேசி தோட்டத்து பெரிய துரையுடனும் முகாமையாளருடனும் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று நினைத்தார்கள்.

இவ்வாறு இங்கு நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது கிரேட் வெஸ்டர்ன் தோட்டப்பகுதியில் இருந்து வரும் வீதிப்புறம் இருந்து சண்டை, சச்சரவுகள் இடம்பெறுவதற்கான கூச்சல்களும் குழப்பங்களுடனான சத்தங்களும் கேட்கத் தொடங்கின. ஏற்கனவே தோட்ட நிர்வாகம் தீர்மானித்தபடி வெளித்தோட்டங்களில் இருந்து லொறிகளிலும் டிரக்டர்களிலும் தொழிலாளர் கொண்டு வரப்படுவதை அறிந்த ஒரு கும்பல் வாகனங்களை வழிமறித்து நிறுத்தச் செய்து அதில் இருந்தவர்கள் மீது கல்லுகள் பொல்லுகளுடன் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

அவர்கள் இந்த தாக்குதலின்போது மணல் நிரப்பிய போத்தல்கள், சீமெந்துத் தூள் நிரப்பிய போத்தல்கள் முதலானவற்றையும் பயன்படுத்தினர். இந்தக் கலவரத்தால் சுற்றுப்புறத்து தோட்ட மக்களும் நகர சபை வீடமைப்புத்திட்டத்தில் இருந்தும் மக்கள் திரளாக வந்து அங்கு கூடத்தொடங்கினர். இதனால் பதற்றமடைந்த பொலிசார் தமது வாகனங்களில் சண்டை நடக்கும் இடத்துக்கு விரைந்தனர்.

பொலிசார் கலகம் நடந்த இடத்துக்கு வருவதை அவதானித்த தாக்குதல்காரர்கள் தேயிலைச்செடிகளுக்குள் புகுந்து ஓடத்தொடங்கினர். எனி னும் பொலிசார் அவர்களில் சிலரை துரத்தி மடக்கிப்பிடித்தனர்.

அவ்விதம் அகப்பட்டவர்களில் சேதுபதித் தலைவரும் இருந்தமை அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. அவர்களை ஜீப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிக்கொண்டு தோட்டத்தின் தொழிற்சாலை முற்றத்தில் ஜீப் வந்து நின்றபோது அங்கே கூடியிருந்தவர்கள் பலரும் ஜீப்பில் யார் யாரை பொலிசார் பிடித்து வந்துள்ளனர் என்று எட்டிப்பார்த்தனர்.

கோபால் சேதுபதி ஜீப்பில் இருப்பதை கண்ணுற்றதும் அவ்விடத்துக்கு பாய்ந்து சென்றான். நந்தசிரியும் ஏனைய நண்பர்களும் அவனுடன் சேர்ந்து விரைந்தனர்.

கோபால் சேதுபதி இருந்த திசையை நோக்கி கத்திப்பேசினான்.


"எல்லாரும் நல்லா பாத்துக்குங்க.. யார் கலகக்காரர்கள் என்று. இந்த சேது பதி தொழிலாளர்கள் மத்தியில் கலகம் விளைவித்து அதனை எங்கள் மீது பழி போட்டு எங்களை பொலிஸில் பிடித்துக் கொடுக்க திட்டம் போட்டிருக்கான். இப்படித்தான் நம்ம தொழிற்சங்கத் தலைவர்கள் நம்ம தலையில மிளகாய் அரைச்சிட்டு அவுங்க சொகுசா இருக்கப்பாக்குறாங்க. பாத்துக்குங்க."

இதற்கிடையில் நடுவில் பாய்ந்து நந்தசிரியும் கத்தினான். "டேய் தலைவர் இப்படித்தான் எங்களையெல்லாம் பொலிஸ் கூட்ல போடுவேன்னு மார்தட்டினியா? நேத்து ராத்திரி முழுதும் வீடு வீடா போய் நீ போட்ட திட்டம் இதுதானா? தோட்ட நிர்வாகம் வெளித்தொழிலாளிகளை கொண்டுவரப்போற விடயம் எங்களுக்கும் தெரியும். இருந்தாலும் அவர்களும் தொழிலாளிகள்தானே என்றுதான் உன்னைப்போல் இந்த கருங்காலி வேலையை நாங்க செய்யக்கூடாதுன்னு நெனைச்சோம். இப்ப நீதான் மாட்டிக்கிட்டே. பாப்பம் உன் தலைவர்கள் உன்னை எப்படி வெளியே கொண்டு வருகிறார்கள் என்று".

அப்போது அவர்கள் இருந்த திசை நோக்கி தோட்டத்தின் பெரியதுரை, முகாமையாளர் மற்றும் தோட்ட அதிகாரிகள் ஆகியோர் வந்தடைந்தனர். இதனை அவதானித்த பொலிஸார் தமது துப்பாக்கிகளை தொழிலாளர் இருந்த திசை நோக்கி திருப்பி உசாராகினர்.

தொழிலாளருக்கும் தோட்ட அதிகாரிகளுக்கும் இடையில் மோதல் ஏற்படலாம் என அவர்கள் நினைத்தனர். அங்கே மீண்டும் பதற்ற நிலை உருவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெற்றிபெற்ற போராட்டம்

கோபால் நந்தசிரி குழுவினர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பெரி யதுரை தோட்ட முகாமையாளர் ஆகியோர் ஏனைய தோட்ட அதிகாரிகள் புடைசூழ அவர்களைத் தேடி அருகில் வந்துவிட்டனர். அங்கே ஒரு பதற்றமான அமைதி நிலவியது. பொலிஸார் துப்பாக்கியை நீட்டியபடி உஷாராக இருந்தனர். ஆனால் பலரும் எதிர்பார்த்தபடி அங்கே அசம்பாவிதங்கள் ஒன்றும் நிகழவில்லை.

எல்லோருக்கும் முன்னால் பெரியதுரை வந்தார். அவர் கையை உயர்த்தி அனைவரையும் அமைதியாக இருக்கும்படி கூறினார்.

"எல்லாரும் கவனமா கேக்குறது. நாங்க ஓங்கட எல்லாப் பிரச்சினையும் தீக்குறது. எனக்கு எல்லாம் தெரியும். நான் தேடிப்பாத்தது. கக்கூசு, கூரை, கான் எல்லாம் கட்டித்தாரது. சுத்தம் செய்யிற ஆள் இந்தியா போனதால ஆள் இல்ல. அதுக்கு நான் ஏற்பாடு செய்றது. சரியா?" அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சையான தமழில் பேசினாலும் அவர் என்ன சொல்கிறார் என்பது எல்லோருக்கும் தெளிவாக விளங்கியது.

அவர் புன்னகைத்தவாறே கூறினார். அங்கு கூடியிருந்தோர் தமக்குக் கிடைத்த வெற்றியை பலமாக கரகோஷம் எழுப்பி கொண்டாடினர்.

அச்சந்தர்ப்பத்தில் கோபால் தனது இரண்டு கரங்களையும் உயர்த்தி அவர்களை அமைதியாக இருக்கும்படி சமிக்ஞை செய்தான். அதனைத் தொடர்ந்து எல்லோரும் அமைதியானார்கள்.

கோபாலின் ஒரு சிறு அசைவிற்கே அங்கிருந்த மொத்த சனத்திரளும் சடுதியாக கட்டுப்படுவதை அவதானித்த பொலிஸ் தலைமை அதிகாரி கோபாலை ஆச்சரியமாக பார்த்தார். தோட்டத் தொழிலாளர்களை கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் திறமை அவனிடம் போதுமானளவு காணப்பட்டது. இந்தத் தமிழ் இளைஞனுடன் சிங்கள இளைஞர்களும் வளர்ந்தவர்களும் பெரியவர்களும் ஒட்டி உறவாடி ஒன்றாய். செயற்படுவது கண்டு பொலிஸார் மத்தியிலும் தோட்டத்து உயர் அதிகாரிகள் மத்தியிலும் ஒரு புதுமையான ஆச்சர்ய உணர்வு ஏற்பட்டது. இந்த இளைஞர்கள் மேற்படி தோட்டத்தில் தொழில் புரியும் அப்பாவியான இளைஞர்களாக இருந்ததுடன் அவர்கள் எந்தவிதத்திலும் தோட்ட நிர்வாகத்திற்கு தீங்கிழைக்கமாட்டார்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

இத்தகைய இளைஞர்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்க வேண்டும் எனத்தோட்டத்துரை நினைத்தார். விரைவிலேயே இந்த இளைஞன் தொடர்பில் உயர் தொழிற்சங்கத் தலைவருக்கு தெரிவித்து அந்த இளைஞனை தோட்டத்தின் தொழிற்சங்கப்பிரதிநிதியாக நியமிக்கச் செய்ய வேண்டும் என நினைத்துக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து கோபால் அனைவரையும் பார்த்துக்கூறினான்.

"இன்றைய நமது வேலை நிறுத்தப்போராட்டம் வெற்றிகரமாக நிறை வடைந்ததை நினைத்து நாம் மகிழ்ச்சி அடைந்ததுடன் நமது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து அவற்றுக்குத் தீர்வு பெற்றுத்தந்த தோட்ட நிர்வாகத்திற்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இப்பொழுது நாம் அனைவரும் இன்றைய தினம் அமைதியாக கலைந்து செல்வோம். தோட்ட அதிகாரிகள் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள தேவையான கூரைத்தகரங்கள் மற்றும் பல்வேறு வேலைகளுக்கும் தேவைப்படும் பொருட்களை களஞ்சியசாலையில் இருந்து வழங்குவார்களானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தினத்தை நாம் பிரயோசனமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்".

தமது குறைகளைத்தீர்த்துக்கொள்ள அவர்களும் முன்வந்து உதவி செய்ய நினைப்பது தொடர்பில் மகிழ்ச்சியடைந்த தோட்ட அதிகாரி அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் ஆட்களையும் கொத்தனார் முதலானவர்களையும் பெற்றுத்தருவதற்கு இணங்கினார்.

அதனைத்தொடர்ந்து அங்கு வருகை தந்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்கு தேநீர் வழங்கி ஒவ்வொரு பக்கட் தேயிலைத்தூளும் வழங்கி அவர்களுக்கு நன்றி கூறி கைகொடுத்து விடைபெற்றனர்.

தொழிலாளர்கள் வெற்றிக்கோஷமிட்டவாறே தமது லய வீடுகளுக்குச் சென்றனர்.

அன்றைய தினத்தின் வெற்றியைத்தொடர்ந்து கோபாலுக்கு அந்தத் தோட்டத்தில் மரியாதை மிக அதிகரித்தது. அவன் எங்கு சென்றாலும் அவனை வரவேற்று வணக்கம் கூறினார்கள். ஒரு தடவைகூட முகம் கொடுத்து பேசியிராத தோட்ட நிர்வாக அதிகாரிகள் அவனது சிநேகத்தைப் பெறவும் சிரித்துப்பேசவும் வலிந்து முற்பட்டார்கள்.

ஒரு சில தோட்டத்தொழிலாளர்கள் அவனுக்கான தேவைகளை விசாரித்து அவற்றை நிறைவேற்றித்தரவா என்று தாமாகவே முன்வந்தார்கள்.

இத்தகைய விடயங்களெல்லாம் பிறர் வாயிலாக தன் காதில் விழுந்த போது கோபாலின் அம்மா தனக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டாள்.

சாயங்காலம் ஆனதும் கோபால் வீட்டுக்கு வந்தவுடன் அவனுக்கு திருஷ்டி சுத்திப்போட வேண்டுமென்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டாள். இதன் பிர காரம் கோபால் வீட்டுக்குள் நுழையும்போது அடுப்பு மூட்ட நெருப்பு பற்ற வைக்க விறகு எடுத்துச்சென்றாள்.

அதனைப்பார்த்த கோபால் "எதற்கு அம்மா இப்போது நெருப்பு பற்ற வைக்கப்போகிறீர்கள்" என்று கேட்டான்.

அன்னம்மா அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

அவள் மனதுக்குள் சிரித்துக்கொண்டாள். பின் சாம்பிராணி தட்டை எடுத்து எரியும் நெருப்பில் இருந்து சில நெருப்பு சுள்ளிகளை எடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டாள். அதன் பிறகு அவள் என்ன செய்ய போகிறாள் என்பது கோபாலுக்குப்புரிந்தது. அவன் சிரித்துக்கொண்டே "அம்மா கொச்சிக்காவுக்கு எல்லாம் கட்டுப்பாட்டு விலை விதித்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு சட்டம் போடப்பட்டுள்ளது. நீ இப்படித்தேவையில்லாமல் இவற்றுக்கெல்லாம் நெருப்புப் போட்டுக்கொளுத்தினால் பொலிஸ்காரன் புடிச்சிக்கிட்டுப்போய் வழக்குப் போட்டுருவான்".

"அதற்கு என்னடா தம்பி. நான் உனக்கு திருஷ்டி சுத்திப்போட்டு ஓமேலப் பட்டு இருக்கிற காத்துக் கருப்பு கண்ணு மண்ணு அது..இது.. எல்லா தோஷமும் கழிந்தப்புறம் என்ன எவன் புடிச்சிக்கிட்டுப்போனாத்தான் என்ன"

அம்மா சில மிளகாய் உப்பு முதலானவற்றை ஒரு கடதாசியில் போட்டு பொட்டணமாக சுற்றி அவன் தலையை மூன்று முறை சுற்றி துப்புமாறு கேட்டுக்கொண்டாள். அவனும் அதற்கு மறுபேச்சு பேசாமல் "துப்... துப்.." என்று மூன்று முறை துப்பினான். பின் அன்னம்மா அந்த பொட்டணத்தை சாம்பிராணி தட்டில் போட்டு புகை வந்ததும் வீட்டின் முற்றத்தில் கொட்டி விட்டு வந்தாள்.

போபால் சில நிமிடங்களிலேயே முகம் கைகால் கழுவி வேறு உடை உடுத்திக்கொண்டு தலைவாரி பவுடர் பூசி தன்னை அலங்கரித்துக்கொண்டு எங்கோ செல்ல முற்பட்டான். அவன் அம்மாவைப்பார்த்து "அம்மா கோவிலுக்குப் போய்ட்டு வாறேன்" என்று கூறிவிட்டு வெளியில் இறங்கி நடந்தான்.

முன்பெல்லாம் கோவிலுக்குச் செல்லும்போது அவ்வாறு அவன் தன்னை அலங்கரித்துக் கொள்வதில்லை என்று நினைத்த அன்னம்மா அவனில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைக்கண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டாலும் மனதின் ஒரு மூலையில் அது தொடர்பில் சந்தேகமும் தோன்றாமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவளொரு வித்தாரக்கள்ளி

அன்றைய தினம் தன் தாய் திட்டி சுற்றி போட்டவுடன் அவன் வெளி யில் இறங்கி நடந்தபோது வெளியில் சற்று தூரத்தில் நந்தசிரியும் நண்பர்களும் அவனுக்காகக் காத்திருந்தனர். கோபால் அவர்களுடன் இணைந்து கொண்டதும் அவர்கள் அனைவரும் கோவிலை நோக்கிச் சென்றார்கள்.

கோபால் எதிர்பார்த்தபடி புஸ்பராணி கோவிலுக்கு வந்திருந்தாள். அவளை தூரத்தில் இருந்தே கோபால் அவதானித்தான்.

அவளுடன் அவளது அம்மாவும் தம்பியும் சித்தியும் கூட வந்திருந்தனர். கோபாலுக்கு அவர்களைப் பார்த்ததும் தர்ம சங்கடமாக இருந்தது. அவன் மனம் இரண்டுங்கெட்டான் நிலையில் தவித்தது. மனம் ஏனோ சங்கடப்பட்டு ஏக்கம் கொண்டது. அவளை இறுதியாக சந்தித்த அந்த நிகழ்வை அவன் நினைத்துப்பார்த்தான். ஏதோ ஒரு பரவச உணர்வில் அவளது கரத்தில் அவன் முத்தமிட அவள் வெடுக்கென தன் கையை இழுத்துக்கொண்டு முறைத்துப் பார்த்து விட்டு போன அந்த சம்பவம் காரணமாக அவளை இனிமேல் பார்க்க முடியாதோ என அவன் மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மீண்டும் புஸ்பராணியின் முகத்தை சற்றே ஊடுருவிப் பார்த்தான். அவள் முகம் மலர்ந்து புன்னகையுடன் இருந்ததுடன் அவள் அம்மாவின் பின்னால் சற்றே மறைந்து மெதுவாக அவனை நோக்கி கையசைத்தாள். அதனை பார்த்ததும்தான் கோபாலுக்கு போன உயிர் மீண்டும் வந்தது. அப்படியானால் புஸ்பராணிக்கு தன் மீது கோபம் இல்லை. "கள்ளி, அன்று வேணுமென்றே கோபம் கொண்டதுபோல் நாடகமாடி என் நெஞ்சை துடிக்கச் செய்த நாசகாரி" என கோபாலின் மனம் ஒரு புறம் கறுவிக்கொண்டாலும் அவள் தன்னை வெறுத்து விடவில்லை என்பது அவன் மனதை குதூகலித்து களிப்படையச் செய்தது.

கோபாலும் நந்தசிரி குழுவினரும் படிக்கட்டுக்களில் ஏறிச்சென்று கோவிலின் முற்றத்தில் புஸ்பராணியும் அவள் அம்மாவும் இருந்த இடத்துக்குச் சென்றனர். புஸ்பராணியின் அம்மா செண்பகம் கோபாலைப் பார்த்ததும் முகம் மலர்ந்தார்.

"வாங்க கோபால் தம்பி என்ன இன்றைக்கு புதுமையாக கோயில் பக்கம் வந்திருக்கீங்க? சாங்கீத கச்சேரி ஏதும் வைக்கப்போறீங்களா?"

செண்பகம் அத்தையின் அந்தக்கேள்வி கோபாலுக்கு சற்றே சங்கடத்தை ஏற்படுத்தியது.

இருந்தாலும் அதற்கு ஏதாவது பதில் சொல்ல நினைத்தான்.

"ஆமா.... அத்தை புதுவருசம் நெருங்கிக் கிட்டிருக்கு. சாமி கும்புடுறதோட சேத்து விழா வைக்கலாம்னு யோசிக்கிறோம்".

கோபால் புஸ்பராணி மீது ஒரு ஓரப்பார்வை வீசியவாறே பதில் சொன்னான். புஸ்பராணி தன் அம்மாவிடம் இருந்து விலகி கோபாலை நன்றாக பார்க்கும் பொருட்டு சற்று தள்ளி நின்றாள்.

"அது நல்லதுதான் தம்பி கோவில் விசயத்தில நாம முன்வந்து ஏதாவது செய்யிறது நல்லது.

எங்க வீட்டுக்காரரு கோயில் பக்கமே எட்டிப்பாக்கமாட்டாரு. ஆனா நா என்னால முடிஞ்ச உதவிய ஓங்களுக்கு செய்வேன்".

கோபாலும் நந்தசிரி குழுவினரதும் தலைமையில் இடம்பெற்ற வேலை நிறுத்தம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து தோட்டத்து பெண்கள் மத்தியில் அவர்களின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. அதன் விளைவாகவே செண்பகம் அத்தையின் வாயிலிருந்து அத்தகைய கரிசனை வார்த்தைகள் வெளிவருகின்றன என்பதை கோபாலால் புரிந்து கொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேளையில் செண்பகம் அத்தை புஸ்பராணிக்கு கோபாலை அறி முகம் செய்து வைத்தார்.

"இந்தத் தம்பியை தெரியுமா புஸ்பா? கோவில் திருவிழாவில் டிரம்மெல்லா அடிச்சு பின்னர் பொங்கல் இசை விழாவெல்லாம் ஏற்பாடு செஞ்சாங்களே.... கோபால். டிரக்டர் டிரைவர் செவனு அண்ணனோட மகன்"

புஸ்பா கோபாலை ஒரு முறை ஏற இறங்க பார்த்தாள். பின் அவனை தனக்குத் தெரியாத மாதிரி பாவனை செய்தாள். அதே அகம்பாவப்பார்வை அவள் முகத்தில் தெரிந்தது. முழுப்பூசணிக்காயை அவள் சோற்றில் மறைக்க முற்படுவது தொடர்பில் அந்தக்கோயிலில் இருந்த தெய்வத்திடம் அவள் மனது மன்னிப்புக் கேட்டுக்கொண்டது. அவள் இது விடயத்தில் ஒரு வித்தாரக்கள்ளி போல் செயற்பட்டாள்.

பின் அவள் ஏதோ நினைவுக்கு வந்தவள் போல் பாசாங்கு காட்டி.... "ஆமா.. அம்மா பொங்கல் இசை விழாவின் போது இவரை பார்த்திருக்கிறேன். அழகா டிரம் வாசிக்கிறாரு".

பொங்கல் தினத்தன்று அவள் அவர்களது இசைக் கச்சேரியை பார்த்ததாக கோபாலிடம் தெரிவித்தது தொடர்பில் அவனுக்கு ஞாபகமில்லை. வந்திருந்த கூட்டத்துக்கு மத்தியில் அவள் இருந்தாளா என்பதும் அவனுக்கு நினைவில்லை.

"நீங்க இசைக்கச்சேரிக்கு வந்திருந்தீங்களா? எனக்குன்னா பார்த்ததாக நினைவில்லை".

அதற்கான பதிலை அவன் புஸ்பராணியிடம் இருந்து எதிர்பார்த்த போதும் பதில் செண்பகம் அத்தையிடமிருந்தே வந்தது.

"இல்ல... தம்பி அவள நீங்க பாத்திருக்க மாட்டீங்க. ஏன்னா அன்று நாங்க ருக்மணி தங்கச்சியின் லயத்து முற்றத்தில் இருந்துதான் கச்சேரிய பாத்தம். நான் கூட ராத்திரி பத்து மணிவரைக்கும் அங்கே இருந்தேன். இவ இசை விழா முடிந்த பிறகு மூணு மணிக்குத்தான் வந்தா".

செண்பகம் அத்தை உற்சாகத்துடன் பேசினார். ஏனைய இளைஞர்களைப் போல் இல்லாமல் கோபாலும் அவன் நண்பர்களும் பொறுப்பு வாய்ந்தவர்களாக அவர் மனதுக்குத் தோன்றினார்கள். இப்போது புஸ்பராணியின் முகத்தில் அந்த அகங்காரப் பார்வை மறைந்து போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் முகத்தில் கனிவும் நாணமும் குடிவந்திருந்தது. அவள் கோபாலைப் பார்த்து வெட்கத்துடன் புன்னகை செய்தாள். அதில் காதல் ததும்பியிருந்ததை கோபால் அவதானித்தான். அன்றைய தினத்துக்கு அது போதும் போல் அவனுக்குத் தோன்றியது.

தனது மகளின் முகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை செண்பகமும் அவதானித்தாள்.

ஆனால் எதற்காக அவள் அப்படி நாணிக் கோணுகிறாள் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு மேலும் அங்கு நிற்பது ஆபத்தானதென்றும் தங்கள் களவு பிடிபட்டு விடும் என்றும் நினைத்த கோபால் "தாம் பூசாரியைச் சந்திக்க வேண்டும்" என்று கூறி அங்கிருந்து விடை பெற்றான். இவ்வளவு நேரமும் பொறுமையாக அங்கு நடந்தேறிய காதல் நாடகத்தை பார்த்துக்கொண்டிருந்த நந்தசிரியும் நண்பர்கள் குழுவினரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து சிரித்தவாறே அங்கிருந்து நகர்ந்தனர்.

கோபால் தன்பார்வையில் இருந்து விலகும் வரை அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் புஸ்பராணி. அவன் போய் மறைந்து விட்ட பின்னரும் அவளுக்கு அவன் நினைப்பாகவே இருந்தது. அதன் பின் கோவிலில் இடம்பெற்ற பூஜை புனஸ்காரமெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அவள் மனது கோபாலை எங்காவது தனித்து சந்தித்து விட வேண்டுமென்றே ஆவல் கொண்டிருந்தது.

ஆனால் நெடுநேரம் கழித்து அவளுக்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் கோவிலில் தமது வழிபாட்டையெல்லாம் முடித்துச்செல்ல எத்தனித்த போது கோபால் அவளை நோக்கி வந்தான்.

அவள் தன் அம்மாவையும் ஏனையோரையும் முன்னே செல்லவிட்டு விட்டு சற்று தாமதித்தாள். கோபால் அருகில் வந்ததும் "அடுத்தநாள் தான் சீத்தாவுடன் ஹட்டன் டவுனுக்கு வருவதாகவும் அங்கு சந்திக்கலாம்" என்றும் அவனிடம் கூறிவிட்டு விருட்டென சென்று விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62



## மூளாவது டீ மேக்கரின் ராஜதந்திரம்

மூணாவது டீ மேக்கர் சில்வாவிடம் இருந்து தன்னை வந்து பார்க் கும்படி நந்தசிரிக்கு அழைப்பு வந்திருந்தது. ஒரு தொழிலாளி ஓடி வந்து அதனை தெரிவித்து விட்டுச்சென்றான். அவர் எதற்காக தன்னை அழைத்திருக்கக் கூடும் என்று யோசித்தவாறே நந்தசிரி டீ மேக்கர் ஐயாவின் பங்களா நோக்கிச் சென்றான்.

அவன் பங்களாவின் நுழைவாயில் கேட்டுக்குள் புகுந்தபோதே அவனைக் கவனித்துவிட்ட டீ மேக்கர் அவனை வராந்தாவுக்கு வருமாறு அழைத்தார். பின் வெறும் மேலுடன் இருந்த அவர் உள்ளே சென்று மேற்சட்டையைப் போட்டுக்கொண்டு வந்தார்.

நந்தசிரி முற்றத்து தோட்டத்தை சுற்றிப்பார்த்தான். ஒரு பக்கம் மரக்கறிகளும் மற்றப்பக்கம் பூஞ்செடிகளும் மா, பலா, வாழை, கொய்யா என மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அவற்றில் அவனைக் கவர்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளிச்ச கொய்யா மரந்தான். அதில் கொத்துக்கொத்தாக காய்கள் நன்கு பழுத்து கடுஞ்சிவப்பாக மாறி சிந்தையை கவர்வனவாக இருந்தன. டீ மேக்கர் ஐயாகிட்ட கேட்டு பின்னர் கொஞ்சத்தை பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்று மனதுக்குள் நினைத்துக்கொண்டான்.

அவன் அவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கும்போது டீ மேக்கர் அவனை நோக்கி வந்தார். அவனை வீட்டுக்குள் வரச்சொல்லவோ அங்கே வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமரச் சொல்லவோ இல்லை. அவர் முகம் கோபத்தில் கனன்று கொண்டிருந்தது.

நந்தசிரி சந்தேகத்துடன் அவர் முகத்தைப்பார்த்தான்.

"என்ன நந்தசிரி, தோட்டத்தில் நீ பெரிய சண்டியன் ஆயிட்டியாமே. அந்த கதிரேசனை ரோட்ல வைச்சு மெரட்டினியாமே. இனிமே இந்த மாதிரி சண்டித்தனத்தையெல்லாம் விட்டுடு. நான் மாத்தறை சிங்களவன். நீ தோட்டத்து தமிழர்களை மிரட்டுற மாதிரி எனக்கிட்ட விளையாட முடியாது" என்றார் உறுமலுடன்.

டீ மேக்கர் இப்படி திடீரென நாய் மாதிரி குலைப்பான் என நந்தசிரி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கதிரேசன் தோட்டத்தில் இருந்து கடத்திச்செல்லும் தேயிலைத்தூள் மூனாவது டீ மேக்கருடையதுதான் என்பது நந்தசிரிக்குத் தெரியும். அதனை அவன் வேறு யாருக்கும் அம்பலப்படுத்தியது கிடையாது. இதையெல்லாம் நினைத்தபோது அவனுக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. எனினும் டீ மேக்கர் தோட்டத்தின் உயர் அதிகாரி என்பதால் தன் கோபத்தை அடக்கிக்கொண்டான் என்ற போதும் சும்மா மௌனமாக இருந்து விடும் அளவுக்கு அவன் இளக்காரமானவன் அல்ல.

"உண்மைதான், கதிரேசன் திருட்டுத்தனமாக தேயிலைத்தூள் கடத்தும்போது என்னிடம் கையும் களவுமாக பிடிபட்டான். அப்போதே அவனை சரக்குடன் சேர்த்து பெரிய தொரக்கிட்ட இழுத்துக்கிட்டு போவனும்னுதான் பார்த்தேன். ஆனா அப்படிச்செய்யாததற்கு காரணம் அந்தக் களவுக்குப்பின்னாடி ஒரு சிங்களவன் இருக்கிறான்

என்பதனாலதான். எனக்கு மாத்தறை சிங்களவனுக்கெல்லாம் பயங்கிடையாது. ஏன்னா எங்க தாத்தாவும் மாத்தறைக்காரன்தான். ஆனா இந்த தோட்டத்து அப்பாவி தமிழ் மக்களிடம் ஒருநாளும் நான் சண்டித்தனம் பண்ணினதில்ல. ஒங்களால முடிஞ்சா இந்த தோட்டத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே அனுப்புங்க. அதுக்கு மேல ஓங்களால ஒன்னும் பண்ண முடியாது".

அவனது அந்த ஆணித்தரமான பேச்சைக் கேட்டதும் டீ மேக்கரின் கோபம் புஸ்ஸென்று புகைந்து போய்விட்டது. அவர் உடனடியாகப் பின்வாங்கினார்.

தான் நினைத்ததைப் போல் நந்தசிரி வெறும் சண்டியன் இல்லை என்று அவர் மனதுக்குப்பட்டது. அத்துடன் அவன் எல்லா உண்மைகளையும் தெரிந்து கொண்டுதான் பேசுகிறான் என்பதும் விளங்கியது. அப்பாவித் தோட்டத்தொழிலாளியை தனது பதவிப் பலத்தை வைத்து மிதித்து நசுக்குவதுபோல் இவனை நசுக்கி விட முடியாதென்பதும் அவர் மனதுக்குப் புரிந்தது. ஆதலால் அவனை நன்முகத்தைக்காட்டி இராஜ தந்திரத்தால் வெல்ல வேண்டுமென நினைத்தார்.

அதனைத்தொடர்ந்து அவரது நடவடிக்கைகள் தலைகீழாக மாறின.

"நந்தசிரி மாத்தறைக்காரன் என்ற விசயம் எனக்கு தெரியாமல் போனதே. ஆனா ஏனைய நோஞ்சான் சிங்களவன்களைப் போல நந்தசிரி இல்லை என்பது எனக்குத்தெரியும். நீ நேருக்கு நேராக பேசுவது எனக்கு புடிச்சிருக்கு. வா வா வீட்டுக்குள் போவோம் நந்தசிரி டிறிங்க் ஒன்னு எடுக்குறியா ?"

டீ மேக்கர் அவனுடன் நீண்ட நாள் பழகிய நண்பன்போல் அவன் தோளில் கைபோட்டு அணைத்து அன்பும் பாசமும் பொங்க அவனை வீட்டுக்குள் அழைத்துப்போனார்.

சில நிமிடங்களுக்கு முன்னர் மார்தட்டி சிங்கம் போல் கர்ஜித்த டீ மேக்கர் ஐயாவுக்கு என்ன நடந்ததென நந்தசிரியால் நினைத்துப் பார்க்கக்கூட நேரமிருக்கவில்லை.

அவர் உள்ளே அவனை அழைத்துச்சென்று அலுமாரியில் இருந்து சாராய போத்தல் ஒன்றையும் இரண்டு கண்ணாடி கிளாஸ்களையும் எடுத்து வந்து டீப்போவில் வைத்து நந்தசிரியை அமரச்சொன்னார்.

எனினும் நந்தசிரிக்கு அங்கே ஆற அமர இருந்து சாராயம் குடிக்கும் மன நிலை இருக்கவில்லை. காரணம் கோபாலும் மற்ற நண்பர்களும் அவனுக்காக தோட்டத்தின் பிரதான கேட்டருகே காத்திருந்தார்கள்.

அவர்கள் அன்று ஆறரை மணிக்கு அட்டனில் படம் பார்க்க திட்டமிட்டிருந்தார்கள். அவன் அங்கு தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நண்பர்களுக்கு அவன் மீது கோபத்தை ஏற்படுத்தும் என்பது அவனுக்குத்தெரியும்.

அவன் கடகடவென இரண்டு கிளாஸ் சாராயத்தை கிளாசில் ஊற்றி விழுங்கினான். பின் தன் நண்பர்களுடன் ஆறரை மணி படம் பார்க்க போக உள்ளதாகவும் நண்பர்கள் கேட்டருகே காத்திருப்பார்கள் என்றும் மற்றுமொரு தடவை ஆறுதலாக வருவதாகவும் டீ மேக்கரிடம் கூறிவிட்டு அவசரமாக அங்கிருந்து கிளம்பினான்.

அதற்கு மேல் அவனை நிறுத்தி வைக்க முடியாது என அறிந்த டீ மேக்கர் தன் சேர்ட் பொக்கட்டில் கையை விட்டு ஒரு ஐம்பது ரூபா நோட்டை உருவி அவன் கையில் திணித்தார்.

"இந்தா நந்தசிரி, இதனை செலவுக்கு வைத்துக்கொள். என்ன உதவி வேண்டுமானாலும் கேட்கத் தயங்காதே. நாமும் நமக்குக் கிடைக்கிற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஏதாவது சம்பாதித்துக்கொள்ள வேண்டாமா? இங்கிருக்கிற பெரிய தலைகள் எல்லாம் லட்சம் லட்சமாக கொள்ளையடிக்கிறாங்க. நாம இந்த தேயிலை தூளை வித்து இருவது முப்பது சம்பாதிக்கிறதுல ஒன்னும் குடி முழுகிப்போகாது. நீ இதுல எனக்கு உதவி செஞ்சா...... ஒன்னோட எனக்கு கொடுக்கல் வாங்கல் வச்சிக்கொள்ள முடியும். அதுக்குத்தான் உன்ன வரச் சொன்னேன்".

நந்தசிரி டீ மேக்கரிடம் இருந்து விடை பெற்றான். செல்லும்போது மேசை மீதிருந்த சிகரட் பெட்டியைக் காட்டி அதில் இருந்து இரண்டு சிகரட்டுக்கள் எடுத்துக் கொள்ளட்டுமா என்று கேட்டான். அதற்கு டீ மேக்கர் ரெண்டு என்ன முழுப்பெட்டியையுமே எடுத்துச்செல்லுமாறு கூறி விட்டார்.

நந்தசிரி அதனையும் எடுத்து தன் டெர்லிங் சேர்ட் பாக்கட்டில் போட்டுக்கொண்டு அங்கிருந்து விரைந்தான். நந்தசிரி தன் வலைக்குள் விழுந்து விட்டான் என டீ மேக்கர் தன் மனசுக்குள் நினைத்து ஒரு நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63



## "எல்லாருமே களவாணிப்பயலுக"

நந்தசிரி மூன்றாவது டீ மேக்கரை சந்தித்து வருவதாக கூறிவிட்டு சென்றபோது கோபாலும் நண்பர்களும் பொறுமையிழந்து தோட்டத்து பிரதான கேட்டருகே காத்திருந்தனர். ஆறரை மணி படம் ஆரம்பிக்க இன்னும் முக்கால் மணி நேரம் இருந்தது. இப்போது போனால்தான் படம் தொடங்கு முன் போக முடியும்.

அப்படி அவர்கள் யோசித்துக்கொண்டிருந்தபோதுதான் தூரத்தில் நந்தசிரி வெற்றி வீரன் போல் வருவது தெரிந்தது. பார்த்த மாத்திரத்திலேயே அவனது மெல்லிய டெரிலின் சேர்ட் பொக்கட்டில் சிவப்பாக துருத்திக் கொண்டிருக்கும் சிகரட் பெட்டி அனைவரது கண்ணையும் உறுத்தத் தொடங்கியது. போன காரியம் வெற்றி என்பதற்கு அறிகுறியாக அவனது முகம் மலர்ந்து எக்காளப்புன்சிரிப்பு ஒன்றும் காணப்பட்டது.

"சரி.... சரி..... எல்லாரும் வேகமாக போக வேண்டும். இன்னைக்கு எல்லாருக்கும் டிக்கட் நான் தான் எடுப்பேன். பெட்டி நிறைய சிகரட்டும் இருக்கிறது. குடுக்குற தெய்வம் கூரைய பிச்சிக்கிட்டுக் கொடுக்கும்கிறது இதுதான்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி சிகரட் பக்கட்டை எடுத்து அனைவருக்கும் இரண்டு இரண்டு வீதம் பகிர்ந்து கொடுத்தான்.

"இப்ப நம்மலால ஓடிக்கிட்டே சிகரட் பத்த வைக்க முடியாது. அதனாலே தியட்டர்ல கெலரில உக்காந்த உடன் கூலா இருந்துக்கிட்டு பத்த வைக்கலாம்". என்றான் விஜேபால சிகரட்டுக்களை பொக்கட்டில் போட்டவாறே.

ஏனையோரும் அதனை ஆமோதித்தனர். அவர்கள் அனைவரும் ஓட்டமும் நடையுமாக "நியூ இம்பீரியல்" சினிமா தியேட்டரை அண்மித்தனர். அவர்கள் சினிமாத்தியேட்டரை அண்மித்த போதே அந்த அட்டன் மலைச்சாரலில் பலகைக் கொட்டகையாக அமைக்கப்பட்டிருந்த அந்த தியேட்டரில் இருந்து...

"ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்... கண்தேடுது சொர்க்கம்" என்ற பாடல் உரத்து ஒலித்து மலைச்சாரலில் முட்டி மோதியது. அந்தப்பாட்டு அவர்களின் காதுகளுக்கும் தேன் பாய்ச்சியது போன்றே இருந்தது.

*****

அடுத்து வந்த சில நாட்கள் ஒரு முக்கியத்துவமும் இல்லாமல் நகர்ந்தன. வழமை போல் தோட்டப்பராமரிப்பு வேலைகளுக்கே இளைஞர்கள் அனுப்பப்பட்டனர். அன்றுங்கூட பன்னிரண்டாம் நம்பர் மலையில் புல்லு வெட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது தேத்தண்ணி குடிப்பதற்காக தொழிலாளர்கள் மரநிழலில் அமர்ந்திருந்தார்கள்.

முதல் சம்பாஷைணையை அவர்கள் மத்தியில் அமர்ந்திருந்த தொரசாமியே ஆரம்பித்தார்.

"வெள்ளைக்காரன் போனதுக்கு பிறகு தோட்டம் தொரவு எல்லாமே நாசமா போச்சு தோட்டத்துல எவனப்பாத்தாலும் எதையாவது களவெடுக்குறதும் கொள்ளையடிக்கிறதும் இதுவே வேலையாப்போச்சு எல்லாருமே களவாணிப் பயலுக".

அவர் மெதுவாகவே பேசினாலும் கோபாலுக்கும் நந்தசிரிக்கும் அது கேட்கத்தான் செய்தது. ஏனையோரும் அவர் பேச்சுக்குக்காது கொடுத்தனர்.

"தோட்டத்துல ஒரத்த களவெடுக்கிறதால தேயிலை செடியெல்லாம் செழிப்பில்லாம போச்சி. கொழுந்து அறுவடையும் கொறஞ்சிருச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால மாச வேலை நாளையும் கொறைக்கிறாங்க. இதுக்கு ஏதாவது செய்யனும்".

"தொரசாமி மாமா சொல்லுறது ரொம்ப சரியான வார்த்த. நாம கூட அவிங்களுக்கு ஒதவி பண்ணிக்கிட்டுத்தான் இருந்தோம். இந்த பஞ்சகாலத்துல நம்மால வேற ஒன்னும் செய்ய முடியறதில்ல". நந்தசிரியும் அவரது கருத்துக்கு ஒத்து ஊதினான்.

கோபால் அவர்களை மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தான். வழக்கம் போல நந்தசிரி அன்று தொரசாமி மாமாவுக்கு கேலி பேசி அவரை ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

அவன் எவ்வாறு மேலதிகாரிகள் தேயிலைத்தூள் திருடுகிறார்கள் என்பதையும் எவ்வாறு ஓரச்சாக்குகள் மீண்டும் உரக்கடைக்கே பின்வாசல் வழியாகப் போகின்றதென்பதனையும் மிக விபரமாக எடுத்துக்கூறினான்.

அத்துடன் அவர்களுக்கு தான் உதவிய விதத்தையும் சிறு கமிஷன் பெற்றுக்கொண்டதையும் கூட அவன் மறைக்கவில்லை.

அவனது பேச்சைக்கேட்டு பலரும் ஆச்சரியப்பட்டனர். தமக்குத்தெரியாமல் இவ்வளவும் நடக்கிறதே என வாயைப் பிளந்து வியப்படைந்தனர்.

அவர்கள் அவ்விதம் பேசிக்கொண்டிருந்தபோது ஜெகநாதன் தெரிவித்த ஒரு செய்தி எல்லாரது கவனத்தையும் திசை திருப்பியது.

"ஒன்று தெரியுமா நந்தசிரி, நம்ம சேதுபதி தலைவர தோட்டத்து தலைவர் பதவி யில் இருந்து தூக்கிட்டாங்களாம்."

இதனைக்கேட்டு எல்லார் கவனமும் ஜெகநாதன் மீது திரும்பியது. நந்தசிரி திடீரென ஜெகநாதன் அருகில் சென்று அவனுக்கு அந்த செய்தி எப்படித்தெரிந்தது என்று கேட்டான். அதற்கு அவன் மேல் டிவிசன் யூனியன் தலைவரான தனது மச்சான் பழனிச்சாமி தெரிவித்ததாகக் கூறினான்.

அதனைத்தெரிவித்து விட்டு ஜெகநாதன் ஒரு கதாநாயகனைப்போல் தன் தலை யில் கட்டியிருந்த தலைப்பாகையை கழட்டி உருவி ஒரு உதறு உதறிவிட்டு மீண்டும் நாடக பாணியில் கட்டி விட்டான்.

இவர்கள் எல்லாம் குசு குசுவென எதனையோ பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்த கங்காணி சேதுபதி "பேசியது போதும் எல்லாரும் வேலைய ஆரம்பிங்க" என தூரத்தில் இருந்தவாறே கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோபால், நந்தசிரி, ஆரியவங்ச, விஜயபால, ஜெகநாதன் வேலைய இன்னைக்கே முடிக்க வேண்டும். நாளைக்கு மிச்சம் வைக்கக்கூடாதுன்னு கன்டக்டர் சொல்லியிருக்கிறார் கண்டிப்பாக”.

நந்தசிரி திடீரென அவர் இருந்த பக்கம் திரும்பினான்.

அவரைப்பார்க்க இப்போது கோமாளியாகத் தெரிந்தார். அவன் விருவி ருவென அவர் அருகில் சென்றான். ஏனையோர் அவன் எதையோ கிண்டப்போகிறான் என வேடிக்கை பார்த்தனர்.

“தலைவர் சேதுபதி அவர்களே! உங்கள் தலைவர் பட்டம் பறி போயிருச்சாமே உண்மையா”? என்றான் சேதுபதியிடம் சத்தமாக நாடக பாணியில்.

அவன் சொன்னதைக்கேட்டு சேதுபதி திடுக்கிட்டாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் அவர் அவனைப் பார்த்து முறைத்தார்.

“அதெல்லாம் கட்டுக்கதை. எவனாலும் எனது பதவியைப்பறிக்க முடியாது. நீ போய் வேலையைப் பாரு” என்றார் குரலில் சுருதி குறைந்தவராக.

நந்தசிரி அவரை அத்துடன் விட்டுவிடத்தயாராக இல்லை. “ஓங்களுக்கு பதவி பறிபோன விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. மேல் டிவிசன்காரங்க

அதப்பத்தி பேசிக்கிறாங்க. இப்ப நம்ம டிவிசனுக்கு சேதி தெரிஞ்சிருச்சி இனிமே ஒன்னும் புடுங்க ஏலாது.

கம்முனு கெடக்க வேண்டியது தான்”. நந்தசிரி பரிகாசமாக அவரைப்பார்த்து கூறிவிட்டு தன் வேலையைப் பார்க்க சென்றான்.

சேதுபதிக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. கையிலிருந்த மட்டக்கத்தியைப் பார்த்தார். அதனை அப்படியே நந்தசிரியின் நெஞ்சில் இறக்கிவிட வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அப்படிச் செய்யும் தைரியம் அவருக்கில்லை. அவர் அருகில் இருந்த முருங்கை மரத்தின் கிளைகளை வேகமாக வெட்டிச்சாய்த்து தன் ஆத்திரத்தைத் தணித்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூதாட்டம்

தோட்டங்களில் சம்பளம் போடப்படும் தினத்தைப் போலவே மற்றுமொரு முக்கியமான தினம்தான் அவர்களுக்கு மாதாந்தம் தேயிலைத் தூள் விநியோகிக்கும் தினம். தொழிலாளர்களுக்கு தலைக்கு ஒரு ராத்தல் வீதம் மாதாந்தம் தேயிலைத்தூள் சலுகை விலையில் வழங்கப்படும். அவ்விதம் வழங்கப்படும் தேயிலையை பாவனைக்கு சிறிது வைத்துக்கொண்டு ஏனையதை கிடைக்கிற விலைக்கு விற்று விடுவார்கள். இந்தத் தேயிலையை வாங்க வெனவே நகரத்தில் இருந்து முதலாளிகள் சிலர் வருவார்கள்.

அந்தத் தேயிலையைக்கூட சில முதலாளிகள் தொழிலாளரின் கடனைக் கழிப்பதற்காக பறித்துக்கொள்வார்கள். ஆதலால் இவ்விதம் கடன்பட்டவர்கள் தாம் நேரடியாக வராமல் யாரையாவது ஆளைவிட்டு தமக்கான தேயிலையை பெற்றுக்கொள்வார்கள். இவ்விதம் கடன்வாங்கி முதலாளிகளிடம் மாட்டிக் கொள்பவர்களில் தொரசாமியும் ஒருவர்.

ஏபிரஹாம் முதலாளி தொரசாமியை கண்ட உடனேயே அவர் தேயிலையை பறிக்க முயற்சி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொரசாமி ஒன்னோட தேயிலையைக்கொடு. போன மாசம் கடன்தொகை கூடிப்போச்சி" அவர் உதட்டிலிருந்த சுருட்டை எடுக்காமலேயே உதட்டு நுனியால் பேசினார். அவர் கையில் விரித்துவைத்த கடன் குறிப்புப்புத்தகம் இருந்தது.

"ஐயோ முதலாளி கோவிக்காதீங்க அத என்னோட வீட்டுக்காரி வாங்கிக்கிட்டு போய்ட்டா ஒத்தக் கடை முதலாளிகிட்ட வாங்கின கடன் காச குடுக்குறதுக்காக" தொரசாமி தலையைச் சொறிந்தார் பரிதாபமாக "சனியன் புடிச்ச பய அப்பப்ப வந்து கடனுக்கு சாமான வாங்கி வயித்த நெரப்பிக்க வேண்டியது. அத திருப்பிக் கொடுக்க வக்கில்ல. நாங்க சாமானங்களை வானத்தில் இருந்தா கொண்டாரோம். நகை புலன் அடகு வைச்சித்தான் கொண்டாரோம். வெக்கமில்லாத முண்டாங்க. இனிமே கடன கொடுக்காம அந்த பக்கம் வராத. நாசமா போனவன்"

கோபமடைந்த ஏபிரஹாம் முதலாளி அவ்வாறு வார்த்தையை உதிர்த்துவிட்டு தன் உதட்டிலிருந்த சுருட்டை வேகமாக உறிஞ்சினார். ஆனால் அது ஏற்கனவே அணைந்து போய் விட்டிருந்ததால் மேலும் ஆத்திரமடைந்து அதனை கீழே போட்டு காலால் நசுக்கி தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டார்.

கோபாலும் நந்தசிரியும் நண்பர்களும் அங்கு அருகாமயிலேயே நின்றிருந்தனர். ஏபிரகாம் முதலாளி தொரசாமியை ஏசுவதை கண்டு கோபமடைந்த நந்தசிரி, அவருக்காக குரல் கொடுக்க அந்தப்பக்கமாக நகர்ந்தான்.

அவன் நோக்கத்தை புரிந்து கொண்ட கோபால் அவனை போகவிடாது தடுத்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"வேண்டாம் நந்தசிரி ஏற்கனவே முதலாளி உன்னுடன் கோபமாக இருக்கிறார்.

இப்போது தொரசாமிக்காக நீ முதலாளியுடன் சண்டை போட்டால் மேலும் பகை மைதான் வளரும். இது தொரசாமியின் தவறேயன்றி முதலாளியின் தவறல்ல. கடன் வாங்கினால் திருப்பிக்கொடுக்கத்தான் வேண்டும்."

இவ்வாறு கோபால் கூறியபோதும் நந்தசிரியின் கோபம் தணியவில்லை. அவன் பல்லை நரநரவென்று கடித்தவாறு தன் கோபத்தை தணிக்க முனைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர்கள் மனிதர்களே இல்லை கோபால் எல்லா முதலாளி வர்க்கமுமே மிருகஜாதியை சேர்ந்தவர்கள்தான். இவர்களில் தமிழ் முதலாளி, சிங்கள, முஸ்லிம் முதலாளி, என்று வேற்றுமைகள் கிடையாது. எல்லாருமே இரத்தம் உறிஞ்சும் புடையன்கள். என்ன செய்வது, அவன்களுக்கு எந்தத்துன்பமும் வருவதில்லையே" என்றான் நந்தசிரி கோபம் கொஞ்சமும் குறையாமல்.

"சரி சரி அதவிட்டுத்தள்ளு. நந்தசிரி, வா டவுனுக்குப் போயி தோச ரெண்டு திண்ணுட்டு படம்பாக்கப்போவலாம் என்றான் ஆரியவங்ச.

அவர்கள் எல்லோரும் விஜேபாலவைக் காணோமே என்று தேடினார்கள்.

"அவன் சூது விளையாட போயிருக்கான். ரெயில் கேட்டு நானா, கீர்த்தி, சைமன் ஐயா, தர்மா எல்லாரும் சூது விளையாடும் களத்தில்தான் இருப்பார்கள்" சுப்பிரமணியம் முதலாவது தடவையாக வாய் திறந்தான்.

"ஏன் நீ போகலையா?" என்று அவனிடம் கேட்டான் நந்தசிரி.

அவன் வெட்கத்துடன் தலைகுனிந்தவாறே கள்ளத்தனமாக கோபாலைப்பார்த்தான். கோபால் ஒன்றும் தெரியாதவன்போல் வேறு திசையில் பார்த்துக்கொண்டு "அவன் என்ன பதில் சொல்லப்போகிறான்" என எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

"சூது வௌயாடப்போகனும்னா ஒரு சாக்கு நெறயவாவது சல்லி வேனும் நந்தே. இப்பல்லாம் நான் போறதில்ல."

சுப்பிரமணியத்தின் இந்த தீர்மானம் கோபாலுக்கு திருப்தியளிப்பதாக இருந்தது.

"சரி சரி, இப்பவாவது ஒனக்கு புத்தி வந்ததே. அதுவே போதும், விஜேபால சூதாட்டத்துக்கு போவதை எப்படியாவது நிப்பாட்டனும், அவனுடன் பேசிப்பாப்பம்.

"அவனுடன் பேசிப்பார்த்து ஒன்னும் சரிவரப்போவதில்ல. நல்லா படுறமாதிரி நாலு சாத்து சாத்தனும்."

"நாம தண்ணியடிக்கிற நேரத்துல இத நெனவு படுத்து. போதையில இருக்கிற மாதிரி நாளு போடு போடுறேன். அப்பத்தான் அவன் சரிக்கு வருவான்" என்றான் நந்தசிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவனோட அப்பா புஞ்சிராால மாமாவால கூட அவன திருத்த முடியல.உன்னால முடியுமா நந்தசிரி அவன அடக்க”

“ஏன் முடியாது? நீ ஒட்டுப்பிடிக்கிறதுனா புடி. நான் அவன் சூதாடுறத எப்படியாவது நிறுத்திக்காட்டுறன். அதிகம்போனா ரெண்டொரு நாள் பொலிஸ் கூட்டுக்கில்ல இருந்தான்னா சரியாகிடும். ஒழுங்கா சொல்லிப்பாத்தும் கேக்கலன்னா ஒரே வழி அதுதான்.”

“நீ சொல்றமாதிரி பாத்தா அவிங்க எல்லாத்தையும் பொலிஸ் புடிச்சிக்கிட்டு போயிடும். நானா, தர்மா, கீர்த்தி, சைமன் எல்லாரையும் பொலிஸ் புடிச்சிகிறதுக்கு நீதான் ஒத்து சொன்னன்னு தெரிஞ்சா அவிங்க கோவிச்சுக்கிட்டு பலி வாங்குவானுங்க. இத்தோட அதவுட்டுப்புடு நாம நம்ம வேலயபாப்போம் விஜேபாலவை சொல்லித்திருத்தலாம்.”

“ஏய் நீ என்னப்பத்தி சரியா புரிஞ்சிக்கல அவிங்களுக்கு பயப்படுறவனா நான். நீயுங்கூட இருந்திருந்து சூதாட்டத்துக்கு போற விசயம் எனக்குத் தொயாதுன்னு நெனச்சியா?” நந்தசிரி நேராக ஆரியவங்சவின் முகத்தைப்பார்த்துக் கேட்டான். அதற்கு ஆரியவங்சவும் விட்டுக்கொடுக்கவில்லை.

“நீ மட்டும் என்ன? போன புதுவருசத்தின்போது சீட்டாடி முன்னூறு ரூபாய் தோத்தாய். அதுக்குப் பிறகு தீபாவளியன்னைக்கு சூதாட்டத்தில நானூறு ரூபா தோத்தாய் இல்லையா?”

“அதெல்லாம் பெருநாள் காலத்துல ஜொலிக்கு செய்யறவேலை. நாம இப்பாஜாலி பண்ணாட்டி எப்ப பண்ணுறது.”

“சரி சரி இந்த வாதம் வெதண்டாவாதம் எல்லாம் இப்ப என்னத்துக்கு. இப்போதைக்கு சந்தோசமா இருப்போம். வாங்க போகலாம்” என்று கூறியவாறு எழுந்தான் கோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சங்கத்தலைவனானான் கோபால்

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. விடுமுறைநாள் ஆனதால் பொழுது மந்த கதியிலேயே போய்க்கொண்டிருந்தது.

கோபால் காலையிலேயே எழுந்து தன் நண்பர்களை பார்க்க மேட்டு லயத்துக்குப் போவதாகக் கூறிச்சென்று விட்டான். அப்போது தான் கோபாலின் லயத்து காம்புறா வாசலில் யாரோ "கோபால் கோபால்" என உரத்துக்கூப்பிடும் சத்தம் கேட்டது.

உள்ளே வேலையாக இருந்த அன்னம்மாள் வெளியே இருந்து கோபாலைக்கூப்பிடுவது யார் என்று எட்டிப்பார்த்தாள்.

வெளியே சேதுபதியின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஜெயராமன் நின்று கொண்டிருந்தார்.

"என்ன ஜெயராமன் அண்ணா. என்னாத்துக்கு கோபாலைத் தேடுறீங்க. அவசரமா?"

"ஆமா, அவசரமாத்தான் நம்ம யூனியன் செயலாளர் கொழும்பில் இருந்து வந்திருக்காரு. கோபாலைப் பாக்கனுமாம்" ஜெயராம் அவசரத்தில் ஓடிவந்ததால் மூச்சிறைத்துக் கொண்டே கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் இருந்து யூனியன் செயலாளர் கோபாலை பார்க்க வந்திருக்கிறார் என்றால் பெரிய விடயந்தான்.

அன்னம்மாவுக்கு நெஞ்சில் பயமும் பதற்றமும் தோன்றியது. இருந்தும் அதனை மறைத்துக்கொண்டு "எதற்கு அண்ணன் கோபாலைத் தேடனும் அதுதான் தலைவர் சேதுபதி இருக்கிறாரே" அன்னம்மா தயக்கத்துடன் கேட்டாள்.

அவளுடைய பதற்றத்தைப் பார்த்து ஜெயராம் சத்தம் போட்டு சிரித்தார். இருந்தாலும் அவருக்கு இன்னும் மூச்சு வாங்கிக்கொண்டுதான் இருந்தது.

"அதெல்லாம் முடிஞ்சு போச்சி அன்னம்மா. சேதுபதியின் தலைவர் பதவியை கழட்டியாச்சு. அவன் எப்போது தொழிலாளிகளை ஆளு வைச்சு அடிச்சானோ அன்னைக்கே தொழிலாளிகளின் விரோதியாயிட்டான். அவன் இந்த டிவிசனுக்கு மாத்திரம்தான் தலைவரா இருந்தான். இப்போ கோபாலுக்கு ஒரு டிவிசனுக்கு மட்டுமல்ல நம்ம தோட்டத்து ஐந்து டிவிசனுக்கும் தலை வராகும் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதற்காகத்தான் கொழும்பில் இருந்து யூனியன் பிரமுகர்கள் வந்திருக்கின்றனர். எங்கே போயிட்டான் இந்த கோபால்" அவர் மீண்டும் கேட்டார்.

"கோபால் மேட்டு லயத்துக்குத்தான் போயிருப்பான். தியாகுவின் காம்புராவுலதான் இருப்பான். இருங்க நான் ஆள் அனுப்புறன்" என்று கூறிவிட்டு ரெங்கநாதன் வீடு இருந்த திசை நோக்கி "அமரன் அமரன்" என்று கூப்பிட்டாள்.

அமரன் எங்கேயோயிருந்து ஓடிவந்தான். "அப்பாயி, கூப்பிட்டியா?" என்று கேட்டான்.

"ஆமா, மேட்டுலயத்துக்கு ஓடிப்போயி கோபால் மாமாவை வரச்சொல்லு. கொழும்புல இருந்து பெரியவங்க வந்துருக்காங்கன்னு சொல்லு" அமரன் மேட்டு லயத்தை நோக்கிப் பறந்தான்.

கோபால் தொடர்பில் ஜெயராம் சொன்னதைக்கேட்க அன்னம்மாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தன் மகனுக்கு சமூகத்தில் மதிக்கத்தக்க ஒரு இடம் கிடைத்து விட்டதாகக் கருதினாள். ஜெயராம் ஒரு நியாயமான மனிதர். அவரிடம் சொல்லி தொழிற்சங்க வேலைகளை கோபாலுக்கு கற்றுக்கொடுக்க சொல்ல வேண்டுமென நினைத்துக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயராம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டவர்.

இவ்வாறு மனதுக்குள் நினைத்த அன்னம்மாள் ஜெயராம் வெளியில் தனியாக நிற்பதைப்பார்த்து "தேத்தண்ணி போடவா" என்று கேட்டாள். அவரை உள்ளே வருமாறு அழைத்து அங்கே இருந்த ஒரேயொரு உடைந்த நாற்காலியில் அமரச் செய்தாள்.

பதிலுக்கு அவர் "வெகு நேரம் காத்திருக்க முடியாதென்றும் தாமதித்தால் செயலாளரிடம் பேச்சுக்கேட்க நேரிடும்" என்றும் கூறினார்.

ஊத்திக்கொண்டு வந்த சாயத் தேத்தண்ணியையும் கருப்பட்டித் துண்டையும் ஜெயராமிடம் கொடுத்த அன்னம்மா அவர் செயலாளர் என்று குறிப்பிட்டது எஸ்.எஸ்.நல்லுசாமியையா என்று கேட்டாள்.

"ஆமா, நல்லுசாமி ஐயா தான் வந்திருக்கிறார். அவர் தான் சங்கத்தின் இரண்டாவது தலைவர். அவர் ஒரு நாளும் முதலாவது தலைவராக வரப்போவதில்லை" என்று கூறிவிட்டு மடமடவென தேத்தண்ணியைக் குடித்து முடித்தார்.

கோபாலின் வாழ்வில் அன்றைய தினம் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. அவன் அந்த டிவிசனுக்கு மாத்திரமல்லாமல் ஐந்து டிவிசன்கள் அடங்கிய முழுத்தோட்டத்துக்குமான தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தான்.

இந்த மகிழ்ச்சிகரமான விடயத்தை கொண்டாடுமுகமாக அன்று மாலை நண்பர்கள் எல்லாம் சந்திப்பதென்று நந்தசிரி உள்ளடங்கலான நண்பர்கள் குழாம் தீர்மானித்திருந்தது. அத்திட்டத்தின் பிரகாரம் தோட்டத்துக்கு ஒதுக்குப் புறமாக ஓடிக்கொண்டிருக்கும் ஓடைக்கரைக்குப் போய் அங்கே ஓடைக்குக்குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும் இரும்புப் பாலத்தின் படிகளில் அமர்ந்தனர்.

அந்த இடம் காட்சியாலும் சுற்றுப்புறச் சூழலாலும் மிக ரம்மிய மிக்க இடமாக இருந்தது. சிற்றோடையின் மெல்லிய சலசலப்பும் சற்றே குளிர்ந்த தென்றலும் மாலைக் குருவிகளின் கீச்சொலியையும் தவிர வேறு கரடுமுரடான அரவங்கள் எதனையும் கேட்க முடியவில்லை.

"தண்ணியடிக்க மிக நல்ல இடமாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய் கோபால். சாராயம் ஒரு மிடறும் சிகரட் ஒரு இழுப்பும் நேராக சொர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கே கொண்டு போகுது" நந்தசிரி மகிழ்ச்சியுடன் சிகரட் ஒன்றை பற்ற வைத்தான்.

விஜேபால ஒரு கிளாசில் சாராயத்தை நிரப்பி ஒரே மூச்சில் குடித்து முடித்தான். அவன் குடிக்கும் வேகத்தைப்பார்த்து ஏனையோர் ஏளனமாக சிரித்தனர்.

"அடேய் விஜேபால. என்னடா இது. கள்ள சாராயம் குடிக்கிறது போல அவசர அவசரமா முழுங்குற மெதுவா அனுபவித்து அனுபவித்து குடி..." என்றான் நந்தசிரி மேலும் சிரித்துக்கொண்டே.

ஆரியவங்ச தனது கிளாசை தீர்த்து விட்டு அதனை நிரப்ப சாராயப் போத்தலை தூக்கினான். அதில் சொற்பமே எஞ்சியிருந்ததைக் கவனித்து ஏமாற்றம் அடைந்தான். அவனது ஏமாற்றத்தை உணர்ந்த கோபால் பாலத்துக்கு சற்றே எட்ட இருந்த அடர்ந்த தேயிலைச் செடியைக் காட்டி அங்கிருந்த மற்ற போத்தலை எடுத்துவரச் சொன்னான்.

சுப்பிரமணி அதனை எடுத்து வந்து நந்தசிரியிடம் கொடுத்தான். நந்தசிரி போத்தலை வாங்கி அதனை தலைகீழாக பிடித்து அதன் பின் பக்கத்தில் ஒரு தட்டுத்தட்டி மூடியை தளர்த்தி திருகிக்கழற்றினான். பின் அதனை ஆரியவங்சவிடம் கொடுத்தான். ஆரியவங்சவின் முகம் அதன் பிறகுதான் மலர்ந்தது.

அவர்கள் மிக சந்தோசத்தில் களித்திருந்தார்கள்.

"கோபால் இன்று போல் சந்தோசமான ஒரு நாள் என் வாழ்நாளில் இதற்கு முன்வந்ததில்லை. எங்கள் நண்பனான உனக்கு ஒரு மதிப்பு வாய்ந்த பொறுப்புமிக்க பதவி கிடைத்துள்ளது. இனிமேல் கோபால் மட்டுமல்ல நாம் எல்லோருமே இதுவரை நடந்து கொண்டது போல் விளையாட்டுத்தனங்கள் செய்ய முடியாது. நாமும் கூட கோபாலுடன் மரியாதையுடன் பழக வேண்டும். அவன் முன்னெடுக்கும் சகல காரியங்களிலும் நாம் அனைவரும் உற்ற துணை யுடன் அவனுக்கு ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும்".

அவர்கள் அனைவரையும் பார்த்து நந்தசிரி இவ்வாறு கூறியபோது அதற்கு எல்லோரும் கையை உயர்த்தி ஆதரவளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66



# "நேர்மை திறனுடன் நடந்து கொள்"

அன்றைய மாலைப் பொழுதை நண்பர்களுடன் சந்தோசமாக கழித்து விட்டு வீட்டுக்குச் சென்ற கோபால் அவன் அம்மா தட்டில் போட்டு மூடிவைத்திருந்த உணவைச்சாப்பிட்டபின் படுக்கையில் விழுந்து கம்பளியை இறுக்கிப் போர்த்திக் கொண்டான்.

ஆனால் எவ்வளவு முயன்றும் அவனுக்குத் தூக்கம் வருவதாகத் தெரியவில்லை. பல்வேறு விசயங்களும் ஞாபகத்துக்கு வந்து அவனை தூங்க விடாமல் அலைக்களித்தன.

அவன் தனக்குக் கிடைத்திருக்கும் தலைவர் பதவியை நினைத்துப்பார்த்தான். சேதுபதிஎன்பவன்அந்தபதவியைவைத்துக்கொண்டு என்னவெல்லாம் கூத்தாடினான் என்று நினைத்துப்பார்த்தான். உண்மையில் சக்தி மிக்க ஒரு பதவி தான் அது என்பதை உணர்ந்தான். இனிமேல் தோட்டத்தில் எல்லாரும் தன்னைக்கண்டால் தனி மரியாதை கொடுப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஏன் தோட்டத்து அதிகாரிகள் 'பெரியதுரை', பொலிஸ்காரர்கள் எல்லாருமே இனி மரியாதை கொடுத்துப் பேசுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் அவன் துன்பம் வந்தபோதும் தனிமையை நாடிய தருணங்களிலும் அவர்கள் தோட்டத்து கிழக்கு மூலையில் நெடிது உயர்ந்து வான் நோக்கி நிமிர்ந்து காணப்பட்ட அந்த பர்வதம் போன்ற மலைச்சாரலுக்கு தான் செல்வான். அங்கிருந்த உயர்ந்த பாறைக்குன்றின் மீது ஏறிக் குந்திக்கொண்டு மணிக்கணக்கில் தன் மனதில் தோன்றும் எண்ணங்களை அசைபோடுவான். நிமிர்ந்து கம்பீரமாக எழுந்து நிற்கும் அந்த பர்வதத்தைப் பார்த்து பிரமித்திருக்கிறான். அந்த மலை தன்னை உற்று நோக்குவது போலவும் தன்னிடம் எதையோ சொல்வது போலவும் அவனுக்குத் தோன்றும்.

இப்போதும் அந்த நினைப்பு வந்ததும் அந்த மலைக்கு பேசும் சக்தி இருந்தால் அது தன்னிடம் என்ன சொல்லியிருக்கும் என்று நினைத்துப்பார்த்தான். அவனுக்கு என்னவோ தெரியாது பாரதியின் பாட்டுத்தான் ஞாபகத்துக்கு வந்தது. "அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே"

கோபாலுக்கு அந்த மலைமீது இருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது. அந்த மலையைப்போல உயர்ந்து விசாலித்து ஏனையவர்களுக்கு மத்தியில் எழுந்து நிற்கும் வாய்ப்பு இப்போது அவனுக்கும் கிடைத்திருக்கின்றது. அவன் மனதுக்குள் தலை வணங்கி அந்த பர்வதத்துக்கு நமஸ்காரம் தெரிவித்தான். மக்களுக்கான தனது சேவையின்போது நீதி நியாயம் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென உறுதி பூண்டான்.

அதனை அடுத்து அவன் ஞாபகத்துக்கு வந்து மனதைக் குழப்பிய மற்றுமொரு எண்ணம் தான் புஸ்பராணி தொடர்பானது. அவளைப்பற்றி நினைத்த போதே அவளது இன்னுடலின் சுகந்தம் அவன் நாசிக்குள் நுழைந்து தேகம் எங்கும் பரவுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவளை கண்ட மாத்திரத்தில் அப்போதுதான் மலரும் தாமரையைப்போல் பிரகாசிக்கும் அவளது அழகிய முகம் கண்முன் தோன்றியது. அவளை எப்படியாவது தன்னவளாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான். இப்போது தனக்கு மதிப்பு மிக்க ஒரு பதவி கிடைக்கப் பெற்றிருப்பது அதற்கு சாதகமாக அமையும் என்று அவனுக்குத்தோன்றியது.

தனக்குக் கிடைத்திருக்கும் தலைவர் பதவி பற்றி சிந்தித்த அவன் அதனுடன் சேர்ந்து சில அதிகாரங்களும் வந்து சேர்ந்திருப்பது தொடர்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்தான். நந்தசிரி அவனிடம் அன்று கூறியது போல அவன் பாராளுமன்ற அங்கத்தவர் பதவி போன்ற ஒன்றையே பெற்றிருக்கிறான் என தன்னையே கேட்டுக்கொண்டான். முதல் நாள் அவனது அம்மா அவனிடம் கூறியதும் ஞாபகத்துக்கு வந்தது.

"தம்பி, உனக்குக் கிடைத்திருக்கும் பதவி சாமானியமானதல்ல. இனிமேல் உனக்கு நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கின்றது. ஆனால் நீ உனது எதிரிகளி டம் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். முழு தோட்டத்துக்கும் தலைவர் என்ற படியால விரும்பிய வேலையை கேட்டு வாங்கிக்கலாம்."

"நான் என்ன சொல்றேன்னா தோட்டத்து மலைய விட ஸ்டோருல வேல கேட்டு வாங்கிக்க. இனிமே நீ மேட்டு லயத்துக்கு போயி பயலுகளோட சேந்துக்கிட்டு கச்சேரி நடத்திறதெல்லாம் உட்டுறனும். ஒரு கிழமைக்கு ஒருக்காவாவது மத்த டிவிசன்களுக்கும் போயிட்டு வரனும். அப்படி போகும்போது தொணைக்கி யாரை யாவது ரெண்டு பேர கூட்டிக்க. போற எடங்கல்ல எதிரிங்கல சம்பாதிக்க வேணாம். அது மாதிரி பொண்ணுங்க வம்பு தும்புக்கும் போவாத."

அவனது அம்மாவின் இந்த ஆலோசனைகள் அவன் தூக்கத்தை மேலும் குழப்பின. வானத்தில் இருந்து "பொட் பொட்" என்று கூரையில் விழும் பனித்துளிகளின் சத்தம் இரவின் மௌனத்தை பெரிதாகக் கூட்டிக் காட்டிக்கொண்டிருந்தது. அந்த சத்தம் அவனது குழம்பிப் போன மனதுக்கு மேலும் பூதாகரமானதாக ஒலிப்பதாகத் தோன்றியது. எப்படியோ அவனது மனது அமைதியைத்தழுவி உறக்கங்கொள்ள விடிகாலை இரண்டு மணியாகி விட்டது.

அன்றைய இரவில் அவன் சில மணித்தியாலங்களே உறங்கி எழுந்த போதும் அவனை குழப்பிய எல்லா எண்ணங்களும் மறைந்து இப்போது தெளிவடைந்திருந்தான். காலைப் பிரட்டுச் சங்கு நீண்டு ஓங்கி ஒலித்தபோது அவன் வழக்கமாக எழுந்திருப்பது போலவே எழுந்திருந்தான்.

பெரட்டுக்குச் செல்ல வேண்டுமே என்று நினைத்தபோது ஒரு புதிய எதிர்பார்ப்பு அவனுக்குள் உருவெடுத்தது. இன்று அவன் பெரட்டுக்கு போவது சாதாரண தொழிலாளியாக அல்ல. அவனுக்கு எப்படிப்பட்ட மரியாதை கிடைக்கும் என்ற கேள்வியுடனேயே அவன் பெரட்டுக்கு களம் நோக்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. பெரட்டுக்களத்தில் அவனை எல்லோரும் இன்முகத்துடன் வரவேற்றார்கள். அந்த இனிய வரவேற்பினை கோபாலும் புன்னகையுடன் தலைவணங்கி ஏற்றுக்கொண்டான்.

கண்டக்டர் வேலாயுதமும் அவனை இன்முகத்துடன் வரவேற்று "நம்ம புதிய தலைவர இன்னைக்கு எங்கே வேலைக்கு அனுப்புவது கங்காணி" என்று அன்றையதினம் கங்காணியாக பிரசன்னமாகி இருந்த பெரியண்ணனிடம் கேட்டார்.

சேதுபதித் தலைவர் வேலைக்கு வந்திருக்கவில்லை.

"முழுத் தோட்டத்துக்குமே தலைவரா வந்திருக்கிற ஒருவரை மலைக்கு அனுப்ப ஏலாது. ஸ்டோருக்கு அனுப்புறதுதான் நல்லது". சற்றே யோசித்து விட்டு பெரியண்ணன் கங்காணி கண்டக்டரிடம் கூறினார்.

"அது நல்லதுதான். மலைக்குப் போட்டால் எப்பவும் போல சேது பதித் தலை வரால தொந்தரவு இருந்து கொண்டே இருக்கும்" என்று கூறிய கண்டக்டர் கோபா லைப் பார்த்து புன்னகைத்தார்.

"கோபால் நேத்து உன்னைப்பார்க்க யூனியன் காரியதரிசி எஸ்.எஸ். நல்லுசாமி வந்திருந்தார் என்று கேள்விப்பட்டேன்".

"ஆமாங்க சேர்" என்றான் கோபால் பணிவாக.

"நல்லது கோபால் உன்னைப்போன்றவர்கள் தலைவரா வர்றது நல்லது தான். நீ தொழிலாளர்களின் பிரச்சினையை ஞாயமா கையாள்றதா எல்லோரும் பேசிக்கிட்டாங்க. தேவையில்லாம நிர்வாகத்தை பகைச்சிக்காம அதே நேரம் தொழிலாளிங்க பிரச்சினைகளையும் தீர்க்கப் பாக்கிறதுதான் நல்லது" என்று கூறிய கண்டக்டர் கோபாலுக்கு வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



67

# இன்றைய தேவை தொழிலாளரின் ஒற்றுமை

கோபாலுக்குக் கிடைத்த தலைவர் பதவியால் எல்லாவிதத்திலும் அவனது சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அவனுக்கு எண்ணத் தோன்றியது. ஒரு புறத்தில் புஸ்பராணியின் நினைவுகள் அவனை பல விதங்களில் வேறு பரிமாணங்களில் மாற்றிக் கொண்டிருந்தபோது மறுபுறத்தில் அவனுக்குக் கிடைத்திருக்கும் புதிய பதவி காரணமாக அவன் முற்றிலும் புதி யதொரு மனிதனாக மாறிக்கொண்டிருந்தான்.

அவன் பல்வேறு நினைவுகளுடன் தனது புதிய வேலைத்தளமான ஸ்டோருக்கு சென்றபோது அந்த வேலையில் அவனுக்கு ஒட்டுதல் இல்லாமல் இருந்தது. அவன் முன்புபோல் கொழுந்து மலையில் நண்பர்களுடன் சேர்ந்து கேலிக்கதைகள் பேசி புல்வெட்டி தேயிலைச்செடிகளை துப்புரவு செய்யும் வேலையையே விரும்பினான். அதுவே அவனுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது.

அவன் சற்றே மனவருத்தத்துடன் வேலையை ஆரம்பித்தபோதும் சிறிது நேரத்தில் அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. நந்தசிரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியவங்ச, விஜேபால ஆகியோரும் ஸ்டோருக்கே வேலைக்கு வந்தனர். கோபால் ஆச்சரியத்துடனும் மிகுந்த சந்தோசத்துடனும் அவர்களை வரவேற்றான்.

"நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. நீங்களும் இங்கே வேலைக்கு வருவீர்கள் என்று. நீங்கல்லாம் வந்தது நல்லதாப்போச்சு" என்றான் கோபால்.

"கங்காணி ஸ்டோருக்கு வேலைக்கு அனுப்ப முடியாதுன்னுதான் சொன்னாரு. இருந்தாலும் நாம இப்போது கன்டாக்கையாவுக்கு வேண்டிய ஆளா போயிட்டதால அவரால எங்க கோரிக்கையை தட்டமுடியல".

நந்தசிரிக்கு தொழிற்சாலையிலும் கூட நண்பர்கள் இருந்தார்கள். நந்தசிரியைக்கண்டதுமே அவர்களும் அவனுடன் பேச சந்தோசமாக வந்தார்கள்.

"நீங்களும் வந்திட்டீங்களா? ஸ்டோர்ல வேலை செய்றதுக்கு.... இனிமே சிரித்துக்கொண்டே சந்தோஷமாக வேலை செய்யலாம்" வந்தவர்களில் ஒருவன் கூறினான்.

"இங்கேயும் தொரசாமி மாமா போல ஒருத்தர் இருக்கிறார் நந்தசிரி. அவர் பெயரு முனுசாமி. அவரும் ஒன்னய மாதிரி நையாண்டி பேசக் கூடியவர்தான்" என்றான் மற்றொருவன்.

அங்கே தொழிற்சாலையில் கோபால், நந்தசிரி, ஆரியவங்ச, விஜயபால ஆகியவர்களுடன் ஏற்கனவே வேலை பார்த்து வந்த அமரபால, பாஸ்கரன், மரி யதாஸ், சிரிபால ஆகிய நண்பர்களும் இணைந்து கொண்டனர்.

அவர்களுடன்அங்கேநடுத்தர வயதைத்தாண்டியிருந்தமுனுசாமியும் இவர்களுடன் இணைந்து கொண்டார். இவர் துரைசாமிபோல் பொறுமை காப்பவர் அல்ல. சிறிது நையாண்டி பேசினாலும் கோபம் பொத்துக்கொண்டு வந்து விடும்.

நந்தசிரி ஆரம்பத்தில் அவரிடம் சென்று "எப்படி முனுசாமி மாமா சொகமா இருக்கிங்களா?" என்று கேட்டு பீடி ஒன்றையும் கொடுத்து அவரை தன்வசமாக்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். இதனை அவதானித்துக் கொண்டிருந்த கோபால் இன்னும் சில தினங்களில் அவர் நந்தசிரியின் நையாண்டி பேச்சுக்களை சகித்துக்கொள்ள முடியாமல் தடியொன்றை எடுத்துக்கொண்டு அவனை துரத்துவது போல் கற்பனை செய்து பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி யோசித்தபோது அவனுக்கு சிரிப்பு வந்தாலும் இப்போதுதான் இருக்கும் நிலையில் இத்தகைய சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுக்களுக்கு ஒத்தாசை வழங்குவது நல்லதல்ல என்று நினைத்துக்கொண்டான்.

மறுபுறத்தில் திடீரென தன் தலையில் சுமத்தப்பட்ட தலைவர் பதவியை தான் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்போகிறேன் என்று அவன் யோசித்தபோது அது அவனுக்கு பிரமிப்பு ஏற்படுத்துவதாக இருந்தது. அவனுக்கு அது தொடர்பில் முன்னனுபவம் எதுவும் இருக்கவில்லை என்பது தொடர்பில் அவன் கவலையடைந்தான். எனினும் அது தொடர்பில் தான் பின்னடையைக் கூடாதென்றும் அத்தகைய அனுபவங்களை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென்றும் திடசங்கற்பம் எடுத்துக்கொண்டான்.

அவனைப் பொறுத்தவரையில் அவன் ஒன்பதாவது வகுப்புவரை கல்வி கற்றிருந்தான்.

ஏனையவர்களை விட நன்கு எழுத வாசிக்கத் தெரிந்தவன். எனவே தொழிற்சங்க நடவடிக்கைகள், அவற்றின் வரலாறு செயற்பாடுகள் தொடர்பில் எழுதப்பட்ட நூல்களை வாங்கி வாசிக்க வேண்டுமென தீர்மானித்துக்கொண்டான்.

இத்தகைய நிலையில்தான் அட்டன் நகர சங்கக் காரியாலயத்தில் இருந்து ஞாயிறன்று நடைபெறவுள்ள தொழிற்சங்க செயலமர்வுக்கு அவனையும் வரும்படி அழைப்பு வந்திருந்தது.

அவன் மிக உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புடனும் அந்த செயலமர்வுக்குச் சென்றான். அந்தச் செயலமர்வு வாயிலாக தான் எதிர்பார்க்கும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அறிந்து கொள்ள முடியும் என்று கருதினான்.

அத்தகைய செயலமர்வுகளுக்கு அவன் புதியவன் என்பதால் பலரும் அவன் தொடர்பில் விசாரித்து அறிந்து கொண்டனர். அங்கு வருகை தந்திருந்த பல பேச்சாளர்களும் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களும் விரிவான தலைப்புக்களில் விரிவுரைகளையும் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

ஏற்கனவே பல போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தாம் எதிர்கொண்ட சவால்கள் பற்றி உணர்ச்சி பொங்க கூறியபோது கோபாலின் உணர்வுகளும் தூண்டப்பட்டு அவனுள்ளும் கிளர்ச்சி உணர்வுகள் தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய பேச்சுக்களில் இருந்து கோபால் ஒரு விடயத்தைத் தெளிவாகப்புரிந்து கொண்டான். தொழிலாளி என்பவன் மிகக் கடுமையாக உழைத்து மிகச்சொற்பமான கூலியைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகாரத்திலிருப்பவர்களின் சகல மட்டங்களிலும் மிதித்து ஒடுக்கப்பட்டு துன்பத்துக்குள்ளாக்கப்பட்டு கசக்கிப் பிழியப்படுபவர்கள்தான் தொழிலாளி என்பதை நன்றாக புரிந்து கொண்டான்.

அவன் முதன்முறையாக சோசலிசக் கோட்பாடுகள் பற்றி கேள்விப்பட்டான்.

அதனுடன் சம்பந்தப்பட்ட முதலாளித்துவம், ஜனநாயகம், சமதர்ம கோட்பாடுகள் போன்ற விடயங்கள் அவன் மனதில் ஆழமான பல கேள்விகளை எழுப்பின. இவற்றுக்கெல்லாம் உடனடியாக பதில்களை பெற்றுக்கொள்ள முடியாதென்பதும் அவனுக்குப்புரிந்தது.

பல்வேறு இன மக்கள் வாழ்கின்ற இலங்கையின் சமூக அமைப்புக்குள் தோட்டத்தொழிலாளி என்பவன் மிகக்கீழ் மட்டத்தில் வீழ்ந்து கிடக்கும் எல்லாராலும் மிதித்து நசுக்கப்படும் கையாலாகாதவனாக அவனுக்குத்தோன்றியது.

தம்மை மிதித்து நசுக்கும் முதலாளித்துவத்தை வெல்ல வேண்டுமாயின் முதல் நிபந்தனையாக தொழிலாளர் அனைவர் மத்தியிலும் ஒற்றுமை காணப்பட வேண்டுமென்பதும் அவர்களுக்கு வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை மிகக் கவனமுடனும் உரிய முறையிலும் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டுமென்பதையும் தெரிந்து கொண்டான்.

இது தொடர்பிலான பொறிமுறைகளையும் நடவடிக்கை செயற்திட்டத்தையும் முன்வைக்க வேண்டிய பொறுப்பு தொழிலாளர் தலைவனை சார்ந்தது என்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். இன்றைய காலகட்டத்தின் முதலா வது தேவை, இரண்டாவது தேவை, ஏன் மூன்றாவது தேவையும் கூட இதுதான் என்பதனை நினைத்த போது அவனது நரம்பு நாளங்கள் முறுக்கேறிப்புடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68



# தொழிற்சங்கவாதி அரசியல்வாதியாக முடியாது

கோபால் இணைந்திருந்த தொழிலாளர் சங்கம் ஹட்டனில் ஏற்பாடு செய்திருந்த தொழிற்சங்க செயலமர்வு பல்வேறு அடிப்படை உண்மைகளை அவனுக்கு கற்றுக்கொடுத்தது என்ற போதும் அந்த சங்கத்தின் உயர் பதவிகளில் இருக்கும் உத்தியோகத்தர்கள் அதன்படி நடந்து கொள்கிறார்களா என்ற ஒரு பாரிய கேள்வியும் அவன் இதயத்தின் ஒரு மூலையில் இருந்து எழத்தான் செய்தது. அதற்குக் காரணம் கொழும்பில் இருந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பொதுச் செயலாளரின் பேச்சாகும்.

அவரின் பேச்சு அங்கு வருகை தந்து உரையாற்றிய ஏனைய விரிவுரையாளர்களின் கருத்துக்களை தகர்த்தெறிவதாக இருந்தது. பொதுச் செயலாளர் நல்லுசாமி தனதுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஒரு தொழிற்சங்கத்துக்கு அதன் அங்கத்தவர்களான தொழிலாளர்கள் தான் முக்கிய தூண்கள். அவர்களின் ஆதரவை நாம் என்ன விலை கொடுத்தாவது பெற்றுக் கொள்ள வேண்டும். ஆடிக்கறக்கிய மாட்டை ஆடிக்கறக்கிறதும் பாடிக்கறக்குற மாட்டை பாடிக் கறக்கிறதும் போன்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தொழிற்சங்கத்தின் வேலை. என்ன காரணத்துக்காகவும் நாம் தொழிலாளர் பக்கம் சேரக்கூடாது. அவுங்களதான் நம்ம பக்கம் வச்சிக்கணும். தொழிற்சங்கத்த விட நமது அரசியல் கட்சி மிக முக்கியமானது. தொழிற்சங்கத்தவிட நம்ம கட்சிதான் நமக்கு சோறு போடுது. ஆதலால் ஒவ்வொரு தொழிற்சங்க அங்கத்தவனும் நமக்கு ஓட்டு போடுறத நாம உறுதி செய்து வச்சிக்கனும். அதுக்குத் தகுந்த மாதிரி செயற்படனும். ஒரு தோட்ட நிர்வாகம் ஒரு தோட்டத் தொழிலாளிய வேலை நீக்கம் செஞ்சா அதற்கான காரணத்தை தேடக்கூடாது. நாம நிர்வாகத்துக்கு எதிராதான் செயற்படனும்."

சங்கத்தின் பொதுச் செயலாளர் நல்லுசாமியின் பேச்சு கோபா லைப் பொறுத்தவரையில் புதிராக இருந்தது. அவர் அரசியல்வாதியா தொழிற்சங்கவாதியா என்பது புரியாமல் இருந்தது. உண்மையில் அவர்கள் தொழிற்சங்கத்துக்கூடாக அரசியல்தான் செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள அன்றைய நிலையில் அவனுக்கு போதுமான விபரம் தெரியவில்லை. அவர்கள் தொழிலாளர்களின் நலனைப் பற்றியல்ல தங்களின் சொந்த நலனைப் பற்றியே சிந்திக்கிறார்கள் என்பதை மட்டும் அவன் தெளிவாக விளங்கிக் கொண்டான்.

கோபால் தனக்குக் கிடைத்த சொற்ப இடைவெளி நேரத்தில் அங்கு வருகை தந்தோரிடம் பேச்சுக் கொடுத்தான். அவனுக்கருகாமையில் சென்கிளயார் தோட்டத்தலைவர் நல்லதம்பி, டெவொன் தோட்டத் தலைவர் பெரியநா யகம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் பேசிக்கொண்ட விடயங்கள் தொடர்பில் கோபால் மிகக் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். அவற்றையெல்லாம் கேட்க உலகில் இத்தகைய விசயங்களெல்லாம் உள்ளனவா என அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மாதா மாதம் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு தொழிற்சங்க பயிற்சிப் பாசறை கள் நடத்துதல். வருடாந்த பேராளர் மாநாடு நடத்துதல், உலக தொழிலாளர் ஸ்தாபன (I.L.O) அழைப்பின் பேரில் தொழிலாளர் பிரதிநிதிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு பயிற்றுவிக்கப்படுதல் போன்றன இடம்பெறுகின்றன என்றும் இவ்விதம் தலைவர்களும் தொழிலாளர் பிரதிநிதிகளும் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கும் மேற்படி உலக ஸ்தாபனம் பெருந்தொகை நிதியினை ஒதுக்கிக் கொடுக்கின்றதென்றும் அதில் பெரும் பகுதி யூனியன் தலைவர்களின் சொகுசு வாழ்க்கைக்கே செலவிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதெல்லாம் கோபாலுக்கு தெரிய வந்தபோது மனதுக்கு கஷ்டமாக இருந்தது.

அதனைத் தவிர தொழிலாளர் தலைவர்களில் இருந்து ஒரு குறித்த பிரிவினர் தெரிவு செய்யப்பட்டு தொழில் உறவு உத்தியோகத்தர் என நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு தொழில் ஆணையாளர் திணைக்களம், தொழில் நியாயமன்றுகள் என்பவற்றுடன் இணைந்து தொழிலாளர் பிணக்குகளை தீர்த்தல் தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சிகள் வழங்கி பயிற்றுவிக்கப்பட்டன. இவ்விதம் கோபாலுக்கு இப்போது ஒரு தொழிற்சங்கம் எவ்வாறு செயற்படுகின்றது. அதன் கட்டமைப்பு, உத்தியோகத்தர்கள், அவர்களுக்கிருக்கும் அதிகாரம் என்பன தொடர் பில் ஒரு பூரணமான அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

அவன் தொடர்ந்தும் அந்தக் கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் பங்குபற்றினான்.

அங்கு வந்திருந்த வேறு சிலரும் புதிதாக வந்திருந்த இளைஞனான கோபாலுடன் வந்து பேசினார்கள். அவர்கள் அனைவருமே சங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து விமர்சனம் செய்தார்கள்.

சங்கத்தின் தலைவர் பாராளுமன்றம் அமைச்சுப் பதவி என்று அமைவதால் அவர் தொழிற்சங்க விடயங்களில் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை என்றும் தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட எல்லா வேலை களையும் பொதுச் செயலாளர் நல்லுசாமி தன்தலை மேல் சுமந்து கொண்டு செய்வதாகவும் ஒருவர் குறிப்பிட்டார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த மற்றுமொருவர் "நல்லுசாமி பச்சைக் கள்ளன் என்றும் சங்க நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் நிதியை எல்லாம் அவன்தான் விழுங்கி ஏப்பம் விடுகிறான்" என்றும் கூறினார். "இன்னைக்கி இங்கு நடக்கிற இந்த செயலமர்வுக் கூட எவ்வளவு காசு ஒதுக்குனாங்கன்னு தெரியாது. ஆனா நமக்கு கொடுக்கிற சாப்பாடு தேத்தண்ணி பனிசு எல்லாம் எப்படி நாறுதின்னு பாத்தாலே இவிங்க இந்த நிகழ்வுக்கு எவ்வளவு செலவழிச்சிருப்பாங்கன்னு" வெளங்குதில்ல என்றார்.

இவர்கள் இவ்வாறு குசுகுசு என்று ஏதோ பேசிக் கொண்டிருப்பதை சற்று கவனித்துக் கொண்டிருந்த பொதுச் செயலாளர் நல்லுசாமிக்கு அவர்கள் தன்னையும் சங்கத்தையும் பற்றித்தான் இல்லாததும் பொல்லாததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறார்கள் என்பது விளங்காமலில்லை. குறிப்பாக டெவொன் தோட்டத்தலைவர் பெரிய நாயகத்தை அவருக்கு கொஞ்சாங்கூட பிடிக்காது. அவர் பெரிய நாயகத்தை முறைத்துப் பார்த்தார்.

டெவொன் தோட்டத்தலைவர் பெரிய நாயகம் தலைவருக்கு வேண்டப்பட்டவர் என்பதும் அவருக்குத் தெரியும். அந்த தைரியத்தில் தான் அவன் துள்ளிக் கொண்டு திரியிறான். அவனை சரியான சந்தர்ப்பம் பார்த்து பதவியில் இருந்து தூக்கிறனும் என்று மனதுக்குள் கருவிக் கொண்டார்.

நல்லுசாமி டெவன் தோட்ட தலைவரையே பார்த்து முறைத்துக் கொண்டிருந்ததைக் கவனித்த கோபாலுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவன் "அங்க பாரு ஐயா ஒன்னப் பார்த்துத்தான் மொறைக்கிராரு கூடிய சீக்கிரம் ஒன்னோட சீட்ட கழட்டிருவாருபோலதான் தெரியுது" என்று பெரியநாயகத்தைப் பார்த்து கூறினான்.

அதற்குப் பதிலளித்த பெரிய நாயகம் "அவரோட பருப்பெல்லாம் நம்ம கிட்ட வேகாது. அவரு என்னான்ன திருட்டுதனமெல்லாம் செய்யிறார்னு நம்ம கிட்ட சாச்சியோட ரிப்போர்ட் இருக்கு. அத எப்ப பெரியவருகிட்ட கொடுக்கலாம்னுதான் நானும் பாத்துக்கிட்டு இருக்கேன். நம்ம மேல கைவச்சார்னா அவரு கத கந்தலாயிடும்" என்று வீராப்பாய் பேசினார்.

அந்த நிமிடத்துடன் அன்றைய தொழிலாளர் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு முடிவுக்கு வருகின்றதென்றும் அவர்களுக்கு கேள்விகள் சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம் என்றும் ஏற்பாட்டாளர் அறிவித்தார். இதுவரை கொச கொசவென கதைத்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் மௌனமாயினர். அவர்களிடமிருந்து எந்த கேள்வியும் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்வேலுவின் புலம்பல்

கோபால் காலைச்சாப்பாட்டுக்கென அவன் அம்மா சுட்டு வைத்திருந்த ரொட்டித்துண்டொன்றை பிய்த்து இரண்டொரு துண்டுகள்தான் சாப்பிட்டிருப்பான். வெளியில் பெருங்கோஷங்கள் எழுந்தன. பலரும் தட தடவென மேலும் கீழும் ஓடிக்கொண்டிருந்தனர்.

ஏதோ பரபரப்பான காரியம் ஒன்று நடந்திருக்க வேண்டும் என்று கோபால் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே "கோபால், கோபால், கதிர வேலு மாமாவை பள்ளத்து லயத்தில் யாரோ கத்தியில் குத்திட்டாங்கலாம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகனும் லொறிய எடுத்துக்கொண்டு வரனும்" நந்தசிரியின் குரல் கேட்டு திடுக்கிட்ட கோபால் கையிலிருந்த ரொட்டித் துண்டை அப்படியே கோப்பையில் போட்டு விட்டு லயத்துக்கு வெளியில் பாய்ந்தான்.

"தம்பி.... தம்பி... தண்ணி குடிச்சிட்டு போ" என்று அவன் அம்மா அவசரமா டம்ளருடன் வந்த போது கோபால் அங்கிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரத்தில் அவன் பணிய லயத்தை நோக்கி இரண்டு படி மூன்று படியென பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தான்.

அவன் அம்மா வெளியே எட்டிப்பார்த்து விட்டு அவனைக் காணாது ஏமாற்றத்துடன் வீட்டுக்குள் சென்றாள்.

கோபால் பணிய லயத்தை சென்றடைந்தபோது அங்கே பெருங் கூட்டமொன்று கூடியிருந்தது. கோபால் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே சென்றான். அங்கே கதிரவேலு இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார். நந்தசிரியும் விஜயபாலவும் அவரை தூக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

கோபால் உடனடியாக காரியத்தில் இறங்கினான். அவன் வாயில் இருந்து வேக மாக கட்டளைகள் பிறந்தன.

"ஆரியவங்ச, ஓடிப்போய் நான் சொன்னதாகக் கூறி லொறியை எடுத்துக்கொண்டு வா லொறி ஸ்டோர்லதான் நிக்குது. விஜேபால வெட்டுப்பட்ட இடத்துக்கு மேல துணிப்பட்டியால கட்டும்போது இரத்தம் அதிகமாக வெளி யேறுது. கால மேலே உயர்த்தி பங்குக்கு மேல வை யாராவது ஓடிப்போய் இரண்டு படங்கு சாக்குகள் கொண்டாங்க" கோபால் கூடியிருந்தவர்களுக்கு கட்டளையிட்டான்.

லொறி வந்ததும் அதன் பின் கதவைத் திறந்து பின்புறம் இரண்டு படங்கு சாக்குகளை விரித்து கதிரவேலுவை கவனமுடன் அதில் கிடத்தினர்.

பின் விரைந்து லொறியை எடுக்குமாறு டிரைவர் குலரத்னவிடம் கோபால் கூறிவிட்டு முன்சீட்டில் பாய்ந்து ஏறினான். அவனைத்தொடர்ந்து நந்தசிரியும் முன்னால் தொற்றிக்கொண்டான். விஜேபால ஆரியவங்ச மற்றும் வேறு சிலரும் லொறியின் பின்னால் ஏறிக்கொண்டனர். லொறி தோட்டத்தின் பிரதான வாயில் கேட்டைத்தாண்டி லிந்துல வைத்தியசாலை இருந்த திசை நோக்கி விரைந்தது.

லொறியின் பின்புறத்தில் படங்குச்சாக்கில் படுத்திருந்த கதிரவேலுக்கு வலி தாங்க முடியாமல் வாய் குளறிக்கொண்டும் உடம்பு நடுங்கிக்கொண்டும் இருந்தது. அவர் தன்னைச்சுற்றி அமர்ந்திருந்த அந்த தோட்டத்து இளைஞர்கள் மூவரையும் மாறி மாறிப்பார்த்தார். அவருக்கு தனது சோகத்தை நினைத்து தொண்டை அடைத்தது. அதனை யாரிட மாவது சொல்லிவிட வேண்டுமென்று மனது துடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப்பாத்துக்க யாருமே இல்ல தம்பிகளா. எனக்குன்னு இருந்த ஒருத்தன் என்னய இந்த கதிக்கு ஆளாக்கிட்டான். சாராயம் குடிக்கவும், பீடி குடிக்கவும் சல்லி கேட்டு அடிக்கிறான். இன்னைக்கு சல்லி இல்லேன்னதும் கத்தியாலயும் குத்திட்டான். நான் இதையெல்லாம் யாருக்கிட்ட சொல்லி அழுவுறது"

அவர் தன் சோகக்கதையை அந்த இளைஞர்களிடம் சொல்லிப் புலம்பினார். அவர் சொன்ன வார்த்தைகள் லொறியின் முன் பக்கத்தில் அமர்ந்திருந்த கோபாலுக்கும் நந்தசிரிக்கும் கூட கேட்டன. அவர் அவ்வாறு தனது சோகத்தைக் கூறியபோது அவர் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென வழிந்தோடியது. அதனை துடைத்து விட்டுக்கொள்ள வேண்டுமென்று அவருக்குத்தோன்றவில்லை.

அவர் புலம்பலுடன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட கோபால். "கதிரவேலு மாமாவின் மகன் மகேந்திரன் கெட்டுப்போனதுக்கும் காரணம் தோட்டத்து வேலை யில் இருந்து அவன நிப்பாட்டுனது தான். அதன் பிறகு டவுனுக்கு போய் ஒவ்வொரு ஓட்டல்களுங்கல்ல அங்கேயும் இங்கேயும் வேலை கெஞ்சுக்கிட்டு இருந்தான். இப்படி எத்தன ஓட்டல்ல வேல செஞ்சிருப்பான். ஏதாவது ஒரு எடத்தில நெரந்தரமா இருக்கிறானா?" என்று அங்கலாய்த்தான் கோபால்.

லொறி இப்போது லிந்துல ஆஸ்பத்திரியை அடைந்து விட்டது. நந்தசிரி லொறியை நிறுத்துவதற்கு முன்னமே பாய்ந்து இறங்கி ஆஸ்பத்திரிக்குள்ள ஓடினான். சில நிமிடங்களில் நோயாளியை ஏற்றிச்செல்லும் தள்ளுவண்டிகளுடன் ஆஸ்பத்திரி சேவையாளர் இருவரும் ஒரு தாதிப்பெண்ணும் லொறியின் அருகில் வந்தனர். ஆரியவங்சவும் விஜயபாலவும் ஏனையோருடன் சேர்ந்து கதிர வேலுவை மெதுவாகத் தூ க்கி தள்ளுவண்டியில் நேராகக்கிடத்தினர்.

அவர்கள் எல்லோரும் சேர்ந்து தள்ளுவண்டியுடன் ஆஸ்பத்திரிக்குள் போக முற்பட்டபோது "எல்லோரும் மாடு மாறி எங்கே போறீங்க? நோயாளி மாத்திரம் தான் போகலாம். எல்லோரும் வெளியே போங்க" என்று கடுமையான குரலில் கத்தினான் ஆஸ்பத்திரி காவலாளி.

நந்தசிரி அவனை முறைத்துப் பார்த்தான். பின் அவனை அடிக்கப் போறவன் போல் அந்தப்பக்கம் வேகமாக நகர்ந்தான். அவனது எண்ணத்தைப்புரிந்து கொண்ட கோபால் அவனை தடுத்து இழுத்துப் பிடித்துக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்தா, வேண்டாம் இப்போது இது மாதிரி தேவையில்லா பிரச்சினைகளை தலைக்குமேல் போட்டுக்கொள்ள வேண்டாம்" என்றான்.

தன் வலது கையை இறுக்கிப்பிடித்திருந்த கோபாலின் கையை வேகமாகத்தட்டி விட்ட நந்தசிரி "நீ சொல்றதால விடுறேன். இல்லாட்டி இவனுக்கு நடக்கிறதே வேறு. இவன டவுன்ல வச்சி கவனிக்கலாம். சாயங்காலம் சாராயம் குடிக்க டவுன் பாருக்குத்தானே வருவான்.

அவன் நம்ம போல தோட்டத்து சனங்ககிட்டதான் அவனோட திமிரை காட்றான். காபோத்த சாராயத்த காட்டினா திமிரெல்லாம் போயிடும்"

சிறிது நேரத்திலேயே கதிரவேலுவுக்கு வெட்டுக் காயங்கள் பட்ட இடங்களில் தையல் போட்டு மருந்து கொடுத்து, தடுப்பூசியும் போட்டு ஐந்தாம் நம்பர் வாட்டில் அனுமதித்து விட்டார்கள். அவரை அவர்கள் நோயாளர்களை பார்க்கும் நேரம் வந்ததும் வார்ட்டில் போய் பார்த்தார்கள். அவர் மனம் பேதலிக்க அவர்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு நன்றி தெரிவித்துக்கொண்டார். அவருக்கு இவ்விதம் அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு வந்ததால்தான் சுகமான கட்டில் மெத்தையில் படுக்கலாம் என்று நினைக்க துக்கமாக இருந்தது.

அவர்கள் புறப்படும் நேரம் வந்ததும் அவர் அருகில் சென்ற கோபால் "கதிரவேலு மாமா, இது தொடர்பில் பொலிசில் வந்து விசாரிப்பார்கள். நீங்க உண்மைய அப்படியே சொல்லிப்புடுங்க என்ன" என்றான்.

என்றபோதும் கதிரவேலு மாமாவுக்கு பொலிஸில் அப்படிச் சொல்ல மனம் வரவில்லை .என்ன இருந்தாலும் பெத்த மகனல்லவா? அவர்கள் அனைவரும் விடைபெற்று சென்ற பிறகு பொலிஸ/க்கு என்ன விதத்தில் மாற்றி வாக்கு மூலம் கொடுப்பது என்பது பற்றியே அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா என்று அழைக்க ஒரு உறவு இல்லையே

தோட்டப்புறங்களில் தொடர்ச்சியாக பெய்து கொண்டிருக்கும் அடை மழை அம்மக்களின் பிரச்சினைகள் நிறைந்த வாழ்க்கைக்கு மேலும் துன்பம் சேர்க்கிறது. அன்றாட வேலைகளை அது கடுமையாக்கியது. சிலர் இது என்ன கரச்சல் என்று வேலைக்கு போகாமல் இருந்து விடுவர். கூரைகள் ஒழுகி வீட்டில் ஈரத்தன்மை இருந்து கொண்டே இருக்கும். விறகும் கூட ஈரம் படர்ந்து பற்ற வைக்க முடியாமல் புகைமண்டி கண்ணெறிச்சலை உண்டாக்கும்.

இதுக்கெல்லாம் மேலாக லயத்தை சுற்றி அழுக்கு நீர் நிறைந்து துர்க்கந்தம் வீசி நாறிக் கொண்டிருந்தது.

வீட்டில் இருந்து வெளியே வந்து நிலத்தில் கால் வைக்க முடியாதபடி அறுவறுப்பைத் தந்தது. தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கின்ற நிலையில் வானத்துக்கும் பூமிக்குமாக கொட்டிக்கொண்டிருக்கும் இந்த மழையை வெறுத்து அவர்கள் சபித்துக்கொண்டிருந்தனர்.

"இப்படியே இந்த மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிக்கிட்டிருந்தா எப்படி இந்த வருடம் தீபாவளி கொண்டாடுறதுனு தெரியல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவீட்டு சிவபாக்கியம் அன்னம்மாவுக்கு கேட்கும் அளவுக்கு சத்தமாகக் கூறியது கோபாலுடைய காதுகளிலும் கேட்காமல் இல்லை.

அதற்கு அன்னம்மாவும் சுத்தமாகவே பதில் சொன்னாள் "எப்படியும் இந்த வருடம் பெருநாள் கொண்டாடுறது சந்தேகம்தான்.

"சிவபாக்கியம் அன்னன்னைக்கு சாப்புடுறதுக்கே ஏதாவது தேட போலிம்கள்ல நிக்குறதுக்கே நேரம்பத்தல பாண்துண்டு ஒன்ன வாயில போட்டு கடிச்ச நாளே ஞாபகத்துல இல்ல. மாசி, மைசூர் பருப்பு கள்ளக் கடகாரன் கிட்டயும் இல்லங்குறான். அரிசிமா, கோதுமைமா, சீனி எல்லாம் இல்லாம பணியாரம் சுடுறதெப்படி? சேகு ராகாரன் அரசாங்கத்த பிடிக்க போராட்டம் நடத்துறான்னு ஏழை பாலைகளை பழிவாங்க அரசாங்கம் நெனைக்குது!!"

நாட்டில் பயிர்ச் செய்கை பிழைச்சுப்போய் பஞ்சகாலம் ஆரம்பித்ததில் இருந்து தோட்டத்து பெண்களின் பெரிய பிரச்சினை சாப்பாட்டுப் பிரச்சினையாகவே இருந்தது.

கோபாலைப் பொறுத்தவரை சாப்பாட்டுப் பிரச்சினை அவனுக்கு பெரிதாகப்படவில்லை. அவன் சாப்பாட்டுப்பிரியனும் அல்ல. வயிறு நிறைய சாப்பிடுவதற்கு போதுமான உணவு கிடைக்கவில்லையாயினும் கிடைத்த உணவை சாப்பிட்டுவிட்டு தன் வேலைகளில் மும்முறமாக ஈடுபட்டான். புஸ்பராணியின் நினைவு அவனுக்கு அவ்வப்போது அவன் மனதில் நச்சரிப்பைத்தந்து அவனை ஆட்கொண்டுவிடும். அத்துடன் தொழிற்சங்கவேலைகளையும் அவன் ஆர்வத்துடன் மேற்கொண்டதால் பசி தொடர்பான எண்ணங்கள் அவன் மனதில் இடம்பிடிக்கவில்லை"

அப்போது வெளியில் இருந்து யாரோ "கோபால் கோபால்" என கூப்பிடும் சத்தம் கேட்டது. அது நந்தசிரியின் குரல் என்பதை கோபால் உடனே இனங்கண்டு கொண்டான். அவன் எழுந்து சென்று நந்தசிரியை வீட்டுக்குள் அழைத்து வந்தான். அவனை அங்கிருந்த ஒரேயொரு புட்டுவத்தைப் போட்டு அமரச் செய்தான். நந்தசிரி மழையில் நன்கு நனைந்திருந்ததால் தயங்கித் தயங்கியே அதில் அமர்ந்தான். அவனுக்கு துடைத்துக்கொள்ள பழைய டவலொன்றை எடுத்துக் கொடுத்தான் கோபால்.

நந்தசிரி அவ்வேளையில் அங்கே வந்திருப்பதற்குக் காரணம் கோபாலை தியாகுவின் லயத்துக் காம்புராவுக்கு அழைத்துப்போகத்தான் என்று அன்னம்மா நினைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் நந்தசிரிமேல் அவளுக்கு தவறான அபிப்பிராயம் இருக்க வில்லை. கோபாலின் நண்பர்கள் அவனை கெடுக்கிறார்கள் என்று சொல்வ தற்கில்லை.

அவர்கள்தான் அவனுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பது அவளுக்கு நன்றாகத்தெரியும்.

அவன் சிங்கள இனத்தவனாக இருந்தும் தன் பிள்ளைமேல் இத்தனை நட்பாக இருப்பது கண்டு அவளுக்குப்பெருமையாகத்தான் இருந்தது.

அவள் அவர்கள் இருவருக்கும் தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வருவதற்காக அடுப்புப் பக்கம் சென்றாள்.

அவள் தேத்தண்ணி கொண்டுவரும் வரை பல்வேறு விடயங்கள் பற்றியும் நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

அன்னம்மாள் இரண்டு டம்ளர்களில் தேத்தண்ணியும் ஒரு போத்தலில் சிறு துண்டுகளாக உடைத்துப் போடப்பட்டிருந்த கருப்பட்டித் துண்டுகளையும் கொண்டு வந்தாள். இருவருக்கும் ஒவ்வொரு டம்ளரை நீட்டிய அன்னம்மா போத்தலில் இருந்து இரண்டு கருப்பட்டித் துண்டுகளை எடுத்து இருவருக்கும் பங்கு வைத்தாள்.

கருப்பட்டித்துண்டை வாங்கி முன்பல் நுனியால் ஒரு சிறு துண்டைக் கடித்து ருசி பார்த்த நந்தசிரி டம்பளரில் இருந்து ஒரு மடக்கு தேத்தண்ணியை ருசித்து உறிஞ்சிக்குடித்தான்.

மழையில் நனைந்ததால் குளிர் பிடித்துக்கொண்டிருந்த அவன் உடம்புக்கு அது மிக இதமாக இருந்தது.

"இந்த தேத்தண்ணி நம்ம தோட்டத்து சாயம் மாதிரி தெரியலையே. எங்கவாங்கினது, கருப்பட்டியும் ருசியா இருக்குது" என்று வினவினான் நந்தசிரி.

இந்த தேத்தூள் இங்கேயெல்லாம் கெடைக்காது நந்தா. தொங்க லயத்துல நம்ம பசுபதி அண்ணன் அல்துமுல்லையில் இருந்து கொண்டுவந்தது. நானும் பக்கத்து வீட்டு சிவபாக்கியமும் பாதி பாதியா பிரிச்சுக்கிட்டோம் கருப்பட்டியும் அங்கேருந்து கொண்டுவந்ததுதான். இங்கே விக்கிற கருப்பட்டியில் புத்து மண்ணை கரைச்சு கலக்குறாங்கலாமே என்று அங்கலாய்த்த அன்னம்மா இந்தாங்க இன்னொருதுண்டு எடுத்துக்காங்க தாராளமாக இன்னொரு துண்டையும் அவர்களுக்கு நீட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சிறு வயதிலேயே நந்தசிரி அம்மாவை இழந்து போயிருந்தான். அன்புக்கு ஏங்கிய அவன் மனதுக்கு அன்னம்மாளின் இந்த பிள்ளைப்பாசம் மனதுக்கு இதமளிப்பதாக இருந்தது. அன்னம்மாவும் கூட நந்த சிரியை பார்க்கும்போதெல்லாம் அவனை தனது மற்றுமொரு மகனாகவே நடத்தி வந்தாள்.

பல சந்தர்ப்பங்களில் நந்தசிரி கோபாலின் அம்மாவை தானும் அம்மா என்றே அழைத்திருக்கின்றான். அந்த அழைப்பில் தனக்கு "அம்மா" என்று அழைக்க ஒரு உறவு இல்லையே என்ற ஏக்கம் தொனிப்பதை அன்னம்மா அவதானித்திருக்கிறாள்.

நந்தசிரி கோபாலிடமும் அன்னம்மாவிடமும் விடை பெற்றான். நாளைக்கு சரி மழை ஓஞ்சா வேலைக்குப் போகனும் என்று கூறிக்கொண்டே தனது நைந்து உடைந்து போயிருந்த குடையை விரித்தான். அந்த குடை குடைக்குரிய வட்டமான தோற்றமே இல்லாமல் பாவாடையை சுருட்டிப்பிடித்த மாதிரி இருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் தானும் அவனுடன் சேர்ந்து வருவதாகக்கூறி கோபால் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். அன்னம்மா அதற்கு எதுவும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. கோபாலும் நந்தசிரியுடன் அந்த சின்ன குடைக்குள் இணைந்து கொண்டான். அவர்கள் இருவரும் அடுத்த கட்டமாக எங்கே போவார்கள் என்பது அன்னம்மாவுக்குத் தெரிந்ததுதான். அவர்கள் தியாகுவின் லயத்துக்குப்போய் வழமைபோல் பாட்டுக்கச்சேரியை ஆரம்பிப்பார்கள்.

அங்கே ஏற்கனவே நண்பர்கள் சிலர்வந்து சேர்ந்திருப்பார்கள். இவ்விதம் மழை நாளில் எங்குமே போக முடியாத தருணங்களில் அவர்களுக்கு புகழிடம் அழிப்பது தியாகுவின் பாட்டுக்கச்சேரிக்குப் பயன்படும் லயத்துக் காம்புறாதான். இன்னும் சில நிமிடங்களில் அங்கே பாட்டுக்கச்சேரி ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் வந்தால் கண்ணும் தெரியாமல் போகும்

புஸ்பராணி தான் படிக்கும் மேசையில் அமர்ந்தவாறே ஆழ்ந்த யோச னையில் மூழ்கியிருந்தாள். இப்போதெல்லாம் அவள் கோபாலை நினைக்காத நாளே கிடையாது எனலாம். என்ன காரணத்துக்காக அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்தோம் என தன்னையே கேட்டுக் கேட்டு அவள் மனம் குடைந்து கொண்டிருந்தது. அவன் தனக்கு தூரத்து சொந்தக்காரனாக இருந்தபோதும் தமது பெற்றோர் ஒரு போதும் அவனை திருமணம் செய்ய அனுமதிக்கமாட்டார்கள் என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும். இருந்தபோதும் அவள் மனது மீண்டும் மீண்டும் கோபாலின் நினைவை நாடியே சென்றது.

ஒவ்வொரு வருடமும் பங்குனி உத்தர திருவிழாவின்போது மஞ்சள் நீராடி சாமி சப்பரம் வீதி உலாவரும். அதன்போது சப்பரத்துக்கு முன்னாள் தோட்டத்து இளைஞர்களின் வாத்தியக் குழுவினர் டிரம் செட் அடித்துக்கொண்டும் ஆடிப்பாடிக் கொண்டும் செல்வார்கள். கோபால் அந்த வாத்தியக் குழுவில் பிரதான அங்கத்தவன். அவன் டிரம் செட் அடிக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வித்தியாசமான அலாதியான பாணியை பின்பற்றுவான். அதனால் அவன்பால் எல்லோரும் கவரப்பட்டனர். இதற்கு புஸ்பராணி மட்டும் விதிவிலக்கல்ல.

தோட்டத்து இளைஞர் யுவதிகள், தோட்ட உத்தியோகத்தர்கள் பிள்ளைகள் எல்லோருமே அவர்கள் ஊர்வலமாக தம்மை கடந்து செல்லும்போது கோஷமிட்டு உற்சாகமாக மூட்டினர். சிறுபிள்ளைகள் "கோபால் அண்ணா கோபால் அண்ணா" என்று சத்தம் போட்டுக் கூவினர்.

புஸ்பராணி கூட அன்று தன்னை நன்கு ஒப்பனை செய்து அலங்கரித்துக் கொண்டு ஒரு அழகுராணி போலதான் திருவிழாவுக்கு போய் இருந்தாள். இருந்தாலும் தன்னைவிட எல்லோருக்கும் கோபால் தான் அதிக கவர்ச்சிப் பொருளாகத் தென்படுகின்றாள் என்று நினைத்தபோது அவன்மீது அவளுக்கு பொறாமையாகக் கூட இருந்தது. அந்த பொறாமை உணர்வே அவள் அவனை மீண்டும் மீண்டும் நினைக்க தூண்டியது. அவ்விதம் அவள் ஒவ்வொரு முறை யும் கோபாலைப் பற்றி நினைத்தபோது அவனது சுட்டித்தனமும் துடிப்பும் மிக்க துருதுருத்த முகம் அவள் கண் முன்னே தோன்றியது. அவனது உடலும் முகமும் பார்ப்பவரை கவரும் விதத்தில் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

இதன் காரணமாக புஸ்பராணியின் மனதுக்குள் அடிக்கடி நுழைந்து அவள் மனதை வருடிப் பார்க்கும் அலங்காரப் புருஷனாக கோபால் மாறிப் போனான். அவனும் கூட அவள் மனதில் அத்து மீறிப் புகுந்து அவள் மனதை ஆக்கிரமித்து குத்துக்கல்லாட்டம் அமர்ந்து கொண்டான். அன்றில் இருந்து இன்று வரை அவளது செயல், எண்ணங்கள், விருப்பு வெறுப்புக்கள் உணர்வுகள் எல்லாமே கோபாலின் நினைவலைகளை சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிந்தன.

"என்னடி உனக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. நீ அந்த கோபாலின் வலைக்குள் மொத்தமாக சிக்கிவிட்டாய். ஆனா யோசிச்சுப்பார். உன்ன அவனுக்கு கட்டிக்கொடுக்க ஒங்க வீட்டுல யாரும் அனுமதிக்கப் போறதில்ல. ஒங்கப்பா தோட்டத்தில் கூலி வேலை செய்றவனுக்கு ஒன்ன கட்டிக்கொடுப்பாருன்னு நெனைக்கிறியா?"

புஸ்பாவின் அசட்டுத்தனங்களை சகித்துக் கொள்ளமுடியாத அவள் தோழி சீத்தா பலமுறை பொறுமையிழந்து இக்கேள்வியை கேட்டிருக்கிறாள்.

"எனக்குன்னா கோபாலை ஒரு கூலி வேலை செய்றவனா பாக்கமுடியல சீத்தா. அதற்கு என் மனம் இடந்தராது. இனிமே இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனை என்மனம் நினைத்துப் பார்க்குமான்னு எனக்கு புரியல. என்னால கோபால மறக்கமுடியாது."

புஸ்பா நீண்ட பெருமூச்சொன்றை விட்டவாறே பேசினாள். அவள் தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

"எங்கப்பா கூட ஆரம்பத்தில தோட்டத்தில கூலி வேல செஞ்சவருதான். அவரு பெறகு முன்னேறலயா? எங்கப்பாவுக்கு முடியும்னா ஏன் கோபாலுக்கு முடியாது. இன்னைக்கு கோபாலுக்கு சங்கத் தலைவர் பதவி கிடைச்சிருக்கு. எங்கப்பா பாடசாலைக்கே போனது கெடையாது. கோபால் ஒன்பதாவது பாஸ் பண்ணியிருக்காரு. அத்தோட இசையில் ஆர்வமுள்ள இளைஞன்."

புஸ்பா தன் தீர்மானத்துக்கு நியாயம் கற்பிக்க முயற்சி செய்தாள். அவளுக்கு இப்போது தேவையாக இருந்ததெல்லாம் கோபாலை இரகசியமாக சந்தித்து அவன் தோளில் சாய்ந்து கொண்டு சுதந்திரமாக கிளி மொழியில் காதல் சம்பாசணை செய்ய வேண்டும் என்பதுதான். என்ற போதும் சூழ்நிலை காரணமாக அவர்கள் சந்தித்துக் கொள்ள போதுமான சந்தர்ப்பங்கள் அமையவில்லை. ஆதலால் அவள் மனம் எப்போது கோபாலை சந்திக்கலாம் என பரிதவித்துக் கொண்டிருந்தது.

அவர்கள் சந்தித்துக் கொண்டபொழுதுகளில் எல்லாம் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து கண்களால் காதல் மொழி பேசிக் கொண்டார்களேயன்றி தம் திருமணம் தொடர்பாக பேசி ஒரு தீர்மானத்துக்கு வர அவர்கள் ஒரு போதும் எண்ணவில்லை. அப்படி நினைக்கக் கூட அவர்களுக்குப் பயமாக இருந்தது. அதனைப் பற்றி சிந்திப்பதற்கான தைரியம் அவர்கள் இருவருக்குமே இருக்கவில்லை.

ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் இதுபற்றி அடுத்தமுறை பேசலாம் என்று அந்த விடயத்தை மிக இலகுவாகப் பின்போட்டு வந்தனர். அவர்கள் எவ்வளவோ விடயங்களை பேசவேண்டும் என்று மனதில் ஆர்வமுடன் எண்ணிக் கொண்டு வந்தபோதும் ஒருவரை ஒருவர் கண்டதுமே எண்ணிக் கொண்டு வந்தவைகள் எல்லாம் மறந்து போய் காதல் திரண்டுவந்து தொண்டையை அடைக்க அப்படியே சமைத்திருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் உரசி அமர்ந்து கொண்டு காதலின்பத்தை மாத்திரமே அனுபவிப்பதில் மாத்திரமே காலத்தை கடத்தினார்கள். அவர்களின் மனங்களில் காதல் என்ற வண்டு ரீங்காரமிட்ட வண்ணமே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இருந்த போதுதான் மிகச் சிரமப்பட்டு அட்டன் நகரில் அவர்கள் சந்திப்பது என்று ஏற்பாடு செய்து கொண்டனர் .அதன் பிரகாரம் அவர்கள் பஸ் நிலையத்தில் சந்தித்து பின் சினிமா படம் ஒன்று பார்ப்பதற்காக தியேட்டருக்குச் சென்றனர். பக்கத்தில் ஆட்கள் இல்லாமல் பார்த்து ஒரு மூலையில் போய் அமர்ந்துக் கொண்டனர்.

தன்மனதில் முடங்கிக்கிடந்த அந்தக் கேள்வியை புஸ்பாவிடம் கோபால் தயங்கித் தயங்கிக் கேட்டான்.

"ஏன் புஸ்பா, நம் இருவராலும் வாழ்க்கையில் இணைய முடியுமென நீ நம்புகிறாயா" இந்தக் கேள்வியால் மனங் குழம்பிய புஸ்பா அவன் கரங்களை அணைத்துப் பிடித்தாள்.

"நான் அதைப் பத்தி யோசிக்க விரும்பவில்லை கோபால். நினைக்கவே பயமாக இருக்கிறது" அவள் அவன் முகத்தை பார்க்காமலே கூறினாள்.

"உங்கள் வீட்டில் நாம் இணைய கட்டாயம் சம்மதிக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். அதனால் நான் கூப்பிட்டவுடன் நீ என்னுடன் வந்துவிட தயாராக இருக்கவேண்டும், என்ன?"

"எனக்கு தெரியும் கோபால். எங்கள் வீட்டில் சம்மதிக்க மாட்டார்கள் என்று.அதனை தெரிந்து கொண்டுதான். நான் உங்களை காதலிக்கவே ஆரம்பித்தேன். நாம் வருவதை உள்ளது உள்ளபடி எதிர்கொள்வோம்" அவள் உறுதியாகக் கூறினாள். அதைக் கேட்டதும் கோபாலின் உதட்டில் புன்னகை ஒன்று தோன்றியது. அவன் உடனேயே அவளை தன்னவளாக்கிக் கொள்ள நினைத்தான். அதற்கேற்றாற் போல் படம் ஆரம்பமாவதற்கு அடையாளமாக மின்மிளக்குகள் அணைக்கப்பட்டன. அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டு உதட்டில் உதடு பதித்தனர். அடுத்து வந்த மூன்று மணிநேரங்களுக்கு அவர்கள் காதலில் மயங்கி மூழ்கிக் கிடந்தனர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறந்தகிளி திரும்பி வருமா?

கோபாலும் புஸ்பராணியும் அட்டனில் சந்தித்து தம் காதலை உறுதி செய்து சில வாரங்களே கழிந்திருந்த நிலையில் அந்த அதிர்ச்சி தரும் செய்தி கோபாலுக்குக் கிடைத்தது.

கோபாலும் விஜேபாலவும் தேயிலை நாத்துத்தவறணையில் வேலை செய்து முடித்து விட்டு பள்ளத்தில் ஓடைக்கரைக்குச் சென்று கைகால் முகங்கழுவிக்கொண்டு வந்தபோது நந்தசிரியும் ஆரியும் அவர்களைத் தேடிக்கொண்டு வந்தனர்.

"நந்தசிரி வேலை முடிஞ்சி இப்பயா வாரீங்க.... இல்ல வெல்லனாவே வந்திட்டீங்களா?"

"இப்பத்தான் மச்சான் வந்தோம். அங்கே புல்லு மலையில நீங்க ரெண்டு பேருமே இல்லாம வேலையே ஓடல. நாசமாப்போன கங்காணி வேற நச்சரிச்சிக்கிட்டே இருந்தான்". நந்தசிரி சுவாரஸ்யம் இல்லாமலும் கோபாலின் முகத்தைப் பார்க்காமலும் பேசினான். அவனைப் பார்க்க ஏன் இன்னைக்கு அவன் வித்தியாசமாக இருக்கிறான் என்று கோபாலுக்குத் தோன்றியது.

ஆரியவங்ச கோபாலை நேரடியாகப் பார்க்காமல் ஓரக்கண்ணால் திருட்டுத் தனமாகப்பார்த்தான். நந்தசிரி எப்படி விசயத்தை வெளியே கொண்டு வருவதென தயங்கிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரியின் முகத்தையும் ஆரியவங்சவின் முகத்தையும் மாறி மாறிப்பார்த்த கோபால் ஏதோ விசயம் பிழைத்துப்போயுள்ளது என்று ஊகித்தான்.

"ஏன்டா ஒரு மாதிரியா இருக்கீங்க? என்னடா நடந்துச்சி? எதையோ மறைக்கிறீங்க சொல்லுங்கடா. கங்காணி! ஏதும் சொன்னானா?" கோபால் ஆரியவங்சவின் தோளைப்பிடித்து உலுக்கினான்.

அவர்கள் எல்லோரும் சில கணங்கள் மௌனமாக இருந்தார்கள். அந்த செய்தியை சொல்லும் தைரியம் நந்தசிரிக்கில்லாததால் விஜேபாலவே மௌனத்தைக் கலைத்தான்.

"புஸ்பராணியை நேத்து இரவு அவளோட அப்பன் இந்தியாவுக்கு கூட்டிக்கிட்டு போய்ட்டானாம்....." தயங்கித் தயங்கி அவன் சொன்ன அந்த செய்தி கோபா லின் உச்சி மண்டையில் சம்மட்டியால் அடித்தது போல் வேதனையை தந்தது.

"ஆமா.... கோபால் இனி உனக்கு புஸ்பராணி கிடைக்க மாட்டாள். நீ அவளை மறந்து விட வேண்டியது தான். உங்கள் தொடர்பு அவளது அப்பனுக்கு எப்படியோ தெரிந்து போய்விட்டது". நந்தசிரி அந்த செய்தியை உறுதி செய்தான்.

கோபாலுக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. அவன் கண்கள் சிவந்து பிதுங்கத் தொடங்கின. தலை வெடித்து விடும்போல் இருந்தது. இமைகள் படபடவென அடித்துக்கொண்டன. இருதயம் தீப்பற்றிக் கொண்டது போல் எரிச்சல் தந்தது. தொண்டை வரண்டு போய் விட்டது.

எச்சிலைக்கூட விழுங்க முடியவில்லை. அவனால் பேசக்கூட முடியவில்லை. நாக்கு கட்டுப்பாட்டை இழந்து போய் விட்டது.

நண்பர்கள் மூவரும் கோபாலைக்கட்டிப்பிடித்து ஆறுதல் படுத்தினர். கோபாலுக்கு கொஞ்சம் கொஞ்சமாக போன உயிர் திரும்பி வருவது போல் இருந்தது. அவன் கொஞ்சம் கொஞ்சமாக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அன்றொரு நாள் அவனும் புஸ்பராணியும் அட்டன் புகையிரத நிலையத்தில் ஒன்றாக இருக்கும்போது தோட்டத்து வாத்தியார் அம்பலவாணர் அவர்களை ஒரு மாதிரியாக பார்த்து விட்டுச் சென்றது கோபாலுக்கு நினைவுக்கு வந்தது. அம்பலவாணர் கதிரேசனின் நல்ல நண்பர் என்பதும் ஞாபகத்துக்கு வந்தது. அப்படியானால் அம்பலவாணர்தான் விசயத்தை கதிரேசனிடம் பத்த வைத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் அவ்விதம் பொது இடத்தில் அவளை சந்தித்தது தவறு என இப்போது உணர்ந்து வருந்தினான்.

தனது முட்டாள் தனமே அவளை இழக்க நேர்ந்ததற்கு காரணம் என தன்னையே நொந்து கொண்டான்.

"இதெல்லாம் வாழ்க்கையில் நடக்கிறதுதான் கோபால். இதனை ஒரு விபத்து என மனதை தேற்றிக்கொள்."

"உலகத்திலேயே அவள் மட்டும்தான் அழகி என்று அவள் நினைக்கிறாள். அவளோட தோல் மட்டும்தான் செவப்பு. அவள புடிச்சிக்கிட்டிருக்கிற அந்த அகங்காரத்தால அவ மூஞ்சி எப்போதும் மூதேவி மாதிரித்தான் இருக்கும். அவ ஒரு அறங்கச்சி. அவள மறந்துடுறதுதான் நல்லது". நந்தசிரி வேண்டுமென்றே புஸ்பராணி மீது கோபாலுக்கு வெறுப்பேத்துவதற்காக அவளை திட்டிப்பேசினான்.

இருந்தாலும் கோபாலுக்கு அவ்விதம் நந்தசிரி அவளை கேவலமாக பேசி யது தொடர்பில் பிடிக்கவில்லை.

புஸ்பராணியின் சம்மதத்துடன் அவளை அழைத்துப் போயிருக்க முடியாது என அவன் பூரணமாக நம்பினான். ஏதாவது பொய் சொல்லித்தான் அவளை அழைத்துப்போயிருக்க வேண்டும் என்று அவன் மனதுக்குப்பட்டது. கோயிலுக்குப் போகனும் நேர்த்திக்கடன் வைக்கனும்னு சொல்லியிருப்பார்கள்.

இந்த மாதிரிப்பொய்களுக்கு பெண்கள் இலகுவில் ஏமாந்து விடுவார்கள் என்று அவன் மனம் எண்ணியது. சிலவேளை போய்ட்டு அவள் திரும்பி வந்தாலும் வருவாள் என்ற நப்பாசையும் கூடவே எழுந்தது. ஆனால் பறந்தகிளி திரும்பி வருமா?

"சரி... சரி... அதையே நெனச்சிக்கிட்டு இங்கேயே இருக்க முடியாது. பொறப்படுங்க ரோட்டு கடையில போய் ஏதாவது சாப்பிட்டுட்டு போவம். கோபால் இந்த விசயத்த ஒன்னால லேசா மறக்க முடியாதுன்னு எங்களுக்குத் தெரியும். ஆனாலும் நீ பின்னடைந்து விடக்கூடாது. உனக்கு முன்னே செல்ல வேண்டிய அவசியம் பெரிதாக உள்ளது. நீ இப்போது சாதாரண தனி மனி தன் இல்லை. நீ நாலு டிவிசனுக்கும் தலைவர். உழைக்கும் வர்க்கத்துக்கு வழிகாட்ட வேண்டியவன். இந்த வீணாப்போன பொம்பள புள்ளைக்காக நமது வாழ்க்கையை வீணடித்துக் கொள்ள வேண்டுமா? யாரு உன்னை விட்டுப்போனாலும் நாங்கல்லாம் கடைசிவரை உன்னோடதான் இருப்போம்". நந்தசிரி இவ்விதம் கூறி எல்லாரையும் அழைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எல்லோரும் ரோட்டுக்கடைப்பக்கம் கூட்டமாக நகர்ந்தனர். கோபால் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து விட்டவன் போல் உணர்ந்தான். புஸ்பராணியில்லாத வாழ்க்கை சூனியமானதாக இருக்கும் என்று அவன் மனது கூறியது. அவன் அவர்கள் பின்னால் மந்தையுடன் ஆடொன்று அள்ளுண்டு செல்வதுபோல் சென்றான்.

அவர்கள் மத்தியில் நிலவிய மௌனத்தை கோபால்தான் கலைத்தான். "நந்தா என்னால் புஸ்பராணி இல்லாமல் வாழ்வதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

நான் அவளைத்தேடி இந்தியாவுக்குப்போகப்போறேன். ஆம் நான் போய்த்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்". கோபால் நந்தாவிடம் பரிதாபமாகக் கூறினான்.

"இதில் அவசரப்பட்டு ஒன்னும் பண்ண முடியாது கோபால். உண்மையில் அவளை என்ன சொல்லி கூட்டிப் போயிருப்பார்கள் என்று தெரியாது. கோபால். நாம் சற்று பொறுத்திருந்து ஏதாவது தீர்மானிக்கலாம். நீ எம்.ஜி.ஆர்., சிவாஜி படத்தில் வாற மாதிரி காதலியைத் தேடிக்கொண்டு போய் வில்லனுடன் சண்டை போட்டு மீட்கிறது உண்மை வாழ்க்கையில் நடக்காது கோபால். கொஞ்சம் பொறுத்துப்பார்ப்போம்"

நந்தசிரி ஆறுதல் கூறி கோபாலை ஆசுவாசப்படுத்தியபோதும் அதனால் எல்லாம் கோபாலின் வேதனை தணிந்ததாக இல்லை. கோபால் ஓடைக்கருகில் இருந்த கற்பாறை ஒன்றில் அமர்ந்தான். ஏனையவர்களும் அப்படியே அமர்ந்தார்கள்.

"புஸ்பா, என் அன்பின் இனிய புஸ்பா, இனிமேல் நீ என்னைப்பார்க்க வரமாட்டாயா? இனிமேல் அதிகாலையில் நீ பாடசாலைக்குச்செல்லும் போது உன்னை சந்திக்க முடியாதா? ரயில் பாதையில் கரங்கோர்த்துக் கொண்டு நடந்து சென்றபோது என் கையை மட்டுமல்ல என் உணர்ச்சிகளையும் சேர்த்தே கிள்ளிப்பார்த்தாயே! அன்று அட்டன் சினிமாத்தியேட்டரில் நம் காதலை உறுதி செய்தோமே! அது பொய்யா? கோபாலின் மனது புலம்பியது. அவன் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அந்திப்பொழுது மாங்கி அந்தகாரம் சூழ்ந்தது. அவன் வாழ்விலும்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்சம் தலை விரித்தாடிய காலமது...

அடுத்து வந்த சில வாரங்கள் கோபால் மனதில் ரணகளமாகவிருந்தன. அவன் குந்திய இடத்தில் குத்துக் கல்லாட்டம் மணிக்கணக்கில் பித்துப் பிடித்தவன் போல் எதனையோ வெறித்துப் பார்த்துக்கொண்டு சமைந்து போயிருந்தான். அவனது பரிதாப நிலைமை கண்டு அன்னம்மா கலவரப்பட்டாள். அவனுக்கு என்ன நடந்ததென விசாரித்துத் தெரிந்து கொண்டபோது அவளுக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது.

சிலநாள் இரவுகளில் அவன் அதிகமாக சாராயம் குடித்து விட்டு வந்திருந்ததை அன்னம்மா உணர்ந்தபோது தன் மகனைப்பற்றி நினைக்க அவளுக்கு கவலையாக இருந்தது. கோபாலின் வாழ்க்கை விரும்பத்தகாத திசை நோக்கி நகர்வதை அவள் அவதானித்தாள். இதைப்பற்றி அவனுடன் பேச வேண்டுமென்று நினைத்தாள்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. கோபால் விடிகாலையில் கம்பளியை நன்கு போர்த்திக்கொண்டு தூங்கி வெகு நேரங்கழித்தே எழுந்திருந்தான். அவனுக்குத் தேத்தண்ணி ஊத்திக் கொடுத்துவிட்டு அன்னம்மா அவனுடன் பேச்சுக் கொடுத்தாள்.

"தம்பி இப்ப நீ முந்தி மாதிரியில்லை. எல்லாப்பழக்கங்களும் மாறிப்போயிருச்சி. அடிக்கடி சாராயம் குடித்துவிட்டு வரப்பழகி இருக்கிற. நீனும் ஓங்க அண்ணனை போல குட்டிச்சுவரா போகாம இருக்கனும்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு பயமா இருக்கு. இதெல்லாம் ஒண்டியா இருக்கிறதுனால வாற பிரச்சினைதான்" கோபாலுக்கு தன் அம்மா கூட்டிக்கழித்து எதைப்பற்றி பேச வருகிறாள் என்பது புரிந்தது. சிலவேளை தான் புஸ்பராணியை நேசித்த விசயம் அவளுக்குத் தெரி யாமல் இருக்குமோ என நினைத்தான்.

"இந்தத் தோட்டத்தில இல்லாட்டியும் பரவால்ல வேறு தோட்டத்தில் இருந்தாவது நல்ல பொண்ணா பார்க்கும் படி நான் சில பேர்கிட்ட சொல்லியிருக்கேன்".

கோபாலுக்கு அவள் செல்வதைக் கேட்க எரிச்சலாகவும் கோபமாகவும் இருந்தது.

"நான்தான் சொல்லியிருக்கேன்ல எனக்கு பொம்பள தேட வேணாம்னு......." கோபால் கோபத்தில் சத்தமாக பேசினான்.

"தம்பி நான் சொல்றதையும் கொஞ்சம் கேளு. எனக்குத் தெரியும் நீ கதிரேசன் பொண்ணு மேல ஆசை வச்சிருந்த விசயம். ஆனா அவன் அறங்கப் பய ஒனக்கெல்லாம் தன் பொண்ண கட்டி வைக்கமாட்டான்."

"அதுதான் அவள ஏமாத்தி இந்தியாவுக்குக் கூட்டிப்போய் மாப்ள பார்க்கிறான். நீ அந்த புள்ளயோட நெனப்ப உட்ரு. இந்த தோட்டத்தில கூட எத்தன சிறுக்கி மவ ஒங்கூட வரத்தயாரா இருக்குறாளுகன்னு எனக்குத் தெரியும். போனது போச்சு அதையே நெனச்சுக்கிட்டிருக்காத. ஊரு ஒலகத்தில வேற பொம்பளைங்களா இல்ல?"

கோபால் தன் அம்மாவின் பேச்சைக் கேட்டு விரக்தியுடன் சிரித்தான். அவனுக்கு அவன் அம்மா மீது இப்போது கோபம் வரவில்லை. அனுதாபமே மேலோங்கியது.

"உனக்குத் தெரியாதாம்மா? நான் அந்த புஸ்பராணி புள்ளைய மனதார நேசிச்சேன். அவள என்னால எப்படி மறக்க முடியும்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நீ நெனக்கிறீயா? எம் புள்ளைய எனக்குத் தெரியாதா? ஒம்பது மணி வரைக்கும் போத்திக்கிட்டு தூங்குகிற பய. காலையில ஆறுமணிக்கெல்லாம் எழுந்திருச்சி பவுடரும் பூசிக்கிட்டு போறப்பவே நான் வெசாருச்சி தெரிஞ்சுக்கிட்டேன். ஒம் மனச நோகடிக்க வேணாம்னுதான் சும்மா இருந்திட்டேன். அதேபோல அந்த நாதாரி மவ பய கதிரேசன் இதுக்கு ஒத்துக்க மாட்டாங்கிறதும் எனக்கு தெரிஞ்சதுதான். இதுக்கெல்லாங் காரணம் அவன் கிட்டயிருக்கிற பணங்காசுதான். அவனுங்கூட ஆரம்பத்தில தோட்டத்துல புல்லு வெட்டிக்கிட்டு திரிஞ்சவன்தான். எங்களுக்கு தெரியாதா? இப்பத்தான் சல்லி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம், காசு எல்லாம். சல்லி மட்டும் இருந்தா என்ன வேணும்னாலும் செய்யலாம். தோட்டத்து ஆளுங்க சல்லி இருக்கிறவனுங்களை கடவுள்னு நெனைக்கிறாங்க. ஒருத்தன் ரெண்டு பேர்தான் அப்படி ஆடுறானுக. எத்தனை பேருங்க இன்னைக்கு லயத்துல ஒரு வேல சோறு கெடைக்காம பட்டினியாருக்காங்கன்னு தெரியுமா?"

அன்னம்மா பெரிய பிரசங்கம் ஒன்றையே செய்தாள்.

அவளது பேச்சு கோபாலின் சிந்தனையையும் தூண்டத்தான் செய்தது. அவன் அம்மா சொல்வதிலும் ஏதும் அர்த்தம் பொதிந்துள்ளதாக அவன் மனதுக்குப்பட்டது. உண்மையில் தோட்டங்களில் கூட பணங்காசு இருப்பவர்களுக்குத்தான் மதிப்பு. அவர்கள் மட்டும்தான் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள் என்று தோன்றியது.

தோட்டத்தில் வேலை செய்யாத சிவனாண்டியை அவன் யோசித்துப் பார்த்தான். அவன் ஒவ்வொரு நாளும் காலையில் டவுனுக்குப்போய் டவுனில் மூட்டை தூக்கும் நாட்டாமை வேலை செய்தே பிழைப்பு நடத்தி வந்தான். அவன் வீட்ல கூட நாளு காசு தாராளமாக புழங்கத்தான் செய்தது. அண்டை அயல் காம்பராக்களில் வசித்த பெண்கள் கூட சிவனாண்டியின் மனைவி வரலெட்சுமி கிட்டத்தான் அரிசி, பருப்பு, மாவுன்னு ஒரு சுண்டு, இரண்டு சுண்டு கைமாத்து வாங்குவார்கள். சிவனாண்டி கூட வீட்டை விட்டு வெளியில் போகும்போது வெள்ளையும் சொள்ளையுமாகத்தான் மிடுக்காக போவான்.

அவனைப் போலத்தான் சாத்தப்பனும் பச்சக் கர வேட்டி கட்டி முழுக்கை சட்டை போட்டு கால்களில் தோல் செருப்போட டவுனுக்கு வேலக்கி போவான். அவன் டவுனுல வாகன தரகன் ஒருவனுக்கு உதவியாளனாக சேவை செய்தான். அவன் கைகளில் பெருவிரல் தவிர்ந்த ஏனைய விரல்களில் தங்க மோதிரம் மின்னிக்கொண்டிருக்கும்.

ஒரு முழு சிகரட் பக்கட் எப்போதும் கமிசு மேல் பொக்கட்ல எல்லாருக்கும் தெரியும்படி துருத்திக்கொண்டிருக்கும். அவனது லயத்துக் காம்புரா கூட மேட்டுக்குடிகள் வாழும் மேட்டு லயத்திலதான் இருந்தது. அவனது மனைவி இன்பராணி தோட்டத்து கொழுந்து மலையில் வேலை செஞ்சாலும் அவ பயணம் புறப்பட்டுப் போனான்னா ஜரிகை சேல கட்டி நகை நட்டெல்லாம் போட்டு தஞ்சாவூரு கோயில் தேரு மாரித்தான் அசைஞ்சு ஆடிக்கிட்டுப் போவா. அவ நவந்து நவந்து போறத தோட்டத்து பொம்பளங்க கண்ணு வச்சி பொறா மையோடு பார்த்துக்கிட்டிருந்தே கன்னத்துல கை வைப்பாளுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டு லயத்தில இருக்கிற மற்ற பொம்பளைங்க கூட கலியாணம் காட்சின்னு பயணம் போனா இன்பராணிக்கிட்டத்தான் சாரியும் நகையும் கடனா வாங்கி போட்டுக்கிட்டு போவாளுக. இந்த விசயத்துல இன்பராணியும் கஞ்சத்தனம் இல்லாம தாராளமா நடந்துக்குவா. சாத்தப்பன் கூட மனைவியின் இந்த தாராளப் போக்கை கண்டு கொள்ளமாட்டான். அவனும் பிறருக்கு உதவும் குணம் கொண்டவனாகவே இருந்தான்.

இவ்விதம் அந்தத் தோட்டத்தில் வாழ்ந்த பல்வேறு பிறகிருத்தாக்களையும் அவர்களின் குணவியல்புகளையும் அலசிப் பார்த்தான் கோபால். அப்போது அவனது அம்மா சொல்வதன் யதார்த்தம் அவனுக்கும் புரிபடுவது போல் தோன்றியது. இத்தகைய எண்ணங்களால் அவன் மனதை அழுத்திக் கொண்டிருந்த மனவேதனை சற்றே தணிந்தது என்றபோதும் புஸ்பராணியின் நினைப்பை அவன் மனதில் இருந்து ஒருபோதும் அகற்ற முடியாது என்பதும் புலனானது.

இதற்கிடையில் நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக கீழ்நிலை மக்கள் மேலும் பல துன்பங்களை அனுபவிக்கத் தொடங்கினர். நாடு பூராவிலும் அரிசி, பாண், மிளகாய், துணி என கியூவரிசைகள் நீண்டு கொண்டே இருந்தன. எல்லாப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது. அத்தியாவசியப்பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு ரேஷன் மற்றும் கூப்பன் முறைகள் அமுல்படுத்தப்பட்டன. பாட்டாளி மக்களிடம் காசுப்புழக்கம் இல்லாத நிலையில் தமக்கு ரேஷன் முறை மூலம் கிடைத்த உணவுப்பொருட்களையும் அவர்கள் கள்ளக்கடைக்காரனிடம் கொண்டு போய் அதிக விலைக்கு விற்றனர். அதனை அவன் இரண்டு மடங்கு விலைக்கு விற்று பணம் சம்பாதித்தான். இந்த நிலைமை விளிம்பு நிலை மக்களான தோட்டத் தொழிலாளர் சமூகத்தையே வன்மையாகப் பாதித்தது.

தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் சேமிப்புப்பழக்கம் பெரிதாக இருக்க வில்லை. இருந்த சிறிய பணத்தைக்கொண்டு அவர்கள் காலா காலமாக சிக்கனம் பிடித்ததெல்லாம் அவர்கள் கழுத்திலும் காதிலும் மூக்கிலும் போட்டிருந்த சிறிய சிறிய தங்க நகைகள்தான் இப்போது அவை எல்லாமே அடகுக் கடையைப் போய்ச்சேர்ந்தன. இவை மட்டுமன்றி ரேடியோ, மெஷின், அண்டா, குண்டா, குடம், குத்து விளக்கு மற்றும் எல்லா வெண்கல பித்தளை, வெள்ளிச் சாமான்களும் அடகு பிடிப்போரை சென்றடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74



# வாக்குரிமைகள் பறிக்கப்பட்ட பின்னர்

புஸ்பராணியின் தந்தை கதிரேசன் அவளை இந்தியாவிலேயே விட்டு விட்டு தோட்டத்துக்குத் திரும்பியுள்ளதாக கோபால் நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டான். புஸ்பராணிக்கு திருமணம் முடிந்து விட்டதா இல்லையா என்பது தொடர்பில் யாருக்கும் ஒன்றும் தெரியவில்லை. இதற்கிடையில் கோபாலின் அம்மா கொண்டு வந்த பல திருமண யோசனைகளையும் பரிசீ லனை செய்யாமலேயே கோபால் நிராகரித்தான். அது தொடர்பில் கோபாலின் அம்மா மனவருத்தப்பட்டாள்.

கதிரேசன் வழியில் கோபாலை சந்தித்தபோது அவர் எதுவுமே நடந்திராத மாதிரியும் தனக்கு ஒன்றுமே தெரியாது என்ற வகையிலும் மிகச் சுமுகமாக கோபாலுடன் பேச முற்பட்டார். எனினும் கோபால் அவருக்கு நேராக முகங்கொடுக்காமல் பேச்சை முறித்துக்கொண்டு சென்று விட்டான். அந்நாளின் மூஞ்சியை பார்க்கவே அவனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. தன் மனதுக்குகந்த இனியவளை வலுக்கட்டாயமாக தன்னிடமிருந்து பிரித்து கண்காணாத இடமொன்றுக்கு அழைத்துச் சென்று ஒளித்து வைத்திருக்கும் ஒரு ராட்சஷ ஜந்துவாகவே கதிரேசன் கோபாலின் கண்களுக்கு தெரிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை "புஸ்பராணியை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்" என்று அவனது மூஞ்சிக்கு முன்னாலேயே கேட்டுவிட வேண்டுமென்று ஒரு தீவிரமான ஆவேசம் கோபாலின் மனதுக்குள் தோன்றும். என்ற போதும் அதற்கான பதிலாக அவன் "அவள் பெரிய பணக்காரன் ஒருவனை கலியாணம் கட்டிக்கொண்டாள்" என்று எகத்தாளமாக கூறி தன்னை பரிகாசம் செய்து விட்டால் அதனை தன் மனது தாங்காது என்று தன் ஆவேசத்தை மனதுக்குள்ளேயே போட்டு அடக்கிக்கொண்டு கோபால் வெந்து தணிந்தான்.

பல சந்தர்ப்பங்களில் கோபாலின் தவிப்பை உணர்ந்து தன் நண்பனின் வேதனை தொடர்பில் கவலைப்படும் நந்தசிரி "இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் அவளைப்பற்றி நினைத்து நொந்து நோகுவாய் கோபால். உண்மையில் அவளுக்கு உன்மேல் அத்தனை காதல் இருந்திருக்குமானால் அவள் இவ்விதம் தொலைதூரத்துக்கு உன்னைப் பிரிந்து போகும்போது உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டல்லவா போயிருக்க வேண்டும். ஏன் உனக்கு அது கூட விளங்கவில்லை".

நந்தசிரி சொல்வதில் உண்மை இல்லாமலில்லை. ஏன் அவள் இவ்வளவு தூர தேசத்துக்கு செல்லும்போது தன்னிடம் கூறாமல் போனாள் என்பது புதிராக இருந்தது. அது அவளது தவறாக இருக்க முடியாது என்று அவன் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டான். ஒரு சமயம் அவள் தன் வாழ்க்கையுடன் விளை யாடி விட்டாளோ என்ற சந்தேகமும் ஒரு பக்கம் தோன்றத்தான் செய்தது. எனினும் அவன் அவள் மீது கொண்டிருந்த அளவற்ற காதலால் எல்லா தவறுகளையும் தன் மீதே சுமத்திக் கொண்டான். அவன் மிக வைராக்கியத்துடன் புஸ்பராணியை தன் மனதில் இருந்து அகற்றிவிட வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்தான். ஆனால் இந்தப் பாழாய்ப்போன மனது அவள் தந்த சுகங்களையும் அவள் பதித்து விட்டுச்சென்ற இனிய நினைவுத்தடங்களையும் நினைத்து வருடியவாறே வேதனையைத் தந்ததுடன் மீண்டும் வரமாட்டாளா என்று தவித்துக் கிடக்கவும் செய்தது.

தொடர்ந்து வந்த நாட்களில் கோபாலையும் அவனைச் சுற்றி இருந்த சூழ்நிலைகளிலும் விரைவான மாற்றங்கள் நிகழ்ந்தன.

பசி, பட்டினி, பஞ்சம் இவற்றுக்கு மத்தியில் அரசுடமையாக்கப்பட்ட அரச நிறுவனங்களில் படுமோசமான களவு, லஞ்சம், ஊழல், முறைகே டுகள் புகுந்துகொண்டு ஆட்டிப்படைத்தன. அவற்றை ஒழிக்க ஸ்ரீமாவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்கவின் கூட்டரசாங்கம் பல்வேறு சட்டங்களை கொண்டு வந்தபோதும் அவற்றால் எல்லாம் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

ஏனைய அரச நிறுவனங்களை விட அரசுடமையாக்கப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தில் களவு, கொள்ளையடித்தல், ஊழல், மோசடிகள் மிக மலிந்து போய் காணப்பட்டன.

தோட்டத்து நிர்வாகிகளும் அதிகாரிகளும் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதில் கொஞ்சமும் அக்கறை காட்டவில்லை. கூடுமான வரை கிடைத்ததை சுருட்டுவதில் அக்கறை காட்டினர். இந்த நிலை தோட்டத்தின் சகல மட்டங்களிலும் நிலவியது. தோட்டத் தொழிலாளரின் நலனில் தோட்ட அதிகாரிகள் காட்டிய அசமந்தப் போக்காலும் அசட்டையாலும் தொழிலாளர் கடுமையாக உழைப்பதைக் கைவிட்டனர். நிர்வாகத்தின் மீது வெறுப்புக்கொண்டனர்.

மறுபுறத்தில்இந்தியவம்சாவழியினரானதோட்டத்தொழிலாளர்களை இலங்கையில் இருந்து விரட்டி இந்தியாவுக்கு அனுப்புவதற்கான ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் படு மோசமாக மனிதாபிமானமற்ற முறையில் அமுல்படுத்தப்பட்டது. உயர்தோட்ட அதிகாரியில் இருந்து சிறு தோட்ட உத்தியோகத்தர் வரை அதிகாரத்தை தம் கையில் எடுத்துக்கொண்டு தொழிலாளரை தம் காலில் போட்டு மிதித்தனர்.

அவர்களை அடிமைகள் போல் நடத்தினர்.

இதனாலெல்லாம் தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர். முன்பு தோட்டத்தின் பொதுச் சொத்துக்களை தமது சொத்தாக மதித்துப் பாதுகாத்த அவர்கள் அவை அழிவுக்குட்பட்டபோது பாராமுகமாக இருந்தனர். பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே சொத்துச் சேதங்களை ஏற்படுத்தினர்.

தேயிலைச்செடிகளைக்கூட வெட்டி விறகுக்காக விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இத்தகைய நிலைமையில்தான் 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வந்தது. 1975 ஆம் ஆண்டு வைத்திருக்க வேண்டிய தேர்தலை 1977 ஆம் ஆண்டிலேயே நடத்தினர். நாட்டில் ஏற்பட்டிருந்த பட்டினி, பஞ்சம், உணவுத்தட்டுப்பாடு காரணமாக சகலரும் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவின் ஆட்சியை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்று விரும்பினர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவும் தேர்தல் களத்தில் முழு மூச்சாக இறங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகமெங்கும் இ.தொ.கா.வும் ஏனைய தொழிற்சங்கங்களும் அரசாங்கத்துக் கெதிராக அணி திரண்டனர். நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதி பல அங்கத்தவர் தொகுதியாக அறிவிக்கப்பட்டது.

இத்தொகுதியில் இ.தொ.கா. தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான், ஐ.தே.க. சார்பில் காமினி திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் அனுர பண்டாரநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர். தேர்தல் வாக்குறுதியாக நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் எட்டு றாத்தல் தானியம் வழங்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜே.ஆர்.ஜயவர்த்தன அறிவித்தார். இதனால் பெருந்தோட்டத்துறை ஓட்டுக்கள் மாத்திரமன்றி பெரும்பான்மையினர் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்து அக்கட்சியை ஆறில் ஐந்து என்ற சதவீதத்தில் அமோக வெற்றியீட்டச் செய்தனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் கூட்டரசாங்கத்துக்கு எட்டு ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன.

1948 ஆண்டு இந்திய வம்சாவளி மலையகத்தமிழரின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு அரச பிரதிநிதி பாராளுமன்றம் சென்றமை அரச வரலாற்றில் பதியப்பட்டது. அவருக்கு ஐ.தே.க. வின் இணைந்த அமைச்சரவையில் அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்பட்டது. ஆனால் இதனால் எல்லாம் தோட்டத்தொழிலாளரின் வாழ்வில் ஏதும் முன்னேற்றங்கள் ஏற்பட்டதா எனின் ஒன்றும் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஜே.ஆர். ஜயவர்தன ஒவ்வொரு பிரஜைக்கும் எட்டு றாத்தல் தானியங்கள் வழங்குவதாக தேர்தல் வாக்குறுதியளித்த போதும் அவ்வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை. உணவுத் தட்டுப்பாடு, உணவுக்கான கியூவரிசைகள் இல்லாதொழிக்கப்பட்டு தாராள இறக்குமதிக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு கடைகளில் உணவுப்பொருட்கள் நிறைந்திருந்தபோதும் மக்களிடம் அவற்றை வாங்குவதற்கான பணப்புழக்கம் இல்லாது போனது.

தோட்டப்புறத்து மக்கள் தொடர்ந்தும் கடன்சுமைக்குள் ஆழ்ந்து போய்க் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாட்டுப் பொருட்களின் மலிவுச் சந்தை

பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை முற்றிலும் தலை கீழாக மாற்றியது. திறந்த பொருளாதாரக் கொள்கையென்றும் தாராள இறக்குமதிக் கொள்கை என்றும் கூறி மலிவான வெளிநாட்டுப் பொருட்களின் சந்தையாக இலங்கையை மாற்றியது. மின்சாரப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், அப்பிள், திராட்சை என முன்பு இலங்கை மக்கள் பார்த்திராத பொருட்கள் ரோட்டோரக் கடைகளில் மலிந்து கிடந்தன. ஆனால் அவற்றைப் பார்த்து எச்சூறுவதைத் தவிர அவற்றைக் கொள்வனவு செய்யும் பொருளாதார சக்தி மக்களிடம் இருக்கவில்லை.

இருந்தாலும் தோட்டங்களில் கூட சற்று வசதிப் படைத்தோர் ரேடியோ, கெஸட் ரெக்கோடர், மின்சார விசிறிகள் போன்றவற்றை தூக்கிக் கொண்டு வந்திருந்தனர். எனினும் அவர்களுக்கு அவற்றை இயக்க மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கும் அவர்கள் மாற்று வழிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடித்து வாகன பற்றரிகளை பயன்படுத்தி பாட்டுக் கேட்டனர். கோபாலும் கூட மாத தவணையில் கட்டும் விதத்தில் பாட்டு பதிவு செய்யும் கெஸட் ரெக்கோடர் ஒன்று வாங்கி வைத்திருத்தான்.

அட்டன் அசோகா ரேடியோஸ் என்ற நிறுவனத்தினர் மாதாந்த தவணை முறை யில் மின்சாரப் பொருட்களை வாடிக்கையாளருக்கு வழுங்கும் முறை யினை புதிதாக ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் இத்தகைய ஆடம்பரப் பொருட்கள் தோட்டத்து உத்தி யோகத்தர்கள் வீட்டில் மட்டுமே காணப்பட்டன. பின்னர் படிப்படியாக அது தோட்ட மக்கள் மத்தியிலும் பரவியது. கோபால் வாங்கி வைத்திருந்த கெஸ ட் ரெக்கோட் பெட்டியைப் பார்க்க தோட்டத்து ஆண்களும் பெண்களும் ஆர்வமுடன் வந்தனர். அன்னம்மாவும் கோபால் தன் நண்பர்களுக்கு அது இயங்கும் விதத்தினை போட்டு காட்டிய அனுபவத்தை வைத்து கொண்டு வந்தவர்களுக்கு இயங்கச் செய்து காட்டினாள்.

பாட்டுக் கேட்கிறது மட்டும் இல்லாமல் நாம் பாடுறதையும் பதிவு செய்து கேட்கலாம். "எங்க மருதாணி நீ பாடு. நான் தம்பிக்கிட்ட சொல்லி பதிவு செய்து முழு லயத்துக்கும் கேட்கிற மாதிரி போட்டுக் காட்டுகிறேன்."

மருதாணி ஆரம்பத்தில் வளைந்து நெளிந்து வெட்கப்பட்டாலும் பின்னர் சினிமா பாடலொன்றை பாட ஆரம்பித்தாள். "மச்சான பாத்திங்களா மலைவாழ தோப்புக்குள்ளே"

இரு இரு கோபாலுக்கிட்ட சொல்லி பதிவு செய்ய சொல்றேன். அன்னம்மா அவளை இடைமறித்தாள். பின் அவள் கோபால் அருகில் ஓடிச் சென்று மருதாணியின் பாட்டை கெஸட்டில் பதிவு செய்து போட்டுக்காட்டுமாறு கேட்டுக்கொண்டாள்.

அந்த கெஸட் ரெக்கோடரை வாங்க அதிகப்பணம் கொடுத்தது அம்மா வாதலால் அவனால் அம்மாவின் பேச்சை தட்டமுடியவில்லை. இருந்தாலும் அவனிடம் மேலதிக பாட்டுகளை பதிவு செய்யும் விதத்தில் கெஸட் நாடாக்கள் இருக்கவில்லை. எனவே அவனுக்கு கிடைத்திருந்த மூன்று கெஸட் நாடாக்களில் இரண்டில் அம்மாவின் நண்பிகளின் பாட்டுகளே பதிவாகி இருந்தன. மற்ற ஒரு நாடாவில் அவன் தன் நண்பர்களின் பாட்டுக்களை பதிவு செய்திருந்தான். இப்போது ஏற்கனவே பாட்டுகளை பதிவு செய்து வைத்திருக்கும் அம்மாவின் நண்பிகள் தமது நண்பிகளைக் கூட்டி வந்து அவற்றை போட்டுக் காட்டும்படி தொந்தரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துக் கொண்டிருந்தனர். இதனால் கோபாலுக்கு வேறு வேலை கள் ஒன்றும் செய்யமுடியாமல் இருந்தது. கோபால் அம்மாவிடம் கெஸட் நாடாக்கள் எல்லாம் முடிந்துவிட்டதால் இனி பாடல் பதிவு செய்யமுடியாது என்று கூறினான். ஆனால் அன்னம்மா விடுவதாய் இல்லை. "அப்படி சொல்லாத தம்பி அவளுக்கும் அவளோட குரலைக் கேட்க ஆசையாய் தானே இருக்கும் கொஞ்சமாய் பதிவு செய்து கொடு" என்றாள் கோபால் ஏற்கனவே பதிவு செய்த பாடல் ஒன்றினை அழித்துவிட்டு மருதாணியின் பாடலை பதிவு செய்ய தயாரானான்.

எல்லோரும் கோபாலை சுற்றி குவிந்து கொண்டார்கள் .மருதாணி மீண்டும் வெட்கப்பட்டு குழைந்து நெளிந்தவாறு பாடலை பாடியதை பதிவு செய்தான். "பார்த்த நாபகம் இல்லையோ பருவ நாடகம் தொல்லையோ." கூடியிருந்த பிள்ளைகள் கைத்தட்டி தாளம் போட்டார்கள். கோபால் பாடல் ரெக்கோட் செய்யும் பொத்தானை அழுத்தி அதனை நிறுத்திய பின்பும் மருதாணி தொடந்தும் பாடிக்கொண்டிருந்தாள்.

கோபால் அவளை பாடலை நிறுத்தச் சொல்லிவிட்டு கெஸட் நாடாவை மீள சுற்றச் செய்து பாட்டை நன்கு சத்தமாக வைத்து பாடவைத்தான். பாட்டு நன்றாகவே பதிவாகியிருந்தது. பாட்டை கேட்டு எல்லோரும் சந்தோசம் கொண்டாடினர். "கோபால் தம்பி கொஞ்சம் இருங்க நான் இன்னொரு பாட்டை பாடமாக்கிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி மருதாணி ஏதோ ஓட்டப் பந்தையத்தில் ஓடி ஜெயித்தவள் போல் பெருமையுடன் எல்லோரையும் ஒரு பார்வைப் பார்த்தாள். கோபால் விரும்பியோ விரும்பாமலோ இந்த விடயத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வர விரும்பினான். அவன் இன்டைக்கு இவ்வளவு தான் என்று கூறி டேப் ரெக்கோடரை அணைத்து பற்றரியை தொடுக்கும் வயரை கழட்டி விட்டான். அத்தோடு சத்தம் அடங்கிவிட்டது.

கோபாலின் இந்த செயலால் அங்கிருந்த எல்லோரின் முகமும் தொங்கிப் போய்விட்டது. பிள்ளைகள் எல்லோரும் உடனேயே கலைந்து போய்விட்டனர். ஏனையோரும் மெதுமெதுவாக முணுமுணுத்துக் கொண்டு வெளியேறிவிட்டனர்.

"புதுவருடத்துக்கான அட்வான்ஸ் பணம் கிடைத்ததும் நானும் ஒன்னு வாங்கிக்கணும். இவிங்களோட திமிர் தனத்தைத்த பொறுத்துக் கொள்ள முடியாம இருக்கு" என்று அங்கே ஓரமாக நின்று அமைதியாக நடப்பவற்றை அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்த சரவணன் தனது மன ஆதங்கத்தை வெளிப்படையாகவே தெரிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணனின் குடும்பமே அந்தத் தோட்டத்தில் பெரிய குடும்பம். அவர்கள் வீட்டில் எட்டுப் பேர் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் எட்டுப் பேர்களும் மாதச் சம்பளம் கையில் வாங்கியதும் அதனை குடும்பத்தலைவனான சரவணனிடம் கொடுக்கவேண்டும். அவன் அவர்களுக்குச் செலவுக்கென சொற்பத் தொகையைக் கொடுப்பான்.

எனினும் அவன் கிடைக்கும் மொத்தப் பணத்தையும் குடும்பத்துக்கென செலவு செய்தான். முதலில் கடைக்காரனிடம் இருக்கும் கடனின் ஒரு பகு தியை செலுத்துவான். பிள்ளைகளுக்குத் தேவையான உடுப்புத்துணிகளை எடுத்துக் கொடுத்தான். அவ்விதம் அவர்களுக்கு வருடத்துக்கு ஒரு தடவையே புதுத்துணிகள் கிடைக்கும். அவர்களது பெரிய செலவு பிள்ளைகளை படிக்க வைப்பதற்கானதாகும். எனினும் இந்த முறை ரேடியோவுடனான கெஸட் ரெக்கோடர் ஒன்றை வாங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

கோபாலின் கெஸட் ரெக்கோடர் தொடர்பிலான புகழ் சிறிது காலத்துக்கே நீடித்தது. தோட்டத்தில் மேலும் சிலரும் அத்தகைய கெஸட் ரெக்கோடர்களையும் மேலும் பலவித மின்சார அலங்காரப் பொருட்களையும் வாங்கி வீட்டுக்குக் கொண்டு வந்து தோட்டம் பூராவும் தம்பட்டம் அடித்தனர்.

என்னதான் புதுப்புது விதங்களில் நவீன பொழுது போக்கு சாதனங்கள் வந்திருந்தாலும் தியாகுவின் லயக் காம்புராவில் அவர்கள் நடத்தும் பாட்டுக் கச்சேரிகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76



# இம்மி பிசகினாலும் இனக்கலவரம் வரலாம்

அண்மைக்காலத்தில் இருந்து தோட்டங்களில் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்த வண்ணம் இருந்தன. பல்வேறு கட்சிகளும் ஏட்டிக்குப்போட்டியாக தொழிற்சங்கங்களை அமைத்து வளர்த்தெடுப்பதில் அதிக அக்கறை காட்டின.

ஐ.தே.க.வின் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமானது இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் சவால் விட்டு போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியடையத் தொடங்கியது. இத் தொழிற்சங்கம் ஆளும் கட்சியின் தொழிற்சங்கமாக இருந்ததால் பலரும் சலுகைகளுக்காக விலை போயினர். இடது சாரிகளும் தம் பங்குக்கு தொழிற்சங்கங்களை ஆரம்பித்தனர். இதனால் தொழிற்சங்கங்களுக்கிடையில் உக்கிர போட்டிகளும் மோதல்களும் எழுந்தன.

"கொஞ்சகாலமாகவே இந்த யூனியன் காரன்களோட பெரிய கரச்சலா இருக்கு. அளவுக்கு அதிகமாக சங்கங்கள் முளைத்து விட்டன."

நந்தசிரி மற்றும் நண்பர்கள் குழுவுடன் வேலை முடிந்து ஓடைக்குக் குளிக்கப்போன சமயத்தில் கோபால் கூறினான். அவன் குரல் சற்று விரக்தியுடனேயே வெளிவந்தது. அன்று மத்தியானம் ஸ்டோருக்கு அருகா மையில் இரண்டு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தலைவர்ளுக்கிடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின் கைகலப்பு வரை சென்று அடி தடியில் முடிந்தது. இந்தச் சண்டையில் இரண்டு பேருக்கு பலத்த காயமேற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தனர்.

"நீ சொல்வது உண்மைதான் கோபால். இதனை நீ சொல்ல வேண்டுமென்றுதான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இன்று தோட்டத்து மக்கள் பல குழுக்களாக பிரிந்து போய் ஒருவருடன் ஒருவர் சண்டையிடும் அளவுக்கு மாறியிருப்பது நல்லதுக்கு அல்ல." நந்தசிரி கோபாலின் கேள்விக்கு சற்று தாமதித்தே பதில் கூறினான்.

கோபால் ஓடையில் இறங்கி கை, கால், மேல் கழுவிக் கொண்டிருந்தான். விஜேபால ஓடைக்கரையில் உட்கார்ந்து பீடி ஒன்றை ஊதி புகைவிட்டுக் கொண்டிருந்தான். அவன் நெற்றியில் ஏற்பட்டிருந்த காயத்துக்கு தலையைச் சுற்றிக் கட்டுப்போட்டிருந்தான். அன்று மத்தியானத்தில் ஏற்பட்ட சண்டையில் அவனும் பங்குபற்றியதன் விளைவாகவே தலையில் அவனுக்கு காயம் ஏற்பட்டிருந்தது. அவனுக்கு நல்ல நேரம் காரணமாக நெற்றியில் பட்ட தாக்குதல் மிக பலமானதாக இருக்கவில்லை. இல்லாவிட்டால் அவன் மண்டை பிளந்திருக்கக் கூடும். அவன் காயத்துக்கு மருந்து போட்டுக்கொண்டு நண்பர்கள் வரும் வரை யில் காத்திருந்தான். பின் அவர்களுடன் சேர்ந்து மேல் கழுவ ஓடைக்கு வந்திருந்தான்.

நந்தசிரிக்கு விஜேபாலவை பார்க்கும் ஒவ்வொரு முறையும் கோபம் கோப மாக வந்தது.

"அடேய் விஜேயபால, ஒனக்கு எவ்வளவு மொற படிச்சி படிச்சி சொன்னேன். அந்த யூ.என்.பி.யூனியன்ல சேர வேண்டாம்னு. கேட்டாயா நீ? இப்ப என்ன நடந்திச்சி. நீ அடி பட்டுக் கெடக்குற. அவிங்க யாராவது பார்க்க வந்தானுங்களா? ஒந் தலைவன்னு சொல்லுறவன் ஒன்ன பார்க்க வந்தானா? அன்னையில இருந்து இன்னைக்கு வர நாங்க மட்டுந்தான், ஒனக்கு நண்பர்கள்னு சொல்லிக்கிட்டு இருக்கோம்" என்றான் நந்தசிரி ஆத்திரத்தை வெளிக்காட்டாமல்.

கோபாலுக்கும் இந்த விடயம் சங்கடமாகத்தான் இருந்தது. விஜேபாலவை அடித்தவன் அவன் பிரதிநிதித்துவப்படும் இ.தொ.கா. யூனியனைச் சேர்ந்தவன்.

"என்னை அடித்தவன் வினோதன்தான். அவனுக்கு நான் கோபாலின் நண்பன் என்பது நல்லாவே தெரியும். இப்படி தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே ஏன் அடித்தான் என்பதுதான் விளங்கவில்லை" விஜேபால பரிதாபமாகக் கூறினான்.

"கொஞ்ச காலமாகவே அந்த வினோதன் துள்ளிக்கிட்டுத்தான் இருந்தான். அவன் இன்னமும் என்னோட மோதல. கூடிய சீக்கிரம் அவன் என்னோட மோத வேண்டிவரும். அப்ப வைக்கிறன் அவனுக்கு வேட்டு" என்றான் நந்தசிரி கோபத்துடன்.

நந்தசிரி கோபப்படுவது இயல்பானதுதான் என்று நினைத்தான் கோபால். ஏற்கனவே இந்த வினோதன் என்பவன் தன் மீதும் பல கட்டுக்கதைகளைக் பரப்பி சண்டித்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறான் என்பது தொடர்பிலும் அவன் காதுக்கு செய்திகள் வந்திருந்தன. அவன் தன்னுடைய பதவியை நோக்கித்தான் குறிவைக்கிறான் என்பதையும் கோபால் புரிந்துக் கொள்ள முடிந்தது. அவன் நந்தசிரியை பார்த்துக் கூறினான்.

"பதற்றமடையாதே நந்தசிரி. இந்த வினோதன் என்பவன் என் பெயரை கெடுக்கவும் பல்வேறு கட்டுக்கதைகளைக் கூறி வருகிறான் என்று அறிய முடிந்தது. அவனது தேவையெல்லாம் தலைவர் பதவியை கைப்பற்ற வேண்டுமென்பதுதான். அதனால் நம்மை சீண்ட வேண்டுமென்பதற்காகவே விஜேபாலவை அடித்திருக்கிறான்."

கோபாலின் பேச்சைக் கேட்டு நந்தசிரி மேலும் ஆவேசமடைந்தான். அவன் எழுந்து கோபாலிடம் வந்தான்.

"ஏன் கோபால் இதை முன்பேயே என்னிடம் சொல்லாமல் விட்டாய். நான் நினைத்தேன் விஜயபால அப்பாவியாக இருந்ததனாலதான் அவன அடிச்சிருக்கானு. இப்ப எனக்கு வெளங்குது அவனோட நடிவடிக்கை. இனிமேலும் அவன விட்டு வைக்கிறது நல்லதல்ல" அவன் ஏதோ செய்யப்போகும் உறுதி யுடன் கூறினான்.

இந்த கட்டத்தில் கோபாலின் மனதில் சுருக்கென்னு ஒரு எண்ணம் ஏற்பட்டு அவன் மனதைத் தைத்தது.

"வேண்டாம் நந்தா, நாம் இந்த மாதிரி அடிதடி விவகாரத்துக்கெல்லாம் போக வேண்டாம். அது பின்னர் பெரும் அழிவில்தான் போய் முடியும். தமிழ், சிங்கள இனவாத கலவரமாகவும் அது உருவாகலாம். அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான் கோபால் அவசர அவசரமாக.

இதைக்கேட்டு நந்தசிரி பெருங்குரலில் சிரித்தான். அவன் முகத்தில் இப்போது நையாண்டித்தனம் வந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னால என்ன செய்ய முடியும் கோபால். நீ அவன அடிக்கப்போறியா? இதனை உன்னோட அண்ணன் சொல்லியிருந்தாக்கூட பரவாயில்லை. நீ இதுவரை யாருக்கிட்டயும் தகறாறு செய்ததாக சரித்திரமே இல்ல. நீதான் துறவி போல இருக்கிறவனாச்சே"

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். கோபாலுக்கும் வெட்கமாய் போய்விட்டது. எனினும் தான் நண்பர்கள் நினைப்பது போல் சும்மா லேசுப்பட்டவன் அல்ல என்பதனை நண்பர்களுக்கு உணர்த்த இது ஒரு சந்தர்ப்பமாய் அமைந்துவிட்டதனை நினைத்து அவன் சந்தோசப்பட்டான்.

நந்தசிறி மேல் கழுவி முடித்துவிட்டு டவலைக் கட்டிக்கொண்டு களிசத்தை கழட்டி கழுவி முறுக்கி நீரை பிளிந்து விட்டு உதறியபடியே கோபாலிடம் கூறினான்.

"கோபால். நீ சொல்வது ஒரு விதத்தில் சரிதான். நீ நினைத்த மாதிரிதான் நானும் நினைக்கிறேன். இருந்தாலும் நீ இதில் சம்மந்தப்படாமல் இருப்பதுதான் நல்லது. இது விடயத்தில் ஒரு நூலளவு கூட பிசகாமல் என்னால் வேட்டு வைக்க முடியும். எனக்கு ஒரு வார கால அவகாசம் மட்டும்கொடு. இந்த நந்தசிறி யாரென்பதை அவிங்க தெரிஞ்சுக்குவாங்க."

அத்துடன் அவர்கள் அன்றைய பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். விஜேபால தனது சட்டைப்பையிலிருந்து பீடி கட்டொன்றை எடுத்து ஏனையோருக்கும் கொடுத்தான். எனினும் நந்தசிறி வினோதன் விடயத்தில் எந்தவிதமான தந்திரோபாயத்தை கையாள்வான் என்பது தொடர்பில் கோபாலுக்கும் கவலையாகவே இருந்தது. அவனது திறமை தொடர்பில் அவனுக்கு நம்பிக்கை இருந்தாலும் இதில் இம்மியளவு பிசகு ஏற்பட்டாலும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான இனக்கலவரமாக அது மாறிவிடக்கூடும் என்று அவன் பயந்தான்.

அதன் காரணமாக நந்தசிறியை முந்திக்கொண்டு இந்த பிரச் சினைக்கு ஒரு சமரச தீர்வை பெற்றுவிட வேண்டுமென்று தீவிர மாக யோசித்தான். அவன் பல முறை வினோதனை தேடிப்பார்த்தும் அவனை கண்டுப்பிடிக்க முடியவில்லை. அவனும் எதிர்விளைவுகளை எதிர்பார்த்து எங்கேயோ போய் தலைமறைவாக ஒளிந்திருந்தான். இப்படியாக இரண்டுவாரங்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



77

# சொடலை மாடனின் கைங்கரியம்

அடுத்து வந்த சில தினங்களில் நந்தசிரியின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தன.

அன்று மாலை வேளை வினோதன் வந்திருந்தான். நந்தசிரி ஒன்றுமே நடக்காதவன் போல் வினோதன் அருகே சென்று அவனுடன் சுமுகமாக பேசினான். கோபாலும் விஜேபாலவும் அவர்களுக்கிடையில் ஏதும் மோதல் வந்துவிடுமோ என்று பயந்தார்கள்.

ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

நந்தசிரி வினோதனின் தோளில் கைபோட்டு அவனுடன் நட்புடன் பேசினான்.

"நீ எங்கே வினோதன் போயிருந்தாய்? இந்த சின்ன விசயத்துக்கெல்லாம் சண்டை பிடிக்கத் தேவையில்லை. நாம இன்னைக்கு நேத்தா சண்டை போடுறோம். சின்னக்காலத்தில் இருந்துதான் அடிச்சிக்கிறோம். அடுத்த நாள் சேந்துக்கிறோம். கவலைப்படாத மச்சான். இது பற்றி நான் விஜேபாலவிடமும் பேசினேன். அவனுக்கும் உன்னுடன் ஒரு கோபமும் இல்ல". நந்தசிரி இப்படி நட்பாக நடந்து கொள்வான் என விநோதன் நினைத்திருக்கவில்லை.

கோபாலும் விஜேபாலவும் மற்றும் நண்பர்களுக்கும் கூட அவன் செயல் வியப்பாக இருந்தது. வினோதன் கூட தான் தவறு செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாக நினைத்து மனதுக்குள் வருத்தப்படும் அளவுக்கு நந்தசிரி நடந்து கொண்டான்.

அன்றைய தினம் மத்தியான சாப்பாட்டு இடைவேளையின்போது நண்பர்கள் குழுவாகச்சென்று வினோதனையும் அழைத்து விஜேபாலவையும் வினோ தனையும் கை கொடுக்கச் செய்து சமாதானம் செய்து வைத்தான் நந்தசிரி. ஆனால் நந்தசிரி இதெல்லாம் உள்ளுக்குள் ஒரு நோக்கத்துடன் தான் செய்கிறான் என்பது கோபாலுக்குக்கூடத் தெரிந்திருக்கவில்லை.

சில தினங்களுக்குப்பின்னர் அந்த சலசலத்து ஓடும் ஓடைக்கு சற்று மேற்புறம் பணிய லயத்துக்கு அப்பால் இரண்டு வங்குகள் பிரியுமிடத்தில் மறை வாக மூன்று பேர் நெருக்கமாக அமர்ந்திருந்தனர். சிறு மேடையமைத்து பரப்பப்பட்டிருந்த கற்தரையில் அந்தி சாயும் நேரம் அமர்ந்திருந்த அவர்கள் வினோதன், நந்தசிரி, விஜேபால ஆகிய மூவராகும்.

அவர்களின் முன்னே கல் அதிவிசேட சாராயப் போத்தல், சிகரட் பெட்டியொன்றும் முறுக்குப் பொட்டலம், சோடா போத்தல் என்பன பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

அவர்கள் மூவரும் பல்வேறு விடயங்களை பற்றியும் சிரித்துக் கதைத்தவாறே சாராயப் போத்தலை சிறிது சிறிதாக காலி செய்து கொண்டிருந்தனர். எனினும் நந்தசிரி தான் குடிப்பதை குறைத்துக் கொண்டும் விஜேபால அதிகம் குடிக்காமல் இருக்குமாறும் பார்த்துக் கொண்டு வினோதனின் கிளாஸிலேயே அதிகம் ஊற்றிக்கொடுத்தான். ஏற்கனவே பெருங்குடி மகனாக இருந்த வினோ தன் தனக்கு மட்டும் சாரா யம் அதிகமாக வழங்கப்படுகின்றதே என்பதைப்பற்றி கவலைப்படாமல் கிடைத்ததை மளமளவென வாயில் ஊற்றி விழுங்கினான்.

"இன்னும் கொஞ்சம் எடு வினோதன் நீ தான் நல்லா குடிப்பவனாச்சே" நந்தசிரி மற்றுமொரு கிளாஸை நிரப்பி மிகக்குறைத்து சோடாவை கலந்து கொடுத்தான். வினோதனுக்கு சரியாக நிமிர்ந்து நிற்க முடியாத அளவுக்கு வெறியேறியிருந்தது. மற்ற இருவரும் சற்றுத் தெளிவாக இருந்தனர்.

நேரம் இரவாகியிருந்தது. மெல்லிய நிலவொளி மாத்திரமே மேகங்களுக்கூடாக தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் அந்த சூழ்நிலைக்குப் பழக்கப்படாதவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் விருந்தை முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாகினர். வினோதனின் மேட்டு லயத்துக்கும் நந்தசிரி, விஜேபால ஆகி யோர் பணிய லயத்துக்கும் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திவரை மூவரும் இணைந்து மண் பாதையில் நடந்து வந்தனர். அதன் பின்னர் மேட்டு லயத்துக்கு படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். நந்தசிரியும் விஜேபாலவும் வினோதனிடம் விடைபெற்று பள்ளத்தை நோக்கி இறங்கினர். வினோதன் அவர்கள் தன் மீது காட்டும் நட்பை நினைத்து புழகாங்கிதம் அடைந்து கையசைத்து விடை கொடுத்தான்.

அவன் தள்ளாடியவாறே மேல்நோக்கி ஒவ்வொரு படியாக நான்கு கால்களில் ஏறிச் சென்றான். மேலிருந்து கீழ்நோக்கி இறங்கி வந்த இரண்டு முதியவர்கள் அவன் நிலையை பார்த்து பரிகாசமாக "என்னப்பா வினோதன் சரக்கு கூடியிருச்சா" என்று கேட்டுவிட்டு தம்பாட்டுக்குச் சென்றனர். வினோதன் தட்டுத்தடுமாறி தன் லயத்துக்கருகில் வந்து விட்டான். அவன் தனது லயத்தை அடைய இன்னும் பத்துப்பன்னிரெண்டு படிகளே மீதமிருந்தன.

அவன் அவ்விடத்தில் நின்று சற்றே நிதானித்து தன்னை சுதாகரித்துக் கொள்ளப்பார்த்தான். எனினும் ஏற்கனவே உள்ளே போயிருந்த சாராயம் இப்போதுதான் வேலை செய்ய ஆரம்பித்திருந்தது. நந்தசிரி சுமார் முக்கால் போத்தல் சாராயத்தை வினோதனுக்குப் புகட்டியிருந்தான்.

இப்போது வினோதனைச் சுற்றியிருந்த சூழல் தலைகீழாக சுற்ற ஆரம்பித்தது. அவன் நிலை தடுமாறிக்கொண்டிருந்தான். வானத்தில் மேகங்கள் விலகியதால் வெளிச்சம் சற்றே அதிகரித்திருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில் மேட்டு லயத்துக்குச் செல்லும் படிக்கட்டுக்களுக்கு சமாந்தரமாக இரண்டு கரிய உருவங்கள் தேயிலைச்செடிகளுக்கூடாக நுழைந்து மேலே ஏறிக்கொண்டிருந்தன. மேலிருந்து இரண்டு வயோதிபர்கள் கீழ் நோக்கி வருவதை அவதானித்த அவர்கள் தேயிலைச் செடிக்குள் அசையாமல் அவர்கள் கடந்து செல்லும் வரையில் பதுங்கியிருந்தனர்.

கரிய அந்த இரண்டு உருவங்களும் தலைவரை கறுப்புக் கம்பளிகளால் மூடிக் கொண்டிருந்தன.

திடீரென அந்த இரண்டு உருவங்களும் வினோதன் நின்றிருந்த இடத்துக்குச்சென்று அவன் முகத்தைப் பொத்தி கீழே தள்ளினர்.

வினோதனுக்கு தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என புரிந்து கொள்ளும் சுயநினைவு இருக்கவில்லை. அவன் தன்னிசையில்லாமல் குப்புற விழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முதுகின் நடுப்பகுதியில் மிக அழுத்தி அச்சுப்பதித்து ஐந்து விரல்களும் பதிந்து தழும்பு ஏற்படும் வகையில் ஒரு இரும்புக்கரம் ஓங்கி அடித்தது. அதன் வலது கையில் அடர்த்தியான சேறு அப்பியிருந்ததால் முதுகுப்புறத்தில் வினோதன் அணிந்திருந்த இளமஞ்சள் கமிசிலும் அந்த ஐந்து விரல்களின் அடையாளமும் மைபோல் அப்பி இருந்தது.

அந்தப் பேய்த்தாக்குதலால் வினோதனுக்கு மூச்செடுப்பதும் சிரமமாக இருந்தது.

மேலும் சரமாரியாக எல்லாப்பக்கங்களில் இருந்தும் பிசாசுகள் தாக்குவதுபோல் சரமாரியாக அடியும் உதையும் விழுந்தன. அவன் குழறியவாறு அப்படியே குப்புற விழுந்து கிடந்தான். இந்த சம்பவம் மேட்டு லயத்துக்கு சற்று சமீபமாகவே நிகழ்ந்ததால் சந்தடிகள் கேட்டு பலரும் டோர்ச்லைட், பந்தங்களுடன் ஓடி வந்தனர்.

உடனேயே மேட்டு லயத்துப்பக்கமிருந்து கலவரம் நடப்பதற்கான கூக் குரல்களும் சத்தங்களும் சந்தடிகளும் எழுந்தன. கோபாலின் லயத்தில் இருந்தும் சிலர் ஓடுவதனை அவதானித்த கோபாலும் எழுந்து என்னவென விசாரிக்க ஓடினான். அவன் லயத்தைத் தாண்டியதுமே நந்தசிரியும் விஜேபாலவும் பணிய லயத்தில் இருந்து ஓடி வருவதனை அவதானித்தான். அவர்கள் எல்லோரும் சேர்ந்து இரண்டு மூன்று படிகளென தாவி ஓடி சம்பவம் நடந்த இடத்தை நெருங்கினர்.

சம்பவம் நடந்த இடத்தை நெருங்கும்போது சிவபாக்கியம் மேலே இருந்து ஓடி வந்து கொண்டிருந்தாள். கோபால் அவளை நிறுத்தி என்ன நடந்ததென்று விசாரித்தான். அவள் மிகவும் பயந்து போயிருந்தாள். அவளது நாக்கும் பயத்தால் குழறியது. இருந்தாலும் தட்டுத்தடுமாறி "வினோதனை பேயடித்து விட்டது. பேயின் கையின் ஐந்து விரல்களும் முதுகில் ஆழமாகப்பதிந்துள்ளன". அவள் மூச்சிறைக்கக் கூறினாள்.

கோபால் நந்தசிரியைப் ஒருமாதிரியாகப் பார்த்தான்.

நிச்சயமாக இது சொடலை மாடனின் வேலையாகத்தான் இருக்கும். நந்தசிரி மிக உறுதியுடன் தெரிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்பலமாகிய சதித்திட்டங்கள்

**வி**னோதனை பேயடித்து விட்டது என்ற விடயம் விரைவிலேயே எட்டுத்திக்குகளிலும் பரவிவிட்டது. அத்துடன் அடித்தது சொடலை மாடன்தான் என்று நந்தசிரி கதை பரப்பி விட்டிருந்ததால் எல்லோரும் சுடலை மாடன்தான் அடித்திருக்க வேண்டும் என்று தம் பங்குக்கு காதும் கண்ணும் வைத்து வதந்தி பரப்பினர்.

வினோதனை பிசாசு அடித்து விட்டது என அறிந்ததும் அவனுக்கு உதவி செய்யவென அவ்விடத்துக்கு முதலாவதாக சென்றவர்கள் நந்தசிரி, கோபால், விஜேபால குழுவினர்கள்தான். நந்தசிரியும் கோபாலும் எல்லாரையும் விலக்கிக்கொண்டு குவிந்திருந்த கூட்டத்துக்குள் சென்றனர்.

"வினோதன், மச்சான் என்ன நடந்தது. தள்ளுங்க, தள்ளுங்க அவனுக்கு மூச்சு விடுவதற்கு இடங்கொடுங்க" என்று எல்லோரையும் விலக்கினான் நந்தசிரி.

நந்தசிரி வினோதனை தூக்கி நிறுத்தி அவன் கண்களையும் முகத்தையும் கூர்ந்து அவதானித்தான். அவற்றில் சொல்லொண்ணாத பீதி நிலவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எதனையோ சொல்ல முற்பட்ட போதும் அவன் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. நாக்கு புரள மறுத்தது.

நந்தசிரியே அவ்விடத்தில் முன்னின்று எல்லா வேலைகளையும் செய்தான். "பேய்தான் அடித்திருக்கிறது என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. உடனே விபூதி மந்திரித்து போட வேண்டும். சுருக்கா கோயில் பூசாரியை அழைத்து வாருங்கள்".

பூசாரியை அழைத்து வர ஆரியவங்ச தலைதெறிக்க ஓடினான்.

அடுத்த கட்டமாக வினோதனின் கமிசை கழட்டினார்கள். முதுகில் ஓங்கி அடித்த ஐந்து விரல் அடையாளங்கள் கமிசின் பின்புறத்திலும் முதுகிலும் ஆழமாக பதிவாகி இருந்தன. யாரோ ஒருவன் சரியாக முதுகை நோக்கி டோர்ச் லைட்டை அடித்தான். அந்த வெளிச்சத்தில் பலரும் சிவப்பாக சிவந்து நைந்து போயிருந்த அந்த ஆழமான விரலடையாளத்தை பார்த்தனர். பார்த்தவர்கள் அனைவருமே பீதி யால் உறைந்து போயினர். அவர்கள் கூடியவரையில் வினோதனின் பார்வையில் இருந்து விலகியிருக்க விரும்பினார்கள்.

நந்தசிரி, கோபால், விஜேபால ஆகியோர் இணைந்து விநோதனை அவன் லயத்துக்கு தூக்கிச் சென்றனர்.

"என்னதான் இருந்தாலும் வினோதன் நம்மலில் ஒருவன் அல்லவா? அவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்த போது நம்மால் சும்மா இருந்துவிட முடியாது"

என்று நந்தசிரி கூறினான்.

வினோதன் தொழிற்சங்க சண்டையின்போது விஜேபாலவின் தலையில் அடித்து பாரிய காயம் ஏற்படுத்திய விடயம் தோட்டத்தில் இருந்தோர் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். அப்படி இருந்தபோதும் விஜேபாலவின் நண்பர்களான நந்தசிரி, ஆரியவங்ச, கோபால் முதலா னோர் தமது பகைமை யைப் பொருட்படுத்தாது இந்த விடயத்தில் அவர்கள் சிங்கள இனத்தவர்களாக இருந்த போதும் எவ்வளவு ஒற்றுமையாக செயல்படுகின்றனர் என வியந்து பெருமைப்பட்டனர்.

"எவ்வளவுதான் சண்டை போட்டு மல்லுக்கட்டி அடிச்சிக்கிட்டாலும் ஒரு ஆபத்துன்னு வரும்போது ஒருத்தனை ஒருத்தன் விட்டுக்கொடுக்கமாட்டான். அப்படித்தான் இருக்க வேண்டும். யாரோ ஒருத்தன் கூட்டத்தில் இருந்து சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்களவர்கள் மத்தியில் பிறந்திருந்தாலும் நந்திசிரி பாராட்டத்தக்க இளைஞன்"

"நந்தசிரி, கோபால், விஜேபால நல்ல நண்பர்கள். அன்றிலிருந்து இன்றுவரை அவர்கள் மாறவில்லை"

"நந்தசிரி யாருக்கும் பயப்படுகிற சாதி ஆள் இல்ல. பாரு ஒரு ஆள பேயடிச்சிருக்குன்னு தெரிஞ்கிட்டும் கிட்டப்போய் தொட்டு தூக்குறானே" பெண்ணொருத்தி ஆச்சரியத்துடன் கூறினாள். எல்லோரும் லயத்தை நோக்கிப் போகும்போது பேசிக்கொண்டார்கள்.

அதன் பின்னரே பூசாரி வந்தார். பூசாரி விபூதி மந்திரித்து தேசிக்காய் வெட்டி ஏதோ மந்திர உச்சாடனங்களையெல்லாம் செய்தார். பின் தேசிக்காயை மண்டையில் தேய்த்து விபூதியை நெற்றியிலும் பேயடித்ததாக தழும்பு இருந்த முதுகிலும் தேய்த்தார். இது முடிந்ததும் நந்தசிரி ஒரு முழுத்தேசிக்காயை எடுத்து பிழிந்து விநோதனுக்கு புகட்டினான். சிறிது நேரத்தில் விநோதனின் சாராய மயக்கம் தெளிந்தது. முதுகில் அடிபட்ட இடத்தில் நெருப்பு தகதகவென எரிவது போல் எரிச்சல் ஏற்பட்டது.

அவன் தன்னைச் சுற்றி இருந்தோரை புதிராகப் பார்த்தான். உண்மையில் தனக்கு என்ன நடந்ததென அவனால் இன்னமும் நிதானித்துக்கொள்ள முடியவில்லை. திடீரென யாரோ தன்னை பலமாகத் தாக்கியதும் பின்னர் எல்லாமே இருளாகப் போய்விட்டதும் இப்போது விழிப்பு வந்துள்ளதும் உடம்பு முழுக்க வலிக்கின்றமையும் மட்டுமே அவனுக்குப்புரிந்தது. அவனரு கில் கோபாலும் நந்தசிரியும் விஜேபாலவும் காணப்பட்டனர். எனினும் தனக்கு ஏதோ விபத்தொன்று ஏற்பட்டுள்ளதும் அதிலிருந்து நந்தசிரி, விஜேபால், கோபால் ஆகியோரே தன்னை காப்பாற்றியுள்ளனர் என்பதை மட்டும் அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அடுத்த வந்த சில தினங்களில் பல்வேறு விடயங்கள் அம்பலமாகின. பூசாரி என்னதான் விபூதி மந்திரித்து தேசிக்காய் வெட்டிய போதும் விநோதனின் பயமும் நடுக்கமும் காய்ச்சலும் குறையவில்லை. அதன் பின் அவர்கள் கொட்டகலையில் இருந்து மந்திர, தந்திர, வசியம், சூனியம் செய்யும் சாமி ஒருவரை அழைத்து வந்து மந்திரித்து காப்பு நூல் கட்டிய பின்னரே அவன் ஓரளவு குணமடைந்தான் என்றும் தோட்டத்து மக்கள் பேசிக்கொண்டனர். இந்த எல்லா காரியங்களையும் நந்தசிரியும் கோபால், விஜேபால, ஆரியவங்ச குழுவினரே விநோதனின் உடனிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர். இதனால் அவன் அவர்களின் நெருங்கிய நண்பனாக மாறிப்போயிருந்தான்.


அவன் கோபாலிடமும் நந்தசிரியிடமும் பல்வேறு விடயங்களை வெளிப் படுத்தினான். அவ்விதம் வெளிவந்த முக்கிய விடயம் கோபால், நந்தசிரிக் கெதிராக செயற்படும்படி அவனை தூண்டிவிட்டது புஸ்பராணியின் தந்தை கதிரேசனாகும். அத்துடன் புஸ்பராணியை இந்தியாவுக்குக் கூட்டிச்சென்றது அவளுக்கு பணக்கார மாப்பிள்ளையை தேடிக்கொடுப்பதற்கல்ல. மாறாக புஸ்பராணி கோபால் காதலை கெடுத்து இல்லாமல் செய்வதற்காகவாகும். அது மட்டுமல்லாமல் தோட்டத்தில் கோபாலுக்கிருக்கும் நல்ல பெயரைக்கெடுத்து அவனை தலைவர் பதவியில் இருந்து விரட்டுவதும் அந்தப்பதவியை வினோதனுக்குப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

வினோதனும் ஒரு விதத்தில் கதிரேசனுக்கு தூரத்து சொந்தக்காரனாக இருந்ததால் கதிரேசன் அவனை பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்டிருக்கிறான்.

“கேட்டியா கோபால் அந்த பால்காரன் உனக்கெதிராக என்ன வெல்லாம் செய்யத்திட்டமிட்டிருக்கிறான்? என்று. அவனை அன்னைக்கே தேயிலை தூள் கடத்தினபோது கையும் களவுமா பிடிச்சு பொலிசுக்கிட்ட கொடுத்திருக்க வேண்டும். ஆனா நீ உனது எதிர்கால மாமனாரை காட்டிக்கொடுக்க விரும்ப வில்லை. இப்ப அவன் ரொம்ப தூரம் போயிட்டான். இருந்தாலும் இப்போதும் ஒன்னும் கெட்டுப்போகல. அவனுக்கு நல்லதொரு பாடம் கற்பிக்க வேண்டும்”

விஜேபாலவும், ஆரியவங்சவும் அவன் கூற்றை ஆமோதித்தார்கள். கோபால் மௌனமாக இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரவு நடந்த நாடகம்

புஸ்பராணியின் தந்தை கதிரேசனின் சதித்திட்டங்களை வினோதன் அம்பலப் படுத்தியபோது கோபால் அது தொடர்பில் அதிர்ச்சியடையவில்லை. அவனை புஸ்பராணியின் நினைவுகள் மீண்டும் வந்துவாட்டின. முன்னர் கிடைத்த தகவல்களின் படி புஸ்பராணியை உயர் தனவந்தன் ஒருவனுக்கு திருமணம் செய்து வைக்கவே இந்தியாவுக்கு கதிரேசன் அழைத்துச் சென்றிருக்கிறான் என்ற செய்தியால் கோபால் அதிகம் கலங்கிப் போகவில்லை. காரணம் தன்னைப் போன்ற ஒரு தோட்டத் தொழிலாளிக்கு தன் மகளை கொடுக்க முடியாது என்று கதிரேசன் சொல்வதில் சற்று நியாயம் இருப்பதாக கோபாலுக்கு பட்டதால் அது அவன் தன்னை சமாதானப்படுத்திக் கொள்ள வசதியாக இருந்தது.

ஆனால் இப்போது தன்னையும் புஸ்பராணியையும் திட்டமிட்டு பிரித்து தம் காதலை காலால் மிதித்து தரையில் போட்டு நசுக்கிவிடும் செயலையே அந்த பாதகன் செய்திருக்கிறான் என நினைக்க அவன் மனது கொதித்தது. நந்தசிரி கூறியது போல் அவனுக்கு ஒரு பாடம் புகட்டத்தான் வேண்டும் என்று அவன் மனதுக்குள்ளும் ஒரு வெறிதோன்றியது. வினோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டிவிட்டு தன்னை இல்லாதொழிக்க கதிரேசன் மேற்கொள்ளும் முயற்சிகளும் இப்போது வினோ தன் வாயிலாகவே வெளிவந்துள்ளதால் கோபாலின் மனதில் அது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது.

அவன் இன்னொரு விசயத்தையும் யோசித்துப் பார்த்தான். அவன் வழியில் தன்னைக் காணும் போதெல்லாம் பால் குடிக்காத பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கி தனக்கு முகமன் கூறி பொய் நட்புக்காட்டி நடிப்பதெல்லாம் இந்த சூழ்ச்சிகள், சதிகள் தொடர்பில் தான் அவனை சந்தேகப்படக்கூடாது என்பதற்காகத்தான் என்பது கோபாலுக்குத் தெளிவாகப் புரிந்தது.

கதிரேசன் எல்லா விதத்திலும் மேட்டுக்குடிமகனாகத் தன்னை பாவனை செய்துக் கொள்பவன். அவன் ஒரு போதும் கீழ்மட்டத்தினருடனோ பாட்டாளி வர்க்கத்துடனோ தொடர்பு வைத்துக்கொள்ளாதவனாக இருந்தான். தொழிற்சங்க விடயங்களில் கூட அவன் ஹட்டனிலும் கொழும்பிலும் உள்ள உயர் மட்ட உத்தியோகத்தர்களிடம் தொடர்பு வைத்திருந்தான். இத்தகைய தொடர்புகளைப் பயன்படுத்தி பணத்தை வீசியெறிந்து தான் இப்போது வகித்து வரும் தொழிற்சங்கத் தலைவர் பதவியை பறிப்பதற்கும் அவன் சதி செய்கிறான் என்பதற்கான சாட்சிகளாக நடந்து முடிந்த சம்பவங்கள் இருந்தன. இதையெல்லாம் கூட்டிக்கழித்து சீர்தூக்கிப் பார்த்த கோபால் கதிரேசன் தொடர்பில் நந்தசிரி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அதற்கு ஒத்துழைப்பதென்ற தீர்மானத்துக்கு வந்தான்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் நிலைமைகள் வெகு வேகமாக மாறிகொண்டிருந்தன.

கதிரேசனின் பால் வியாபாரத்தை அவன் பல மடங்கு விஸ்தரித்தான். மாட்டுப் பட்டிகளில் எண்ணிக்கைகள் அதிகரித்தன.

அவனுடைய பழைய சைக்கிளுக்கு ஓய்வு வழங்கிவிட்டு சிறு மோட்டார் வேன் வாகனமொன்றை அவன் வாங்கியிருந்தான். அவனது சைக்கிளை அவன் தனது இளைய மகனுக்கு கொடுத்திருந்தான். தோட்டத்து பாதைகளில் கதிரேசனின் மகன் சைக்கிளோட்டிக் கொண்டு வரும்போது எதிரே நந்தசிரியைக் கண்டால் பயந்து பாதையோரமாக ஒதுங்கி நின்று திருதிருவென்று திருடன் போல் முழிப்பான்.

ஒரு நாள் இவ்விதம் கோபால் நந்தசரி, விஜேபால, ஆரியவங்ச ஆகியோர் தோட்டத்துப் பாதைகளில் நடந்து சென்று கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கதிரேசனின் இளைய மகன் சைக்கிளை ஓட்டிக் கொண்டு முன்னே வந்தான்.

நந்தசிரி முன்னேவந்து பாதை நடுவில் வைத்து சைக்கிளை மறித்தான். சிறுவன் பயந்து போய் சைக்கிளை நிறுத்திவிட்டு திருதிருவென விழித்தான்.

"முன்பெல்லாம் கதிரேசன் பால் கொண்டு போனது இந்த சைக்கில்லதான். அதே போல அந்தியானதும் திருட்டுத்தனமாக தேயிலை தூள் கடத்தியதும் இதுலதான்" இப்படிக்கூறிய நந்தசிரி பலமாக சிரித்தான். கோபாலைத் தவிர ஏனைய நண்பர்களும் இந்தக் கதையைக் கேட்டு உரத்து சிரித்தார்கள்.

"சரி, சரி அவன போகவிடு" என்று கூறிய கோபால் நந்தசிரியின் கையைப் பிடித்து சைக்கிளை விடுவித்தான். சிறுவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பின்பக்கம் திரும்பிப் பார்க்காமலேயே சென்றுவிட்டான்.

"எதற்காக நந்தசிரி நீ இப்போது வம்பை விலைக்கு வாங்குகிறாய்" என்று கண்டித்தான் கோபால்.

இந்த சம்பவம் நடந்த அன்று இரவு எட்டு மணிபோல் நந்தசிரியின் லயத்துக்காம்புராவுக்கு முன்னால் "எவன்டா அவன் என் மகன் மீது சண்டித்தனம் காட்டுகிறவன். வாடா வெளியே எவனாவது சண்டியன் இருந்தா" என்று யாரோ பெருங்குரலெடுத்து கூவினார்கள். இந்தச் சத்தம் கேட்டு யாரும் லயத்துக்காம்புராவில் இருந்து வெளியே வரவில்லை என்றபோதும் நந்தசிரிக்கு அந்தக்குரல் பரிச்சயமானதாக இருந்தது.

கதிரேசன்தான் குடித்துவிட்டு வந்து தன்னை வம்புக்கு இழுக்கிறான் என்பதும் அவனுக்கு உடனேயே புரிந்துபோய் விட்டது. அவனும் வெறு மேலுடன் சாரத்தை தூக்கிக் கட்டிக்கொண்டு கையில் கனத்த தடியொன்றுடன் வந்தான்.

"யார்ரா அவன் இரவுல வந்து சத்தம் போடுறது. ஆளுங்க தூங்கிக் கிட்டிருக்காங்கறது தெரியாதா? நாளைக்கி வேலைக்கு போக வேணாமா?" நந்தசிரியும் உரத்துக்கத்திக் கொண்டே வந்தான்.

"என்னாது, ரோட்ல போற நாயெல்லாம் இங்கவந்து கத்துது. தொலைச்சி புடுவேன் தொலைச்சி"

நந்தசிரியின் வீராவேசத்தையும் அவன் பெருந்தடியுடனும் வருவதைக் கவனித்த கதிரேசனுக்கு எங்கோ பொறிதட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுபோதையெல்லாம் சட்டென்று இறங்கிப் போய்விட்டது. பயந்து போன நாயைப்போல் அவன் வாலை காலுக்கடியில் செருகிக் கொண்டான். அவன் உடனேயே தன் குரலின் தொனியை மாற்றிக் கொண்டான்.

"பார், நந்தசிரி என்னோட சின்ன மகன் சைக்கிள் ஓட்டிக் கொண்டு செல்லும்போது யாரோ சில காவாலிப் பயலுக அவனுடன் சச்சரவு செஞ்சிருக்காங்க. அதன கேக்கத்தான் வந்தேன்" கதிரேசன் யாரிடமோ கதைப்பது போல் பேசினான்.

நந்தசிரி கதிரேசனின் மிக அருகில் சென்றான்.

"ஒன்னோட பயல வேறுயாரும் நிறுத்தி சண்டித்தனம் செய்யல. நான்தான் நிறுத்தச் சொன்னேன். ஏன் எனக்கு அவனோட பேச முடியாதா? இந்த பாதை எல்லோருக்கும் சொந்தமானது. ஒனக்கு மட்டும் எழுதிக் கொடுக்கல"

"அதெல்லாம் ஒன்னுமில்ல நந்தசிரி. எம் பையனோட ஒன்ன பேச வேணாம்னு சொல்லுவனா? நீ அவன எது வேணும்நாளும் செய். நான் ஒன்னும் கேக்கமாட்டான். சரி வா ஒரு கிளாஸ் அடிச்சிட்டு வரலாம்"


இந்த சந்தர்ப்பத்தில் லயத்திலிருந்த பலரும் அவ்விடத்துக்கு வந்து கூடிவிட்டார்கள்.

"இப்போ வேணாம் கதிரேசன் அண்ணா, நான் ராத்திரி சாப்பாடு சாப்பிட்டுட்டன். இன்னொரு நாள் பார்த்துக்கலாம். இப்ப நீங்க போயிட்டு வாங்க"

"நீ சொல்லிட்டன்னா நான் போயிட்டு வாறன், அப்படின்னா நா வாறேன்" கதிரே சன் வாய்குளறியவாறே ஆடி அசைந்து நடந்து போனான்.

அன்றைய நாடகம் அத்துடன் முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 80

# கதிரேசனின் கடத்தல் பிடிபட்டது

அன்றிரவு கதிரேசனின் சண்டித்தனம் முடிவடைந்து அவன் பயந்து போய் தன் வாலை சுருட்டிக்கொண்டு சென்ற சில நொடிகளுக்குப் பின்னர்தான் அவ்விடத்துக்கு கோபால் வந்து சேர்ந்தான். வந்தவுடன் முதல் கேள்வியாக "என்ன நந்தசிரி இது தேவையில்லாத வேலை" என்று கேட்டான்.

சில நிமிடங்கள் மௌனம் சாதித்த நந்தசிரி "கோபால் நாம் வம்புக்குப் போக லையே அவன்தான் வந்தான். வந்து சிங்கம் போல கர்ஜனை செய்தான். பின் நாயைப்போல வாலை பின்னால் வச்சுக்கிட்டு போய்ட்டான். அவ்வளவுதான் விசயம் முடிந்து விட்டது. இதில் வருத்தப்படுவதற்கோ யோசிப்பதற்கோ ஒன்றுமேயில்லை" என்றான் நந்தசிரி ஒன்றும் நடக்காதவன் போல. பின் அங்கே கூடியிருந்தவர்களை கலைந்து செல்லுமாறு பணித்தான்.

எல்லோரும் சென்ற பின்பு நந்தசிரி, கோபால், ஆரியவங்ச, விஜயபால ஆகியோர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

"கதிரேசனின் அடாவடித்தனம் அதிகமாயிருச்சு நந்தசிரி ஏதாவது செய்து அவனை அடக்கி வைக்கனும்" .

ஆரியவங்ச இவ்விதம் சொன்னபோது கோபால் அவனை முறைத்துப் பார்த்தான்.

"நீயெல்லாம் ஒன்னுக்கும் கவலைப்படத்தேவையில்லை. அவனை நான் கவனித்துக்கொள்கிறேன்". என்றான் நந்தசிரி திட்டவட்டமாக. அத்துடன் அவர்கள் அன்றைய தினம் கலைந்து சென்று விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் அதிகாலையிலேயே விநோதன் நந்தசிரியைத் தேடிக்கொண்டு வந்தான் அப்போது தான் வெளியே போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த நந்தசிரி

"என்ன மச்சான், என்ன பிரச்சினை காலையிலேயே" என்று கேட்டான்.

"நந்தசிரி நீ எதற்கும் கொஞ்ச காலத்துக்கு டவுன் பக்கம் போகாமல் இருப்பது நல்லது" இதைக்கேட்டு நந்தசிரி வியப்படைந்தான். அவன் முகம் ஆச்சரியத்துடன் விரிந்தது.

"கதிரேசன் டவுனில் வைத்து உன்னை ஆள் வைத்து அடிப்பதற்கு திட்டம் போட்டிருக்கிறான். அதற்கு டவுன் சண்டியன்களை ஏற்பாடு பண்ணியிருக்கிறான்".

இதைக்கேட்டு நந்தசிரி சிரித்தான். பின் வினோதனைப்பார்த்துக் கூறினான்.

"சரி வினோதன் நீ போ நான் பார்த்துக் கொள்கிறேன்.

டவுன்ல எனக்குத் தெரியாத எந்த சண்டியன் இருக்கிறான்னு பார்க்கிறேன்" என்று கூறி வினோதனை அனுப்பி வைத்தான்.

அன்றைய தினம் நந்தசிரியும் நண்பர்களும் தோட்டத்து மாயத்து மலையில் வேலை செய்து கொண்டிருந்தனர்.

தோட்டத்தின் எல்லையில் இருந்த அந்த மலையில் இருந்து பார்த்தால் சுற்றுவட்டாரம் நான்கு புறமும் தெளிவாகத் தெரியும். கதிரேசனின் மாட்டுப்பட்டிகளும் மறக்கறித் தோட்டமும் கூட அந்த மலையடி வாரத்தில் சல சலத்து ஓடிக் கொண்டிருந்த ஆற்றோரத்திலேயே காணப்பட்டது. ஆற்றங்கரையை ஒட்டியிருந்த மேடான பூமியை சுத்தம் செய்து அவன் உண்டாக்கியிருந்த மரக்கறித்தோட்டம் செழிப்பாகக் காணப்பட்டது. அதில் இருந்து அவன் கணிசமான வருமானத்தைப் பெற்று வந்தான்.

கோபாலுக்கு தொடர்ந்தும் ஸ்டோரிலேயே வேலை கிடைத்தது. எனினும் வேலை முடிந்ததும் நண்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆற்றங்கரைக்குப் போய் கை கால் மேல் கழுவுவார்கள். அங்கு வைத்துத்தான் அன்றாட சங்கதிகள் பற்றி அவர்கள் உரையாடுவார்கள்.

அன்றும் அப்படியே கோபால் வந்து இணைந்து கொண்டதும் அவர்கள் சேர்ந்து ஆற்றங்கரைக்குப் போனார்கள். போகும் வழியில் நந்தசிரியைப் பார்த்து கோபால் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று நாம் டவுனுக்குப் போக வேணாம். அதற்கான தேவையும் இல்ல. இன்னைக்கு நாம் தியாகுவின் வீட்டுக்குப் போய் பாட்டுக்கச்சேரி வைச்சு ஜொலியா இருப்போம்" .

நந்தசிரி கோபாலைப் பார்த்து நமுட்டு சிரிப்புச் சிரித்தான். அவனது நையாண்டிப் பார்வை அவன் முகத்தில் குடிவந்திருந்தது.

"ஏன் இன்னைக்கு டவுனுக்குப் போகப்படாதுங்கிறீங்க, கதிரேசன் அங்க என்னைய ஆள்வச்சு அடிக்கப்போறாங்கிறது ஒங்களுக்கும் தெரிஞ்சிருச்சா?"

கோபால் ஆச்சரியத்துடன் நந்தசிரியைப் பார்த்தான். அந்த விசயத்தைத் தெரிந்து கொண்டும் இவனால் எப்படி ஒன்றும் கண்டுகொள்ளாமல் இருக்கிறான் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"கோபாலுக்கு மாத்திரமல்ல எங்க எல்லாத்துக்கும் இந்த சங்கதி தெரியும். டவுன்ல உள்ள சண்டியன்கள் உன் மீது கைவைக்க மாட்டாங்கங்கிறது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும் இந்த காலத்துல யாரையும் சல்லிக்கு வாங்குறது பெரிய வேலையில்ல எதுக்கும் நாம கொஞ்சம் கவனமா இருக்கிறது நல்லது" ஆரியவங்ச புத்திமதி சொன்னான்.

"சரி சரி நீங்க எல்லாரும் சொல்றதால நா ஒங்க பேச்ச கேக்கிறன். நா டவுனுக்கு போகல ஆனா நீங்க எல்லாம் பார்த்துகிட்டிருங்க. அந்த கதிரேசன் பயலுக்கு என்னா நடக்கப் போகுதுன்னு..."

அதன் பிறகு எல்லோரும் தியாகுவின் கச்சேரி காம்புராவுக்குப் போகத் தயாரானார்கள். நந்தசிரி மாத்திரம் கீழே கதிரேசனின் பால் பண்ணையையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது கதிரேசனின் வெள்ளை நிற பால் வேன் பண்ணையில் இருந்து புறப்பட்டு வெளியே வந்தது. அதனை கண்ணுற்ற நந்தசிரி "போறியா போ போ, இன்னைக்கி இருக்கு ஒனக்கு ஆப்பு" என்று தனக்குள் கூறிக் கொண்டான். ஏனையோர் அவனை விசித்திரமாகப் பார்த்தனர்.

இதே சமயம் தோட்டத்துக்கு வெளியில் ஹொலிரூட் ரயில்வே கேட்டுக்கருகாமையில் சில போலீஸ்காரர்கள் எதனையோ எதிர்பார்த்து வீதி யையே உற்றுக்கவனித்துக்கொண்டிருந்தனர். அவ்வழியால் தோட்டத்துக்குள் செல்வோருக்கு ஏன் அவர்கள் அங்கே நின்று காவல் காக்கிறார்கள் என்ற கேள்வி இயல்பாக எழுந்தபோதும் அதற்கான விடை தெரியாமலேயே அவர்கள் அவ்விடத்தில் இருந்து மேலே சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தூரத்து வங்கி வலைவுக்கு அப்பால் இருந்து கதிரேசனின் வெள்ளை நிற பால் வேன் அவர்கள் இருந்த பக்கமாக வரத்தொடங்கியது. அதனை பார்த்த மாத்திரத்திலேயே பொலிசார் உசாரானார்கள். ஒரு பொலிஸ்காரர் அதனை மறிக்க ரோட்டின் நடுப்பகுதியை நோக்கி பாய்ந்தார். வேன் சாரதி பொலிஸ்காரன் தனது வேனை மறிப்பதை உணர்ந்து ரெயில் கேட்டருகில் வண்டியை நிறுத்தினான்.

சாரதிக்கு அருகில் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த கதிரேசன் வெளியே எட்டிப்பார்த்தான்.

"வேனை பரிசோதிக்கும்படி மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளது. திறந்து காட்டுங்கள் என்று சார்ஜன் தரத்தில் இருந்த பொலிஸ்காரர் கோரிக்கை விடுத்தார்" .

அதைக் கேட்டு கதிரேசன் கலவரம் அடைந்தான்.

"வேனில் பால் கேன்கள் தான் உள்ளன"

என கதிரேசன் பரிதாபமாகக் கூறினான்.

"இந்த நேரத்துல யார் ஓய் பால் குடிக்கிறது."

"ஒதுங்கு ஒதுங்கு" என்று கூறி கதிரேசனை ஒதுக்கித்தள்ளிவிட்டு இரண்டு பொலிஸ்காரர்கள் ஒவ்வொரு பால் கேனாகத்திறந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

பால்கேன்கள் ஒவ்வொன்றிலும் ததும்பத்ததும்ப தேயிலை நிரப்பட்டு மூடப்பட்டிருந்தன. இவ்விடத்தில் ஏதோ கலவரம் நடப்பதை அவதானித்த பொதுமக்களும் என்ன ஏது என்று பார்க்க திரளாகக் கூடிவிட்டனர்.

விசயம் பிழைத்து விட்டதை அறிந்த கதிரேசன் பொலிஸ்காரர்களுக்கு லஞ்சம் கொடுத்து சமாளிக்க முனைந்தான். எனினும் இது திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட தேடுதல் என்பதாலும் மேலிடத்து உத்தரவு என்பதாலும் கதிரேசனின் முயற்சிகள் ஒன்றும் பலனளிக்கவில்லை. செய்த களவு கையும் மெய்யுமாக பிடிபட்டுவிட்டது.வேனை பறிமுதல் செய்ததுடன் கதிரேசனையும் பொலிஸ் நிலையம் நோக்கி அழைத்துச் சென்றனர்.

அடுத்த சில நிமிடங்களிலேயே இச்செய்தி தோட்டமெங்கும் பரவிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நிலத்தில் கால்கள் படாமல் நடப்பவர்கள்

கதிரேசன் தோட்டத்தில் இருந்து தேயிலைத்தூள் கடத்தி பொலிசில் மாட்டிக்கொண்ட விடயம் தோட்டத்தின் மூலைமுடுக்கெல்லாம் பரவிச்சென்று அது தியாகுவின் லயத்தையும் அடைந்தது. அன்றைய தினம் வேலை முடிந்து நண்பர்கள் தீர்மானித்துக் கொண்டதன் படி பாட்டுக் கச்சேரி நடத்துவதற்காக நந்தசிரி கோபால் குழுவினர் தியாகுவின் லயக்காம்புராவில் கூடியிருந்தனர்.

நந்தசிரி பணியலயத்தில் இருந்து தப்படிக்கும் ராமனை வரச்சொல்லி அவனுக்கு சாராயத்தை ஊற்றிக் கொடுத்து தப்படிக்கச் சொல்லி அதன் தாளத்துக்கு ஆடிக்கொண்டிருந்தான். யாரைப்பற்றியும் கவலைப் படாமல் தன்பாட்டில் சந்தோசத்துடன் ஆடிக் கொண்டிருந்த நந்தசிரியின் செயல் அன்று வித்தியாசமானதாக இருந்தது.

அவனில் ஏற்பட்டிருந்த மாருதலைக் கவனித்த கோபால் ஒரு நாளும் இல்லாத விதத்தில் இன்று அவன் சந்தோசமாக இருப்பது கண்டு "என்ன நந்தசிரி இன்றைக்கு ஒரு நாளும் இல்லாதவாறு சந்தோசமாக இருக்கிறாய் போல் தெரிகிறது" என்று விசாரித்தான்.

"உண்மைதான் கோபால் இன்று நம் வாழ்வில் ஒரு முக்கியமான நாள். இன்னும் சிறிது நேரத்தில் அதனை நீங்கள் எல்லோரும் தெரிந்துகொள்வீர்கள். இந்த நந்தசிரி எப்படிபட்டவன் என்பது எல்லோருக்கும் தெரிந்து விடும் ராமன் நீ அட்ரா தப்ப"

டங்கு டங்கா... டங்குடங்கு டங்கா
டங்கு டங்கா... டங்குடங்கு டங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்குட்டு டங்கா... டங்குட்டு டங்கா...டங்கா
டங்குட்டு டங்கா... டங்குட்டு டங்கா... டங்கா

ராமன் தப்பை நன்றாக அனலில் காச்சி எடுத்துக்கொண்டு அடித்தான். அதற்கேற்றாற் போல் நந்தசிரியும் வலைந்து நெளிந்து ஆடினான். ஏனையவர்கள் அவனை வியப்பாகப் பார்த்தனர்.

ஏனையவர்களுக்கும் சாராயம் சற்றே உள்ளே இறங்கியதுடன் நந்த சிரியுடன் ஆட்டத்தில் கலந்து கொண்டார்கள். இப்படி சற்று நேரம் கடந்து சென்றது. பக்கத்து லயத்தில் இருந்து செம்பகம் பாட்டி மூச்சிறைக்க மேலேறிவந்து தியாகுவின் காம்புராவுக்குள் எட்டிப்பார்த்தாள். பின் உரத்த குரலால்

"நீங்க இங்க பாட்டுக்கச்சேரி வச்சி ஆடிக்கிட்டு இருக்கீங்க. அங்கே பால்யாவாரி கதிரேசன பொலிஸ் புடிச்சிக்கிட்டு போயிருக்காம். பால் கேன்ல எல்லாம் பாலுக்குப்பதிலா தேயிலை தூள் இருந்திச்சாம். யாரோ ஒத்து சொல்லி யாரோ காட்டிக் கொடுத்திருக்கான்னு அவன் பொஞ்சாதி நெஞ்சில அடிச்சி பொலம்பிக்கிட்டிருக்காளாம். போயி பாருங்க"

இதைக் கேட்டதும் நந்தசிரி ராமனிடம் தப்படிப்பதை நிறுத்தச் சொன்னான்.

"கேட்டிங்களா, செம்பகம் பாட்டி சொன்ன சேதியை கதிரேசன் பால்காரன் தேயிலை தூள் களவெடுத்து மாட்டிக்கிட்டானாம். பொலிஸ் பிடிச்சிக்கிட்டுப் போய்ட்டாங்களாம்"

இப்படிக் கூறிவிட்டு நந்தசிரி பலமாக சிரித்தான் பின் மேலும் கீழும் குதித்துக்குதித்து ஆடினான்.

"நான் சொன்னது இப்பவாவது வெளங்குச்சா. என்ன டவுன்ல ஆள் வைச்சு அடிக்கச்சொன்னவனுக்கு என்ன நடந்ததுன்னு பாத்திரங்களா? எனக்கு கெட்டது செய்ய நினைத்தால் அவன் உருப்படமாட்டான்" என்று சிரித்துக் கொண்டே சொன்ன நந்தசிரி ராமனைப் பார்த்து "அடிரா தப்ப" என்று கட்டளையிட்டான்.

"டண்டனக்கா... டண்டனக்கா... டங்கா டங்கா டங்கா...
டண்டனக்கா... டண்டனக்கா... டங்கா டங்கா டங்கா..."

ராமன் அடித்த அந்த தப்பின் தாளத்துக்கு நந்தசிரி மகிழ்ச்சியுடன் ஆடிக்கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கோபாலால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. அவன் இது தொடர்பில் கவலையுடன் யோசிக்கத் தொடங்கினான். என்னதான் கதிரேசன் மோசமான காரியங்கள் செய்பவனாக இருந்த போதும் இவ்விதம் அவனை பழிவாங்குதல் சரிதானா என அவன் மனம் அசைபோட்டுப் பார்த்தது.

கதிரேசன் அநீதியான வழிகளில் எல்லாம் பணம் சம்பாதிக்கிறான் என்பது உண்மைதான். ஆனால் இப்போது நந்தசிரி செய்திருக்கும் செயலால் அவனை கைகளில் விலங்கு மாட்டி பகிரங்கமாக அவன் மீது திருடன் என்று குற்றம் சுமத்தி நீதிமன்றத்தில் நிறுத்தி சிறைத்தண்டனை பெற்றுக் கொடுப்பார்கள். இந்த செய்தி ஊடகங்களிலும் பகிரங்கப்படுத்தப்படும். கதிரேசன் மட்டுமன்றி அவன் குடும்பத்தினர் அனைவரும் தலை குனிந்து கூனிக்குறுகி அவமானப்பட நேரிடும். சில வேளை தான் புஸ்பராணியை திருமணம் செய்திருந்தால் தனக்கும் கூட இந்த அவமானம் வந்து சேர்ந்திருக்கும் என்று நினைக்க அவன் மனம் வேதனைப்பட்டது.

மறுபுரத்தில் புஸ்பராணியை தன்னிடமிருந்து பிரித்து தனது பதவியையும் பறித்து தனக்கு பல துன்பங்களை விளைவிக்கும் கதிரேசனுக்கு வழங்கப்பட்ட தகுந்த தண்டனைதான் இதுவோ என்று அவன் மனதில் அல்லாட்டம் ஏற்பட்டது. எனினும் நந்தசிரியைப் போல் இச்செயலை எண்ணி மகிழ்ந்து கொண்டாட அவன் மனம் மறுத்து விட்டது.

அண்மைக் காலமாகவே கோபால் புஸ்பராணியின் நினைப்பை சற்றே மறந்திருந்தான். இருந்தாலும் புஸ்பராணி தன்னிடம் இருந்து திட்டமிட்டு பறிக்கப்பட்டுள்ளாள் என்ற வருத்தம் அவன் மனதில் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. புஸ்பராணி அந்த சிறிது காலத்தில் அவனுடன் மிக நெருக்கமாகப் பழகியிருந்தாள். அவளிடம் அவன் எது கேட்டிருந்தாலும் அவள் மறுத்திருக்க மாட்டாள். இந்த அவளது நெருக்கத்தைப் பயன்படுத்தி அவன் அவளை பாலியல் ரீதியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்க முடியும். எனினும் அவன் அந்த கோணத்தில் ஒரு போதும் சிந்தித்துப் பார்த்திருக்கவில்லை. அவன் உயர் காவியங்களில் வரும் தூய காதல் வயப்பட்ட காவியத் தலைவனாகவே இருக்க நினைத்திருக்கிறான். ஆனால் அத்தகைய காதலை இந்த வஞ்சனை மிக்க போலி மனிதர்கள் அற்பத்தனமாக நினைத்து மிக இலகுவாக ஏன் காலில் போட்டு மிதித்துவிட்டார்கள் என்று என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக எதிர்த்து துவம்சம் செய்ய வேண்டும்மென்று உத்வேக உணர்வு ஒன்று அவனுள் ஏற்பட்டது.

கோபால் அன்றைய பாட்டுக்கச்சேரியில் விருப்பத்துடன் பங்கேற்றுக் கொள்ளாமல் எதைப்பற்றியோ கடுமையாக யோசித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற நந்தசிரியும் விஜேபாலவும் அவனருகில் சென்றனர்.

"என்ன மச்சான் கோபால் கடுமையா யோசிக்கிற. மாமனாராக வர இருந்தவன் மாட்டிக்கிட்டானே என்றா? விட்டுத்தள்ளு கோபால் நான் இதைச் செய்தது அவன் உனக்குச் செய்த அட்டூழியத்துக்கும் சேத்துத்தான்" கோபால் நந்தசிரியைத் திருப்பிப் பார்த்தான்.

"எனக்கு அதப்பத்தி எந்த கவலையும் கெடயாது நந்தா. நான் யோசிச்சதெல்லாம் இப்படியெல்லாம் ஏமாத்தி, களவெடுத்து, பொய் சொல்லி, பொழைக்கிறவனெல்லாம் எப்படி தலை நிமிர்ந்து மிடுக்கோட பெரிய மனிதனாட்டம் பாவனை பண்ணி தொழிலாளரை நிலத்தில் போட்டு மிதிக்கிறான்கள் என்பதுதான். அவன் நிலத்தில் நடக்கும்போது கூட அவன் கால்கள் நிலத்தில் படாமல் இரண்டடி மேலே உயரத்தில் தான் போகும்"

"அவனைவிட அவன் மகள், ஒன்னோட ஆசை நாயகி அவளுக்கு நெனப்பு உலக அழகு ராணின்னு..." விஜேபால அவன் பங்குக்கு நக்கலடித்தான்.

கதிரேசனை பொலிஸ் பிடித்தது தொடர்பான கோபாலின் பல்வேறு மனக்குழப்பங்களுக்கும் இப்போது ஒரு முடிவுக்கு வந்திருந்தன. இக்காரியம் வெறுமனே குற்றவாளியைக் கண்டு பிடித்து அவனுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதுடன் மட்டும் முடிந்துவிடுவதல்ல.

பொதுவாக பொலிஸ்காரன்கள் சமூகத்தின் சாதாரண ஒருவன் சிக்கிக் கொண்டாலே அவனை வாட்டி வதைத்து எப்படியெல்லாம் சித்திரவதை செய்வான்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் ஒரு தமிழ் தோட்டத்தொழிலாளி அகப்பட்டுவிட்டால் அவனது நிலை அதோ கதிதான். பொலிஸ் நிலையத்துக்கு வரும் நிண்டவன் போனவனெல்லாம் தன் கைவரி சையைக் காட்டுவான். கையோ காலோ முறியாமல் யாராலும் வெளியே வர முடியாது.

இதனை யோசித்துத்தான் கோபால் பரிதாபப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிஸ் நிலையத்தில் நடக்கும் சித்திரவதைகள்

தமிழ்த் தோட்டத் தொழிலாளி ஏதேனும் காரணத்தின் நிமித்தம் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டால் அது தொடர்பில் தேடிப்பார்த்து சம்பந்தப்பட்டவருக்கு உதவவேண்டியது தோட்டத்தலைவரினதும் தொழிற்சங்க பிரதிநிதிகளினதும் கடமைகளில் ஒன்றாக இருந்தது. எனினும் அவ்விதம் அவர்கள் பொலிஸ் நிலையம் செல்வதற்குள் பிடிபட்டவர்களின் பாதி உயிர் போயிருக்கும்.

இது தொடர்பில் கோபால் ஏற்கனவே பல அனுபவங்களைப் பெற்றிருந்தான். ஒரு முறை தோட்டத்தின் மூன்றாம் நம்பர் வயதில் வசித்தவனான சூசைதாசனை பொலிஸ் கைது செய்திருந்தது. அதற்குக் காரணம் அவன் தோட்டத்தின் சின்னதுரையை அடிக்க முயற்சித்தான் என்பதாகும்.

சூசைதாசன் வசித்த மூன்றாம் நம்பர் லயத்தில் கடைசி காம்பறாவுக்கு சற்றுத் தள்ளித்தான் தோட்டத்தின் கக்கூசுக் காம்பராக்கள் வரிசையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்தன. இபபோதும் அங்கே வாளிக் கக்கூசுகளே பாவனை யில் இருந்தன. அவற்றை குழிக்கக்கூசுகளாக மாற்றித்தரும்படி பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனை சுத்தம் செய்வதில் வாசக்கூட்டிகள் சமூகத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் ஒருவனே ஈடுப்பட்டுவந்தான்.

இப்போது சில தினாங்களாக சுகவீனமுற்றிருப்பதால் வாளிகளின் அசுத்தம் அகற்றப்படாமல் அழுகி நாற்றம் எடுத்து முழு சுற்றுப்புறச் சூழலையுமே நச்சாக்கிக் கொண்டிருந்தது.

ஒரு முறை கோபாலும் நந்தசிரியும் சென்று சின்னதுரை பிரயன் கொடிக்காரவைச்சந்தித்துமுறையிட்டபோது"அந்தந்தலயத்தில்இருப்பவனே அதனை சுத்தமாக்கிக் கொள்ளச் சொல்" என்று எடுத்தெறிந்து பேசிவிட்டான். அவன் புதிதாக வந்திருந்த இளம் துரை யாகவும் சிங்கள மேட்டுக்குடி இனத்தைச் சேர்ந்தவனாகவும் இருந்தான். அவனுக்கு தோட்டங்களில் தொழிலாளர் மத்தியில் காணப்பட்ட சாதியமைப்பு முறைப்பற்றி கொஞ்சமும் தெரிவிருக்கவில்லை. அங்கே பள்ளன், பறையன், சக்கிளியன், வாசக்கூட்டி, வண்ணான் என்ற பேதங்கள் காணப்படுவதையும் இத்தகையவர்கள் தம்மை உயர்சாதி என்றுக் கூறிக்கொண்டு ஏனைய தொழிலாளர்களை மதிப்புக் கொடுக்காமல் இழிவுப்படுத்தி கீழ்தரமாக நடத்துகிறார்கள் என்பதெல்லாம் கூட அந்த அதிகாரிக்கு தெரிந்திருக்கவில்லை.

அந்த அதிகாரியையே சூசைதாசன் மிரட்டியிருக்கிறான். இருந்தாலும் அடித்தான் என்றே வழக்கு பதிவாகி இருந்தது. சூசைதாசன் கைது செய்யப்படும்போது கோபால் தோட்டத்தில் இருக்கவில்லை. அவன் ஹட்டன் நகருக்குச் சென்றிருந்தான். அவன் திரும்பி வந்து விசயத்தை தெரிந்து கொண்டு பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்றான். அவன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தோட்டத் தொழிற்சங்கத் தலைவர் என்றும் சூசைதாசன் தொடர்பில் பேச வந்திருப்பதாகவும் பொலிசாரிடம் தெரிவித்தபோதும் அங்கிருந்த பொலிஸ்காரன்கள் அவனை ஒரு புழுவாகக் கூட கணக்கெடுக்கவில்லை.

சூசைதாசன் பொலிஸ் குற்றவாளிகள் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தான். அவன் கோபாலைக் கண்டதும் தன்னைக் காப்பாற்ற மாட்டானா என பரிதாபமாகப் பார்த்தான். அவனை செம்மையாக அடித்து உதைத்திருக்கிறார்கள் என்பது பார்த்த மாத்திரத்திலேயே விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வயது போன தாய் பொலிஸ் நிலையத்துக்கு வெளியில் இருந்து அழுது கொண்டிருந்தாள். அவள் சூசைதாசனுக்கு சாப்பாடு கொண்டு வந்திருந்தாலும் அதனைக் கொடுக்க அனுமதிக்கப்படவில்லை. அவள் கோபாலைக் கண்டதும் மகனைக் காப்பாற்றித் தரும்படி புலம்பினாள்.

கோபால் தயக்கத்தை கைவிட்டு விட்டு நேரடியாக பொலிஸ் சார்ஜன்ட்டிடம் சென்றான். சேர் நான் சூசைதாசன பார்க்க வேண்டும். அவனுக்கு சாப்பாடு கொடுக்கவேண்டும் என்று தயவுடன் கேட்டான். சார்ஜன்ட் அவனை முறைத்துப் பார்த்தான். "அவனைப் பத்தி நீ கவலைப்படாத அவனுக்கு நாங்க சாப்பாடு கொடுத்திருக்கோம்."

அங்கிருந்த பஞ்ஞாரத்ன என்ற பொலிஸ்காரன் கோபாலைப் பார்த்து கூறினான். அவன் கைது செய்து பொலிஸ் ஸ்டேசன் கொண்டு வருபவர்களுக்கு அடித்து உதைத்து சித்திரவதை செய்பவன் என்று மக்கள் மத்தியில் பிரசித்தமாகி இருந்தான். ஏய் நாங்க எங்க கடமையைத் தான் செய்கிறோம். இங்க வந்து கரச்சல் கொடுக்காமல் போ. தோட்டத்து சின்னதுரைக்கு அடிக்க முயற்சித்தது பெரிய குத்தம். எங்களுக்கு அமைதியை பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கு. நீ போ போ" என்று உறுமிய சார்ஜன்ட் அவனது சட்டைக் காலரை பிடித்து வெளியே இழுத்துக் கொண்டுப் போய் தள்ளினான் .

கோபாலுக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தாலும் அதனை வெளிக்காட்டுதலுக்கான தருணம் அல்ல என்பதால் அடக்கிக்கொண்டான். அங்கிருந்து வெளியேற அவன் தான் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கத்தின் பிரதேச காரியாலயத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டான். நுவரெலியாவில் இருக்கும் பிரதேச பிரதிநிதி அவனுக்கு அறிமுகமானவர்தான். அவருக்கு சக்தி வாய்ந்த அரசியல் பின்னணி இருந்தது. அவர் பெயர் கோவிந்தராஜ். அவர் ஒரு சட்டத்தரணியாக இல்லாது இருந்தாலும் சட்டத்தரணிக்கேயுரிய வாதத்திறமையும் புத்திக்கூர்மையும் அவருக்கிருந்தது. அத்துடன் அவர் பல அரசாங்க அமைச்சர்களுடனும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனும் தொடர்பு வைத்திருந்திருப்பவர். கோபால் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சூசைதாசன் தொடர்பான விடயத்தைக் கூறினான்.

அவன் கூறியதை காது கொடுத்துக் கேட்ட கோவிந்தராஜ் வழக்கு கொஞ்சம் கஸ்டம்தானதுதான். கிரிமினல் கேஸ். என்று கூறி அவனை ஹட்டன் காரியாலயத்தில் வந்து காத்திருக்கும் படியும் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஒரு மணித்தியாலத்தில் அங்குவருவதாகவும் கூறினார். அத்துடன் சூசைதாசனின் தாயாரையும் இருக்குமாறு கூறினார். அவன் சூசைதாசனின் தாயாரையும் அழைத்துக் கொண்டு ஹட்டன் தொழிற்சங்க காரியாலயத்திற்கு சென்றான். பொலிஸ்காராங்க சூசைதாசனை ரொம்ப அடிச்சிருக்கானுங்க. அவனை அடிக்கும் படி சின்னதுரை சாராயமும் லஞ்சமும் கொடுத்திருக்கான்போல தெரியுது. என்றாள் சூசைதாசனின் தாயார் கோபாலிடம் அழுது கொண்டே.

அவர்களின் தோட்டத்தில் வசித்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஐந்தாறு குடும்பங்களில் ஒன்றுதான் சூசையின் குடும்பம். அவர்கள் ஏனைய சமயங்களுடன் மிக ஒத்துவாழ்பவர்கள். கோவில் திருவிழாவின்போதும் ஏனைய இளைஞர்களுடன் சேர்ந்து எல்லா காரியங்களிலும் சூசை கலந்து கொள்வான். ஆனாலும் தோட்டத்தின் கீழ் பிரிவில் அமைந்திருந்த கிருஸ்தவ தேவாலயத்தின் ஞாயிறன்று காலை ஆராதனைக்கு அவனும் அவன் குடும்பமும் தவறாமல் சென்றுவிடுவார்கள். சூசைதாசனுக்கும் தோட்டத்தின் ஏனைய இளைஞர்களுக்கும் இடையில் காணப்பட்ட ஒரேயொரு வித்தியாசம் ஏனைய இளைஞர்களைப் போலல்லாது அவன் கழுத்தில் வெள்ளியிலான ஒரு சிலுவை சங்கிலியில் கோர்க்கப்பட்டு தொங்கிக் கொண்டிருந்ததுதான்.

கோபாலும் சூசையின் தாயாரும் சங்க காரியாலயத்தை அடைந்து நுவரெலியா பிரதேச சங்க பிரதிநிதி கோவிந்தராஜாவுக்காக காத்திருந்தனர். அவரும் சிறிது நேரத்திலேயே அவசர அவசரமாக காரியாலயத்திற்குள் நுழைந்தார். அப்போது அங்கே முன் வராந்தாவில் சூசைதாசனின் தாயும் கோபாலும் மட்டுமே இருந்ததால் அவர்கள் யாரென்பதை அவர் உடனேயே இனம் கண்டு கொண்டார்.

அவரைக் கண்ட உடனேயே சூசையின் அம்மா நடந்ததை எல்லாம் சொல்லி அழுது புலம்பினார். அடுத்த நிமிடம் அவர் கோபாலையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் நோக்கி விரைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கோவிந்தராஜனின் ராஜதந்திரம்

கோவிந்தராஜன் பொலிஸ் நிலையம் செல்லும் வழியிலேயே எல்லா விவரங்களையும் கோபாலிடம் கேட்டுத்தெரிந்து கொண்டார். அவர் ஏற்கனவே கோபால் பற்றியும் அவன் நடவடிக்கைகள் பற்றியும் தான் கேள்விப்பட்டதாகவும் சங்கத்தின் மேலிடத்தில் அவனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் நிலவுவதாகவும் கூறி அவனைப் பாராட்டினார்.

அவர்கள் பொலிஸ் நிலையத்தை சென்றடைந்த போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் வந்திருந்தார். கோவிந்தராஜன் வெள்ளை கமி சும் அதற்கேற்றால் போல் வெள்ளைக் காற்சட்டையும் சட்டைக்கு மேல் கறுப்புக்கோட்டும் அணிந்திருந்தார்.

கையில் சில வழக்குப் பைல்களும் நாட் குறிப்புப் புத்தகமும் வைத்திருந்தார். பார்த்த மாத்திரத்தில் ஒரு சட்டத்தரணியைப் போலவே அவரது தோற்றம் இருந்தது. அவர் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து யாரையும் சட்டை செய்யாமல் நேரடியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் மேசைக்குச் சென்று அங்கிருந்த கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார். கோபாலும் அவர் அருகில் சென்று இரண்டு கைகளையும் பவ்வியமாக கட்டிக்கொண்டு நின்றான்.

அவர் எந்தவித தயக்கமும் இன்றி தெளிவான சிங்களத்தில் சரளமாகப் பேசினார். "எங்கள் சங்க உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்"

அப்போதுதான் அங்கு வந்த சார்ஜன்ட் அவரை மேலும் பேச விடாமல் இடைமறித்து "யூனியன் ஆட்கள் இதில் தலையிட முடியாது மிஸ்டர்! இது கிரி மினல் கேஸ்" என்றார் தலைவீங்கியபடி முறைத்துப் பார்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்தராஜன் அவனது முறைப்புக்கு பதிலாக ஏளனப் புன்னகை ஒன்றை உதிர்த்தார். பின் பொலிஸ் பொறுப்பதிகாரியைப் பார்த்து கூறினார்.

"ஆம் கிரிமினல் கேஸ்தான். நான் ஏற்றுக்கொள்கிறேன்.

உங்கள் கடமையை மதிக்கிறேன். ஆனால் கைது செய்யப்பட்டவன் யூனியன்காரன் என்பதற்கு மேலாக அவன் ஒரு மானுடன் என்ற வகையிலேயே இங்கே வந்திருக்கிறேன்"

"கிரிமினல் வழக்கொன்றில் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவனை அடித்து உதைத்து சித்திரவதை செய்வது உங்கள் கடமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா? அப்படியானால் நான் இங்கு வந்திருக் கமாட்டேன். நீங்கள் உங்கள் கடமையை செய்யுங்கள் இன்ஸ்பெக்டர். நான் எனது யூனியன்காரனின் மனித உரிமை மீறல் தொடர்பாக மேலிடத்துடன் பார்த்துக்கொள்கிறேன்."

"ஒரு சந்தேக நபர் குற்றவாளியென நிரூபிக்கப்படும் வரை அவர் நிரபராதி எனக்கருதப்பட வேண்டுமென்பதை நான் சொல்லித்தரவேண்டியதில்லை. இப்போதே அவன் கை காலை உடைத்து அவனை எழும்ப முடியாமல் செய்திருக்கிறீர்கள். கைது செய்யப்பட்டவரை பார்க்க அவனது தாயாரை அனுமதிக்கவில்லை. அவனுக்குக் கொண்டுவந்த உணவை கொடுக்க அனுமதிக்கவில்லை. தோட்டத்தொழிலாளர் அடிமைகள் அல்ல. இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக உழைப்பவர்கள். அவர்களால் அவர்கள் உரிமை பற்றிப் பேச வாயைக்கூட திறக்க முடியாமலுள்ளது."

கோவிந்தராஜன் சற்றே நிறுத்தி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினதும் சார்ஜண்டினதும் முகத்தைப் பார்த்தார்.

பொலிஸ் சார்ஜண்ட் இலகுவில் மசிந்து போகிறவன் அல்ல. அவன் ஒரு போதும் தன் தவறுகளை ஒத்துக்கொண்டவன் அல்ல. அவன் கோவிந்தராஜனை முறைத்துப்பார்த்தான். சிங்கத்தின் குகைக்குள்ளேயே வந்து சிங்கத்தை மிரட்டும் அற்பனை பார்ப்பவன் போல் கோவிந்தராஜனைப் பார்த்தான்.

"அந்த குற்றவாளி தோட்டத்தின் உயர் அதிகாரி ஒருவரை தாக்க முயற்சி செய்திருக்கிறான். அவ்விதம் தாக்க முயற்சிப்பது சட்டத்தின்படி மிகப் பாரதூரமான குற்றம். மற்றக் குற்றம் இந்த குற்றவாளி தோட்டத்துக்குள் மத பேதத்தை உண்டு பண்ண முயற்சித்துள்ளான். அவ்வித செயல் இறுதி யில் இனவாத கலவரத்தில் முடியுமென்பது உங்களுக்குத்தெரியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றது பொலிஸ் அதிகாரிகளை தாக்கி காயப்படுத்தவும் முயற்சித்துள்ளான். அதனால்தான் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது சுய பாதுகாப்பு கருதி பதில் தாக்குதல் நடத்தும்போது இவ்வித காயங்கள் ஏற்படத்தான் செய்யும். நீங்கள் உங்கள் சங்க அங்கத்தவர் தொடர்பில் அக்கறை கொள்வது போல் நானும் எனது பொலிஸ் நிலைய அதிகாரிகள் தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டாமா?"

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இவ்விதம் அகங்காரத்துடன் கூறி னார். அவர் கோவிந்தராஜன் சொன்னதை கொஞ்சமும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் கோவிந்தராஜன் இதனை எதிர்பார்த்தவர்போல் தனது கம்பீரமான குரலில் சுத்தமான சிங்களத்தில் பதில் கொடுத்தார்.

"அப்படியானால் பரவாயில்லை. நன்கு முறையாக சண்டை மற்றும் ஆயுதப்பயிற்சி பெற்ற பொலிசார் நான்கு பேர் சென்று ஒரு அப்பாவியைக் கைது செய்து கைவிலங்கு மாட்டி அழைத்து வரும்போது அவனிடம் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள பதில் தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள் என்பது எந்த அளவுக்கு உண்மையானது என்பதை தீர்மானிக்கும் விடயத்தை நீதிமன்றத்திடம் விட்டுவிடுவோம். தாராளமாக நீங்கள் வழக்குப்போடுங்கள். நான் இங்கே வந்ததற்குக் காரணம் சந்தேக நபரை பிணையில் விடுவிக்கவும் அவரை வைத்தியசாலையில் அனுமதித்து வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காகவும்தான்!"

இவ்விதம் கோவிந்தராஜன் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் நேராகவே தெரிவித்தபோது பக்கத்தில் அதனை கேட்டுக்கொண்டிருந்த போது சார்ஜண்ட் அதிர்ச்சியடைந்ததை கோபால் கவனித்தான். கோவிந்தராஜனின் சிங்கள மொழிப் புலமையும் அவர் கருத்துக்களை அடுக்காக அள்ளித் தெளித்த வித மும் கோபாலை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"நீங்கள் கேட்பது என் வேலைக்கே உலைவைக்கும் கோரிக்கை என்பது உங்களுக்குத் தெரியுமா? மிஸ்டர் தோட்டத்தின் சின்னதுரை யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். கண்டியில் இருக்கும் அமைச்சரின் மகன் அவர்களுக்கு எதிராக என்னால் என்ன செய்ய முடியும்?"

"நல்லது இன்ஸ்பெக்டர், நான் அப்படியானால் நான் பொலிஸ்மா அதிபருடன் இது தொடர்பில் பேசுகிறேன். எங்கள் யூனியன் தலைவரும் பாராளுமன்றத்தில் அமைச்சராகத்தான் இருக்கிறார். அதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் கைது செய்து சித்திரவதை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்து வைத்திருக்கும் சூசைதாசன் சின்னத்துரை மீது தாக்குதல் நடத்தவில்லை என்பதையும் மனதில் வைத்திருங்கள்"

கோவிந்தராஜன் தான் அமர்ந்திருந்த கதிரையில் இருந்து எழுந்தார். அவரை கையமர்த்தி இருக்கச் சொன்ன இன்ஸ்பெக்டர் தன் உயர் தொனியிலான குரலிலிருந்து இறங்கி வந்து திமிர் நீக்கம் பெற்றவராக.

"சரி.... சரி..... மிஸ்டர் அம்மாவை போய் அவனை பார்க்கவும் அவனுக்கு சாப்பாடு கொடுக்கவும் அனுமதிக்கிறேன். பிணையில் விடுவது பற்றி டி.ஐ.ஜி. யோட பேசி ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

இது தொடர்பில் அவர் சார்ஜண்டிடம் பணிப்புரைகளை வழங்கினார்.

"எனக்குக் கூட இந்த வேலை வோணான்னு போச்சு மிஸ்டர். இப்படி சாதாரண அப்பாவிகளை கொண்டுவந்து அடித்து உதைப்பதில் எனக்கும் கொஞ்சம் கூட உடன்பாடில்லை. ஆனால் தோட்டத்துரைமார்கள் அரசியல் பலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

வெள்ளைக்காரனிடம் இருந்து தோட்டங்களை பறித்த அரசியல் வாதிகள் அவற்றை நிர்வாகம் செய்யவென மிகுந்த பணச்செலவில் அவரவர்களின் உறவினர்களையே நியமித்திருக்கிறார்கள். வெள்ளைக் காரர்களுடன் வேலை செய்வது இலகு. இவர்கள் அதிகாரத் திமிரில் ஆடுகிறார்கள்".

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜனுடன் நட்புடன் கதைத்தவாறே வெளியில் வந்தார். கோபாலுக்கு கோவிந்தராஜன் தொடர்பில் பெரு மதிப்பு ஏற்பட்டது. அவர் ஒரு சிக்கலான பிரச்சினையை மிகுந்த ராஜதந்திரத்துடன் தன் பேச்சுத்திறமையால் மிக லாவகமாக தீர்த்து வைத்த பாங்கு அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

கோவிந்தராஜனுடன் ஒட்டிக்கொண்டே நடந்துவரும் கோபாலைக் கவனித்த இன்ஸ்பெக்டர் "இவர் தான் தோட்டத்து யூனியன் தலைவரா?" என்று கேட்டார். கோவிந்தராஜன் கோபாலை இன்ஸ்பெக்டருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து இன்ஸ்பெக்டர் கோபாலிடம் கேட்ட முதல் கேள்வி அவனை புதுமையடைய செய்தது. "அந்தத்தோட்டத்தில் நந்தசிரி என்ற ஒரு சிங்கள இளைஞன் இருக்கிறானே! அவனைத் தெரியுமா" என்று அவர் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



84

## கதிரேசன் காரனை காப்பாத்த முடியுமா?

போலிஸ் இன்ஸ்பெக்டர் நந்தசிறியை பற்றி கோபாலிடம் விசாரித்தமை தொடர்பில் அவன் வியப்படைந்தான். அவனுக்கு இப்போது மிகுந்த தைரியம் வந்திருந்தது. அவன் பதிலுக்கு போலிஸ் இன்ஸ்பெக்டரிடம் "நந்தசிறியை தெரி யுமா?" என்று கேட்டான்.

அதற்கு போலிஸ் இன்ஸ்பெக்டர் சிரித்து கொண்டே பதில் கூறினார்.

"அவன் ஒரு மிகுந்த துணிச்சலான இளைஞன். உண்மையில் அவன் போலிஸ்காரனாக வந்திருக்க வேண்டும். குற்ற புலனாய்வு தொடர்பில் அவனுக்கு நல்ல புத்தி கூர்மை இருககிறது. அவனை விசாரித்ததாக சொல்" இன்ஸ்பெக்டரும் கோவிந்தனும் விடைபெற்று சென்றனர். இதனை கவனித்துக் கொண்டிருந்த சூசைதாசனின் அம்மாவுக்கு தன் மகன் பற்றிய பயமும் பீதியும் மறைந்துபோனது. அவள் கோபாலை தெய்வமாக பார்த்தாள்.

கோபாலும் சூசைதாசனின் அம்மாவும் அவன் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறை கூட்டருகில் சென்று பார்த்து பேசினர். அவனுக்கு சில பீடிகளையும் நெருப்பு பெட்டிகளையும் கோபால் கொடுத்தான். பின்னர் சிறிது நேரத்தில் சூசையிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டு அவனை பொலிஸார் விடுவித்தனர்.

எனினும் சூசைதாசனை விடுவித்தது போல கதிரேசனை விடுவிக்க முடியுமா என்பது தொடர்பில் கோபாலுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதற்கான முக்கிய காரணம் அவர் எந்த தொழிற்சங்கத்திலும் அங்கத்துவராக இருக்கவில்லை. அத்துடன் அவர் கையும் மெய்யுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பட்டிருந்தது. அதற்கான நேரடி சாட்சிகளும் இருந்தன. ஆனாலும் கதிரேசன் குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோரும் பண பலம் மிக்கவர்களாக இருந்ததால் அவர்கள் பணத்தின் மூலம் சாதிக்க முயல்வார்கள் என்பதால் இது தொடர்பில் தான் அதிகம் கவலைப்படத் தேவையில்லை என கோபால் நினைத்திருந்தான்.

குளிக்க சென்ற இடத்தில் சற்றே ஒதுங்கி கோபால் கடுமையாக சிந்தித்து கொண்டிருப்பதை கவனித்திருந்த நந்தசிறி கோபாலை அழைத்தான்.

"கோபால் நீ தோட்டத்தலைவனாக ஆனதில் இருந்தே ரொம்ப மாறிபோய் விட்டாய். எப்போதும் மற்றவர்கள் பிரச்சினைகள் பற்றியே யோசிக்கின்றாய். அது ஒருவிதத்தில் நல்லதுதான்.ஆனால் முற்றிலும் அதிலேயே மூழ்கிப்போய்விட கூடாது. இப்போதுகூட அந்த கதிரேசன் பயலை பற்றிதான் யோசிக்கிறாய் என்று நினைக்கின்றேன். அதையெல்லாம் விட்டுதள்ளு கோபால். உனக்கு செய்த துரோகத்துக்கும் இந்த தோட்டத்தில் வசிக்கின்ற ஏனைய தொழிலாளர்களை மண் புழுவாகக்கூட மதிக்காத அவனுக்கு இத்தகைய தண்டனை அவசியம்தான். வா குளிக்கிறதுக்கு"

நந்தசிறி தலை, மேல், கால்களை டவலால் துடைத்துக் கொண்டு சாரத்துடன் பாறை மேல் அமர்ந்து அருகில் இருந்த சட்டை பையில் இருந்து சில பீடிகளை உருவினான். நந்தசிறி சொல்வதிலும் அர்த்தம் இருப்பதாகவே கோபாலுக்கும் தோன்றியது. அவன் தன் சிந்தனையில் இருந்து விடுப்பட்டு ஓடையில் இறங்கினான்.

அடுத்தடுத்து வந்த நாட்களிலும் பலரும் கதிரேசன் தொடர்பில் பல கேள்விகளை கேட்டு அவன் எண்ணங்களை திசை திருப்பிக் கொண்டே இருந்தார்கள்.

"கதிரேசன்காரனுக்கு நடந்தது என்ன?"

"எப்போது நீதிமன்றத்துக்கு கொண்டு வருவார்கள்?"

"பதுளை சிறைச்சாலைக்கு கொண்டு போய்விட்டார்களாமே"

"கதிரேசனின் பணக்கார சொந்தக்காரர்கள் உதவிக்கு வரமாட்டார்களா?"

"மகளை இந்தியாவில் பணக்கார மாபிள்ளைக்கு கட்டிக் கொடுத்தானே. அவன் வந்து காப்பாத்துவான்"

"அந்த மனுசனை எனக்கு கண்ணுலையும் காட்டேலாது. களவில சம்பாதிச்ச காச வச்சிக்கிட்டு எம்புட்டு ஆட்டம் போட்டான்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலையில ஒன்னா வேல செஞ்ச எங்கள கூட மதிக்காத அவனுக்கு நல்லா வேணும்."

இப்படி பலரும் பல கேள்விகளை கேட்டு அவன் எண்ணங்களை சிதறடித்தார்கள். ஆனால் அவனது அம்மா அன்னம்மாவின் கருத்து வித்தியாசமானதாக இருந்தது.

"தம்பி ஏதாவது செஞ்சி அந்த கதிரேசனை வெளியில கொண்டு வர முடியுமானு பாரு. யூனியன் காரியதரிசி கிட்டயாவது பேசிப்பாக்குறியா?"

கோபால் முன்பெல்லாம் தன் அம்மா கேட்டுக் கெண்ட காரியங்களை யெல்லாம் தட்டாமல் நிறைவேற்றியிருக்கிறான். ஆனால் இது விடயத்தில் அவனால் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. இதனை அவளுக்கு எவ்வாறு விளங்கப்படுத்துவது என்று யோசித்தான். சாதாரண ஒரு தோட்ட தொழிலாளி யின் சார்பில் பொலிஸாரிடம் பேசி இதனை தீர்க்க முடியாதென்று அம்மாவுக்கு விளங்கப்படுத்தினான். இருந்தாலும் அவள் அவனை சந்தேகத்துடனே பார்த்தாள்.

"தம்பி கதிரேசன் அவன் மகளை உன்னிடம் இருந்து பிரித்து இந்தியாவுக்கு கூட்டிச் சென்று வேறாளுக்கு கல்யாணம் செய்து வச்சிருக்கிறது வாஸ்தவந்தான். ஆனா அதுக்காக அவன் மேல வைரம் வச்சி அவன பழிவாங்காம அவன காப்பாத்த பாரு. இப்பவே அவன் போலிஸ் கிட்ட அடி வாங்கிருப்பான்"

அன்னம்மா இத்துடன் இரண்டாவது முறையாக கோபாலினதும் புஸ்பராணியினதும் சம்பந்தம் குறித்து பேசி விட்டாள்.

"எனக்கு கதிரேசன் தொடர்பில் எவ்வித கோபமும் கிடையாது அம்மா. களவு கையும் மெய்யுமாக சாட்சிகளுடன் பிடிப்பட்டுள்ளதால் இது விடயத்தில் என்னால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. அத்தோடு அவருக்கு தேயி லைத்தூள் களவாக வழங்கிய பெரிய அதிகாரிகளும் தங்களது பேரை காப்பாத்திகொள்ள கதிரேசனுக்கு எதிராக புகார் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் கதிரேசன்தான் ஸ்டோரில் இருந்து தேயிலைத்தூள் திருடியுள்ளான் என தொழிற்சாலை பதிவு புத்தகத்தில் குறித்து அதன் பிரதியை பொலிஸ்"க்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். பொலிஸாருக்குக் காசு கொடுத்து கதிரேசனுக்கு எதிராக எல்லா சாட்சிகளையும் தயாரித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொது இதில் என்னால் என்ன செய்யமுடியும்?"

கோபால் அன்னம்மாவுக்குத் தன் நிலைமையை விளக்கினான். அன்னம்மா அதனைக் கேட்டு மௌனமானாள். அதன் பின் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களை சந்திக்க பணிய லயத்துக்கு இறங்கி நடந்தான். அன்றைய தினம் அவர்கள் அட்டனுக்குச் சென்று படம் ஒன்று பார்ப்பதென்று திட்டமிட்டிருந்தார்கள். நண்பர்கள் நந்தசிரி குழுவினர் அவனை எதிர்பார்த்து பணியலயத்துக்கப்பால் இருந்த மண் பாதை யில் காத்திருந்தார்கள். கோபால் வந்ததும் அவனுடன் சேர்ந்து பேசிக்கொண்டே அட்டன் நகரை நோக்கி பயணமானார்கள்.

திடீரென நந்தசிறி கோபாலை பார்த்து கேள்வியொன்றைக் கேட்டான்.

"கோபால் உங்கம்மா உனக்கு பொண்ணு பார்த்தாங்களே? என்னாச்சு சரின்னு சொல்லிட்டியா?" இதைக்கேட்டதும் கோபால் சோகமானான்.

"அதெப்படி நந்தா அதற்குள் நான் புஸ்பராணியை மறக்க முடியுமா? அவளை மறக்க வேண்டும் என்பதற்காகத்தானே யூனியன் வேலையை தலைக்குமேல் இழுத்துப் போட்டுக்கொண்டு வேலை செய்கிறேன் கோபாலின் அந்த வார்த்தைகளிலும் சோகம் பிரதிபலித்தது.

இதைக் கவனித்த விஜேபால கோபாலை கிண்ட நினைத்தான். "கோபால் உனக்கு யூனியன் வேலை சரிவராது யூனியன் தலைவர் செய்யும் ஒரு வேலை யைக் கூட நீ இதுவரை செய்யவில்லை."

கோபால் அவனை ஆச்சரியமாக பார்த்தான். "போடா, நான் மக்களுக்கு இவ்வளவு உதவிகள் செய்து பிரச்சினைகள் வராமல் பார்த்து கொள்வது போதாதா?"

விஜேபால சிரித்து கொண்டே. சத்தமாக அதற்கு பதில் சொன்னான்.

"நீ ஏனைய யூனியன்காரன்போல் லஞ்சம் வாங்குவதில்லை. வேலை நிறுத்தப்பட்ட பெண்களுக்கு வேலை வாங்கி கொடுத்து விட்டு பின்னர் கணவன் இல்லாதபோது அவர்கள் வீட்டில் நுழைவது, யூனியன் தலைவர்களுக்கு இளம் பெண்களை கூட்டிக் கொடுப்பது, தோட்ட உத்தியோகத்தர்களின் வீட்டு வேலைக்கு இளம் பொம்பள புள்ளங்களை அனுப்புவது, ஏன் உன்னைய தவிர வேறு ஒருவன் தலைவர் ஆகியிருந்தா இதுவரைக்கும் எத்தனை பொம்பள புள்ளைங்கள சிதைச்சிருப்பான். நீ இதையெல்லாம் செய்யிறதில்லையே." இதைகேட்டு நண்பர்கள் எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குட்டக் குட்டக் குனிபவர் ஒரு நாள் நிமிர்வர்

காலம் மிக வேகமாக மாறிக் கொண்டிருந்ததது. தோட்டங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் முற்றிலும் அரசியல் மயமாகிக் கொண்டிருந்தன. அத்துடன் நிலை மைகள் மிக மோசமாக விரும்பத்தகாத இலக்குகளை நோக்கி திசை திரும்பி கொண்டிருந்தன.

தமது சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழிற்சங்கங்கள் அரசை நிர்ப்பந்திக்கவும், அழுத்தம் கொண்டு வரவும், பேரம் பேசும் சக்தியை தவறாக பயன்படுத்த ஆரம்பித்தன.

தொழிற்சங்கத் தலைமைகள் தாம் நினைத்ததை சாதித்துக் கொள்ளும் வகையிலும் தமது அபிலாசைகளை தொழிற்சங்க நோக்கங்களாக ஏற்றுக் கொள்ளும் வகையிலும் தொழிலாளரின் மனநிலையை மாற்றியமைக்கும் இரகசிய வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தின.

கோபால் அன்றைய தினம் அட்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவனது தொழிற்சங்க கூட்டமொன்றுக்கு போயிருந்தான். அந்தக் கூட்டத்தில் சங்கத்தின் பிரதம காரியதரிசி எஸ்.எஸ். நல்லுசாமியே பிரதம அதிதி உரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோழர்களே! இன்றைக்கு நூற்றைம்பது வருடத்திற்கு முன்னர் எமது முன்னோர்களை அடிமைகள் போல் ஆங்கிலேயர்கள் பல பசப்பு வார்த்தைகளை கூறி ஏமாற்றி இந்த நாட்டுக்கு அழைத்து வந்தார்கள். நேற்று வரை அவர்கள் அப்படியேதான் கொத்தடிமைகளாக நடத்தப் பட்டார்கள். ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது. நாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள் இந்த நாட்டிற்குறியவர்கள்.

இன்று இந்த மலைகள் தோட்டங்கள் எல்லாமே அரசுக்குச் சொந்தமானவைகள். நாம் எல்லோரும் அரச ஊழியர்கள். எமக்கேற்ற ஊதியத்தை அரசு வழங்க வேண்டும். இந்த லய வாழ்க்கைக்கு முடிவு கட்டி எமக்கும் ஏனைய இனத்தவர்கள் போல் வீடுகள் கட்டி தர வேண்டும். காணி பெற்றுக் கொடுக்க வேண்டும். வங்கிக் கடன் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இப்போது நமது பிள்ளைகளுக்கு கல்வி கற்க உரிய பாடசாலைகள் இல்லை. சுகாதார மற்றும் வைத்திய வசதிகள் இல்லை. பிள்ளைகள் விளை யாட மைதானங்கள் இல்லை. குறிப்பாக கூறினால் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இவை சலுகைகள் அல்ல. எமது உரிமைகளை பெற்றுக் கொடுக்க எமது தலைவர் போராட தயாராகவே உள்ளார். இவற்றை பெற்றுக் கொள்ள அழுத்தங்களை கொண்டு வர வேண்டும். அதற்கு உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியமானதாகும்."

அந்தப் பேச்சு உண்மையாகவே தொழிலாளர்களை உசுப்பி உருவேற்றி ஆவேசப்படுத்துவது போலவே இருந்தது. ஆனால் அது அத்தனையும் கபட நாடகம் என்பது கோபாலின் அடிமனதுக்கு புரிந்தது. தமது தலைவர்கள் தமக்காகக் குரல் கொடுக்கிறார்கள். என்ற எண்ணத்தை தொழிலாளர்களின் மண்டைக்குள் திணித்து அடுத்து வரும் தேர்தலில் வாக்குகளை கொள்ளையடித்து அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்வதற்கான போலியான ஆவேசப் பேச்சே அது எனப் புரிந்துகொள்ள கோபாலுக்கு சில கணங்களே சென்றன. தன்னைப் போன்றவர்களின் அர்ப்பணிப்புக்களையும், தியாகங்களையும் இவர்கள் தமது சொந்த சுயநலனுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது அவனுக்கு தெளிவாகப் புரிந்தது.

அவன் மனது இதனை புரிந்து கொண்ட போது அவன் தான் ஏமாற்றப்பட்டவனாக உணர்ந்தான். எண்ணங்கள் விரக்தியால் பேதலித்தன. அவன் ஒரு தீர்மானமான முடிவுடன் வீட்டுக்கு வந்தான். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அவனை எதிர்பார்த்து ரொட்டியும், தேங்காய் சம்பலும் தயாரித்து வைத்திருந்தாள். ரொட்டியை சுடச் சுட மென்று சுவைத்து ஆறுதலாக உண்டான். இப்போது அவன் மனம் சற்று ஆருதலைடைந்திருந்தது.

அவன் ரொட்டியை கடித்து மென்றவாறே தன் அம்மாவிடம் தன் எண்ணத்தை தெரிவித்தான்.

"அம்மா நான் யூனியன் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக உள்ளேன்."

கோபால் இப்படிச் சொன்னதால் ஆச்சர்யமடைந்த அவன் அம்மா என்னமோ ஏதோ என்று பயந்து போய்விட்டாள். பின் யோசனையுடன் ரொட்டித் தகரத்தில் இருந்த ரொட்டியைப் பிரட்டிப் போட்டாள்.

"என்ன நடந்தது தம்பி. இப்ப ஏன் தலைவர் பதவியிலிருந்து விலகப்போற. பெரிய அதிகாரிகள் விலகிக் கொள்ளும்படி சொன் னார்களா?"

"அதெல்லாம் ஒன்னும் இல்லம்மா? இந்த யூனியன் காரன்கள் எல்லாமே பொய், பித்தலாட்டுத்தான் செய்கிறார்கள் அம்மா. அவன்கள் மாசா மாசாம் தொழிலாளர்களின் சம்பளப் பணத்தை சுரண்டி காரு பங்களான்னு சொகுசா இருக்காங்க. தோட்டங்கள்ல சங்க அங்கத்தவர்கள பயன்படுத்தி, தலைவர்கள் தமது கைக்குல போட்டுக்கிட்டு ஸ்ட்ரயிக், அது இதுன்னு அரசாங்கத்திற்கு பயங்காட்டி பதவிங்கள வேற வாங்கிக்கிறாங்க. இதுல நாங்க வெறும் பகடைக் காய்கள் மாதிரிதான்".

"அது அப்படித்தான் தம்பி, காலம் காலமாக நடந்துக்கிட்டு வாறத நீ மாத்திப்புடுவியா? அந்தக்காலத்துல இருந்தே நம்மல ஏமாத்தி வந்தது வேற யாருமில்ல. நம்ம தமிழுங்கத்தான், முந்தி ஆள் புடிக்கிறவன், கங்காணி, பெரியாங்கங்காணி என்று ஏமாத்தினானுங்க. இன்னைக்கு யூனியன் தலைவரு, பிரதிநிதி, காரியதரிசி, அமைச்சரு, மந்திரியின்னு, ஏமாத்துறாங்க. ஒரு புறத்துல சிங்களவர்கள் நல்லவங்கத்தான். இந்த அரசியல் தலைவர்கள் அதனை விரும்பாமல் சிங்களவர்களையும், தமிழர்களையும் பகைவர்களாக்கி அதனை தமது சுயநலனுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்."

கோபால் அவன் அம்மா கூறிய வார்த்தைகளில் பல உண்மைகள் பொதிந்து கிடப்பதை புரிந்து கொண்டான். அதிகாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் தமக்குக் கீழே உள்ளவர்களை மிதித்து, நசுக்கி, ஒடுக்கி, ஏமாற்றி சுரண்டுகிறார்கள் என்பது அவன் மனதுக்கு வெட்ட வெளிச்சமாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் ஒரு விஷயத்தை அவன் தீர்மானமாக நம்பினான். அது எல்லாக் காலங்களிலும் எல்லாரையும் ஏமாத்த முடியாது என்பதாகும். தோட்டத் தொழிலாளர்களும் எப்போதும் ஏமாந்த வண்ணமே இருப்பார்களா?

"எல்லா நாளும் இப்படியே எதுவுமே மாறாமல் இருக்காதம்மா. இப்பொழுது புதிய தலைமுறை இளைஞர்கள் உருவாகி வருகின்றனர். யாழ்பாணத்தில் பாருங்கள் பழைய தலைமைகளை தூக்கி எறிந்து விட்டு புதிய பரம்பரையினர் தலைமைத்துவத்திற்கு வருகின்றனர். நாளை மறுநாள் அவர்கள் தலைமைத்துவத்தை கைப்பற்றி விடுவார்கள்."

மீண்டும் அவனது பேச்சைக் கேட்டு அன்னம்மாள் சிரித்தாள். கோபால் இன்னும் உலகத்தை சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை என அவள் நினைத்தாள்.

"பாப்பமே, நான் என்ன நாளைக்கே செத்தா போகப் போறேன். நீ சொல்ற அந்த யாழ்ப்பாணத்து மக்கள்தான் மலையக இந்திய மக்களை இழிவாகப் பேசுபவர்கள். அவங்களெல்லாம் ஒசந்த சாதி, நாமெல்லாம் கீழ் சாதிங்கறது அவங்க நெனப்பு, அவர்கள் நம்ம தலைவர்களை சதத்துக்கு கூட கணக்கெடுப்பதில்லை. வரலாற்றில் பெரிய கங்காணிகள் தான் நமது தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களை மீறி நம்ம சனங்க ஒரு நாளும் நடந்து கிட்டது கெடையாது. அந்த பெரிய கங்காணி பரம்பரைதான் இன்னைக்கும் தலைவன்களாக இருக்குறாங்க. அவர்களுக்கு பணிஞ்சு போறதுங்கிறது நம்ம சனங்களோட இரத்தத்தில் ஊறிக் கெடக்கு. அதனால நீ சொல்ற மாதி இந்த மட சனங்களை ஒருபோதும் திருத்த முடியாது."

அன்னம்மாளின் அனுபவக் கூற்று கோபாலை மேலும் சிந்திக்க வைத்தது. உண்மைதான், இதுவரை இந்த மக்கள் கூட்டத்தினர் கைகட்டி, வாய்ப்பொத்தி, துண்டைக் கழட்டி கக்கத்தில் செருகிக் கொண்டு முதுகை கேள்விக் குறியாக வளைத்து "சலாமுங்க" என்று கூறி குட்டக் குட்டக் குனிபவர்களாகவேதான் இருந்திருக்கிறார்கள். ஆனால் வரலாறு அப்படியில்லை. குனிந்தவர்கள் ஒரு நாள் நிமிறத்தான் வேண்டும்.

கோபால் தனக்குள் சிந்தித்தவாறே சூடான ரொட்டியை சம்பலுடன் சேர்த்து சுவைத்து மென்று விழுங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூக்கி எறிந்த தலைவர் பதவி

கோபாலின் மனது என்றுமில்லாதவாறு நிர்மலமாக இருந்தது. அவன் எல்லா எண்ணங்களையும் தன் மனதில் இருந்து துடைத்தெறிந்தவாறு பள்ளத்து அருவியை நோக்கி சென்று கொண்டிருந்தான். இஸ்டோரில் இன்னும் இரண்டு மணி நேரங்கள் வேலை செய்தால் மேலதிக நேர கொடுப்பனவு கிடைக்கும் என்றபோதும் அவனுக்கு அப்படி வேலை செய்ய வேண்டுமெனத் தோன்றவில்லை.

அவன் ஏற்கனவே வேலை முடிந்தவுடன் ஓடையருகில் வந்துவிடும்படி நந்தசிரிக்கும் ஏனைய நண்பர்களுக்கும் சிறு பொடியனொருவனை அனுப்பி செய்தி கூறியிருந்தான். அவர்களும் கூட கோபால் ஏன் தம்மை வரச்சொன்னான் என்பதை தெரிந்துகொள்ள ஆவளுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு முன்னமையே ஓடைக்கரை கற்பாறையை அடைந்த கோபால் கைகளிரண்டையும் பின்னால் ஊன்றியவாறு பாறையில் வசதியாக அமர்ந்திருந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

கோபால் ஏதோ யோசனையுடன் கற்பாறையில் அமர்ந்திருப்பதை கவனித்த நந்நசிரியே முதலில் கேள்வியை எழுப்பினான்.

"என்ன கோபால் ஏதும் பிரச்சினையா?"

"ஏன் நீங்கள் ஒன்றும் கேள்விப்படவில்லையா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலின் இந்த பதிலால் எல்லோர் மனதிலும் கேள்விக் குறிகளே எழுந்தன. அவர்கள் அனைவரும் அவன் அடுத்து என்ன சொல்லப் போகிறான் என ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சில கணங்கள் அமைதிக்கு பின்னர் கோபால் கூறினான்.

"நான் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டேன்."

இதை எதிர்பார்க்காத நண்பர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

"முட்டாள் தனமான காரியம்"

"உனக்கு பைத்தியமா பிடித்து விட்டது."

நண்பர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் தம் எதிர் விளைவுகளை வெளிப்படுத்தினர். ஆனால் நந்தசிரி ஒன்றுமே பேசாமலிருந்தான். கோபால் நந்தசிரி என்ன சொல்லப் போகிறான் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நந்தசிரியின் கருத்து கோபாலின் ஆவலை அதிகரிப்பதாகவே இருந்தது.

"நீ செய்தது ஒரு விதத்தில் சரியானதுதான் கோபால். போகிற போக்கை பார்த்தால் எல்லாரும் யு.என்.பி தொழில் சங்கத்தில்தான் சேர விரும்புகின்றார்கள். அந்த சங்கத்தில் சேர்ந்தவர்களுக்குத்தான் பதவிகளும் சலுகைகளும் கிடைக்கின்றன."

"பார்க்கும்போது இரண்டு சங்கங்களும் ஒன்றுதான் நந்தா. அவர்கள் பதவி களும் சலுகைகளும் பெற்றுக் கொள்வதற்காகத்தான் நம்மை பயன்படுத்தி கொள்கிறார்கள். இதற்கு துணைபோக முடியாது."

"உண்மைதான் கோபால். நாம் மட்டும் உண்மையாக உழைப்பதால் எந்த பிரயோசனமும் இல்லை. நம் நேர்மையை அவர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

கோபால் தலைவர் பதவியில் இருந்து விலகிக்கொண்டமை தொடர்பில் கோபாலுக்கும் அவனது நண்பர்களுக்கும் கூட வருத்தமாகத்தான் இருந்தது. எனி னும் அவர்கள் தோட்டத்து அப்பாவி மக்களை ஏமாற்றி தொழிற்சங்கம் என்ற பெயரில் அரசியல் நடத்தி தொழிலாளர்களின் சந்தா பணத்தையும் சுரண்டி கொள்ளையடித்து சொகுசு வாழ்க்கை வாழ்வதற்கு கோபால் போன்ற இளமையும் சமூதாய அக்கறையும் உள்ளவர்கள் பலியாகக் கூடாது என்பதை புரிந்து கொண்டனர்.

அன்றைய தினத்தில் இருந்து கோபாலுக்கு மலைக்கு சென்று வேலை செய்யவேண்டி ஏற்பட்டது. அது கஸ்டமான வேலையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் மீண்டும் நண்பர்களுடன் சேர்ந்து ஆடிப்பாடி குதூகளித்து விகடங்கள் செய்து வேலை செய்வது மனதுக்கு பிடித்திருந்தது.

இத்தகைய ஒரு நிலைமையில்தான் நந்தசிரியின் வீட்டில் அவனுக்கு திருமணம் செய்வதற்கு தீர்மானித்து முடிவு செய்துவிட்டார்கள். நந்தசிரி எவ்வளவோ காரணங்கள் சொல்லிப்பார்த்தும் அவனால் திருமணத்திலிருந்து கலன்று கொள்ள முடியவில்லை. ஏற்கனவே அவனையொத்த தோட்டத்து இளைஞர்கள் திருமணம் முடித்து குழந்தைகளும் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவனும் வேறு வழியின்றி சம்மதித்து விட்டான்.

இதை கேள்விப்பட்டதும் கோபாலும் நண்பர்களும் சந்தோஷ ப்பட்டாலும் கல்யாணம் முடிந்ததும் ஒரு நல்ல நண்பனை இழந்துவிடுவோமோ என வருத்தப்பட்டனர். இருந்தாலும் அவன் திருமணத்தை தம்மால் முடியுமான வரை உயர்வாகச் செய்வது என தீர்மானித்தனர். கலியாணத்துக்கு நிறைய பேர் வந்துவிட்டால் அவர்களை எவ்வாறு உபசரிப்பதென்பது தொடர்பில் அவர்கள் கவலையடைந்தனர். நந்தசிரி போன்ற தனியொருவனால் திருமணத்தைப் பெரி யளவில் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. எனவே நண்பர்கள் சேர்ந்து அதற்கு ஒரு திட்டம் போட்டனர்.

அவர்களின் திட்டத்தின் பிரகாரம் ஒரு கணக்கு போட்டு சாப்பாடு மற்றும் தண்ணீர், நொருக்கு தீனிகள், சாராய போத்தல்கள், சிகரட் முதலானவற்றுக்கு ஏற்பாடு செய்தனர். சாராய உபசரிப்புக்கு தியாகுவின் அறையை ஏற்பாடு செய்ததுடன் பாட்டு கச்சேரியையும் நிகழ்த்துவது என்று முடிவு செய்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தை விட நண்பர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. பலருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிராத போதும் அவர்கள் கேள்விப்பட்டு திருமணத்துக்கு வந்திருந்தனர். என்றபோதும் அதற்கு தயாராகவே கோபாலும் நண்பர்களும் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இவர்களது ஏற்பாடுகள் தொடர்பில் நந்தசிரிக்கு தெரியாததால் அவன் வந்தவர்களை எவ்வாறு உபசரிப்பது என்று கவலைப்படக் கூடும் என்று கருதிய கோபால் அவனை பார்க்கச் சென்றான். நந்தசிரியை மணமகளுடன் தோட்டத்து பெரிய கண்டக்டர் வீட்டில் இருந்து இரவல் வாங்கி வந்திருந்த சோபா செட்டில் அமரவைத்திருந்தனர். அவன் எழுந்து எங்கும் போக முடியாமல் மாப்பிள்ளை கோலத்துடன் மிகுந்த தர்ம சங்கடத்துடன் அமர்ந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அருகில் சென்ற கோபால் அவன் காதுக்குள் அவனை பயப்பட வேண்டாம் என்றும் நண்பர்கள் அதிகம் வந்திருந்தாலும் அதனை சமாளிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்துள்ளதாகவும் கூறி அவனை ஆறுதல் படுத்தினான். அவனுக்கு நன்றி தெரிவித்த நந்தசிறி எழுந்து நின்று கோபாலை கட்டித்தழுவிக் கொண்டான். அவன் கண்களில் கண்ணீர்த்துளிகள் துளிர்த்திருந்தன. அதனை பார்த்த கோபாலுக்கும் கண்கலங்கி விட்டது.

கோபால் அவனை ஆறுதல் படுத்திவிட்டு விடைபெற்றான். அப்போது அவன் தோளில் யாரோ கைவைத்தார்கள். கோபால் திரும்பி பார்த்தபோது அங்கே வெள்ளை சாரம் கட்டி சட்டைக்குமேல் கறுப்பு கோட்டணிந்து சிறிய உருவத்துடன் ஒரு மனிதர் அவனை பார்த்து சிரித்தார். யாரென்று யோசித்தவாறு கோபாலும் பதிலுக்கு சிரித்தான்.நந்தசிரி அவரை தனது மாமனார் என்று அறிமுகம் செய்து வைத்தான்.

அவர் கோபாலின் கையை பிடித்தவாறே லயத்துக்கு வெளியில் கூட்டி வந்தார்.பின் சிரித்தவாரே கோபாலிடம் கூறினார்.

"தம்பி என் மருமகன் நினைத்ததிற்கும் அதிகமாக நண்பர்கள் வந்து சேர்ந்திருக்கின்றார்கள். அவர்களை கவனித்து உபசரிக்க நீங்கள் கடுமையாக முயற்சி எடுக்கின்றீர்கள். நல்ல நண்பர்கள் என்றால் அப்படித்தான். எனது மருமகனுக்கு இத்தகைய நண்பர்கள் இருப்பது தொடர்பில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. இந்தாங்க இதில் இருப்பதையும் தேவைக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி சில ரூபாய் நோட்டுகளை கோபாலின் கையில் திணித்தார்.

"வேண்டாம் மாமா அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுகின்றோம்" என்று கூறி கோபால் பணத்தை திருப்பி கொடுத்தான். எனினும் அவர் அதனை திரும்ப பெற மறுத்து விட்டார்.

"தம்பி, என்னையும் உன் நண்பனாக நினைத்துக் கொள். நானும் உங்களுடன் ஒரு மொடக்கு குடிக்க பெறகு சேர்ந்து கொள்கின்றேன். ஒன்று இரண்டு பாட்டு பாடி ஆடலாம். எனக்கும் இப்படியெல்லாம் நண்பர்களுடன் சந்தோஷமாக இருக்க பிடிக்கும்" என்று கூறிவிட்டு அவர் விருட்டென்று சென்றுவிட்டார்.

மாமா நல்ல விநோத மனிதர்தான் என்று மனதுக்குள் நினைத்த கோபால் நண்பர்களைத் தேடிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குடும்பஸ்தரானான் நந்தசிரி

திட்டமிட்டது போல் அவர்கள் நந்தசிரியின் திருமணத்தை தோட்டத்து மக்கள் அதிசயிக்கும்படி சிறப்பாக நடத்தி முடித்தார்கள். அந்தத்தோட்டத்தில் அதுவரை காலம் அப்படியோர் திருமணம் நடந்ததில்லையென அனைவரும் பேசிக்கொண்டனர். தோட்ட உத்தியோகத்தர்களும் வந்து கலந்து கொண்டதுடன் உயர்வாக பேசி விட்டுச்சென்றனர்.

நகரத்தில் இருந்து வந்திருந்த நந்தசிரியின் நண்பர்கள் அவனது திருமணத்தில் கலந்துகொண்டு சந்தோஷமும் திருப்தியும் கொண்டனர். அவர்கள் தியாகுவின் லயக்காம்புறாவில் ஒன்றுகூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

அவர்களுடன் நந்தசிரியின் மாமனாரும் இணைந்து கொண்டார். திருமணம் முடிந்து சாப்பிட்டு ஆடிப்பாடி குதூகலித்து முடிந்ததும் நண்பர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றனர்.

அவர்கள் உபசரிப்புக்கு நன்றி தெரிவித்து வாழ்த்துக்கூறி ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய கடித உறைகளை நந்தசிரியின் கரங்களில் திணித்தனர்.

"எங்களுக்குத் தெரியும் நந்தசிரி. நீ எங்களுக்கு திருமண அழைப்பு கொடுக்காமல் விட்டதற்குக் காரணம் இருந்தாலும் ஒரு நல்ல நண்பனின் திருமணம் தொடர்பில் கேள்விப்பட்டதும் நாங்கள் எல்லாம் கூடி ஏதாவது செய்ய வேண்டுமென்றுதான் வந்தோம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சி, நந்தா என்பவன் மிகவும் தங்கமான இதயம் கொண்ட நல்ல மனிதன். எந்த சந்தர்ப்பத்திலும் அதனை உடையாமல் பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பு"

"நந்தா இனிமே நீ பழைய நந்தசிரி இல்லை. உன்னோட இந்த விளையாட்டுத்தனங்கள், நட்பு வட்டாரங்கள் என்பவற்றை குறைத்துக் கொண்டு குடும்பத்தைக் கவனிக்கப்பழகு"

"அப்படின்னா நாங்க விடை பெறுகிறோம். உனது தோட்டத்து நண்பர்கள் உன்னைப் போலவே உண்மையானவர்கள். அவர்கள் உபசரிப்பில் நாங்கள் திண்டாடிப்போனோம்". இவ்வாறு நகரத்து நண்பர்கள் நந்தசிரியிடமும் அவனது புதிய மனைவியிடமும் கூறி ஒவ்வொருவராக விடைபெற்றனர். அவர்களின் முகங்கள் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தமை தொடர்பில் நந்தசிரியும் அவனது மனைவி யும் மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தனர்.

நகரத்தில் இருந்து வந்திருந்த நண்பர்களில் அநேகம் பேர் ஒரு லொறியில் ஏறி வந்திருந்தனர். அந்த லொறியை ஓட்டி வந்தவனும் நந்தசிரியின் நண்பன் என்பதால் அவனே அவர்களை லொறியில் அழைத்து வந்திருந்தான். இப்போது அவர்கள் அனைவரும் விடைபெற்று லொறியில் ஏறிக்கொண்டனர். பெரும் ஆரவாரத்துடன் லொறி புறப்பட்டுச் சென்றது.

திருமண நிகழ்வு நிகழ்ந்த விதம் பற்றி மணமகள் மலைத்துப் போயிருந்தாள். தனக்கு தாலி கட்டிய புருஷன் எந்த வகையைச் சேர்ந்தவன் என்று இப்போ அவளுக்கு நன்றாகவே புரிந்தது. குறிப்பாக அவன் இவ்வளவு நண்பர்களை சம்பாதித்து வைத்திருக்கிறானே என நினைக்கையில் வியப்பாகவும் இருந்தது. அவர்கள் எல்லாம் கொண்டுவந்து கொடுத்த பரிசுப் பொருட்களும் கடித உறைகளும் குவிந்து கிடந்ததைப்பார்க்க சொல்லவொண்ணா இன்பத்தை மனசுக்குள் அவள் அனுபவித்தாள்.

கோபாலும் தோட்டத்து மற்ற நண்பர்களும் கூட வாழ்த்துக்கூறி கடித உறையில் பண நோட்டுக்களை வைத்து நந்தசிரியிடம் கொடுத்த போதும் அதனை வாங்க அவன் மறுத்து விட்டான். இவ்வளவு உதவி செய்த உங்களிடம் இருந்து நான் பரிசுகளை எப்படி வாங்குவது என்று அவன் கண்டிப்பாக கூறிவிட்டான். அவர்கள் வேறு வழியின்றி அவற்றை அவன் மனைவி சேப்பாலியின் கைகளில் கொடுத்து விட்டனர்.

பின் நந்தசிரி அவர்கள் காதுக்குள் குனிந்து "இன்று யாரும் ஒன்னும் குடிக்கவில்லையா?" என்று ரகசியமாகக் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் "இன்னும் வேலையிருக்கிறது பிறகு பார்க்கலாம்" என்றான். அதற்குள் ஜெகநாதன் முந்திக்கொண்டு "நீயில்லாததால்தான் நண்பர்கள் யாரும் குடிக்காமல் இருக்கிறார்கள்" என்றான்.

"சரி... நானும் இன்னும் கொஞ்ச நேரத்தில வாரேன். தியாகுவின் லயத்தில்தானே வெளிக்குப்போறதாக சொல்லிவிட்டு வந்துர்றேன். ஒரு ஷொட் மட்டும் போட்டுக்கிட்டு போயிர்றேன்:

உடனே கோபால் அதனை மறுத்து விட்டான். "இன்றைக்கு நீ குடிக்க வேணாம் நந்தா! இந்தக் கல்யாணம் சிறப்பாக நடந்து எல்லோரிடத்திலும் நல்ல பேர் வாங்கியிருக்கிறாய். குறிப்பாக உன் மனைவி வீட்டாரிடம் இத்தகைய சந்தர்ப்பத்தில் நீ குடித்துவிட்டு சென்றால் பெயர் கெட்டுவிடும். அதனை வேறு ஒருநாளில் வைத்துக்கொள்வோம். எங்களுக்கும் இன்னும் வேலை இருக்கிறது. அதனை முடித்துக் கொண்டுதான் பாட்டுக்கச்சேரிக்குப் போக வேண்டும்"

அவர்கள் திருமண ஜோடிக்கு வாழ்த்துத் தெரிவித்து விட்டு விடை பெற்றனர்.

கோபாலுக்கு நந்தசிரியை விட்டுவிட்டு போவதற்கு துக்கமாக இருந்தது. இனிமேல் நினைத்த நேரத்தில் நந்தசிரியால் தம்முடன் வந்து நட்புடன் பழக முடியாமல் போகுமே என்று வருதப்பட்டான்.

அவர்கள் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு தியாகுவின் லயக்காம்புராவுக்கு சென்றபோது நள்ளிரவாகியிருந்தது. அங்கு ஏற்கனவே ஒரு புது மனிதர் வந்திருந்தார். அவர் நந்தசிரியின் மாமனார் புஞ்சி அப்புஹா மியாகும். நந்தசிரி இல்லாத குறையை யாராலும் போக்க முடியாதிருந்த போதும் அவர் ஓரளவுக்கு அந்தக் குறையை நிவர்த்தி செய்து பழகுவதற்கு இனிய மனிதராக அவர்கள் மனங்களில் இடம்பிடித்தார். அன்று அவர் அதிகமாக மதுபானம் அருந்தியிருந்ததால் அவரை தியாகுவின் அறையிலேயே படுக்க வைக்க வேண்டியதாயிற்று. இது தொடர்பில் கோபால் பின்னர் நந்தசிரியை சந்தித்தபோது பிரஸ்தாபித்தான்.

அன்றிரவு மிக நேரம் கழித்தே கோபால் வீட்டுக்குச் சென்றான். படுக்கையில் கண் விழித்தவாறே வீழ்ந்து கிடந்த அன்னம்மா அவன் சாப்பிட்டு விட்டானா? என விசாரித்தார்.

அதற்கு, "ஆம்" என்று பதிலளித்த கோபால் உடைகளைக் களைந்து படுக்கச் சென்றான். அவன் அருந்தியிருந்த மதுவின் மணம் அறையெங்கும் பரவி அவன் மது குடித்திருக்கிறான் என்பதை அன்னம்மாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தது. அது தொடர்பில் அன்னம்மா வருத்தப்பட்டபோதும் அன்றைய தினம் அவனது உற்ற நண்பனின் திருமண நாளாதலால் அவன் சற்று மது அருந்தியது பரவாயில்லை என்று நினைத்தாள். என்ற போதும் அவன் தனது மூத்த மகனைப் போல் மதுவுக்கு அடிமையாகி விடக்கூடாது என்பதே அவளது கவலையாக இருந்தது.

கோபால் ஒரு நீண்ட கொட்டாவியை உதிர்த்துவிட்டு படுக்கையில் விழுந்து கம்பளியை இறுக்கி போர்த்திக் கொண்டான். என்றாலும் நீண்ட நேரமாக அவனுக்குத்தூக்கம் வரவில்லை. அவனுக்கு தன் உற்ற நண்பன் நந்தசிரி இனிமேல் தன்னுடன் நெருங்கி செயல்படுவானா என்பதே கவலையாக இருந்தது. நந்தசிரி பார்ப்பவர்க்கெல்லாம் கோபம் கொண்டு கொதித்தெழும் ஒரு முரட்டு இளைஞனாகத் தோன்றினாலும் கோபாலை பொறுத்தவரை பிரச்சினைகளை சமூக அக்கறையுடன் அணுகும் புத்திசாலித்தனமுள்ளவனாகவே தோன்றினான்.

கோபால் தொழிற்சங்க தலைவர் பதவியை விட்டு விலகியது தொடர்பில் அது முட்டாள்த்தனமான காரியம் என்று பலரும் கருத்துத்தெரிவித்தபோது நந்தசிரி மட்டுமே கோபாலின் கருத்துக்கு சாதகமாக இருந்தான். அவன் தான் அங்கம் வகித்த ம.தொ.கா. தொழிற்சங்கமும் ஐ.தே.க. தொழிற்சங்கமும் கூட தொழிலாளரை ஏமாற்றி சந்தாப்பணத்தை சுரண்டி கொள்ளையடித்து தம் சொகுசு வாழ்க்கைக்கு பயன்படுத்தும் தொழிற்சங்கங்களே என்ற தனது கருத்தையே சார்ந்திருந்தான்.

இன்றைய காலகட்டத்தில் தொழிற்சங்க அங்கத்தவர்களைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெற்று தேர்தல்களில் வெற்றியடைந்து தம்மை சக்திவாய்ந்த அரசியல் பலமாக உருவாக்க அரசியல் லாபந்தேட பல குழுக்கள் பெரும் முயற்சி செய்து வருவதனை கோபாலைப் போன்ற சமூகப் போராளிகளும் மலையக புத்திஜீவிகளும் கல்விமான்களும் மாத்திரமே கண்டனக் குரல் எழுப்பி அம்பலப்படுத்தி வந்தனர். என்ற போதும் சாதாரண மக்கள் அதனை புரிந்து கொள்ளாமல் பசப்பு வார்த்தைகளுக்கும் சாராயப்போத்தலுக்கும் சோர்த்துப்பார்சலுக்கும் மயங்கி சோரம் போகிற தன்மை மலையகத் தோட்டத்தொழிலாளரை அழிவை நோக்கி இட்டுச்செல்லும் தொற்று நோயாகப் பரவிக் கொண்டிருந்தது. இத்தகைய ஒரு இருண்ட காலம் மலையகத்தை சூழ்ந்து கொண்டிருக்கிறதே என தன்னை நொந்த வாறே கோபால் தூங்கிப் போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88



# நந்தசிரி விடை பெற்றான்

திருமணத்தின் பின்னர் நண்பர்கள் எதிர்பார்க்காத விதத்தில் நந்த சிரி மாறிப்போயிருந்தான். அவனது செயல்களைப் பார்க்க கோபாலுக்கு ஆச்சரியமாகவும் கவலையாகவும் இருந்தது. அவனது முகத்தில் எந்த நேரமும் தவழ்ந்து கொண்டிருக்கும் அந்த மந்தகாசப் புன்னகை மறைந்து போயிருந்தது. அவன் வழக்கமாக செய்யும் ஒரு குறும்பையும் இப்போது காண முடியவில்லை.

வயசு போன தொழிலாளர்களுடன் கதைபேசி வம்புக்கிழுப்பதையும் இடைவேளையில் தேநீர் அருந்தும்போது ஏனையவர்களின் கையிலிருந்து ரொட்டித்துண்டை தட்டிப்பறிப்பதும் கங்காணி, சுப்பவைசர்களிடம் வாதம் செய்வதையும் இப்போது காணமுடிவதில்லை.

நந்தசிரியின் மௌனப் போராட்டத்தைத் தாங்க முடியாத கோபால் ஒரு நாள் எல்லார் முன்னிலையிலும் வைத்து நேரடியாகவே கேட்டும் விட்டான்.

"நந்தா, என்ன நடந்தது உனக்கு, ஏன் இப்படி மாறிப்போய்விட்டாய்? குடும்பத்தில் பிரச்சினையா?"

இந்தக் கேள்வியைக் கேட்டு நந்தசிரி சிரிப்பதற்கு முயற்சி செய்தான். இருந்தாலும் அது சோகமயமான புன்னகையாகவே இருந்தது.

"உண்மைதான் கோபால். எல்லாருமே நான் மாறிப் போய் விட்டதாகத்தான் கூறுகிறார்கள். திருமணத்துக்குப் பின்னரான குடும்ப வாழ்க்கையில் முன்பு மாதிரி தனியான தீர்மானம் எடுக்க முடியாது மச்சான். பொஞ்சாதியின் பேச்சையும் கேட்க வேண்டியதாக உள்ளது. அத்தோட நாம விரும்பாட்டியும் பழைய பழக்கங்களையெல்லாம் விட வேண்டியும் உள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ சொல்றது சரிதான் மச்சான்! ஆனா அதுக்காக நாம ஒரேடியா மாறிப்போகனுமா? நீ எதையோ மறைக்கிற மாதிரி தெரியுது. உண்மைய சொல்லு"

கோபால் கேள்வியைக் கேட்டு விட்டு நந்தசிரியின் முகத்தைக் கூர்ந்து அவதானித்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவன் சில நாட்களாகவே முகச்சவரம் செய்யாதிருந்தமை அவன் சோகத்தை மேலும் அதிகமாக்கிக் காட்டியது.

"இதில மறைக்கிறதுக்கு ஒன்னுமில்ல கோபால். உங்களிடம் சொல்வதற்கு எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. விசயம் இதுதான் எனது பொஞ்சாதிக்கு ஊர்ல வயல் நிலமெல்லாம் இருக்கு. இப்போது அந்த வயல் காட்டையெல்லாம் வயசு போன மாமாதான் பார்த்துக் கொள்கிறார். அவுங்க வீட்ல எனது பொஞ்சாதியைத்தவிர வேறு பிள்ளைகள் கிடையாது. அதனால என்னைய அங்க வந்துரும்படி கூப்பிடுறாங்க. இங்க தோட்டத்துல அடிமை மாதிரி கூலி வேலை செய்றது அவுங்களுக்குப் புடிக்கல. கத்தி, மம்பட்டி, கரண்டி புடிச்சவனுக்கு வயல்ல வேலை செய்றது ஒன்னும் புதுசில்லைனு சொல்றாங்க. அவங்க சொல்றதிலயும் நாயம் இருக்கு. அதோட அங்க போய்ட்டா அப்புறம் என்னோட வீட்ட கவனிக்கவும் முடியாம போயிரும். இது தான் என்னோட பிரச்சினை. என்னால தீர்மானிக்க முடியல. உங்களையெல்லாம் எப்படி உட்டுட்டு போறது?"

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. நந்தசிரிக்கு என்ன பதில் சொல்வதென கோபால் யோசித்தான். பின் வாழ்க்கையில் முதிர்ந்து அனுபவம் பெற்றவன்போல் பதில் கூறினான்.

"நான் சொல்வதை நல்லா காது கொடுத்து கேள். நான் நெனச்சேன் நம்ம எல்லார்லேயும் நீதான் அதிக புத்திசாலின்னு. பல இக்கட்டான சந்தர்ப்பங்கல்ல நீ தூரநோக்குடன் நடந்து கொண்டிருக்கிறாய். என்னைப் பொறுத்தவரையில உன் மாமனார் சொல்வது சரிதான். நாம் நமக்குன்னு காணி பூமி வந்தபோது அதில உழைக்காமல் பிறரிடத்தில் அடிமையா ஏன் கூலி வேலை செய்யனும்?"

கோபால் தன் பேச்சை கேள்விக்குறியுடன் நிறுத்தினான். ஏனையோரும் அவன் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பின் கோபாலே தன் பேச்சை தொடர்ந்தான்.

"இனிமேல் நீ தனி ஆள் இல்லங்கிறது முடிவாகியிருச்சி. உனக்கு மனைவி, மாமனார், உறவெல்லாம் வந்திருச்சி. நாளைக்கே கொழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டின்னு பெருகிடும். நீ ஓம் பொஞ்சாதியோட கொத்மலை போறதுதான் நல்லது. உன் எதிர்காலம் பிரகாசமாக இருக்கப்போகிறது. எங்களுக்கு காணி பூமி ஒன்னும் இல்லாததால்தானே இங்க கெடக்க வேண்டியிருக்கு. இந்த மாசம் சம்பளம் போட்ட ஒடன நீ தோட்டத்தவிட்டு போற வழியைப்பாரு என்ன....?"

கோபால் தன் தொண்டைக்குள் ஏதோ ஒரு கல் உருண்டு வந்து அடைப்பது போல் ஒரு சோக உணர்வை மறைத்துக் கொண்டே பேசினான். அவன் துக்கப்படுகின்றான் என்பது நந்தசிரிக்கும் விளங்கத்தான் செய்தது. இருந்தாலும் கோபால் அவ்விதம் தன் கருத்தை தனக்கு சாதகமாக தெரிவித்தது தொடர்பில் நந்தசிரி ஆறுதலடைந்தான்.

அவன் உண்மையைத்தான் சொல்கிறான் என்பதை நந்தசிரியால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

"நீ சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன் கோபால். நான் இந்த மாசம் மட்டும்தான் இந்தத் தோட்டத்தில் இருப்பேன் என்று நினைக்கிறேன். அடுத்த மாசம் முதல் வாரத்தில் நான் போய்விடத் தீர்மானித்துள்ளேன். இடைக்கிடை போய் எங்கள் வீட்டாரை கவனித்துக் கொள்ளுங்கள். அது மட்டும்தான் என் எதிர்பார்ப்பு"

"அந்த விசயத்தை எங்களிடம் விட்டு விடு நந்தா. அதனை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். ஆனா நீ இங்கிருந்து போன பிறகு எங்களையெல்லாம் ஒரேயடியா மறந்திராத. எங்களை பாக்க வராட்டியும் ஒன்னோட அம்மாவ பார்க்கவாவது நீ வந்துட்டுப்போ. என்னதான் இருந்தாலும் நாமெல்லாம் ஒரு நாள் பிரியப்போறவங்கதானே"

"கோபால் இந்த விசயத்தை தோட்டத்தில எல்லார்கிட்டயும் சொல்ல வேணாம். நம்ம நண்பர்களுக்கு மாத்திரம் சொன்னால் போதும்"

கோபால் சிரித்தான்.

"ஆமா, ஆமா விஜேபாலவுக்கு மாத்திரம் சொன்னால் போதும், முழு தோட்டத்துக்கும் சொன்ன மாதிரிதான்."

இதைக்கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். ஆனால் அது வெறும் மேலோட்டமான சிரிப்புத்தான். அவர்கள் மனதுக்குள் சோகம் வெகு வாகப் படர்ந்திருந்தது. அவர்கள் ஒன்றுகூடி வாய்விட்டு சிரித்தார்கள். கண்களில் நீர் பெருக்கெடுத்தோடும் மட்டும் சிரித்தார்கள். அந்த கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக இருக்கவில்லை என்பது அவர்களின் மனதுக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தசிரி அவர்களை பிரிந்து செல்லும் அந்த நாளும் வந்தது. நண்பர்கள் அனைவரும் அவனை வழியனுப்ப வந்திருந்தார்கள். அவர்கள் எல்லார் மனதிலும் செல்லவொண்ணா பிரிவுத் துயரம் கசக்கிப்பிழிந்து கொண்டிருந்தது. அது மிகுந்த உணர்ச்சிகரமான நிமிடமாக இருந்தது. கோபாலுக்கு பேசுவதற்குக்கூட குரல் தொண்டையில் இருந்து வெளிவர மறுத்தது.

மற்றவர்களும் ஒருவருக்கு ஒருவர் தெரியாத விதத்தில் கண்களில் துளிர்ந்த நீர்த்துளிகளை துடைத்துக் கொண்டனர்.

நந்தசிரியின் புதுமனைவிக்கு தனது கணவனுக்கு இத்தகைய மிக நெருக்கமான நண்பர்கள் இருப்பது தொடர்பில் ஆச்சரியமாகவும் புதுமையானதாகவும் இருந்தது. அவள் ஒருவிதத்தில் தான் கொடுத்து வைத்தவள் என்று புளகாங்கிதமடைந்தாள்.

"மச்சான் நீ இங்கிருந்து போனாலும் நீ போற இடம் ரொம்பத்தூரத்தில் இல்லதானே. இங்கிருந்து பூண்டுலோயா பஸ் ஏறினால் அரை மணி நேரத்தில் போயிரலாம். இனிமே நீ தான் உனக்கு எஜமான்."

நினைத்த நேரத்தில் லீவு எடுத்துக்கொள்ளலாம். நாங்கன்னா ஒரு நாள் வேலைக்குப் போகாட்டியும் சம்பளம் கெடைக்காது. அதனால நீதான் எங்கள அடிக்கடி வந்து பாக்கனும். இந்தத் தோட்டத்துக்கு நீ எப்ப வேண்டுமானாலும் வரலாம். எங்கள் லயத்தின் கதவுகள் உனக்கு எப்போதும் திறந்தே இருக்கும்."

"வருத்தப்படாதீங்கடா, நான் இங்கிருந்து போனாலும் என் மனசு இங்கேதான் சுத்திக்கிட்டு இருக்கும். கட்டாயம் திருவிழாவுக்கு வந்திடுறேன்." அதன் பின் அவர்களுக்கு பேசுவதற்கு அதிக அவகாசம் இருக்கவில்லை. சற்று தூரத்தில் நான்கு மொடக்குகள் தள்ளி பூண்டுலோயா பஸ் வந்து கொண்டிருப்பது அவர்கள் கண்ணில் பட்டது. அனைவரும் பயணப் பைகளை தூக்கிக்கொண்டு பஸ்ஸில் அவர்கள் ஏற உதவி செய்தனர்.

பஸ் அடுத்த மொடக்கில் சென்று மறையும் வரை நண்பர்கள் கையசைத்து நந்தசிரிக்கு விடைகொடுத்தனர். எல்லோர் மனதிலும் மிகக் கனதியான சோகம் அப்பிப்போயிருந்தது. ஒரு தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து, உண்டு, குடித்து ஒன்னாய் கூடித்திருந்த ஒரு நல்ல நண்பனை விட்டுப்பிரிவது அத்தனை இலகுவான காரியமல்ல என அவர்கள் மனம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



89

# சேப்பாலிகாவின் வயல்வெளிகள்

நந்தசிரிக்கு நண்பர்களை பிரியும்வரை சோகம் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் அனைவரும் அவன் கண்ணில் இருந்து மறைந்த பிறகு அவன் ஏதோ ஒரு பாரிய இருட்டுக்குள் தள்ளப்பட்டவன்போல் உணர்ந்தான். அவன் கண்கள் இருண்டு கொண்டு வந்தன. நெஞ்சு அடைபட்டு மூச்சு நின்று விடும்போல் வலியேற்பட்டது. பிரிவின் வலி இந்த அளவுக்கு பாரதூரமானதாக இருக்குமென அவன் அதுவரை உணர்ந்திருக்கவில்லை.

அந்தப்பயணத்தின்போது அவன் தன் மனைவியுடன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நண்பர்கள் கண்ணில் இருந்து மறைந்தவுடன் அவன் பஸ்ஸின் ஓரத்துச்சீட்டில் சரிந்து அமர்ந்து தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் சிற்றருவியென வழிந்தோடியது. அவன் இருக்கும் நிலையில் அவனை என்ன சொல்லியும் தேற்ற முடியாதென நினைத்த அவன் மனைவி சேப்பாலிக்கா அவன் கண்ணீர் வடித்து கதறி அழுது தன் சோகத்தை வடித்துக்கொள்ளட்டும் என பேசாமல் விட்டு விட்டாள். அவள் அவனுக்கு இதமளிக்கும் விதத்தில் அவன் தலையை சற்றே சாய்த்து தன் தோள் மீது வைத்துக்கொண்டாள். அவன் தலையை சற்றே கோதி விட்டாள்.

பஸ் தோட்டத்தை சுற்றிக்கொண்டு அட்டன் நகருக்கூடாக சென்றது. அந்த சுற்று வட்டாரத்தில் நந்தசிரியினதும் அவன் நண்பர்களினதும் கால் பதியாத இடமே கிடையாது. அவன் நண்பர்களுடன் கூடித்திரிந்து கும்மாளமடித்த ஒவ்வொரு கணமும் அவன் கண்முன் தோன்றி அவன் நினைவுகளை பின் நோக்கி இட்டுச் சென்றன. சிற்றருவிகள் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடையும் அந்த ஆறு, பள்ளங்கள், மலை கள், மேடுகள் அவை அனைத்துமே அவர்கள் கூடிக்கதைத்திருந்த கதைகளை ஆயிரம் ஆயிரமாகக் கூறும். அவற்றையெல்லாம் பிரிந்து புதிய இடமொன்றுக்குச் செல்வதென்பது இலகுவான காரியமல்ல.

நந்தசிரி பஸ்ஸின் ஜன்னலோரம் தெரிந்த அந்தக் காட்சிகளை பார்த்துக்கொண்டு பித்துப் பிடித்தவன் போல அமர்ந்திருந்தான். பஸ் அந்த காட்சிகளையெல்லாம் வேகமாக பின்தள்ளி கடந்து சென்றது.

*****

அவர்கள் சேப்பாலிகாவின் கிராமத்தையடைந்தபோது மத்தியானம் கடந்து போயிருந்தது. கொத்மலை ஓயா என்ற மகாவலி கங்கையின் தலையருவிகளில் ஒன்றான அந்த அழகிய ஆற்றை அண்மித்ததாகவே சேப்பாலிக்காவின் வயல்வெளியும் அவள் வீடும் அமைந்திருந்தது. ஒரு குடும்பத்தை நடத்திச் செல்லுமளவுக்கு நெல் விளையும் பூமி அது.

சேப்பாலிகாவின் தாய் அவளது சிறு பராயத்திலேயே அவளை விட்டுப்பிரிந்து விண்ணேறி விட்டாள். அதன் பின்னர் சேப்பாலிகா வின் தந்தை அப்புஹாமி தனது மகளையும் கவனித்துக்கொண்டு விவசாயத்திலும் ஈடுபட்டு வந்தார். இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் கத்தி, மம்பட்டி பிடித்து வேலை செய்யக்கூடிய ஒரு இளைஞனை தேடி தன் மகளுக்குத்திருமணம் செய்து வைத்துவிட்டால் அவனை வீட்டோடு மருமகனாக்கிக் கொள்ளலாம் என்று சேப்பாலிகாவின் தந்தை நினைத்தார்.

அவரது சிந்தனைக்கு ஏற்ற விதத்தில்தான் அந்த தோட்டத்தில் வேலை செய்யும் பழைய சிங்கள விவசாயக்குடும்பம் தொடர்பில் அவருக்கு செய்தி கிடைத்தது. அவ்வாறுதான் நந்தசிரியை அப்புஹாமி தேடிப்பிடித்து சேப்பாலிகாவுக்கு கட்டி வைத்தார்.

அன்று மத்தியானத்தில் நந்தசிரியும் சேப்பாலிகாவும் தம் வீட்டுக்கு வந்து சேர்ந்ததில் பெருமகிழ்ச்சியடைந்தார் அப்புஹாமி. அவர் அன்றைய தினத்தை கொண்டாட நினைத்தார்.

"அப்படின்னா மகளே! சாப்பாட்டுக்கான ஏற்பாட்டைச் செய். நான் கடைப்பக்கம் போய்விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு உற்சாகமாகப் புறப்பட்டார்.

அவர் எதற்காக இவ்வளவு உற்சாகமாக புறப்பட்டுச் செல்கிறார் என்பது சேப்பாலிகாவுக்கு புரியாததல்ல. அவள் அப்பாவைப்பார்த்து கண்டிப்புடன் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா, சாராயப்போத்தல் மட்டும் வாங்கிக்கிட்டு வராதீங்க" அவள் அந்த வீட்டின் எஜமானி என்ற தோரணை அவள் குரலிலும் ஒலித்தது. சாராயப் போத்தல் பற்றி பேசப்படுகிறதே என்று யோசித்த நந்திசிரி குசினி அறைப்பக்கம் வந்தான். அவனைக்கண்டு புன்னகைத்த சேப்பாலிகா

"சாராயம் என்ற வார்த்தை மாத்திரம் நல்லா காதுல கேட்குது என்ன?" என்றாள் கேலியாக. அவள் அவனுக்கு வில்வம் பூ பானம் ஒன்று தயாரித்துக் கொண்டுவந்து கொடுத்தாள். அதனை ருசி பார்த்த நந்தசிரி "என்ன இதற்கு சீனி போடலியே" என்றான் விருப்பம் இல்லாமலே.

அவன் முகம் கோணுவதைக் கவனித்த சேபாலிகா ராக்கையில் இருந்து மூடிய போத்தல் ஒன்றை எடுத்தாள்.

"வில்வம் பூ பானத்துக்கு சீனி போட்டால் அதன் குணம் இல்லாமல் போய்விடும். இந்தாங்க கருப்பட்டி" என்று கூறி போத்தலில் இருந்து ஒரு கித்துள் கருப்பட்டித் துண்டை எடுத்துக்கொடுத்தாள்.

அப்போது வெளியில் யாரோ வந்திருக்கும் சத்தங்கள் கேட்டன. நந்தசிரி முன்பக்கம் வந்து பார்த்தான். அப்புஹாமியின் மருமகன் வந்திருக்கிறான் என்பதை கேள்விப்பட்ட அவரது நண்பர்கள் சிலர் பார்த்து விட்டுப்போக வந்திருந்தனர்.

நந்தசிரி அவர்களை நன்கு தெரிந்தவன்போல் வரவேற்றான். பின் வராந்தாவில் அவர்களை அமரச் செய்து அவர்களுடன் வெகுகாலம் பழகி யவன் போல் பல விசயங்களையும் பேசிக்கொண்டிருந்தான்.

அவர்களும் அவனை தம்மில் ஒருவனாக நினைத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் விடைபெற்றுச் சென்றபோது அவர்கள் மனதில் நந்தசிரி தொடர்பில் ஒரு தெளிவான புரிந்துணர்வு ஏற்பட்டிருந்தது.

"புஞ்சி அப்புஹாமி தனக்கு மருமகனாக ஒரு நல்ல ஆளைத்தான் பிடித்திருக்கிறார். ஊர் உலகத்தைப்பற்றியெல்லாம் நல்லா தெரிந்து வைத்திருக்கிறான்".

"எதையும் முகத்துக்கு நேராக பேசக்கூடிய துணிச்சலான இளந்தாரி தான்".

"கத்தி, மம்பட்டி புடிச்சி நல்ல வேலை செய்யக் கூடியவனாகவும் இருப்பான் போல் அவன் பேச்சிலிருந்தே தெரிகிறது".

"இனிமேல் அப்புஹாமிக்கு வயல உழுறதுக்கு கூலியாட்கள் பிடிக்க வேண்டிய தேவை இருக்காது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புஹாமியின் நண்பர்கள் நந்தசிரியிடம் விடைபெற்று சென்றபோது நந்தசிரி தொடர்பில் தம் மனதுக்குப் பட்டதை ஒருவருக்கொருவர் பேசியவாறே சென்றனர்.

"ஆனா எனக்கு என்னா தோணுதுன்னா அவனுட்ட ஒரு அஞ்சி கள்ளு மொந்தையை கொடுத்தாலும் ஒரே இழுப்புல மொந்து மொந்துனு மொந்திப்புடுவான்னு தோணுது" என்று இதுவரை மௌனமாக வந்து கொண்டிருந்த பியதாச குறிப்பிட்டார்.

இதனைக் கேட்டு எல்லோரும் கொல்லென்று பலமாகச் சிரித்தார்கள்.

*****


நந்தசிரி தோட்டத்தில் இருந்து சென்று விட்டமை ஏனையோர்களை விட கோபாலையே மிகப்பெரிய அளவில் பாதித்தது. ஆரியவங்சவும் விஜேபாலவும் அதனை அதிகம் பெரிதுபடுத்தி வருத்தப்படவில்லை. ஆனால் கோபால்தான் தனிமைப்பட்டு விட்டதாக நினைத்து பெரும் சோகத்தில் ஆழ்ந்திருந்தான். அந்த சோகம் அவன் சொல், செயல்கள் எல்லாவற்றிலும் வெளிப்பட்டது. அவனது அம்மாவுக்கும் மகன் மனவருத்தத்துடன் இருப்பது கண்டு என்னவோ போலிருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவன் மனதில் திருமண யோசனையை போட்டுவிட வேண்டுமென்று அவள் அவனை அணுகினாள்.

"மகனே இப்படி யோசித்துக்கொண்டிருந்தால் ஒன்னும் ஆகாது. நீயும் உனக்கு ஒரு துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். அந்த லெட்சுமி தோட்டக்காரங்க அவுங்க பொண்ணப்பத்தி கேட்டுக்கிட்டே இருக்காங்க. போய் பாத்துப்புட்டு வந்திரலாமா?"

கோபால் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

அவனுக்கு, அம்மாவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. தொடர்ந்தும் அம்மாவிடம் என்ன காரணம் சொல்லி மறுப்புத்தெரிவிப்பதென்று புரியவில்லை. அம்மாவுக்கும் வயதாகிறது. வீட்டு வேலைகளையும்செய்துகொள்ள முடியாமல்திண்டாடிக்கொண்டிருக்கிறாள். தனக்காக இல்லாவிட்டாலும் அம்மாவுக்காகவாவது கலியாணம் செய்து கொள்ள வேண்டியதுதான். அவன் மனம் ஒரு தீர்மானத்துக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவள் அப்படி ஒன்றும் அழகியல்ல...

கோபால் இனிமேல் தனக்கென ஒரு வாழ்க்கை இருக்கிறது என்ற மன நிலையில் இருந்து விடுபட்டு இந்த சமுகத்துக்காகவும் ஏன் தன் அம்மாவின் சந்தோஷத்துக்காகவும் வாழ்வதென்று தீர்மானித்தான். இத்தகைய ஒரு மனநி லையில் நந்தசிரி அவனை விட்டு பிரிந்துபோனமை அவன் மனநிலையில் ஒரு சூனிய நிலையை தோற்றுவித்திருந்தது. இருந்தாலும் அவன் தெளிவாகவே தன் அம்மாவிடம் கூறினான்.

"பரவாயில்லை அம்மா. நீ சொல்றத கேட்கிறேன். ஒரு வசதியான நாளா பாரு போய்ட்டு வந்துரலாம்" கோபாலின் இந்த வார்த்தைகளால் அன்னமாவின் மனது சந்தோசத்தால் பூரித்துப் போனது.

"சரிதம்பி, நல்ல காரியத்தை பின்போடக் கூடாது. அந்த தோட்டம் ரொம்ப தூர த்தில இல்லதானே. அடுத்த ஞாயித்துக் கெழம போயிட்டு வருவோம்."

"சரி" கோபால் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான்.

"அப்படின்னா ஓங்க அக்காவையும், மாமாவையும் கூட்டிக்கிட்டு போவம். எதற்கும் ஒரு ஆம்பளையாளு இருக்கிறது நல்லதுதானே நான் அவங்களுக்கு வர்றது பத்தி சேதி சொல்லிர்றேன்"

"அம்மா ஒனக்காகத்தான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். நீ இதப்பத்தி ஒனக்குள்ளேயே வச்சிக்கனும். ஊரெல்லாம் போய் பீத்திக்காதே. அப்புறம் வரமாட்டேன்" அவன் வெட்கப்படுவதைப் பார்த்து அன்னம்மாள் சந்தோசப்பட்டாள். அவள் அவன் வார்த்தைகளைக் கேட்டு வாய்விட்டு சிரித்தாள். நீண்ட காலத்துக்கு பிறகு அவள் சந்தோசப்பட்டு சிரிக்கும் சிரிப்பு அது. அதனை நினைத்து கோபாலும் சந்தோசப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா கோபாலிடம் கூறியதன் பிரகாரம் அடுத்த ஞாயிற்றுக்கிழமையே பொண்ணு பார்க்கும் படலத்தை நடத்திவிடுவதென்று மும்முறமாக இருந்தாள். அதன் பிரகாரம் அன்று ஞாயிற்றுக்கிழமையன்று கோபாலையும் இன்னும் இருவரையும் அழைத்துக் கொண்டதுடன் ஆரியவங்சவின் அப்பாவான மார்ட்டின் மாமாவும் அவர்களுடன் இணைந்து கொண்டார்.

அவர்கள் அன்று காலையிலேயே அவ்விதம் பட்டுசாரிகளையும், நகைக ளையும் போட்டுக் கொண்டு பகட்டாக உடுத்திக் கொண்டு கிளம்பிய நிமிடமே இந்த விவகாரம் முழுத் தோட்டத்துக்கும் தெரிந்து போய்விட்டது. அவர்கள் கோபாலுக்கு பொண்ணு பார்க்கத் தான் போகிறார்கள் என்று ஒரு சிலர் அதுபற்றி அன்னம்மாவிடம் பேசியபோதும் அவள் சிரித்து மழுப்பி விட்டாள்.

மார்ட்டின் மாமா மாத்திரம் சற்று தாமதித்து அவர்களுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு வந்தார்.

“அப்படின்னா இனிமே தியாகுவோட காம்புறாவுல இருந்து பாட்டுக் கச்சேரி சத்தம் கேட்கிறது நின்னு போகும்”

“கோபால் இனிமே கோவில் திருவிழாவில் டிரம் வாசிப்பானோ தெரியாது. சங்கீதம் பாடுற புள்ளையா பாத்து கட்டிக்கிட்டா நல்லது. ரெண்டு பேரும் சேந்து பாடலாம்.”

“நந்தசிரி கல்யாணம் கட்டிக்கிட்டு போனதோட பாட்டுக் கச்சேரி ரொம்ப கொறஞ்சி போச்சி. இப்ப கோபாலும் கல்யாணம் செஞ்சதோட அது நின்னு போனாலும் போயிடும்.”

இப்படி தோட்டத்தில் பலரும் பல படி பேசிக்கொண்டனர். இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாத பொண்ணு பார்க்கச் சென்ற கோஷ்டியினர் பெண்ணின் தோட்டமான லெச்சுமி தோட்டத்தை இரண்டு மணி நேரத்தில் சென்றடைந்து விட்டனர்.

பெண் விட்டார் அவர்களின் தகுதிக்கேற்ப மாப்பிள்ளை தரப்பினரை உபசரித்தனர். பெண் பார்க்கும் படலமும் விறுவிறுப்பாக நடந்தேறியது. பெண்ணின் பெயர் சசிகலா தேநீர் பரிமாறும் சாக்கில் அவள் கோபாலை ஓரக் கண்ணால் பார்த்தபோது அவை கோபாலின் கண்களுடன் மோதிக் கொண்டன.

“அண்ணலும் பார்த்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் பார்த்தாள்"

நோக்கிய கண்கள் ஏதோ பரிபாசைகளில் செய்தியைப் பரிமாறிக் கொண்டன.

அந்தக் கண்கள் அலட்சியப்படுத்தக் கூடிய கண்கள் அல்ல. அகன்ற இரு பெரிய கண்கள். அவள் புன்னகைத்ததால் அவையும் சற்றே காது நோக்கி நீண்டன. அவளை புஸ்பராணி போல் அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் லட்சணமானவளாகத் தோன்றினாள். மானிறத்தை விட சற்று அதிகமான சிவந்த மேனி. மெல்லியவள் என்று சொல்லுமளவிற்கு மெலிந்த தேகம். அவளுக்குத் தந்தை இல்லை. அண்ணன் தான் தந்தையின் இடத்திலிருந்து கவனித்துக் கொள்கிறான்.

பாடசாலையை விட்டு விலகி அம்மாவுக்கு ஒத்தாசையாக வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டிருந்த அவள் இப்பொழுதுதான் கொழுந்தெடுக்க மலைக்குச் செல்லத் தொடங்கியிருந்தாள். அவள் முயற்சியும் முஸ்தீவும் மிக்க உழைப்பாளி பெண்ணென்று தோட்டத்துப் பெண்கள் சிலர் அன்னமாவிடம் கூறியிருந்தனர்.

மார்ட்டின் மாமாவும் சும்மா இருக்கவில்லை. அடுத்த லயத்துப் பக்கம் இறங்கிச் சென்று அண்டை அயலில் உள்ளவர்களிடம் பேச்சுக் கொடுத்தார். தோட்டத்தின் சில இளவட்டங்கள் இவள் பின்னால் சுற்றியிருந்தனர் என்றும் எனினும் அவள் யாருக்கும் பிடிகொடுக்கவில்லை என்றும் அவள் அம்மா பிள்ளையாக வளர்ந்தவள் என்றும் கூறினர்.

சசிகலாவின் வீட்டினரும் ஏற்கனவே கோபால் தொடர்பில் விசாரித்து சில விடயங்களை தெரிந்து வைத்திருந்தனர். அதன்படி அவர்கள் வீட்டில் கோபால் தொடர்பில் பேசிக்கொண்டவைகள் சசிகலாவின் காதிலும் விழுந்தன. தனக்கு வாய்க்கப் போகும் கணவன் தொழிலாளர் தலைவனாக இருந்தவன் என்றும் அவன் சங்கீதம், இசைக்கருவிகள் வாசிப்பதில் விண்ணன் என்றும் சிங்கள பாசையை தண்ணீர் கொட்டுவது போல் பேசுபவன் என்றும் வீட்டார்கள் பேசிக்கொண்டனர். அதற்கு மேலாக அவன் தோற்றத்திலும் கதாநாயகன் போலவே இருக்கிறான் என்பதில் அவள் பெருமை கொண்டாள்.

கோபாலுக்கும் அவளை பிடித்திருந்தது. அவள் தன் எண்ணங்களுக்கும், சிந்தனைகளுக்கும் ஈடு கொடுப்பவளாக இருப்பாள் என்றும் வீட்டார்கள் பேசிக்கொண்டனர். அவன் தோற்றத்திலும் கதாநாயகன் போலவே இருக்கிறான் என்பதிலும் அவள் பெருமை கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தனது விருப்பத்தினை மார்ட்டின் மாமாவிடம் தெரிவித்தான். அது தொடர்பில் அவன் விருப்பத்தை அறியும் படி அன்னம்மாவே மார்ட்டின் மாமாவை தூண்டி விட்டிருந்தாள்.

என்னதான் இருந்தாலும் கோபாலுக்கு சசிகலா மீது ஏற்பட்ட ஆகர்ஷணத்தை இனக்கவர்ச்சி என்று கருதலாமேயன்றி காதல் என்று சொல்ல முடியாது. காரணம் அவன் மனதில் புஸ்பராணி மீதிருந்த காதல் இன்னும் முற்றாக மறைந்து போகவில்லை.

வளர்ந்து இளைஞனாகி விட்ட அவனுக்கும் எல்லா ஆண்களிலும் இயல்பாகவே ஏற்படும் இந்திரியங்களின் உந்துதல் சசிகலாவின் பால் வசீகரத்தை ஏற்படுத்தியது என்பதில் வியப்பில்லை.

காதல் என்ற பெயரில் முன்பு புஸ்பராணி மீது ஏற்பட்ட அன்பின் மேலீட்டில் உடல் இந்திரியங்களினதும், சுரப்பிகளினதும் பங்களிப்பு இல்லையென்றுகூறிவிடத்தக்கமந்தபுத்திகோபாலிடம்காணப்படவில்லை. அவளை ஸ்பரித்த போதும் ஒருதடவை முத்த மிட்ட போதும் காதல் என்ற வார்த்தை சுட்டும் அர்த்தங்களுக்கு அப்பால் அவன் உடல் உறுப்புக்களில் உணர்ச்சி வேகம் அதிகரித்து நரம்புகள் முறுக்கேறுவதனை அவன் அவதானித்திருக்கிறான். இப்போது அவனுக்கும் சசிகலாவுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்படும் உணர்வுகள் கூட அந்த இந்திரியங்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டதே என அவன் தெளிவாகப் புரிந்து கொண்டான். கோபால் சசிகலா திருமணத்தை அவர்கள் அடுத்த தை மாதத்தில் வைத்துக்கொள்வதென்று தீர்மானித்தார்கள்.

இப்போது வைகாசி மாதம் நடக்கிறது. அடுத்த தை மாசம் வருவதற்கு இன்னும் பல மாதங்கள் காத்திருக்க வேண்டுமே என்ற ஏக்கம் கோபால் மனதை மட்டுமல்ல சசிகலாவின் மனதிலும் பெருமூச்சியை உண்டு பண்ணியது.

எனினும் அவன் இந்த இடைவெளியை சசிகலாவை சந்தித்து பேச ஒரு சந்தர்ப்பமாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென மனதுக்குள் நினைத்துக் கொண்டான். அவ்விதம் செய்வதால் புஸ்பராணியின் நினைவுகளை தன் மனதில் இருந்து முற்றாக அகற்றி விட முடியும் என்று அவன் மனம் விசுவாசித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிட்டிசன் வாங்கிக்கொடுக்கும் கபட நாடகம்

**1964** ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்தியதை அடுத்து நாளாந்தம் விரும்பாமலேயே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பலாத்கரமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் பதுளையிலிருந்து தலைமன்னார் வரையிலும் பின்னர் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கும், தமிழ் நாட்டின் பல நகரங்களுக்கும் கோச்சியிலேயே சென்றனர்.

இந்தக் கோச்சி பதுளையில் இருந்து புறப்பட்டு பொல்காவலை வரை ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் நின்று பயணிகளை ஏற்றும் போதெல்லாம் பாரிய குரலில் மக்கள் அழுவதும் ஒப்பாரி வைப்பதும் பெரும் சத்தமாக கேட்டு பார்ப்போர் மனதை உருகி கலங்கச் செய்யும் . உற்றார் உறவினர்கள் தம்மை விட்டுப் பிரிந்து இந்தியாவுக்கு செல்லும் போது அவர்களை பிரிய முடியாமல் வருந்தி கத்திக் கதறி யழும் காட்சி மிகப் பரிதாபகரமானதாக இருக்கும். நாளாந்தம் இந்த கோச்சிகளால் எழும் ஒப்பாரி சத்தம் காரணமாக பிற்காலத்தில் இக் கோச்சிகள் ஒப்பாரிக்கோச்சி என்ற நாம காரணத்தை பெற்றன.

எனினும் பின்னர் இந்த ஒப்பந்தம் நட்டாற்றில் விடப்பட்டு ஒப்பாரிக் கோச்சிகள் படிப்படியாக வழக்கொழிந்தன. ஜே.ஆர்.ஜயவர்தனவின் பிற்காலத்தில் அவர்களது அரசாங்கத்தின் செல்வாக்கு சரிந்த போது அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதற்காக பல்வேறு உபாயங்களை கையாள வேண்டியிருந்தது. அத்தகைய உபாயங்களில் ஒன்றாக பிரஜாவுரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டிருந்த ஒரு தொகை இந்திய வம்சாவழி மலை யக மக்களுக்கு பரஜாவுரிமை உரிமை கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இக்கால கட்டத்தில் மலையக மக்களின் ஏகப் பிரதிநிதியாக ஐ.தே.க அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து ஒருபலமிக்க அமைச்சராக இருந்த சௌமிய மூர்த்தி தொண்டமான இச்சந்தர்ப்பத்தை பயண்படுத்திக் கொண்டார். இதன் காரணமாக மலையக தமிழ் மக்களில் கணிசமானவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை கிடைத்தது. எங்கே தம்மை பிடித்து இந்தியாவுக்கு அனுப்பி விடுவார்களோ என்று பயந்து ஒளிந்து கொண்டிருந்தவர்கள் கூட இதனால் நிம்மதிப் பெருமூச்சி விட்டனர்.

இத்தகையவர்களில் பலர் கோபாலின் தோட்டத்திலும் வசித்து வந்தனர். இதுவரை காலம் பயத்துடன் வாழ்ந்து வந்த அவர்கள் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அறிந்து தமக்கும் எவ்வாறு பிரஜாவுரிமை பெற்றுக்கொள்வது தொடர்பில் விபரம் அறிந்தவன் கேபாலாகத்தான் இருக்கும் என்று கருதிய அவர்கள் அவனைத் தேடி வந்தனர்.

இவ்விதம் அறிவிக்கப்பட்ட பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ள சத் தியக்கடதாசி ஒன்றைத் தயாரித்து சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிட்டு பின் அதனை பிரதேச செயலரின் அலுவலகத்தில் சமர்ப்பித்து சான்று பெற்றுக்கொள்ள வேண்டுமென விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

கோபால் தனக்குத் தெரிந்த அளவுக்கு விபரங்களைக் கூறி, தன்னைத் தேடி வந்தவர்களுக்கு சத்தியக் கடதாசி தயாரிப்பதற்கும். அதன் நடைமுறைகள் தொடர்பிலும் உதவி செய்தான். இதனால் பலரும் அவனைப் புகழ்ந்து அவனைத் தேடி சென்றனர்.

இதனை கேள்விப்பட்ட தற்போது தலைவர் பதவி வகித்த பன்னீர் செல்வம் சீற்றம் கொண்டான். தன்னை மீறி இன்னொருவன் செயற்படுவதனை அவன் விரும்பவில்லை. அவன் ஒருநாள் சாயங்காலமாக நல்லா போதை ஏற்றிக் கொண்டு கோபாலின் லயத்திற்கு வந்து சத்தம் போட்டான்.

"யார்ரா இந்த தோட்டத்திற்கு தலைவர் நானா, இல்ல அவனா, அவன் என்னத்துக்கு தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்றான். எங்கே அவனை வரச்சொல்லு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீர் செல்வம் சாரத்தை முழங்காலுக்கு மேல தூக்கிக் கொண்டு குளரியவாறே கத்திப் பேசினான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அமரன் ஓடிச் சென்று கோபாலின் காதில் விசயத்தை சொன்னான். அன்னம்மா அந்த சமயம் வீட்டில் இருக்கவில்லை.

கோபால் அவ்விடத்திற்குச் சென்றபோது பன்னீர் தொடர்ந்தும் கத்திக் கொண்டுதான் இருந்தான்.

"என்ன பன்னீர் என்ன பிரச்சினை ஏன் இப்ப கத்துற?" கோபாலும் உரத்த குரலிலேயே தான் பேசினான். பன்னீர் செல்வம் சாரத்தை மேலும் கொஞ்சம் தூக்கிக் கொண்டு கோபாலை முறைந்தான்.

"கத்தரேனா? ஒனக்கு அப்படியா தெரியுது. இங்கே நீ தலைவனா? இல்ல நா தலைவனா ஆளுங்களுக்கெல்லாம் சிட்டிசன் எப்படி எடுக்கறதுன்னு படிச்சிக் கொடுக்கிறீயாமே. அதெல்லாம் ஒந் தலைவர் பட்டம் போனதோட போயிருச்சி இனிமே நீ கம்முன்னு இருக்கனும். எப்படி சிட்டிசன் வாங்கிக் கொடுக்கறதுன்னு எங்களுக்கும் தெரியும். இது எங்களோட அரசாங்கம் தெரியுதா?"

இது நடந்துக்கொண்டிருக்கும் போது விசயம் தெரிஞ்சி ஆரியவங்ச, விஜேயபால மற்றும் கோபாலின் நண்பர்கள் அங்கு வந்து கூடி விட்டனர். லயத்திலிருந்த ஏனையவர்களும் முற்றத்துக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

கோபால் பன்னீர் செல்வத்துக்கு அருகில் போய் நையாண்டித்தனமாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

"நீ தான் தலைவர்னு எல்லாத்துக்கும் தெரியும். அது போல நானும் முன்பு தலைவனா இருந்தவன்தான். நான் தலைவர் பதவியில இல்லனாலும் சங்கத்தின் அங்கத்தவர் பதவியில் இருந்து இன்னும் வெலகல. நம்ம சனாங்களுக்கு சிட்டிசன் கெடைக்குதுன்னா நாம எல்லாந்தான் பாடு படனும். ஒருத்தருக்கொருத்தர் ஒதவனும். அது ஒவ்வொருத்தரதும் கடமை. நானும் என் கடமையைதான் செய்கிறேன். அத யாரும் வேணாணு சொல்ல முடியாது."

"நீ சொல்ற மாதிரி எல்லாராலும் சிட்டிசன் வாங்கிக் கொடுக்க முடியாது. எங்க யூனியன் பேர் போட்டு அச்சடித்த படிவத்த நெரப்பி யூனியன் சீல் போட்டாஸ்தான் செல்லும்."

யூனியன்காரன்கள் தங்கள் தாங்கள் யூனியன் பேரப்போட்டு படிவங்கள் அச்சடித்து தொழிலாளர்களிடம் விநியோகம் செய்து தங்கள் தாங்கள் சங்கத்தின் அங்கத்துவத்தை காட்டி பின்னர் தேர்தல் வரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குக் கொள்ளையடிப்பதற்காக திட்டமிட்டு செயற்படுகின்றார்கள் என்பது கோபாலுக்கு தெரிந்த விடயந்தான். ஆனால் இந்த விடயத்தை பன்னீர்செல்வம் போன்ற கைக்கூலிகளால் விளங்கிக் கொள்ள முடியும் என்று கோபால் நினைக்கவில்லை.

இக்காலத்தில் ஐ.தே.க மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வந்து தத்தமது கட்சி சார்பான தொழிற்சங்கங்களை அமைத்து சந்தா கட்டும் கைங்கரியத்தில் மும்முறமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இவற்றின் போட்டா போட்டியால் எதிர் எதிர் சங்ககாங்களுக்கிடையில் சண்டை சச்சரவுகளும் வன்முறைகளும் கூட ஏற்பட்டு வந்தன. தற்போது கிடைத்திருக்கும் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுத்தல் என்ற வாக்குறுதியைப் பயன்படுத்தி வஞ்சகமாக ஆள்திரட்டும் நடவடிக்கை பரவலாக இடம்பெற்று வருவதையும் கோபால் அறிவான்.

கோபால் கோபம் பொங்கி கொதித்துக் கொண்டிருக்கும் பன்னீர் செல்வத்தை நோக்கி உறுதியாகக் கூறினான்.

"இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழுங்கப்படும் என்பது அரசாங்கத்தின் தீர்மானம் இதற்கு எதிர்க் கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன. ஆதலால் எந்தவொரு தொழிற்சங்கமும் தாங்கள்தான் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுப்போம் என்று உரிமை கோற முடியாது. யார் வேண்டுமானாலும் எந்த ஜே.பி.கிட்டயும் கையெழுத்து வாங்க முடியும்.

இதை கேட்டு பன்னீர் செல்வம் ஏளனமாக சிரித்தான். "கோபால், நீ எல்லாம் தெரிந்த பண்டிதன் மாதிரி பேசாதே. உனக்குத் தெரியுமா இந்த தோட்டத்து முட்டாள் பயள்களுக்கு எங்ககே போய் எப்படி ஜே.வி.பி கிட்ட கையெழுத்து வாங்குவது என்று தெரியும்னு. எங்க யூனியன்ல தான் ஜே.பி இருக்காங்க. மொதல்ல நீ அத தெரிஞ்சுக்க"

"எனக்கு அதெல்லாம் தெரியும். நீதான் மடத்தனமா பேசுற. அரசாங்கம் முட்டாள் தனமாகவெல்லாம் சிட்டிசன் தராது. இப்போது யு.என். பி யூனியனும் போர்ம் அடிச்சு கொடுக்குறான். அவுங்ககிட்டயும் ஜே.வி.பி இருக்காங்க இப்ப நீ என்ன அடிக்க வேணும்னா அடிச்சுப் பாரு

கோபால் இப்படிச் சொன்னதோட பன்னீர் பின்வாங்கினான். கோபாலை வாதத்தால் வெல்ல முடியாதென்பது புரிந்தது. பன்னீர்செல்வத்தை அவன் நண்பர்கள் கைத்தாங்கலாக அங்கிருந்து கூட்டிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92



# மாபெரும் வேலை நிறுத்தம்

நாட்டில் பண்டப் பொருள்கள் தாராளமாக கிடைத்த போதும் விலைவாசி கடுமையாக அதிகரித்திருந்தது. மக்கள் தமக்கு கிடைக்கப்பெற்ற வருமானத்தில் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திணறினர். இதனால் பல தொழிற்சங்கங்களும் இணைந்து நாடு தழுவிய வேலை நிறுத்தம் ஒன்றுக்கு தயா ராகி வருவதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

இத்தகைய வேலை நிறுத்தம் தொடர்பில் தோட்டத்தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன என்பன தொடர்பில் கோபாலும் நண்பர்களும் விவாதித்தனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தோட்டத்தொழிலாளர் தமது சம்பளத்தை 10 ரூபாவால் அதிகரிக்கக் கோர வேண்டுமென்பது அவர்கள் கருத்தாக இருந்தது. என்ற போதும் தற்போது ஐ.தே.க. பதவியில் இருந்ததால் அதன் தொழிற்சங்கமும் அதற்கு ஆதரவு வழங்கும் மலையகத்தின் பிரதான தொழிற்சங்கமான ம.தொ. கா. சங்கமும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்ற செய்தியும் பரவலாக மக்கள் மத்தியில் பேசப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விஜேபால நீயும் நானும் அங்கத்துவம் வகிக்கும் ஐ.தோ.தொ.ச. மற்றும் ம.தொ.கா. என்பன அரசாங்கத்துக்கு சார்பாக இருக்கிறபடியால் ஸ்டிரைக் செய்ய போவதில்லையென பன்னீர்செல்வம் சொல்லிக்கொண்டு திரியிறான். ஆனா இந்த விசயத்தில நாம சும்மாயிருக்க முடியாது. நீ என்ன சொல்ற?"

இந்த கேள்விக்கு விஜேபால மிகத்தெளிவான பதிலொன்றைச் சொன்னான்.

"அந்தக்கருத்துக்கு என்னால் உடன்பட முடியாது கோபால். இந்த ஸ்டிரைக் மிகவும் நியாயமானது. நமது சங்கத்தின் பெரியவர்கள் அரசாங்கத்துக்கு சார்பாக இருந்தாலும் முழு நாடும் வேலைநிறுத்தத்தில் இறங்கப்போகிறது. இது ஒடுக்கு முறை, அநீதிக்கெதிரான போராட்டம். பாட்டாளி, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தின் போது நாம் அதிகாரவர்க்கத்தின் பக்கம் சேர முடியாது".

இதனைக் கவனித்துக் கொண்டிருந்த ஆரியவங்ச "நீ சொல்வது சரிதான் விஜே. ஆனால் இந்த தோட்டத்து மக்கள் தமக்கு சிட்டிசன் பெற்றுக் கொடுத்தவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்த முன்வருவார்களா?"

"நீ சொல்வது உண்மைதான் ஆரி. தொழிற்சங்கங்கள் தத்தமது சங்கத்தின் பேரில் படிவங்கள் அச்சடித்து, சீல் போட்டு ஏதோ தாம் தான் சிட்டிசன் வாங்கிக் கொடுத்தது போல் தொழிலாளர்களை தம்பக்கம் திருப்பிக்கொண்டார்கள். இது விடயத்தில் கொம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்கள் கூட ஒன்றும் செய்யவில்லை". கோபாலின் பேச்சில் விரக்தி படிந்திருந்ததனை நண்பர்கள் எல்லோருமே அவதானித்தார்கள்.

"கொம்யூனிஸ்ட் காரங்கள் தோட்டத்தொழிலாளருக்கு என்னதான் செஞ்சிருக்காங்க. அவிங்களும் தம் பங்குக்கு சந்தா காரங்களை சேத்துக்கிட்டு மேலதிகமாக கொஞ்சம் வருமானத்தை கூட்டிக்கிறாங்க. அவிங்களுக்கு வெளிநாடுகள்ல இருந்து கூட டொலர், பவுண் எல்லாம் வருதாமே அது உண்மையா கோபால்?" விஜேபால கேள்வி எழுப்பினான்.

"நீ சொல்றது உண்மைதான் விஜே. அவிங்களுக்கு மாத்திரமல்ல, நம்ம சங்கத்துக்கும் டொலர், பவுண் கிடைக்குது. அந்த பவுண்ல சொச்சத்த நம்ம கண்ல காட்டிட்டு மிச்சத்த சுருட்டிருவாங்க. ஒனக்கு ஞாபகமிருக்கா தோட்டத்து வொலிபோல் டீமுக்கு வொலிபோல் செட் வாங்கிக்கொடுத்தாங்க. பெரிய மேடையெல்லாபோட்டு கூட்டங்கூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் இருந்து கொஞ்ச பேர தெரிவு செஞ்சி கூரைக்குப்போட தகரம் கொடுத்தாங்க, கோயில் பூசாரிக்கு வஸ்திரம் வாங்கிக்கொடுத்தாங்க. மாட்டுக்கன்றுக்குட்டிகள், பசுமாடுகள் இப்படி அங்கே இங்கே கொஞ்சம் காச செலவழித்து அத படம் புடிச்சி பேப்பர்ல போட்டாங்க. நெனவிருக்கா அத படம் புடிக்க பேப்பர்ல இருந்து அம்பது போட்டோ காரங்க வந்தாங்க. பொறகு அந்த ரிப்போட் எல்லாம் சேகரிச்சு வெள்ளக்காரனுக்கு அனுப்பி இன்னுமின்னும் காசு கேப்பாங்க" கோபால் விளங்கப்படுத்தினான்.

"நீ சொல்றத பாத்தா இந்த ஏழைத் தொழிலாளிகளின் வறுமையை வித்துத்தான் அவிங்க ஆடம்பரமா வாழ்றாய்ங்க" விஜேபால தனது பாசையில் சொன்னான்.

"ஆமா, நீ சரியா புரிஞ்சுக்கிட்ட, அதுதான் நடக்குது"

கோபால் தனக்கு தெரிந்த விதத்தில் தொழிற்சங்க உள்வீட்டு அரசியல் தொடர்பில் விபரித்தான். எனினும் அவனது எதிர்கால நடவடிக்கை தொடர்பில் இன்னுமும் நம்பிக்கையற்றவனாகவே இருந்தான். இதனால் எல்லாம் என்ன விளைவுகள் ஏற்படப்போகின்றன என்பது தொடர்பில் நிச்சயமற்ற தன்மையே காணப்பட்டது. அவன் இருதலைக் கொள்ளி எறும்பைப்போல் தீர்மானிக்க முடியாதவனாகத் தவித்தான். வாழ்வில் என்றுமே இல்லாதபடி இதயத்தின் ஒரு ஓரத்தில் இனம்புரியாத பயவுணர்வு ஒன்று தோன்றியிருந்தது. அது ஏன் என்று அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவனுக்கு ஏற்பட்டிருந்த அந்த பயவுணர்வு ஏதேனும் ஆபத்து ஒன்று ஏற்படக்கூடுமோ என்று எச்சரிப்பதாகவும் இருந்தது. இருந்தாலும் அத்தகைய சஞ்சலங்களையெல்லாம் வெறும் பயப்பிராந்தி என்று புறந்தள்ளத் தீர்மானித்தான்.

அவன் வாழ்க்கையில் இதுவரை கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாடம் அதிகார வர்க்கம் என்பது பாட்டாளி தொழிலாள வர்க்கத்தை எப்போதும் "அடக்கி ஒடுக்கி மிதித்து எழ முடியாதபடி அவர்களை வதக்கி வாட்டி சுரண்டிக்கொண்டே இருக்கும் என்பதும் அதில் இருந்துவிடுபட வேண்டும் என்றால் பாட்டாளி வர்க்கம் ஒன்று திரண்டு எழுச்சிபெற்று போராடி புரட்சி செய்து தம் வாழ்வில் தாமே மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதாகும்.

அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் நண்பர்களே! இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டும். நாம் தொழிலாளர் சார்பில் நிற்பதா? இல்லை அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு ஆதரவளிப்பதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பிரகாரமே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதா இல்லையா என்பதும் தங்கியுள்ளது".

நண்பர்கள் எல்லோரும் கோபாலின் இந்தக் கேள்வியால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களால் இன்னமும் ஒரு தீர்மானத்துக்கு வரமுடி யாமல் இருந்தது. அவர்கள் கோபால் என்ன சொல்கிறானோ அதன் பிரகாரம் நடந்து கொள்வதே சரியென்று கருதினர்.

ஆரியவங்ச வெளிப்படையாகவே கோபாலிடம் அந்தக் கேள்வியை கேட்டான்.

"நீ என்ன சொல்கிறாய் கோபால். எங்களை வேலைக்கிப்போகச் சொல்கிறாயா? வேலை நிறுத்தம் செய்யச் சொல்கிறாயா? நீ எதைச் சொல்கிறாயோ அதனைப்பின்பற்ற நாங்கள் தயார்"

"இதில் நானோ நீங்களோ தீர்மானிப்பதற்கு ஒன்றுமில்லை ஆரி. நாட்டிலுள்ள எல்லா யூனியன்களுமே வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்திருக்கின்றன. அவர்கள் தொழிலாளர்களின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காகவே இந்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளார்கள். இத்தகைய ஒரு நிலை யில் தொழிலாளர்களின் நலன் என்று தீர்மானிப்பவர்கள் சகலரும் இதற்கு ஆதரவு வழங்கவேண்டியது அவர்களது கடமையாகின்றது. நாம் கலந்து கொண்டாலும், இல்லாவிட்டாலும் ஸ்ட்ரையிக் நடக்கத்தான் போகின்றது. இது விடயத்தில் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கம் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணங்குவதைத் தவிர வேறுமார்க்கமில்லை" என்று கூறிய கோபால் நண்பர்களின் முகங்களை கேள்விக்குறியுடன் பார்த்தான். அவர்கள் எல்லோரும் தம் கையை உயர்த்தி தமது இணக்கப்பாட்டைத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு உத்தமனின் உயிர்த்தியாகம்

அது 1980 ஆம் ஆண்டின் ஜ/லை மாதத்தின் ஒரு நாள். இலங்கையின் வரலாற்றில் கருப்பு எழுத்துக்களால் எழுதப்பட்ட ஒரு நாள்.

ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கம் பதவிக்கு வந்தபோது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் எட்டு ராத்தல் தானியம் வழங்கப்படும் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றாததால் நாடெங்கும் தொழிலாளர்கள் கொதித்தெழுந்து வேலை நிறுத்தத்தில் குதித்த நாள். இக்காலத்தில் பணவீக்கம் அதிகரித்து பொருள் பண்டங்களின் விலைகள் உக்கிர நிலை அடைந்தனைத் தொடர்ந்து தொழிற்சங்கங்கள் இணைந்து சம்பளவுயர்வுக் கோரிக்கையை முன்வைத்தனர். ஆனால் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் முற்றாக மறுத்துவிட்டது. இதன் விளைவாகவே வேலை நிறுத்தப்போராட்டம் வெடித்தது.

ஆனால் இந்தவேலை நிறுத்தப்போராட்டத்தில் மலையக பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் அதிக அக்கறை காட்டவில்லை.

அதற்கு முக்கிய காரணம் மலைநாட்டின் முக்கிய தொழிற்சங்கமாக இருந்த பெரிய தொழிற்சங்கம் அரசாங்கத்தின் பிரதான பங்குதாராக இருந்தமையாகும். எனினும் விலைவாசி உயர்வால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளராகவே இருந்தனர். இந்த வேலை நிறுத்தப்போராட்டத்தின் போது தோட்டப்பகுதிகளில் சங்கங்களுக்கிடையில் போட்டா போட்டி சண்டை சச்சரவுகளும் ஏற்படலாம் என்ற காரணத்தை முன்னிட்டு ஆங்காங்கே போலீஸ் குழுவினர் கைகளில் துப்பாக்கிகளுடன் நிறுத்தப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்றைய தினம் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட கோபாலுக்கும் அவனது குழுவினருக்கும் அவசியமான தேவைப்பாடுகள் இருக்கவில்லை. ஆனால் பன்னீர் செல்வமும் அவன் குழுவினரும் அன்று அவன் லயத்துக்கே வந்து ஏன் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பதற்கு தெரிவித்த காரணங்கள் அவன் எந்த அளவுக்குத் தொழிலாள விரோதியாக இருக்கிறான் என்பதை தோலுரித்துக் காட்டின. ஆதலால் இந்தத் தருணத்தில் பன்னீர் செல்வதற்கு சார்பாக செயற்பட கோபாலின் மனம் இடந்தரவில்லை.

வேலை நிறுத்தத்தின் போது கோபாலும் நண்பர்களும் ஆதரவாளர்களும் தோட்டத்தில் இருந்து ஊர் வலமாகச் சென்று தொழிற்சாலைக்கு அப்பால் இருக்கும் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் சென்று பொது வீதியில் பதாகைகளுடன் ஒன்று கூடுவதாக இருந்தது. அதன் பிரகாரம் அவர்கள் தத்தமது லயங்களில் இருந்து புறப்பட்டு வந்து வரிசையாக பதாகைகளை ஏந்திக்கொண்டு சுலோகங்களை உரத்து கோஷம் போட்டுக் கொண்டுவந்து தொழிற்சாலை இருந்த பக்கமாக நகர்ந்து சென்றனர்.

பன்னீர் செல்வத்துக்கு இந்த செய்தி கிடைத்தபோது அவன் தனது நண்பர்களுடனும் ஆதரவாளர்களுடனும் தொழிற்சாலைக்கு அருகில்தான் இருந்தான். அவன் ஏற்கனவே தனது தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக்கொடுத்த அரசுக்கெதிரா போராட்டம் நடத்தக் கூடாது என அறிவுறுத்தல் வழங்கியிருந்தான். அப்படி இருந்தும் கோபாலின் அணி யில் பெருந்திரளான மக்கள் திரண்டுவருவது அறிந்து அவன் கோபமும் ஆத்திரமும் அடைந்தான். எப்படியாவது முயன்று இந்த போராட்டத்தை தடுத்து நிறுத்திவிடவேண்டுமென்று அவன் மனம் கொதித்தது.

இந்தத் தோட்டத்தில் ஒரு பிரிவினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக ஏற்கனவே பொலிஸ் மேலிடத்துக்கு ஒத்துகிடைத்திருந்தது. இங்கே மோதல்கள் இடம்பெறலாம் என்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படலாம் என்பதால் பொலிஸ் பாதுகாப்பு அளவுக்கு அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது. தோட்டத்தின் பிரதான நுழைவாயிலுக்கு வெளியில் அவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

தொழிற்சாலையின் மறு கோடியில் பன்னீர் செல்வமும் நண்பர்களும் ஆதரவாளர்களும் கூடியிருந்தனர். பன்னீர் செல்வம் ஏற்கனவே வாங்கி ஒளித்து வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து அவற்றை நண்பர்கள் மத்தியில் பகிர்ந்தான். போத்தல்கள் படக் படக் கென்று உடைக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே பாதிகாலியாகியது. பன்னீர் செல்வமும் தன் கையிலிருந்த போத்தலிருந்து சில மிடறுகளை விழுங்கினான். கோபாலின் ஆதரவாளர்கள் பிரதான கேட்டை நெருங்கும் தறுவாயில் அவர்கள் அனைவரும் சாராய வெறி யில் பதமான போதையில் இருந்தார்கள்.

அதன் பிறகு அவர்கள் அனைவரும் கோஷமிட்டவாறு பாதையில் இறங்கினர்.

"எங்கள் ஆதரவு, பன்னீர் அண்ணனுக்கு"

"எங்கள் ஆதரவு, பன்னீர் அண்ணனுக்கு"

"எங்கள் ஆதரவு வாக்குரிமை வழங்கிய அரசுக்கு"

"எங்கள் தலைவர் வாழ்க"

அவர்கள் அவ்வாறு கோஷமிட்டவாறே தொழிற்சாலைப் பக்கமிருந்து சுமார் இருபது யார் தூரத்தில் இருந்த முச்சந்தியை நோக்கிவந்தார்கள். கோபால் குழுவினர் அந்த முச்சந்தியைத் தாண்டித்தான் பிரதான நுழைவாயிலுக்கு செல்ல வேண்டும்.

அந்த இரண்டு எதிர் எதிர் குழுவினரும் அந்த முச்சந்தியில் முகத்துக்கு முகம் சந்தித்துக் கொண்டனர். அங்கு பெரும் கோஷமும் கூச்சலும் எழுந்தது.

கலவரம் நடக்கலாம் என்று எதிர்பார்த்த பொலிசார் ஓடிச்சென்று தங்களுக்கு வசதியான இடங்களில் நிலை கொண்டு துப்பாக்கியைத் ஏந்திப் பிடித்தனர்.

பன்னீர் செல்வம் முன்னே பாய்ந்து சென்று அணியின் முன்னால் கோஷமிட்டவாறு சென்று கொண்டிருந்த கோபாலைப் பார்த்து "ஏய்கோபால் நில்லுடா" என்று கத்தினான்.

கோபால் நடையைத் தளர்த்தி நின்று என்ன என்பது போல் பார்த்தான்.

பன்னீர் செல்வம் அவன் அருகில் சென்றான் அவனது ஆதரவாளர்கள் சிலர் கோபாலின் ஆதரவாளர்களின் கூட்டத்துக்குள் நுழைந்து பதுங்கிக் கொண்டனர்.

அப்போது சில அடிகள் முன்னால் வந்த விஜேபால "பன்னீர் செல்வம் நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய் விடு. நாங்கள் பாட்டாளி வர்க்க உழைக்கும் மக்களுக்காகவே போராடுகிறோம்" என்றான் உரத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பேச்சை முடிக்கு முன்பே பன்னீர் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அதனை தடுக்க ஓடிவந்த கோபாலையும் பன்னீர் கடுமையாகத் தாக்க முற்பட்டான். அதனைத்தொடர்ந்து இரண்டு கூட்டத்தினரும் கடுமையாக மோதிக் கொண்டனர். கூட்டத்துக்குள் நுழைந்திருந்த பன்னீரின் ஆட்கள் பொலிசாரை நோக்கி கற்களை எரிந்தனர். பொலிசார் ஆகாயத்தை நோக்கி சுட்டதுடன் கண்ணீர் புகை குண்டுகளையும் வீசி மக்களைக் கலைத்தனர்.

இந்தக் கலவரத்தில் என்ன செய்வதென்று கோபால் சுற்றும் முற்றும் பார்த்தான் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பன்னீர் தன் இடுப்பில் செருகியிருந்த கூரான கிரீஸ் கத்தியை உறுவி கோபாலின் இடுப்புப் பிரதேசத்தில் பின்னால் இருந்து பல முறை குத்தினான்.பொலிசார் இப்போது கலவரத்தில் ஈடுபட்டவர்களை நோக்கி சுட்டனர். தொழிலாளர்கள் இலக்கு தெரி யாமல் நாளா பக்கங்களிலும் சிதறி தலை தெரிக்க ஓடினர்.

சில நிமிடங்களில் எல்லாமே முடிந்து போய் விட்டன.

ஓடிக்கொண்டிருந்தவர்கள் பின்னர் அமைதி ஏற்பட்டதனைத் தொடர்ந்து திரும்பிப் பார்த்தனர். சம்பவம் நடந்த இடத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த சிலர் விழுந்து கிடந்தனர். அவர்களில் கோபாலும் விஜேபாலவும் அடங்குவர். ஓடிக் கொண்டிருந்த ஆரியவங்சவும் திரும்பி வந்து பார்த்தான். கோபாலின் நெஞ்சிலும் விஜேபாலவின் காலிலும் தோட்டாக்கள் பாய்ந்திருந்தன. அவர்கள் இருவருமே மூர்ச்சையடைந்து மூச்சுப் பேச்சற்று கிடந்தனர். பொலிஸ் குழுவுக்கு தலைமை தாங்கிய இன்ஸ்பெக்டர் குண்டடிபட்டு விழுந்து கிடந்தவர்களை பரிசோதித்துப் பார்த்தார். கோபால் மட்டுமே அசைவற்றுக்கிடந்தான். அவன் நெஞ்சில் மார்புக்கு நேராக குண்டு பாய்ந்திருந்தது. அவனை புரட்டிப் பார்த்தபோது முதுகுக்குக் கீழே இடுப்பில் யாரோ கிறீஸ் கத்தியால் பல முறை குத்திய காயங்கள் இருந்தன. அவன் உயிர் அவனை விட்டு பிரிந்து போயிருந்தது. கோபால் என்ற கர்மயோகி சுயநலத்துக்காக அநியாயமாக பழிவாங்கப்பட்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சென்று வருகிறேன், ஜென்ம பூமியே..!

கோபாலின் மரணச்செய்தி சில கணங்களிலேயே தோட்டத்திலும் சுற்று வட்டாரத்திலும் பரவிவிட்டது. அன்னம்மா அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தாள்.

"ஐயையோ... ஐயையோ... என் மகனை அநியாயமா கொன்னுப்புட்டானுகளே, நாசமா போனவங்க" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து அடுத்தடுத்து அரற்றலாக வெளிவந்து கொண்டிருந்தன. அவள் சம்பவம் நடந்த இடத்துக்கு செல்வதற்கு முன்னமே கோபாலையும், விஜேபால மற்றும் காயம்பட்டவர்களையும் பொலிசார் ஜீப்பில் போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டனர். அன்னம்மா அவ்விடத்திலேயே அமர்ந்து கொண்டு இரண்டு கைகளாலும் நெஞ்சில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுதாள்.

அடுத்த நாள் பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் கோபாலின் மரணம் தொடர்பில் பல்வேறு விதமான செய்திகள் வெளியாகி இருந்தன. அவை ஒரு செய்தியை அழுத்தம் கொடுத்து பிரசுரித்திருந்தன. அது அரசாங்க விரோத தொழிற்சங்கம் ஒன்றின் ஒரு சார்பினர் அரசுக்கெதிராக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டு கலகம் விளைவித்ததாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் அதன்போது கோபால் என்ற தொழிலாளி பொலிசாரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் கொல்லப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எது எப்படி இருந்த போதும், தொழிலாளர்கள் கோபாலை தியாகியாகவும், போராட்ட வீரனாகவும் நாமகரணம் சூட்டி அவனது வீர மரணத்தினை உயர் கௌரவத்துடன் கொண்டாடத் தீர்மானித்துவிட்டனர். அதன்பொருட்டு முழுத் தோட்டத்தையும், அதன் பாதைகளையும் தென்னங் குருத்தோலைகளாலும் வெள்ளைத் துணிகளாலும் அலங்கரித்தனர். அந்தப்பாதையில் காணப்பட்ட முச்சந்தியிலேயே தோட்டத்தின் பொது மயானமும் அமைந்திருந்தது.

அடுத்த நாள் பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் கோபாலின் இறுதிக்கிரிகைகள் இடம்பெறவிருந்தன. அட்டன் பிரதேசத்தில் இருந்து மட்டுமன்றி முழு மலையகத்தோட்டப் பிரதேசங்களிலிருந்தும் தமது உரிமைக்காக குரல் கொடுத்த ஒரு வீரப்போராளிக்கு வீரவணக்கம் செலுத்த அன்றைய தினத்தில் இருந்தே பெருந்திரளானோர் வந்து குவியத் தொடங்கினர். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியை சேர்ந்த சில பாராளுமன்ற அங்கத்தவர்களும், அவற்றின் தொழிற்சங்கத் தலைவர்களும் இரங்கல் செய்தி தெரிவித்திருந்தனர். சிலர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாட்டை கோபாலின் நண்பர்கள், உறவினர்கள், தொழிற்சங்கப் போராளிகள், எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்கள் கூட்டுப் பொறுப்புடன் மேற்கொண்டனர். இதற்கென பெரட்டுக்களத்தில் ஒரு விசாலமான மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

நந்தசிரி சம்பவத்தைக் கேள்விப்பட்டதுமே ஓடோடி வந்திருந்தான். அவனால் கோபாலின் பிரிவை எண்ணிக்கூடப் பார்க்கமுடியவில்லை. இறுதி நேரத்தில் அவனுடன் தன்னால் இருக்க முடியாமல் போய்விட்டதே என்ற எண்ணம் அவன் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தி கசக்கிப் பிழிந்தது. சில வேலை தான் உடனிருந்திருந்தால் அத்தகைய சம்பவம் ஒன்று நடக்காமல் தடுத்திருக்க முடிந்திருக்கலாம் என்றும் அவன் மனம் எண்ணியது. அவன் தனக்கிருந்த ஒரேயொரு உயிர் நண்பனின் இறுதிச் சடங்குகளை மிக உயரிய வகையிலும் உணர்வு பூர்வமாகவும் மேற்கொள்ள நண்பர்களுடன் இணைந்து செயற்பட்டான். அவனுக்கு அது மட்டுமே அப்போதைக்கு ஆறுதலளிப்பதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலின் இறுதி ஊர்வலம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னர் அமைக்கப்பட்டிருந்த இறுதி அஞ்சலிக் கூட்ட மண்டபத்தில் வைத்து பலரும் இரங்கலுரை நிகழ்த்தினர். தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொதுவாக மலையக இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பிலும அவன் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தான். என்னவெல்லாம் செய்தான் என்பது தொடர்பில் அவர்கள் பல விதங்களில் வர்ணனைகள் செய்தனர். அத்தகைய உரைகள் வாயிலாகவே கோபால் எந்த அளவுக்கு உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தான் என்பது வெளியுலகத்துக்குத் தெரியவந்தது. நண்பர்கள் சார்பில் நந்திசிரியும் சில வார்த்தைகள் பேசினான்.

அவனால் அந்த சில வார்த்தைகளைக்கூட தெளிவாகப் பேச முடியவில்லை. அவன் உணர்ச்சி வசப்பட்டு தழுதழுத்தான். அவனது அந்தப் பேச்சைக் கேட்டு கோபாலுடன் நெருங்கிப்பழகிய அனைவருமே தழுதழுத்து விசும்பினர். சுற்றியிருந்தோர் அனைவரது கண்களிலிருந்து சுடுநீர் துளிர்த்ததை அவதானித்தனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து கண்ணீர் துளிகளுக்கு மத்தியில், ஒரு சமூகத்தின் விடுதலை நோக்கிப்பயணித்த ஒரு உயர் மானு டனை ஆறடிக்குழியில் கிடத்தி மண்ணள்ளிப் போட்டுப் புதைத்து, புதைத்த இடத்தில் சிறு மேடு ஒன்று ஏற்படுத்தி இந்த உலகில் அவனது இருப்பை அடையாளப் படுத்தி அதில் மலர் வலயம் சாத்தி, மெழுகுதிரி ஏற்றிவைத்து தம் சோகங்களுக்கு சமாதானம் கூறி வந்த வழி திரும்பிச் சென்றனர்.

அடுத்த நாள் ஊடகங்களில் அரசாங்கத்தின் ஒரு முக்கிய அறிவித்தல் வெளியாகியிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்துக்கு எதிராக அந்த ஜூலை மாத வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதாகும்.

*****

வானம் நிர்மலமாக இருந்தது. எங்கும் அமைதி நிலவியது. சலசலத்துச் சென்ற ஓடையின் ஓசை அந்த அமைதியைக் குலைக்கவில்லை. நந்தசிரியும் நண்பர்களும், அவர்கள் வழக்கமாக சந்திக்கும் அந்த ஓடைக்கரை கல் மேட்டில் அமர்ந்திருந்தனர். அவர்கள் முகங்களில் வழக்கமாகக் காணப்படும் சந்தோசம், புன்னகை, கேளி எல்லாமே எங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி ஒளிந்துவிட்டிருந்தன. அந்தக் கூட்டத்தில் கோபால் இல்லை என்பதும், அவன் இனிமேல் ஒருபோதும் வரப்போவதில்லை என்ற உணர்வும் அவர்கள் மனதை ஆழமாகப் பாதித்திருந்தது.

அன்று நந்தசிரி, ஆரி, விஜேபால ஆகிய மூவர் மட்டுமே கூடியிருந்தனர். சுகதபால, சுப்பிரமணியம், ஜெகநாதன் ஆகியோர் வந்திருக்கவில்லை. கோபாலின் மறைவுக்குப்பின் அவர்கள் அன்றுதான் சமூகமாகப் பேசிக் கொண்டனர்.

வேலை நிறுத்தத்தைக் காரணமாக வைத்து விஜேபால மற்றும் ஆரியவங்சவையும் தோட்ட நிர்வாகம் வேலை நீக்கம் செய்திருந்தது. அவர்கள் இருவரையும் நந்தசிரி தன்னுடன் வந்துவிடுமாறும், தனது வயற்காட்டில் அவர்களுக்கு நிறைய வேலையிருக்கிறது என்றும் அழைத்தான். அவர்களுக்கும் கோபால் இல்லாத அந்தத் தோட்டத்தில் தொடர்ந்து இருக்கப்பிடிக்காததால் அவனது யோசனையை ஏற்றுக்கொண்டனர்.

அவர்கள் அடுத்த நாளே அங்கிருந்து புறப்பட்டனர். தமக்கு நெருங்கிய சிலரிடம் மாத்திரம் கூறிவிடைபெற்றுக் கொண்டனர். இறுதியாக அவர்கள் கோபாலின் அம்மா, அன்னம்மாவிடம் விடைபெறச் சென்றனர். அவள் இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்தாள். அவள் மடியில் பேரன் அமரன் அமர்ந்து கொண்டிருந்தான். இனி அவளுக்கு அவன் மட்டுமே ஆறுதலளிப்பான். நண்பர்கள் மூவரும் அவள் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். "சென்று வருகிறேன். ஜென்ம பூமியே" என்று விடைபெற்று அவர்கள் பூண்டுலோயா பஸ்தரிப்பிடத்தை நோக்கிச்சென்றனர். அந்தத் தரிப்பிடத்தில் இருந்து அவர்கள் திரும்பி பார்த்தபோது கோபாலின் புதைக்குளியில் அமைக்கப்பட்டிருந்த மேடும், அதில் சார்த்தப்பட்டிருந்த மலர்வளையங்களும், மாலைகளும் மங்கலாகத் தெரிந்தன. உயரே கம்பங்களில் பறக்கவிடப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகள் மலைமுகடுகளில் இருந்து வீசிய தென்றல் காற்றில் அசைந்தாடின. அது கோபாலின் இதயத்தில் இருந்து அம்மூவருக்கும் விடைகொடுப்பது போல் இருந்தது.

விஜேபாலவும், ஆரியும் நந்தசிரியிடம் ஒரு விசயத்தைச் சொல்ல வேண்டும் என்றனர்.

அவனும் "என்ன?" என்று அக்கறையில்லாமல் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புஸ்பராணி இந்தியாவில் இருந்து திரும்பி வந்து விட்டாள். ஆனால் அந்த விடயம் கோபாலுக்குத் தெரியாது." என்று விஜேபால கூறினான்.

இதைக்கேட்டு நந்தசிரி புதுமையும் ஆச்சரியமும் அடைந்தான்.

"அப்படின்னா, அவள் இந்தத் தோட்டத்தில் இல்லையா?"

"இல்லை. அவள் நாவலப்பிட்டிக்கருகில் கடுகஞ்சேனை என்ற சிறு டவுனில் குடும்பத்துடன் இருக்கிறாள். அவள் கணவன் அங்கே சிறு ஹோட்டல் ஒன்று வைத்திருக்கிறான். அவளுக்கு ஒரு குழந்தையும் உள்ளது. கணவன் வயசு போன கிழவன். மகாக் குடிகாரனாம். எல்லாத்துக்கும் அவளை சந்தேகப்பட்டு அடிப்பானாம்." விஜேபால கூறினான்.

"நானும் விஜேயும் மாடு பிடிப்பதற்காக அங்கே போயிருந்தோம். ஹோட்டலில் கல்லாபெட்டியில் குழந்தையுடன் அமர்ந்திருந்த அவள் எங்களைக் கண்டதும் உள்ளே போய்விட்டாள். இந்த விசயத்தை நாங்கள் கோபாலுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டோம்." ஆரி மேலும் விபரித்தான்.

"அத்துடன் கோபாலுக்கு அப்போது கல்யாணமும் நிச்சயமாகிவிட்டது. இந்த விசயத்தைக் கூறினால் அவன் கவலையடைவான் என்று கருதினோம். இப்போது நண்பனையும் இழந்துவிட்டோம். வேலையும் இல்லாமல் போய்விட்டது." விஜேபால மனவருத்தத்துடன் கூறினான்.

அவர்கள் வேறு சிலரிடமும் விடைபெற்றுக்கொண்டு கோவிலுக்குச் செல்லும் பாதை வழியாக வந்தனர். அப்போது தோட்டத்து இளைஞர்கள் சிலர் கோவிலை நோக்கி அவசரமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவனை நிறுத்திய ஆரியவங்ச "எங்கடா அவசரமா போறீங்க?" என்று கேட்டான்.

"ஏன் தெரியாதா? இந்த முறை கோவில் திருவிழாவை பெருசா கொண்டாடப்போறாங்கலாம். யூனியன்ல இருந்து சொல்லியனுப்பி இருக்காங்க. திருவிழாவின்போது ஆளுங்களுக்கு உதவிப்பொருள் எல்லாம் கொடுக்கப் போறாங்கலாம். அது பற்றி கலந்து பேச கூட்டம் வச்சிருக்காங்க." ஒருவன் சொன்னான்.

"யார் அதெல்லாம் செய்றாங்க?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்ம தலைவரு பன்னீர் செல்வம்தான். திருவிழா அன்னைக்கு சங்கீத கச்சேரியும் இருக்காம். ரேடியோ சிலோன்ல இருந்தெல்லாம் வாராங்கலாம்." அவர்கள் பதில் கூறிவிட்டு மேலே சென்றார்கள்.

அப்போது சற்றே தூரத்தில் அவர்களின் நண்பர்கள் கூட்டத்தில் ஒருவனான ஜெகநாதனும் கோவிலை நோக்கிச் செல்வதை நந்தசிரி கவனித்தான். அவன் தோளில் நன்கு பரிச்சயமான டிரம் செட் ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது.

"அங்க போவது ஜெகநாதன்தானே. அதுக்குள்ள அவன் பன்னீர்செல்வம் பக்கம் சேர்ந்துட்டானா" நந்தசிரி விரக்தியுடன் கூறினான்.

"ஆமா நந்தா. அவன் தோள்ல போட்டிருப்பது கூட கோபாலின் டிரம் செட்தான். கோபால் சாவுறதுக்கு ஒரு கெழமைக்கு முன் நான் டிரம் பழக வேண்டுமென்று கோபாலிடம் கேட்டு வாங்கிக்கொண்டு போனான்." என்று விஜேபால கூறியபோது இந்த உலகம் எத்தனை விசித்திரமானது என்று நந்தசிரிக்குத் தோன்றியது.

**முற்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேத்தண்ணி

## இரா. சடகோபன்

"தேத்தண்ணி" என்னும் இந்நாவல் 1970 களிலான காலப்பகுதியில், மலையகத் தோட்டத் தொழிலாளர்தம் வாழ்க்கை நிலை, அரசியல், தொழில், சமூகம், பொருளாதாரம், பொழுதுபோக்கு, எனப் பலதரப்பட்ட விடயங்களையும், கதாபாத்திரங்கள் மூலமாக, சுவாரஸ்யமாக விபரித்து, அப்பின்னணியில், கதையை விறுவிறுப்பாகக் கொண்டு செல்வதை அவதானிக்க முடியும்.

ஒரு மொழிப்பெயர்ப்பு நாவலை வாசிக்கிறோம் என்ற ஓர் உணர்வில்லாமல் இந்நாவலை தமிழாக்கம் செய்து தந்திருக்கும் எழுத்தாளரும், மொழி பெயர்ப்பாளருமான இரா.சடகோபன் மிகவும் பாராட்டுக்குரியவர். மலையகத் தோட்டத் தொழிலாளிக்குரிய வழமையான பேச்சுமொழியை அவர் சந்தர்ப்பத்திற்கேற்ப, லாவகமாகக் கையாண்டிருப்பதற்கு அவரது அனுபவம் காரணம் என்பது மிகையான கூற்றல்ல.

-அன்னலட்சுமி இராஜதுரை

1250/-

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

ISBN 978-624-00-1540-0

9 786240 015400

அட்டை வடிவமைப்பு: கொடகே புத்தகமாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org